# ஞானபாநு.

| NO - I. தொகுதி க. | APRIL 1913. பிரமாதீச௵ சித்திரைமீ | VOL - 1. பகுதி - க. |
|---|---|---|

## நமது பத்திரிகை.

நம்மில் ஒவ்வொருவரும் சுகத்தையே நாடுகின்றனர். நம்மில் ஒவ்வொருவருடைய பிரவிருத்தியும் சுகப்பேற்றையே நோக்கமாகக் கொண்டிருக்கின்றது. நம்மில் துக்கத்தை விரும்புபவர் எவரும் இலர். நம்மில் எவருடைய பிரவிருத்தியும் துக்கத்தை நோக்கமாகக் கொண்டிருக்கவில்லை. ஆகையால் நாம் நமது மானிட ஜன்மத்தில் அடைய வேண்டிய பேறு சுகப்பிராப்தியே என்பது தெளிவாக விளங்குகின்றது. மனிதர் சில சில சமயங்களில் சுகத்தை அடைந்தவராகக் காணப்பட்டாலும் அவரது சுகம் நீடித்து நிற்காமல் விரைவில் மாறிவிடுகின்றது. தேசம், காலம், நிமித்தம், முதலியவற்றிற்குத்தக்கவாறு சுகம் பேதப்படுகின்றது. மண்ணும், விண்ணும், மற்றைய சிருஷ்டிப் பொருள்களனைத்தும் மாயாமது பானத்தினால் ஸ்திரமின்றிச் சுற்றிக்கொண்டிருப்பதினால் தேசகால நிமித்தங்களும் மாறுபடுகின்றன. ஆகையால் தேசகால நிமித்தங்களினாலுண்டாகிற சுகம் மாறுபடுகின்றது. தீபம் அணையவே அந்தகாரம் பிரவேசிப்பது போல சுகம் நீங்கவே துக்கம் வியாபிக்கின்றது. ஆதலால் சொற்ப தேசகால நிமித்தங்கட்குரிய இச்சுக துக்கங்களால் அடிபட்டு அலுத்து ஒவ்வொரு மனுஷனும் பரமவிஸ்ராந்தியை அடைய இச்சிக்கின்றான். அநித்திய வஸ்துக்களின் மேல் நமது பிரியத்தை வைத்துப் பின்பு மோதப் பிரமோதங்களினால் மயங்கியிருக்குங்கால் திடீரென்று நமது பிரியமும் மோதமும், பிரமோதமும் அவ்வஸ்துவினின்றும் நழுவிவிடுகின்றன, அல்லது, அவ்வஸ்து நம்மிடத்தினின்றும் நழுவிவிடுகின்றது. சேர்க்கையால் இன்பமும் பிரிவினால் துன்பமும் உண்டாவதால் நாம் துன்பமடையும்படி நேரிடுகின்றது. நாம் எப்

பொழுது எவ்வஸ்துவினிடத்தில் சுகத்தை அநுபவிக்கிறோமோ அப்பொழுது அவ்வஸ்துவைத் தவிர வேறு வஸ்துவே நமக்குப் புலப்படுவதில்லை. நமது சுகாநுபவத்திற்கு ஒரே வஸ்துவே காரணமென்பது இதனால் நன்கு விளங்குகின்றது. ஆதலால் தேச கால நிமித்தங்களினால் வரையறுக்கப்படாததும் நம்மினின்றும் என்றும் பிரியாமல் ஒன்றி நிற்பதுமான வஸ்து எதுவோ அதுவே நித்தியமான வஸ்து. அவ்வஸ்துவே நித்திய சுகஸ்வரூபம். ஆதலால் அவ்வஸ்துவை அடைய முயற்சிப்பதே மானிட ஜன்மத்தின் கடமையாகும். அவ்வஸ்துவின் நித்தியானந்தப் பிராப்தியே மானிட ஜன்மத்தின் பயனாகும். தமிழ் அறிந்தவர் அனைவரும் தமது கடமையைச்செய்து தமது ஜன்மப்பயனை அடைவதற்குத் துணைபுரிவது நமது பத்திரிகையின் நோக்கம்.

கடூரமான ஒரு வியாதியால் கஷ்டப்படுபவனுடைய வியாதியை நிவிர்த்தி செய்வதற்கு ஔஷதம், பத்திய நியமமான ஆகாரம், ஆகிய இவ்விரண்டும் அவசியமாம். பத்திய நியமம் இல்லாமல் ஔஷதம் பயன்படாது. ஔஷதமில்லாமல் பத்திய நியமமும் பயன்படாது. ஆதலால் ஒருவனுடைய வியாதியை நீக்குவதற்குப் பத்திய நியமம், ஔஷதம் இவ்விரண்டும் அவசியமாவது போல, ஜீவராசிகளின் ஜனன மரண வியாதியைப் போக்குவதற்கு ஸ்மிருதிகளாகிய பத்திய நியமமும், ஸ்ருதிகளாகிய ஔஷதமும் அவசியம். ஸ்மிருதிகள் மனிதன் அனுஷ்டிக்க வேண்டிய பிரபஞ்ச தர்மங்களைப் போதிக்கின்றன. ஸ்ருதிகள் பிரபஞ்சாதீதமாகிய பிரம வஸ்துவைப் பற்றிப் பிரதிவாதிக்கின்றன. ஆகையால் ஸ்ருதி, ஸ்மிருதியாகிய இவ்விரண்டினும் போதிக்கப்பட்டுள்ள விஷயங்களை இயன்றமட்டும் எடுத்துக் கூறி, அவை, எளியார், வலியார், எல்லாருக்கும் பயன்படும்படி செய்வது நமது பத்திரிகையின் வேலை. பாநுவாரமாகிய இன்று நமது "ஞானபாநு" உலகத்தில் உதயமாயிருக்கிறது. நமது "ஞானபாநு"வை ஜகன்மாதா கருணையொடு காத்தருள்வாளாக.

161303

## நமது மதமும் நாகரீகமும்.

நமது மதம் வேதாந்தம், அதாவது, வேதத்தின் முடிவு. மற்றைய கொள்கைகளும் நீதிகளும் வேதாந்தமாகிய நமது மதத்தை ஆராய்ந்து உணர்தற்கு வழிகளாகும். வேதாந்தம் என்ற



பெயரைக் கேட்டவுடனேயே, அது பிரபஞ்சாபிவிருத்திக்கும் நாகரீகத்திற்கும் ஏற்றதன்றென்றும் ஜீவிதகாலத்தை வீணாக்கி விடுகிறதென்றும் பலர் அதன்மேற் குற்றங்கூறுகின்றனர். வேதாந்தத்தின் உண்மையான ரகஸ்யங்களைப் பெரும்பான்மையோர் அறிந்தவரல்லர். வேதாந்தத்தின் நோக்கம் யாதெனின் வியஷ்டி, சமஷ்டி ஆகிய இவ்விரண்டையும் உயர்நிலைக்குக் கொணர்ந்து மேம்பாடடையச் செய்வதேயாம்.

ஒவ்வொரு மனிதனுள்ளும் ஹிருதயம், புத்தி என்று இரண்டு சூட்சுமக் கரணங்கள் இருக்கின்றன. இவை இரண்டும் ஏககாலத்தில் விருத்தி செய்யப்படவேண்டும். ஹிருதயத்தை விசாலப்படுத்தாமல் புத்தியையோ, புத்தியை விருத்தி செய்யாமல் ஹிருதயத்தையோ பெரிதாக்கல் கூடாது. இதுதான் வேதாந்த மதத்தின் சாரம். ஹிருதயம், புத்தி ஆகிய இவ்விரண்டும், ஒரு வண்டியை இழுக்கும் ஜோடிக் குதிரைகளைப்போன்று, ஒரேமாதிரியாக ஒன்றுக்கொன்று உதவிபுரிந்து மனிதனை நல்வழியில் இழுத்துச் செல்வதற்காகத்தான் அமைக்கப்பட்டிருக்கின்றன. இரக்கமுற்று அன்பு செலுத்துவது ஹிருதயத்தின் வேலையாகும். ஆனால் இவ்வேலையைச் செய்யும்பொழுது ஹிருதயம் பல தவறுதல்களுக்குட்படுகின்றது. அப்பொழுது அறிவானது அங்குத்தோன்றி ஹிருதயத்திற்குச் சகாயமாக அதன் தவறுதல்களைத் திருத்திக் கொடுக்கவேண்டியிருக்கிறது. உதாரணமாக, இறக்குந் தறுவாயிலிருக்கும் கிழவன் தனது மனைவிமக்களைவிட்டுப் பிரியமுடியாமல் அழுகிறான் அப்பொழுது அறிவானது அவன் முன்னின்று 'ஏ! கிழவா! உனது சரீரத்தைக் காலமாகிய தச்சன் வெட்டி வீழ்த்திவிட்டால் நீ கட்டியணைத்திடும் இப்பெண்டிரும் மக்களும் கொட்டி முழக்கியழுது மயானம்வரை வருவதல்லாமல் அப்பால் உன்னுடன் ஒரு அடியேனும் எட்டிவைப்பரோ? நீ செய்துள்ள புண்ணிய பாவவினைகளே உன்கூட வருவனவன்றி வேறொன்றும் வாராத. ஆகையால் மனைவி மக்களிடத்திலுள்ள ஆசையை அகற்றிவிட்டு எல்லாம்வல்ல இறைவனிடத்தில் நினது எண்ணத்தைச் செலுத்துவாயாக' என்று கூறுகின்றது. பகுத்தறிதலும் வாதித்தலும் நியாயங் கூறுதலும் புத்தியின் வேலைகளாம். இவ்வேலைகளைச்செய்வதில் புத்தியும் பலதவறுதல்களுக்குட்பட்டுவிடுகின்றது. அப்பொழுது அன்பானது

அங்குத்தோன்றி அத்தவறுதல்களைத் திருத்தவேண்டியிருக்கிறது. புத்தியிற் சிறந்த ஒரு புருஷன் தேம்பியழுகின்ற தனது மனைவியைப்பார்த்து 'ஏ! பெண்ணே! நான் கண்ணீரை அறிந்துவிட்டேன். அதில் சிறிது சுண்ணாம்புச் சத்தும், சிறிது உப்புச் சத்தும், சிறிது ஜலமும் இருக்கின்றன'. என்று சொன்னானாம். கண்ணீரைப்பற்றி அவன் அறிந்தது அவ்வளவுதான். இதுதான் அன்புகலவாத அறிவின் தனிப்பெருமை. இங்கு அன்பானது அவன்முன்தோன்றி 'ஏ! கற்றறிமூடா! நன்றாக உள்ளுணர்ந்துபார். ஹிருதயமன்றோ கரைந்து கண்களின் வழியாக வடிகின்றது'. என்று உரைக்கின்றது. ஆகையால் ஹிருதயம், புத்திஆகிய இவ்விரண்டும் ஒன்றையொன்று சீர்திருத்தி விருத்தி செய்கின்றன.

பரிபூர்ண புருஷன் விஸ்தாரமான புத்தி, விசாலமான ஹிருதயம் ஆகிய இவ்விரண்டின் சேர்க்கையே யாவன். வியஷ்டியின் லட்சணமே சமஷ்டிக்கும் உள்ளது; ஆதலால் பரிபூர்ண ஜனசமூகமும் விஸ்தாரமான புத்தி, விசாலமான ஹிருதயம் ஆகிய இவ்விரண்டின் சேர்க்கையேயாகும். ஹிருதயமே மதமாகவும், புத்தியே நாகரீகமாகவும் ஜனசமூகத்தில் வெளிப்படுகின்றது. ஒரு மனிதனில் ஹிருதயமும் புத்தியும் ஒன்றையொன்று சீர்திருத்தி இரண்டும் விருத்தியாவது போல, ஜனசமூகத்திலும் மதமும் நாகரீகமும் ஒன்றுக்கொன்று உதவியாயிருக்க வேண்டும். சில மடக்கொள்கைகளை மதமென்று நம்பி அவற்றையே வாழ் நாட்களின் பயனாகக் கடைப்பிடித்தலும் நாகரீகப் பயிற்சிகளை இகழ்ந்து வெறுத்தலும் மிகத்தவறாகும். இங்ஙனமே, நாகரீகப் பயிற்சிகளே வாழ் நாட்களின் பயனென நம்பியிருத்தலும் மதநீதிகளை இகழ்ந்து வெறுத்தலும் மிகத் தவறாகும். ஜீவிதகாலத்தின் பயன் சில மடக்கொள்கைகளை யுடைய அன்புமன்று, அன்பென்பதையே அறியாத அறிவின் மிகுதியுமன்று. ஒரு மனிதனில் அன்பும் அறிவும் ஒற்றுமையாகப் பொருந்தி யிருத்தலே ஜீவிதகாலத்தின் பயனாகும். அன்பு தத்துவஞான மாகின்றது; அறிவு பிரபஞ்ச ஞானமாகின்றது. அறிவின் நிறைவே அன்பின் நிறைவாகும்; அன்பின் நிறைவே அறிவின் நிறைவாகும்.

ஆகையால் வேதாந்திக்கு நாகரீகப் பயிற்சிகளில் வெறுப்பில்லை. அன்பும் அறிவும் எப்பொழுதும் ஒன்றுடனொன்று சேர்ந்



திருக்க வேண்டும். இவ்விதமாயுள்ள ஆனந்தகரமான சேர்க்கை உண்டாவது மிக அரிதாயிருக்கிறது. மிகவும் இரக்கம் பொருந்திய ஹிருதயத்தை யுடைய ஜனங்களிற் பெரும்பான்மையோர் அறிவின் குறைவினால் மத வைராக்கிய முடையவர்களாய் ஜன சமூகத்தில் கட்சிபேதங்களை யுண்டுபண்ணி இம்சையாதி பாப கர்மங்களைப் புரிவதற்கு ஏதுவாகின்றனர். அதிநுட்பமான புத்தியையுடைய அறிவாளிகளிற் பலரும் அன்பின் குறைவால் பின்னர் துன்புறும்படி நேர்கின்றது. எத்தனையோ மதங்கள் உண்டாகி அழிந்து போய்விட்டன; எத்தனையோ நாகரீகங்கள் இருந்தஇடம் தெரியாமல் ஒழிந்து போய்விட்டன. இதற்குக் காரணம் அன்புள்ளவிடத்து அறிவும் அறிவுள்ளவிடத்து அன்பும் சேராததே யாகும்.

தற்கால நாகரீகம் முற்கால நாகரீகங்களை விட மேம்பட்டதன்று; ஏனெனின், தற்கால நாகரீகம் முற்கால நாகரீகங்களை விட அதிகமாக ஜடவுலகக்காரியங்களைப் பேணி நிற்கின்றது. தற்கால நாகரீகம் சிருஷ்டியை ஜயித்து விட்டதாக நினைத்துக் கொண்டிருக்கிறது. சிருஷ்டியானது, பஞ்சபாண்டவர்களின் உத்தமபத்தினியாகிய திரௌபதியைப் போல, ஒருவராலும் அவிழ்க்க முடியாதபடி எண்ணற்றகலைகளை அணிந்திருக்கின்றது என்பதையும் தான் சிருஷ்டியின் மேற் போர்வையைக்கூட இன்னும் நீக்கவில்லை யென்பதையும் தற்கால நாகரீகம் மறந்துவிடுகின்றது. இந்நாகரீகமும் நிலைநிற்காமல் தவறிவிடும்; ஆனால் இந்நாகரீகம் தனக்கு ஒரு குறைவாயிருக்கிற அன்பை அணைந்துகொண்டால், இந்நாகரீகத்தின் பெருமை சொல்லுந்தரத்ததன்று.

(தொடரும்)

சுப்பிரமணிய சிவம்.

## மனிதனும் அறிவும்.

*மனித னெனப்படு மனத்தையு முடம்பையும்*
*புனிதமெய் நெறிகளிற் போக்குநல் லறிவே.*

மனிதன் எல்லாப் பொருள்களினும் சிறந்தவன். மனிதனது சிறப்பை அவன் புண்ணியம் பாவம், நன்மை தீமை, நன்னெறி தீநெறி, முதலியவற்றைப் பகுத்தறிந்து, தீயனவற்றை விலக்கி,

நல்லனவற்றைக்கொள்ளும் அறிவை உடையவனாயிருத்தலே விளக்கும். மனிதன் எல்லா உயிர்களினும் பெரியவன். மனிதனது பெருமை எவராலும் அளவிடப்பட முடியாதது. இவ்வுலகின்கண்ணுள்ள அரிய பெரிய நகர்கள், அரண்கள், கோயில்கள், கோபுரங்கள், முதலியவற்றை ஆக்கியவன் மனிதனே. இவ்வுலகின் கண் நிகழும் இனிய பாஷைகள், அறங்கள், சமயங்கள், நூல்கள், முதலியவற்றை ஆக்கியவனும் மனிதனே. பூமியின் அகலம், நீளம், கனம் முதலியவற்றையும், சமுத்திரத்தின் அகலம், நீளம், ஆழம் முதலியவற்றையும் அவற்றினுள்ள எண்ணிறந்த பொருள்களையும், அப்பொருள்களின் குணங்களையும்கண்டுபிடித்தவன் மனிதனே. சூரியன், சந்திரன், நக்ஷத்திரங்கள், முதலியவற்றையும், அவற்றின் அகலம், நீளம், கனம் முதலியவற்றையும், அவற்றின் போக்கு வரவுகளையும் அப்போக்கு வரவுகளால் பல உலகங்கட்கு நேரிடும் மாறுபாடுகளையும் கண்டு கணித்தவனும் மனிதனே. நீராவிச் சக்தியைக் கொண்டு, நிலத்தின் மீது தேர் முதலியவற்றையும் நீரின் மீது கப்பல் முதலியவற்றையும்நடத்துகின்றவன் மனிதனே. இத்தேர் முதலியனவும் கப்பல் முதலியனவும் செல்லும் இடங்கட்கும் செல்லமாட்டாத இடங்கட்கும் ஆகாயமார்க்கமாகப் புட்பகவிமான முதலியவற்றை நடத்திவந்தவனும் மனிதனே. மின் சக்தி மூலமாகத் தூரத்துச் சமாசாரங்களை விரைவில் அறிகின்றவன் மனிதனே. இச்சக்தி செல்லுதற்குப் பொருந்தாத உலகங்களினும், மனிதன் முதலியோரின் உடம்பினுள்ளும் மனத்தினுள்ளும் நிகழ்ந்தனவற்றை ஞான திருஷ்டியால் இமைக்கும் முன்னர் அறிந்து வந்தவனும் மனிதனே. பெரிய பெரிய தேயங்களை ஆள்கின்றவன் மனிதனே. பூமண்டலம் முழுவதையும் ஆண்டு வந்தவனும் மனிதனே. இன்னும் சொல்லற்கும் நினைத்தற்கும் கூடிய பெரிய செயல்களையெல்லாம் செய்தவனும், செய்கின்றவனும், செய்ய நிற்பவனும் மனிதனே. மனிதன் எல்லாப் பொருள்களினும் எல்லா உயிர்களினும் அரியவன். மனிதனது அருமை, அவனே தேவனாகின்றதானும், அவனே பல சமயத்தவரால் கடவுளின் அவதார புருஷனாகவும், கடவுளாகவும் வணங்கப்படுகின்றதானும் விளங்கும்.

இத்தகைய சிறப்பும் பெருமையும் அருமையும் வாய்ந்த மனிதன் செய்யவேண்டிய கடமைகள் சிலவுள. அவற்று



ளெல்லாம் தலையாயதும், அவற்றிற்கெல்லாம் ஆதாரமாயதும், அவற்றையெல்லாம் அளிப்பதும் மனிதன் தன்னை அறியும் அறிவே. நாம் 'மனிதன்' என்று சொல்லும் பொருளின்கண் 'அறிவு' என்னும் ஒரு பொருளும், 'மனம்' என்னும் ஒரு பொருளும், 'உடம்பு' என்னும் ஒரு பொருளும் ஆகிய மூன்றும் விளங்கக் காண்கின்றோம். அவற்றில் 'உடம்பு' என்பது எலும்பு, நரம்பு, தசை, இரத்தம், முதலியவற்றின் சேர்க்கைப் பிண்டமாய், மனமும் அறிவும் தங்குதற்கு ஒரு களனாய், உடம்பின் புறத்திலுள்ள பொருள்களுடன் மனம் சம்பந்தப்படுதற்குரிய பொறிவாயில்களைக் கொண்டு நிற்கும் ஒரு கருவி. இக்கருவிக்கும் மற்றைய கருவிகட்கும் வேற்றுமை என்னெனின் அவற்றில் ஒவ்வொன்றும் தன்தன் தொழில்களைச் செய்வதல்லது மற்றைய கருவிகளில் எதனுடைய தொழிலையும் செய்யமாட்டாது. அன்றியும் அவற்றுள் ஒரு கருவியால் மற்றொரு கருவியைக் கையாட முடியாது. இக்கருவி தனக்குக் குறிக்கப்பட்ட தொழில்களையெல்லாம் செய்வதுடன் மற்றைய எல்லாக் கருவிகளுடைய தொழில்களையும் செய்யவல்லது. அன்றியும் இஃது மற்றை எல்லாக் கருவிகளையும் தனித்தனியாகவும் ஒழுங்காகவும் கையாடும் வலியுள்ளது. 'மனம்' என்பது நினைத்தல், அறிதல், மறத்தல், ஆக்கல், அளித்தல், அழித்தல், முதலியவற்றைச் செய்வதாய், அறிவை முதலாகக்கொண்டு உடம்பின்கண் தங்கி, அதன் பொறிவாயில் மூலமாக அதனையும், அதன் அகத்திலும் புறத்திலுமுள்ள பொருள்களையும் தொழில்படுத்தும் ஒரு சூக்ஷ்மசக்தி. இச்சக்திக்கும் மற்றைய சக்திகட்கும் வேற்றுமை என்னெனின், அவையெல்லாம் ஸ்தூலப் பொருள்களில் நின்று வெளிப்படுவது; அன்றியும் அவை ஏரியின் நீர்போலச் செலவாகச் செலவாகக் குறைவுபடுவது. இம்மனோசக்தி மிக மிகச் சூக்ஷ்மமான அறிவில் நின்று வெளிப்படுவது. அன்றியும் இஃது ஊற்றின் நீர்போலச் செலவாகச் செலவாகப் பெருகிக் கொண்டிருப்பது. "அறிவு" என்பது மனத்துக்கும் உடம்புக்கும் முதலாக நின்று மனத்தையும் உடம்பையும் தீநெறிகளிற் செல்லவிடாது விலக்கி நன்னெறிகளிற் செலுத்தும் சுயம்புப் பொருள். அறிவு மனத்தொடுநின்று மனித அறங்களைச் செய்யும் பொழுது 'மனிதன்' என்னும் பெயரையும், இடம், பால்,, முதலியவற்றைப்பற்றி, 'யான்,' 'நீ,' 'அவன்,'

'அது,' 'தான்,' முதலிய பெயர்களையும் பெறுகின்றது. 'மனிதன்' என்னும் பொருட்கண், அறிவு, மனம், உடம்பு, என்னும் மூன்றனுள்ளும் படாத எப்பொருளும் இல்லை.

அறிவு மனத்தோடும் உடம்போடும் சம்பந்தப்பட்டதற்குரிய காரணம், இவற்றுள் ஒன்றுக்கொன்றுள்ள சம்பந்தம், மனிதன் முதலிய பெயர்களின் வரலாறு, இவைகளையெல்லாம் பின்வரும் உவமையானும் உய்த்துணர்க. அ என்னும் ஒருவன் ஸ்தலயாத்திரை செய்ய நினைக்கின்றான். அதுபோல அறிவு அறத்தைச் செய்ய நினைத்தது. அ என்பவன் அவ்வியாத்திரையைச் செய்து முடித்தற்கு மிக வேகமுள்ள ஒரு குதிரையையும் ஒரு வச்சிரத் தேரையும் சேகரித்தான். அது போல அறிவு அவ்வறத்தைச் செய்து முடித்தற்கு மகா வலியுள்ள ஒரு மனத்தையும் அருமையான ஒரு உடம்பையும் சேகரித்தது. அ என்பவன் தேர் குதிரையைப் பின்பற்றிக் குதிரையுடன் ஒத்துச் செல்லும்படி, குதிரையைத் தேரோடு சேர்த்துக் கட்டினான் அது போல அறிவானது உடம்பு மனத்தைப் பின்பற்றி மனத்துடன் ஒத்துச் செல்லும்படி மனத்தை உடம்போடு சேர்த்துக்கட்டிற்று. அ என்பவன் தானே தேரை நடத்தக் கருதிக் குதிரையின் கடிவாளத்தைக் கைக் கொண்டு தேரின்கண் அமர்ந்தான். அது போல அறிவு தானே உடம்பை நடத்தக் கருதி மனத்தையாளும் சக்தியாகிய கடிவாளத்தைக் கைக்கொண்டு உடம்பின்கண் அமர்ந்தது. அ என்பவன் குதிரையோடு தேரை நடாத்தியதால் 'சாரதி' என்னும் பெயரைக் கொண்டான். அதுபோல அறிவு மனத்தோடு உடம்பை நடாத்தியதால் 'மனிதன்' என்னும் பெயரைக் கொண்டது. அ என்பவன் தனது மக்களால் 'தந்தை' எனவும், தனது மருமக்களால் 'மாமன்' எனவும், தனது குடிகளால் 'அரசன்' எனவும் சொல்லப்பட்டான். அது போல அறிவு தன்மை யிடத்தில் 'யான்,' 'நான்,' 'யாம்,' 'நாம்,' எனவும், முன்னிலை யிடத்தில் 'நீ,' 'நீர்,' 'நீங்கள்,' எனவும், படர்க்கை யிடத்தில் 'அவன்,' 'அவள்,' 'அவர்,' 'அது,' 'தான்'' எனவும் சொல்லப்பட்டது. 'சாரதி' என்பவனிடத்து அ, குதிரை, தேர் இம்மூன்றினுள்ளும் சம்பந்தப்படாத எப்பொருளும் இல்லை. அதுபோல மனிதன்என்



தப்படாத எப்பொருளும் இல்லை. அ என்பவன் தான் விரும்பிய யாத்திரையைச் செய்து முடிக்கும் முன்னர் கவனமின்றிக் குதிரையின் கடிவாளத்தைச் சற்று நழுவவிடுவானாயின் அது தன் போக்கில் ஓடித் தீநெறிகளில் பட்டுத் தானும் கெட்டுத் தேரையும் யாத்திரையையும் கெடுத்துவிடும். அதுபோல அறிவு தான் விரும்பிய அறத்தைச் செய்து முடிக்கும் முன்னர் கவனமின்றி மனத்தை ஆளுந் தொழிலைச் சற்று நழுவவிடுமாயின் மனம் தன் போக்கில் ஓடித் தீநெறிகளில் பட்டுத் தானும் கெட்டு உடம்பையும் அறத்தையும் கெடுத்துவிடும். அ என்பவன் தான் குறித்த யாத்திரையின் முடிவுவரை கவனத்துடன் குதிரையைத் தனது யாத்திரை நெறிகளில் செலுத்தி வருவானாயின் விரைவில் ஸ்தல யாத்திரையை முடித்துத் தனது வீட்டை அடைந்து சுகம் பெறுவான். அது போல அறிவு தான் குறித்த அறத்தின் முடிவுவரை கவனத்துடன் மனத்தைத் தனது அறநெறிகளில் செலுத்தி வருமாயின் விரைவில் மனித அறத்தை முடித்துத் தனது வீட்டை அடைந்து சுகம் பெறும்.

> "சென்ற விடத்தாற் செலவிடா தீதொரீஇ
> நன்றின்பா லுய்ப்ப தறிவு"

வ. உ. சிதம்பரம்.



ஓம்

தத்ஸத்

# ஈசாவாஸ்யோபநிஷத்

[ஸ்ரீமான்-ஸி. சுப்பிரமணியபாரதியவர்கள் மொழிபெயர்த்தது.]

௧. ஈசாவாஸ்யமிதம் ஸர்வம் யத்கிஞ்ச ஜகத்யாம் ஜகத்|
தேந த்யக்தேந புஞ்ஜீதா மா க்ருத: கஸ்யஸ்வித்தநம் ||

இயங்கும் உலகில் இயங்குகின்ற இஃதெல்லாம் ஈசனால் நிரம்பப்படுவது. ஆதலால் (உள்ளத்) துறவுடன் (இன்பங்கள்) துய்த்திடுக. பிறன் பொருளை விரும்பாதொழிக.

௨. குர்வந்நேவேஹ கர்மாணி ஜிஜீவிஷேச்சதம் ஸமா:|
ஏவம் த்வயி நாந்யதேதோஸ்தி ந கர்ம லிப்யதே நரே ||

இங்கு கடமைகள் செய்துகொண்டே நூறாண்டு வாழ்தல் வேண்டுக. நீ இதனைக் கொள்க. இஃதல்லால் வேறு வழியில்லை. கடமைப் பயன் மனிதனை மாசுபடுத்துவதில்லை.

௩. அஸுர்யா நாம தே லோகா அந்தேந தமஸாவ்ருதா:|
தாம்ஸ்தே ப்ரேத்யாபிகச்சந்தி யே கே சாத்மஹநோ ஜநா: ||

ஆத்ம நாசம் செய்துகொள்ளும் ஜனங்கள் (இவ்வுலகத்திலிருந்து) நீங்கிக் குருட்டிருள் சூழ்ந்தனவாகிய அசுர லோகங்களை யடைகின்றனர்.

[“ஆத்மநாச” மாவது நித்யமுக்தனாகிய ஆத்மாவுக்குத் தீய சிந்தனைகள், தீய செயல்கள் என்பவற்றால் தளைகளேற்படுத்திக் கொள்ளும் மடமைச் செய்கை]

௪. அநேஜதேகம் மநஸோ ஜவீயோ
நைநத்தேவா ஆப்நுவந் பூர்வமர்ஷத்
தத்தாவதோந்யாநத்யேதி திஷ்டத்
தஸ்மிந்நபோ மாதரிஸ்வா ததாதி

(ஆத்மாவின் நிலை கூறுவது.)

ஒன்று; அசைதலின்றி மனத்தினும் விரைந்து செல்வது; இதனை இந்திரியங்கள் எட்டியதில்லை, இது முன்னே சென்று



விடும். மற்றவை ஓடும்போது தான் நின்றபடியே அவற்றை எட்டிவிடும். இதனிடத்தே வாயு செயல்களைச் சமைக்கிறான்.

௫. ததேஜதி தந்நைஜதி தத்தூரே தத்வந்திகே|
ததந்தரஸ்ய ஸர்வஸ்ய தது ஸர்வஸ்யாஸ்ய பாஹ்யத:||

அது இயங்குவது. அது இயங்குவதில்லை. அது தொலையிலுள்ளது. அப்படியே ஸமீபத்திலுமிருப்பது. அது இவ்வனைத்திற்கும் உள்ளேயிருப்பது. இவ்வனைத்திற்கும் அஃது புறம்பானது.

(‘இவ்வனைத்திற்கும்’ எனில் ‘இவ்வுலகப் பொருள்களெல்லாவற்றிற்கும்’ என்பது பொருள்.)

௬. யஸ்து ஸர்வாணி பூதாந்யாத்மந்யேவாநுபஸ்யதி|
ஸர்வபூதேஷு சாத்மாநம் ததோ ந விஜுகுப்ஸதே||

எவன் எல்லாவுயிர்களையும் தன்னிலேயே காண்கிறானோ, எல்லாவுயிர்களிடத்தும் தன்னைக் காண்கிறானோ, அவன் பிறகு கூசுவதில்லை.

௭. யஸ்மிந் ஸர்வாணி பூதாந்யாத்மைவாபூத்விஜாநத:|
தத்ர கோ மோஹ: க: ஸோக: ஏகத்வமநுபஸ்யத:||,

அறிந்தவனுக்கு எல்லாவுயிர்களும் தானேயாகி விடும். (அனைத்திலும்) ஒருமைகாணும் அவனுக்கு அங்கு மயக்கமேது? கவலையேது?

௮. ஸ பர்யகாச்சுக்ரமகாயமவ்ரணம்
அஸ்நாவிரம் ஸுத்தமபாபவித்தம் |
கவிர்மநீஷீ பரிபூ: ஸ்வயம்பூ:
யாதாதத்யதோऽர்தாந் வ்யததாச்சாஸ்வதீப்ய: ஸமாப்ய:||

எங்கும் நிறைந்தது, ஒளியுடையது, புண்ணற்றது, நரம்பில்லாதது, தூய்மையுடையது, பாவமற்றது, கவி, அறிவு சான்றது, இத்தன்மையுடைய ஆத்மா எப்போதும் இருக்கும்படியாகப் பொருள்களை இயற்கையினின்றும் அமைத்தது.

௯. அந்தம் தம: ப்ரவிஸந்தி யேऽவித்யாமுபாஸதே |
ததோ பூய இவ தே தமோ ய உ வித்யாயாம் ரதா: ||

அவித்தையை வழிபடுவோர் குருட்டிருளை அடைகின்றனர். வித்தையிலே (மாத்திரம்) பற்றுடையோர் அதனினும் மிகுந்த இருளை யடைகின்றனர்.

௧௦. 𑌅𑌨𑍍𑌯𑌦𑍇𑌵𑌾𑌹𑍁𑌰𑍍𑌵𑌿𑌦𑍍𑌯𑌯𑌾 𑌅𑌨𑍍𑌯𑌦𑌾𑌹𑍁𑌰𑌵𑌿𑌦𑍍𑌯𑌯𑌾।
𑌇𑌤𑌿 𑌶𑍁𑌶𑍍𑌰𑍁𑌮 𑌧𑍀𑌰𑌾𑌣𑌾𑌂 𑌯𑍇 𑌨𑌸𑍍𑌤𑌦𑍍𑌵𑌿𑌚𑌚𑌕𑍍𑌷𑌿𑌰𑍇 ॥

வித்தையினா லாகும் பயன் வேறென்பர். அவித்தையா லாகும் பயன் வேறென்பர். இங்ஙனம் நமக்கு அதனை யுரைத்த தீரர்களிடம் கேட்டிருக்கிறோம்.

௧௧. 𑌵𑌿𑌦𑍍𑌯𑌾𑌂𑌚𑌾 𑌵𑌿𑌦𑍍𑌯𑌾𑌂𑌚 𑌯𑌸𑍍𑌤𑌦𑍍𑌵𑍇𑌦𑍋𑌭𑌯𑌂𑌸𑌹 ।
𑌅𑌵𑌿𑌦𑍍𑌯𑌯𑌾 𑌮𑍃𑌤𑍍𑌯𑌂 𑌤𑍀𑌰𑍍𑌤𑍍𑌵𑌾 𑌵𑌿𑌦𑍍𑌯𑌯𑌾𑌮𑍃𑌤𑌮𑌶𑍍𑌨𑍁𑌤𑍇 ॥

வித்தை, அவித்தை எனுமிரண்டையும் எவன் ஒருங்கே அறிந்தவனோ, அவன் அவித்தையால் மிருத்யுவைக் கடந்து வித்தையால் அமிருதத்தை அருந்துகிறான்.

[வித்தை பிரமத்தை ஒன்றாகக் காணுதல். அவித்தை பிரமத்தைப் பலவாகக் காணுதல். அமிருதம்—சாவில்லாமை, தீரா இன்பம்]

௧௨. 𑌅𑌨𑍍𑌧𑌂 𑌤𑌮𑌃 𑌪𑍍𑌰𑌵𑌿𑌶𑌨𑍍𑌤𑌿 𑌯𑍇𑌽𑌸𑌂𑌭𑍂𑌤𑌿𑌮𑍁𑌪𑌾𑌸𑌤𑍇 ।
𑌤𑌤𑍋 𑌭𑍂𑌯 𑌇𑌵𑌤𑍇 𑌤𑌮𑍋 𑌯 𑌉 𑌸𑌂𑌭𑍂𑌤𑍍𑌯𑌾𑌂𑌰𑌤𑌾𑌃 ॥

அழிவை வழிபடுவோர் குருட்டிருளிலே புகுகின்றனர். ஆக்கத்தை வழிபடுவோர் அதனினும் மிகுந்த இருளையடைகின்றனர்.

௧௩. 𑌅𑌨𑍍𑌯𑌦𑍇𑌵𑌾𑌹𑍁𑌸𑍍𑌸𑌂𑌭𑌵𑌾𑌤𑍍 𑌅𑌨𑍍𑌯𑌦𑌾𑌹𑍁𑌰𑌸𑌂𑌭𑌵𑌾𑌤𑍍 ।
𑌇𑌤𑌿 𑌶𑍁𑌶𑍍𑌰𑍁𑌮 𑌧𑍀𑌰𑌾𑌣𑌾𑌂 𑌯𑍇 𑌨𑌸𑍍𑌤𑌦𑍍𑌵𑌿𑌚𑌚𑌕𑍍𑌷𑌿𑌰𑍇 ॥

ஆக்கத்தால் பெறுவது வேறென்பர், அழிவினால் பெறுவது வேறென்பர். இங்ஙனம் நமக்கு அதனை யுரைத்த தீரர்களிடம் கேட்டிருக்கிறோம்.

௧௪. 𑌸𑌂𑌭𑍂𑌤𑌿𑌂𑌚 𑌵𑌿𑌨𑌾𑌶𑌂𑌚 𑌯𑌸𑍍𑌤𑌦𑍍𑌵𑍇𑌦𑍋𑌭𑌯𑌂𑌸𑌹 ।
𑌵𑌿𑌨𑌾𑌶𑍇𑌨 𑌮𑍃𑌤𑍍𑌯𑌂 𑌤𑍀𑌰𑍍𑌤𑍍𑌵𑌾 𑌸𑌂𑌭𑍂𑌤𑍍𑌯𑌾𑌮𑍃𑌤𑌮𑌶𑍍𑌨𑍁𑌤𑍇

ஆக்கம், அழிவு எனுமிரண்டையும் ஒருங்கே அறிந்தவன் அழிவினால் மிருத்யுவைக்கடந்து ஆக்கத்தால் அமிருதத்தை அடைகிறான்.



௧௫. 𑌹𑌿𑌰𑌣𑍍𑌮𑌯𑍇𑌨 𑌪𑌾𑌤𑍍𑌰𑍇𑌣 𑌸𑌤𑍍𑌯𑌸𑍍𑌯𑌾𑌪𑌿𑌹𑌿𑌤𑌂 𑌮𑍁𑌖𑌮𑍍।
𑌤𑌤𑍍𑌤𑍍𑌵𑌂 𑌪𑍂𑌷𑌨𑍍𑌨𑌪𑌾𑌵𑍃𑌣𑍁 𑌸𑌤𑍍𑌯𑌧𑌰𑍍𑌮𑌾𑌯 𑌦𑍃𑌷𑍍𑌟𑌯𑍇॥

ஸத்தியத்தின் முகம் பொற்பாத்திரத்தால் மூடப்பட்டிருக்கிறது. ஸத்ய தர்மத்தையுடைய எனது பார்வைக்கு, ஹே, பூஷந்! நீ அதனைத் திறந்து காட்டுக.

௧௬. 𑌪𑍂𑌷𑌨𑍍𑌨𑍇𑌕𑌰𑍍𑌷𑍇 𑌯𑌮 𑌸𑍂𑌰𑍍𑌯
𑌪𑍍𑌰𑌾𑌜𑌾𑌪𑌤𑍍𑌯 𑌵𑍍𑌯𑍂𑌹 𑌰𑌶𑍍𑌮𑍀𑌨𑍍 𑌸𑌮𑍂𑌹 𑌤𑍇𑌜𑌃
𑌯𑌤𑍍𑌤𑍇 𑌰𑍂𑌪𑌂 𑌕𑌲𑍍𑌯𑌾𑌣 𑌤𑌮𑌂
𑌤𑌤𑍍𑌤𑍇 𑌪𑌶𑍍𑌯𑌾𑌮𑌿 𑌯𑍋𑌽𑌸𑌾𑌵𑌸𑍌 𑌪𑍁𑌰𑍁𑌷𑌸𑍍𑌸𑍋
[𑌽𑌹𑌮𑌸𑍍𑌮𑌿 ॥

ஹே பூஷந்! ஏகரிஷியே! யமா! சூரியா! பிராஜாபதியின் மகனே! கதிர்களை விரிவுற வகுத்து ஒளியைத் திரட்டிக் கொள்க. நினது வடிவத்திலெல்லாம் கல்யாண மிகுந்ததாகிய வடிவத்தைக் காண்கிறேன். அதில் நிற்கும் இப்புருஷன்—அவனே நான்.

௧௭. 𑌵𑌾𑌯𑍁𑌰𑌨𑌿𑌲𑌮𑌮𑍃𑌤𑌮𑌥𑍇𑌦𑌂 𑌭𑌸𑍍𑌮𑌾𑌨𑍍𑌤𑌂𑌶𑌰𑍀𑌰𑌮𑍍 ।
ௐ 𑌕𑍍𑌰𑌤𑍋 𑌸𑍍𑌮𑌰 𑌕𑍃𑌤𑌂𑌸𑍍𑌮𑌰 𑌕𑍍𑌰𑌤𑍋 𑌸𑍍𑌮𑌰 𑌕𑍃𑌤𑌂𑌸𑍍𑌮𑌰॥

வாயு இறப்பின்றிச்சலிப்பது. இவ்வுடல் சாம்பராய்முடிவது. ஓம். உள்ளமே, நினை, செய்ததை நினை. நினை, உள்ளமே, செய்ததை நினை.

௧௮. 𑌅𑌗𑍍𑌨𑍇 𑌨𑌯 𑌸𑍁𑌪𑌥𑌾 𑌰𑌾𑌯𑍇 𑌅𑌸𑍍𑌮𑌾𑌨𑍍 𑌵𑌿𑌶𑍍𑌵𑌾𑌨𑌿 𑌦𑍇𑌵
[𑌵𑌯𑍁𑌨𑌾𑌨𑌿 𑌵𑌿𑌦𑍍𑌵𑌾𑌨𑍍
𑌯𑍁𑌯𑍋𑌧𑍍𑌯𑌸𑍍𑌮𑌜𑍍𑌜𑍁𑌹𑍁𑌰𑌾𑌣𑌮𑍇𑌨𑍋 𑌭𑍂𑌯𑌿𑌷𑍍𑌠𑌾𑌂 𑌤𑍇 𑌨𑌮
[𑌉𑌕𑍍𑌤𑌿𑌂 𑌵𑌿𑌧𑍇𑌮 ॥

அக்னியே, எங்களை ஸம்பத்துக்கு நல்வழியாற் கொண்டு செல்லுக. எங்கள் குடிலமான பாவங்களை அழித்திடுக. நினக்கு மிகச்சிறந்த போற்றி மொழி யிசைக்கிறோம்.

# சர்க்கரையம்மையார் சரித்திரம்.

[டாக்டர் M. C. நஞ்சுண்டராவ் B-A., M. B. C. M; F. C. S.

அவர்கள் எழுதியது].

ஒருவன் ஏதாவது பிரயோசன மற்ற காரியத்தைச் செய்யத் தொடங்கும் பொழுது, இது என்ன? புண்ணியமா? புருஷார்த்தமா? என்று நம்மவர் சொல்வது வழக்கம். புண்ணியத்தைச் செய்தலும் புருஷார்த்தத்தை அடைதலும் ஆகிய இவ்விரண்டுமே பிரயோசனமுள்ளவையென்றும் மற்றையயாவும் பிரயோசன மற்றவையென்றும், 'புண்ணியமா? புருஷார்த்தமா?' என்ற இக் கேள்விகளால் நமக்குப்புலப்படுகின்றது. தர்மம், அர்த்தம், காமம், மோட்சம் ஆகிய நான்கும் புருஷார்த்தங்களாம். இவை தமிழ்ப் பாஷையில் அறம், பொருள், இன்பம், வீடு என்று சொல்லப் படும். இந்நான்கு புருஷார்த்தங்களில் மோட்சம் அடைதலே மனுஷிய ஜன்மத்தின் முக்கிய நோக்கமென்றும் பிரயோஜனமென்றும் சகல வேதசாஸ்திரங்களும் சாற்றுகின்றன. மோட்சம் என்பது வீடு அல்லது விடுபடுதல் என்று பொருள்படும். அதாவது ஜனன மரண பந்தத்தினின்று விடுபடுதலே மோட்சம். தர்மமாவது, அர்த்தமாவது, காமமாவது மோட்சமன்று. இவை மோட்சமடைவதற்கு ஒன்றன்பின் ஒன்றுயுள்ளபடிகள். தர்மம், அர்த்தம், காமம் ஆகிய இம்மூன்று புருஷார்த்தங்களையும் அடையாமல் மோட்சத்தை அடையமுடியாது. ஆகையால் இம்மூன்று புருஷார்த்தங்களையும் அடைந்து இவைகளின் மூலமாகத்தான் மோட்சத்தை அடையவேண்டியதாயிருக்கிறது. மோட்சமார்க்கம் மிகவும் கடினமானதென்றும் இப்பிரபஞ்சத்தையும் பிரபஞ்சப் பொருள்களையும் துறந்தவர்களே மோட்சலாபத்திற்குரியவர்களென்றும் பலர் பலவிதமாகக் கூறுகிறார்கள். ஆனால் நமது ஸ்ரீ கிருஷ்ணபகவான் அர்ச்சுனனுக்கு உபதேசித்துள்ள பகவத் கீதையில் பள்ளியில் படிக்கும் பாலனும், கோலூன்றி நடக்கும் கிழவனும், சமாதானத்தை விரும்பும் சாதுவும், சண்டைக்குக் கச்சைகட்டும் சண்டியும், அரிய பெரிய சாஸ்திரங்களில் வல்ல அந்தணனும், ஆவுரித்துத்தின்றுழலும் புலையனும், மொத்தத்தில் ஆண் பெண்யாவரும் எளிதில் மோட்சத்தை அடையும்படி மோட்சத்திற்கு மார்க்கம் நிஷ்காமிய கர்மமாகிய ஞானயோகமே



என்று மிகத்தெளிவாகக்கூறியிருக்கிறார். ஸ்ரீ கிருஷ்ணபகவானது இவ்வுபதேசமே இவ்வனந்தங் கோடி ஜீவராசிகளின் ஜீவிதகாலத்தைப் புநிதமாக்கிக் கொண்டு வருகின்றது. பல தேசங்களிலும் அவதரித்த ஞானசொரூபிகளாகிய மகான்களும் இவ்வுபதேசத்தையே வெவ்வேறு விதங்களாக வற்புறுத்திக்கூறி ஜீவராசிகளை ஜனனமரணத் துன்பத்தினின்றும் ரட்சித்திருக்கின்றனர்.

ஆனால் இம்மகான்கள் பூமியில் அவதரிப்பது மிக அருமை. புண்ணிய பூமியாகிய நமது பாரதநாட்டில் சமீபகாலத்தில் அதாவது சென்ற நூற்றாண்டின் பிற்பகுதியில் ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்ஸர், ஸ்ரீ கோபால கிருஷ்ண பாரதி முதலிய மகான்கள் அவதரித்தனர். நமது நாட்டில் பெண்பாலருக்குள்ளும் அநேகர் பிர்மஞானிகளாயிருந்திருக்கின்றனர். ஸ்ரீ சைதந்நியர், ஸ்ரீராமகிருஷ்ண பரமஹம்ஸர் முதலிய மகான்களின் சரித்திரத்தை நாம் படித்துப்பார்த்தால்பெண்பாலராகியபிரம்மஞானிகளை இம்மகான்களை ஞானமார்க்கத்தில் திருப்பிவிட்டார்கள் என்று அறிவோம். பெண்பாலருக்குள் நான் அறிந்தமட்டில், சமீபகாலத்தில் ஸ்ரீமதி சர்க்கரை அம்மையார் என்ற பெயருடன் ஒருவர்இருந்தனர். இவ்வம்மையார் இச்சென்னைமா நகரில் கோமளேஸ்வரன்பேட்டையில் வசித்து வந்தனர். அநேக ஜனங்கள் இவ்வம்மையாருடன் பழகியிருந்தபோதிலும் அவர்களிற் பெரும்பாலார் இவ்வம்மையாரது ஞானப்பிரதாபத்தை அறியாமற்போயினர். இவர் பழகும்படி நேர்ந்த ஜனங்களிடத்திலெல்லாம் இவர் ஒரு குழந்தையைப்போல் சர்வசாதாரணமாகப் பேசிக்கொண்டிருந்தனர். ஆகையால் அநேக ஜனங்களுக்கு இவர் சாதாரணமான ஸ்திரீகளில் ஒருவராகவே காணப்பட்டிருக்கலாம். ஏனெனின் இக்காலத்தில் பெரும்பான்மையோர், நினைத்ததைச் சொல்லுதல், ஆகாரமின்றியிருத்தல், மௌனம் சாதித்தல், ஆகாய கமனம் செய்தல் இவைபோன்ற செயல்களையும் செப்படி வித்தைகளையும் பெரியோரின் லட்சணங்களென்று நினைத்திருக்கின்றனர். ஸ்ரீமதி சர்க்கரையம்மையாரோ அத்தகைய லட்சணங்கள் தமக்கு இருப்பதாக ஒரு பொழுதும் பாவித்துக்கொண்டவரல்லர். ஆயின் இவ்வம்மையாரின் சரித்திரத்தை நான் வரையும்படியாக இவரிடத்தில் இருந்த மகிமைதானென்ன? என்று அநேகர் யோசிக்கலாம். மோட்சத்தின் உண்மையான ஸ்திதியின்னதென்று அநேகர்

அறியாமலும் அறியமுடியாமலும் இருக்கின்றனர். இவர் தமது பெயருக்கேற்ப ஜீவிதகாலம் முழுவதும் இவரைச் சர்க்கரையென்றே எவரும் விரும்பத்தக்கவண்ணம் ஜீவன் முக்திப்பதவியில் இருந்தனர். இவரது ஜீவிதசரித்திரம் மோட்சத்தின் உண்மையான நிலைமையை யின்னதென்று நேரே விளக்கிக்காட்டுமென்று நினைத்து இவரது சரித்திரத்தை எழுதிப்பிரசுரிக்கவேண்டுமென்று நான் அநேக நாளாக அவாக்கொண்டிருந்தேன். இப்பத்திரிகாசிரியர் தமது பத்திரிகைக்கு நான் ஏதேனும் எழுதவேண்டுமென்று கேட்டுக்கொள்ளவே, நான் இம்மகாதேவியாரது சரித்திரத்தை எனது சொற்ப அறிவுக்கெட்டியமட்டில் வரையப் பிரயத்தனிக்கிறேன். இவர் தம்முடன் பழகினவர்களிடத்தில் தமது சரித்திரத்தைச் சொல்லிக்கொண்டிருந்ததால், நான் எழுதும் சங்கதிகள் அநேகருக்குத்தெரிந்திருக்கலாம். நான் மறதியினாலாவது, அறியாமையினாலாவது எழுதத் தவறிவிடுகின்ற சங்கதிகளை தெரிந்தவர்கள் எடுத்துக்கொடுப்பார்களென்று நான் எதிர்பார்த்து நன்றி செலுத்துபவனாயிருக்கிறேன். (தொடரும்).

## நம்மாழ்வார் காலம்.

[கௌரவ. ஸ்ரீமான். பி. கேசவபிள்ளை யவர்கள் எழுதியது.]

கலியுகம் பிறந்த நாற்பத்து மூன்றுவது நாள் இவ்வாழ்வார் குருகூர் என்னும் ஸ்தலத்தில் அவதரித்ததாக வைஷ்ணவ குருபரம்பரையில் சொல்லப்படுகிறது. நவீன பண்டிதர்களிற் சிலர் அவ்வளவு காலத்திற்குமுன் இவர் இருந்ததாகச் சொல்வது பிசகு என்று மொழிகின்றனர். இதைப்பற்றி இரண்டொரு வார்த்தைகள் சொல்லத் துணிகிறேன்.

அநேக காலமாக ஐரோப்பிய பண்டிதர் சிலர் கிறிஸ்தவ வேதப் புஸ்தகத்தின்படி பூலோகம் உண்டாகியே ஆறாயிர வருஷங்களுக்குக் கொஞ்சம் ஜாஸ்தியாயிற்றென்று கூறிக்கொண்டும் அப்பழைய கோட்பாட்டை அநுசரித்துப் பல தேசத்துச் சரித்திரங்களின் காலங்களைக் குறுக்கிக் கூறிக்கொண்டும் வந்தனர். அவரது அபிப்பிராயத்தை யொட்டி நம்மவரிற் சிலரும் அங்ஙனம் கூறி வந்தனர். கிறிஸ்து பிறந்ததற்குப் பதினாயிர வருஷங்களுக்கு



முன்னமே எகிப்து தேசத்தில் நாகரீகமுள்ள சில அரசர் அரசாட்சி புரிந்து வந்ததாகச் சிறிது காலத்திற்குமுன் கிடைத்த சில சாசனங்களால் வெளியாயிற்று. அதைத் தப்பு என்று சொல்வது சாத்தியமில்லை. அன்றியும், மனித தேகத்தின் வரலாற்றையும் பூலோகத்தின் கண்ணுள்ள மண், கல், முதலியவற்றின் உற்பத்தியையும் பற்றிப் பரிசோதித்த ஐரோப்பிய பண்டிதர் பலர் இந்துக்கள் சொல்வதுபோல பூலோகத்தில் யுகக்கணக்காக மனித ஜாதியார் இருந்து வருகின்றனர் என்று கூறுகின்றனர். ஆகையால் குரு பரம்பரையாகச் சொல்லப்பட்டுவருகிற காலக் கணக்குகளை நம்பாமல் விடுவதற்குக் காரணமில்லை. தமிழ்நடையைக் கவனித்து நம்மாழ்வார் காலத்தைக் குறுக்கிச் சொல்வாரும் உளர். இதையும் நம்புவதற்கில்லை. சென்னைப் பிரஸிடென்ஸிக் காலேஜ் சமஸ்கிருத பண்டிதராயிருந்த சேஷகிரி சாஸ்திரியார் பாஷைகளின் வரலாற்றைப்பற்றிப் பரிசோதித்து அபிப்பிராயம் கொடுப்பதில் நிபுணர் என்று பெயர்பெற்றவர். இப்பண்டிதர் இராமாநுஜருக்குப் பிறகுதான் நம்மாழ்வார் பிறந்திருக்க வேண்டுமென்று தீர்மானித்தனர். இராமாநுஜர் சரித்திரத்தினாலும், மற்றுமுள்ள பல வைணவ கிரந்தங்களினாலும், இராமாநுஜரே, நம்மாழ்வார், ஆண்டாள், மதுரகவி முதலிய பன்னிரண்டு ஆழ்வார்களையும் கோவில்களில் பூஜிக்கச் செய்தாரென்று தெரிகிறது. இதனால் நம்மாழ்வாருக்குச் சுமார் நாலாயிரம் வருஷங்களுக்குப் பின் இராமாநுஜர் அவதரித்தனர் என்று பரம்பரையாகச் சொல்லப்படுவதே சரியாகும். ஏனெனில், மதபேதங்கள், மதச் சச்சரவுகள் முதலியன இராமாநுஜர் காலத்தில் விசேஷமாக இருந்ததாகத் தெரிகிறது. நம்மாழ்வார் காலத்திலோ மதத்துவேஷம் முதலியன இல்லையென்று அவரது பாசுரங்களால் தெரிகிறது.

"அவரவர் தமதம வறிவறி வகைவகை
அவரவ ரிறையவ ரெனவடி யடைவர்கள்
அவரவ ரிறையவர் குறைவில ரிறையவர்
அவரவர் விதிவழி யடையநின் றனரே."

என்றும்

"வம்மின் புலவீர்நும் மெய் வருத்திக் கைசெய்துய்மினோ
இம்மன் னுலகினில் செல்வரிப் போதில்லை நோக்கினோம்

நும்மின் கவிகொண்டு நும் நுமிட்ட தெய்வ மேத்தினால்
செம்மின் சுடர்முடி யென் திருமாலுக்குச் சேருமே. "

என்றும், திருவாய்மொழியில் (கீதையின் சாராம்சத்தைக்) கூறியுள்ளார். கடைசியில் பத்தாவது பத்துப் பாசுரங்களில்

" முனியே நான்முகனே முக்கண்ணப்பா என்பொல்லாக்
கனிவாய்த் தாமரைக்கட் கருமாணிக்கமே யென்கள்வா. "

என்றும்,

" அவாவறச் சூழரியை யயனை யரனை யலற்றி
அவாவற்று வீடுபெற்ற குருகூர்ச் சடகோபன் சொன்ன
அவாவி லந்தாதி களாலிவை யாயிரமும் முடிந்த
அவாவி லந்தாதி யிப்பத்தறிந்தார் பிறந்தா ருயர்ந்தே. "

என்றும் கூறித் திருவாய்மொழி யென்னும் திராவிட வேதத்தை முடித்துள்ளார்.

திருவாய் மொழியைத் தமிழ் நாட்டார் ஒரு காலத்தில் மறந்துவிட்டன ரென்றும், இராமாநுஜரது ஆசாரியரான ஆளவந்தாருக்கு முன்னிருந்த நாதமா முனிகள் மிகுந்த பக்தியுடன் மிகப் பிரயாசைப்பட்டுத் திருவாய் மொழியை மறுபடியும் சேர்த்து வெளியிட்டனரென்றும் சொல்லப்படுகிறது. திருவாய்மொழிக்கு அநேக வைஷ்ணவ ஆசாரியர்கள் அநேக வியாக்யானங்கள் எழுதியிருக்கின்றார்கள். இந்த ஆசாரியர்கள் காலத்திலும் பின்னிட்டும் தான் மதத்துவேஷங்கள் உண்டாயின. இம்மதத்துவேஷகாலத்தில், மதத்துவேஷமே யில்லாது சகல மதங்களும் சமமென்னும் மேலான ஞானத்தைப் போதிக்கும் திருவாய்மொழி உதித்திருக்காது. நம்மாழ்வாருக்கு வெகு காலத்திற்குப் பின்னரே சைவ வைஷ்ணவர்கள் சச்சரவுப்பட்டு வைரியங்கள், குரோதங்கள், தர்க்கங்கள், தெய்வ தூஷணங்கள் முதலியன பெருகி வந்ததாகத் தெரிகிறது. ஒருவரை ஒருவர் ஜயித்தனர் என்று சொல்வதில் திருப்தியடையாமல் சமணரைக் கற்காணத்தில் வைத்தாட்டின ரென்றும், கழுவேற்றின ரென்றும் வைஷ்ணவ சைவப் புஸ்தகங்களில் எழுதி வைத்தார்கள். இதை நம்புவதற்கில்லை. ஜீவகாருண்யம் நிறைந்த வைஷ்ணவ சைவ ஆசாரியர்கள் மகா குரூரமான இப்பாவ காரியங்களுக்கு உடன்பட்டிருப்பரோ? அப்படி நடந்திருந்தால் அவர்கள் பக்தியை எப்படி சிரேயஸ் உள்ளதாகநினைப்



பது? இதை மெய்யென்று கொள்வதற்குச் சரியான சரித்திரம் இருப்பதாகத் தெரியவில்லை

ஜீவகாருண்ய முள்ள சமணர்களும் புத்தர்களும் நீடித்தகாலமாக நமது நாட்டில் இருந்து வருகிறார்கள். அவர்கள் தமிழ்ப் பாஷைக்கும் தமது நாட்டில் வசித்த இதர மதஸ்தருக்கும் எவ்வளவோ சிரேயஸை உண்டாக்கி யிருக்கிறார்கள். சிரியா (Syria) தேசத்தில் மகா காருண்யரான கிறிஸ்துவுக்குப் பின் அவரது மதத்தைச் சேர்ந்தவர்களே ஒருவருக்கொருவர் பேதப்பட்டு ஒருவரை ஒருவர் நெருப்பிட்டுக் கொளுத்தியும் பொசுக்கியும் மிகக் குரூரமான இம்சைகளைச் செய்தனரென்று அவர்களது சரித்திரங்களில் காண்கின்றோம். அவற்றை நாம் நம்பவேண்டியதாயிருக்கிறது. நம் தேசத்தில் சிரியா (Syria) கிறிஸ்துவ மதமும் முற்காலத்தில் இருந்து செழித்து வந்ததைப் பார்க்க இந்த தேசத்தார் சமாசமான குணமே மேலிட்டவரா யிருந்தன ரென்று தெரிகிறது. ஆயினும் சைவர், வைஷ்ணவர், சமணர், பௌத்தர், முதலியவரிற் சிலர் நிஜமான தெய்வபக்தி குறைந்து சண்டாளத்வம் அடைந்து பரஸ்பர துவேஷம் சாதித்து வந்தார்கள் என்று தோன்றுகிறது. நமது தமிழ்நாட்டி லுதித்த பூர்விக மகான்களின் திருவாக்குகளில் நம்மவருக்குப் பக்தி யில்லாமற்போனதே அநேக தீங்குகளுக்குக் காரணமாயிற்று. நம்மாழ்வார் திருவாய் மலர்ந்தருளிய

" யாருமோர் நிலைமைய னெனவறி வரிய வெம்பெருமான்
யாருமோர் நிலைமைய னெனவறி வெளிய வெம்பெருமான்
பேருமோ ராயிரம் பிறபலவுடைய வெம் பெருமான்
பேருமோ ருருவமு முளதில்லை யிலதில்லை பிணக்கே. "

" பிணக்கற வறுவகைச் சமயமும் நெறியுள்ளி யுரைத்த
கணக்கறு நலத்தன னந்தமி லாதியம் பகவன்
வணக்குடைத் தவநெறி வழிநின்று புறநெறி களைகட்
டுணக்குமின் பசையற வவனுடை யுணர்வுகொண் டுணர்ந்தே. "

" ஒன்றெனப் பலவென வறிவரும் வடிவினுள் நின்ற
நன்றெழில் நாரணன் நான்முக னரனென்னு மிவரை
ஒன்றநும் மனத்துவைத் துள்ளிநும் மிருபசை யறுத்து
நன்றென நலஞ்செய்வ தவனிடை நம்முடை நாளே. "

என்னும் பாசுரங்களால் மதபேதத்தால் உண்டாகும் மன அழுக்கு நீங்கிவிடும். ஜாதி யகங்காரம், செல்வச் செருக்கு, வித்யாகர்வம், இவை கூடாவென்றும் ‘பயனல்ல செய்து பயனில்லை நெஞ்சே’ யென்று தெளிந்து பயனுள்ளவற்றைச் செய்வதே பெரிது என்றும் இவர் போதித்தார்.

‘குலந்தாங்கு சாதிகள் நாலிலுங் கீழிழிந்து எத்தனை
நலந்தா னிலாத சண்டாள சண்டாளர் களாகிலும்
வலந்தாங்கு சக்கரத்தண்ணல் மணிவண்ணற் காளென்றுள்
கலந்தா ரடியார்தம் மடியாரெம் மடிகளே.”

என்றும், சோறு, கூறை முதலியவற்றிற்காக மானிடர்மீது பாடிப் பிழைக்கும் புலவர்களுக்குச்

“சொன்னால் விரோதமி தாகிலும் சொல்லுவன் கேண்மினோ”

என்றும்,

“வாய்கொண்டு மானிடம் பாடவந்த கவியேனல்லேன்
ஆய்கொண்ட சீர்வள்ள லாழிப்பிரா னெனக்கேயுளன்
சாய்கொண்ட விம்மையும் சாதித்து வானவர் நாட்டையும்
நீகண்டுகொள் ளென்று வீடுந்தரும் நின்று நின்றே.”

என்றும் கூறி அவரை வற்புறுத்தித் தன்னைப்போல ‘தெய்மேத்தும்படி’ வேண்டினர்.

இன்னும் சொல்லிற் பெருகும். நாம் முக்கியமாக அறியவேண்டுவன, நம் தமிழ்நாட்டில் அநேக நூற்றாண்டுகளுக்குமுன் வசித்திருந்த நம்மவர்கள் வெகு நாகரீகம் அடைந்திருந்தார்கள் என்பதும், அக்காலத்தில் பரிசுத்தரான பெரியோர் பலர் இருந்து வந்தார்களென்பதும், மனிதர் தாம்தாம் விரும்பியவாறு பகவத் பக்தி செய்துவரும்படி அரசர் தர்ம பரிபாலனம் செய்துவந்தனரென்பதுமேயாம். இடையில் மனக்குழப்பங்கள், மதவைரங்கள் உண்டாகி நம்மவர் க்ஷீணித்துக்கொண்டு வந்தனரென்று தெரிகிறது.

அறிவினும் ஒழுக்கத்தினும், பக்தியினும் ஞானத்தினும் மேம்பட்டுள்ள நமது தேயத்தின்கண் பிறந்தவரிடத்தில் பாஷாபிமானம் இல்லாமலிருக்குமானால் அதற்குக் காரணம் நமது பாஷா நூல்களின் அருமையையும் பெருமையையும் அறியாமலிருப்பதும் அந்நிய பாஷைகளில் மிகுதியான பற்றுடையவரா யிருப்பது



மே. ஆயினும் நம் நாட்டார், கிணற்றுத்தவளை போலல்லாமல், இதர பாஷைகளிலும் இதர தேசங்களிலும் நமது ஜனங்களுக்கு உபயோகமாகத் தக்க நூல்களைத் தேடி நம் பாஷையில் மொழிபெயர்த்து நம் பாஷையையும் நம் நாட்டையும் விருத்தி செய்வாராயின் உண்மையான சுதேசிகளாவர். நம் தேசத்தை யாளும் காருண்ய இங்கிலீஷ் ராஜாங்கத்தார் உண்டாக்கி யிருக்கும் அநேக சௌகரியங்களாலும் இங்கிலீஷ் பாஷையைக் கற்பதாலும் நாம் நம்நாட்டுக்கும் நம் ஜனங்களுக்கும் சரியாக உழைக்க வழிகள் உண்டாயிருக்கின்றன. நமக்கு மெய்பான பகவத் பக்தி யுண்டானால் நம் தேசத்தில் ஜாதி குல பேதத்தாலும் மதபேதத்தாலும் உண்டாயிருக்கும் பரஸ்பர விரோதங்கள் நீங்கிச் சகோதரத்வம் பெருகி யெல்லா மார்க்கங்களிலும் நாம் அபிவிர்த்தி அடைவோமென்பது சத்தியம். நம்மில் ஒவ்வொருவரும் நம் சக்தியானுசாரம் இதரர்களுக்கு இதமுண்டாகும்படி உழைப்பதே நாம் செய்யும் பகவத் கைங்கிரியமாகும்.

# சமாச்சாரக்குறிப்புகள்.

## சென்னை ராஜதானி.

இந்தியா கவர்ன்மெண்டார் அடுத்த சர்க்கார் வருஷத்தில் சென்னை மாகாணத்தில் வித்தியாபி விருத்தி சம்பந்தமான செலவுகளுக்கென்று 23 லட்சம் ரூபாய் கொடுத்திருக்கிறார்கள். அந்த 23 லட்சம் ரூபாயும் இன்ன இனங்களில் செலவு செய்யப்படலாமென்று சென்னை வித்தியாதிகாரி ஸர் ஆல்ப்ரெட்போரன் ஒரு குறிப்பு தயார் செய்திருக்கிறார். அந்த மொத்தம் கிராண்ட் 23 லட்சத்தில் $16\frac{1}{4}$ லட்சம் இந்த வருஷத்தில் மட்டும் செலவு செய்து கொள்ளக் கொடுக்கப்பட்ட தொகையாகும். பாக்கித் தொகை $6\frac{3}{4}$ லட்சமும் வருஷந்தோறும் நேரிடும் செலவைப் பொறுத்துக்கொண்டு போகக் கொடுக்கப்பட்ட தொகையாகும். முதலிலே சொல்லிய தொகையில் ஏழைச் சிறுவர்களுக்கும், படிப்பு நன்றாகப் பரவாத வகுப்புகளைச் சேர்ந்த சிறுவர்களுக்கும் எழுதும் பலகைகளும், புஸ்தகங்களும் வாங்கிக் கொடுப்பதில் 2 லட்சம் செலவு செய்யப்படும். போதனைமுறை ஸ்கூல்கள் ஸ்தாபி

க்க 1 லட்சம் ரூபாய் செலவு செய்யப்படும். போர்ட் முனிசிபல் ஸ்கூல் கட்டடங்களுக்கு 8 லட்சம் ரூபாயும் இஞ்சினீரிங் காலேஜுக்கு 1 லட்சமும், யூனிவர்ஸிடிக்கு 1 லட்சமும் காலேஜ்களுக்கும் ஹோஸ்டல்களுக்கும் 2 லட்சம் ரூபாயும் செலவு செய்யப்படும். பாக்கி $1\frac{1}{4}$-லட்சம் இருப்பாக வைத்துக் கொள்ளப்படும். இரண்டாவதாகச் சொல்லப்பட்ட தொகையில் பிரைமரிப் படிப்புக்கு $3\frac{1}{2}$ லட்சமும், பெண் கல்விக்கு 87 ஆயிரமும் காலேஜ்களுக்கும் போதனாமுறை ஸ்கூல்களுக்கும் 30 ஆயிரமும், சக்கண்டரிப் படிப்புக்கு $1\frac{1}{3}$ லட்சத்துக்குச் சிறிது மேலாகவும், தொழிற்கல்விக்கு 9 ஆயிரமும், ஐரோப்பிய கல்விக்கு 57 ஆயிரமும், கைப் பழக்கப் படிப்புக்கு 12 ஆயிரமும் செலவு செய்யப்படலாமென்று ஸர் ஆல்ப்ரெட் போரன் குறிப்பிட்டிருக்கிறார்.

***

காயலா ஜனங்களை ஜெனரல் ஆஸ்பத்திரிக்குக் கொண்டு வருவதற்காக மோட்டார் வண்டி ஒன்று ஜெனரல் ஆஸ்பத்திரியில் தயாராக வைக்கப்பட்டிருக்கிறது. ப்ரைவேட் வைத்தியர்கள் தங்களிடம் சிகிச்சைக்கு வரும் நோயாளிகளைக் கூட்டிக்கொண்டு வருவதற்கும், அவர்களைத் திருப்பி யனுப்புவதற்கும் அந்த மோட்டார் வண்டி உபயோகப்பட்டு வரும். வேண்டியவர்கள் அங்கேயே குடியிருக்கும் மெடிகல் ஆபீஸருக்காவது அவர் இல்லாத பட்சத்தில் டியூட்டியிலிருக்கும் அஸிஸ்டண்டு ஸர்ஜனுக்காவது விண்ணப்பம் செய்து கொள்ளலாம். பகலிலாகட்டும், இரவிலாகட்டும், எப்பொழுது வேண்டுமானாலும் மோட்டார் வண்டி அகப்படும். சென்னை முனிஸிப்பல் எல்லைக்குள்ளாக எங்குபோகவேண்டியதாயிருந்தாலும் ரூபாய் மூன்று கட்டவேண்டும். முனிஸிபல் எல்லைக்கு வெளியே போகவேண்டுமானால் ஐந்து ரூபாய் கட்டணம் கட்டவேண்டும். ஜெனரல் ஆஸ்பத்திரியிலிருந்து ஒன்பது மைலுக்கு மேற்பட்ட ஸ்தலங்களுக்கு இந்த வண்டி அனுப்பப்படமாட்டாது. ஏழை ஜனங்கள் விஷயத்தில் கட்டணத்தைப் பூராவாகவாவது, பாதியையாவது வஜா செய்துவிட அங்கே குடியிருக்கும் மெடிக்கல் ஆபீஸருக்கு அதிகாரமுண்டு. அனாவசியமாக எவரும் மோட்டார் வண்டியைக் குறித்த காலத்திற்கு மேல் வைத்திருக்கக் கூடாது. ஜெனரல் ஆஸ்பத்திரியிலிருந்து வியாதிக்காரனை வெளியே அனுப்பும் பொழுதும், ஜெனரல் ஆஸ்பத்திரிக்குக் கூட்டிக்கொண்டு வரும் பொழுதும், அந்த வண்டியில் நர்ஸ் ஒருத்தி கூடப்போவாள்.



***

ஆனரபில் மிஸ்டர் பி. கேசவபிள்ளை யவர்கள் சென்ற பல வருஷங்களாகச் சென்னை சட்ட சபையில் சென்னை ராஜதானியின் ஜயில்களிலுள்ள கைதிகளின் நன்மைக்காக மேலும் மேலும் கேள்விகள் கேட்டுப்பேசி வந்ததன் பயனாகச் சென்னை கவர்ன்மெண்டார் பெண் கைதிகளுக்கு இதுவரை கொடுக்கப்பட்டு வந்த ஆறு கஜம் நீளமுள்ள சேலை அவர்களுக்கு உண்மையில் போதுமானதில்லையென்றும் இனிமேல் அவர்களுக்கு எட்டுக் கஜம் நீளமுள்ள சேலை கொடுக்கப்பட வேண்டுமென்றும் உத்தரவு பிறப்பித்திருக்கின்றனர். சென்னைக் கவர்ன்மெண்டார் சென்னை ஜயில்கள் சம்பந்தமாகச் செய்யப் போகும் சீர் திருத்தங்களுள் இதனை முதலாவதாகக் கொள்ளலாமென்று நினைக்கிறோம்.

***

## பம்பாய் ராஜதானி.

1911-12-ம் வருஷத்திய அட்மினிஸ்டிரேஷன் ரிப்போர்ட்டினால் பம்பாய் ராஜதானியில் இதற்கு முந்தின வருஷத்தைவிட அவ்வருஷத்தில் தொழிற் சாலைகள் இரட்டித்து விட்டனவெனத் தெரிகிறது. இப்போது பம்பாய் ராஜதானியில் எழுநூற்றுத் தொண்ணூற்றெட்டுத் தொழிற்சாலைகள் வேலை செய்து வருகின்றன. பம்பாயில் மாத்திரம் 33 நெசவுத் தொழிற் சாலைகள் இருக்கின்றன. காண்டேஷ், கத்தியவார், அகமதாபாத் முதலிய நகரங்களில் அநேக தொழிற் சாலைகள் திறக்கப்பட்டு வேலைகள் நடந்து வருகின்றன. இத்தொழிற் சாலைகளில் மொத்தம் 154151 புருஷர்களும் 44018 ஸ்திரீகளும் வேலை செய்கிறார்கள். அகமத்நகர் பஞ்சத்திலகப்பட்ட எளியோர் அநேகர் இத்தொழிற் சாலைகளில் உதவி பெற்று ஜீவித்தார்களென்றும் இத்தொழிற்சாலைகள் இல்லாமலிருந்தால் அவர்கள் அந்நிய தேசம்போக நேரிட்டிருக்குமென்றும் சொல்லப்படுகிறது.

***

பம்பாய் சானிடரி அஸோஸியேஷன் (சுகாதார சங்கத்தார்) அந்த ஊரில் ஒரு சானிடரி இன்ஸ்டிடியூட் (சுகாதாரக் கல்விச் சாலை) ஸ்தாபிப்பதாகச் சொல்லும் பிரேரபணையை பம்பாய் கார்

ப்பரேஷன் ஒரு நல்ல பிரேரேபணையென்று கருதுகிறது. அந்தக் கார்ப்பரேஷனின் அடுத்த மீட்டிங்கில்—கார்ப்பரேஷனிலிருந்து அந்த இன்ஸ்டிடியூட் ஸ்தாபிக்கப்படுவதா யிருந்தால்—அதற்கு ரூபா பதினையாயிரம் பொருளுதவி செய்ய வேண்டுமென்று சிபார்சு செய்யப்படும்.

* * *

பரோடா மகா ராஜாவின் ஜூபிலிக் கொண்டாட்டத்தில் மகா ராஜாவுக்குக் கொடுக்கப்பட்ட அட்ரஸ்களுக்கு மகா ராஜா பின்வருமாறு பதில் சொன்னார்:—

"நான் இந்த ராஜ்ஜியத்தை 32 வருஷ காலமாக ஆண்டு வருகிறேன். என்னுடைய குடிகளின் க்ஷேமத்தைப் பற்றிக் கவனித்தவனாக இருக்கிறேன். படிப்பு அபிவிருத்தியைப் பற்றிக் கவனியுங்கள். எந்தத் தேசம் படிப்பில் பின்னடைகிறதோ அதில் யாதொரு திருத்தமும் செய்ய முடியாது. நான் என் ராஜ்ஜியத்தில் படிப்பைக் கட்டாயப்படுத்தி யிருக்கிறேன். அது உங்களுக்கு முதலில் கொஞ்சம் வருத்தமாகத் தான் தோன்றும்; என்றாலும், முடிவில் அதனால் நீங்கள் அதிக சுகத்தை அநுபவிப்பீர்கள்."

* * *

அமீரின் அரண்மனை உபயோகத்திற்காகப் பல்லாயிரம் ரூபா மதிப்புள்ள துணிச்சரக்குகள் மாட்டு வண்டிகளில் ஏற்றப்பட்டுக் காபூலுக்குக் கொண்டுபோகப்பட்டன. இடைவழியில் ஜலலாபாத்துக்கும் சோரா கோலிக்கும் மத்தியில் அவை சில கொள்ளைக் காரரால் கொள்ளை யிடப்பட்டன. கொள்ளைக்காரர்கள் நவீன முறைப்படி செய்யப்பட்ட துப்பாக்கிகளை வைத்திருந்தமையால் வண்டிக்காரர்களையும் வண்டிகளின் பாதுகாப்புக்காக வண்டிகளுடன் சென்று கொண்டிருந்த சில சிப்பாய்களையும் எளிதில் வென்று விட்டார்கள். அமீர் கொள்ளை நடந்த இடத்திற்கு அருகிலுள்ள கிராமக் குடிகளுக்குப் பலமான வரிகள் விதித்திருக்கிறார்.



ஞானபாநு.

VOL - I. தொகுதி க. | MAY 1913. பிரமாதீச ஞு வைகாசி மீ | NO - 2. பகுதி - உ.

11 1913 MADRAS.

## நமது மதமும் நாகரீகமும்.

(முன் தொடர்ச்சி)

நமது மதம் வேதாந்த மதமென்று முன்னரே கூறியுள்ளோம். சிலர் வேதாந்தம் என்ற பெயரைக் கேட்ட வுடனேயே, அது ஜனங்களை நகரவாசத்தைத் துறந்து நாகரீகத்தை வெறுத்து மலைகளிலோ குகைகளிலோ மடங்களிலோ கௌபீனதாரிகளாகவும் காஷாயதாரிகளாகவும் தூங்கும்படி போதிக்கும் மதமென்றும் ஆகையால் பிரபஞ்சத்திற்குப் பிரயோசன மற்றதென்றும் நினைத்திருக்கின்றனர். வேதாந்த மதத்தை ஆராயாமையாலோ அல்லது அறியாமையாலோ இவர்கள் இவ்விதம் அபிப்பிராயப் படுகின்றனர். உண்மையில் இது தப்பிதமான அபிப்பிராயமேயாகும். வேதாந்தம் நாகரீகத்தை வெறுக்கிறதுமில்லை, விரோதிக்கிறதுமில்லை. வேதாந்தம் கூறுகின்றதாவது:- ஜடவுலக சாஸ்திர ஆராய்ச்சியிலும் அநுபவத்திலும் வேண்டிய மட்டில் மகிழ்ச்சி யடையுங்கள்; உலகங்களை ஜயிங்கள்; ராஜ்யங்களை ஸ்தாபியுங்கள்; சந்திரசூரியாதி சகல கிரகங்களையும் பகுத்து நிறுத்துப் பார்த்துப் பறையடியுங்கள்; புதிய கிரகங்களையும் சிருஷ்டித்து ஆகாய மண்டலத்தில் அழகாக அமைத்துக் கொள்ளுங்கள்; ஆனால் இவைகள் எல்லாம் வாழ்நாட்களின் பயன் அல்லவென்று எப்பொழுதும் ஞாபகப்படுத்திக் கொள்ளுங்கள். புத்தியை விருத்தி செய்யுங்காலத்தில் ஹிருதயத்தையும் விசாலப்படுத்த வேண்டுமென்ற நீதி எப்பொழுதும் உங்கள் நினைவில் இருக்கட்டும். ஹிருதய சப்தமே எல்லாம் வல்ல, என்றுமுள்ள, இறைவனை எட்டுகின்றதென்று நன்றாக அறிந்து கொள்ளுங்கள்.

"அன்பும் சிவமும் இரண்டென்ப ரறிவிலார்
அன்பே சிவமாவ தாருமறிகிலார்."

என்ற ஆன்றோரது அருமையான வாக்கியத்தின்படி அன்பும் சிவமும் ஒன்றென்றே மனத்தில் நன்றாகப் பதித்துக்கொள்ளுங்கள். ஆகையால் அன்பு அளவின்றி அதிகப்படுத்தப்பட்டுப் பொங்கித் ததும்பிப் பூரணமாய்ப் பிரபஞ்சத்தை வியாபித்துக் கொள்ளட்டும். இத்தகைய அன்புடன் சேர்ந்த அறிவே எனக்குச் சம்மதம்.

தற்கால நாகரீகத்தில் ஓர் அபாயம் யாதெனில், மனிதன் பகிர் முகத்தனாய் 'புந்தி மகிழ்வுற உண்டுடுத்து இன்பமயமாவதே போந்த நெறி' யென்று பிரபஞ்ச இன்பங்களையே வாழ்நாட்களின் முக்கிய பயனாகக் கருதும்படி நேரிடுகின்றது. வேண்டாதவைகளை வேண்டுவனவாகக் கருதி, மனம் புண்ணாகி, பேராசை அதிருப்தி முதலிய வியாதிகளால் பிடிக்கப்படுகின்றான். ஸ்ரீமத் விவேகாநந்த ஸ்வாமிகள் அமெரிக்கா தேசத்தில் பிரசங்க யாத்திரை செய்த பொழுது அவர் தற்கால நாகரீகத்தின் தீங்குகளைப் பற்றி அடிக்கடி வற்புறுத்திக் கூறிய சில வாக்கியங்கள் இங்குக் கவனிக்கத்தக்கன. அவைகளாவன:—நீங்கள் புத்தியை மாத்திரம் விஸ்தாரப்படுத்திக் கொண்டு வருகிறீர்களென்பது உங்கள் மேல் நாட்டு நாகரீகத்தின் தீங்குகளில் ஒன்று. நீங்கள் அறிவை யடைகிறீர்கள்; ஆனால் ஹிருதயத்தை கவனிக்கிறீர்களில்லை. ஆகையால் அன்புகலவாத இவ்வித்தியாப்பியாசம் முன்னிலும் பதின் மடங்கு அதிகமாக ஸ்வயநலப் பிரியத்தை உண்டாக்குகின்றது. புத்தி விருத்தி செய்யப்பட்டிருக்கிறது; நூற்றுக் கணக்கான சாஸ்திரங்கள் கண்டு பிடிக்கப்பட்டிருக்கின்றன. பலன் யாதெனின், சிலர் அநேகரை அடிமைகளாக்கி யிருக்கிறார்கள். தற்கால வித்தியாப்பியாசத்தினால் உண்டாயிருக்கும் நன்மை இது தான். துக்க நிவிர்த்தி செய்வதற்கு அறிவினால் முடியாது; அன்பினால் தான் முடியும். இப்பெரிய முயற்சிகளெல்லாம் மனிதரைப் பரிசுத்தமாக்குவதிலும் அமைதியுள்ளோராக்குவதிலும் பொறுமையுடையோராக்குவதிலும் உபயோகப்படுத்தப் பட்டிருந்தால் இவ்வுலகம் இன்றைக்குள்ளதைப் பார்க்கிலும் ஆயிரம் மடங்கு அதிக ஆநந்தத்தை அநுபவத்தில் உடையதா யிருக்கும்.

தற்கால நாகரீகமும் அன்பும், அதாவது அறிவும் அன்பும், சேர்ந்து ஞானம் எனப் பெயர் பெறும். ஆகையால் இந்த ஞானாநு



பூதியே மானிட வர்க்கத்தின் முக்கிய லட்சியமாகும்; இந்த ஞானாநுபூதியே உண்மையான நாகரீகமாகும். மைத்திரேயோபநிஷத்திலும் செல்வத்திற் பெரியோன், வயதிற் பெரியோன், கல்வியிற் பெரியோன், இவர்களனைவரும் ஞானத்திற் பெரியோனுக்கு வேலைக்காரர்களாயும் அந்த ஞானியின் சிஷ்யனுக்கு வேலைக்காரர்களாயும் இருக்கிறார்கள், என்று பொருள் படும்படி கூறப்பட்டுள்ளது. ஆகையால் ஞானாநுபூதியே மனுஷ்ய ஜன்ம நோக்கமென்பதற்கும் பயனென்பதற்கும் சந்தேகமில்லை. அறிவை விருத்தி செய்து ஈஸ்வரசிருஷ்டிக்கு மறு சிருஷ்டி செய்யலாம்; ஆயினும் விசால ஹிருதயமும் நிராசையும் உண்டாகாத வரையில் மனிதனுக்கு சுகப்பிராப்தி உண்டாகாது. தற்கால நாகரீகத்தின் சிருஷ்டிகளாகிய ரெயில்வே வண்டிகளும் விநோதமான கப்பல்களும் ஆகாய ரதங்களும் நூதனம் நூதனமாகக் கண்டு பிடிக்கப்படுகின்ற பீரங்கிகளும் இன்னும் அநேகவித ஆச்சரியமான புத்தி சாதுரியங்களும்—அன்பென்னும் ஆரிய பூஷணத்தை அணியப் பெறாவிடில்—மானிட வர்க்கத்தை அணுவளவேனும் நன்னிலைமைக்குக் கொண்டு வரமுடியாது, மானிட வர்க்கத்திற்குத் துக்க நிவிர்த்தியும் உண்டாகாது. அன்பே ஆநந்தத்தை அளிக்கவல்லது. (தொடரும்)

சுப்பிரமணிய சிவம்.

# மனமும் உடம்பும்.

மனமறி வினது வழிவலி யாகு
மனமெனு நினைப்பின் வழிதனு வுடம்பே.

உயிர் அல்லது ஆன்மா என்று சொல்லப்படுகிற அறிவினது வலியே நினைத்தற்றொழிலைச் செய்யும் மனமென்று ஒரு சாரார் கூறுவர். அவ்வறிவே நினைக்குந் தொழிலைச்செய்யும்போது மனமென்ற பெயரைப் பெறுகிறதென்று கூறுவர் மற்றொரு சாரார். நினைத்தற்றொழிலைச் செய்யும் மனம் அறிவினது வலியென்றாலும், அறிவு நினைத்தற்றொழிலைச் செய்யும்போது மனமென்ற பெயரைப் பெறுகிறதென்றாலும் பொருள் ஒன்றே, அறிவு வலி

யன்றி வேறில்லையாகலான். தீயும் அதன் வழியாகிய சூடும் ஒரே பொருளன்றோ? என்னை? தீயில்லாமல் சூடில்லை; சூடில்லாமல் தீயில்லை. பொறிகட்குப் புலப்படும் தீயும் சூடும் ஒன்றென்றால், பொறிகளுக்குப் புலப்படாத அறிவும் மனமும் ஒன்றென்றல் சொல்லாமலே விளங்கத்தக்கது: தீயும் அதன் சூடும் ஒரேபொருளென்றாலும், தீ கண்ணிற்குப் புலப்படுவது, சூடு மெய்க்குப் புலப்படுவது. அப்படியே அறிவும் அதன் மனமும் ஒரே பொருளென்றாலும் அறிவு அறிவது, மனம் நினைப்பது. தீயாக நோக்கும்போது அதில் சூடு அடங்கியிருக்கிறது; சூடாக நோக்கும்போது அதில் தீ அடங்கியிருக்கிறது. அங்ஙனமே அறிவாக நோக்கும்போது அதில் மனம் அடங்கியிருக்கிறது; மனமாக நோக்கும்போது அதில் அறிவு அடங்கியிருக்கிறது. தீ ஒளிருங்கால் தொழிலைச் செய்கிறதென்பது எவ்வளவு பொய்யோ அவ்வளவு பொய்யே அறிவு அறியுங்கால் தொழிலைச் செய்கிறதென்பது. தீயிடத்தில் சூடு வந்ததற்குக் காரணம் வினவுதல் எப்படியோ அப்படியே அறிவிடத்தில் நினைப்பு வந்ததற்குக் காரணம் வினவுதல். தீ சுடுவது அதன் இயற்கை; அறிவு நினைப்பது அதன் இயற்கை. தீ ஒரு பருப் பொருளை(பொறிகட்குப் புலப்படும் பொருளை) நிலைக்களனாகக் கொண்டல்லது ஒளிராது, சுடாது. அதுபோல அறிவு ஒரு பருப்பொருளை நிலைக்களனாகக்கொண்டல்லது அறியாது, நினையாது. தீ திரி முதலியவற்றை நிலைக்களனாகக் கொண்டே ஒளிரும், சுடும். அப்படியே அறிவு உடம்பு முதலியவற்றை நிலைக்களனாகக் கொண்டே அறியும், நினைக்கும். திரிமுதலிய பருப்பொருள்களைச் சாராது தீ எப்படி ஒளிராதோ, சுடாதோ அப்படியே உடம்பு முதலிய பருப் பொருள்களைச் சாராது அறிவு அறியாது, நினையாது. தீயின் ஒளிக்கும் சூட்டுக்கும் திரி முதலியவற்றின் சேர்க்கை எப்படி இன்றியமையாததோ அப்படியே அறிவின் அறிவு(அறிவு-தொழிற் பெயர்)க்கும் நினைப்பிற்கும் உடம்பு முதலியவற்றின் சேர்க்கை இன்றியமையாதது. அறிவு அறிவானேன் நினைப்பானேன் என்பது தீ ஒளிர்வானேன் சுடுவானேன் என்பதை யொக்கும். தீயுள்ள இடத்தில் சூடுண்டு; சூடுள்ள இடத்தில் தீ யுண்டு. அறிவுள்ள இடத்தில் நினைப்புண்டு; நினைப்புள்ள இடத்தில் அறிவுண்டு.



உடம்பு பருப்பொருள்; மனம் (பொறிகளுக்குப் புலப்படாத) நுண்பொருள்; அறிவு (மனத்திற்கும் புலப்படாத) அதிநுண்பொருள். அறிவு மனமெல்லாம் வியாபித்துள்ளது; மனம் உடம்பெல்லாம் வியாபித்துள்ளது. அறிவு உயிர்; மனம் அதன் நினைப்பு; உடம்பு அதன் தடிப்பு. மெய், வாய், கண், மூக்கு, செவி, என்னும் ஐம்பொறிகளும் உடம்பின் வாயில்கள். கை, கால் முதலிய கருமேந்திரியங்கள் ஐந்தும் உடம்பின் உறுப்புக்கள். மயிர், தோல், நரம்பு, என்பு, தசை, இரத்தம், வாயுமுதலியன உடம்பின் பகுதிப்பொருள்கள். அறிவு மனத்துடன் கூடியே அறியும், மனம் அறிவுடன் கூடியே நினைக்கும். மனத்தின் வழியே உடம்பு செல்லும்; உடம்பில் நின்றே மனம் நினைக்கும். அறிவும் மனமும் நாயகனும் நாயகியும் போன்றவை. மனமும் உடம்பும் அரசனும் அடிமையும் போன்றவை. நாயகன் வழியில் நாயகி செல்வது இயற்கை; நாயகி வழியில் நாயகன் செல்வது இயற்கைக்குமாறு. அரசன் வழியில் அடிமை செல்வது இயற்கை; அடிமை வழியில் அரசன் செல்வது இயற்கைக்கு மாறு. அதுபோல மனத்தின் வழியில் உடம்பு செல்வது இயற்கை, உடம்பின் வழியில் மனம் செல்வது இயற்கைக்கு மாறு. இயற்கையை யொட்டி நிகழ்வனவெல்லாம் இன்பத்தை விளைக்கும், இயற்கைக்குமாறாக நிகழ்வனவெல்லாம் துன்பத்தை விளைக்கும். ஆதலால் அறிவு காட்டுவனவற்றை மனம் நினைக்கவேண்டும்; அறிவாற் காட்டப்பட்டு மனத்தால் நினைக்கப்பட்டவற்றை உடம்பு செய்யவேண்டும். இதற்கு மாறாக உடம்பின் போக்கிலே மனத்தைச் செல்லவிட்டும், மனத்தின் போக்கிலே தாம் (அறிவு) சென்றும் மனிதரிற் பெரும்பாலார் மறங்களைச்செய்து துன்பமுறுகின்றனர். அறிவு அறங்களைக் காட்டும். அறிவு காட்டும் அறங்களையே மனம் நினைக்கும்படி அதனை ஆளவேண்டும். இவ்வாறு அறிவு காட்டும் அறங்களையே மனம் நினைத்தும், உடம்பு செய்தும் வருமாயின் மனிதரெல்லாம் இன்பத்தையே அடைவரென்பது திண்ணம். இப்பேற்றை அடைவதற்கு அறிஞர் இயற்றியுள்ள அறநூற்பொருள்களை அறிவு அறியவேண்டும்; அறநூல்களிற் கூறியுள்ள பொருள்களை எல்லாம் மனம் உள்ள வேண்டும்; மனம் உள்ளிய அறங்களை எல்லாம் உடம்பு செய்யவேண்டும். அறங்களை உள்ளவும், செய்யவும் மனம் நல்ல நிலைமையிலும், உடம்பு ஆரோக்கிய நிலைமையிலும் இருக்க

வேண்டும். மனம் நல்ல நிலைமையில் இருப்பதற்குத் தீயோரையும் தீயனவற்றையும் அறவே விலக்கி, நல்லோரையும் நல்லனவற்றையும் மேன்மேலும் சேரவேண்டும். உடம்பு ஆரோக்கிய நிலைமையில் இருப்பதற்குத் தீயனவற்றை முற்றும் விலக்கி (ஆரோக்கியத்திற் கொத்த) நல்ல (உணவு முதலிய)னவற்றையே பசித்த பின்னர் அளவறிந்து உட்கொள்ளல்வேண்டும.

"உள்ளுவ தெல்லா முயர்வுள்ளல்." "மாறல்ல
துய்க்க துவரப் பசித்து."

வ. உ. சிதம்பரம்.

## பகவத்கீதை.

(சாஸ்வதி என்னும் நமது சிருபெயர் எழுதியது.)

### அத்தியாயம் I.

திருதராஷ்டிரன் கேட்கிறான்:—தரும நிலமாகிய குருநிலத்தில் போர் செய்வதை விரும்பி வந்து கூடிய என் இனத்தவரும், பாண்டவர்களும் (அப்பால்) யாது செய்தார்கள், ஸஞ்ஜயா? (1)

ஸஞ்ஜயன் சொல்லுகிறான்:—அணிவகுத்து நின்றதாகிய பாண்டவர் சேனையைப் பார்த்துவிட்டு, ராஜா துரியோதனன் (துரோண) ஆசாரியனிடம் போய்ப் பின்வரும்வார்த்தைகள்கூறினான். (2)

ஐயனே, நினது சீடன், அறிவுடையான், துருபதராஜன் மகன்—அவனால் வகுக்கப்பட்டு நிற்பதாகிய பாண்டவர்களின் பெரிய சேனையைப் பார்த்திரா! (3)

அங்கு, போரிலே வீமனையும் அர்ஜுனனையும் நிகர்த்தவர்கள், பெரியவில்லாளிகள், சூரர்கள் பலர் இருக்கிறார்கள்: யுயுதானன், விராடன், மஹாரதனாகிய துருபதன். (4)

திருஷ்டகேது, சேகிதானன், வீரியமுடைய காசி ராஜன், புருஜித், குந்தி போஜன், ஆணேறாகிய சைவியன், (5)

வெற்றியாளனாகிய யுதாமன்யு, வீரியமுடைய உத்தமௌஜா; சுபத்திரை மகன், துருபதன் வகையினர்,—எல்லோரும் மஹாரதர். (6)



இனி, நம்முள்ளே சிறந்திருப்போரையும் அறிந்து கொள்க. மேற் குலத்தவருள் மேம்பட்டவரே, எனது சேனையின் நாயகர்களையும் நமது குறிப்பினுக்காகச் சொல்லுகிறேன். (7)

நாம், வீட்டுமன், கர்ணன், போரில் வெற்றியாளனாகிய கிருபன், அசுவத்தாமா, விகர்ணன், ஸோமதத்தன் மகன், (8)

இன்னும் வேறு பல சூரர், என் பொருட்டாக வாழ்க்கையைத் துறந்துவிட்டோர், பலவிதப்படைகளும் அம்புகளுமுடையோர், எல்லாரும் யுத்த சாஸ்திரத்திலே தேர்ந்தவர். (9)

வீட்டுமனால் காக்கப்படுவதாகிய நமது பலம் சிறிது போலத் தோன்றுகிறது. வீமனால் காக்கப்படும் இவர்களின் பலம் அளவற்றதாகக் காண்கிறது. (10)

எனவே, தாங்களனைவரும் அவரவர்க்குரிய இடங்களில் வகைப்படி நின்று கொண்டு வீட்டுமனைக் காத்திடுக. (11)

அவனை (துரியோதனனை) உற்சாக மூட்டும்படியாகப் புகழ் சான்றவன், கௌரவக்கிழவன், (ஆகிய) பிதாமஹன் உரத்த குரலில் சிங்கநாதம் புரிந்து அப்பால் சங்கை எடுத்து ஒலி செய்தான். (12)

பின்பு சங்குகளும், பேரிகளும், தம் பட்டங்களும், பறைகளும், கொம்புகளும் ஒரேயடியாக முழங்கின. அவ்வொலி பெரிதாயிற்று. (13)

அப்பால், வெள்ளைக் குதிரைகள் கட்டிய பெரியதோர் தேர் மீது நின்ற மாதவனும் பாண்டவனும் தெய்வ இயல் சான்ற தமது சங்குகளை ஒலித்தனர். (14)

மாதவன் பாஞ்ச ஜன்யத்தை ஊதினான். தனஞ்ஜயன் தேவதத்தம் என்ற சங்கினை: அஞ்சதற்குரிய் செயல்கள் வல்லவனாகிய †விருகோதரன் பௌண்டிரமென்னும் தனது பெருஞ்சங்கத்தை ஒலித்தான். (15)

குந்திமகனாகிய ராஜா யுதிஷ்டிரன் தனது அநந்தவிஜயத்தையும், நகுலன் ஸுகோஷத்தையும், ஸஹதேவன் மணிபுஷ்பகத்தையும் ஊதினர். (16)

† விருகோதரன் ஓநாய் வயிறுடையவன்; வீமன் பெயர். ஓநாய்க்குத் தீராப்பசி உண்டென்பர்.

பெரிய வில்லாளியாகிய காசிராஜன், மஹாரதனுகிய சிகண்டி திருஷ்டத்துய்மநன், விராடன், தோல்வியறியாத ஸாத்யகி. (17)

துருபதன், துரௌபதேயர், பெருந்தோளினுனுகிய சுபத்திரை மைந்தன், இவ்வனைவரும் எல்லாப் புறங்களிலு மிருந்து தத்தம் சங்குகளை ஒலித்தனர். (18)

அந்த முழக்கம் திருதராஷ்டரனது கூட்டத்தாரின் நெஞ்சைப் பிளப்பதொத்தது; மண்ணையும வானையும் பேரொலியால் நிரப்பிற்று. (19)

அப்பால் படைவகுத்து நிற்பவர்களாகிய துரியோதனுதியரை நோக்கிக் குரங்குக் கொடியுடையோனுகிய பாண்டவன் * இருதிறத்தாரும் படைதொடுக்கப் போகும் தறுவாயில், தனது வில்லை யெடுத் தேந்தியவனுகி.. (20)

(கேளாய் திருதராஷ்ட்ர ராஜனே)மாதவனை நோக்கிஇவ்வார்த்தை சொல்வானுயினன்.

அர்ஜுனன் சொல்லுகிறுன்:—அச்சுதா, இரண்டு சேனைகளுக்குமிடையே எனது தேரைக்கொண்டு நிறுத்துக. (21)

போரிலே விருப்பங்கொண்டு படைவகுத்து நிற்போரைநான் பார்வையிடும் பொருட்டாக. மூண்டிருப்பதாகிய இப்போரில்என்னுடன் எதிர்த்து நிற்போர் யார் யாரென்பதை நான் தெரிந்து கொள்ளும் பொருட்டாக. (22)

திருதராஷ்ட்ரனது கெடுமதி கொண்ட மகனுக்குப் பிரிய மிழைக்க வேண்டுமென்று கருதி இங்கு போர்புரியத்திரண்டு நிற்போரை நான் நோக்கும் பொருட்டாக. (23)

உறக்கத்தை வென்றேன் (பார்த்தன்) இங்ஙனம் கூறுதலும் ஹ்ருஷிகேசன் தேர்களனைத்திலும் சிறந்த தனது தேரை இரண்டு சேனைகளுக்கு மிடையே நிறுத்திக்கொண்டு, (24)

வீட்டுமன், துரோணன், மற்றுமுள்ள எல்லா அரசர்களின் முன்னுகவுமிருந்து, "பார்த்தா, இந்தக் கவுரவர்கள் திரண்டு நிற்பதைப் பார்" என்றுன். (25)

* அர்ஜுனன்.



அங்கு பார்த்தன் பிதாக்கள், பாட்டன்மார், குருக்கள், அண்ணன் தம்பிகள், மக்கள், பேரன்மார், நண்பர்கள் (இவர்களெல்லாம்) நிற்பதைக் கண்டான். (26)

(மேலும்) பெண் கொடுத்த மாமன்மார், நெஞ்சத்திலேஅன்புடையோர், இன்னும் எல்லாவகை உறவினர்களும் இரண்டு சேனைகளிலேயும் அணியுற்று நிற்பதைக் குந்தியின் மகன் கண்டு, ()

பெரிய அருளினுல் நிரம்பியவனுகித் துயரமடைந்து இது கூறினன்.

அர்ஜுனன் சொல்லுகிறுன்:—கிருஷ்ணு, யுத்தத்திலே அவாக்கொண்டவர்களாய், நிலை பெற்றிருக்கும் எனது இனத்தாரைக் காண்பதில், (28)

எனது அவயவங்கள் சோர்கின்றன, வாயுலர்ந்து போகிறது, உடல் நடுங்குகிறது, மயிர் சிலிர்க்கின்றது, (29)

கையிலிருந்த காண்டீவம் நழுவுகின்றது, மேலெல்லாம் எரிச்சலெடுக்கிறது, நிற்க முடியவில்லை, மனம் சுழலுகின்றது. (30)

விபரீதமான குறிகள் காண்கிறேன்,கேசவா, இனத்தாரைப் போரிலே கொல்வதில் ஓர் நலனும் வருமென்று தோன்றவில்லை. (31)

நான் வெற்றியை விரும்பவில்லை. கிருஷ்ணு! நான் ராஜ்யத்தை யேனும் சுகத்தை யேனும் விரும்பவில்லை. கோவிந்தா! ராஜ்யத்தாலேனும், போகத்தாலேனும், வாழ்க்கையாலே யேனும் நமக்கு என்ன பயன்? (32)

யாவர் பொருட்டாக நாம் ராஜ்யத்தையும், போகங்களையும், சுகங்களையும் விரும்புகிறேமோ, அவர்களெல்லாம் இங்கு போரிலே தம்முயிரையும் செல்வத்தையும் துறந்து வந்து நிற்கிறுர்கள். (33)

குருக்களும், பிதாக்களும், மக்களும், பாட்டன்மாரும், மாதுலரும், (பெண் கொடுத்த) மாமன்மாரும், பவுத்திரரும், மைத்துனரும், சம்பந்திகளும் (இங்கு சாக வந்து விட்டனர்.) (34)

என்னை இவர்கள் கொல்வாரெனினும், இவர்களைக் கொல்ல எனக்கு விருப்பமில்லை. மூவுலகத்தினது ராஜ்யத்திற்காகவும் இஃது செய்யேன். மண்ணுட்சியின் பொருட்டென்? (35)

*திருதராஷ்டிரன் கூட்டத்தாரைக் கொன்றபின் நமக்கு என்ன இன்பமுண்டு? ஜனார்த்தனா, இந்தப் பாதகரைக் கொல்வதிலிருந்து நம்மைப் பாவந்தான் சாரும்.* (36)

*ஆதலால், பந்துக்களாகிய திருதராஷ்டிரனினத்தவரை நாம் கொல்லுதல் தகுதியன்று. ஸ்வஜனங்களைக் கொன்றபின்பு எங்ஙனம் இன்புற்றிருப்பது?* (37)

*உலோபத்தால் பற்றுண்ட சிந்தையோராகிய இவர்கள் குலக்ஷயத்தாலுண்டாகும் தோஷத்தையும், மித்திரத் துரோகத்திலுள்ள பாதகத்தையும் காணவில்லையாயினும்,* (38)

*குலக்ஷயத்தால் விளையும் தோஷத்தைக் காண்கின்ற நாம் இந்தப் பாவத்திலிருந்து நீங்கிக் கொள்ளத் தெரியாமலிருப்பதெங்ஙனம்?* (39)

*குலக்ஷயத்தால் ஸநாதனமாகிய குலதர்மங்கள் அழிகின்றன. தர்மம் அழியவே, குலமுழுதிலும் அதர்மம் ஓங்குகிறது.* (40)

*அதர்மம் மிகுதிப் படுவதால், கிருஷ்ணா, குலமகளிர் கெடுகின்றனர். ஸ்திரீகள் கெட்டவுடனே, வார்ஷ்ணேயா, அதிலிருந்து வர்ணக் குழப்ப முண்டாகிறது.* (41)

*இக்குழப்பத்தினால் குலத்தைக்கெடுத்தோர், குலத்தவர் ஆகியஇருபான்மையோருக்கும்நரகமேற்படுகிறது. இவர்களுடைய பிதிர்க்கள் பிண்டமும் நீருமிழந்து வீழ்ச்சி பெறுகின்றார்கள்.* ()

*குலநாசம் செய்பவரின், வர்ணக்குழப்பத்திற்கிடமான தோஷங்களால் சாசுவதமான ஜாதி தர்மங்களும் குலதர்மங்களும் எடுபட்டுப் போகின்றன.* (43)

*குலதர்மங்கள் கெட்டுப்போன மனிதர்களுக்கு,ஜனார்த்தனா, எந்நாளும் நரகத்திலே வாசமேற்படுமென்று கேட்டிருக்கிறோம்.*

*ஐயகோ! பெரிய பாவஞ்செய்யப் புறப்பட்டோம், ராஜ்ய சுகத்தின் விருப்பத்தால் ஸ்வஜனங்களைக் கொல்லத் தலைப்பட்டிருக்கும் நாம்.* (45)

*எதிர்த்தலின்றி, சஸ்திரமில்லாதவனாய் நிற்கும் என்னைத் திருதராஷ்டிரன் கூட்டத்தார் ஆயுதபாணிகளாகிப் போர்க்களத்திலே கொன்று விடுவாராயின், அஃதெனக்கு இதனைக்காட்டிலும் நன்றேயாம்.* (46)



*ஸஞ்ஜயன் சொல்லுகிறான்;—இங்ஙனம் சொல்லி, அர்ஜுனன், சோகத்தினால் நொந்த மனத்தினனாய், அம்பையும் வில்லையும் எறிந்து விட்டுத் தேர்ப் பீடத்தின் மேல் உட்கார்ந்து கொண்டான்.* (47)

## சின்னச் சங்கரன் கதை.

*(சாவித்திரி என்னும் நமது கிருபநேயர் எழுதியது.)*

### முதலாவது குட்டியத்தியாயம்.

#### படிப்பவர்களுக்கு ஒரு வார்த்தை.

நமது நாட்டுக் கதைகளிலே பெரும்பாலும் அடிதொடங்கிக் கதா நாயகனுடைய ஊர், பெயர், குலம், கோத்திரம், பிறப்பு வளர்ப்பெல்லாம் கிரமமாகச் சொல்லிக்கொண்டு போவது வழக்கம். நவீன ஐரோப்பியக் கதைகளிலே பெரும் பகுதி அப்படியல்ல. அவர்கள் நாடகத்தைப்போலே கதையை நட்ட நடுவில்தொடங்குகிறார்கள். பிறகு போகப்போகக் கதாநாயகனுடைய பூர்வ விருத்தாந்தங்கள் தெரிந்துகொண்டே போகும். எங்கேனும் ஒரு காட்டில், ஒரு குளக்கரையில், ஒரு தனி மேடையில் இவன் தனது காதலியுடன் இருப்பான். இல்லாவிட்டால் யாரேனுமொரு சிநேகிதனுடன் இருப்பான். அப்போது கதையின் ஆரம்பங்களை எடுத்து விரிப்பான். இது அவர்களுடைய வழி.

நான் இக்கதையிலே மேற்படி இரண்டு வழிகளையும் கலந்து வேலை செய்யப்போகிறேன். சின்னச் சங்கரன்—நம்முடைய கதா நாயகன்—விருத்தாந்தங்களை மாத்திரம் பூர்வத்திலிருந்து கிரமமாகவே சொல்லிவிட்டு, கதையில் வரும் மற்றவர்கள் விஷயத்திலே கொஞ்சம் ஐரோப்பிய வழியைத் தழுவிக்கொண்டு செல்லக் கருதுகிறேன். ஸர்வகலா நிதியாகிய ஸரஸ்வதி தேவி எனது நூலில் கடைக்கண் வைத்திடுக.

### இரண்டாம் அத்தியாயம்.

#### பிஞ்சிலே பழுத்தது.

சின்னச்சங்கரன் பிஞ்சிலே பழுத்து விட்டான். நம்முடைய கதா நாயகன் பெயர் அத்தனை நயமில்லையென்றும் கொஞ்சம்

கவுரவக் குறைவாக இருக்கிறதென்றும் எவரும் கவலைப்படலாகாது. போகப்போக இந்தப் பெயர் மாறிக்கொண்டே போகும். கடைசியில் படிப்பவர்கள் பயப்படும்படி அத்தனை படாடோபமாக முடியும்படி ஏற்பாடு செய்கிறேன். சின்னச்சங்கரன், சங்கரன், சங்கரய்யர், சங்கர நாராயணய்யர், சங்கர நாராயண பாரதியார், இத்யாதி, இத்யாதி. சின்னச்சங்கரன் கவுண்டனூர் இங்கிலீஷ் பள்ளிக்கூடத்திலே மூன்றாவது வகுப்பில் படிக்கிறான். அக்காலத்தில் இதை 'மிடில் ஸ்கூல்' என்பார்கள். பையனுக்கு வயது பன்னிரண்டு அல்லது பதின்மூன்றிருக்கும். இதற்குள் தமிழில் புலவராய்விட்டான். கவுண்டனூரில் ஜலம் குறைவு; பணம் குறைவு; நெல்விளைவு கிடையாது; வாழை, தென்னை, மா, பலா- இவையெல்லாம் வெகு துர்லபம்; பூக்கள் மிகவும் குறை; "புலவர்"களுக்கு மாத்திரம் குறைவில்லை. அந்தச் சரக்கு மலிவு. தமிழில் சங்கரன் பல பல நூல்கள் பல பல காவியங்கள் படித்துமுடித்திருந்தான். இவை பெரும்பாலும் 'சிங்கார' ரஸம் மிகுந்திருப்பன. இந்த ஜாதிக்காவியங்கள் தான் சங்கரனுக்குப் பிடிக்கும். கவுண்டனூர்ப் புலவர்கள் எல்லோருக்கும் இப்படியே தான். மன்மத விகாரத்தைப் புகழ்ந்து பேசியிருக்கும் நூல்களும் தனிப்பாடல்களும் அவ்வூரிலே வெகு சாதாரணம். சங்கரனுக்கும் அவை வெகு சாதாரணமாயின. "பாஷைகளிலே தமிழ் சிறந்தது. தமிழில் இருளப்ப நாய்க்கன் காதல், செவலூர்க்கோவை, பிச்சித்தேவன் உலாமடல் முதலிய காவியங்கள் நிகரற்றபெருமையுடையன. இவற்றிலுள்ள சுவை உலகத்தில் வேறெதிலுமேயில்லை" என்பது சின்னச்சங்கரனுடைய கொள்கை. சங்கரன் கொஞ்சம் குள்ளனாக இருந்தபடியால் பள்ளிக்கூடத்தில் மற்றப் பிள்ளைகள் அவனுக்குச் "சின்னச்சங்கரன்" என்று பெயர் வைத்துவிட்டார்கள்.

தென்பாண்டி நாட்டிலே, பொதிய மலைக்கு வடக்கே இருபது காதம் தூரத்தில் பூமி தேவிக்குத் திலகம் (வைத்து அது உலர்ந்துபோயிருப்பது) போலக் கவுண்டபுரம் என்ற நகரம் திகழ்ச்சிபெற்றது. அதைத்தான் பாமர ஜனங்கள் கவுண்டனூர் என்பார்கள். இந்நகரத்தில் நமது கதை தொடங்கும் காலத்திலே மஹா கீர்த்திமானாகிய ராமசாமிக் கவுண்டரவர்கள் அரசு செலுத்திவந்தனர். வெளியூர்ப் பாமரஜனங்கள் இவரை 'ஜமீந்தார்' என்பார்கள். கவுண்டபுரத்திலே இவருக்கு "மஹாராஜா" என்றும் பட்டம். கவுண்டரின் மூதாதைகளின் மீது பண்டைக்காலத்துப்



புலவர்கள் பாடியிருக்கும் "இன்ப விஸ்தாரம்" முதலிய நூல்களை அவ்வூர்ப்புலவர்களும், அவர்களைப்பின்பற்றி மற்ற ஜனங்களும் வேதம்போலக் கொண்டாடுவார்கள்.

ராமசாமிக்கவுண்டர் (இவருடைய முழுப்பெயரைப் பட்டங்கள் ஸஹிதமாகப் பின்பு சொல்லுகிறேன்) தமிழில் அபிமானமுடையவராதலால், கவிதை பாடத்தெரிந்தவர்களுக்கு அவ்வூரில் மிகுந்த மதிப்புண்டு. சின்னச்சங்கரனுக்குப் பத்து வயது முதலாகவே கவிபாடும் தொழிலில் பழக்கமுண்டாய் விட்டது. எப்போதும் "புலவர்"களுடனே தான் ஸகவாஸம். ஒத்த வயதுப்பிள்ளைகளுடன் இவன் சேர்ந்து விளையாடப் போவதில்லை. எங்கேனும் மதன நூல்கள் வாசித்துப் பலர் உட்கார்ந்து ரஸித்துக்கொண்டிருப்பதைக் கண்டால், இவனும் அங்கே போய் உட்கார்ந்து விடுவான். பள்ளிக்கூடத்துப் பாடங்களெல்லாம் கிருஷ்ணார்ப்பணந்தான். பூகோளசாஸ்திரம், கணக்கு, சுகவழி முதலிய எத்தனையோ பாடங்கள் கீழ் வகுப்புக்களிலே இவனுக்குக்கற்றுக்கொடுக்க முயற்சி செய்தார்கள். ஒன்றிலும் இவன் கருத்தை செலுத்துவதில்லை. இவனுக்கு எப்போதும் ஒரே சாஸ்திரம், ஒரே கணக்கு, ஒரேவழி தானுண்டு.

" சாற்றுவதும் காமகலை சாதிப்பதும்...
போற்றுவதுங் காமனடிப் போது. "

கவுண்டனூர்ப் " புலவர் " கூட்டத்திலே சங்கரன் ஒருவனாகிவிட்டான். சுருக்கம் அவ்வளவுதான். இவன் பாட்டுக்களில் சிலசில பிழைகள் இருந்தபோதிலும் இவனுடைய சிறுவயதைக் கருதி அப்பிழைகளை யாரும் கணிப்பதில்லை. சுவை மிகுதியைக் கருதி இவனை மிதமிஞ்சிப் புகழ்வோர் பலராயினர். ஒரு பாட்டில் எத்தனைக்கெத்தனை அசுத்தமான வார்த்தைகள் சேர்கின்றனவோ, அத்தனைக்கத்தனை சுவை யதிகமென்பது கவுண்டனூர்ப் புலவர்களுடைய முடிபு. எனவே, பையன் நாவும் கையும் சிறிதேனும் கூசாமல், காமுகர்களுக்கு வேண்டிய பதங்களைத் தாராளமாகப் பொழிந்து பாடல்கள் செப்பலானான். சங்கரனுடைய பந்துக்களுக்கெல்லாம் இந்த விஷயத்தில் பரமாநந்தம். இவனுக்கு மூன்று வயதிலேயே தாய் இறந்துபோய்விட்டாள். தகப்பனார் பெயர் சுப்பிரமணிய அய்யர். அவர் ராமஸாமிக் கவுண்டருடைய ஆப்தர்களிலே ஒருவர். இங்கிலீஷ் படித்துப் பழைய காலத்துப் பரீ

வைஷ் ஏதோ தேறி ஸர்க்கார் உத்தியோகத்துக்குப் போகாமல் வியாபாரஞ் செய்து சிறிது பணந்தேடி வைத்துவிட்டார். இவருக்கு இரண்டாந்தாரம் விவாகமாய்விட்டது. எனவே, தனது தாயைப்பெற்ற பாட்டனார் வீட்டிலேதான் சங்கரனுக்குப் பெரும்பாலும் வாசம். பாட்டனாரும் பாட்டியும் சங்கரனைப் பிராணனாகவே நினைத்துவிட்டார்கள். சங்கரன் விளையாடுவதற்கு வேண்டுமென்று கேட்டால் தாத்தா தாம் பூஜை செய்யும் சிவலிங்கத்தைக் கூடக் கொடுத்துவிடுவார். அத்தனை "செல்லம்". ஆனால், சிவலிங்கத்தைப்பற்றி யாதொருவிதமான பயத்துக்கும் இடமில்லை. பையன் தான் விளையாட்டில் புத்தி செலுத்தும் வழக்கமில்லையே! பையனுடைய கையும் காலும் வாழைத்தண்டைப் போலிருக்கும். பிராணசக்தி வெகு சொற்பம். நெஞ்சு அரையே மாகாணி அடி அகலம். கண்கள் ருதுவாகி நோய் பிடித்திருக்கும் கன்னிகளின் கண்களைப் போலிருக்கும். முதுகிலே கூன். ஆணாயினும், பெண்ணாயினும் ஏதேனுமோர் புதியமுகத்தைப் பார்த்தால் கூச்சப்படுவான். தற்காலத்தில் நமது தேசத்துப் பள்ளிக்கூடங்களிலேயே பிள்ளைகளைப் பெண்களாக்கிவிடும் திறமை உவாத்திமார்களுக்கு அதிகமுண்டு. அத்துடன் "கவிதை"யுஞ் சேர்ந்துவிட்டது—கவுண்டனூர்க்கவிதை. பையனுக்குஜீவதாது மிகவும் குறைந்து பொய்மை நிறைந்த சித்தச் சலனங்கள் மிகுதிப்பட்டு விட்டன.

இந்த விநோதமான பிள்ளையைத் தாத்தாவும் பாட்டியும் ஏதுமறியாத வெறும்பொம்மைபோலப் பாராட்டினார்கள். 'பால் மணம் மாறாத குழந்தை' என்பது அவர்களுடைய கருத்து. அவனுக்கென்று தனியாக ஒரு ஸ்வபாவமும், தனி ஸம்ஸ்காரங்களும் ஏற்பட்டதாகவே அவர்களுக்கு நினைப்பில்லை. அவனுடைய புலமை ஈசனால் கொடுக்கப்பட்ட வரமென்றெண்ணினார்கள். ஏதுமறியாத குழந்தைக்கு இப்படிக் கல்வி ஏற்பட்ட ஆச்சரியத்தால் அவர்களுக்கு அளவிறந்த மகிழ்ச்சி யுண்டாயிற்றே யல்லாது அவன் 'பாப்பா' என்ற எண்ணம் மாறவில்லை. இரண்டு மூன்று தினங்களுக்கொருமுறை பாட்டி அவனுக்கு "சாந்தி" கழிப்பாள். சுண்ணாம்புக்கும் மஞ்சளுக்கும் செலவதிகம்—சங்கரனுக்குக் "கண்பட்டது" கழியும் பொருட்டாக.

தகப்பனார் இவனைப் "பையன்" என்று பேசுவார். இவன் முற்றிப்போன விஷயம் அவருக்குத் தெரியாது. இவனுடைய



'கீர்த்தி' புலவர்களுக்குள்ளே பரவிக் கவுண்டரவர்கள் செவிவரை எட்டிப்போயிற்று. இதிலிருந்து சுப்பிரமணிய அய்யருக்கு மிகுந்த ஸந்தோஷம். ஆனால் இவன் பள்ளிக்கூடத்துப் பாடங்களை நேரே படிப்பதில்லையென்பதில் கொஞ்சம் வருத்தமுண்டு. இவனைப் பெரிய பரீக்ஷைகள் தேறும்படி செய்து சீமைக்கனுப்பி, ஜில்லா கலெக்டர் வேலைக்குத் தயார்செய்ய வேண்டுமென்பது அவருடைய ஆசை. அதற்கு இவன் புலவர்களிடம் ஸஹவாஸம் செய்வதுதான் பெரிய தடையென்பது அவருடைய புத்தியில் தட்டவில்லை. இவனுடைய மாமனாகிய கல்யாணசுந்தரம் முதலிய சில துஷ்டப்பையன்களுடன் சேர்ந்து 'விளையாடிக்' கெட்டுப்போகிறானென்றும், தாய்வீட்டார் கொடுக்கும் செல்லத்தால் தீங்குண்டாகிறதென்றும், இவ்விரண்டையும் கூடியவரை குறைத்துக் கொண்டு வரவேண்டுமென்றும் அவர் தீர்மானஞ் செய்தார்.

இனி, இவனுடன் ஒத்த வயதுள்ள பிள்ளைகள் ஆரம்பத்திலே சங்கரனை இகழ்ச்சியில் வைத்திருந்தார்கள். பிறகு, நாளடைவில் சங்கரன் ஒரு "வித்வான்" ஆகிவிட்டதைக் கண்டவுடனே அந்தப் பிள்ளைகளுக்கெல்லாம் அவனிடம் ஒருவிதமான பயமும் வியப்பும் உண்டாயின. "இவன் நோஞ்சப்பயல்; ஒரு இழவுக்கும் உதவமாட்டான்" என்று முன்போல வாய்திறந்து சொல்வதில்லை. மனதிற்குள் அவ்வெண்ணத்தை அடக்கிவிட்டார்கள்.

பள்ளிக்கூடத்துக்குப் போனால் சங்கரனை உவாத்திமார், "புலவரே, பலகையின்மேல் ஏறி நில்லும்" என்பார்கள், பாடங்கள் நேரே சொல்லாததுபற்றி. நமது சின்னப்புலவர் பலகையின் மேல் ஏறி நின்றுகொண்டு மனதிற்குள்ளே எதுகைகளடுக்கிக் கொண்டிருப்பார். உவாத்தியார் கரும்பலகைமேல் கணக்குப் போட்டுக் கொண்டிருப்பார்.

இவன், " புலவன், அலவன், வலவன்,
பலகை, அலகை, உலகை
நில், நெல், வில், பல், சொல், அல், எல், கல், மல்,
கணக்கு, வணக்கு, இணக்கு— " [வெல், வல்,—

என்று தனக்குள்ளே கட்டிக்கொண்டு போவான்.

வாத்தியார் 00·2853 × ···

என்று ஒரு கணக்குப்போட்டு முடிவு கட்டிக்கொண்டு போகையில், சங்கரனை நோக்கி "சங்கரன்! புள்ளியை எந்த இலக்கத்

தின்மேல் போடுகிறது? சொல் பார்ப்போம்." என்பார். இவன் மறுமொழி சொல்லாமல் பித்துக்கொண்டவன் போலிருப்பான். அவர், "என்னடா, விழிக்கிறாய்?" என்று கேட்டுத் திட்டிய பிறகு அடுத்த பையனிடம் வினவுவார்.

அடுத்தவன் ஏது சொல்லுகிறான் என்பதைக்கூடக் கவனியாமல், இவன் மனதிற்குள்

விழி, இழி, கிழி, பிழி, வழி, சுழி, அழி, பழி, மொழி, ஒழி, புள்ளி, உள்ளி, பள்ளி, அள்ளி, கள்ளி, தெள்ளி, வெள்ளி என்று அடுக்கிக்கொண்டே போவான்.

தமிழ்ப்பாடம் வரும்போது மாத்திரம் கொஞ்சம் கவனிப்பான். அதிற்கூட இலக்கணம் தடவும்.

இவனுடைய தகப்பனாரின் மதிப்பையும், ராமசாமிக் கவுண்டர் இவனிடம் தயவு பாராட்டுகிறா ரென்பதையும் உத்தேசித்து உவாத்திமார் இவனை அதிகமாக அடித்துக்கொல்வதில்லை "இவன் கடைசிவரை உருப்படமாட்டான்" என்பது அவர்களுடைய முடிவு.

ஊரிலுள்ள பெண்குட்டிகளெல்லாம் "சங்கரன், அப்பாவி" என்று சொல்லும். இவ்வாறு, அவரவர் தத்தமக்கு ஒத்தபடி நினைத்துக்கொண்டிருக்கையில், சங்கரன் பிரத்தியேகமாக ஒரு வகையில் முதிர்ந்து வருகிறான். எல்லார் விஷயமும் இப்படியேதான். ஒருவனுடைய உள்ளியல்பை மற்றொருவன் முழுதும் அறிந்துகொள்ளுதல் எக்காலத்திலும் சாத்தியமில்லை. அவனவனுடைய இயல்பு அவனவனுக்கே தெளிவாகத் தெரியாது. பிறனுக்கெப்படி விளங்கும்?

பிள்ளைகளையும் பெண்களையும் பற்றித் தாய் தகப்பன்மார் கொண்டிருக்கும் எண்ணம் பெரும்பாலும் தப்பாகவே யிருக்கும். குழந்தைகளின் அறிவும் இயல்பும் எவ்வளவு சீக்கிரத்தில் மாறிச் செல்லுகின்றன வென்பதைப்பெற்றோர் அறிவதில்லை 'பாப்பா', 'பாப்பா' என்று நினைத்துக்கொண்டேயிருக்கிறார்கள். பதினாறு, பதினேழு வயதாகும் போது 'அப்பாப்பா', 'அப்பாப்பா' என்கிறார்கள்.

## கேநோபநிஷத்.

(ஸ்ரீ சி. சுப்பிரமணிய பாரதியவர்கள் மொழிபெயர்த்தது.)

### முதற் கண்டம்.

1. 𑌕𑍇𑌨𑍇𑌷𑌿𑌤𑌂 𑌪𑌤𑌤𑌿 𑌪𑍍𑌰𑍇𑌷𑌿𑌤𑌂 𑌮𑌨𑌃
𑌕𑍇𑌨 𑌪𑍍𑌰𑌾𑌣𑌃 𑌪𑍍𑌰𑌥𑌮𑌃 𑌪𑍍𑌰𑍈𑌤𑌿 𑌯𑍁𑌕𑍍𑌤𑌃 ।
𑌕𑍇𑌨𑍇𑌷𑌿𑌤𑌾𑌂 𑌵𑌾𑌚𑌮𑌿𑌮𑌾𑌂 𑌵𑌦𑌨𑍍𑌤𑌿
𑌚𑌕𑍍𑌷𑍁𑌃 𑌶𑍍𑌰𑍋𑌤𑍍𑌰𑌂 𑌕 𑌉 𑌦𑍇𑌵𑍋 𑌯𑍁𑌨𑌕𑍍𑌤𑌿

எவனுடைய ஏவுதலால் மனம் தான் விரும்பிய பொருளிலே போய் வீழ்கின்றது? ஆதியிலே பிராணன் எவனுடைய அமைப்பினால் செல்வதாயிற்று? மனிதர் பேசும் பேச்சை எவன் தூண்டுகிறான்? கண்ணையும் செவியையும் எந்த தேவன் தொழிலிற் பொருத்தி விடுகிறான்?

2. 𑌶𑍍𑌰𑍋𑌤𑍍𑌰𑌸𑍍𑌯 𑌶𑍍𑌰𑍋𑌤𑍍𑌰𑌂 𑌮𑌨𑌸𑍋 𑌮𑌨𑍋 𑌯𑌦𑍍
𑌵𑌾𑌚𑍋 𑌹 𑌵𑌾𑌚𑌂 𑌸 𑌉 𑌪𑍍𑌰𑌾𑌣𑌸𑍍𑌯 𑌪𑍍𑌰𑌾𑌣𑌃
𑌚𑌕𑍍𑌷𑍁𑌷𑌶𑍍𑌚𑌕𑍍𑌷𑍁𑌰𑌤𑌿𑌮𑍁𑌚𑍍𑌯 𑌧𑍀𑌰𑌾𑌃
𑌪𑍍𑌰𑍇𑌤𑍍𑌯𑌾𑌸𑍍𑌮𑌾𑌲𑍍𑌲𑍋𑌕𑌾𑌦𑌮𑍃𑌤𑌾 𑌭𑌵𑌨𑍍𑌤𑌿

செவியின் செவி, மனத்தின் மனம், வாக்கின் வாக்கு, அவனே பிராணனுக்குப் பிராணன். கண்ணுக்குக் கண். அவனை யறிந்தோர் (தீரர்) பந்தங்கள் விட்டு, இவ்வுலகினின்றும் (சாவற்ற) அமிர்தத்தன்மை பெறுகின்றனர்.

3. 𑌨 𑌤𑌤𑍍𑌰 𑌚𑌕𑍍𑌷𑍁𑌰𑍍𑌗𑌚𑍍𑌛𑌤𑌿 𑌨 𑌵𑌾𑌗𑍍𑌗𑌚𑍍𑌛𑌤𑌿 𑌨𑍋 𑌮𑌨𑌃
𑌨 𑌵𑌿𑌦𑍍𑌮𑍋 𑌨 𑌵𑌿𑌜𑌾𑌨𑍀𑌮𑍋 𑌯𑌥𑍈𑌤𑌦𑌨𑍁𑌶𑌿𑌷𑍍𑌯𑌾𑌤𑍍 ॥

அதனிடத்தே விழி செல்வதில்லை, வாக் கேறுவதில்லை. தெரிகிலோம், அதை யெங்ஙனம் பிறருக்கு எடுத்துச் சொல்வதென்பதை யறிய மாட்டோம்.

4. 𑌅𑌨𑍍𑌯𑌦𑍇𑌵 𑌤𑌦𑍍𑌵𑌿𑌦𑌿𑌤𑌾𑌦𑌥𑍋 𑌅𑌵𑌿𑌦𑌿𑌤𑌾𑌦𑌧𑌿
𑌇𑌤𑌿 𑌶𑍁𑌶𑍍𑌰𑍁𑌮 𑌪𑍂𑌰𑍍𑌵𑍇𑌷𑌾𑌂 𑌯𑍇 𑌨𑌸𑍍𑌤𑌦𑍍𑌵𑍍𑌯𑌾𑌚𑌚𑌕𑍍𑌷𑌿𑌰𑍇 ॥

இஃது வேறு. அறியப்படு பொருளுக்கெல்லாம் கீழேயுள்ளது. அறியப்படாததற்கு மேலேயுள்ளது. இங்ஙனம் நமக்கு அதனை யுரைத்த முன்னோர்களிடம் கேட்டிருக்கிறோம்.

5. 𑌯𑌦𑍍𑌵𑌾𑌚𑌾𑌨𑌭𑍍𑌯𑍁𑌦𑌿𑌤𑌂 𑌯𑍇𑌨 𑌵𑌾𑌗𑌭𑍍𑌯𑍁𑌦𑍍𑌯𑌤𑍇
𑌤𑌦𑍇𑌵 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮 𑌤𑍍𑌵𑌂 𑌵𑌿𑌦𑍍𑌧𑌿 𑌨𑍇𑌦𑌂 𑌯𑌦𑌿𑌦𑌮𑍁𑌪𑌾𑌸𑌤𑍇 ॥

எது வாக்கால் விளங்குவதில்லையோ, எதனால் வாக்கு விளங்குகிறதோ, அதுவே பிரமமென்றறி. ஜனங்கள் வழிபடுமிஃதன்று.

6. 𑌯𑌨𑍍𑌮𑌨𑌸𑌾 𑌨 𑌮𑌨𑍁𑌤𑍇 𑌯𑍇𑌨𑌾𑌹𑍁𑌰𑍍𑌮𑌨𑍋 𑌮𑌤𑌮𑍍
𑌤𑌦𑍇𑌵 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮 𑌤𑍍𑌵𑌂 𑌵𑌿𑌦𑍍𑌧𑌿 𑌨𑍇𑌦𑌂 𑌯𑌦𑌿𑌦𑌮𑍁𑌪𑌾𑌸𑌤𑍇 ॥

எதனை மனத்தாற் கருதலாகாதோ, எதனால் மனம் கருதப்படுமென்பரோ, அதுவே பிரமம் என்றறி. ஜனங்கள் வழிபடுமிஃதன்று.

7. 𑌯𑌚𑍍𑌚𑌕𑍍𑌷𑍁𑌷𑌾 𑌨 𑌪𑌶𑍍𑌯𑌤𑌿 𑌯𑍇𑌨 𑌚𑌕𑍍𑌷𑍂𑌂𑌷𑌿 𑌪𑌶𑍍𑌯𑌤𑌿
𑌤𑌦𑍇𑌵 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮 𑌤𑍍𑌵𑌂 𑌵𑌿𑌦𑍍𑌧𑌿 𑌨𑍇𑌦𑌂 𑌯𑌦𑌿𑌦𑌮𑍁𑌪𑌾𑌸𑌤𑍇 ॥

எதனைக் கண்ணால் காண்பதில்லையோ, எதனால் கண்களைக் காண்கின்றனவோ அதுவே பிரமமென்றறி. ஜனங்கள் வழிபடுமிஃதன்று.

8. 𑌯𑌚𑍍𑌛𑍍𑌰𑍋𑌤𑍍𑌰𑍇𑌣 𑌨 𑌶𑍃𑌣𑍋𑌤𑌿 𑌯𑍇𑌨 𑌶𑍍𑌰𑍋𑌤𑍍𑌰𑌮𑌿𑌦𑌂
[𑌶𑍍𑌰𑍁𑌤𑌮𑍍
𑌤𑌦𑍇𑌵 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮 𑌤𑍍𑌵𑌂 𑌵𑌿𑌦𑍍𑌧𑌿 𑌨𑍇𑌦𑌂 𑌯𑌦𑌿𑌦𑌮𑍁𑌪𑌾𑌸𑌤𑍇 ॥

எதனைச் செவியால் கேட்பதில்லையோ, எதனால் செவிகள் கேட்கின்றனவோ. அதுவே பிரமம் என்றறி. ஜனங்கள் வழிபடுமிஃதன்று.

9. 𑌯𑌤𑍍𑌪𑍍𑌰𑌾𑌣𑍇𑌨 𑌨 𑌪𑍍𑌰𑌾𑌣𑌿𑌤𑌿 𑌯𑍇𑌨 𑌪𑍍𑌰𑌾𑌣𑌃 𑌪𑍍𑌰𑌣𑍀𑌯𑌤𑍇
𑌤𑌦𑍇𑌵 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮 𑌤𑍍𑌵𑌂 𑌵𑌿𑌦𑍍𑌧𑌿 𑌨𑍇𑌦𑌂 𑌯𑌦𑌿𑌦𑌮𑍁𑌪𑌾𑌸𑌤𑍇 ॥

எது உயிரால் உயிர்த்திருப்பதில்லையோ, எதனால் உயிர் உயிர்த்திருக்கின்றதோ, அதுவே பிரமம் என்றறி. ஜனங்கள் வழிபடுமிஃதன்று.

## இரண்டாம் கண்டம்.

1. 𑌯𑌦𑌿 𑌮𑌨𑍍𑌯𑌸𑍇 𑌸𑍁𑌵𑍇𑌦𑍇𑌤𑌿 𑌦𑌭𑍍𑌰𑌮𑍇𑌵𑌾𑌪𑌿 𑌨𑍂𑌨𑌂 𑌤𑍍𑌵𑌂
𑌵𑍇𑌤𑍍𑌥 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌣𑍋 𑌰𑍂𑌪𑌂 𑌦𑍇𑌵𑍇𑌷𑍍𑌵𑌥 𑌨𑍁 𑌮𑍀𑌮𑌾𑌂𑌸𑍍𑌯𑌮𑍇𑌵
[𑌤𑍇 𑌮𑌨𑍍𑌯𑍇 𑌵𑌿𑌦𑌿𑌤𑌮𑍍 ॥



நன்றாக அறிவேனென்று கருதுவையாயின் நீ இந்தப் பிரமத்தின் ரூபத்தைச் சிறிது தான் அறிகின்றாய், இந்தப் பிரமத்திலே நீ யாது, தேவர்களிடம் யாதுளது, என நீ அறிந்ததையெல்லாம் இன்னும் பரிசோதனை செய்தே பார்த்தல் வேண்டும்.

2. 𑌨𑌾𑌹𑌂 𑌮𑌨𑍍𑌯𑍇 𑌸𑍁𑌵𑍇𑌦𑍇𑌤𑌿 𑌨𑍋 𑌨 𑌵𑍇𑌦𑍇𑌤𑌿 𑌵𑍇𑌦 𑌚
𑌯𑍋 𑌨𑌸𑍍𑌤𑌦𑍍𑌵𑍇𑌦 𑌤𑌦𑍍𑌵𑍇𑌦 𑌨𑍋 𑌨 𑌵𑍇𑌦𑍇𑌤𑌿 𑌵𑍇𑌦 𑌚

நன்றாக அறிவேனென்று நான் கருதவில்லை, அறியவில்லையென்றும் கருதவில்லை. நமக்குள் இதை எவன் தெரிபவனோ அவனறிகின்றான். தெரியாதவனும் அறிகின்றான்.

3. 𑌯𑌸𑍍𑌯𑌾𑌮𑌤𑌂 𑌤𑌸𑍍𑌯 𑌮𑌤𑌂 𑌮𑌤𑌂 𑌯𑌸𑍍𑌯 𑌨 𑌵𑍇𑌦 𑌸𑌃
𑌅𑌵𑌿𑌜𑍍𑌞𑌾𑌤𑌂 𑌵𑌿𑌜𑌾𑌨𑌤𑌾𑌂 𑌵𑌿𑌜𑍍𑌞𑌾𑌤𑌮𑌵𑌿𑌜𑌾𑌨𑌤𑌾𑌮𑍍 ॥

எவன் (உணர்ந்ததாகக்) கொள்ளவில்லையோ, அவன் இதையுணர்ந்தவன். எவன் கொள்கையுடையவனோ அவன் அறியவில்லை. அறிந்தவரால் அறியப்படாதது. அறியாதவரால் அறியப்பட்டது.

4. 𑌪𑍍𑌰𑌤𑌿𑌬𑍋𑌧𑌵𑌿𑌦𑌿𑌤𑌂 𑌮𑌤𑌮𑌮𑍃𑌤𑌤𑍍𑌵𑌂 𑌹𑌿 𑌵𑌿𑌨𑍍𑌦𑌤𑍇
𑌆𑌤𑍍𑌮𑌨𑌾 𑌵𑌿𑌨𑍍𑌦𑌤𑍇 𑌵𑍀𑌰𑍍𑌯𑌂 𑌵𑌿𑌦𑍍𑌯𑌯𑌾 𑌵𑌿𑌨𑍍𑌦𑌤𑍇𑌽𑌮𑍃𑌤𑌮𑍍 ॥

எவன் இதனை ஒவ்வோருணர்விலும் உள்ளதாகக் கொண்டவனோ, அவன் அமிர்தத்தன்மை பெறுகின்றான். ஆத்மாவினால் வீர்யத்தை யடைகிறான். வித்தையினால் அமிர்தத்தை யடைகிறான்.

5. 𑌇𑌹 𑌚𑍇𑌦𑌵𑍇𑌦𑍀𑌦𑌥 𑌸𑌤𑍍𑌯𑌮𑌸𑍍𑌤𑌿
𑌨 𑌚𑍇𑌦𑌿𑌹𑌾𑌵𑍇𑌦𑍀𑌨𑍍𑌮𑌹𑌤𑍀 𑌵𑌿𑌨𑌷𑍍𑌟𑌿𑌃
𑌭𑍂𑌤𑍇𑌷𑍁 𑌭𑍂𑌤𑍇𑌷𑍁 𑌵𑌿𑌚𑌿𑌨𑍍𑌤𑍍𑌯 𑌧𑍀𑌰𑌾𑌃
𑌪𑍍𑌰𑍇𑌤𑍍𑌯𑌾𑌸𑍍𑌮𑌾𑌲𑍍𑌲𑍋𑌕𑌾𑌦𑌮𑍃𑌤𑌾 𑌭𑌵𑌨𑍍𑌤𑌿 ॥

இவ்வுலகிலேயே இதனை அறிந்தாராயின் பிறகு உண்மையுண்டு. இவ்வுலகில் அறியாவிடில், பெருங்கேடு. ஒவ்வோருயிரிலும் இதனைச் சிந்திக்கும் தீரர் இவ்வுலகிலிருந்து நீங்கி அமிர்தராகின்றனர்.

## சாஸ்திரமும் சமயமும்.

(பிரம்மஸ்ரீ நா. ராமபத்ர தீக்ஷிதரவர்கள் எழுதியது.)

I.

சாஸ்திரம், சமயம் இவையிரண்டிற்கும் ஆரம்பம் உண்டென்று சொல்வதற்கும், இவை வெகுகாலமாக இவ்வுலகில் நின்று விருத்தியாகிக்கொண்டு வருகின்றனவென்று சொல்வதற்கும் அனேக காரணங்களிருக்கின்றன. மனித ஆன்மாவுக்கு சமயம் மிகவும் அவசியம். நாம்சமயத்தைப்பற்றி மூன்றுவிதமாக விசாரிப்போம்.

i. மனிதன் இப்பூமிக்கு எவ்வாறு வந்தான்?

ii. அவன் எவ்வாறு கடவுளை யறிந்தான்?

iii. சமயமும், சமய அறிவும் அவனுக்கு எவ்வாறு கிடைத்தன?

மனிதனுக்கு இரண்டுவித குணங்களுண்டு. ஆதியில் மனிதனுக்கு மிருகத்துவம் மாத்திரமிருந்தது. கொஞ்சகாலத்திற்குப் பிறகு மனிதனுக்கு பகுத்தறியும் குணம் விருத்தியாகவே அவனுடைய உண்மையான மனிதத்தன்மை வெளிப்பட்டது. பூசாஸ்திரப் பரீக்ஷையில் தேர்ந்தவர்கள் மனிதனுக்கு மிருகத்தன்மையுண்டென்று சொல்லுகிறார்கள். புராதனவேதங்களைப்போல சமயஞானத்தைப் புகட்டிய சான்றோர்களும், மனிதனிடத்தில் பகுத்தறியும் குணமுண்டென்று ரூபித்திருக்கிறார்கள். மிருகத்தன்மை அதிகப்பட்டிருந்த மனிதனிடத்தில் பகுத்தறிவு தோன்றி மேன்மேலும் விருத்தியாகிக்கொண்டு வருகிறது. இப்பொழுது நாம் ஏன்வேதசாஸ்திரங்கள் புராதனமானவையென நம்புகிறோம் என்னும் விஷயத்தைப்பற்றிச் சற்றாலோசிப்போம். அச்சடிக்கப்பட்ட பத்திரிகைகளாலும், கையால் எழுதப்பட்ட கடிதங்களாலும், தபால், தந்தி, டெலிபோன் முதலிய நூதன முறைகளாலும் ஏட்டுச்சுவடிகளாலும் புஸ்தகங்களாலும் நம்முடைய எண்ணங்களை மற்றவர்களுக்கு வெகு சீக்கிரத்தில் பரவச் செய்கிறோம். சுமார் ஐந்து நூற்றாண்டுகளுக்குமுன் மனிதன் தன்னுடைய எண்ணங்களை மற்றவனுக்கு எழுத்தாலும், பேச்சாலும் தெரிவித்துக்கொண்டிருந்தான். காலத்தாலும் ஐசுவரியத்தாலு



மாத்திரம் பழைய கிரந்தங்கள் நிலைநின்றன. இன்னும் பண்டைக் காலத்தைப்பற்றி விசாரிக்கும்போது அறிவு படங்களால்விருத்தியானதென்றும் அதற்குப்பிறகு அட்சரங்களுண்டாயினவென்றும் தெரியவருகிறது. ஆதியில், மனிதனுடைய பேசும் திறமையால் தான் ஒருவனுடைய எண்ணம் மற்றொருவனுக்குத் தெரியவந்தது. இக்காலத்திலும் எழுதப்படிக்கத் தெரியாதவர்களுக்குப் பேச்சுதான் முக்கிய ஆதாரம். பெரியோர்களுடைய எண்ணங்களும், பெரியோர்களுடைய செயல்களும் கதைகளால் நிலைநிறுத்தப்பட்டிருக்கின்றன. இவற்றைக் காப்பாற்றி வருவது மனிதனது பேசும் சக்தியே. (ஶ்ருதி) கேட்கும் திறமையும் (ஸ்ருதி கேட்பதை மனதில் பதியவைக்கும் திறமையும் தான் பண்டைக்காலச் சமாச்சாரங்களைக் காப்பாற்றிவைத்தன. ஆகையால் இவ்விருகுணங்களையும் அடைந்திருக்கிற வேதங்கள் புராதன மனித எண்ணங்களென கொண்டாடப்படுகின்றன.

## புத்தக வரவு.

ஸ்ரீ மோகனதாஸ் காந்தியின் சரித்திரம்:—இதனை ஆக்கியவர் நமது தேசாபிமானிகளில் ஒருவரான ஸ்ரீ ஆர். நாராயணசாமி ஐயர். இந்நூல் முழுவதையும் நாம் அதிகக் கவனத்தோடு வாசித்தோம். இதில் காந்தியவர்களின் பிறப்பு, வளர்ப்பு, கல்வி, ஒழுக்கம், விவாகம், தேசாபிமானம் முதலியனவும், காந்தியவர்கள் லண்டனுக்குச் சென்று பாரிஸ்டர் பரீட்சைக்குப் படித்து அதில் தேறி வந்ததும், தமது பாரிஸ்டர் உத்தியோக முறையில் தென் ஆபிரிக்காவுக்குக் காந்தியவர்கள் சென்றதும், அங்கு வசிக்கும் நமது இந்திய சகோதரர்களின் கஷ்டங்களை நிவிர்த்திப்பதற்காகக் காந்தியவர்கள் அங்குத் தங்கியதும், காந்தியவர்கள் அங்குச் செய்த பல அரிய காரியங்களும், அவற்றின் நிமித்தம் காந்தியவர்கள் தென் ஆபிரிக்கா கவர்ன்மெண்டாரால் அடைந்த பல துன்பங்களும், அவற்றை ஒழிப்பதற்காக நமது காந்தியவர்களின் தலைமையின்கீழ் தென் ஆப்பிரிக்காவிலுள்ள நமது இந்திய சகோதரர்கள் செய்துவரும் அரியபெரிய முயற்சிகளும் மிகமிக இனிமையாகவும், மிகமிகத் தெளிவாகவும் கூறப்பட்டுள்ளன. இந்நூலை இந்தியர் ஒவ்வொருவரும் வாங்கி வாசிக்க வேண்டுவதும்

வைத்திருக்க வேண்டுவதும் இன்றியமையாதன. இதன் விலை அணா எட்டு. இது சென்னை, அரண்மனைக்காரத் தெரு 44-ம் இலக்க வீட்டிலிருக்கும் ஸ்ரீ ஆர். நாராயண சாமி ஐயரவர்களிடம் கிடைக்கும்.

ஞானாமிர்தம் முதற்பாகம்:—இது ஒரு புதிய கதை. இது கும்பகோணம் ஸ்ரீ. எஸ். இராமசாமி ஐயரால் எழுதப்பட்டு, கும்பகோணம் "லோகாநுகூலன்" பத்திராதிபர் ஸ்ரீ. சி. எஸ். இராதாகிருஷ்ண ஐயரால் வெளியிடப்பட்டது. இது எட்டு அத்தியாயங்களடங்கிய 179 பக்கங்களுள்ளது. பண்டைக் காலத்துப் பாவனை நிறைந்துள்ளது. இதன் விலை அணா பத்து. இது கும்பகோணம் 'லோகாநுகூலன்' பத்திராதிபர் ம-ா-ா-ஸ்ரீ. சி. எஸ். இராதா கிருஷ்ணய்யரிடம் கிடைக்கும்.

## சமாச்சாரக் குறிப்புகள்.

நாரணய்யா என்பவர் தமது இரண்டு பிள்ளைகளையும் தம்மிடம் ஒப்புவிக்கும்படியாக அன்னிபெஸண்டு அம்மையார் மீது நமது சென்னை ஹைக்கோர்ட்டில் செய்திருந்த வியாச்சியத்தில் நாராயணய்யாவின் பிள்ளைகளை அவரிடம் அன்னிபெஸண்டு ஒப்புவித்து விடவேண்டுமென்றும், ஆனால் அன்னிபெஸண்டின் செலவு தொகையை நாரணய்யா கொடுக்கவேண்டுமென்றும், ஜட்ஜியவர்கள் தீர்ப்பளித்திருப்பதை நேயர்கள் அறிவார்கள். தமது பிள்ளைகளைத் தம்மிடம் ஒப்புவிக்கவேண்டுமென்று கேட்டபோது அன்னிபெஸண்டு மறுத்ததும்; நாரணப்பா கோர்ட்டுக்குப் போகும்படி அன்னிபெஸண்டு நடந்துகொண்டதும் நியாயச்செயலென்றாவது ஞானச்செயலென்றாவது நாம் சொல்லமாட்டோம். லெட்பீட்டர் மீது நாரணய்யா சொல்லியகுற்றங்கள் ரூபிக்கப்படவில்லையென்றும், அன்னிபெஸண்டின் செலவை நாரணய்யா கொடுக்கவேண்டுமென்றும் ஜட்ஜியவர்கள் சொல்லியது சரியென்று நாம் ஒப்பமாட்டோம். இனிமேலும் லெட்பீட்டர் தியஸாபிக்கல்சொஸைட்டிமெம்பராக இருப்பதும் அன்னிபெஸண்டு அதன் பிரஸிடெண்டாக இருப்பதும் நன்மைபயக்குமாவென்பதை யோசிக்கவேண்டும்.



நமது சென்றமாதப் பத்திரிகை அச்சிடப்பட்ட பின்னர் சென்னைக் கவர்ன்மெண்டார் சென்னை ராஜதானியிலுள்ள ஜயில்கள் சம்பந்தமாகச் செய்திருக்கும் சீர்திருத்தங்கள் பின்வருவன:—

1. கேழ்வரகுச் சாப்பாடு சாப்பிட்டுப் பழக்கமில்லாத கைதிகளுக்கெல்லாம் அரிசிச்சாப்பாடு கொடுத்தல். 2. கைதிகளுக்கு வழக்கமாகக் கொடுக்கப்படும் உடைகளுடன் 24 அங்குலச் சவுக்கத்துண்டொன்று கொடுத்தல். 3. சென்ற சில மாதங்களாக ஒவ்வொரு கைதிக்கும் நாள்தோறும் கொடுக்கப்பட்டு வருகிற அரை அவுன்ஸ் உப்புடன் கால் அவுன்ஸ் உப்பு அதிகமாகச் சேர்த்துக்கொடுத்தல். 4. பெண்கைதிக்குக்கொடுக்கப்பட்டு வரும் 36 அங்குலம் அகலமுள்ள சீலைக்குப்பதிலாக 42 அங்குலம் அகலமுள்ள சீலை கொடுத்தல். 5. கிறிஸ்தவப் பெண்கைதிகளும் மகம்மதியப் பெண்கைதிகளும் பிரியப்படுவார்களானால் சீலைக்குப்பதிலாகப் பாவாடையும் தாவணியும் அவர்களுக்குக் கொடுத்தல். இச்சீர்திருத்தங்கள் ஜயில்களில் செய்யப்படவேண்டிய சீர்திருத்தங்களில் ஒரு சிலவேயாயினும் இவை நமது கவர்ன்மெண்டார் நகரத்தொடங்கி விட்டார்கள் என்பதைத் தெளிவாகக் காட்டுகின்றன.

இண்டர் மீடியேட் வகுப்பு, பி - ஏ வகுப்பு மாணவர்களுக்குத் தேசபாஷைப் பாடங்களைக் கட்டாயப் பாடங்களாக்குவதில்லையென்று சென்னைச் சர்வகலாசாலைச் சங்கத்தார் செய்துள்ள தீர்மானம் தமது கைக்குழந்தைகளுக்குப் பாலூட்டுவதைக் கட்டாயச் செயலாக வைத்துக்கொள்வதில்லையென்று தாய்மார்கள் ஒரு தீர்மானம் செய்வார்களானால் அது எவ்விதமாகக் கருதப்படுமோ அவ்விதமே கருதப்படுகின்றது. கல்விக்கெல்லாம் அடிப்படை தாய்ப்பாஷையென்பதை அறியாமலும் இந்திய தேயத்தின் தற்காலமுற்போக்கை அறியாமலும் சர்வகலாசாலைச் சங்கத்தார் செய்த இவ்வொரு தீர்மானம் சென்னை ராஜதானி முழுவதிலும் ஒரு பெரிய ஆத்திரத்தையும் கலக்கத்தையும் உண்டுபண்ணிவிட்டது. சர்வகலாசாலைச் சங்கத்தாரின் தீர்மானத்தை ரத்துச் செய்வதற்குக் கவர்ன்மெண்டாருக்கு அதிகாரமில்லையென்று சிலர் கூறுகின்றனர். கவர்ன்மெண்டார் நினைத்தால்

முடியாத தொன்றுண்டோ? சர்வகலாசாலைச் சங்கத்தார் செய்த தீர்மானம் திருப்திகரமா யில்லாமையால் அதைப்பற்றி அவர் புனராலோசனை செய்யவேண்டுமென்று கவர்ன்மெண்டார் ஒரு குறிப்பு எழுதுவார்களாயின் அந்த நிமிஷமே இத்தீர்மானம்சர்வகலாசாலைச் சங்கத்தாராலேயே அடிபட்டுப் போகாதோ?

சரியான தமிழகராதி ஒன்று உண்டு பண்ணுவதற்காகச் சென்னைக் கவர்ன்மெண்டார் ஏற்படுத்தியுள்ள கமிட்டி நமக்குத் திருப்தியைக் கொடுக்கவில்லை. ஆங்கிலேயக் கனவான்கள் தமிழகராதி எழுதும் கமிட்டியில் மெம்பர்களாக நியமிக்கப்பட்டது புதுமையினும் புதுமை. ஆங்கில மறிந்த தமிழ்ப்பண்டிதர் நமது சென்னை ராஜதானியில் இல்லாமற் போயினரா? நமக்குத்தெரிந்த வரையில் இரண்டு பாஷைகளிலும் பாண்டித்தியத்தை யுடையவர்கள் எத்தனையோ பேர்கள் இருக்கின்றனர். திருக்குறள், திருவாசகம் முதலிய அரிய பெரிய தமிழ்நூல்களை மொழிபெயர்த்தவரும், பலவகுப்புத் தமிழ் இலக்கணங்களை எழுதியவருமாகிய வெரண்டு ஜீ. யூ. போப்பு துரையவர்களே பலபல தமிழ்மொழிகளின் உண்மையான பொருள்களை யுணராது இடர்ப்பட்டனரென்றால் மற்றைய ஆங்கிலக் கனவான்கள் கணக்கில்லாத தமிழ் நூல்களில் மறைந்து கிடக்கும் கணக்கில்லாத தமிழ்ச் சொற்களையும் அவற்றின் உண்மையான பொருள்களையும் எங்ஙனம் அறிவர்? தாம் தமிழகராதி தயாரிப்பதற்குத் தமிழ்ச்சங்கங்களையும் சைவசபைகளையும் தமக்கு உதவியாகத் தமிழகராதிக் கமிட்டியார் அழைத்தல் "தின்பவன் தின்னத்திருக்கண்ணுடையான் தெண்டமிறுக்க" என்ற பழமொழிக்கு ஒத்திருக்கிறது. இக்கமிட்டியில் ஆங்கில மறிந்த தமிழ்ப்பண்டிதர்களை மெம்பர்களாக நியமிக்காதவரை தமிழகராதிக்காக ஏற்படுத்தப்பட்டிருக்கிற ஒரு லட்சரூபாயும் வீண் செலவாய்த் தீருமென்பதே நமது அபிப்பிராயம்.


# ஞானபாநு.

VOL - I. தொகுதி-௧. | JUNE 1913. பிரமாதீச௵ ஆனி௴ | NO - 3. பகுதி - ௩.


## ஆநந்த பேரிகை.

காக முறவு கலந்துண்ணக்
கண்டு ரகண்டா காரசிவ
போக மெனும்பே ரின்பவெள்ளம்
பொங்கித் ததும்பிப் பூரணமா
யேக வுருவாய்க் கிடக்குதையோ
வின்புற் றிடநா மினியெடுத்த
தேகம் விழுமுன் புசிப்பதற்குச்
சேர வாரும் செகத்தீரே.

சமரஸாநுபூதிச் சாந்த குணச்செல்வராய், "சகம்பொயெனத் தம்பட்டமடி." த்த தாயுமானவர் "அகண்டாகார சிவபோகமெனும் பேரின்பவெள்ளம் பொங்கித்ததும்பிப் பூரணமாயேகவுருவாய்க்கிடக்குது" என்ற ஆநந்த பேரிகையை அடித்து அனைவரும் ஆச்சரியப்படும்படியாக ஆர்ப்பரித்தார். இவ்வாநந்த பேரிகையானது எல்லாருடைய இருதயங்களிலும் அல்லும் பகலும் அறுபது நாழிகையும் முழங்கிக் கொண்டேயிருக்கின்றது. பிரபஞ்சத்தில் சதா குமுறிக் கோஷித்துக் கொண்டிருக்கின்ற சப்தமும் இவ்வாநந்த பேரிகையேயாகும். உள்ளும் புறம்பும் ஒலிக்கின்ற சப்தமெல்லாம் இவ்வாநந்த பேரிகையே. நமக்குக்காதுகள் இருந்தும் செவிடாயிருக்கின்றோம். சமஷ்டி சப்தமாகிய இவ்வேத கோஷம் நமது செவிகளில் படுவதில்லை. இவ்வூனச் செவிகளினால் வியஷ்டி சப்தத்தையே கேட்டு மிக்க வேதனைக்குட்பட்டோம். ஆநந்தத்தைத் தேடித்தேடி அல்லும் பகலும் நாம் ஆடி ஓடிப் படும்பாடு சொல்லி முடியாது. இவ்வுலகுக்கெல்லாம் ஏக சக்கராதிபதியாயிருக்கின்ற சார்வபௌமன்முதல் தெருக்கள் தோறும் பிச்சை யேற்றுண்ணும் பெருந்தரித்திரன் வரையிலுள்ள சகலரும் ஆநந்தத்தை அடைவதின் பொருட்டே பல

னற்ற முயற்சிகள் பல செய்கின்றனர். சுகபோகத்தின் பொருட்டுத்தானே அரசர் ஆள்வதும் குடிகள் அடங்கியிருப்பதும். சுகபோகத்தின் பொருட்டுத்தானே அந்தணர் தமக்குச் சொந்தமான கிரியைகளைச் செய்யவேண்டியதும் மற்றோர் அவரது அடிபணிய வேண்டியதும். சுகபோகத்தின் பொருட்டுத்தானே குரு போதிப்பதும் சிஷ்யன் சிரவணம் செய்வதும். சுகபோகத்தின் பொருட்டுத்தானே திருட்டு, வஞ்சகம், கொலை, கட்குடித்தல், பரஸ்திரீ கமனம் முதலிய பஞ்சமகா பாதகங்களெல்லாம் செய்யப்படுகின்றன. இங்ஙனம், நன்மைகளும் தீமைகளும் சுகத்தை லட்சியமாக முன்னிட்டே செய்யப்படுகின்றன. ஆனால் ஒருவரும் சுகத்தை அநுபவிக்கிறவர்களாகத் தோற்றவில்லை. காரணம் யாதெனில், கேவலம் ஜடமாய் மித்தியாமாத்திரமாய் இருக்கின்ற பிரபஞ்சப் பொருள்களிடத்தினின்றும் சுகத்தை எதிர்பார்க்கின்றோம். ஆகையாற்றான் மோசம்போகின்றோம்.

மண், பெண், பொன், கீர்த்தி இவைகளால் புத்திமயங்கி, இவைகள் லபித்தவுடனே சுகத்தை அடைகின்றோமாதலால் இவைகளிடத்தும் சுகம் உண்டு என்று ஒரு சாரார் கூறலாம். இதை நாம் ஆராய்ந்து பார்ப்போம். ஒரு கப்பல் வியாபாரி ஏராளமான சரக்குகளைக் கப்பலிலேற்றி அந்நிய தேசங்கட்கு வர்த்தகத்தின் பொருட்டு அனுப்பினான். சில மாதங்கள் கழித்துக் கப்பல் அதிக லாபத்துடன் திரும்பவும் தனது கரையில் வந்து சேர்ந்ததாகக் கேள்வியுற்றவுடனே சந்தோஷம் அடைந்தனன்; சுகம் பெற்றனன். இப்பொழுது வியாபாரி அடைந்த சுகத்திற்குக் காரணம் வியாபாரிக்குக் கிடைத்திருக்கும் ஊதியமாகிய பொருள் அன்று. கப்பல் துறைமுகத்தை விட்டுப் புறப்பட்டுப் போய நாள் முதல், வியாபாரியின் மனமானது, காரியஸ்தர்கள் மோசம் செய்து விடுவரோ? சுழிகளில் அகப்பட்டாவது, பாறைகளில் தாக்குண்டாவது கப்பல் கடலில் அமிழ்ந்து விடுமோ? கடற்கொள்ளைக்காரர் கொள்ளையிட்டு விடுவரோ?' என்று இம்மாதிரியான பயமும் கவலையும் உடையதாய்க் கப்பலின் பின்னேயே சென்று கொண்டிருந்தது. இப்பொழுது கப்பல் மிக்க லாபத்துடன் சொந்தக் கரை வந்து சேரவே, வெளியில் அலைந்து கொண்டிருந்த மனமானது திடீரென்று தனது யதாஸ்தானத்திற்கு வந்து ஸ்திர நிலையில் நின்றது. உடனே ஆநந்தம் உண்டாயிற்று. ஆத்மவஸ்து



ஒன்றே ஆநந்தமாயுள்ளது. அந்நிய மெல்லாம் துக்கமே. பகிர்முகப்பட்டுப் பல்நாட்களாகப் பல விடங்களிலும் சஞ்சரித்துக் கொண்டிருக்கின்ற மனமானது ஏதோ ஓர் அவசரத்தில் யதாஸ்தானத்தை அடைந்து ஸ்திர நிலையுறும்பொழுது, ஆத்மவஸ்துவின் லட்சணமாகிய ஆநந்தம் அந்த மனத்தினிடத்தில் பிரதிபலிக்கின்றது. உடனே சொரூபாநந்தம் பிரதிபலன்மாத்திரமாய் சொற்பமாகப் பிரகாசிக்கின்றது. இவ்வுண்மையை அறியாமல் பொன்னாலும் மண்ணாலும் பெண்ணாலும் கீர்த்தியாலுமே சுகம் லபிக்கின்றது என்று மாந்தர் மயங்குகின்றனர். உண்மையாகத் திரவிய லபிதத்தாலேயே இவ்வியாபாரிக்கு சுகம் உண்டாயிற்றெனின், லபித்த திரவியம் அப்படியே யிருக்கும்பொழுதே புத்திரன் மரணமடைந்து விட்டால் வியாபாரிக்கு சுகம் நீங்கி துக்கம் உண்டாகின்றது; ஏனெனில், மனமானது தனது ஸ்திர நிலையை விட்டுப் பகிர்முகப்பட்டுப் புத்திரனிடத்தில் செல்கின்றது. வியாபாரி அநுபவித்த சுகம் திரவியத்தாலெனின், புத்திரன் மரணமடைந்த காலத்தும் அந்தத் திரவியம் அழியவில்லை யாதலால் திரவியத்தாலுண்டாய சுகம் நீங்கக்காரணம் இல்லை. ஆதலால் அந்தச் சுகம் திரவியத்தாலுண்டாயதன்று. பிரபஞ்சப்பொருள்களிடத்துச் சுகம் உண்டாகவே உண்டாகாது. மனம்பகிர்முகப்பட்டு விரிந்து திரியுங்கால் துக்கமும், அகமுகப்பட்டு ஒடுங்கி அடங்குங்கால் சுகமும் உண்டாகின்றன என்று இதனால் ஏற்பட்டது.

மனத்தின் ஆதார ஸ்தானமான ஆத்மவஸ்துவே ஆநந்தமாகும். நிற்க, தனது திரவியத்தை யெல்லாம் திடீரென்று இழக்கும்படி நேர்ந்த ஒருவன் திரவியப்பித்துப் பிடித்து அலைவது போல, நாமும் (ஆநந்தத்தை யடைய வேண்டுமென்று) ஆநந்தப்பித்துப் பிடித்து அலைகின்றோம். ஆநந்தம் நமது அருமையான ஸ்வதந்திர திரவியமாகையால், அது இப்பொழுது நம்மிடத்தில் இல்லாததாக நினைத்து அல்லும் பகலும் அதே கவலையாயுழைக்கின்றோம். அவரவர்க் குரித்தானவைகளையே அவரவர் தேடுவர் என்ற சிருஷ்டி நீதியின்படி நாமும் நமது உரிமையையே தேடுகின்றோம். அவ்வுரிமை ஆநந்தமே. அவ்வாநந்தம் நாமே. 'நாம்' ஆகிற ஆத்மவஸ்து தான் இப்பிரபஞ்சாகாரமாக சங்கற்பமாத்திரத்தால் தடித்துளது. ஆகையால் நாமும் பிரபஞ்சமும் ஒன்றே. ஆநந்தமே நமது சொரூபம்.

'சிவோகம்' என்ற ஜப பேரிகையே எங்கும் முழங்குகின்றது. 'சிவோகம்' என்றால் நான் சிவம், அதாவது, மங்களமாயிருப்பவன், ஆநந்த சொரூபம். மாந்தர் இம்முழக்கத்தைக் கேட்கின்றாரில்லை. செவிகளிருந்தும் கேட்கின்றாரில்லை. 'காதுகளுள்ளவன் கேட்கட்டும்' என்று ஒரு மகான் கூறினார். ஊனச்செவிகள் உள்ளோரே மிக்கோரும்; ஞானச்செவிகள் உள்ளோர் மிகவும் அரிது.

ஆகையால் தாயுமானவரைப் போலவே சகல மகாத்துமாக்களும் 'சிவோகம்' என்ற வேத கோஷத்தை நாதம் செய்கின்ற ஆநந்த பேரிகை பின் வருமாறு:—"ஏ! நாற்ற உடலை நானென்று நம்பிச்சோற்றுத் துருத்தியைச் சுமந்து திரிகின்ற ஜகத்தீரே! வாருங்கள். கண்விழித்துப் பாருங்கள். நாமெல்லோரும் ஆநந்த சொரூபமே. துக்கம் என்பது இல்லவேயில்லை. துக்கப்படுவதாக நாம் எண்ணிக்கொள்வது வீண் பிரமையேயாகும். 'சிவோகம்,' 'சிவோகம்', என்று சகலசராசரங்களும் சப்திக்கட்டும். சிருஷ்டி முழுதும் சிவமேயாம். அருள் சுரந்து ஆநந்தம் பொழிகின்றது; 'பொங்கித்ததும்பிப் பூரணமாயேகவுருவாய்க்கிடக்கின்றது? எல்லாரும் 'சிவோகம்' என்ற இவ்வாநந்தாமிர்தத்தை உண்டுகளித்து ஏப்பமிட்டு உறங்காமல் உறங்குங்கள். துக்கம் தொலைந்ததென்று ஆநந்த பேரிகையை அடியுங்கள்". இதுவே ஆநந்த பேரிகையின் அற்புத ரகஸ்யம்.

சிவம்.

## வினையும் விதியும்.

ஸ்ரீமான் - வ. உ. சிதம்பரம் பிள்ளையவர்கள் எழுதியது.

வினைநல் வினைதீ வினையென விரண்டே
வினையின் விளைவே விதியென வருமே.

மனம், நா, உடம்பு இம்மூன்றன் தொழிலுக்கும் வினையென்று பெயர். அதாவது, நினைத்தலும், சொல்லலும், செய்தலும் வினையாம். நினைக்க வேண்டியதை நினையாது விடுதலும், சொல்ல வேண்டியதைச் சொல்லாது விடுதலும், செய்ய வேண்டியதைச் செய்யாது விடுதலும் வினையென்றே கொள்ளப்படும். ஒவ்வொரு



வினையும் அதனதன் நற்பயனை நோக்கி நல்வினையெனவும், தீப்பயனை நோக்கித் தீவினையெனவும் சொல்லப்படும். நற்பயன் பொருள். அது நிலையுள்ள பொருள், நிலையற்ற பொருள் என இருவகைப்படும். நிலையுள்ள பொருள் மெய்ப் பொருள்; நிலையற்ற பொருள் உலகப் பொருள். தீப்பயன் வறுமை. அது நிலையுள்ள வறுமை, நிலையற்ற வறுமை என இருவகைப்படும். நிலையுள்ள வறுமை மெய்ப்பொருளின்மை; நிலையற்ற வறுமை உலகப்பொருளின்மை. நிலையுள்ள பொருளையோ நிலையற்றபொருளையோ தரும் வினை நல்வினையெனவும், நிலையுள்ள வறுமையையோ நிலையற்ற வறுமையையோ தரும் வினை தீவினையெனவும் அறிக.

நினைப்பும், சொல்லும், செயலும் முதிர்ச்சியடைந்து அதனதன் பயனை அளிக்கும் பொழுது விதியென்னும் பெயரைப் பெறுகின்றது. நினைப்பை வித்தென்றும், சொல்லை மலரென்றும், செயலைக் காயென்றும், விதியைக் கனியென்றும், இன்பதுன்பங்களை நற்சுவை தீச்சுவைகளென்றும் சொல்லலாம். வித்தில்லாமல், மலராவது, காயாவது, கனியாவது வாராதுபோல நினைப்பில்லாமல் சொல்லாவது, செயலாவது, விதியாவது வாராது. ஆனால் மலரில்லாமலும், காயில்லாமலும், ஏகதேசம் கனிவருதல் போன்று சொல்லில்லாமலும், செயலில்லாமலும், ஏகதேசம் விதிவரக்கூடும். வித்தில்லாமல் ஒருபோதும் கனிவராததுபோல நினைப்பில்லாமல் ஒருபோதும் விதிவராது. மலர், காய், கனி, இம்மூன்றற்கும் வித்து எப்படி மூலகாரணமோ அப்படியே சொல், செயல், விதி இம்மூன்றற்கும் நினைப்பு மூலகாரணம். நினைப்பு நல்லதாயின் சொல்லும், செயலும், விதியும் நல்லதாகும். நினைப்புத் தீயதாயின் சொல்லும், செயலும், விதியும் தீயதாகும். நல்வினை பொருளைத் தருவதுபோல நல்விதி இன்பத்தைத் தரும். அது நிலையுள்ள இன்பம், நிலையற்ற இன்பம் என இருவகைப்படும். நிலையுள்ள இன்பம் மெய்ப்பொருளால் வரும் இன்பம்; நிலையற்ற இன்பம் உலகப் பொருளால் வரும் இன்பம். தீவினை வறுமையைத் தருவதுபோலத் தீவிதி துன்பத்தைத் தரும். அது நிலையுள்ள துன்பம் நிலையற்ற துன்பம் என இருவகைப்படும். நிலையுள்ள துன்பம் மெய்ப் பொருளின்மையால் வரும் துன்பம்; நிலையற்ற துன்பம் உலகப் பொருளின்மையால் வருந் துன்பம். நிலையுள்ள இன்பத்தையோ நிலையற்ற இன்பத்தையோ தரும் விதி நல்விதி

பெனவும், நிலையுள்ள துன்பத்தையோ நிலையற்ற துன்பத்தையோ தரும் விதி தீவிதி யெனவும் அறிக.

உலகத்திலுள்ள மனிதரெல்லாம் துன்பத்தை விடுத்து இன்பத்தைக் கொள்ள அவாவுகின்றனர். துன்பத்தை விடுதற்குத் தீவிதியை உய்தல் வேண்டும். இன்பத்தை அடைவதற்கு நல்விதியை எய்தல் வேண்டும். தீவினையைச் செய்யாதிருப்பின் தீவிதி அழிந்தேபோகும், வரவில்லாத முதல் உண்ண உண்ணக் குறைந்து அழிதல்போல. நல்வினையைச் செய்யச் செய்ய நல்விதி வளர்ந்து கொண்டே யிருக்கும், ஈட்ட ஈட்டப் பொருள் வளர்தல் போல. தீவினையைச் செய்பவர் நல்விதியை அடையவேமுடியாது, எட்டி வித்தை விதைப்பவர் மாங்கனியை அடைய முடியாதது போல. நல்வினையைச் செய்பவர் தீவிதியை அடையவேமுடியாது, மாவித்தை விதைப்பவர் எட்டிக் கனியை அடைய முடியாதது போல. எட்டி வித்து மண் முதலியவற்றின் சேர்க்கையால், முளைத்து, வளர்ந்து எட்டி மலரையும், எட்டிக் காயையும், எட்டிக் கனியையும் தருதல்போல தீநினைப்பு மெய்ப் பொருளின் சேர்க்கையால் தடித்து, முதிர்ந்து, தீச் சொல்லையும், தீச் செயலையும், தீவிதியையும் தருகின்றது. மா வித்து மண் முதலியவற்றின் சேர்க்கையால் முளைத்து, வளர்ந்து, மாமலரையும் மாங்காயையும், மாங்கனியையும் தருதல்போல நல்நினைப்பு மெய்ப் பொருளின் சேர்க்கையால் தடித்து, முதிர்ந்து, நற் சொல்லையும், நற் செயலையும், நல் விதியையும் தருகின்றது. தீநினைப்பை நீக்கி நல் நினைப்பைக் கொள்ளும் சிறந்த அறிவையும் வலியையும் உடையராயிருத்தலின், தத்தம் தீவிதியையும் நல்விதியையும் உண்டுபண்ணுபவர் மனிதரே.

இன்று நல்வினைகளைச் செய்துகொண்டிருக்கின்ற சிலர் துன்பத்தை அநுபவித்துக் கொண்டிருக்கவும், இன்று தீவினைகளைச் செய்து கொண்டிருக்கின்ற சிலர் இன்பத்தை அநுபவித்துக் கொண்டிருக்கவும் நாம் காண்கிறோம். என்னை? உலகிலுள்ள ஒவ்வொருவரும் இன்று பழைய வினைகளின் பயன்களை அநுபவித்துக்கொண்டும், புதிய வினைகளைச் செய்துகொண்டும் இருக்கின்றனர். இன்று அநுபவிக்கிற பயன்களைத் தருகின்ற பழைய வினைகளைப் பிராரத்துவம் என்றும், இன்று செய்கிற புதிய வினைகளை ஆகாமியம் என்றும் ஆன்றோர் கூறுவர். இன்று நல்வினைகளைச்



செய்து கொண்டிருக்கிறவர் முந்திய தீவினைகளின் பயன்களை அநுபவித்துக்கொண்டு மிருக்கின்றனர். இன்று தீவினைகளைச் செய்துகொண்டிருக்கிறவர் முந்திய நல்வினைகளின் பயன்களை அநுபவித்துக்கொண்டு மிருக்கின்றனர். இன்று நல்வினைகளைச் செய்துகொண்டிருக்கிறவர் நாளை இன்பத்தை அநுபவிப்பர். இன்று தீவினைகளைச் செய்துகொண்டிருக்கிறவர் நாளைத் துன்பத்தை அநுபவிப்பர். இக்காலத்தில் நல்வினைகளைச் செய்து கொண்டிருக்கிறவர் முற்காலத்திலும் நல்வினைகளைச் செய்து கொண்டிருந்தார் என்று கோடலும், இக்காலத்தில் தீவினைகளைச் செய்து கொண்டிருக்கிறவர் முற்காலத்திலும் தீவினைகளைச் செய்து கொண்டிருந்தார் என்று கோடலும் பிழையேயாம்.

மனம் எப்பொழுதும் நினைத்துக்கொண்டும், நா எப்பொழுதும் சொல்லிக்கொண்டும், உடம்பு எப்பொழுதும் செய்துகொண்டும் இருப்பது இயற்கை. மனம் நினையாமலும், நா சொல்லாமலும், உடம்பு செய்யாமலும் இருப்பது இயற்கைக்குமாறு. மனம் தீய நினைப்புக்களை நினைக்கவும், நா தீய சொற்களைச் சொல்லவும், உடம்பு தீய செயல்களைச் செய்யவும் விடுதல் மடமை. மனம் நல்ல நினைப்புக்களை நினைக்கவும், நா நல்ல சொற்களைச் சொல்லவும், உடம்பு நல்ல செயல்களைச் செய்யவும் விடுதல் அறிவு. இப்பொழுது அநுபவிக்கும் துன்பங்கள் முன் செய்த தீவினைகளின் பயன்கள் இப்பொழுது அநுபவிக்கும் இன்பங்கள் முன் செய்த நல்வினைகளின் பயன்கள். துன்பங்களைக் கொள்ள விரும்பாதவர் தீவினைகளை அறவே விடல் வேண்டும். இன்பங்களைக்கொள்ள விரும்புபவர் நல்வினைகளை இடைவிடாது செய்தல் வேண்டும். முன் செய்த தீவினைகளின் பயன்களாகிய துன்பங்களை அநுபவிக்கிறபோது அழுவதும், முன் செய்த நல்வினைகளின் பயன்களாகிய இன்பங்களை அநுபவிக்கும்போது மகிழ்வதும் அறிவில்லாது செயல்கள். முன் செய்த நல்வினைகளின் பயன்களாகிய இன்பங்களை அநுபவிக்கும்போது மகிழாமையும், முன் செய்த தீவினைகளின் பயன்களாகிய துன்பங்களை அநுபவிக்கும்போது அழாமையும் அறிவுடையாது செயல்கள்.

"நன்றாங்கா னல்லவாக் காண்பவ ரன்றாங்கா
லல்லற் படுவ தெவன்."

# விடாமுயற்சி.

பிரஹ்மஸ்ரீ சேஷாத்திரி அப்பங்காரவர்கள் எழுதியது.

ஆரம்பித்த காரியங்களுக்கு இடையூறுகள் அடுத்தடுத்து வந்தாலும் இடைவிடாது முயற்சித்து அவற்றை முடித்தலே விடாமுயற்சி யெனப்படும். அதமர் இடையூற்றுக்கஞ்சி ஒரு தொழிலையும் தொடங்கமாட்டார். மத்திமர் காரியத்தை ஆரம்பித்து அதற்கு இடையூறு வருங்காலத்தில் அதனை விலக்க வழியறியாது ஆரம்பித்த காரியத்தைச் செய்து முடிக்காமல் விட்டு வருந்துவர். உத்தமரோ தாமெடுத்த தொழிலுக்கு வருந்துன்பம் பலவாயிருந்தாலும் அவைகளுக்கு அஞ்சிக் கொஞ்சமும் மனந்தளராமல் மென்மேலும் முயற்சி செய்து தாம் முடிக்கவெண்ணிய தொழிலை முடித்து அதனாலாய பயனை அடைவர். அன்றியும் கருமமே கண்களுக்குக் கண்ணாக முயற்சியுடைய உத்தமர் தமது உடம்பிற்கு வருந் துன்பத்தைப் பொருட்படுத்தாமலும், பசியைப்பாராமலும், தூங்காமலும், பிறர் செய்யுந் தீமையை மேற்கொள்ளாமலும், தரையிலே படுக்க நேரிட்டாலும், பஞ்சணையில் துயில வாய்த்தாலும், சருகு முதலிய வஸ்துக்களைப் புசிக்க நேரிட்டாலும், அறுசுவையோடுகூடிய உணவு கிடைத்தாலும், கந்தைத்துணி யுடுத்தாலும், பொற்பட்டாடை அணிந்துகொண்டாலும், விருப்பு வெறுப்புக்கொள்ளாது மனத்தைச் சமநிலையில் வைத்து தம் முயற்சி கைகூடும்வரை இன்பதுன்பங்களை லட்சியஞ் செய்யார். இன்னும் நன்முயற்சியில் ஊக்கமுடையார் தம்மை ஒருவர் புகழ்ந்தாலும் பழித்தாலும், செல்வம் வந்தாலும் வறுமை வந்தாலும், மரணம் இன்றைக்கேவரினும் சில நாள் சென்று வரினும், நல்ல நெறியினின்றும் ஒரு பொழுதும் விலகமாட்டார்கள். முயற்சியுடையாரது மனம் பெண்களின் விழியாகிய வாளினாற் பிளவுபடாது. ஆசையென்கிற திண்ணிய கயிறு அவர் மனத்தைக் கட்டுவதில்லை. இத்தன்மையுடையவர் தமது முயற்சியினால் எல்லாவுலகத்தையும் தம்வசமாக்குகின்றனர்.

நெருப்பெரியும் கட்டையைத் தலைகீழாகப் பிடித்தாலும் அதன் சுவாலை கீழ் நோக்காது மேல் நோக்கி எரிவது போல, முயற்சியுடைய மேலோர் அற்பர்களாற் சிறுமைப்படுத்தப்



பட்டாலும் தமது ஊக்கத்தையும் தைரியத்தையும் முயற்சியையும் சிறிதுங் கைவிடார். நல்ல காரியத்தைச் செய்ய முயன்று நடுவில் கைசோர விடுவதைப் பார்க்கிலும் உயர்ந்த மலையின் சிகரத்திலிருந்து கீழேயுள்ள பள்ளத்தாக்கில் உருண்டு விழுதலும், கொடிய பாம்பின் வாயிற் கையை வைத்தலும், காட்டுத்தீயில் வீழ்ந்திறத்தலும் மேல் என்பது அவர்கள் கொள்கை. தைரியத்தோடு ஒரு பெருந் தொழிலில் முயற்சி செய்பவருக்கு நெருப்பு தண்ணீர்போலவும், கடல் சிறிய குட்டையைப் போலவும், சிங்கம் சிறு மானைப் போலவுமாகும். ஆகவே துன்பத்தைக்கொடுக்கும் செயல்களெல்லாம் மனந்தளராத மேலோருக்கு இன்பந்தருவனவேயாகும். மரம் பிறரால் கிளைகள் வெட்டப்பட்டுக் குறைந்தாலும், சந்திரன் தேய்ந்து குறைந்தாலும் முற்றிலும் அழிந்தேவிடாமல் திரும்பவும் வளர்வதே போல், தமக்காவது தம்மினத்தார்க்காவது துன்பம் வந்தாலும் அதனால் தம்முயற்சியைவிட்டு மனந்தளரார். காற்றினால் அசைந்தாடும் சிறிய கொம்பு முதிர்ந்து வைரமேறின காலத்தில் அதுவே யானை கட்டுதற்குரிய தறியாவதுபோல ஒருவன் இடைவிடாது முயன்று வருவானானால் பிறரை அடக்கியாளும் வல்லமையுடையவனாவான். ஆகையால் மேலான காரியங்களையே இடைவிடாமல் இயற்றிவரவும் இயற்றி வர முயற்சிக்கவும் வேண்டும். கீழ்மக்கள் அற்பகாரியத்தைச்செய்து அம்மட்டோடு மகிழ்ச்சியடைவர். சிறிய நரியின்மீது அம்பெய்து அதைக்கொல்லுவதைக்காட்டிலும் சிங்கத்தின்மீது அம்பெய்து அது தவறினும் மேன்மையாகும். ஒருவனுக்கு நல்லகுலமும் கெட்டகுலமும் அவனது முயற்சியால் ஆவதேயன்றி இயற்கையால் ஆவதேயில்லை. குலமும் பொருளும் புகழும் தவமுமாகிய வெல்லாம் ஊக்கமுடையார்க்கு அவரது முயற்சியினாலேயே வந்தடையும். உயர்ந்த குலத்தில் பிறந்தும் சோம்பித்திரிபவன், கரும்பில் பிறந்தும் அதன் நுனி உபயோகப்படாததுபோலத்தான் யாதொரு பிரயோஜனமும் அடையாது சிறுமையடைவான். சேற்றில் பிறந்தாலும் தாமரை சிறப்படைதல்போல் கீழ்க்குலத்தில் பிறந்தாலும் முயற்சியுடையவர் பெருமையடைகின்றனர். தாம் ஆரம்பித்த தொழிலுக்கு விதிவசமாகத் தடை நேரிட்டால் அதற்கு மனங்கலங்காமல் மகிழ்ச்சியோடு அதனிடத்தில் முயலவேண்டும். ஏனெனில் அம்மகிழ்ச்சியே இடை

யூற்றினா லுண்டாகிய துன்பத்தை நீக்கி முடிவில் தமது தொழிலை முடிப்பித்து இன்பத்தைக் கொடுக்கும். துன்பம் என்பது யாது? மனத்திலுள்ள ஒரு கொள்கையேயன்றி வேறில்லை. அத்துன்பத்தை நீக்குதற்கு அறிவுடையவன் மகிழ்ச்சியோடு முயற்சியி னிடத்திலேயே ஊன்றி நின்றால் அத்துன்பம் சூரியன் முன் பனிபோலத் தானாய் விலகிவிடும். ஆகையால் முயற்சியும் அறிவு முடையவனிடத்தில் துன்பம் தானே துன்பத்தை யடையும். இதுபற்றியே

"அடுக்கி வரினு மழிவிலா னுற்ற
இடுக்க ணிடுக்கட் படும்" என்றும்
"இடும்பைக் கிடும்பை படுப்பர் இடும்பைக்
கிடும்பை படாஅ தவர்" என்றும்

கூறினார் தெய்வப்புலவராம் திருவள்ளுவர். பிரபுத்தன்மையுடையவனுக்கு அழகு எல்லாரிடத்திலும் இனிய தன்மையனாயிருத்தல்; சூரனுக்கு நாவடக்கம் அழகாகும்; சிறந்த நூற்கேள்வியுடையவனுக்கு வணக்கம் அழகாகும்; சிறந்த வலிமையுடையவனுக்கு பொறுமை அழகு; தவசிகட்கு கோபமின்மை அழகாகும்; விடாமுயற்சியோ இவையெல்லாவற்றிற்குஞ் சிறந்த அழகாகும். ஆகவே அனைவரும் இவ்வளவு சிறப்புடைய விடாமுயற்சியால் மேன்மை யடைவாராக.

"தெய்வத்தா னாகா தெனினு முயற்சிதன்
மெய்வருத்தக் கூலி தரும்"

# சின்னச் சங்கரன் கதை.

சாவித்திரி என்னும் நமது நேயர் எழுதியது.

## மூன்றும் அத்தியாயம்.

### ராமஸாமிக் கவுண்டர் திருச்சபை.

மஹாராஜ ராஜபூஜித மஹாராஜ ராஜஸ்ரீ ராஜமார்த்தாண்ட சண்டப்பிரசண்ட அண்டபஹிரண்ட கவுண்டாதிகவுண்ட கவுண்டனூராதிப ராமஸாமிக் கவுண்டரவர்களுக்கு வயது சுமார் ஐம்பதிருக்கும். நல்ல கருநிறம். நரைபாய்ந்த மீசை. இருதா. முன்



புறம் நன்றாகப் பளிங்குபோல் தேய்க்கப்பட்டு, நடுத்தலையில் கவடுபாய்ந்து, பின்புறம் ஒருசிறிய முடிச்சுப்போட்டு விளங்கும் முக்கால் நரையான தலை. நெடுந்தூரம் குழிந்த கண்கள். இமைப்புறங்களில் 'காக்கைக்கால்' அடையாளங்கள். பொடியினால் அலங்கரிக்கப்பட்ட மூக்கு. வெற்றிலைக் காவியினாலும் புகையிலைச் சாற்றினாலும் அலங்கரிக்கப்பட்ட பற்கள். குத்துயிரோடு கிடக்கும் உதடு. ஆபரணங்கள் பொருந்திய செவிகள். பூதாகாரமானஉடல். பிள்ளையார்வயிறு. ஒருவிதமான இருமல். அரையில் பட்டு-ஜரிகை வேஷ்டி. விரல் நிறைய மோதிரங்கள். பக்கத்திலே வெற்றிலை துப்புவதற்கு ஒரு காளாஞ்சி. ஒரு அடைப்பைக்காரன்—இதுதான் ராமஸாமிக்கவுண்டர்.

இவர் காலையிலெழுந்தால், இரவில் நித்திரைபோகும் வரை செய்யும் தினசரிக் காரியங்கள் பின்வருமாறு:—

காலை எட்டு அல்லது எட்டரை மணி வேளைக்கு எழுந்து கைகால் சுத்தி செய்துகொண்டு ஒன்பது மணியானவுடன் பழையது சாப்பிட உட்காருவார். பழையதிற்குத் தொட்டுக்கொள்ளத் தமது அரமனையிலுள்ள கறிவகை போதாதென்று வெளியே பல வீடுகளிலிருந்து பழங்கறிகள் கொண்டுவரச் சொல்லி, வெகு ரஸமாக உண்பார். (அதாவது, காலை 'லேஹ்யம்' முடிந்தபிறகு, இந்த அபினி லேஹ்யம் உருட்டிப் போட்டுக்கொள்ளாமல் ஒரு காரியங்கூடத் தொடங்கமாட்டார்; பார்ப்பார் எடுத்ததற்கெல்லாம் ஆசமனம் செய்பத் தவறாதிருப்பதுபோல.) பழையது முடிந்தவுடன் அந்தப்புரத்தை விட்டு வெளியேறி இவருடைய சபாமண்டபத்தருகேயுள்ள ஒரு கூடத்தில் சாய்நாற்காலியின் மீது வந்து படுத்துக்கொள்வார். ஒருவன் கால்களிரண்டையும் பிடித்துக் கொண்டிருப்பான். இவர் வெற்றிலை போட்டு காளாஞ்சியில் துப்பியபடியாக இருப்பார்.

எதிரே ஆராவது உத்தியோகஸ்தர், வேலைபாட்கள், கவுண்டனூர்ப் பிரபுக்கள், இவர்களில் ஒருவன் வந்து கதை, புரளி, கோள்வார்த்தை, ஊர்வம்பு, ராஜாங்க வ்யவஹாரங்கள், ஏதேனும் பேசிக் கொண்டிருப்பான். சில நாட்களிலே வெளிமுற்றத்தில் கோழிச்சண்டை நடக்கும். வெளியூரிலிருந்து யாரேனுமொரு கவுண்டன் நல்ல போர்ச்சேவல் கொண்டுவருவான். அ

மனைச் சேவலுக்கும் அதற்கும் சண்டைவிட்டுப் பார்ப்பார்க
அரமனைச் சேவல் எதிரியை நல்ல அடிகள் அடிக்கும்போ
ஜமீந்தாரவர்கள், நிஷ்பக்ஷபாதமாக, இருபக்கத்துக் கோழிகளி
தாய், பாட்டி, அக்காள், தங்கை எல்லோரையும் வாய் குளிர வை
ஸந்தோஷம் பாராட்டுவார். களத்திலே ஆரவாரமும், கூக்குரலு
நீசபாஷையும் பொறுக்க முடியாமலிருக்கும்.

பெரும்பாலும், சண்டை முடிவிலே அரமனைக் கோழிதா
தோற்றுப்போவது வழக்கம். அங்ஙனம் முடியும்போது, வ
கவுண்டன் தனது வெற்றிச் சேவலை ராமஸாமிக் கவுண்டரவர்
திருவடியருகே வைத்து ஸாஷ்டாங்கமாக விழுந்து கும்பிடுவா
இவர் அச்சேவலைப் பெற்றுக்கொண்டு, அவனுக்கு நல்ல பான
உத்தரீயம், மோதிரம் ஏதேனும் ஸன்மானம் பண்ணி அனு
விடுவார். பிறகு பழைய அரமனைச் சேவலைத்தள்ளிவிட்டுப்புதித
வந்த சேவலை "ஸம்ஸ்தான வித்வானாக" வைப்பார்கள். அடுத்
சண்டையில் இது தோற்றுப்போய் மற்றொன்று வரும். எத்த
வீரமுள்ள சேவலாக இருந்தாலும் கவுண்டயூர் அரமனைக்
வந்து ஒருமாத மிருந்தால் பிறகு சண்டைக்குப் பிரயோஜன
படாது. ஜமீன் போஷணையிலேயே அந்த வழுண்டாகிறது.

பகல் ஒன்றரை மணிக்கு ஸ்நாநம் தொடங்கும். வெந்நீரி
தான் ஸ்நாநஞ் செய்வார். ராமஸாமிக் கவுண்டர் ஸ்நாநஞ் செ
தென்றால், அது ஸாதாரணக் காரியமன்று. ஜலத்தை யெடுத்
ஊற்றுவதற்கு இரண்டு பேர். உடம்பு தேய்க்க இரண்டு பே
தலைதுவட்ட ஒருவன். உடம்புதுடைக்க ஒருவன். வேறு வேஷ்
கொண்டு அரையிலுடுத்த ஒருவன். நேபாளத்து ராஜாவின் பி
தத்துக்குக்கூட இந்த உபசாரம் நடக்காது.

ஸ்நாநம் முடிந்தவுடனே பூஜை. ஜமீந்தார் பூக்களை வாரிவ
முன்னே வைத்திருக்கும் விக்கிரகத்தின்மேல் வீசுவார். பூ
காலத்தில் ஸ்தல பாகவதர்கள் வந்து பாடுவார்கள். சில சம
களில் ஸங்கீத விஷயமாக ஸம்பாஷணைகள் நடப்பதுண்டு. ஜ
தார் தாம் 'கவனம்' செய்த கீர்த்தனைகளைப் பாகவதர்களிடம்
டிக்காட்டுவார். (ஸங்கீதத்திலும் ஸாஹித்யத்திலும் ராமசா
கவுண்டர் புலி. அந்த ஸங்கதி ஞாபகமிருக்கட்டும்).

ஒருநாள் ஸம்ஸ்தான வித்வான்—அண்ணாத்துரை அய்ய
தோடி—நாராயணய்யங்கார், பல்லவி—வேதாசலக் குருக்கள் (



லிய வித்வான்களனைவரும் வந்து கூடியிருந்தனர். அண்ணாத்துரை அய்யரை நோக்கி ஜமீந்தார்:—நான் அடாணாவில் "மானே யங்கே போனவகை பென்னடி" என்ற வர்ணமெட்டிலே, பரம சிவன்மேல், ஒரு 'ஸாஹித்யம் பார்த்திருக்கிறேனே'. (ஒரு கீர்த்தனை செய்திருக்கிறேன் என்றர்த்தம்.) அதை நீங்கள் கேட்கவில்லையே—என்றார்.

'உதாவாகட்டும்' என்றார் பாகவதர்.
(சொல்லு, கேட்போம்-என்றர்த்தம்)

உடனே ஜமீந்தார் ஜலதோஷம் பிடித்த பன்னிரண்டு குயில்கள் சேர்ந்து சுருதியும், லயமும் ஒன்றுபடாமல்பாடுவதுபோன்ற தமது திவ்விய சாரீரத்தை யெடுத்துப் பின்வரும் கீர்த்தனை பாடலாயினர். ஒரு பாகவதர் தம்பூரில் சுருதி மீட்டினார். ஜமீந்தார் அந்த சுருதியை லக்ஷ்யம் பண்ணவில்லை.

ராகம் அடாணா—தாளம் ரூபகம்.
(மானே யங்கே போனவகை பென்னடி என்ற வர்ணமெட்டு).

பல்லவி.

மானே கையில் தானே தரித்தானே—ஒரு
மானைத் தரித்தானே மழுவைத் தரித்தானே. (மானே)

[பல்லவியில் முதல்வரி பாடி முடிவதற்குள்ளாகவே அண்ணாத்துரை பாகவதர் "பேஷான கீர்த்தனம்! பேஷான கீர்த்தனம்! சபாஷ்! சபாஷ்!" என்றார். "ஒருவரி பாடுமுன்னே இதுநல்லகீர்த்தனை யென்று எப்படித் தெரிந்தது?" என்று ஜமீந்தார்கேட்டார். "ஒருபானை சோற்றுக்கு ஒரு பருக்கை பதம்பார்த்தால் போதாதா?" என்றார் பாகவதர். ஜமீந்தாரும் இந்த நியாயத்துக்குக் கட்டுப்பட்டு ஸந்தோஷமிகுந்தவராய், மேலே பாடலாயினர்]

பல்லவி.

மானே கையில் தானே தரித்தானே—ஒரு
மானைத் தரித்தானே மழுவைத் தரித்தானே. (மானே)

அநுபல்லவி.

கோனே சிவனே குருவே யருவே மெய்ஞ்
ஞான பான மோன மான நாதா தமனைப் பாதா. (மானே)

[ "அனுபல்லவியில் இரண்டாம் அடியில் 'முடுகு' வைத்திருக்கிறேன். பார்த்தீர்களா? என்று ஜமீந்தார் கேட்க, பாகவதர்களெல்லோரும் பேஷ்! பேஷ்! பேஷ்!" என்றனர்.]

சரணம்.

எந்தனை மோக்ஷ கதியினில் சேர்த்திட
இன்னமு மாகாதா? — உன்னைச்
சொந்தக் குலதெய்வ மென்றுநித் தந்துதி
சொன்னது போதாதா?
விந்தை யுடனிங்கு வந்தென்னை யாளவும்
மெத்த மெத்த வாதா?
வந்தனை தந்துனைப் போற்றிடும் ராமசா
மிக்கவுண்டராஜ-போஜ னுக்கருள்செய் யும்பாதா. (மோனை)
"மிக்கவுண்ட ராஜபோஜ
னுக்கருள்செய் யும்பாதா."

என்று கடைசியடியை இரண்டாமுறை திருப்பிப்பாடி, ராமஸாமிக்கவுண்டர், மிகவும் திருப்தியுடன், தியாகையர் 'நகுமோமு' கீர்த்தனத்தை ஒரு சிஷ்யனிடம் முதல்முறை பாடிக்காட்டிய பிறகு புன்சிரிப்புச் சிரிப்பதுபோல நகைத்தருளினார்.

பாகவதர்களெல்லோரும் சபாஷ் சொல்லிக் கொட்டிவிட்டார்கள்.

பிறகு அண்ணுத்துரை பாகவதர், "மகாராஜா, இந்தக் கீர்த்தனத்தை எழுதிக் கொடுத்தால், நான் வீட்டிலேபோய்ச் சிட்டைஸ்வரங்கள் சேர்த்துப் பாட்டையும் நன்றாகப் பாடஞ் செய்து கொண்டு வருவேன். இதை நித்தியம் பூஜாகாலத்தில் பாடவேண்டுமென்பது என்னுடைய அபிப்பிராயம்" என்றார்.

"அதுக்கென்ன? செய்யுங்கள்." என்றார் ஜமீந்தார்.

பூஜை முடிந்தவுடனே போஜனம். பழையபதின்ன ஊரார் வீட்டுக் கறிகளெல்லாம் தருவித்த மனிதன் பகற்சோற்றுக்கு ஊரைச் சும்மாவிடுவானா? கிருஷ்ணய்யங்கார் வீட்டிலிருந்து "உப்புச்சாறு", கேசவய்யர் வீட்டிலிருந்து "அவியல்", குமாரசாமிப்பிள்ளை வீட்டுக்கீரைச்சுண்டல், இன்னும்பலர் வீட்டிலிருந்து



பலவித மாமிச பக்குவங்கள் இவ்வளவு கோலாகலத்துடன் ஒரு மட்டில் போஜனம் முடிவுபெறும்.

ராமசாமிக்கவுண்டர், பார்ப்பார் சொல்வதுபோல, நல்ல "போஜனப்பிரியன்". மெலிந்த சரீரமுடைய ஒரு சினேகிதனுக்கு அவர் பின்வருமாறு பிரசங்கம் செய்ததாகச் சரித்திரங்கள் சொல்லுகின்றன.

இதோபாரு, ரங்கா, நீயேன் மெலிஞ்சு மெலிஞ்சு போறே (போகிறாய்) தெரியுமா? சரியாய்ச் சாப்பிடறதில்லை. சாப்பாடு சரியானபடி. செல்ல ஒருவழிசொல்'றேன் கேளு ஒருகை நிறையச் சோறெடுத்தால் அதுதான் ஒரு கவளம். அப்படி நீ எத்தனை கவளம் தின்பை? எட்டுக்கவளம். ரம்ப அதிகமாய்ப்போனால் ஒன்பது கவளம் வைச்சுக்கோ. அவ்வளவுதான். சாஸ்திரப்படி முப்பத்திரண்டு கவளம் சாப்பிடவேணும். அதற்கு நீ என்னசெய்யவேணுமென்றால், இன்றைக்கு ஒன்பது கவளம் சாப்பிடுகிறாயா? நாளைக்குப் பத்துக் கவளமாக்கவேணும். நாளன்றைக்குப் பதினொன்றாக்கவேணும், நாலாநாள் பன்னிரண்டு. இப்படி நாள்தோறும் ஒவ்வொன்றாக அதிகப்படுத்திக் கொண்டேபோய் முப்பத்திரண்டாவதோடு நிறுத்திவிடவேணும். பிறகு ஒருபோதும் முப்பத்திரண்டு கவளத்துக்குக் குறையவே செய்யலாகாது.

இந்த உபதேசம், மெலிந்த உடல்கொண்ட ரங்கனுக்கு எவ்வளவு பயன்பட்டதோ, அதனை அறியமாட்டோம். ஜமீந்தாரவர்களுக்கு இந்த அநுஷ்டானம் சரிப்பட்டு வந்தது. அவர் முப்பத்திரண்டு கவளத்துக்குக் குறைவாக ஒருபோதும்சாப்பிடுவதில்லை. ஒருபோதும் மெலிவதுமில்லை.

பகல் போஜனம் முடிந்தவுடனே ஜமீந்தார் நித்திரை செய்யத் தொடங்குவார், அரமனைக்கு வெளியேகூடச் சில சமயங்களில் சத்தம் கேட்கும்படியாகக் குறட்டை விட்டுத் தூங்குவார். மாலை ஐந்து மணிக்கு விழிப்பார். விழித்தவுடன் ஆறாவது அல்லது ஏழாவது முறை "ஆசமனம்" செய்துவிட்டுக் கொஞ்சம் பலகாரம், சாப்பிடுவார். உடனே ஐரோப்பிய உடை தரித்துக்கொண்டு கச்சேரிக்குப்போவார். அங்கே பலர் பலவிதமான விண்ணப்பங்கள் கொண்டு கொடுப்பார்கள். அவற்றையெல்லாம் வாங்கிக்கொள்வார். அதாவது, பக்கத்தில்

நிற்கும் குமாஸ்தா அவற்றை வாங்கிவைக்கும்போது இவர் பார்த்துக் கொண்டிருப்பார். விண்ணப்பங்கள் வாங்கி முடிந்த பிறகு காகிதங்களில் கையெழுத்துப் போடும் காரியம் தொடங்கும். பழைய மனுக்கள், திவான் கச்சேரிக் கடிதங்கள், இவற்றின் மேல் குமாஸ்தா தன் இஷ்டப்படியெல்லாம் உத்தரவுகளெழுதி வைத்திருப்பான். அவற்றின் கீழ் வரிசையாகக் கையெழுத்துப் போட்டுக்கொண்டே வரவேண்டும். இன்னின்ன வ்யவஹாரங்களைப்பற்றிய காகிதங்களின் மேல் இன்னின்ன உத்தரவுகள் எழுதப்பட்டிருக்கின்றன என்ற சமாச்சாரமே "லேஹ்ப"க் கவுண்டருக்குத் தெரியாது.

ஒரு சமயம் வழக்கப்படி உத்தரவுகள் தயார் பண்ணிக் கொண்டுவரும் குமாஸ்தா ஊரிலில்லை. அவன் இடத்திற்கு மற்றொருவன் வந்திருந்தான். ஜமீந்தார் தாமே மனுதாரர்களுக்கு உத்தரவு எழுதுவாரென்று அவன் நினைத்து மனுக்காகிதங்களை அப்படியே மேஜைமேல் வைத்துவிட்டான். ஜமீந்தாரும் விட்டுக்கொடாதபடி அந்த மனுக்களை ஒவ்வொன்றாகத் திருப்பிப்பார்த்து மேலே உத்தரவுகள் எழுதத்தொடங்கினார்.

கவுண்டபுரத்துக்கு மேற்கே இரண்டு நாழிகை தூரத்திலுள்ள நடுக்கனூர் கிராமத்திலிருந்து வில்வபதிசெட்டி என்ற ஒரு கிழவன் பின்வருமாறு மனுக்கொடுத்திருந்தான்:—

“பிதா மஹா ராஜா அவர்கள் காலத்தில் நான் மிகவும் ஊழியம் செய்திருக்கிறேன். இப்போது பலவிதக் கஷ்டங்களால் நான் ஏழையாய்ப்போய், மக்களையும் சாகக் கொடுத்துவிட்டுத் தள்ளாத காலத்தில் சோற்றுக்கு சிரமப்பட்டுக் கொண்டிருக்கிறேன். மஹாராஜா அவர்கள் சமூகத்தில் கிருபைசெய்து எனக்கு ஜீவனத்துக்கு ஏதேனும் மனோவர்த்திச் செலவிலே கொடுக்கும்படி பிரார்த்திக்கிறேன்.”

இந்த மனுவை ஜமீந்தார் தமது குமாஸ்தாவின் உதவியினால் வாசித்து முடித்துவிட்டுப் பிறகு காகிதத்தின் புறத்திலே அடியிற்கண்டபடி உத்தரவெழுதி விட்டார்.

“தாசில்தார் குமாரப்பிள்ளைக்கு—வில்வபதி செட்டி பேருக்கு நிலம் விட்டுவிடவும்”. இதை எழுதி நீளமாக ராமசாமிக்கவுண்டர் என்று கையெழுத்துப் போட்டுத் தீர்த்துவிட்டார்.



இப்படிப் பலவிதமான உத்தரவுகள் பிறப்பித்து ஜமீன்தார் தமது கச்சேரியை முடித்துவிட்டார். மறுநாள் இந்தவில்வபதிச் செட்டியின் மனு திவான் கச்சேரிக்குவந்து சேர்ந்தது. கவுண்டருடைய உத்தரவை திவான் படித்துப்பார்த்தார். தாசில்தார் குமாரப்பிள்ளையின் அதிகாரத்துக்குட்பட்ட பூமியில் மேற்படி செட்டிக்கு ஜீவனாம்சத்துக்கு நிலம் விடவேண்டுமென்று கவுண்டரவர்களுடைய திருவுள்ளம் ஏற்பட்டிருப்பதாகத் தெரிந்துகொண்டார். ஆனால் எவ்வளவு நிலம், எந்தவிதமான நிலம், என்ன நிபந்தனைகள், முதலிய விவரங்களொன்றும் தெரியவில்லை. உத்தரவை அடித்துவிட்டுத் திவான் வேறு மாதிரி எழுதிக்கொண்டு வந்து ரஹஸ்யமாகக் கவுண்டரின் கையெழுத்துவாங்கிக்கொண்டு போய்விட்டார். கடைசியில் வில்வபதிச்செட்டிக்கு ஒன்றும் கொடுக்கவில்லை. உத்தரவிலுள்ள பிழைகளைத் திவான் எடுத்துக்காட்டியபோது ஜமீன்தார் குற்ற முழுதையும் குமாஸ்தாவின் தலையிலே தூக்கிப்போட்டு விட்டார். “நான் மனுவை வாசித்துப்பார்க்கவேயில்லை. வேறே பெரிய விவகாரமொன்றிலே புத்தியைச் செலுத்திக்கொண்டிருந்தேன். இந்த மனு என்ன விஷயமென்று குமாஸ்தாவைக் கேட்டேன். ‘செட்டி மிகவும் ஏழை; அவனுக்கு உதவி செய்யவேண்டியதுதான்’ என்று குமாஸ்தா சொன்னான். தங்களுடைய அபிப்பிராயந்தெரிந்து தான் சொல்லுகிறானென்று நினைத்து உத்தரவெழுதிவிட்டேன். மனோவர்த்தியிலே பணத்துக்குத்தான் திண்டாடுதே! அதிலே இந்த இழவையுங்கொண்டு போய்ச்சேர்ப்பதெப்படி? இதை யோசனை செய்துதான் குமரப்பிள்ளை இலாகாவில் நிலம் விட்டுக்கொடுக்கும்படி எழுதினேன். எனக்கு அந்த வில்வபதிச்செட்டியைப்போதுமானபடி தெரியும். அவன் சுத்த அயோக்கியப் பயல். பட்டினி கிடந்து செத்தால் சாகட்டுமே! நமக்கென்ன?”

## சிருஷ்டியே ஜகத்குரு.

பிரஹ்மஸ்ரீ கே. ரெங்கசாமி அய்யங்காரவர்கள் எழுதியது.

நமது முதலாவது குரு ஆகாசம். அதன் கீழ் மழை பொழிகின்றது; புயல் அடிக்கின்றது; மின்னல் மின்னுகின்றது; இடி இடிக்கின்றது; இவைகளில் எதனையும் அது பற்றுவதில்லை.

நாடுகள் தீப்பட்டெரிந்தாலும், மண்மாரி பெய்தாலும், சீதோஷ்ண ஸ்திதியில் எவ்விதமாறுதல்கள் உண்டானாலும் அவைகளில் எதுவும் ஆகாயத்தை உருமாற்றுவதில்லை. இதனால் நாம் என்ன தெரிந்து கொள்கிறோம்? பிரபஞ்சத்தின் மாறுதல்களை நாம் சட்டை செய்யலாகாது என்பதே. நமது நெறியையும் தைரியத்தையும் எதுவும் இபக்கற் பாலதன்று.

நமது இரண்டாவது ஆசாரியர் வாயுவாகும். அது சுகந்தம் துர்க்கந்தம் ஆகிய இருவகைப் பொருள்களின் மீதும் வீசுகின்றது. அப்பொழுது அதனுடைய குணங்கள் தான் சம்பந்தப்படும் வஸ்துக்களுடைய குணங்களுடன் கலந்தமாதிரி நமக்குப் புலப்படுகின்றது. ஆனாலும் அது தன்னுடைய சொந்த ஸ்வபாவத்தை ஒருபொழுதும் துறப்பதில்லை. அதுபோலவே சாதுக்கள் துன்மார்க்கர்களுடைய சகவாசத்தால் எவ்வளவு இடுக்கண் அடையினும் தங்களுடைய ஸ்வாபாவிக சாந்தத்தை ஒருபொழுதும் கைவிடுவதில்லை. ஆதலால் உலகத்திலிருந்தும் அவர்கள் உலகவழியிற் சார்வதில்லை.

மூன்றாவது, குரு அக்கினி. இது எல்லாவற்றையும் புனிதமாக்கி விடுகிறது. எந்த அசுத்தமான பொருளைத் தீயிலிட்டாலும் அது சுத்தமாகிவிடுகிறது. எவ்விதமான இருளையும் போக்கடிக்கிறது. எல்லாருக்கும் பிரகாசத்தைத் தந்து உற்சாகப்படுத்துகிறது. உபகாரம் செய்வதில் அது குலம் கோத்திரம் விசாரிப்பதில்லை. வர்ணாச்சிரம பேதம் அதற்கு லட்சியம் இல்லை. அதேமாதிரி நாமும் நம்மாலியன்றவளவு நன்மையையே செய்ய வேண்டும்.

நான்காவது, ஜலம், நீரைக் குடித்தவனுக்குக் களைதீரும். எந்த அசுத்தமான பொருளையும் நீர் புனிதமாக்குகின்றது. எந்தப் பாத்திரத்தில் ஊற்றிவைக்கிறோமோ, அந்தப் பாத்திரத்தின் உருவத்தைத் தானும் ஏற்றுக்கொள்கிறது. எதை அடுத்திருக்கிறதோ அதன் நிறத்தைப்பெறுகிறது. தான் சமயத்துக்குத் தகுந்த பலவித மாறுதல்களை யடைந்து, தன்னுடன் சம்பந்தப்படுகின்ற பொருளைச் சுத்தம் செய்துவிடுகின்றது. இம்மாதிரியே நாமும் பாபிமுதல் பரமஹம்ஸர் ஈறாகவுள்ள ஒவ்வொருவரோடும் கலந்து அவரவருக்கு வேண்டிய நன்மைகளை ஸ்வயநலத்தைக் கருதாது செய்யவேண்டும்.



ஐந்தாவது, பூமி. பூமியை வெட்டி அதன் கீழுள்ளபொன், வெள்ளி முதலியவற்றை மனிதர் எடுத்துக்கொள்கிறார்கள்; பூமியைக் காலால் மிதிக்கிறார்கள்; அதில் கிணறு தோண்டுகிறார்கள்; பலவிதமான அசங்கியங்களும் செய்கிறார்கள். இவற்றையெல்லாம் அது எவ்வளவு பொறுமையுடன் சகிக்கின்றது! உலகத்தைத் துறந்து பரம்பொருளை நாடிப்போகும் ஜீவனுடைய கதியும் இத்தன்மைத்தே. 'மகான்' என்று சொல்லப்படுபவர் பொறுமையும் பரோபகாரமுமே உருவெடுத்து வந்தது போலிருப்பார்.

ஆறாவது, மலை. ஜனங்கள் மலையின்மேல் ஏறட்டும்; கீழே இறங்கட்டும்; அதன் உச்சியை எட்டட்டும்; அடிவாரத்துக்கு வரட்டும்; காற்று அடிக்கட்டும்; மழை பெய்யட்டும். இவற்றால் மலைக்கு எவ்வித சலனமும் உண்டாகிறதில்லை. அது எப்போதும் எந்த அவஸ்தையிலும் அசையாமல் இருக்கிறது. நாம் இதனிடத்திலிருந்து கற்றுக்கொள்ள வேண்டியதென்ன? வெளிப்பொருள்கள் நமது மனத்தைச் சலனத்திற்குட்படுத்த இடங்கொடுக்காமலும், காமக்குரோதாதிகள் நம்மைத் தங்கள் வழியில் இழுத்துப்போகாமலும் நாம் நமது மனத்தை அசைவற்ற மலையைப்போல் நிலைநிறுத்தவேண்டும். பொறுமை, சாந்தம், உறுதி இக்குணங்கள் மலையினிடத்திலிருந்து நாம் கற்றுக் கொள்ள வேண்டியவை.

ஏழாவது குரு, மரம். மனிதர் வந்து அதன் கீழ் தங்குகிறார்கள்; அதன் கிளைகளை வெட்டித் தள்ளுகிறார்கள்; அதன் பழங்களையும் புஷ்பங்களையும் பறிக்கிறார்கள்; இச்செய்கைகளால் மரத்துக்குக் கோபம் வருவதில்லை. தன்னை வெட்டுகிறவனுக்கும் தான் கீழே விழுகிறவரையில் நிழலைக் கொடுக்கிறது. அதுபோலவே நாமும் எத்தகைய துன்பங்கள் நேரிடினும் அவற்றைக் கருதாது உலகத்துக்கு உழைக்கவேண்டும்.'

எட்டாவது, சந்திரன். அது தன் உருவத்தில் மாறுதல் அடைகிறது. சில சமயங்களில் இரண்டொரு தினங்கள் ஒளிந்து கொள்கிறது. சில நாட்களில் அங்கம் மிகவும் குறைந்து ஒரு நூல் அளவு காணப்படுகின்றது. பிறகு வளர்கிறது. நாளடைவில் தன்னுடைய பூர்ண அங்கத்தை அடைகிறது. தான் எந்த நிலையிலிருந்தாலும், மூன்றாம் பிறையாயிருந்தாலும், அர்த்த சந்திரனாயிருந்தாலும், பூர்ண சந்திரனாயிருந்தாலும், இருளைப்போக்

கும் தொழிலில் மாறுதல் காணப்படுவதில்லை. அதே மாதிரி நமது சரீரம் குறையலாம், பெருக்கலாம் நமது அவயவங்கள் குறையலாம், பெருக்கலாம். நமது ஆத்மாவில் ஒரு மாறுபாடும் உண்டாவதில்லை.

இவ்விதமாக, சிருஷ்டியே ஓர் உத்தம குருவைப்போல,நம்மைத் தடுத்தாட் கொள்ளும் பொருட்டுப் பிரத்தியட்சமாயிருக்கிறது.

## சில ஆழ்ந்த தனி மொழிகள்

பிரஹ்மஸ்ரீ ஏ. எஸ். கஸ்தூரி ரங்கய்யர் பி. ஏ; எல். டி. அவர்கள் எழுதியது.

1. போகிற இடமெல்லாம் தேகம் கூடக் கூட வருகிறதோ?

இந்தத் தனிமொழி ஏற்படும் சந்தர்ப்பத்தைப் பற்றிச் சற்று ஆராய்வோம். நமது தோழருள் ஒருவனுக்கு வியாதி வந்திருந்தது என்று வைத்துக் கொள்வோம். அவன் சாதாரணமாக வியாதிக்கு வேண்டிய சிகிச்சை செய்து விட்டு மனதை அதிகமாக வருத்தப்படுத்திக் கொள்ளாமலிருந்து விடாது அதைப் பெரிதாகப் பாராட்டி அனாவசியமாக வருந்திக் கொண்டிருப்பதாகவும் வைத்துக் கொள்வோம். வியாதி தீர்ந்தும் கொஞ்ச நாள் வரையில் அவன் தனக்கு வியாதி தீரவில்லையென்று வருந்துவான். அப்பொழுது வேடிக்கையாகப் பேசும் பொழுது அவனைத் தேற்றுவதற்காக உனக்கு இப்பொழுது என்ன வியாதி இருக்கிறது? போகிற விடமெல்லாம் தேகம் கூடக் கூட வருகிறதே, அதுதான் ஒன்றிருக்கிறது. வேறு என்ன? என்று கூறுவது வழக்கம். மேலும் நமது வீட்டில் நடக்கும் விசேஷங்களுக்கு ஒரு தோழனைக் கூப்பிட அவன் எப்பொழுதும், எனக்கு வியாதி; வர முடியவில்லையே! என்ன செய்வது? என்று சாக்குப் போக்குச் சொல்லி விடுவதாக வைத்துக் கொள்வோம். இவனை எங்காவது காணும் பொழுது இவனைப் பரிகாசம் பண்ண இவர் எப்பொழுது சாப்பாட்டிற்கு அழைத்தாலும் நோய்! நோய்! என்று கூறி விடுகிறா. போகிற இடத்திற்கெல்லாம் தேகம் கூடக் கூடப் போகிறதே, அது தானோ நோய்? என்று கூறுவது உண்டு. ஒருநாட் காலையில்



அவனுக்கு அதிக நோய் என்று கேள்விப்பட அவனை அன்று மாலையிலாவது மறுநாட் காலையிலாவது கண்டாலும் அவனைப் பரிகாசம் செய்ய இத் தனி மொழியை உபயோகிப்பது உண்டு. இத் தனிமொழி சாதாரணமாக எல்லோருக்கும் தெரிந்தது தான். வேடிக்கையாக இதை உபயோகப்படுத்துவர் எல்லோரும்.

இதில் புதைந்து கிடக்கும் ஆழ்ந்த கருத்தைப் பற்றிச் சற்று ஆராய்வோம். இதில், போகிற விடம் எங்கு? தேகம் கூடக்கூட வருவதென்றால் என்ன? இது எங்ஙனம் ஓர் வியாதி யாகும்? என்ற மூன்று கேள்விகளுக்கும் தகுந்த விடைதர வேண்டும்.

போகிற இடம் எங்கு என்பதை உணர்வதற்கு எது போகிற இடம் என்பதை உணர வேண்டும். அதாவது, மனம். மனம் போகிற இடம் எங்கு? வெளி விஷயமாகிய பிரபஞ்சத்தினிடத்தும் உள் விஷயங்களாகிய எண்ணங்களிடத்துமே. இந்தமாதிரி இடங்களில் தான் மனம் போய் உழலுகின்றது. இவைகளோடு கூட தேகம் வருவது என்பதை ஆராயுங்கால், தேகசம்பந்தப்பட்டே மனம் இவ்வாறு செய்கின்றது என்பதாகும். மனம் தேக சம்பந்தப் படுவது இந்திரியங்கள் மூலமாகவே. அவ்வாறு சம்பந்தப்பட்டு வெளி விஷயங்களில் பாய்ந்து ஓடுங்கால் இரண்டு விதத் தன்மை ஏற்படும். தன் தன்மைகெட்டு பதார்த்த ரூபமாகி விடும்; அவ்வாறு ஆகாதிருப்பின் தான் வேறு தன்னால் அறியப்படும் பொருள் வேறு என்று இரண்டாகி அறிபவன் அறிபடுபொருள் என்ற துவைதத்தை ஏற்படுத்தும். இது தான் மனத்தினுடன் தேகம் சம்பந்தப்படுவதால் ஏற்படும் விஷயம். மனம் வெளி முகப் படுங்கால் இங்ஙனம் ஏற்படுவது சகஜமே. இவ்வாறின்றி மனம் உள் முகப்பட்டு எண்ணங்கள் ரூபமாக மாத்திரம் இருக்கும் பொழுதும் இங்ஙனம் ஏற்பட்டு விடுகின்றது. ஒரு விளக்கைப் பற்றி நாம் மனதில் நினைக்கவேண்டுமாயின், அதை நாம் பார்ப்பதாகத் தான் தியானிக்க முடியும். இங்ஙனமே எந்த வஸ்துவையும் எண்ண ரூபமாக உணரக்க வேண்டுமாயின், அதை ஒரு இந்திரிய உணர்ச்சியின் மூலமாகத்தான் எண்ண வேண்டும் இம்மாதிரியே மனத்தின் எண்ணங்கள் மாத்திரமாய் ஏற்படும் சங்கற்பங்கள் கூட இந்திரியங்களின் உணர்ச்சி மூலமாக அந்த ஆகாரப்பட்டோ அல்லது அறிவு வேறு அறிபடுபொருள் வேறு என்ற உணர்ச்சியை முன்னிட்டோ தான் உண்டாகவேண்டும் என்பதே மனம் போகிற

இடத்திற்கெல்லாம் சரீரம் கூடக்கூட வருவது என்பதன் உட்கருத்து.

இப்படி மனம் போன இடமெல்லாம் தேகம் வருவது எங்ஙனம் ஒரு வியாதியாகும்? இதை உணரவேண்டுமாயின், "மனம் போன போக்கெல்லாம் போகவேண்டாம்" என்று ஒளவை கூறிய வாக்கியத்தைச் சற்று ஆராயவேண்டும். மனம் சாதாரணமாக தேக சம்பந்தப்பட்டே தொழிற்படும். தனித்துத் தொழிற்படும்பொழுதும் அதைப் போலவே தோற்றத்தை உண்டாக்கித் தொழிற்படும். இவ்வாறு மனம் தேகம் போன வழியெல்லாம் போகவேண்டாமென்றாள் ஒளவை. போக்கெல்லாம் என்றதனால் ஒருவிதப் போக்கு உண்டு என்றும் அவ்வழியே போகலாம் என்றும் பொருள்படவில்லையா? அந்த வழிதான் நல்வழி, மற்றைய சாதாரண போக்குகளெல்லாம் கெட்ட வழிகள் என்று ஆயிற்று. மனது எண்ண ரூபமாகப் பரிணமிக்குங்கால் வெளி விஷயமோ யில்லாது தானே அவ்வாறெல்லாம் ஆகிறது என்பது நமக்குத் தெரிந்த விஷயம். இப்படியிருக்க உண்மையாய் மனம் ஒரு படத் துணி போலவும் எண்ணங்கள் அதில் வரையப்பட்டிருக்கும் சித்திரம் போலவும் அல்லவா தோற்றவேண்டும். இங்கும் அறிபவன் வேறாகவும் அறிபடு பொருள் இந்திரிய மூலமாக ஏற்படும் உணர்ச்சி ரூபமாக வெளியி லிருப்பது போலவும் தோற்றுவானேன்? இது தேக சம்பந்தத்தால் மனதிற்கு ஏற்பட்டிருக்கும் …ர்வித வாசனையின் பலமே. இது உண்மைக்கு விரோதமாதலால், இது ஓர் வியாதிதான். இந்த மனப்பரிணாமம் அடங்கி தேக உணர்ச்சி நீங்கிநிற்பதுதான் இதன் நிவிர்த்தியாகிய நோயற்ற வாழ்வாகும். ஆகவே, நம்மெல்லோருக்கும் மனம் தன் ஸ்வரூபப்படி நிலைக்காமல் எவ்வளவுதான் அதை நிறுத்த முயன்றும் கூடக்கூட தேகம் வந்து ஒட்டிவிடுவதே மூல அஞ்ஞானத்தாலாகிய ஒரு வியாதி. தான் போகிற (மனம் ஓய்ந்து சாந்தி பெறவேண்டும் என்று போகிற) இடத்திற்கெல்லாம் (நிலைகட்கெல்லாம்) தேகம் கூடக்கூட வருகிறது (தேக சம்பந்தமான துவைத புத்தி மாறாது வருகிறது) தான் நமக்கு உள்ள மூலவியாதி. இதனால் தான சுக துக்கங்கள் ரூபமான சம்சாரம் ஓங்கி நம்மை மீளாத் துயரத்திற் குள்ளாக்கும். சத்குரு குருபை, ஈஸ்வரானுக்கிரகம் இவைகளால் தேகம் கூடக்கூட வருவதைத் தடுக்க முடிந்தால்தான் இந்த மூலவியாதி நீங்கும்.

# புத்தக வரவு.

சூதசங்கிதாஸாராம்ருதவசனம்:—இவ்வருமையான நூல் மிகவும் எளிய நடையில் வசன ரூபமாக திரு. அ. சிவானந்தசாகர யோகீஸ்வரரது ஜேஷ்ட புத்திரி சௌ—பாலசரஸ்வதி தேவகுஞ்சரி யம்மாளால் இயற்றப்பட்டுள்ளது. சூதபுராணிகரது மகிமையையும் இந்நூலின் பெருமையையும் அறிந்து மதசாஸ்திரங்களில் விஸ்வாசமுள்ளவர்கள் கேள்வியினாலாயினும் அறியாதிரார்கள். இந்நூலின்கண் கர்ம ரகஸ்யங்களும் ஞானவாக்கியங்களும் கலந்து நிறைந்து பொலிகின்றன. மானிட ஜன்மப் பிரயோசனத்தை அடைய விரும்பும் ஒவ்வொருவருக்கும் இந்நூல் இன்றியமையாததாகும். பதிப்பு, கட்டடம் இவை யெல்லாம் வெகு அழகாய் அமைந்துள்ளன. இதன் விலை ரூபா ஒன்றே. வேண்டியவர்கள் திருவல்லிக்கேணியில் ஹை ரோட்டில் 32. பாலசுப்பிரமணியன் கம்பனியில் வாங்கிக் கொள்ளலாம்.

ஸ்ரீ குமுதவல்லி திருமங்கை மன்னன்:—ஸ்ரீ வைஷ்ணவ பக்த சிரேஷ்டர்களாகிய ஆழ்வார்கள் பன்னிருவர்களில் திருமங்கையாழ்வார் என்பவரது சரித்திரப் பிரபாவத்தை நாகைநகர் ஜே. இராஜகோபால பிள்ளையவர்கள் நாடக ரூபமாக மிகவும் இனிய வசன நடையில் எழுதி இயற்றியுள்ளார். நாம் இப்புஸ்தகத்தை ஆதியோடந்தமாக நன்றாய் வாசித்துப் பார்த்தோம். பாஷையோ படிக்கப்படிக்கப் பரமானந்தத்தை அளிக்கின்றது. ஆங்காங்கு சந்தர்ப்பங்கட்கேற்ற மேற்கோள்கள் நமது பூர்வீக கிரந்தங்களிலிருந்து எடுத்துக் கூறப்பட்டுள்ளன. பகவத் கைங்கரியத்தையே பரமலட்சியமாகக் கொண்டருளிய இவ்வாழ்வாரது சரித்திரத்தை ஒவ்வொருவரும் வாங்கி வாசிக்க வேண்டியது மிகவும் அவசியம் என்று நாம் நினைக்கிறோம். இதன் விலை அணா எட்டு. இப்புஸ்தகம் நாகபட்டணம் பெருமாள் கோவில் வடக்கு மடவிளாகம் வெங்கட்டராம செட்டியாரவர்களிடத்தில் கிடைக்கும். இந்நூலாசிரியராகிய இராஜகோபால பிள்ளையவர்கள் இம்மாதிரியே மற்றப்பதினோராழ்வார்களுடைய சரிதங்களையும் இயற்றித் தமிழ் உலகத்திற்குப் பேருதவி புரியுமாறு ஜகன் மாதாவாகிய மகா சக்தியைப் பிரார்த்திக்கின்றோம்.

## சமாச்சாரக் குறிப்புகள்.

நமது சென்ற மாதப் பத்திரிகையில் அன்னி பெஸண்டு அம்மையார் பிரதிவாதியாக நின்ற வழக்கில் ஹைக்கோர்ட்டாரது தீர்மானத்தைப் பற்றிப் பிரஸ்தாபித்தோம். அன்னி பெஸண்டும் அவரது சங்கத்தில் ஓர் அங்கத்தினராகிய ஷ்வார்ட்ஸ் என்பவரும் சென்னை பிரஸிடென்ஸி மாஜிஸ்டிரேட் கோர்ட்டில் வாதியாகத் தோன்றி 'ஆண்டிஸெப்டிக்' பத்திராதிபர் மீதும் 'ஹிந்து' பத்திராதிபர் மீதும் அவதூறு வழக்குகள் கொண்டுவந்திருந்த விஷயம் பலரும் அறிந்ததே. 'ஆண்டிஸெப்டிக்' பத்திரிகையும் 'ஹிந்து' பத்திரிகையும் எழுதிய விஷயங்கள் பொது ஜனநன்மையைக் குறித்து எழுதப்பட்டனவே யென்றும் லெட்பீட்டரது ஒழுக்கீனமான கொள்கைகளை பெஸண்டு அம்மையார் ஆதரித்தவரே யென்றும் ஆகையால் மேற்படி பத்திராதிபர்கள் மீது எவ்வித குற்றங்களும் ஏற்படவில்லையென்றும் மாஜிஸ்டிரேட்டவர்கள் இப்பொழுது தீர்ப்பு அளித்து விட்டனர். ஐயோ! பாவம்! அன்னி பெஸண்டு அம்மையாருக்குப் பிரதிகூலக் காற்று அடிக்க ஆரம்பித்து விட்டது. அவர் எடுக்கும் காரியங்களுக் கெல்லாம் இடையூறுகள் ஏற்படுகின்றன. அவரது செல்வாக்கும் சக்தியும் சிதறிப் போய்விட்டன. காசி ஸெண்ட்ரல் ஹிந்து காலேஜூம் அவரது கையினின்றும் நழுவி விட்டது. இதுகாறும் இரகஸ்யமாயுள்ள விஷயங்களெல்லாம் இப்பொழுது பரஸ்யமாய் விட்டன. பெஸண்டு முதலிய பெரியோர்களுக்கு உதவியாயிருந்த மகாத்துமாக்களும் இப்பொழுது தீபேத்துமலைக் குகைகளில் ஒளித்துக் கொண்டார்கள் போலும்!

சென்ற சின்னாட்களாகச் சென்னை தெற்கு மாராட்டா ரெயில்வேக் கம்பெனிவேலைக்காரர்கள் வேலை நிறுத்தம் செய்திருக்கின்றனர் என்றசங்கதியைப்பலரும் அறிவார்கள். இவ்வேலைக்காரர்களின் நன்மையின் பொருட்டு பம்பாயில் ஸ்தாபிக்கப்பட்டிருக்கிற ரயில்வே அமல்கமேட்டட் சபையார் காட்டிவரும் உற்சாகமும் சிரமமும் மிகவும் வியக்கத்தக்கது. பிரயாணிகளும் வியாபாரிகளும் வெகு கஷ்டநஷ்டங்கட் குட்படுகின்றனர் என்ற விஷயத்தை யாவது கவனித்து, எஜமானர்களும் வேலைக்காரர்களும் சீக்கிரம் சமாதானமாய் ஒற்றுமைப்படுவது மிகவும் அவசியம். இவ்விஷயத்தைக் குறித்து அடுத்த பத்திரிகையில் விவரிப்பாம்.

ஞானபாநு.

VOL - I. தொகுதி-க. | JULY 1913. பிரமாதீச ௵ ஆடி ௴ | NO - 4. பகுதி - ௪.

OFFICE OF THE ... MA...

## பஹிரங்க இரகஸ்யம்.

சென்ற மாதத்தில் 'சிவோகம்' என்ற ஆநந்த பேரிகையை அடித்தோம். இப்பொழுது 'சிவோகம்' என்ற ஸ்ருதியின் பொருளை ஆராய்வாம். 'சிவோகம்' என்றால் 'சிவம் நான்', அதாவது, 'ஆநந்தமே நான்', என்று பொருள்படும்.

சுக துக்க மோகங்களற்று ஸ்வஸ்தமாயிருப்பதே ஆநந்தமெனப்படும். அந்நியமேயின்றி அனைத்தும் தானாயிருப்பதே ஆநந்தமெனப்படும். இத்தகைய ஆநந்த சொரூபம் 'நான்' என்றால் சிலர் பரிகஸிப்பர்; சிலர்பயந்திடுவர். ஆனால் இந்த ஸ்ருதிவாக்கியம் ஸ்வாநுபவத்தில் உண்மையாயிருக்கின்றதினால், அநுபவ உண்மைகளையே ஆதாரமாகக் கொண்டுள்ள நாம் இந்த வேத வாக்கியத்தை யுக்திவாயிலாக ரூபித்து ஸ்திரப்படுத்துவோம்.

'நான்', 'நான்' என்று எல்லோருஞ்சொல்லிக் கொள்கிற 'நான்' என்பது என்ன? 'நான்' என்று உலகினர் வியவகரிக்கும் பொழுது நரம்பு எலும்புகளால் கட்டப்பட்டுள்ள மாமிசபிண்டமாகிய இந்த சரீரத்தையே 'நான்' என்று நம்பி வியவகரிக்கின்றனர். 'நான்போகிறேன்', 'நான்வருகிறேன்', என்னும் பொழுதெல்லாம் 'நான்' என்று இச்சரீரத்தையே குறிப்பிட்டாலும், 'என்உடம்பு அசௌக்கியமாயிருக்கிறது', 'என்கால்கள் நோகின்றன', என்று கூறும் பொழுதெல்லாம் உடம்பு, கால்கள் முதலியவைகளை 'நான்' என்பதினின்றும் வேறுபடுத்தி இவைகள் உடைமைகளாகவும் 'நான்' உடையவனாகவும் வியவகரித்துக் கொள்கிறோம். இப்பொழுது 'நான்' சரீரம் அன்று என்று ஏற்படுகின்றபடியால் பிராணனை 'நான்' என்று அபிமானிக்கலாமோ என்றால், பிராணனும் 'நான்' அன்று. 'எனதுபிராணன் போகின்றது' என்று 'நான்' என்பது உடையவனாகவும் பிராணனை உடைமை யாகவும் வேறுபடுத்திக் கூறுகின்றனரன்றோ? ஆகையால் பிராணனும் 'நான்' அன்று. இவ்

னமே 'என்மனம் வருத்தமடைகின்றது'. 'என் அறிவு தடுமாறுகின்றது', 'என்சுகத்திற் துப்பங்கம் நேரிட்டது', என்று இவ்வாறுப சொற்களைச் சொல்லும் பொழுது 'நான்' என்பது உடையவனாகவும் மனம், அறிவு, சுகம் முதலியவை உடைமைகளாகவும் வேறுபடுத்தியே பேசுகின்றோம். ஆகையால் அன்னமயப், பிராணமய, மனோமய, விஞ்ஞானமய, ஆநந்தமய கோசங்கட்கும் அப்பால் 'நான்' என்றொன்று இன்னதென்று புலப்படாததாய் ஆனால் எப்பொழுதும் உள்ளதாய் இருக்கின்றது. இந்தக் கோசங்களும் மற்றும் 'நான்' என்பதன்று. இந்த 'நான்' ராமனிடத்திலும் கிருஷ்ணனிடத்திலும் கேசவனிடத்திலும் உன்னிடத்திலும் என்னிடத்திலும் எல்லாரிடத்திலும் ஏகமாய் விளங்குகின்றது. 'நான்' என்று வியவகரிக்காதவர் எவர் இருக்கின்றனர்?

சரீரத்தையோ, மனத்தையோ, பிராணனையோ புத்தியையோ 'நான்' என்றால், 'நான்' என்பது எல்லாரிடத்திலும் சிறிதும் வித்தியாசம் இல்லாமலிருக்க, சரீரம் முதலியவை வித்தியாசப்படுவானேன்? அவலட்சணமான அங்கப்பழுதுள்ள சரீரத்தையோ, சோகம், சோம்பல் முதலிய தமோகுணப்பிரதானமான மனத்தையோ, குயுக்திநிறைந்த குதர்க்கபுத்தியையோ உடையவர்களிடத்திலும் சாமுத்திரிகா சாஸ்திர லட்சணங்களமைந்த சரீரத்தையோ, உற்சாகம், சாந்தம், சந்தோஷம் முதலிய சத்துவகுணப் பிரதானமான மனத்தையோ, யுக்திபூர்வக நியாயங்கள் நிறைந்த புத்தியையோ உடையவர்களிடத்திலும் 'நான்' என்பது பிரகாசிக்கின்றது. பலவிதத்திலும் வித்தியாசப்பட்ட வஸ்துக்களிடத்தில் ஒருவிதத்திலும் வித்தியாசம் இல்லாமல் 'நான்' விளங்குகின்றது. ஆகையால் 'நான்' சர்வவியாபகமாயிருக்கிறது. "என்னைத்தவிர மற்றிங்கேதுமில்லை என்றனை", பிண்டமாகிய சரீரமும் அண்டமாகிய பிரபஞ்சமும் எனது உடைமைகளே.

"நானே எனது மாயாஜால மகாசாமர்த்தியத்தினால் இவ்வுலகமாகவிரிந்திருக்கின்றேன். சூரியனும் நானே. சந்திரனும் நானே. நட்சத்திரங்களும் நானே. அண்ட பிண்ட சராசரங்களெல்லாம் நானே. சத்துருவும் நானே; மித்துருவும் நானே. எஜமானனும் நானே; ஊழியனும் நானே. திரிலோகாதிபதியாகிய ஈஸ்வரனும் நானே; ஈஸ்வரனை ஏற்றிப்புகழ்பவனும் நானே. என்னைத்தவிர



வேறு இல்லவேயில்லை. சத்தியம்." என்று உபநிஷத்துக்கள் கோஷிக்கின்றன.

"நானென நிறைந்திருந்த ஞானமா நானே" இணையற்றதாய் எங்குமுள்ளதாய் இரண்டற்றதாய் உள்ளது. சரீரம் முதலிய ஜடவஸ்துக்களை உடைமைகளாகப் பாவித்து, 'நான்' என்பதைப் பிரித்துப் பார்த்தால், எல்லாவற்றிலும் அந்தர்க்கதமாய் மிஞ்சியுள்ளது 'நான்'. ஜடவஸ்துக்களாகத் தடித்த பொழுதும் 'நான்' என்பது நீங்கிற்றில்லையாகையால், 'நான்" என்பதே உண்மை, மற்றவையெல்லாம் இன்மையே என்று ஏற்படுகின்றது. வித்தியாசபாவனைகளையெல்லாம் "கற்பிதமென்றுதானே காண்கின்ற சித்து நானே."

" எனக்குச் சந்தேகமுமில்லை, பயமுமில்லை. நானொருபொழுதும் மரணத்தை அறியேன். நான்எப்பொழுதும்பெற்றோரற்றவன்; ஏனென்றால் நான் எப்பொழுதும் பிறந்தவனேயன்று. நானே எல்லாமாயிருக்கும்பொழுது, எனக்குச்சத்துருக்களேது? நான்சச்சிதாநந்த சொரூபி. நானே வஸ்து. நானே வஸ்'து'

என்று ஓர் மகான் கானம் செய்துள்ளார். ஆகா! இவ்வாக்கியத்தின் பெருமையேபெருமை. "நான்" இரண்டற்று ஒரே வஸ்துவாய் இலங்கும் பொழுது பயம் என்பதேது? தலையின் மேல் இடி விழுந்தால் அந்த இடியும் "நான்" தான். கொடூரகுணத்தையுடைய புலியும் "நான்" தான். ஜீவிதகாலத்தை ஜீரணம் செய்கின்ற மரணமும் "நான்" தான். இரண்டு வஸ்துக்கள் தென்படும் பொழுது பயம் உதிக்கின்றது. ஏகவஸ்துவாக விளங்கும் பொழுது எதைக்கண்டு எது பயப்படுவது? 'ஒருவரையொருவர் நேசியுங்கள்' என்ற உத்தமவாக்கியத்தை நாம் அடிக்கடி கேள்விப்படுகிறோம். ஏன் நேசிக்கவேண்டும்? மற்றவர்களும் நாமும் 'நான்' தான். பிபீலிகாதி பிரம்மபரியந்தம் "நான்" தான். இத்தகைய வேதாந்த நீதியை நாம் சிரவண மனந நிதித்தியாசனாதிகளால் ஜனசமூகத்தில் அநுபவத்திற் கொண்டுவருவோமாயின் அன்பாகிய வெள்ளம் கரைபுரண்டு பெருக்கெடுத்து அனைவரையும் ஆநந்த சாகரத்தில் கொண்டுசென்று சேர்ப்பிக்கும் என்பதில் ஐயமுண்டோ?

ஆதலால் 'நான்' என்பதைப்பற்றியுள்ள ஆராய்ச்சியே வித்தையாகும். மற்றவையெல்லாம் அவித்தையே. மாந்தர் சாதாரண

மாகச் சம்பாஷிக்கும் பொழுதெல்லாம் 'நான்' என்ற பதமே மிஞ்சி நிற்கின்றது. மனம், வாக்கு, காயம் ஆகிய திரிகரணங்களிலும் சதா நிறைந்து விளங்குகின்ற 'நான்' என்பதன் லட்சணத்தை ஆராய்ந்து அறியாமல் பிறவஸ்துக்களை நாம் ஆராய்ச்சி செய்கின்றோம். தன்னுடைய சொந்தஸ்திதியையே அறியாமல் பிறவற்றின் ஸ்திதிகளை அறிபவனும் அறிய முயற்சிப்பவனும் பித்தனென்றே பெரியோர் கூறுகின்றனர். "நான்" என்பது பஹிரங்கமாயெல்லோரும் அறிந்ததாயினும், "நான்" என்பதைப்பற்றியுள்ள அறிவோ எவரும் அறியாத இரகஸ்யமாயிருக்கின்றது. "நான்" என்பதே பஹிரங்க இரகஸ்யம்.

சிவம்.

## ஸ்ரீமத் விவேகாநந்த ஸ்வாமிகள் எழுதிய ஒருகடிதத்தின் மொழிபெயர்ப்பு.

யோகஹாமா

அரிய— 10-7-1893.

எனது நடவடிக்கைகளைப்பற்றி தங்களுக்கு யான் அறிவிக்காமலிருப்பதற்காக மன்னிக்கவும்.

அடுத்த ஊர் பினாங்கு. இது மலேயதீபகற்பத்தில் கடலோரமாயுள்ள பூமியின் ஒரு பாகம். மலேயர்களெல்லாரும் மகம்மதியர்கள். இவர்கள் பூர்வகாலங்களில் வியாபாரிகட்கு மிக்க பயங்கரத்தை உண்டு பண்ணிப் பெயர் பெற்ற கடற்கொள்ளைக்காரர்களாயிருந்தனர். ஆனால் தற்கால யுத்தக்கப்பல்களின் பயங்கரமான பீரங்கிகள் மலேயர்களை மிகவும் சாந்தமான தொழில்களில் பிரவேசிக்கச்செய்து விட்டன. பினாங்கிலிருந்து சிங்கப்பூர் போகும் மார்க்கத்தில், நாங்கள் உயர்ந்த மலைகளுடன் விளங்குகிற சுமாத்திரா தீவைக் கண்ணுற்றோம்; கப்பலின் தளகர்த்தர் ஆதிகாலங்களில் கடற்கொள்ளைக்காரர்களின் பிரியமான வாசஸ்தலங்களெனச் சில இடங்களை எனக்குக் காண்பித்தார். சிங்கப்பூர் ஸ்ட்ரெயிட்ஸ் ஸெடில்மெண்ட்ஸ் என்று சொல்லப்படுகிற பிரதேசத்தின் ராஜதானியாகும். கமுகு முதலிய அழகிய விருட்சங்களடர்ந்த ஒரு நேர்த்தியான தோட்டம் அங்கு இருக்கிறது. (Traveller's



palm) என்ற அழகிய விசிறி போன்ற மரம் இங்கு ஏராளமாய் வளர்கிறது; (Bread-fruit) மரமும் மிகவும் அதிகம்.

இங்குள்ள ஜனங்கள் சென்னைவாசிகளவ்வளவு கறுப்பு அல்லாவிடினும், சிறிது கறுப்புத்தான். சிங்கப்பூரில் ஒரு நேர்த்தியான காட்சிச்சாலையும் இருக்கிறது.

அடுத்தது ஹாங்காங். சீனதேயத்தை அடைந்து விட்டதாக நீங்கள் உணர்வீர்கள். சீனதேசத்துப் பாவனைகள் அவ்வளவு அதிகம். வேலையெல்லாம், வியாபாரமெல்லாம் அவர்கள் கையில் இருப்பதாகத் தோன்றுகின்றது. ஹாங்காங் உண்மையான சீனதேசம் தான். கப்பல் நங்கூரம் போட்டவுடன், நூற்றுக்கணக்கான சீனப்படகுகள் உங்களைக் கரையிற்கொண்டு போய்ச்சேர்ப்பதற்கு உங்களைச் சுற்றிவளைந்து கொள்கின்றன. இரண்டு சுக்கான்களுடன் கூடிய இப்படகுகள் ஒரு மாதிரி வியக்கத்தக்கவையே. படகுக்காரன் படகிலேயே தனது குடும்பத்துடன் வசிக்கிறான். கைகளினால் ஒன்றையும் ஒரு பாதத்தினால் மற்றொன்றையும் சமாளித்துக்கொண்டு அநேகமாய் எப்பொழுதும் சுக்கான்களில் இருப்பவள் மனைவிதான். இந்த ஸ்திரீகளில் அநேகமாய் ஒவ்வொருவருடைய முதுகைச் சேர்த்து ஒரு சிறுகுழந்தை கட்டியிருப்பதையும் அந்தச்சிறிய சீனனுடைய கைகளும் கால்களும் ஸ்வதந்திரமாய்விடப்பட்டிருப்பதையும் நீங்கள் பார்க்கலாம். அவள் மிகப்பாரமான மூட்டைகளைத் தள்ளிக்கொண்டும் அத்தியாச்சரிய சாமர்த்தியத்துடன் படகுக்குப் படகு தாவிக்கொண்டுமிருக்க, சிறிய சீனன் தனது தாயாருடைய முதுகில் மிகவும் அமைதியாய் அசைந்து ஆடிக்கொண்டிருப்பது பார்ப்பதற்கு அற்புதக்காட்சியாயிருக்கிறது.

குழந்தை சீனன் தனது சிறியதலை உடைந்து தூளாகப் போகும்படியான ஆபத்திற்குள் ஒவ்வொரு நிமிஷமும் அகப்பட்டுக்கொள்கிறான்; ஆனால் அவன் அதை சிறிதும் லட்சியம் செய்வதில்லை. இந்தச் சுறுசுறுப்பான ஜீவிதத்தில் அவனுக்கு பிரமையில்லையென்று தோன்றுகிறது; பைத்தியம் பிடித்ததுபோல் சுறுசுறுப்பாயுள்ள தாயாரினால் அவ்வப்பொழுது கொடுக்கப்படுகிற ஒரு துண்டு ரொட்டியைப் பகுத்துப்பார்ப்பதில் அவன் மிகவும் திருப்தியடைந்துள்ளான். சீனக்குழந்தை உண்மையான ஒ

தத்துவ ஞானிதான்; உங்களது இந்தியச் சிறுவன் நான்குகால்களாலும் தவழ்வதற்குக்கூட முடியாமலிருக்கும் வயதில், சிறிய சீனன் அமைதியாய் வேலை செய்யப்போகிறான். அவன் ஆவசியகத்தைப் பற்றியுள்ள ஞானத்தை அளவுக்குமிஞ்சி அறிந்திருக்கிறான். சீனர்களும் இந்தியர்களும் விருத்தியடையாத நாகரீகத்தில் இருந்து வருவதற்குக் காரணம், அவர்களுடைய கொடிய வறுமையேயாகும். ஒரு சாதாரண ஹிந்துவுக்காவது சீனனுக்காவது, அவன் வேறொன்றையும் நினைக்க முடியாதபடி அவனது தினசரி ஆவசியகம் அவ்வளவு பயங்கரமாயிருக்கிறது.

ஹாங்காங் மிகவும் அழகிய ஒரு பட்டணம். அது குன்றுகளின் சார்புகளில் கட்டப்பட்டிருக்கிறது; குன்றுகளின் உச்சிகள் நகரத்தைவிட அதிகம் குளிர்ச்சியாயிருக்கின்றன. குன்றின் உச்சிக்குப்போவதற்கு அநேகமாய்ச் செங்குத்தான ஒரு டிராம்வேயிருக்கிறது; டிராம் வண்டி கம்பிக்கயிற்றினாலும் நீராவிச் சக்தியினாலும் இழுக்கப்படுகிறது.

நாங்கள் ஹாங்காங்கில் மூன்று நாள் தங்கிவிட்டு ஒரு ஆற்றுக்கப்பால் 80 மைல் தூரத்திலுள்ள காண்டன் என்னும் பட்டணத்தைப் பார்க்கப்போனோம். ஆ! எத்தகைய சுறுசுறுப்பான காட்சி! ஜலத்தை அநேகமாய் மூடிக்கொண்டு எத்தனை எண்ணற்ற படகுகள்! வியாபாரம் செய்கிற படகுகள் மாத்திரம் அல்ல, வீடுகள்போல் வசிப்பதற்கு உபயோகப்படுத்தப்பட்டுள்ள நூற்றுக்கணக்கான படகுகளும் இருக்கின்றன. அவைகளில் அநேகம் எவ்வளவு பெரியன! உண்மையாக அவைகள் சுற்றிலும் தாழ்வாரங்களுடனும் இடையில் தெருக்களுடனும் எல்லாம் மிதந்துகொண்டுமுள்ள இரண்டு மூன்று மாடிகள் உயரமான வீடுகள் தான்!

சீனத்துரைத்தனத்தாரால் அந்நியர்களுக்கு வசிப்பதற்குக் கொடுக்கப்பட்ட ஒரு துண்டு பூமியில் நாங்கள் இறங்கினோம். எங்களைச் சுற்றி நதியின் இருபக்கங்களிலும் எத்தனையோ மைல் விஸ்தாரமாய் இந்தப் பெரிய பட்டணம் இருக்கிறது. துடிக்கொண்டும், ஆடிக்கொண்டும் தள்ளிக்கொண்டும் சப்தமிட்டுக்கொண்டும் உள்ள மானிட ராசிகளின் ஒரு காடு! ஆனால் இவ்வளவு ஜனத்தொகை இருந்தபோதிலும் இவ்வளவு



சுறுசுறுப்பு இருந்தபோதிலும் நான் பார்த்த மட்டில் அழுக்கு நிறைந்த பட்டணம் இது தான்; அழுக்கு நிறைந்த பட்டணம் என்றால் இந்தியாவில் பொருள்படும் அர்த்தத்தில் அன்று; ஏனென்றால் அழுக்கில் அணுவளவாவது வீணாய்ப் போகும்படி சீனர்கள் விடுவதேயில்லை. சீனன், ஸ்நாநம் செய்வதில்லையென்ற விரதம் அநுஷ்டிக்கிறான்போல் தோன்றுகிறது. ஒவ்வொரு வீடும் ஒரு கடைதான்; ஜனங்கள் மேற்றரையில் வசிக்கின்றனர். தெருக்கள் மிக மிக நெருக்கமாயிருக்கின்றன; நீங்கள் செல்லும் பொழுது இருபக்கங்களிலுமுள்ள கடைகளை அநேகமாய் தொட்டு விடுவீர்கள். கசாப்புக்கடைகளைப் பத்து அடி தூரத்திற்கு ஒருதரம் காணலாம்; நாய் மாமிசம், பூனைமாமிசம் இவைகள் விற்கப்படுகிற கடைகளும் இருக்கின்றன. சீன ஜனங்களில் எளியவகுப்பார் மாத்திரம் நாயை அல்லது பூனையைத் தின்கிறார்கள். சீனஸ்திரீயை ஒரு பொழுதும் பார்க்க முடியாது. வட இந்தியாவிலுள்ள ஹிந்துக்களைப்போலவே அவர்களுக்கும் கண்டிப்பான அந்தப்புரங்கள் உண்டு; வேலை செய்யும் வகுப்பினருடைய ஸ்திரீகள் தான் காணப்படலாம். உங்களுடைய மிகவும் சிறிய குழந்தைகளுடைய பாதங்களினும் சிறிய பாதங்களையுடைய ஸ்திரீயை இவர்களுக்குள்ளும் அடிக்கடி பார்க்கலாம்; அவர்கள் தத்தித்தத்தி நடக்கிறார்கள்.

நான் சீனக்கோயில்களிற் சிலவற்றைப்பார்க்கச் சென்றேன். காண்டன் என்னும் பட்டணத்திலுள்ள மிகப்பெரிய கோவில் முதற்புத்த சக்கரவர்த்தியின் ஞாபகார்த்தமாயும் புத்தமதத்தின் ஐந்நூறு முதற் சிஷ்யர்களின் ஞாபகார்த்தமாயும் சமர்ப்பிக்கப்பட்டிருக்கிறது. மத்தியிலுள்ள உருவம் புத்தர்தான்; அவருக்குப்பக்கத்தில் கீழே சக்கரவர்த்தி உட்காரவைக்கப் பட்டிருக்கிறான்; சிஷ்யர்களின் உருவச்சிலைகள் மரத்திலிருந்து வெகு அழகாகச் செதுக்கப்பட்டு, இருபக்கங்களிலும் வரிசையாய்வைக்கப் பட்டிருக்கின்றன.

காண்டனிலிருந்து மறுபடியும் ஹாங்காங்; அங்கிருந்து ஜப்பான். நாங்கள் இறங்கின முதலாவது துறைமுகம் நாகசாக்கி. சில மணி நேரம் இறங்கி பட்டணத்திற்குச் சென்றோம். என்ன எதிரிடை! பூலோகத்திலுள்ள சுத்தமான ஜனங்களில் ஜப்பானியர் ஒருவர். ஒவ்வொன்றும் சுத்தமாயும் அழகாயும் இருக்கின்றது.

அவர்களுடைய தெருக்கள் ஏறக்குறைய எல்லாம் அகலமாயும் நேராயும் ஒழுங்காய்ச் செப்பனிடப்பட்டவையாயும் இருக்கின்றன. அவர்களுடைய சிறு வீடுகள் கூண்டுகள் போலிருக்கின்றன. பச்சைப்பசேலென்று எப்பொழுதும் மரங்கள், செடிகளால் நிறைந்த குன்றுகள் ஒவ்வொரு கிராமத்திற்கும் ஒவ்வொரு பட்டணத்திற்கும் பக்கத்தில் இருக்கின்றன. குள்ளர்களாகிய விநோத உடைதரித்த அழகிய ஜப்பானியர்கள், அவர்களுடைய நடையுடை பாவனைகள், ஒவ்வொன்றும் மனோரம்மியமாயிருக்கின்றன. ஜப்பான் கண் காட்சிக்கேற்ற மனோரம்மிய பூமியே! ஒவ்வொரு வீட்டுக்கும் பின்புறத்தில் ஒரு தோட்டம் உண்டு; அந்தத் தோட்டத்தில் ஜப்பானியர்களுடைய பாவனைரீதியில் சிறு செடிகளும், புற்றரைகளும், சிறு ஜலகட்டங்களும், சிறிய கற்பாலங்களும் வெகு நேர்த்தியாக இருக்கின்றன.

நாகசாக்கியிலிருந்து கோப் என்ற பட்டணத்திற்குச் சென்றோம். இங்கே நான் கப்பலை விட்டு விட்டு, ஜப்பான் தேசத்தின் உள் நாட்டைப்பார்க்க வேண்டுமென்ற கருத்துடன் யோகோஹாமாவிற்குத் தரைவழியாய்ச் சென்றேன்.

உள் நாடுகளில் ஒரு பெரிய வியாபாரஸ்தலமாகிய ஒசாக்கா, பழைய ராஜதானியாகிய கயாட்டோ, புதிய ராஜதானியாகிய டோக்கியோ ஆகிய இம்மூன்று பட்டணங்களையும் பார்த்தேன். டோக்கியோ கல்கத்தாவைவிட இருமடங்கு பெரிதும் இரட்டிப்பு ஜனத்தொகையுள்ளதுமாம்.

அந்நியர் எவரும் அநுமதிச் சீட்டு இன்றி உள் நாடுகளில் யாத்திரை செய்யக்கூடாது.

ஜப்பானியர்கள் தற்கால ஆவசியகத்திற்குத் தக்கவாறு நன்றாய் விழித்துக்கொண்டு விட்டார்கள் என்று தோன்றுகிறது. அவர்கள் பீரங்கிகளுடன் ஒழுங்குபடுத்தப்பெற்ற ஒரு சைந்நியம் வைத்திருக்கின்றனர். இப்பீரங்கிகளை அவர்களுடைய உத்தியோகஸ்தர்களில் ஒருவரே கண்டு பிடித்திருக்கின்றனர். இப்பீரங்கிகளினும் உயர்ந்தவை எங்கும் இல்லையாம். இன்னும் அவர்கள் அடிக்கடி கடற்படையைப் பெருக்கிக்கொண்டு வருகின்றனர். ஒரு ஜப்பானிய இஞ்சினீயரால் குடையப்பட்ட சுமார் ஒருமைல் நீளமுள்ள ஒரு திறப்பை(Tunnel) ப்பார்த்தேன்.

(தொடரும்)

## பகவத்கீதை.

சாஸ்வதி என்னும் நமது நேயர் எழுதியது.

### இரண்டாம் அத்தியாயம்.

ஸஞ்ஜயன் சொல்லுகின்றான்.

(1) அங்ஙனம், இரக்கம் நிரம்பியவனும், நீர் நிறைந்த துன்பக் கண்களுடையவனும், ஏக்கமடைந்து நின்ற அவனை (அர்ஜுனனை) நோக்கி மதுஸூதனன் இந்த வாக்கியம் சொல்லினன்.

பகவான் சொல்லுகிறார்.

(2) எங்கிருந்தடா உனக்கு (இப்படிப்பட்ட) விஷம (நேர)த்தில் இந்த மனத்தளர்ச்சி ஏற்பட்டது - ஆர்யஜாதிக்குத்தகாதது, இன்பவாழ்வைத் தடுப்பது, புகழை அழிப்பது?

(3) பார்த்தா! பேடியாகிவிடாதே; உனக்கு இது பொருந்தாது. நீசத்தன்மைகொண்ட உள்ளச்சோர்வை ஒழித்து, பரந்தபனே! எழுந்து நில்.

அர்ஜுனன் சொல்கிறான்.

(4) ஏ, மதுஸூதனா! பகைவரை யழிப்போனே! பூஜை செய்யத் தகுந்தோராகிய பீஷ்மரையும், துரோணனையும் நான் அம்புகளுடன் எதிர்த்து எங்ஙனம் போராடுவேன்?

(5) மஹானுபாவராகிய குருக்களைக் கொல்லாமல் விட்டு, (அதனால்) இவ்வுலகத்தில் பிச்சையெடுத்து உண்பதும் நன்றேயாம். பொருளாசைகொண்ட குருக்களை இங்கு கொல்வேனாயின், பிறகு நான் துய்க்கும் இன்பங்கள் இரத்தக் கறை பட்டனவாகுமன்றோ?

(6) மேலும், நாம் அவர்களை வெல்வதா, அவர்கள் நம்மை வெல்வதா,—இவ்விரண்டில் எது நிச்சயமென்பது தெரியவில்லை. எவர்களைக் கொன்று விட்டு அதன் பின் உயிர்தரித்திருக்கமாட்டோமோ அப்படிப்பட்ட திருதராஷ்டிரன் கூட்டத்தார்போர் முகத்து வந்து நிற்கிறார்கள்.

(7) உள்ளச் சிறுமை கொண்ட இயல்பினனும், அறத்தை மறந்த சித்த முடையவனுமாகி, உன்னைக் கேட்கிறேன். எது நன்

றென்பதை உறுதியாக எனக்குச் சொல்லிவிடு. உனக்கு நான் மாணாக்கன். உன்னை வழிபட்ட எனக்கு அருள்புரிக.

(8) பூமியில் எதிரிகளற்ற, செழித்த அரசு பெற்றாலும் தேவர்களின் தலைமைபெற்றாலும், பின்பு பந்து நாசத்தாலின்னையும், புலன்களைச்சுடுந்தன்மை கொண்ட துயரத்தை எங்ஙனம் மாற்றுவதென்பது தெரியவில்லை.

ஸஞ்ஜயன் சொல்லுகிறான்.

(9) இங்ஙனம் எதிரிகளைச் சுடுபவனும், உறக்கத்தை வென்றவனுமாகிய பார்த்தன் கோவிந்தனிடம் சொல்லிவிட்டு, "நான் போர்செய்யமாட்டேன்" என்று பின்வெறுமே யிருந்து விட்டான்.

(10) பரதநாட்டுத் தலைவனே! இரண்டு படைகளுக்குமிடையே (அங்ஙனம்) துயரப்பட்டு நின்ற பார்த்தனைநோக்கிக் கண்ணன் புன்னகையுடன் சொல்லுகிறான்.

பகவான் சொல்லுகிறார்.

(11) துயரப் படத் தகாதவர் பொருட்டாகத் துயரப்படுகிறாய்! ஞானவாதங்கள் வேறே செய்கின்றாய்! இறந்தவர்பொருட்டேனும், இறக்காதவர் பொருட்டேனும் பண்டிதர் சோகப்படுவதில்லை.

(12) எப்போதும் நான் இல்லாதிருந்த தில்லை; நீயும் இங்குள்ள மற்றெல்லா அரசரும் அப்படியே. நாமெல்லோரும் இனி எப்போதேனும் அழியப்போவது மில்லை.

(13) இந்த உடலில் எப்படிக் குழந்தைப் பருவமும் இளமையும், முதுமையும் உண்டாகுமோ அதுபோலவே தான் ஆத்மாவுக்கு வேறுடல் கிடைப்பதுவும். தீரன் (அறிஞன்) அதில் மயக்கமடைவதில்லை.

(14) குந்தி மகனே! குளிர்ச்சி, வெம்மை, இன்பம், துன்பம், இவற்றைத் தருகின்ற பூதவுலகத்தின் அநுபவங்கள் (பூதமாத்திரைகளின் ஸ்பரிசங்கள்) தோன்றிக் கெடுவன; நிலையற்றன. பாரதனே! அவற்றைப் பொறுத்திடுக.

(15) புருஷரேறே! இவற்றால் (இந்த பூதமாத்ராஸ்பர்சங்களால்) தொல்லைப்படுத்தப் படாமல் இன்பத்தையும், துன்பத்



தையும் ஒன்றுபோலக்காண வல்ல தீரனே அமிர்த நிலைக்குத் தகுதியுடையவனாகின்றான்.

(16) இல்லாதது, (என்றும்)உளதாகாது. உள்ளது இல்லாததாகாது. உண்மையறிந்தோர் இவ்விரண்டிற்கும் முடிவு கண்டுளர்.

(17) இஃதனைத்திலும் (தோன்றும் பொருள்களனைத்திலும்) நிரம்பியிருக்கும் அதனை அழிவற்றதாகத் தெரிந்து கொள். மாறுதலற்றதாகிய இதற்கு அழிவுசெய்தல்யாராலும் முடியாது.

(18) என்றுமுள்ளது, அழிவற்றது, அளவிடப்படாதது,—ஆகிய ஆத்மாவின் இந்த உடலங்களெல்லாம் முடிவுடையன. ஆதலால், பாரதனே! போர்செய்க.

(19) இதனை எவன் கொல்வோனாக அறிகிறானோ, எவன் இதனைக் கொல்லப் படுவோனாகக் கருதுகிறானோ, இவ்விருவரும் அறியாதார். இஃது (ஆத்மா) கொல்வதுமில்லை, கொல்லப்படுவதுமில்லை.

(20) இஃது பிறப்பதில்லை; எப்போதும் இறப்பதுமில்லை; இருந்து பின் இல்லாமற் போவது மில்லை; பிறப்பற்றது, என்றுமுளது, நிலைத்தது, பழமையானது; உடலைக் கொல்லும் போது இது சாவதில்லை.

(21) நாசமற்றது, நித்யமானது, பிறவாதது, மாறாதது,—ஆகிய இவ்வாத்மாவை அறிந்தவன் பின் எங்ஙனம் யாரைக் கொல்விப்பது? யாரைக் கொல்வது?

(22) நொய்ந்து போன ஆடைகளைக் கழித்து விட்டுமனிதன் எப்படி வேறு புதியன கொள்ளுகிறானோ அது போலவே ஆத்மா நொய்ந்து போன உடல்களைக் கழித்து விட்டு வேறு புதியனவற்றுள்ளே செல்லுகின்றது.

(23) இதைப் படைகள் வெட்டுவதில்லை. தீ இதை எரிக்காது. நீர் இதை நனைக்கமாட்டாது. காற்றும் உலர்த்தாது.

(24) இது பிளவுண்ணாது, எரியாது, நனையாது, உலராது. இது நித்யம்; அனைத்திலுமிருப்பது; நிலைத்தது; அசையாதது; எக்காலத்துமிருப்பது.

(25) இஃது மறைந்து நிற்பது; கருதொணாதது; திரிபில்லாதது; இதனை இங்ஙனமாகத் தெரிந்துகொண்டு நீ துயரப்படாமலிருத்தல் தகும்.

(26) இங்ஙனமின்றி, நீ இதை நித்த நித்தம் பிறந்து, நித்த நித்தம் சாவதோர் பொருளாகக் கொண்டபோதிலும், பெருந் தோளினாய்! நீ இவ்வாறு துயரப்படுதல் தகாது.

[பொது வ்யாக்யானம்:—ஆத்மா என்னும் வடமொழிக்குத் "தான்" என்பதுபொருள் இச்சொல்லின் குறிப்பை எவரும் சிறிது ஆலோசனை செய்து தெரிந்துகொள்ளுதல் எளிதாயினும், எழுத்தால் தெளிவுபட விளக்குதல் அரிது. எனினும், ஓர் பொருளின் நிஜவடிவமே அதன் ஆத்மா என்று பொதுப்படையாகக் கூறுதல் ஒருவாறுபொருந்தும். வேஷ்டிக்குப் பஞ்சு ஆத்மா, பஞ்சுக்குப் பஞ்சு பூத அணுக்கள் ஆத்மா, கதவுக்கு மரம்ஆத்மா, மரத்துக்குக் "கார்பன்" (Carbon) என்று ஐரோப்பியர் கூறும் மூலவஸ்து ஆத்மா, அதற்கு அணுக்கள் ஆத்மா, இங்ஙனமே எல்லாவற்றிற்கும் கொள்க. இனி, எல்லாப் பொருள்களுக்கும் மூலமாகிய 'பரமாத்மா' வையே கீதை 'ஆத்மா' என்கிறது. ஸகல உயிர்களுக்கும், சித்தங்களுக்கும், ஸூக்ஷ்ம வஸ்துக்களுக்கும், ஸ்தூல வஸ்துக்களுக்கும், ஆதி வடிவமாகிய "ஆத்மா" ஒன்றென்பது கீதையின் கொள்கை. இந்த ஆத்மாவுக்கு ஸூர்யன், சந்திரன், நக்ஷத்திரங்கள், கடல்கள், மலைகள், மனிதர், மற்ற ஜீவராசிகள், இன்னும் பலவகையாகக் காணப்படும் ஸ்தூல ஸூக்ஷ்மவஸ்துக்கள், இவற்றுள் ஒவ்வொன்றும் தனித்தனியான உடல். இவ்வுடல்கள் பழமைப்பட்டு தொய்ந்து போனவுடனே அவற்றை எறிந்துவிட்டு ஆத்மா புதிய உடல்கள் கொள்ளுகிறது. அந்த ஆத்மா நித்யமாய், எங்கும் எல்லாவற்றிலும் நிரம்பியதாய், அழிவற்றதாய், திரிபற்றதாய், விளங்குவது-இது வேதாந்தக்கொள்கை. இதை நம்புவோன் தனது மரணத்திற் கேனும், பிறர் மரணத்துக் கேனும் துயரப்படுதல் பேதைமை யென்று கீதாசாரியர் கூறுகின்றார். இக்கொள்கையை விட்டு "ஒவ்வொரு பொருளின் ஆத்மாவும் அப்பொருள் தோன்றும் போது தோன்றி அழியும் போது அழிகிறது, எல்லாவற்றிலும் ஒன்றாய் நித்தியமானதோர் பரமாத்மா இல்லை" யென்னும் நாஸ்திகக் கொள்கையுடையவர் கூட மரணத்திற்கு நெஞ்சழிவது மடமை யென்பதை கீதை வற்புறுத்திக் காட்டுகிறது. பரமாத்மா உண்டெனினும், இல்லையெனினும் தோன்றுவதெல்லாம் அழிவது இயற்கைவிதியெனக் கண்டவன் மரணத்துக்கு வருந்துதல் பெருமடமையன்றோ?]



(27) பிறந்தது சாதல் திண்ணம். செத்தது பிறத்தலும் திண்ணம். ஆகையால், தடுக்க முடியாத செய்தியொன்றிலே, நீ துயரப்படுதல் தகாது.

(28) வஸ்துக்களின் தொடக்கம் தெரிவதில்லை. நடு தெளிவாகத்தெரியும். முடிவு தெரியாது. இதில் வருந்துவதேன்?

(29) இதனை (ஆத்மாவை) யாரோ ஒருவன் வியப்புப்போலக் காண்கிறான். பின்னுமொருவன் அங்ஙனமே வியப்பெனச் சொல்லுகின்றான். மற்றொருவன் இதை வியப்பெனக் கேட்கின்றான். கேட்பினும் இதை யறிவோர் யாருமில்லை.

(30) எல்லாப் பொருள்களின் உடல்களிலுமுள்ள இந்த ஆத்மா எப்போதும் கொல்லப் படாதது. ஆதலால் எல்லா வஸ்துக்களுக்குமே நீ, துயரப்படுதல் தகாது.

(31) ஸ்வதர்மத்தைக் (தன்-கடமையை) கருதுமிடத்தும், நினது நடுக்கம் தகாததேயாம்; மறவனுக்கு ( க்ஷத்ரியனுக்கு ) அறப் போரைக்காட்டிலும் உயர்ந்தநன்மைவேறொன்றுமேயில்லை.

(32) தானேவந்து விளைந்திருப்பதும், திறந்து வைத்த சொர்க்க வாயில் போன்றது மான, இவ்வகைப்போர் கிடைக்கப் பெறும் மறவர் இன்பப் பேறுடையார்.

(33) இனி இந்த அறம்வாய்ந்த போரினை நீ செய்யமாட்டாயெனில், ஸ்வதர்மத்தை (தன் - கடமையை)யும் கீர்த்தியையும் அழித்து விட்டுப் பாவமெய்துவாய்.

(34) உலகத்தார் நினக்குத் தீராத வசை கூறுவர். நன்கு மதிக்கப்பட்ட ஒருவனுக்கு வசையானது சாதலைக் காட்டிலும் கழிவுற்றதாகும்.

(35) போரினின்றும் அச்சத்தால் நீங்கியவனென்று நின்னை மஹாரதர் கருதுவர். அவர்களுடைய பெரு மதிப்புக்கிடமாயிருந்த நீ (இனி) எளிமை யெய்தி விடுவாய்.

(36) நினது பகைவர் நின் திறமையைப் பழித்துச் சொல்லத்தகாத மொழிகள் பல சொல்லுவர். அதனிலும் துன்பமிக்கது யாது?

(37) செத்தால் சொர்க்க மடைவாய்; வென்றால், நிலமகளை ஆண்டின் புறுவாய். ஆதலால், குந்திமகனே! எழுந்து நில், போர் செய்யத் துணிந்தவனாகி.

(38) இன்பம், துன்பம்; பேறு, இழத்தல்; வெற்றி தோல்வி; இவற்றை நிகராகக் கருதிப் பின் போருக்குத் துணிக. இங்ஙனம் (செய்ய) நினக்குப் பாவம் ஏற்படாது.

(39) இவ்வாறாக நினக்கு ஸாங்க்ய சாஸ்திரப்படி அறிவு காட்டினேன். இனி இதையே யோக வழியிலே கேள். இவ்வறிவுடன் கலப்பாயெனில், பார்த்தா! நீ கர்ம பந்தத்தை (வினைக் கட்டை) அகற்றிவிடலாம்.

(40) இதில் முயற்சிக்கேடு ஒன்றுமில்லை. இதில் தவறில்லை. இந்த தர்மத்தில் சிறிதளவு கூடப் பெரியபயத்தினின்றும் பாதுகாக்கிறது.

(41) குருநந்தனா! முயற்சியில் உறுதி கொண்ட புத்தி ஒரே தன்மையதாயிருக்கும். உறுதியில்லாதாருடைய புத்திகள் பலகிளைகளுடையன, முடிவில்லாமல் சலிப்பன.

(42) பார்த்தா! வேதச் சொல்லிலே பற்றுடையவர்களாய், "இதைத்தவிர வேறொன்றுமில்லை" யென்று பேசிக் கொண்டு, அறிவில்லாதார் இங்ஙனம் (பின்வருமாறு) பூக்கள் புனைந்த வார்த்தை சொல்லுகின்றனர்.

(43) காமாத்மாக்கள் (விருப்பமே யாயினோர்) சொர்க்கபோகத்தையே கதியாகக் கொண்டோர், "கர்மப்பயன் ஜன்மமே" யென்றும் "இன்பத்தையும், தலைமையையும் நாடிப்பலவகைப்பட்ட கிரியைகள் செய்யவேண்டு" மென்றும் (சொல்கின்றனர்.)

(44) இன்பத்திலும், தலைமையிலும் பற்றுடையார், (மேற்கூறப்பட்ட) வார்த்தையினால் கவரப்பட்டநெஞ்சினர், இவர்களுக்கு ஸமாதியில் உறுதி கொண்டு நிற்கும் புத்தி ஏற்படுவதில்லை.

(45) அர்ஜுனா! வேதங்கள் மூன்று குணங்களைப்பற்றிப் பேசுவன. நீ மூன்று குணங்களைக் கடந்து இரட்டைகளினின்றும் பிரிந்தவனாய், எப்போதும் மெய்ம்மையில் நிலைத்தவனாய் யோக க்ஷேமங்களைக் கடந்தவனாய், ஆத்மவானாகி நின்றிடுக.

(தொடரும்)

# சில ஆழ்ந்த தனிமொழிகள்.

பிரம்மஸ்ரீ ஏ. எஸ். கஸ்தூரிரங்கய்யர். பி. ஏ; எல். டி.
அவர்கள் எழுதியது.

**முன்னே பின்னே செத்திருந்தாலன்றோ சுடுகாட்டிற்கு வழிதெரியும்.**

இது வெகுசாதாரணமாக நம்முள் வழங்கும் ஒருதனிமொழி. ஒவ்வொரு ஊரிலும் சுடுகாட்டிற்குப் பிணத்தை எடுத்துப் போக ஒருவழக்கமான வழி ஒன்றிருப்பது வழக்கம். இந்தவழியேதான் எல்லாப்பிணங்களையும் எடுத்துச்செல்லவேண்டும். இது தவறி வேறு வழியாகப் பிணம் கொண்டு போகப்பட்டால் ஊரில் கலகம் உண்டாகிவிடும். புதியமார்க்கத்திலிருக்கும் வீட்டுக்காரர்கள் பிணத்தைத்தடுத்துச் சண்டையிட்டு அதைச்சரியான தெருவழியாகச் செலுத்தமுயலுவர். ஊருக்குப்புதியவர்கள் வீட்டில் ஏதாவது மரணம் ஏற்பட்டுவிட்டால் அவ்வூர்க்காரர்களில் ஒருவனை வரவழைத்துச் சுடுகாட்டிற்குப் போகும்வழியைக்காட்டும்படி ஏற்பாடுசெய்து தான் பிணத்தையெடுக்க முயலவேண்டும். உள்ளூர்க்காரர் சிலருக்குச் சுடுகாட்டிற்கு வழிதெரியாமலிருக்கலாம். அப்படிப்பட்டவரைச் சிலசமயங்களில் விசாரிக்கும்படி நேரிட்டால் அவர்தெரியாது விழிப்பர். அப்பொழுது வழிதெரிந்தவர்களிற்சிலர் விசாரிப்பவர்களை நோக்கி 'முன்னே பின்னே செத்திருந்தாலன்றோ சுடுகாட்டிற்கு வழிதெரியும்அவனுக்கு. நான் காட்டுகிறேன் வாருங்கள்' என்று கூறிச்சகாயம்செய்யப்புகுவதுவழக்கம். இந்தச்சந்தர்ப்பத்தில் வெளிவரும் இந்த சாதாரணத்தனிமொழிக்கு 'அவன் வீட்டில் முன்னேபின்னே யாராவது இறந்திருந்தாலன்றோ அவன்சுடுகாட்டிற்குப் போகும்படி நேர்ந்திருக்கும்; அவனுக்கு அந்தவழி தெரியஇடம் ஏற்பட்டிருக்கும். அவன் அதிர்ஷ்டவான். அந்தக்கஷ்டம் இதுவரையில் அவனுக்கு வந்ததில்லை' என்பது தான்பொருள். இப்படிப் பொருள்கூறுவதில் சந்தர்ப்பத்தை நோக்கி இந்தத்தனிமொழி 'முன்னே பின்னே (அவன் சம்பந்தப்பட்டவர்கள் யாராவது )செத்திருந்தால் அன்றோ (அவனுக்கு) சுடுகாட்டிற்கு வழிதெரியும்' என்று பூரணம் செய்யப்பட்டது.

இத் தனிமொழியில் சிலசொற்கள் தொக்கிநிற்பதே இதன் ஆழ்ந்தகருத்துக்கு முக்கியகாரணமாக விருக்கிறது. முன்வருவி

த்தது போல வருவிக்காது ‘முன்னே (அவன்) செத்திருந்தால் அல்லவா (அவனுக்கு) சுடுகாட்டிற்கு வழி தெரியும்’ என்று வருவித்துக்கூற இதில் இடமுண்டு. இப்படிக்கூறும்பொழுது சாதாரணப்பொருள் பொருந்தாது. இதற்குச்சாதாரணமாகப்பொருள்கூறப் புகுந்தால் ஒன்றும் விளங்காமல் போய்விடும். இதன் உள்ளுறை பொருளே மிகமுக்கியமானது.

இதில் அடங்கியிருக்கும் உட்கருத்து நன்குவிளங்குவதற்கு சாவு, சுடுகாடு ஆகியஇப்பதங்களின் உட்கருத்துக்களை ஆராய்ந்து விட்டாற் போதும். சாவுஎன்பது ஜீவன்தேஹத்தை விட்டுப்போவது. இந்தக்காலங்களில் தேஹத்தில் உணர்ச்சியே இராது. இந்திரியங்கள் விஷயங்களை கிரஹிக்கமாட்டா. ஆகவே சாவுஎன்பதன் உட்கருத்து நான் கர்த்தா போக்தா என்ற ஜீவபாவம் நீங்குவதால் இந்திரியங்கள் வெளிமுகப்பட்டு விஷயங்களை நுகராது அதனதன் கோளகங்களில் லயித்து நிற்பது என்பது பொருள். இக்கருத்தைத்தான் பட்டணத்தாரும்:—

“ஆவிபொடு காயமழிந்தாலும் மேதினியில்
பாவியென்று நாமம்படையாதே—மேவியசீர்
வித்தார முங்கடம்பும் வேண்டாம் மடநெஞ்சே
செத்தாரைப் போலேதிரி.”

என்றபாடலில் குறிப்பித்துள்ளார்.

சாவு என்றபதத்தின் உட்கருத்தையும் செத்தாரைப்போலேதிரிவது எப்படி என்பதையும் வேறுஒர் தனிமொழியின் சம்பந்தமாக எடுத்து விஸ்தரிக்கும்படி வரும்; ஆதலால் இங்கு இதோடு நிறுத்துவோம். இனிச் சுடுகாடு என்பதன் உட்கருத்தை எடுத்துக் கொள்வோம். சுடுகாட்டில் நாமரூபம் முதலிய அற்புத விஷயங்கள் அமைந்திருந்த மானிட தேஹங்கள் எல்லாம் நாமரூபாதிகள் நீங்கி ஒரே ரூபமான பிடிசாம்பலாகிவிட அதையும்காற்று ஒரு மூச்சில் வாரிக்கொண்டு போகத்தக்க நிலையை அடைந்திருக்கும் வெட்டவெளியான இடம். ஆதலால் உள்நாட்டவிஷயத்தில் நாமரூபங்களாகிய பிரபஞ்ச தர்மங்கள் நீங்க அகண்டசச்சிதானந்த ரூபமாகி அந்த உணர்ச்சியும் நழுவி உள்ளது உள்ளபடி ஏற்படத்தயாராக இருக்கும் நிலையைக் குறிக்கும் சுடுகாடு என்னும்பதம். இப்படிப்பட்ட சுடுகாட்டில்தான் சச்சிதானந்த வஸ்து



அநுபவம்ஏற்படும் என்பதைப் பரமசிவன் ஆனந்தத்தாண்டவம் ஆடுமிடம் சுடுகாடு என்று ஆகமங்கள் குறிப்பாக வெளியிடும். விபூதி அதன் வெள்ளைச்சாம்பல் ரூபத்தால், நாமரூபமிழந்து மிஞ்சி, மேல் ஒருமாறுபாட்டிற்கும் இடங்கொடுக்காது நிற்கும் சச்சிதானந்த சாத்விக நிலையை உணர்த்துவதாற்றான் மிகச்சிறப்புடன் கொண்டாடப்பட்டுவருகிறது.

இவ்விரண்டுபதங்களின் உட்பொருள்களையும் நாம் எடுத்துக் கொண்ட தனிமொழியில் பொருத்திப் பார்த்தால் அதன் ஆழ்ந்த கருத்து வெளிப்படும். ‘முன்னே பின்னே ஒருவன் ஜீவபாவம் நீங்கி,வெளிமுகப்படாமல் உள்முகப்பட்டு வெளிப் பிரபஞ்சத்தில் செத்தவன் போலஇருந்தால் அன்றோ அவனுக்கு நாமரூபங்களற்றுக்கேவலம் அகண்டசச்சிதானந்தமாகச்சேஷித்து அந்தஉணர்ச்சியும் நழுவத்தயாராக விருக்கும் மேலான நிலையைச் சென்றணுக ஏற்பட்டுள்ள வழிதெரிய இடமுண்டு. இவ்வண்ணம் செத்தாரைப்போலத் திரியக்கற்றுக்கொள்ளாதவனுக்கு ஆநந்தநடேசர் நடமாடும் தில்லைச்சுடலைக்குப்போய்ச்சேரும் வழி எப்படித்தெரியும்?’ என்ற அற்புத வேதாந்த ரஹஸ்யத்தை அடக்கியுள்ளது இத் தனிமொழி.

## சும்மாயிருத்தலே சுகம். *

ஒரு க்ஷேத்திரத்தில் ஒரு மகான் வசித்து வந்தார். அவர் அக்கோவிலின் ஒரு மூலையில் உட்கார்ந்து கொண்டு அல்லும் பகலும் அந்தர் முகத்தராய் நிஷ்டையிலிருப்பது வழக்கம். மலஜல விசர்ஜ்ஜனத்தின் பொருட்டு மாத்திரம் எழுந்திருப்பாரேயொழிய மற்ற சமயங்களில் அவ்விடத்தை விட்டு அகலார். அவரது மனமானது பகிர்முகத்தில் பரவாமல், அக்கோயிலில் நடக்கும் தடபுடலான உற்சவங்களிலாவது கூட்டம் கூட்டமாக வந்து கொண்டும் போய்க் கொண்டும் இருக்கும் ஸ்திரீகளாலாவது புருஷர்களாலாவது சலனப்படாமல் சத்திய வஸ்துவினிடத்தில் சாந்தம் உற்றிருந்தது. அக்கோவிலின் தர்மகர்த்தா இம்மகானுடைய மகத்துவத்தை அறிந்து, கோவில் மடப்பள்ளியிலிருந்து தினந்தோறும் அவருக்குப் போஜனம் அளிக்கும்படி

* இக்கதை ‘பிரபுத்த பாரதா’விலிருந்து எடுக்கப்பட்டது.

உத்தரவு செய்ததும் தவிர, நாள்தோறும் சாயந்திரம் தான் வீட்டிற்குச் செல்லுமுன் மேற்படி மகாத்துமாவை தர்சனம் செய்து விட்டுச் செல்வார். இங்ஙனம் சில வருஷங்கள் கழிய, புண்ணியசாலியாகிய இந்த தர்மகர்த்தா பரலோகப்பிராப்தியடையவும், இவரது புத்திரன் தர்மகர்த்தா ஸ்தானத்தை வகித்தார். இவரோ தற்கால நாகரீக வித்தியாப்யாசத்தில் பயின்றவர். ஆங்கில பாஷையில் அதி நிபுணர். கீழ் நாட்டாராகிய பாரத புத்திரர்களை மேல் நாட்டு நாகரீகமும் சாஸ்திரங்களுமே கைதூக்கி விடக் காத்திருக்கின்றன வென்றும் நமது முன்னோர்களெல்லாம் மூட சிரோமணிகள் என்றும் சற்றும் பிரயோசன மில்லாமற் பிதற்றித் திரிகின்ற கட்சியாருள் இவரும் ஒருவர். பிதா பரலோகம் செல்லவே, பிதாவின் ஸ்தானத்தை வகித்த புத்திரனே பிதாவின் கொள்கைகளை வகிக்கவில்லை. தந்தையினால் நடத்தப்பட்டு வந்த மாமூல் விஷயங்களையெல்லாம் தனது புத்திக்குத் தக்கவாறு தனயன் சீர்திருத்தம் செய்யத் தொடங்கினன். கோவிலின் ஓர் மூலையில் குந்தியிருந்த மகானைச் சோம்பேறி யென்றிகழ்ந்து, அச்சோம்பேறிக்குச் சோறு கொடுக்கலாகாதென்று கோவில் மடப்பள்ளியில் செய்த உத்தரவு அச்சீர்திருத்தங்களிலொன்று. “சோம்பேறி” யோ இவ்வுத்தரவினால் சோர்ந்தவராகக் காணப்படவில்லை; அமர்ந்திருந்த ஆசனத்தை விட்டு அகன்றவருமன்று. மத்தியான காலத்தில் மாத்திரம் சிறிது நேரம் வெளியிற் சென்று பிச்சை யேற்றுப் புசித்துத் திரும்பி விடுவார். புதிய தர்மகர்த்தாவின் சீர்திருத்தம் இவரைச் சீர்திருத்த முடியவில்லை. ‘சோம்பேறி’ யைச் சுறுசுறுப்பாக்க வெண்ணிய தர்மகர்த்தாவின் தர்மசிந்தை பலிக்கவில்லை. ஆகையால் தர்மகர்த்தாவிற்கு மனம் உடைந்தது; கோபம் கொதித்துப் பொங்கிற்று. உத்தரவின் பலனை யுணராத ‘சோம்பேறி’க்கு உணர்ச்சியுண்டாக்கத் தீர்மானித்தார். ஆங்கிலம் பயின்று அனைவராலும் நன்கு மதிக்கப்பட்டு வருகிற நாகரீக தர்மகர்த்தா கோவில் மூலையைக் குடியாகக் கொண்டு எழுத்தின் வாசனைகூட யில்லாமல் சோற்றாவியற்றுச் சுற்றத் துணையற்று ஆக்கம் அற்றுத் தூக்கம் பிடித்து அவத்தில் காலங்கழிக்கின்ற அச்சோம்பேறி’க்குப் பின் வாங்குவாரோ?

ஒரு நாள் தர்மகர்த்தா அச் “சோம்பேறி”யினிடம் சென்று சிறிதும் வணக்கம் ஒடுக்கம் இன்றி மிக்க அதிகார கம்பீரத்துடன் “ஏ, மூடா! நீ ஏன் யாதொரு வேலையும் செய்யாமல் எப்பொழுதும் தூக்கத்தில் காலங் கழிக்கின்றாய்? வாழ் நாட்களை ஏன் வீண் நாளாக்குகின்றாய்?” எனச் ‘சோம்பேறி’ அவரை உபசரித்து உட்காரும்படி வேண்டினார். தர்மகர்த்தா கீழே உட்கார்ந்தார். ‘சோம்பேறி’ யும் சலன மற்றுத் தூங்கத் தொடங்கினார். பத்து நிமிஷங்கள் கழிந்தன; தர்ம கர்த்தாவின் கேள்விக்குச் ‘சோம்பேறி’ விடை யளித்தா ரில்லை. தர்ம கர்த்தா சுறு சுறுப்பாயிருக்க விரும்பினார்; ‘சோம்பேறி’ சும்மா விருக்க விரும்பினார். தர்மகர்த்தாவின் மனதைப் பதினாயிரம் விஷயங்கள் கவர்ந்தன; அங்குச் சும்மா விற்றிருப்பது அவருக்கு வெகு கஷ்டமாய்விட்டது. போக எழுந்திருந்தார். அப்போது ‘சோம்பேறி’ கண்விழித்துப் பார்த்து அவரை இன்னும் சிறிது நேரம் இருக்க வேண்டினார். தர்ம கர்த்தா அவ் வேண்டுகோட்கு உடன்படும்படி நேர்ந்தது. ஆனால் வெகு நேரம் ஒரே இடத்தில் இருக்க நேர்ந்தபடியால் தர்மகர்த்தாவின் மனம் அமைதி யற்று அல்லற் பட்டது; ‘சோம்பேறி’ யோ சுகமே சும்மாயிருக்கிறார். மறுபடியும் தர்மகர்த்தா போக எழுந்தார். ‘சோம்பேறி’ யோ அவரை இன்னும் சிறிது நேரம் இருக்க வேண்டினார். ஆனால் தர்மகர்த்தா “முடியவே முடியாது. ஒரு நிமை நேரம் கூட இனிமேல் எனக்கு உட்கார்ந்திருக்க முடியாது. எனது அநுபவத்தில் சும்மா யிருத்தலைப் போன்ற கடினமான காரியம் உலகில் ஏதுவும் இல்லை” என்று கூறிவிட்டுச் சென்றார். இங்ஙனம் ‘சோம்பேறி’யின் சூட்சுமத்தை உணர்ந்து சென்ற தர்மகர்த்தா கோவில் மடப்பள்ளியாளரிடத்தில் மேற்படி மகானுக்கு முன்னிலும் இரு மடங்கு போஜனம் கொடுக்கும்படி உடனே உத்தரவு செய்து விட்டு, சுற்றித் திரிபவர்கட்கு ஒரு மடங்கும் சும்மா யிருப்பவர்கட்கு இரு மடங்கும் பிரயோசனம் செய்யற்பாலது என்று அன்று முதல் சும்மா யிருப்பவர்களைத் தேடித் திரிகின்றானாம்.



இச்சிறிய கதையினால் நாம் அறிய வேண்டுவது யாதெனில், மனம் ஒடுங்கி அமைதி யுற்று ஒரு நிலையில் ஸ்திரப்படுதல் மிகக் கஷ்டம் என்பதே. ‘சிந்தையை யடக்கியே சும்மாயிருக்கின்ற திறமரிது’ என்றார் தாயுமானவர். ஆனால் காரியங்கள் எவ்வளவு அரியனவோ அவ்வளவு பெரியன என்பதும் எவ்வளவு கஷ்டமோ அவ்வளவு சுகத்தைத் தரும் என்பதும் சிருஷ்டி நீதியாம். ஆகை

யால் தான் மிகக்கடினமான காரியமாகிய சும்மாவிருத்தல் உத்தம சுகத்தை அளிக்கும் எனப் பொருள்படும்படி தாயுமானவர்

"சும்மா விருக்கச் சுகஞ்சுக மென்று சுருதியெல்லா
மம்மா நிரந்தரஞ்சொல்லவுங் கேட்டு மறிவின்றியே
பெம்மான் மௌனி மொழியையுந் தப்பியென் பேதைமையால்
வெம்மாயக் காட்டி லலைந்தே னந்தோவென் விதிவசமே."

என்று கூறியுள்ளார்.

## ஒளியும் இருளும்.

பிரஹ்ம ஸ்ரீ சி.சுப்பிரமணியபாரதியவர்கள் இயற்றியது.

வான மெங்கும் பரிதியின் சோதி,
மலைகள் மீது பரிதியின் சோதி,
தானை நீர்க்கடல் மீதிலு மாங்கே
தரையின் மீதுந் தருக்களின் மீதும்,
கானகத்திலும் பற்பல ஆற்றின்
கரைகள் மீதும் பரிதியின் சோதி,
மானவன்ற னுளத்தினில் மட்டும்
வந்து நிற்கும் இருளிது வென்னே! (1)

சோதியென்னுங் கரையற்ற வெள்ளம்
தோன்றி யெங்குந் திரைகொண்டு பாய,
சோதியென்னும் பெருங்கடல்—சோதிச்
சூறை—மாசறு சோதியனந்தம்
சோதி யென்னு நிறைவிஃதுலகைச்
சூழ்ந்து நிற்ப, ஒருதனி நெஞ்சம்
சோதியன்ற தோர் சிற்றிருள் சேரக்
குமைந்து சோருங் கொடுமையி தென்னே! (2)

தேமலர்க் கொரமுதன்ன சோதி,
சேர்ந்து புள்ளினம் வாழ்த்திடுஞ் சோதி,
காம முற்று நிலத்தொடு நீருங்
காற்று நன்கு தழுவி நகைத்தே
தாமயங்கி நல் லின்புறுஞ் சோதி,
தரணி முற்றுந் ததும்பி யிருப்ப,
தீமை கொண்ட புலையிருள் சேர்ந்தோர்
சிறிய நெஞ்சந் தியங்குவ தென்னே! (3)



நீர்ச்சுனைக் கண் மின்னுற் றிலக,
நெடிய குன்ற நகைத் தெழில் கொள்ள,
கார்ச்ச டைக்கரு மேகங்க ளெல்லாம்
கனக மொத்துச் சுடர் கொண்டுலாவ,
தேர்ச்சி கொண்டு பல் சாத்திரங் கற்றுந்,
தெளிட்டொணாத நலின்பக் கருவாம்
வேர்ச்சுடர்ப்பர மாண்பொருள் கேட்டும்,
மெலிவோர் நெஞ்சிடை மேவுத லென்னே! (4)

## புத்தகவரவு.

மெய்ஞ்ஞானபோதம்:—இந்நூலாசிரியர் வாரந்தோறும் இச் சென்னையினின்றும் வெளியாகிவரும் 'லோகோபகாரி' என்னும் தமிழ்ப்பத்திரிகையின் ஆசிரியராகிய வித்துவான். கோ. வடிவேலு செட்டியாரவர்கள் ஆவார். தமிழ்ப்பாஷையில் இவருக்குள்ள பாண்டித்தியமும் வேதாந்த விஷயங்களில் இவருக்குள்ள பயிற்சியும் எல்லோரும் அறிந்ததேயாகும். 1911-ம் வருஷத்து 'லோகோபகாரி' பத்திரிகைகளில் முதற் பக்கங்களில் பிரசுரமாகி வந்த அத்தியற்புதமான ஞானவிஷயங்களெல்லாம் ஒருங்குதிரட்டப் பெற்று மெய்ஞ்ஞானபோதம் என்னும் மேன்மையான பெயருடன் இந்நூல் பிரசுரிக்கப்பட்டிருக்கிறது. இலைமறைகாய்போலப் பெரும்பான்மையோருடையபுத்திக்குப் புலப்படாமல் மறைந்து கிடக்கும் அநேக விஷயங்கள் இப்புத்தகத்தில் உயர்ந்த செந்தமிழ் நடையில் உரைக்கப்பட்டுள்ளன. வேதாந்த சாஸ்திரங்களில் விஸ்வாசமும் விருப்பமும் உள்ளவர்களுக்கு இந்நூல் இன்றியமையாததாகும். இதன் விலை அணா 12. வேண்டியவர்கள் சென்னை, கோமளீஸ்வரன்பேட்டை, லோகோபகாரி ஆபீசுக்கு எழுதினால் கிடைக்கும்.

பரதன்:—இச்சிறுபுத்தகம் வரகவி. திரு. அ. சுப்பிரமணியபாரதியவர்களால் எழுதப் பெற்றது. நமது இதிகாசங்களுள் ஒன்றாகிய ராமாயணத்திலிருந்து இக்கதை எடுக்கப்பட்டுள்ளது. பாஷையும் கதையும் படிப்பவர் மனதை ரமிக்கச் செய்கின்றன. சகோதர வாத்ஸல்யத்தின் அருமையையும் பெருமையையும் இப்புஸ்தகத்தை ஒருதரம் படித்தவர்கள் அறிந்துணராம லிரார்கள். ஐரோ

ப்பிய நவீனகங்களை அநுசரித்தும் மொழிபெயர்த்தும் புத்தகங்கள் எழுதி ஆரியநாட்டைப்பாழாக்கும் இக்காலத்தில் நமது பூர்வீக இதிகாசங்களாகிய ராமாயணம் பாரதம் இவைகளிலிருந்து சிறுசிறுகதைகளாக எடுத்து ஜனசமூகத்தின் தற்காலமுன்னேற்றத்திற்கேற்ப எளியஜனங்களும் எளிதில் அறிந்து கொள்ளும்படி எழுதிப்பிரசுரிக்கவேண்டியது தேசாபிமானிகளின்கடமையாகும். இப்புத்தகத்தின் விலை அணா 1. வேண்டியவர்கள் திருவல்லிக்கேணி, ஹைரோட், 32, பாலசுப்பிரமணியன் கம்பெனிக்கு எழுதிப் பெற்றுக்கொள்ளலாம்.

## சமாச்சார குறிப்புகள்.

கல்கத்தாவில் ஆங்கிலபாஷையில் நடைபெறும் அமிர்த பஜார் என்றபத்திரிகை பாரிஸாலில் சதியாலோசனைக்கேஸ் இப்பொழுது நடந்து கொண்டிருக்கும் பொழுதே அக்கேஸைப் பற்றிச்சில அபிப்பிராயங்கள் வெளியிட்டதென்றும் ஆகையால் நியாயஸ்தல நிந்தனைக் குற்றம் செய்ததென்றும் கல்கத்தா ஹைக்கோர்ட்டில் வங்காளக் கவர்ன்மெண்டாரால் அப்பத்திரிகையின்மீது பிரியாது கொண்டுவரப்பட்டது. ஜட்ஜிகள் பத்திரிகையின் மீது சொல்லப்பட்ட குற்றங்கள் ஏற்படவில்லை யென்று, பிரியாதைத் தள்ளிவிட்டனர். இப்பத்திரிகை ஜகத்ஸி ஆஸ்ரமக் கேஸ் விஷயமாக ஏதோசில மிகக் கடுமையாக எழுதிற்று என்று, வங்காளக் கவர்ன்மெண்டார் சென்ற மாதத்திற்றான் அப்பத்திரிகையின் அதிபரிடத்தில் ரூபா 5000 ஜாமீன்வாங்கிக் கொண்டனர். இப்பொழுது இந்தக்கேஸும் கவர்ன்மெண்டாரால் கொண்டுவரப் பட்டது. இவற்றையெல்லாம் யோசிக்குமிடத்து அமிர்தபஜார் பத்திரிகை அரசாங்கத்தாருக்கு அதிருப்தி விளைவித்திருக்கிறதென்று ஊகிக்கிறோம். அப்பத்திரிகையின் அதிபராகிய மோதிலால்கோஸ் என்பவர் இப்பொழுது வங்காளதேயத்தில் கவர்னராயிருக்கும் லார்டு கார்மிகேல் அவர்களாலேயே தேர்ந்தெடுக்கப்பட்டு சென்னைநகரில் சமீபத்தில் நடந்த சுகாதார மகா சபைக்கு அனுப்பப்பட்டார். மேலும் இவர் ஏழைஜனங்களிடத்தில் இரக்கசித்தம் மிகுந்த ஜீவகாருண்ணியர். அரசாங்கத்தாருடைய அதிருப்திக்காற்று இவர்மீது வீச ஆரம்பித்திருக்கிறதைப் பற்றி நாம் ஆச்சரியப்படுகிறோம்.



இந்தியா கவர்ன்மெண்டார் கல்கத்தா சர்வகலாசாலையில் பிரசங்கிகளாக இதுவரையிருந்த மூன்று மேதாவிகளை இனி நியமித்தல் கூடாதென்று சர்வகலாசாலைச் சங்கத்தாருக்கு உத்தரவு அளித்திருக்கின்றனர். காரணம்:—இவர்கள் ராஜீக வியவகாரங்களில் தலையிட்டிருந்தார்கள் என்பதே. ஆனால் இம் மூன்று பெயர்களில் ரஸூல் என்பவர் ஒருவர்தான் ராஜீக வியவகாரங்களில் சிறிது கவனம் செலுத்தியிருந்தவர். அவரும் ராஜபக்தி செழித்த மிதவாதக்கட்சியைச் சேர்ந்தவரே. மற்றிரண்டு பெயர்களும் எப்பொழுது எவ்விடத்தில் எவ்வண்ணம் ராஜாங்கவியவகாரங்களில் தலையிட்டிருந்தனர் என்பது நமக்குப்புலப்படவில்லை. இவ்விஷயமாய்க் கல்கத்தாவில் சிறிதுகலக்கம் உண்டாயிருப்பதுபோலத் தோன்றுகிறது. ராஜதந்திர நிபுணராகிய லார்டு ஹார்டிஞ்சு அவர்கள் இவ்விஷயத்தைப்பற்றித் தீர்க்கமாய்ப் புனராலோசனைசெய்வாரென்று நம்புகிறோம்.

மிஸஸ்பெஸண்டு இங்கு ஹைக்கோர்ட்டில் கொடுத்த முதல் வாக்கு மூலத்தில் தான் மகாராஷ்டிரதேசத்திலுள்ள வாலிபர்களுக்கு அவர்கள் ராஜ்ய விவகாரங்களில் தலையிடல் தகுதியன்று என்று போதனைசெய்ததாகவும் அதனால் அமிதவாதிகள் இவளைப் பல்விதத்திலும்கெடுக்க முயன்றார்களென்றும் இப்பொழுதும் அவர்களுடைய தூண்டுதலினாலேயே இந்தக் கேஸ் கொண்டுவரப்பட்டிருக்கிறதென்றும் கூறினர். ஜட்ஜியவர்கள் இவ்விஷயங்கள் எல்லாம் பிரியாதுக்குச் சம்பந்தமற்றவை யென்றும் விரோத குணம் நிறைந்துள்ளவை யென்றும் கூறி இவ்வாக்கு மூலத்தைத் தள்ளும்படி செய்து வேறுவாக்கு மூலம்கொடுக்கும்படிகேட்டனர். இதையெல்லோரும் அறிவர். இப்பொழுது இங்கிலாந்துக்குச் சென்றிருந்த மிஸஸ்பெஸண்டு வைதீகர்களும் அமிதவாதிகளும் ஒன்றுசேர்ந்து தன்னைக்கெடுத்துவிட எண்ணம் கொண்டுள்ளதாலேயே சென்னை ஹைக்கோர்ட்டில் வியாச்சியம் கொண்டுவரப்பட்டதென்றும் மகாராஷ்டிரதேசத்து வைதீக கோஷ்டியைச்சேர்ந்தவரே ஸ்ரீ திலகரென்றும் வங்காளதேசத்து வைதீககோஷ்டியைச்சேர்ந்தவரே ஸ்ரீ அரவிந்தகோஷ் என்றும் தானும் தன்னுடையபரிவாரங்களும் ஆங்கிலேயரையும் இந்தியரையும் ஒற்றுமைப்படுத்த முயன்று கொண்டிருப்பதாகவும் மற்றும் “கிறிஸ்டி

யன் காமன்வெல்த்" என்றபத்திரிகைக்கு எழுதியுள்ளார். பெற்ற தகப்பன் பித்துப்பிடித்து இவரிடத்தில் பிள்ளைகளைப் பறிகொடுத்துக் கோர்ட்டுகளில் கூக்குரலிட, இவர் புரட்டுகள்செய்து பெற்றோரிடத்தினின்றும் பிள்ளைகளைக் கொள்ளை கொண்டது மன்றியில், தனக்குள்ளராஜபக்தியின் மிகுதியினாலேயே தனக்கு இத்தகையதுன்பங்கள் நேரிடுகின்றன என்று அரசாங்கத்தாரையும் ஆங்கில ஜனங்களையும் ஏமாற்றி மேற்படிவியாஜ்யத்தில் ஜயத்தை விரும்புவது அன்னோருக்கழகன்று. இவர்வார்த்தைகளைக் கவனித்தால், இவர் இல்லாவிடில் ஆங்கிலராஜாங்கமே நிலைக்காது போலும்! ஒருகிராமத்தில் இருந்த ஒருகிழவி தன் சேவல் கூவுகிறதினாலேயே பொழுது விடிகிறதென்று நினைத்துக் கொண்டிருந்தாளென்றும், அவளை ஓர்நாள் சிலபையன்கள் தொந்தரவு செய்யும்படி நேரிட அவள் 'இவ்வளவு அக்கிரமமா இந்தஊர்ப்பையன்களுக்கு? பொழுது விடிகிறதைப் பார்க்கிறேன்' என்று சபதங் கூறித் தன் சேவலை எடுத்துக்கொண்டு அடுத்தகிராமத்திற்குச் சென்று விட்டாள் என்றும் பின்னர் தன்சேவல் இல்லாவிடினும் பொழுது விடிகிறது என்றுகேட்டு வெட்கினாள் என்றும் ஒருகதை உண்டு. அது போல உள்ளது அன்னிபெஸண்டின் எண்ணம்.

சென்ற பத்திரிகையில் ரெயில்வே வேலை நிறுத்தத்தைக் குறித்துப் பிரஸ்தாபித்திருந்தோம். இப்பொழுது ரெயில்வேக் கம்பெனியாரே ஜயித்துவிட்டனர். வேலை நிறுத்தம் செய்த வேலையாட்களில் மிக்கவரும் அவமானங்கட்கும் அபராதங்கட்கும் உட்படுத்தப்பட்டு மறுபடியும் வேலையிற் சேர்த்துக் கொள்ளப்பட்டிருக்கின்றனராம். ரெயில்வே வேலைக்காரர்களின் அமல்கமேட்டட் சபையார் வேலையாட்களையெல்லாம் வேலை நிறுத்தம் செய்யும்படி தூண்டிவிட்டு அவர்களுடைய உணவுக்கு வேண்டிய உதவிகள் செய்யாமல் ஏமாற்றிவிட்டார்களென்று சிலபத்திரிகைகள் கூறுகின்றன. இது எம்மட்டும் உண்மையோ, யாம் அறியோம்.

OFFICE OF THE ... MADR

ஞானபாநு.

VOL - I. தொகுதி - க. | AUGUST 1913. பிரமாதீச ஹு ஆவணிமீ | NO - 5. பகுதி - ரு.

## தமிழ்ப் பாஷையின் தற்காலநிலைமை.

புண்ணிய பூமியெனப் பூவுலகெங்கும் பிரக்கியாதிபெற்ற நமது பாரத வர்ஷத்தில் ஆதிகாலம்முதல் ஆரியபாஷையென்றும் திராவிட பாஷையென்றும் கூறப்பட்ட இருபாஷைகள் வழங்கிவருகின்றன. இவை முறையே ஸம்ஸ்கிருதம் எனவும் தமிழ் எனவும் அல்லது வடமொழியெனவும் தென்மொழியெனவும் படும். வடமொழியோ, வெகுகாலமாகச் சம்பாஷணை பாஷையல்லாவிடினும், வேதகர்ப்பமாக விளங்குதலால் சமயபாஷையாக நிலைத்துள்ளது. இந்தப் பாஷையின் விஷயத்தில் பாரதஜன சமூகமானது பகிர்முகநோக்கத்ததாய் எவ்வளவு பராமுகமாய் விடினும், இப்பாஷை க்ஷீணரகிதமானது; ஏனென்றால் இப்பாஷை வேதவிளக்கமாம். தவிர, மேல்நாட்டு விற்பன்னர்களில் மிக்கோரும் இப்பாஷையின் பயிற்சியிலும் அநுபவத்திலும் வெகுஊக்கம் காட்டிவருகின்றனர். இன்னும் இப்பாஷை உலகிலுள்ள எல்லாப் பாஷைகளுக்கும் தாய்ப்பாஷை யெனக் கூறுவோரும் உளர். இங்ஙனம் பற்பலவிதங்களாகச் சிறந்ததேயாயினும், இது சாஸ்திர சம்பந்தமான ஸாஹித்ய பாஷையாய் நின்று விட்டதேயன்றி, சர்வஜன சம்பாஷணை பாஷையாக ஏற்படவில்லை. தேசசரித்திரக்காரர்கள் ஸம்ஸ்கிருதபாஷையானது ஒருகாலத்தில்சம்பாஷணைபாஷையாக இருந்தது என்று கூறுகின்றனர். இது உண்மையே. ஆரியாவர்த்தத்தில் அந்நியதேயத்தவர்களுடைய படையெடுப்பு ஆரம்பித்தது முதல் ஆரியபாஷைக்குப் பிடித்தது அநர்த்தம். சுமார் 1200 வருஷங்கட்கு முன்னதாகவே மகம்மதியர்கள் ராஜரீகநோக்கத்துடன் நமதுதேயத்தில் பிரவேசித்து வடஇந்தியாவில் ராஜாங்கத்தை ஸ்தாபித்து விட்டார்கள். இவர்கட்கு முன்னமேயேகிரேக்கர், பாரசீகர் முதலியஜாதியார் தோன்றி அவர்களுடைய சக்தியையும் சிறிது ஊன்றிவிட்டுச் சென்றனர். இங்ஙனம் அந்நியர்

களுடைய செல்வாக்கு அதிகரிக்க அதிகரிக்க, ஆரியர்களும் அந்நியர்களும் ஒத்துச்சமாதானமாகவாழும் பொருட்டு அந்நியமும் ஆரியமும் கலந்த அநேகபாஷைகள் தோன்றின. இவைகளே இப்பொழுது வடதேயத்தில் வழங்குவன. ஸம்ஸ்கிருத பாஷையானது வரவரப் பேசும் பாஷையென்னும்பெயர் நீங்கி, பண்டிதர்களுடைய மனோல்லாச, ஆத்மாநந்தபாஷையாக நிலைத்தது. ஆத்மஞானநுபவத்தில் ஆர்வமும் ஆத்திரமும் உள்ள அநேக அமெரிக்கர்களும் ஐரோப்பியர்களும் ஸம்ஸ்கிருதபாஷையைப்படித்தலில் சிரத்தை வைத்துள்ளார்கள். ஆகவே, ஸம்ஸ்கிருதபாஷையினுடைய தற்கால நிலைமை முன்போல் முன்னேற்றத்தில் இல்லையென்று நாம் பரிதபிக்கத்தக்கதாயினும், வெகுகாலத்திற்கு முன்னமேயே அது பேசும்பாஷையாகாது நின்று விட்டபடியால் நாம் அதிகமாய்த்துயரப்படுவதற்கில்லை.

ஆனால் அதன் உடன்பிறந்த தென்மொழியோ நமதுகண்கட்கு முன்பாகவேமிக அபாயகரமான ஸ்திதியில் இருக்கின்றது. தென்மொழி திராவிடபாஷை எனப்படும். சிலர் தமிழ், மலையாளம், கன்னடம், தெலுங்கு இந்த நான்கு பாஷைகளையும் சரிசமானமாக மதிப்பிட்டுத் திராவிடபாஷைகள் எனக் கூறுவர். ஆனால் தமிழ்ப்பாஷையே மற்ற மூன்று பாஷைகட்கும் மூலபாஷையென்றும் ஆகையால் அதுவே முக்கியபாஷையென்றும் நமது அபிப்பிராயம். ஆதியில் ஸம்ஸ்கிருத பாஷை ஒன்றே வட இந்தியாவில் தனித்திருந்தது போல, இத்தென்னிந்தியாவிலும் தமிழ்ப் பாஷை ஒன்றே தனித்திருந்தது என்பதற்கு ஐயம் சிறிதும் இல்லை. தமிழ்ப்பாஷை கலப்பற்ற தனிப்பாஷையாம். தமி என்றால் தனிமை, ஒப்பின்மை யெனப்பொருள் படும். ஆதலால் தமிழ் என்னும் சொல்லில் தமி பகுதி ழ் எழுத்துப்பேறு எனக்கொண்டு தமிழ் என்றபதத்திற்கு தனிமையான மொழி எனப்பொருள் கொள்வோர் புலவர். ஆரியாவர்த்தத்தில் அந்நியர்கள் பிரவேசிக்க, அதனால் ஆரியமும் அந்நியமும்கலந்த அநேகபாஷைகள் உற்பத்தியாயினதைப் போல, ஆரியர்களும் திராவிடதேசத்தில் பிரவேசிக்க, அதனால் ஆரியமும் திராவிடமும் கலந்து மலையாளம், கன்னடம், தெலுங்கு என்று சொல்லப்பட்ட மற்றப் பாஷைகள் உண்டாயின. தமிழ்தனிப்பாஷையென்பதற்கு ஸம்ஸ்கிருதம், தமிழ் என்ற இருபாஷைகளிலும் சமரஸ வித்துவான்



களாயிருந்த திருவாவடுதுறை மடம் சிவஞானயோகீஸ்வரரைப் போன்ற பாஷாவிற்பன்னர்கள் பிரமாணம் காட்டியுள்ளார்கள்.

இன்னும் தமிழ் என்றபதத்திற்கு இனிமை யென்று பொருள். எல்லாப்பாஷைகளினும்இனியபாஷை தமிழ் என்பதாம். நமக்கு இப்பாஷாபாண்டித்தியம் அதிகம்இல்லாவிடினும், நமது சிற்றறிவுக்குரிய அநுபவத்தால் தமிழ்ப்பாஷை இனியபாஷை என்பதிற் சந்தேகம் இல்லையென்று கூறத்துணிகின்றோம். நாம் சில சமயங்களில் இவ்வினிய பாஷையின் இன்பப் பெருக்கை ஏகாந்தமாக அநுபவிக்கும்படி நேரிட, அச்சமயங்களில் இதுபோன்று உன்னதம் வாய்ந்ததும் உயர்வையடைந்ததுமான பாஷைஉலகில் வேறு இல்லை யென்றும், இதுதென் மொழியல்ல, தேன் மொழியேயென்றும், தேன்மொழி யென்னும் பதத்திலுள்ள தே என்ற நெடில் குறுகி, தென்மொழி யென்று வழங்கச் சொல்லாய் விட்டதென்றும் நாம் நினைத்ததுண்டு. ஆனால் இப்பாஷைகளின் அருமை பெருமைகளை ஆராய்ந்து அளவிட்டு அறிந்துள்ள பாஷா ஞான சம்பன்ன பண்டிதசிரேஷ்டர்கள் எடுத்து உரைக்கட்டும். நாம் அவ்வருமை பெருமைகளை யெல்லாம் பற்றிச் சொல்லும் வேலையை அவர்களுடைய கடமையாக விட்டு விட்டு, இப்பாஷையின் தற்காலஸ்திதியைப் பற்றி மாத்திரம் கவனிப்போம்.

ஆங்கிலக் கல்வியும் அந்நியநாகரீகமும் நமது தேயத்தில் அபிவிருத்தியாகவே, நம்தேயத்தினர்க்கு தேசபாஷா ஞானமும் தேசாபிமானமும் குன்றி விட்டன. வயிறு வீங்கத் தின்றுகொழுத்து வாட்டமின்றி யிருப்பதே வாழ்நாட்களின் பயனுக்கருதி, நம்சகோதரரிற்பலரும் வாளா ஜீவிதகாலத்தைக் கழிக்கின்றனர்.

அமிழ்தினும் இனியதமிழ் மொழி மக்காள்! நீங்கள் பி.ஏ., எம். ஏ. பரீட்சைகளிற் றேறி, பெரியபட்டதாரிகளாகிப்பிரக்கியாதி பெற்றாலும், எந்தமாதா உங்களைப் பத்துமாதமும்சுமந்து படாதபாடெல்லாம் பட்டுப் பெற்றாளோ, எந்த மாதா உங்களுக்கு வேண்டியவற்றை ஈந்தும் தன்மடி தனிலேவைத்துக் கொண்டுஇப்பொழுதும் வளர்த்தும் வருகிறாளோ அந்தமாதாவின் பாஷையாகிய மாதுர்ப்பாஷையை நீங்கள் மறந்து விடும் பட்சத்தில், உங்களுடைய ஜீவிதகாலம் வியர்த்தமன்றோ? சாண்வயிற்றிற்குணவன் தேடுவதும் அல்லதுசகடக்கால் போன்றஇச்சரீரத்தைச்சாஸ்வத

மாக நினைத்து அலங்கரித்துக் கொள்வதும், அல்லது பண்டிதர்களால் வெறுக்கப்பட்ட பாமரமானபட்டப் பெயர்களை முன்னும் பின்னும் மூட்டிக் கொள்ளுதலும் இவைகள்தானோஉங்களுடைய மானிட ஜன்மநோக்கம்? சற்றுக் கண்விழித்துப்பாருங்கள். பாஷையே ஒருஜனசமுகத்திற்கு உயிர்நிலை. பாஷையானது எவ்வளவுக் கெவ்வளவுமேன்மேலும் ஐஸ்வரியம் அடைகின்றதோ. அவ்வளவுக்கவ்வளவு ஜனசமுகமும் கிளர்ச்சியடைந்து பிரகாசிக்கும். பாஷையில்லாவிடில் பண்டிதரில்லை. பண்டிதர் இல்லாவிடில் தேசம் நாசமெய்தும். இதில் சந்தேகமேயில்லை. நாங்கள் பாரத புத்திரர்கள், பண்டையக்காலம் முதல் பாரம்பரிய பெருமையுடையவர்கள் என்று நீங்கள் தற்புகழ்ச்சிசெய்து கொள்ளும்படியான பாக்கியத்தை நீங்கள் அடைந்திருப்பதின் காரணம் உங்கள்முன்னோர்கள் பல்லாயிரவருஷங்களாகப்பாடுபட்டுப் பாஷையைவிருத்திசெய்து பரிபூர்ணமாக்கி வைத்திருப்பதன்றோ? நமதுசர்வகலாசாலைச்சங்கத்தினரும் தேசபாஷைகளை இண்டர்மீடியேட்வகுப்பு, பி-ஏ. வகுப்பு மாணவர்கட்குக் கட்டாயப்பாடங்களாக்குவதில்லையென்று தீர்மானம் செய்து விட்டனர். இத்தீர்மானத்தை ரத்துசெய்ய வேண்டுமென்று, சிற்சில ஊர்களில் சிற்சில ஜனங்கள் கூட்டங்கள் கூடி. அரசாங்கத்தாருக்குத் தங்கள் அபிப்பிராயங்களைத் தெரிவிக்கவேண்டுமென்று அழகானபிரசங்கங்கள் செய்து ஆரவாரித்துக் கடைசியிற்கைதட்டிக்கலைந்து விட்டனர். ஒரு ஊரில் ஒரேநாள், ஒரு கூட்டம், ஒரு அடுக்குப்பிரசங்கங்கள் இவ்வளவுதான், பாஷையினிடத்துள்ள அபிமானம் அடங்கி விட்டது. இவ்வபிமானம் உங்களுடைய ஹிருதயத்தில்ஸ்திரமாய்வேரூன்றியுள்ளதா? அல்லது தற்கால ஆத்திரத்தினால் தூண்டப்பட்டதா? என்று எங்ஙனம் அரசாங்கத்தாருக்குத் தெரியும்?ஸ்திரநிலைபெற்றுள்ள அபிமானத்திற்கே மதிப்புண்டு. உங்கள் ஹிருதயங்களில் அசைக்கமுடியாத அபிமானம் வேரூன்றியுள்ளது என்று அறிந்தாலே அரசாங்கத்தார் கவனிப்பர். ஒருசிறு கூட்டத்தினிடையில் சிலவார்த்தைகளில் உங்களுடையபாஷாபிமானத்தைக் கொட்டிவிட்டீர்களா? ஒருதுண்டுக்காகிதத்தில் ஐந்து, அல்லது ஆறுவரிகளில் இறுக்கித்தள்ளி விடும்படியாகஇவ்வளவுதானோஉங்களுடையபாஷாபிமானம்? சற்றும் அமைதியாயிராமல் அடிக்கடிஉங்களுடைய எண்ணங்களை அரசாங்கத்தாருக்குத் தெரிவித்துக்கொண்டிருந்தாலன்றி காரியம்பயன் பெறுமோ?

161303



அந்தோ! பரிதாபம்! தமிழ்ப்பாஷையைத்தரணியில் நிலைநிறுத்தி முன்னேற்றத்திற்கொண்டு வந்த முதற்சங்கம், இடைச்சங்கம், கடைச்சங்கம் போன்ற முத்தமிழ்ச்சங்கங்கள் இக்காலத்தில் இல்லையே! ஓர்வேளை அங்ஙனமே சங்கங்கள் இருப்பினும், அக்காலத்துப்பாண்டியர்களைப்போல இக்காலத்தில் ஆதரிப்பாரில்லையே! சர்வகலாசாலைச் சங்கத்தினர் தமிழ்க்கலையைத்தளரவிட்டதினால், அச்சங்கத்திற்குச் சர்வ கலாசாலைச்சங்கம் என்ற பேர்தகுமா? என்று நாம்யோசிக்கின்றோம். சர்வ கலைகளையும்சமரசமாகப்பாவித்தாலொழிய அது சர்வ கலாசாலைச்சங்கம்ஆகாது. நமது சென்னைகவர்ன்மெண்டார் இவ்விஷயத்தில் தீர்க்கமாய் ஆழ்ந்து ஆலோசித்து நமது குறைகளை நிவிர்த்தி செய்து தேசபாஷைகளை ஆதரிப்பார்களென்று நம்புகிறோம்.

சர்வகலாசாலைப்பரீட்சைகளில் முதன்மையாகத் தேறிப்பரிசுகள் பெற்றிருக்கும்பாக்கியவான்களிற் பலரும் தமது சொந்தப் பாஷையில் ஒருகடிதம் எழுதுவதற்குக் கூடத் திறனில்லாது போயது என்னே? எனக்குத்தமிழ் எழுதவரவில்லையே! யான் என்ன செய்யட்டும், என்று நமக்குவந்துள்ளகடிதங்களும் இரண்டொன்று நம்கைவசத்துள்ளன, பி-ஏ, எம்-ஏ, பட்டங்களைவகித்த பிரபல வித்துவான்களிடமிருந்து. சமீபத்தில் பாலக்காட்டில்நடந்த ஒருசபையில் ஓர் பாஷாபிமானசிரேஷ்டர்! ஸ்திரீகட்கும் தேசபாஷை அவசியம் இல்லை; ஆங்கிலமே அவசியம் என்றுகூறினராம். அவர்போன்ற புண்ணியவான்கள அதிகரித்து விட்டதினாலேயே நமது தேசம் நாசமெய்தியது. ஆங்கிலங்கற்ற சில அன்பர்கள்'—தமிழ்ப்பாஷையில் ஒருபுஸ்தகத்தையோ, ஒருபத்திரிகையையோ பார்த்தமாத்திரத்தில் இதுதமிழா?என்று கூறுவதையும்நாம்காதாரக்கேட்டிருக்கிறோம். ஏனோ இவர்களுக்கு இப்பாஷையினிடத்துஇவ்வளவு வெறுப்பு! சிலர், 'தமிழ்ப்புஸ்தகங்களை, தமிழ்ப்பத்திரிகைகளை எமது வீட்டு ஸ்திரீகள் படிப்பார்கள்' என்று தமிழ்ப்பாஷை ஸ்திரீகளுக்கேற்றதே யென்றும் ஸ்திரீகள் புருஷர்களினும் எதிலோ—அறிவிலோ அல்லது அன்பிலோ—தாழ்ந்தவர்களென்றும் பொருள்படும்படி சொல்வதுமுண்டு. ஆனால்இவர்களின் உரையைநாம் இன்னுரையாகவே கொள்வோம். ஏனென்றால்நமது தேசம் இத்தகைய புண்ணிய! புருஷர்களால் மேன்மையடையுமென்று நாம்சிறிதேனும் நம்பவில்லை. ஸ்திரீகளேநமதுதேசோத்

தாரணத்திற்குக் காரணமானவர்கள் என்று நாம்தீர்மானித்து விட்டோம். ஆகையால் இப்பொழுது நமதுஸ்திரீகள்தமிழ்க்கல்வி வாணிகளாகச்சாட்சாத்கரிக்கும் பொருட்டு நாம் எல்லாம் வல்ல எமது இறைவியையாண்டும் இறைஞ்சுகின்றோம்.

நிற்க, நற்கீரனார், ஔவை, திருவள்ளுவர், புகழேந்தி, கம்பர், காளமேகம் முதலியவரப்பிரசாதகவிகள் ஆதிகாலத்தில் இருந்தனர் போலவே இக்காலத்திலும் பண்டிதர், பண்டிதைகள் இவர்களுக்குக்குறைவேயில்லை. "தெட்டுதற்கோ அறிவில்லாத்துரைகளுண்டு தேசமெங்கும் புலவரெனத்திரியலாமே" என்றவாறு காசுக்கொருகவியாகக் காசினியெல்லாம் கவிவாணர்கள் கவிந்து விட்டனர். நாமும் பாஷாவிற்பன்னர் அல்லேம்; ஆனால் பாஷாபிமானத்தால் தூண்டப்பட்டே இவ்வியாசம் எழுதியுள்ளோம். சமர்த்தர்கட்கிடங்கொடுக்கும் சங்கப்பலகையும் அச்சங்கத்தை ஆதரிப்போரும், வாய்தவறிவந்த சொல்லையும் வழுவன்றென்று ரூபித்த ஜகன்மாதாவின் அருள்பெற்றகம்பரையும் "இம்மென்னுமுன்னே எழுநூறும் எண்ணூறும்" என்று அருள்வயப்பட்டுப்பாடியகாளமேகத்தையும் நம் தமிழ்நாடுதிரும்பவும் என்று பார்க்குமோ?

சிவம்.

## அகமும் வாழ்வும்.

ஸ்ரீ. வ. உ. சிதம்பரம் பிள்ளையவர்கள் எழுதியது.

அகத்தை யொத்தே வாழ்வு அமைகின்றது. அகம் இடைவிடாது புறமாகிக்கொண் டிருக்கின்றது. எதுவும் வெளிப்படாமல் இருப்பதில்லை. எது மறைபட்டிருக்கிறதோ அது சிறிது காலத்திற்கு மட்டுமே மறைபட் டிருக்கிறது. அது முதிர்ந்து கடைசியாக வெளிப்பட்டே விடுகிறது. வித்து, மரம், மலர், கனி இவை ஒன்றன்பின் ஒன்றாகவும், ஒன்றி லிருந்து ஒன்றாகவும், எந்த முறையில் வெளிப்பட்டு நிகழ்கின்றனவோ அந்த முறையிலேயேபிரபஞ்சமும் நிகழ்கின்றது. மனிதனது அகத்தின் நிலைமையிலிருந்து அவனது வாழ்வின் நிலைமைகள் வருகின்றன. அவனது நினைப்புக்கள் அவனுடைய செயல்களாக மலர்கின்றன. அவனது



செயல்கள் அவனுடைய ஒழுக்கமும் விதியுமாகிய கனிகளைக் கொடுக்கின்றன.

மரம் எப்பொழுதும் பூமியின் அகத்தி லிருந்தே வெளிப்பட்டுக் கொண்டிருத்தல் போல வாழ்வும் எப்பொழுதும் மனிதனது அகத்தி லிருந்தே வெளிப்பட்டுக் கொண்டிருக்கிறது. நிலத்துள் புதை பட்டுள்ள வித்துக்கள் காளடைவில் இலைகளாகவும். கிளைகளாகவும், கனிகளாகவும் வெளிப்படுதல் போல அகத்துள் புதைபட்டுள்ள நினைப்புக்கள் நாளடைவில் சொற்களாகவும், செயல்களாகவும், செய்து முடிக்கப்பட்ட காரியங்களாகவும் வெளிப்படுகின்றன.

மறைபட்டுள்ள ஊற்றுக் கண்களி லிருந்துஎப்படி ஊற்று நீர் வெளிப்படுகின்றதோ அப்படியே மனிதனது வாழ்வும் மறைபட்டுள்ள அவனது ஆகமூலங்களிருந்து வெளிப்படுகின்றது. நிகழ் காலத்தில் அவன் எந்நிலைமைகளில் இருக்கிறானோ அவையும் நிகழ் காலத்தில் அவன் எவற்றைச் செய்கிறானோ அவையும் அவன் அகத்தி லிருந்தே வந்திருக்கின்றன. எதிர் காலத்தில் அவன் எந் நிலைமைகளில் இருப்பானோ அவையும், எதிர்காலத்தில் அவன் எவற்றைச் செய்வானோ அவையும், அவனது அகத்தில் நின்றே உற்பத்தியாகும். ஆன்றோரும்

"அறவினைக்கு மரும்பொரு ளின்பொடு
பெறுவ தற்கும் பெருங்கல்வி கற்றுயர்
விறலி னுக்குநல் வீரந் தனக்குமொண்
டுறவி னுக்குந் துணைமன மென்பவே."

என்று கூறி யுள்ளார்.

துக்கமும் சுகமும், துன்பமும் இன்பமும், அச்சமும் துணிவும், வெறுப்பும் விருப்பும், மடைமையும் அறிவும் அகத்திலின்றி வேறு எங்கும் இல்லை. அவை யாவும் மனோ நிலைமைகளே யன்றி வேறல்ல. ஆன்றோரும்

"ஓடும் பொன்னு முறவும் பகையுமோர்
கேடுஞ் செல்வமுங் கீர்த்தியு நிந்தையும்
வீடுங் கானமும் வேறற நோக்குதல்
கூடுந் தன்மை கொளுமன நன்மனம்"

என்று கூறியுள்ளர்.

600 008

மனிதன் தனது அகத்தின் புரவலன்; தனது மனத்தின் காவலன்; தனது வாழ்க்கையாகிய கோட்டையின் தனிக் காவற்காரன். அவன் அந்த முறைமையில் எச்சரிக்கையாக, அல்லது எச்சரிக்கைக் குறைவாக இருக்கக் கூடும். அவன் தனது அகத்தை மேலும் மேலும் எச்சரிக்கையாக வைத்துக் கொண்டிருக்கக் கூடும். அவன் தனது மனத்தை அதிகப் பிரயாசத்தோடு பாதுகாத்துச் சுத்தப்படுத்திக் கொள்ளக்கூடும்; அவன் நியாய மற்ற நினைப்புக்களை நினையாது தன்னைக் காத்துக்கொள்ளக்கூடும். இது அறிவுக்கும் இன்பத்திற்கும் மார்க்கம். இதற்கு மாறாக, அவன் தனது வாழ்வைச் சரியாக ஒழுங்கு படுத்தும் மேலான வேலையைச் செய்யாது எச்சரிக்கைக் குறைவாகவும் ஒழுங்கீனமாகவும் வாழக்கூடும். இது மயக்கத்திற்கும் துன்பத்திற்கும் மார்க்கம்.

ஒரு மனிதன் தனது வாழ்வு முழுவதும் தனது மனத்தினின்றே வருகிறது என்று அறிவானானால் அப்பொழுதே அவனுக்குப் பேரின்பத்தின் வழி திறக்கப்பட்டிருக்கிறது. அவன் அப்பொழுது தனது மனத்தை ஆள்வதற்கும், தனது கொள்கைக்குத் தக்கபடி தன்னைத் திருத்திக்கொள்வதற்கும் வேண்டும்வலிமை தன்னிடத்தில் இருப்பதைக் காண்பான். அப்படியே அவன் முற்றும் மேம்பாடான நினைப்பும் செயலுமாகிய மார்க்கங்களில் நேராகவும் உறுதியாகவும் நடப்பான். அவனுக்கு வாழ்க்கை இனியதாகவும்தூயதாகவும் அமையும். அவன் விரைவாகவோ தாமதமாகவோ சகல தீமைகளையும் சகல கவலைகளையும் சகல துன்பங்களையும் போக்கி விடுவான். ஏனெனில், தனது அகத்தின் வாயிலைத் தளராத ஊக்கத்துடன் காத்து வருகிற ஒரு மனிதன் ஞானத்தையும், துக்க நிவிர்த்தியையும், சுகப் பிராப்தியையும் அடையாமல் இருக்க முடியாது.

## பகவத்கீதை.

சரஸ்வதி என்னும் நமது நேயர் எழுதியது.

இரண்டாம் அத்தியாயம்.

(முன்தொடர்ச்சி).

(46) எங்கும் தண்ணீர் நிறைந்த இடத்திலே ஒரு (சிறிய) குளத்தால் எவ்வளவு பயனுண்டாகுமோ, அவ்வளவு தான் அறிந்தவனாகிய ப்ராஹ்ம ஞானிக்கு (ப்ராஹ்மணனுக்கு) வேதங்களால் உண்டாகும்பயன்.

(47) தொழிலில் மாத்திரந்தான் உனக்கு உரிமையுண்டு, தொழிலின் பயன்களிலே ஒரு போதும் (உரிமை) இல்லை. ஆதலால் செய்கைப் பயன்களையே ஹேதுவாகக்கொள்ளாதே. தொழிலற்றிருப்பதிலும் பற்றுவைக்காதே.

(48) தனஞ்சயா! பற்றை நீக்கி, யோகத்திலே நின்று, கைகூடுதல், கைகூடாமை எனுமிரண்டையும் ஸமமாகக் கொண்டு தொழில்கள் செய்திடுக. ஸமத்வமே யோகமெனப்படுகின்றது.

[வ்யாக்கியானம்:—இனி, புத்தி யோகத்தை விசேஷமாகச் சொல்லுகிறார். மூன்றாம் அத்தியாயத்தில் புத்தி யோகம், கர்ம யோகம் எனுமிரண்டையும் ஸமாஸப்படுத்துகிறார்].

(49) புத்தியோகத்தைக் காட்டிலும், தொழில் நெடுந் தூரம் தாழ்ந்தது. நீ புத்தியையே சரணாகக் கொள்க. பயனையே நோக்குவோர் சிறு மக்கள்.

[வ்யாக்யானம்:—புத்தி யென்பது சுத்தமான பகுத்தறிவு. யோகமென்பது பொருந்தி நிற்றல். எவ்விதமான அடைமொழியுமில்லாது வெறுமே "யோகம்" என்றால் பரமாத்மாவுடன் பொருந்தி நிற்றல் என்று பொருள் கொள்வது ஸங்கேதம். புத்தி யோகம், கர்ம யோகம், என்பவற்றுக்குத் தன்னை மறந்த பகுத்தறிவு, தொழில் என்னுமிவற்றோடு லயப்பட்டு நிற்றல் என்று பொருள் கொள்க.]

(50) புத்தியுடன் யோகப்பட்டவன் இங்கு நற்செயல், தீச் செயல் என்னுமிரண்டிலும் பற்றுக் கொள்வதில்லை. ஆகை

யால் யோகத்தில் பொருந்துக. யோகம் தொழில்களிலே திறமையாவது.

(51) அறிஞர் புத்தியில் யோகப்பட்டவர்களாய் தொழிலிற் பிறக்கும் பயனைத் துறந்து, பிறவித் தளைகளினின்றும் விடுபட்டவர்களாகித் துன்பமற்ற நிலையைப் பெறுகின்றனர்.

(52) நினது புத்தி எப்போது மோஹக் குழப்பத்தினைக் கடந்து செல்லுமோ, அப்போது நீ கேட்டற் குரியது, கேட்டது எனுமிவ்விரண்டினிடத்தும் புறக்கணிப்பெய்துகின்றாய்.

(53) வேதபாடத்தால் கலங்கமெய்தியிருக்கின்ற நினது புத்தி, எப்போது சமாதியில் பொருந்தி, இயக்கமில்லாது நிற்குமோ அப்போதுதான் நீ யோக நிலையடைவாய்.

அர்ஜுனன் சொல்லுகின்றான்:—

(54) உணர்வு நிலைத்தவனாகி, ஸமாதியில் நிற்பவனுடைய வார்த்தை எப்படியிருக்கும்? கேசவா! நிலையறிவுடையவ்வன் என்ன பேசுவன்? எப்படியிருப்பான்? எப்படி ஒழுகுவான்?

பகவான் சொல்லுகிறார்:—

(55) பார்த்தா! மனத்திலுள்ள காமங்களையெல்லாம் துறந்து ஒருவன் தன்னிலே தான் ஸந்தோஷமடைந்து நிற்கும் பொழுதிலேயே உணர்வு நிலைத்தவன் எனப்படுகின்றான்.

(56) துன்பங்களிலேகுழப்பமடையாமல், இன்பங்களில்விருப்பற்றவனாய், விருப்பம், அச்சம், சினம், இவை நீங்கியிருப்போனை நிலைத்த அறிவுடைய முனியென்று கூறுவர்.

(57) இனியதும், இன்னாததுமாக (எதுவரினும்) அவ்வதனைப்பெற்று, எவ்வழியும் பற்றில்லாது நிற்போன், அவாவுறான், பகைத்தலும்செய்யான்,—அவனுடையஉணர்வேஉறுதிபெற்றது.

(58) ஆமை உறுப்புக்களை இழுத்துக் கொள்வது போல, யாங்கணும் புலப்பொருள்களிலிருந்து புலன்களை இழுத்துக் கொள்வானாயின், அவனுடைய உணர்வே உறுதிபெற்றது.

(59) (விஷயங்களைக்) கொள்ளாதிருப்பவனுக்கு விஷயங்கள் ஒழிகின்றனவேயல்லாது, அவற்றிலுள்ள சுவை ஒழிவதில்லை. பரத்தினைக் கண்டபின்பு அவனுக்கு அச்சுவையும் ஒழிகின்றது.



(60) அறிஞனாகி (தவம்) முயலுகின்றவனுடைய மனத்தைக் கூடப் பொங்கியெழும்புலன்கள்வலிந்துபற்றிச்செல்லுகின்றன.

(61) அப்புலன்களையெல்லாம் கட்டுப்படுத்தி, என்னைப் (பரமாத்மாவை) பரமாகக் கொண்டு, யோகத்திலமர வேண்டும். எவனுக்குப் புலன்கள் வசப்பட்டனவோ, அவனுடைய உணர்வே உறுதி பெற்றது.

(62) விஷயங்களின்மீது கருத்துச் செலுத்தும்மனிதனுக்கு அவற்றினிடத்தே பற்றுண்டாகிறது. பற்றிலிருந்துவிருப்பமுண்டாகிறது. விருப்பத்திலிருந்து சினம் பிறக்கிறது.

(63) சினத்திலிருந்து மயக்கம்ஏற்படுகிறது. மயக்கத்தினின்றும் மறதி தோன்றுகிறது. மறதியிலிருந்து புத்திநாசம். புத்திநாசத்தால் அழிகின்றான்.

(64) தன்னையாள்வோன், தனக்கு வசமாகி விருப்பு, வெறுப்பு நீங்கியுள்ள புலன்களோடு விஷயங்களில் இயங்குவோன், தெளிவினை அறிகின்றான்.

(65) தெளிவில், இவனது துன்பங்களெல்லாம்அழிவுபெறுகின்றன. சித்தந் தெளிந்தானுடைய புத்திவிரைவில் உறுதிப்படுகின்றது.

(66) யோகமில்லாதவனுக்கு புத்தி இல்லை. யோகமில்லாதவனுக்கு பாவனையில்லை. பாவனை (தியானம்) இல்லாதவனுக்கு சாந்தியில்லை. சாந்தியற்றவனுக்கு இன்பமேது?

(67) சலிக்கின்ற புலன்களுக்கு மனம் இணங்குமாயின், அது உணர்வை இழுத்துக் கொண்டு போய்விடும்; நீரிலே தோணியைக் காற்றுக் கொண்டு போவது போல.

(68) ஆதலால், பெருந்தோளுடையாய்! எவன் புலன்களை எவ்வழியும் புலப்பொருள்களினின்றும் கட்டுப்படுத்தியவனோ அவனுடைய உணர்வே உறுதி பெற்றது.

(69) எல்லா உயிர்களுக்கும் இரவாகுமிடத்து ஸம்யமம் (தன்னாட்சி) பெற்ற யோகி கண்விழித்திருக்கின்றான். எதனிடத்தே எல்லா உயிர்களும் விழித்திருக்கின்றனவோ அதுவே தெளிந்த காட்சியோனாகிய முனிக்கு இரவாகின்றது.

(70) கடலிலே ஜலங்கள் வந்து புகுந்தாற் போல எத்தனை காமங்கள் (விருப்பங்கள்) வந்து புகுந்தாலும் மேன்மேலும் கொள்ள நிற்பானாய் அசையா நிலைகொண்ட அவனே சாந்தியடைகின்றான்; காமப் பொருள்களை விரும்புவோ னல்லன்.

(71) விருப்பங்களை யெல்லாம் துறந்து, வேண்டாமை பற்றி நிற்கும் ஆண்மகன், மனதற்றான், யானற்றான், — அவனே சாந்தி (அமைதி) பெறுகின்றான்.

(72) இதுவே ப்ரஹ்ம நிலை; பார்த்தா! இதை யடைந்தபின் மயக்க முறுவதில்லை. இறுதிக் காலத்திலே யாயினும், இதில் நிலை பெறுவோன் ப்ரஹ்ம நிர்வாண மடைகிறான்.

## நமது மதமும் நாகரிகமும்.

(27-வது பக்கத்தின் தொடர்ச்சி).

அன்பே ஆகாரமா யுள்ள பரிபூரண அறிவே நமது மதத்தின் சொரூபம். அறிவின்றிய மூட வைராக்கியமோ அன்பின்றிய குதர்க்க நியாயங்களோ நமது மதத்தில் இடம்பெறுவதில்லை. அன்பும் அறிவும் இரண்டறக் கலந்து ஏகசொரூபமாய் விளங்குகின்ற இப்பெருமையே எல்லா மதங்களினும் நமதுமதம் சிரேஷ்டமென்பதற்கு அத்தாட்சியா யிருக்கின்றது. இத்தகைய நமது மதத்திற்கும் நவீன நாகரிகக் கொள்கைகளுக்கும் வித்தியாசம் யாதெனில்:—நமது மதம் எப்பொருளிலும் ஈஸ்வரனையே பார்த்து அப் பொருளை ஈஸ்வரனாகவே அனுபவிக்கும்படி போதிக்கின்றது. நவீன நாகரிகமோ எப்பொருளிலும் அப் பொருளையே பார்த்து அப் பொருளை அப் பொருளாகவே அநுபவிக்கும்படி செய்கின்றது. ஈஸ்வரன் ஒருவரே ஸத், சித், ஆநந்தம் இம் மூன்றையும் சொரூபமாக உள்ளவர். அறிவு, அன்பு இவ்விரண்டின் சேர்க்கையே ஞானம் என்று முன்னர் கூறி யுள்ளோம். ஞானநுபூதியே மானிட ஜன்மப் பிரயோசன மென்றும் குறிப்பிட்டோம் அறிவு என்பது சித்தும் அன்பு என்பது ஆநந்தமுமாம். ஆகையால் சிதானந்தத்தை யடைதலே மானிட ஜன்மப் பிரயோ



ப்படுவது. அகண்ட அறிவும் அளவற்ற அன்பும் ஒன்றாகும் இடம் அகண்டமாய் அளவற்றதாய் என்றும் உள்ள ஏக வஸ்துவேயாகும். இவ்வஸ்துவே ஸத், அதாவது, முக்காலத்தும் உள்ளது எனப்படும். எங்கும் நிறைந்த அறிவாய் எல்லையி லின்பமாய் உள்ள வஸ்து எங்கணும் யாண்டும் இருக்க வேண்டுமன்றோ? ஆகையால் நித்திய வஸ்துவின் ஞானநுபூதியே மானிட ஜன்மத்தின் பயனாகும். நவீன நாகரிகமானது இவ் வுத்தமோபதேசத்தைச் சிறிதும் பின்பற்றாமலும் 'பிரபஞ்ச சொரூபம் பிரமம்' என்னும் ஸ்ருதி தத்துவத்தை ஆராய்ந் தநுபவியாமலும் 'பிரபஞ்சப் பேய்' பிடித்து ஆடுகின்றது.

நாகரிகமானது மேல் நாட்டினரைப் பேராசைக்குட்படுத்தியதேயன்றி பிரமானந்தத்தை அளிக்கவில்லை. துக்க நிவர்த்தி செய்வதுபோல் தோன்றி, துக்க விருத்தி செய்துவிட்டது. அவர்கள் ஆநந்தப் பிராப்திக்கு வழியின்றி அலைந்து தவிக்கின்றனர். அவர்களும் நமது மதத்தினிடத்திலேயே அபயம் அடைகின்றனர். இங்ஙனமிருக்க நமது நாட்டினர் நமது மதத்தைப்புறக்கணித்து நாகரிக நதியில் நீந்தி விளையாடுகின்றனர். இந் நதியிற் பெருவெள்ளம் பெருகி வருகின்றது. இந் நாகரிக விளையாட்டுப் பிள்ளைகளைப் பெருவெள்ளம் தள்ளிச்சென்று பேராசை யாகிற சமுத்திரத்தில் வீழ்த்தி விட்டால், பின்னர்க் கரை யேற வழி தெரியாது கஷ்ட முறுவார்களே யெனப் பெரியோர் பரிதபிக்கின்றனர்.

சுப்பிரமணிய சிவம்.

## விவேகாநந்த ஸ்வாமிகளின் கடிதம்.

(முன்தொடர்ச்சி)

ஜப்பானியர்களைப் பற்றி என்மனத்திலுள்ளவற்றை யெல்லாம் ஒருசிறிய கடிதத்தில் என்னால் வரையமுடியாது. நான்விரும்புவதெல்லாம், நமது வாலிபர்களில் அநேகர் வருஷந்தோறும் ஜப்பானுக்குப்போய்ப்பார்க்க வேண்டுமென்பதே. ஜப்பானியர்களுக்கு இந்தியா இன்னும் உயர்ந்ததும் நன்மையுமாயுள்ள ஒவ்வொன்றையுமுடைய ஸ்வப்னபூமியாகவே இருக்கிறது. நீங்களோ! உங்களுடையஸ்திதி யென்ன? ... ... ... உங்களுடைய

ஜீவிதகாலமெல்லாம் அற்பவிஷயங்களைப் பேசிக்கொண்டிருக்கிற வீண்பேச்சு மாத்திரமாயுள்ளவர்களே! நீங்கள் எப்படி இருக்கிறீர்கள்? வாருங்கள், வந்து இந்த ஜனங்களைப்பாருங்கள்; பார்த்துவிட்டுப் போய் அவமானத்திற்குப்பயந்து உங்கள்முகங்களை ஒளித்துக் கொள்ளுங்கள். முழுமூடச் சாதியார்! நீங்கள் வெளியில்வந்தால் ஜாதியை இழந்து விடுவீர்கள்! இந்த நூற்றுக்கணக்கானவருஷங்களாகத் தடிப்பேறிய மூடக் கொள்கைகளினால் மேன்மேலும் அதிகரித்துவருகிற சுமையைத்தலையில்தாங்கி உட்கார்ந்துகொண்டிருக்கிற (நீங்கள்), நூற்றுக்கணக்கான வருஷங்களாக இந்த ஆகாரத்தை அல்லது அந்த ஆகாரத்தைத் தொடலாம் அல்லது தொடக்கூடாது என்று வாதஞ்செய்து உங்களுடைய சக்தியையெல்லாம் செலவழிக்கின்ற (நீங்கள்), எவ்வளவோ வருஷங்களாக ஜனசமுகத்தின் இடைவிடாத கொடூரத்தினால் ஜீவகாருண்ணியம்சிறிதுமில்லாத (நீங்கள்)—நீங்கள் எப்படியிருக்கிறீர்கள்? இப்பொழுது என்னசெய்து கொண்டு இருக்கிறீர்கள்? ........கைகளில் புஸ்தகங்களுடன் கடற்கரைகளில் சுற்றிக்கொண்டும்—ஜீரணமாகாமல் யூரோப்பியர்களுடைய புத்திசக்தியின்சிதறிக்கிடக்கிறசிற்றறிவை திரும்பத் திரும்பச் சொல்லிக் கொண்டும், ஜீவிதம் முழுதும் ஒரு முப்பது ரூபா குமாஸ்தாவேலையை யடையவோ அல்லது ஒருவக்கீலாகவோ நிச்சயம் பண்ணிக்கொண்டும்—(இதுவே) பால்ய இந்தியாவின் உத்தமஆசை—ஒவ்வொருமாணவனுடையகாலடியிலும் பசி நோயினால்பீடிக்கப்பட்டு ஆகாரத்திற்கு அலறுகின்ற ஒருகூட்டம் குழந்தைகளும்!(இதுவே இந்தியர்களுடைய தற்காலநிலைமை.) உங்களையும், புஸ்தகங்களையும், அங்கிகளையும், சர்வகலாசாலைச்சாட்சிப் பத்திரங்களையும், எல்லாவற்றையும் முழுக்கி விடும்படி கடலில் போதுமான ஜலம்இல்லையா?

வாருங்கள், மனிதர்களாயிருங்கள்! அபிவிருத்திக்கு எப்பொழுதும் எதிரிடையாயிருக்கின்ற புரோகிதர்களை வெறுத்துத் தள்ளுங்கள். ஏனென்றால் அவர்கள் ஒருபொழுதும் சீர்ப்படமாட்டார்கள்; அவர்களுடைய ஹிருதயங்கள் ஒருபொழுதும் விசாலமாகா. அவர்கள் நூற்றுக்கணக்கானவருஷங்களாயுள்ள மூடக் கொள்கை, கொடுமை இவற்றினின்றும் முளைத்தெழுந்தவர்கள். வைதீகக் கொடுங்கோன்மையைக் களைந்தெறியுங்கள். வாருங்கள், மனிதர்களாயிருங்கள். உங்களுடைய நெருங்கிய பொந்துகளினின்



றும் வெளியில்வாருங்கள்! பரந்த உலகத்தைப் பாருங்கள். ஜனசமூகங்கள் எங்ஙனம் முன்னோக்கிச்சென்று கொண்டிருக்கின்றன என்பதைப் பாருங்கள். மனிதனை நீங்கள் நேசிக்கிறீர்களா? உங்களுடைய தேசத்தை நீங்கள் நேசிக்கிறீர்களா? அப்படியானால் வாருங்கள், நாம் இன்னும் உயர்ந்ததும் நலம்தரத் தக்கதுமான விஷயங்களில் முயற்சிசெய்வோம்; திரும்பிப்பார்க்காதீர்கள், மிகவும் அருமையானவர்களும் மிகவும் நெருங்கியவர்களும் அழுதபோதிலும் திரும்பிப்பார்க்காதீர்கள். திரும்பிப் பார்க்காதீர்கள், முன்னோக்கியே செல்லுங்கள்.

இந்தியாவானது அதனுடைய வாலிபர்களில் — மனிதர்கள், ஞாபகமிருக்கட்டும், மிருகங்களல்ல-குறைந்தது ஆயிரம் பெயரையாவது தன்னலம் மறுக்கும்படி விரும்புகின்றது. ஆங்கிலதுரைத்தனத்தார் உங்களுடைய தடித்துப்போன நாகரிகத்தை உடைப்பதற்கு ஈஸ்வரனால் கொண்டுவரப்பட்ட ஆயுதமாயிருக்கிறார்கள்; சென்னை தான் ஆங்கிலேயர் இங்கு ஸ்திரப்படும்படி உதவிசெய்ய முதல் மனிதர்களைக் கொடுத்தது. இப்பொழுது யாதுவரினும் பின்வாங்காமல் ஒருபுதியஸ்திதி—எளியவர்களிடத்தில் இரக்கம், அவர்களது பசித்தவயிற்றிற்கு ஆகாரம், பொதுஜனங்களுக்கு அறிவை அளித்தல்—யைக் கொண்டுவருவதற்கும் உங்களுடைய முன்னோர்களதுகொடுமையினால் மிருகப்ராயத்திற்கு வந்திருக்கப்பட்டவர்களை மனிதர்களாக்குவதற்குதைரியமாய் முயற்சிசெய்யவும் ஸ்வயநன்மைபற்றுயோக்கியர்களாயுள்ள எத்தனைமனிதர்களைக் கொடுப்பதற்கு சென்னை தயாராயிருக்கிறது?

உங்கள்..........

விவேகாநந்தர்.

பிற்குறிப்பு. அமைதியாயும், மௌனமாயும், உறுதியாயும் உள்ளவேலை; பத்திரிகைப் புரட்டன்று; பெயருக்காக அன்று; நீங்கள் எப்பொழுதும் ஞாபகத்தில் வைத்துக்கொள்ள வேண்டும்.

## மது.

நித்தியதீரர் என்னும் நமது நேயர் இயற்றியது.

போகி:—பச்சை முந்திரித் தேம்பழங் கொண்டு
பாட்டுப் பாடி நற் சாறு பிழிந்தே
இச்சை தீர மது வடித் துண்போம்
இஃது தீதென் றிடையர்கள் சொல்லும்
கொச்சைப் பேச்சிற் கை கொட்டி நகைப்போம்
கொஞ்சு மாதருங் கூட்டுனுங் கள்ளும்
இச்சகத்தினி லின்பங்க ளன்றோ
இவற்றி னல்லின்பம் வேறு மொன்றுண்டோ? (க)

யோகி:—பச்சை முந்திரி யன்ன துலகம்
பாட்டுப் பாடல் சிவக்களி யெய்தல்
இச்சை தீர உலகினைக் கொல்வோம்
இனிய சாறு சிவ மதை யுண்போம்
கொச்சை மாக்களுக் கிஃது தெளி தாமோ?
கொஞ்சு மாதொரு குண்டலி சக்தி
இச்சகத்தி லிவை யின்ப மன்றோ?
இவற்றி னல்லின்பம் வேறுள தாமோ? (உ)

போகி:—வெற்றி கொள்ளும் படைக ளடக்கி
வேந்தர் தம்முட் பெரும்புக ழெய்தி
ஒற்றை வெள்ளைக் கவிகை யுயர்த்தே
யுலக மஞ்சிப் பணிந்திட வாழ்வோம்;
சுற்று தேங்கமழ் மென்மலர் மாலை
தோளின் மீதுறப் பெண்கள் குலாவச்
சற்று நெஞ்சங் கவலுத லின்றித்
தரணிமீதில் மது வுண்டு வாழ்வோம். (ங)

யோகி:—வெற்றி யைந்து புலன்மிசைக் கொள்வோம்;
வீழ்ந்து தாளிடை வையகம் போற்றும்;
ஒற்றை வெள்ளைக் கவிகை மெய்ஞ்ஞானம்;
உண்மை வேந்தர் சிவநிலை கண்டார்;



மற்றவர் தமுட் சீர் பெற வாழ்வோம்;
வண் மலர் நறு மாலை தெளிவாம்;
சுற்றி மார்பி லருள் மது வுண்டே
தோகை சக்தி யோடின்புற்று வாழ்வோம். (ச)

போகி:—நல்ல கீதத் தொழிலுணர் பாணர்
நடனம் வல்ல நகைமுக மாதர்
அல்லல் போக விவருடன் கூடி
யாடி யாடிக் களித்தின்பங் கொள்வோம்;
சொல்ல நாவு கனியுதடா நற்
சுதியிலொத்துத் துணையொடும் பாடி
புல்லு மார்பினோ டாடிக் குதிக்கும்
போகம் போ லொரு போகமிங் குண்டோ? (ரு)

யோகி:—நல்ல கீதஞ் சிவத்தனி நாதம்
நடன ஞானியர் சிற்சபை யாட்டம்
அல்லல் போக இவருடன் சேர்ந்தே
யாடி யாடிப் பெருங்களி கொள்வோம்,
சொல்ல நாவி னினிக்குதடா வான்
சுழலு மண்டத்திரளின் சுதியிற்
செல்லும் பண்ணொடு சிற்சபை யாடும்
செல்வம் போலொரு செல்வ மிங்குண்டோ? (சு)

ஞானி.

மாதரோடு மயங்கிக் களித்தும்
மதுர நல்லிசை பாடிக் குதித்தும்
காதல் செய்தும் பெறும்பல வின்பம்,
கள்ளி னின்பம், கலைகளி னின்பம்
பூதலத்தினை யாள்வதி னின்பம்
பொய்மை யல்ல விவ் வின்பங்க ளெல்லாம்
யாதுஞ் சக்தி யியல் பெனக் கண்டோர்
இனிய துய்ப்ப ரிதய மகிழ்ந்தே. (எ)

இன்பந் துன்ப மனைத்துங் கலந்தே
இச்சகத்தினி யல்வவி யாகி
முன்பு பின்பில தாகி யெந்நாளும்
மூண்டு செல்லும் பராசக்தி யோடே
அன்பி லொன்றிப் பெருஞ்சிவ யோகத்
தறிவு தன்னி லொருப்பட்டு நிற்பார்,
துன்ப நேரினு மின்பெனக் கொள்வார்,
துய்ப்ப ரின்ப மிகச்சுவை கண்டே. (அ)

இச்சகத் தோர் பொருளையுந் தீசா
 இல்லையென்று வருந்துவ தில்லை;
நச்சி நச்சி யுளத்தொண்டு கொண்டு
 நானிலத் தின்ப நாடுவ தில்லை;
பிச்சை கேட்பது மில்லை, யின்பத்திற்
 பித்துங் கொண்டு மயங்குவ தில்லை;
துச்ச மென்று சுகங்களைக் கொள்ளச்
 சொல்லு மூடர் சொற் கொள்வது மில்லை. (௯)

நீது நோக்கிடின் அஞ்சுவ தில்லை
 தேறு நெஞ்சினோடே சிவங் கண்டோர்
மாத ரின்ப முதலிய வெல்லாம்
 வையகத்துச் சிவன் வைத்த தென்றே
ஆதரித்தவை முற்றிலுங் கொள்வார்
 அங்கு மிங்கு மொன் றுமெனத் தேர்வார்
யாது மெங்கள் சிவன்திருக் கேளி
 இன்பம் யாவு மவனுடை யின்பம். (௧௦)

வேத மந்திர நாத மொருபால்
 வேயி னின்குழல் மெல்லொலி யோர்பால்
காதன் மாதரோ டாட லொருபால்
 களவெம் போரிடை வென்றிட லோர்பால்
போத நல்வெறி துய்த்திட லோர்பால்
 பொலியுங் கள்வெறி துய்த்தல்மற் றோர்பால்
ஏதெலா நமக் கின்புற நிற்கும்
 எங்கள் தாயருட் பாலது வன்றே. (௧௧)

ஸங்கீர்த்தனம்.

(மூவரும் சேர்ந்து பாடுவது)

மது நமக்கு மது நமக்கு மது நமக்கு விண்ணெலாம்
மதுரமிக்க ஹரிநமக்கு மதுவெனக் கதித்தலால்
மது நமக்கு மதியு நாளு மது நமக்கு வானமீன்
மது நமக்கு மண்ணு நீரு மது நமக்கு மலையெலாம்
மது நமக்கோர் தோல்வி வெற்றி மதுநமக்கு வினையெலாம்
மது நமக்கு மாதரின்பம் மது நமக்கு மதுவகை
மது நமக்கு மதி நமக்கு மது மனத்தொடாவியும்
மதுர மிக்க சிவ நமக்கு மது வெனக்கதித்தலால். (௧௨)

# தைரியம்.

## ஓர் அந்தண சிரேஷ்டர் எழுதியது.

ஆபத்துக்கள், துரதிர்ஷ்டங்கள், வறுமை, வருத்தம், உபத்திரவம் இவைகளெல்லாம் உலகத்தின்கண் உற்பவிக்கின்ற ஒவ்வொரு மனிதனுக்கும் அநேகமாய் விதிக்கப்பட்டுள்ளன.

ஆதலால், ஏ, துக்க புத்திரா! மானிடத் தீமையில் உனக்கு ஏற்பட்டுள்ள பாகத்தை உறுதியுடன் நீ சகித்துக்கொள்வதற்கு உன் மனத்தை தீரத்துவத்துடனும் பொறுமையுடனும் நீ அதி சீக்கிரத்தில் பலப்படுத்திக் கொள்ளுதல் வேண்டும்.

ஒட்டகமானது எங்ஙனம் கடினமான வேலை, உஷ்ணம், பசி, தாகம் இவற்றை மணல் வனாந்திரங்களினூடே சிறிதும் களைப்பின்றிச் சகித்துக் கொள்கிறதோ, அங்ஙனமே ஒரு மனிதனுடைய தைரியமும் ஆபத்துக்களெல்லாவற்றி னூடேயும் அவனை ரட்சிக்கிறது.

பெருந்தன்மையான புருஷன் அதிர்ஷ்டத்தின் பகைமையை இகழ்ச்சிசெய்கிறான்; அவனது ஆத்மீகப்பெருமை தாழ்த்தப்படுவதன்று. அதிர்ஷ்டத்தின்புன்னகையினால் அவன்சுகத்தையடைந்தவனன்று. ஆதலால் அதன் அலட்சியத்தினால் அவன் விசனத்தை யடைபவனு மன்று.

கடற் கரையிலுள்ள பாறையைப்போல அவன் உறுதியாய் நிற்கிறான். அலைகளின் வேக சக்தி அவனை அசைக்க முடியாது.

ஒரு குன்றின்மே லுள்ள கோபுரத்தைப்போல அவன் தன் தலையை உயர்த்துகிறான். அதிர்ஷ்டத்தின் அம்புகள் அவன் காலடியில் வீழ்கின்றன.

ஆபத்துக் காலத்தில் அவனது ஹிருதயபராக்கிரமம் அவனை ரட்சிக்கின்றது. அவனதுமனஉறுதி அவனைக்கொண்டுசெல்கிறது.

* * *

அவன், யுத்தத்திற்குச் சென்று ஜயத்துடன் திரும்பும்புருஷனைப்போல, ஜீவித காலத் தீமைகளை எதிர்க்கிறான்.

துரதிர்ஷ்டங்களினால் சூழப்பட்ட காலத்தில், அவனுடைய சாந்தமானது அவைகளின் பாரத்தைக்குறைக்கின்றது; அவனது இடைவிடா முயற்சி அவற்றை யெல்லாம் ஜயித்துவிடும்.

ஆனால் ஒரு பயக்காளியின் அதைரியம் அவனை அவமானத்திற்குட்படுத்திவிடும்.

வறுமையால் பீடிக்கப்பட்டு அவன் தாழ்மை யடைவான். நிந்தனைகளைச் சகித்துக் கொள்வதால் அவன் துன்பங்களை அழைக்கிறான்.

ஒரு துரும்பு காற்றினால்அசையப்படுவதுபோல, தீமையின் நிழலே அவனை நடுக்கச் செய்யும்.

ஆபத்துக் காலத்தில் அவன் கட்டுக் கெட்டுத் தவிக்கிறான். துரதிர்ஷ்ட காலத்தில் அவன் இழிவை யடைகிறான். அவனது ஜீவித காலம் ஏக்கத்தினால் மூடப்படுகிறது.

## புத்தக வரவு.

ஆங்கில அரசாட்சி.—தஞ்சை ஸெண்ட் பீட்டர்ஸ் கல்லூரியில் உதவி போதகாசிரியராயிருந்த பிரஹ்ம ஸ்ரீ டி. கே, சீனிவாசய்யங்காரவர்கள் எழுதிய இச் சிறு தமிழ் நாடகம் நமது பார்வைக்கு வந்தது. ஆங்கில அரசாங்கத்தின் பெருமைகள் இப்புத்தகத்தில் சுருக்கமாக, ஆனால் தெளிவாக, கூறப்பட்டுள்ளன. இப்புத்தகத்தின் 12-வது பக்கத்தில் சிறர் பிள்ளைகளுக்குச் செய்யும் போதனை மிகவும் கவனிக்கத் தக்கது. இப் புத்தகத்தின் விலை அணா இரண்டு. வேண்டியவர்கள் திருவல்லிக்கேணி, கா[illegible]னேஷன் பப்ளிஷிங் ஹௌஸ் என்ற விலாசத்திற்கேனும் [illegible]லது பாலசுப்பிரமணியன் அண்டு கம்பெனி, 32, ஹை[illegible]ட் திருவல்லிக்கேணி என்ற விலாசத்திற் கேனும் எழுதிப் பெற்றுக் கொள்ளலாம்.

வேதாந்த சாராமிருதமும் அத்துவிதரஸமஞ்சரி மூலமும் உரையும்:—வேதாந்த சாராமிருதம் என்ற நூல் (1) சாதனப் பிரகரணம் (2) அத்தியாரோபப் பிரகரணம் (3) அபவாதப் பிரகரணம் (4) மகா வாக்கியப் பிரகரணம் (5) அநுபவ வாக்கியார்த்தப் பிரகரணம் (6) சிரவணாதிப் பிரகரணம் (7) ஜீவன் முக்தப் பிரகரணம் இவ்வணம் ஏழு பிரகரணங்களாக வகுக்கப்பட்டு அனைவர்க்கும் ஆத்மாநுபவ சாதகமாய் ஸ்ரீமத் சதாநந்த பரமஹம்ஸரால் இயற்றப் பட்டுள்ளது; இதை சுப்பைய சுவாமிகள் தமிழில் மொழி பெயர்த்துள்ளார். ஆத்மாநுபவத்தை யடைய முயற்சிப்பவர் ஒவ்வொருவரும் அவசியம் படிக்கவேண்டிய நூல் இது.—அத்துவித



ரஸமஞ்சரி என்னும் நூல் சுமார் 150 வருடங்கட்கு முன் கரூர்ப் பட்டணத்தில் ஞான தீரராய் விளங்கிய ஸ்ரீ சதாசிவப்பிரஹ்மேந்திரர் திருவாய் மலர்ந்தருளியதாகும். இம்மகானது பெயரைக் கேட்டமாத்திரத்திலேயே இந்நூலின் பெருமை எல்லாருக்கும் நன்கு விளங்கும். ஸம்ஸ்கிருத பாஷையில் 45 ஸ்லோகங்களடங்கிய இந்நூலை ஸ்ரீ சுப்பைய சுவாமிகள் தமிழில் மொழி பெயர்த்து உரைசெய்துள்ளார். இந்நூலில் மூலஸ்லோகங்களும் அச்சிடப்பட்டிருக்கின்றன. ஸ்ரீ சதாசிவப் பிரஹ்மேந்திரருடைய சரித்திரமும் சுருக்கமாகவும் நன்றாகவும் வரையப்பட்டிருக்கின்றது.

இவ்விரண்டு புஸ்தகங்களும் ஒன்றாகவே கட்டப்பட்டு அணா ஆறு விலை யிடப்பட்டிருக்கின்றன. வேண்டியவர்கள் சென்னை, கோமளேசுவரன்பேட்டை, லோகோபகாரி ஆபீசுக்கு எழுதிப் பெற்றுக்கொள்ளலாம்.

## சமாச்சாரக் குறிப்புகள்

நமது ராஜப்பிரதியாகிய லார்ட்ஹார்டிஞ்ச் அவர்கள் நாளது வருஷம் நவம்பர்மாதம் 24-ந்தேதியன்று சென்னைமாநகர் வருகின்றாரெனச் செவியுற்று நாம் மிகச் சந்தோஷிக்கின்றோம். இவர் நம்தேயத்தின் ஆதிபத்தியத்தை வகித்ததுமுதல் இதுவரை நம்மவர்கட்குச் செய்துள்ள நன்மைகள் அளவற்றன. சென்ற ஜூன் மாதம் 20-ந்தேதியன்று இவரது ஜனனதினக் கொண்டாட்டம் சீர்பெற நடந்தேறியதினின்றும், ஜனங்கள் இவர் மீது ஆழ்ந்த அன்பும் அதிக விஸ்வாசமும் வைத்திருக்கின்றனரென்று நன்கு புலப்படுகிறது. தன்மீதுவெடிக்குண்டுவிழ்ந்தசமயத்தும் சிறிதும் தளராமலிருந்த அவருடையதைரியமும் அப்பொழுது அவருக்குண்டாய சாந்த குணமும் நம்மால் வியக்கத்தக்கன, மெச்சத்தக்கன. இத்தகைய உத்தமகுணங்கள் வாய்ந்த இராஜதந்திரநிபுணராகிய லார்ட்ஹார்டிஞ்ச் அவர்கட்கு நாம் நல்வரவு கூறுகின்றோம்.

கல்கத்தா போலிஸ் இன்ஸ்பெக்டர் ஜெனரல் "ஸ்வதேசி" என்ற வார்த்தையைப்பற்றி தனது கீழ் உத்தியோகஸ்தர்களுக்கு ஒரு உத்தரவுபிறப்பித்திருக்கிறார். "ஸ்வதேசி" யென்றபதம்குற்றமற்றபதமென்றும் ஸ்வதேசத்தொழில்களை விருத்திசெய்வது மெச்சத்தக்கதென்றும் ராஜாங்கத்தாரால்விரும்பத்தக்கதென்றும்

குறிப்பிட்டுள்ளார். போலீஸார் ஒருவருடைய நடத்தையைப்பற்றி மேலதிகாரிகளுக்கு அறிவிக்கும்பொழுது "அவர் ஒருபிடிவாதமான ஸ்வதேசி", "அவருக்குஸ்வதேசிய அபிப்பிராயங்கள் உண்டு" என்று எழுதி விடுகிறார்களென்றும் ஜன்மதேயச் சாமான்களையே உபயோகிப்பதில் நம்பிக்கை வைத்துள்ளவர்களைதெளிவாக விளக்கிக் காட்டவேண்டுமென்றும் ஒருவர்ராஜாங்கவிஷயத்தில் தலையிட்டுக்கொள்வாரானால் அவர்மிதவாதியா? அமிதவாதியா? கலகக்காரரா? கொலைக்கொள்கையுடையவரா? என்ற இவ்விஷயங்களைப்பற்றி விவரமாக விரித்துரைக்கவேண்டுமென்றும் உத்தரவுசெய்திருக்கிறார். மேற்சொன்னபடி வெவ்வேறுவிதமான கொள்கைகளையுடையவர்களையெல்லாம் ஒன்றாகப்பாவித்து "ஸ்வதேசி" என்றபதத்தாலேயே போலீஸ் அதிகாரிகள் குறித்துக்கொள்கின்றனர் என்பதை நாம் அறிவோம். 1908-வருஷத்தில் திருவனந்தபுரத்தில் போலீஸ் ஸ்டேஷனைக் கொளுத்திய வழக்கு நடந்தகாலத்தில் அவ்வூர்ப்போலீஸார் சிலரைக் கைதி செய்து இவர்கள் "ஸ்வதேசி"கள் என்று ஹைகோர்ட்டில் தெரிவித்த காலத்தில், ஹைகோர்ட்டார் "ஸ்வதேசி" யென்றபதம் குற்றமுள்ளதன்று என்று தெளிவாகத்தீர்மானித்தனர். இனனும் உயர்தர உத்தியோகஸ்தர்களெல்லோரும் அங்ஙனமேகூறியும் எழுதியுமிருக்க கீழ்உத்தியோகஸ்தர்கள் உண்மையைக் கவனியாது தங்களுக்கு எவ்விதத்திலேனும் சந்தேகப்பட்டவர்களையெல்லாம் "ஸ்வதேசி"யென்று சாதாரணமாக வழங்கி விடுகின்றனர். ஆகையால் கல்கத்தா போலீஸ் இன்ஸ்பெக்டர் ஜெனரல் செய்துள்ள இவ்வுத்தரவு சமயோசிதமானதேயென்றும் சாந்தன தேசாபிமானிகள் சிலாகிக்கத்தக்கதேயென்றும் நினைக்கிறோம்.

சென்ற மாதம் 29-ந்தேதியன்று இரவு சென்னைவிக்டோரியா பப்ளிக் ஹாலில் ஒரு பெருங்கூட்டம்கூடிற்று. காரணம்:— ஆப்பிரிக்காவிலிருந்து இப்பொழுதுதான் வந்திருக்கிற மகாமாயாவி. டி. கே. கான் என்பவர் இந்திரஜால மகேந்திரஜால வித்தைகளை எல்லோருக்கும் காண்பிக்கப்போகின்றாரென்பதே. மேனாட்டு நாகரீகத்தில் முழுகிக்கிடக்கும் மேதாவிகளும், சூது என்பதைச் சொப்பனத்திலும் அறியாத சாதுக்களும், இரப்பவர்க்கீயாது கரப்பவர்கட்குத் தொடுக்கக் கங்கணம் கட்டிக்கொண்டிருக்கும் தனவான்களும் ஆகிய எல்லாவித ஜனங்களும் இரவு



9-30. மணிக்குள் 3ரூ, 2ரூ, 1ரூ, கொடுத்து முறையே முதல் வகுப்பு, 2-வது வகுப்பு 3-வது வகுப்புகட்கு டிக்கட்டுகள் வாங்கிக்கொண்டு மேற்படி ஹால் நிறையவந்து கூடிவிட்டனர். குறிப்பிட்ட நேரத்தில் விளம்பரத்திற் கூறப்பட்டபடி சாகச வித்தைகள் காட்டப்படாமையினால், ஜனங்கள் ஆரவாரித்துக் கூச்சலிடத் தொடங்கினர். வித்தைகள் வெளிப்படவில்லை. ஆனால் வாத்திய கோஷத்திற்குக் குறைவில்லை; டிக்கட்டு பரிசோதகரும் தடபுடல் செய்கிறார். பந்தோபஸ்தின் நிமித்தம் அங்கு வந்திருந்தஒருபோலீஸ் சப் இன்ஸ்பெக்டரும் வேறு சிலரும் சந்தேகித்து மேடைமீதேறி திடீரென்று திரையைத் திறந்து விட்டனர். ஆ! ஆ! என்ன ஆச்சரியம்! கான் காணாமற் போய்விட்டான். மாயாஜாலக்கோலை மாத்திரம் அங்கு வைத்துவிட்டு, தான் மறைந்துவிட்டான். அந்த மேஜையின் பேரில் ஒரு கடிதமுமிருந்தது. அக்கடிதத்தில் "ஐயன்மீர்! நாங்கள் 40000 ரூபாய் இழந்து விட்டோம். ஆகையினால் நாங்கள் மிகவும் ஏழைகளாயிருக்கிறோம். நாளைய தினம் போலீஸ் ஸ்டேஷனில் எல்லாவற்றையும் விவரமாய்த் தெரிவிப்போம்" என்று வரையப்பட்டிருந்தது. ஜனங்கள் இச்சங்கதியறிந்தவுடன் வெட்கமும் விசனமுமடைந்தனர். கரவடத்திற் கைதேர்ந்த கான் அன்றிரவு $9\frac{1}{2}$ மணி வரையில் இருந்து வசூலான தொகையையெடுத்துக்கொண்டு மறைந்துவிட்டான். இதுவும் அவனது மாயாஜாலக் கோலினது மகிமையேபோலும்! பகிரங்கப்போலீஸ், இரகஸ்யப் போலீஸ், என்று பலவிதப்பட்ட போலீசார் நிறைந்திருக்கின்ற இச் சென்னைமா நகரில் இத்தனை போலீஸ்வீரர்களையும் ஏமாற்றிச் சென்றவனை நாம் என்னென்றுசொல்லலாம்? மேற்படி கான் என்பவனுடைய விளம்பரக் கடிதமொன்று நம் கையிற் கிடைத்தது. அக் கடிதத்தின் உறையின் மேல்விலாசம் எழுதும் பக்கத்தில் "ஒருதரம் உள்ளே பார்த்தவுடன், அத்தியாச்சரியமான சமாச்சாரத்தை அளிக்கும்" என்று எழுதப்பட்டிருந்தது. இது உண்மையே. ஜனங்கள் திரையை நீக்கி உள்ளே பார்த்தவுடன் கான் காணாமற் போன அத்தியாச்சரியமான சமாச்சாரத்தை அளிக்கவில்லையா? அவ் வுறையினுள் ளிருந்த கடிதத்தின் தலைப்பில் "இருபதாவது நூற்றாண்டின் இந்திர ஜாலம்" என்று எழுதப்பட்டிருந்தது. இதுவும் உண்மையே. இது இருபதாவது நூற்றாண்டின் இந்திர ஜாலமல்லவோ? இதற்கு முன்னர் எப்பொழுதேனும் எவ்விடத்தேனும் இங்ஙனம் நடந்ததாகக்கேட்டதுண்

டா? ஆகையால் தான் உண்மையே உரைத்து ஊராரை ஏமாற்றி ஓடிவிட்டான்! இது ஆப்பிரிக்காக் கண்டத்திய ஜாலமாம்! இவ்விருபதாவது நூற்றாண்டில் இவ்வித ஜாலம் ஆனால் பின்வரும் நூற்றாண்டுகளில் என்ன என்ன இந்திர ஜாலங்கள் நடக்க இருக்கின்றனவோ? நாம் அறியோம். இது நவீன நாகரிகத்தால் நம்மவர்காணும் காட்சியும் பூணும் கோலமுமாம்.

சென்ற சில மாதங்களாக பால்கன் யுத்தம் மும்முரமாய் நடந்துகொண்டிருக்கிறது. ஐரோப்பாவினின்றும் துருக்கியைத் தொலைத்து விடவேண்டுமென்று பால்கன் நாடுகளெல்லாம் ஒன்று சேர்ந்து துருக்கியின் மேற் பாய்ந்தன. துருக்கிக்கு உயிர் நிலை போன்ற எட்ரியாநோப்பிள் முதலிய பட்டணங்களையெல்லாம் கைவசப்படுத்திக்கொண்டன. பால்கன் நாடுகளில் தலைமைவகித்து யுத்தம் நடத்திய பல்கேரியா தேயத்தினர் அப்பொழுது செய்த அக்கிரமங்கள் அளவற்றனவாம். துருக்கி சின்னா பின்னமாகச் சிதற அடிக்கப் பட்டது.

இப்பொழுது பல்கேரியா *'தன்வினை தன்னைச்சுடும்'* என்ற சிருஷ்டி நீதிக் கிணங்க, வெகு சீக்கிரத்தில் தான் துருக்கியின் மீது செய்த அக்கிரமச் செய்கைகளின் பயனை தானே அனுபவிக்கும்படி நேர்ந்துவிட்டது. கிரேக்கர்களும் செர்வியர்களும் ஒன்று சேர்ந்து பல்கேரியாவின் எலும்புகள் எல்லாம் முறியும்படியாக அடித்து நொறுக்கிவிட்டனர். பெரிய பூகம்பங்களும் உண்டாகி, சில கிராமங்களும் அழிந்துவிட்டன. எட்ரியாநோபிளை இழந்திருந்த துருக்கியர்கள் இதுதான் சமயமென்று மறுபடியும் எட்ரியாநோபிளைக் கைவசப்படுத்திக் கொண்டனர். இப்பொழுது சமாதானப் பேச்சுகள் நடந்து வருகின்றன. மகான் கிறிஸ்துவினுடைய மதம் ''வலது கன்னத்தில் அடித்தால் இடது கன்னத்தைகாட்டவேண்டு'' மென்றும் ''ஒருவன் மேலங்கியைக்கேட்பானால் உள்ளங்கியையும் சேர்த்துக் கொடுத்துவிடவேண்டு'' மென்றும் ஒருபுறம் போதிக்க, கிறிஸ்தவ நாகரிகமானது மறுபுறத்தில் கரைப் படைகளையும் கப்பற் படைகளையும் விருத்தி செய்து சண்டைக்குக் கங்கணம் கட்டிக்கொண்டும், மண்ணாசைபிடித்து மண்டலமெல்லாம் தன் தலமாக்கிக் கொண்டும் வருகிறது.!


# ஞானபாநு.

VOL - I. தொகுதி - ௧. | SEPTEMBER 1913. பிரமாதீச ௵ புரட்டாசி ௴ | NO - 6. பகுதி - ௬.


## பார்த்தசாரதியே பாரதசாரதி.

இதுகாறும் இவ்வுலகில் அவதரித்துள்ள அவதார புருஷர்களில் ஈஸ்வரனுடைய பூர்ணாம்சம் பெற்று விளங்கிய ஸ்ரீ கிருஷ்ணாவதார மஹிமாப் பிரபாவங்களே ஜன்மசாபல்யம் அளிக்கத் தக்கனவென்று ஆன்றோர் அறைகின்றனர். நமது ஹிந்து மதத்திற்கு அஸ்திவாரங்களாய்க் கூறப்படுகின்ற பிரஹ்ம சூத்திரம், உபநிஷத்துக்கள், பகவத்கீதை என்ற பிரஸ்தானத் திரயத்தில், கிருஷ்ணாவதார கம்பீர சாராம்சமாகிய பகவத்கீதை மிகவும் விசேஷப் பெருமை யுடைத்து என்று நாம் நினைக்கின்றோம். தலையின்றித் தாளின்றிக் கண்ணின்றிக் காதின்றி யாதொருவித அவயவ வேறுபாடு மின்றி உருட்டிப் பிடித்து வைத்திருக்கும் உண்டைபோல, எழுவா யின்றிப் பயனிலை யின்றி இரண்டொரு வார்த்தைகளில் பிரஹ்மசூத்திரங்கள் அமைந்துள்ளன. உபநிஷத்துக்களோ ஏகமேவாத்விதீயமாய் எங்கும் நிறைந்து தானேதானாகி விளங்கும் பிரஹ்மவஸ்துவைப்பற்றியே கோஷிக்கின்றன. ஆகையால் பிரஹ்மசூத்திரம், உபநிஷத்துக்கள் இவ்விரண்டும் பிரபஞ்சதர்மத்தை விட்டு விலகியுள்ள புத்தியிற் சிறந்த புநிதர்களும் பக்தியிற் சிறந்த பண்டிதர்களுமே கையாளத் தக்கனவென்று நன்குபுலப்படுகின்றது. பகவத்கீதையோ பண்டித பாமர சாதாரண சர்வ ஜனங்கட்கும் அநுகூலமாய் நின்று அவரவரது அபீஷ்டத்தை நிறைவேற்றிக் கொடுத்து அழியாப் பதவியை அளிக்கவல்லது.

நமது ஜனங்கள் பகவத்கீதையைப் பிரஸ்தானத்திரயத்தில் ஒன்றாகப் பாவித்து வருகிறார்களே யொழிய, அதிலடங்கியிருக்கும் விசேஷ ரஹஸ்யங்களைக்கவனிப்பவரைக்காணோம். பிரஹ்மசூத்திரமும், உபநிஷத்துக்களும் ஒவ்வொரு மனிதனுடைய துக்க நிவர்த்திக்கும் ஆநந்தப்பிராப்திக்கும் வழிகாட்டிகளாகு மானால் பகவத்கீதை வியஷ்டிரூபமாகிய ஒவ்வொரு மனிதனுக்கும் சமஷ்

டிரூபமாகிய ஒவ்வொரு ஜனசமூகத்திற்கும் வழிகாட்டியா யிருக்கின்றது. பகவத்கீதையின் பதினெட்டு அத்தியாயங்களையும் பாராயணம் செய்து பலனையடைய விரும்பும் பண்டிதர்கள் நமது ஜனசமூகத்தில் பகவத்கீதையை அனுபவத்திற் பரவச் செய்யவேண்டும். இவ்வுத்தமோபதேசத்தை உலகின் பொருட்டுச் செய்தருளிய ஸ்ரீ கிருஷ்ணனே தண்டகாரண்ணியத்திலோ, நைமிசாரண்ணியத்திலோ காய் கனி கிழங்குகளைத் தின்று காலங்கழிக்கும் மஹரிஷியன்று; நதி தீரங்களிலோ, பர்வத குகைகளிலோ கண்மூடிக் கலக்கமற்று, பிரபஞ்ச சுகபோகங்களை வெறுத்து பிரஹ்ம நிஷ்டையில் எழுந்தருளியிருக்கும் பிராஹ்மணனன்று. ஆனால் க்ஷத்திரிய வம்சத்திற் பிறந்து ராஜ போகங்களை அநுபவிப்பவர், கோபிகா ஸ்திரீகளின் ஹிருதயங்களைக் கொள்ளைகொண்டு கூத்துக்களாடினவர். இவரே குரு.

இவ்வுத்தமோபதேசத்தைச் செவியேற்கும்படியான பாக்கியம் பெற்ற பார்த்தனே சாதனசதுஷ்டய சம்பந்நனாகிய முமுட்சுவன்று; இக்காலத்தில் நாகரிகப்பித்துப் பிடித்துக் குயுக்தி நியாயங்கள் பேசி, தாம் பேசுவதே சரியென்று எல்லாருடைய மனத்திலும் படும்படி செய்து ராஜநீக தர்மங்கள், ஜனசமூக நியாயங்கள் இவற்றைச் சராமாரியாகப் பொழிந்து உலகத்தை உண்மையென்று நம்பி உழலும் ஜனங்களைப் போல, அக்காலத்திலும் அநேகர் இருந்தனர். இவர்களில் அர்ச்சுனனும் ஒருவனே. இவன் ஜனன மரண துக்கத்திற்குப் பயந்து 'வெய்யில் சகித்திடாப் புழுப் போல்வெம்பி,' ஸ்ரீகிருஷ்ண பகவானைச் சரணாகதியாயடைந்தவனன்று. அங்கம், ஆப்தம், ஸ்தானம், ஸத்பாவம் என்ற நான்கு விதங்களால் ஸ்ரீகிருஷ்ணனுக்குப் பணிவிடை செய்தவனன்று.

இன்னும் அர்ச்சுனனுடைய சிற்றின்பானுபவங்கட்கெல்லாம் ஸ்ரீ கிருஷ்ணன் ஆதி முதல் அநுகூலமாயிருந்தார். மதுரை மாநகர்க் கரசியாகிய மங்கையை அர்ச்சுனனுக்கு அமைத்து வைத்ததும் இவரே. தமயன் அறியாமல் தன் தங்கையைக் காண்டீபனுக்குக் கல்யாணம் செய்வித்ததும் இவரே. பார்த்தனுடைய பலவித சில்லரை விளையாடல்களுக்கெல்லாம் அவன் பக்கம் இருந்து துணை புரிந்ததும் இவரே. இடையா, மடையாவென்று அர்ச்சுனன் இவரைப் பரிகாசமாகக் கூப்பிட, இவ்வார்த்தைகளை யெல்லாம் இன்புடன் ஏற்றுக் கொண்டவரும் இவரே.



நிற்க, ஸ்ரீ கிருஷ்ணன் பகவத்கீதையைப் பார்த்தனுக்கு உபதேசம் செய்த சந்தர்ப்பமோ மிகவும் வியக்கத்தக்கது. கௌரவர்களும் பாண்டவர்களும் யுத்த சந்நத்தர்களாய், ஒவ்வொருவருடைய சரீரத்திலும் ரத்தம் கொதித்துக் கொண்டிருக்கின்றது. கத்தி கேடயங்களெல்லாம் பளபள வென்று மின்னல் வெட்டுப்போல் மின்னுகின்றன. வீரர்களெல்லாரும் வில்லெடுத்த கையினராய் வேங்கைகள் போற் சீறி நிற்கின்றனர். எங்கு பார்த்தாலும் யுத்த பேரிகைகள் முழங்குகின்றன. வீர வாதங்களும் சபதங்களும் ஒலிக்கின்றன. சர்வலோக சம்ஹார கர்த்தாவாகிய ஏமனனவன் மிகப் பயங்கரமான உருக்கொண்டு கால காலனாய்க் களத்தினிற் பிரவேசித்திருக்கின்றான். எக்காளங்களும் கொம்புகளும் தப்பட்டைகளும் ஒலியும் எதிரொலியுமாய் நிறைந்தன. ஆ! ஆ! உபசாந்தி பெறுதற்கு உத்தமோபதேசம் செய்யும் இடம் இது தான்! ஆகையால் குரு, சிஷ்யன், உபதேச சந்தர்ப்பம் இவைகளை யெல்லாம் கவனிக்கும்பொழுது, பகவத்கீதையில் ஏதோ விசேஷ ரஹஸ்யம் அடங்கி யிருக்கின்றதென்பது வெளிப்படையாகின்றது.

(இன்னும் வரும்)

சிவம்.

## மனத்தின் தன்மையும் வன்மையும்.

(ஸ்ரீ வ. உ. சிதம்பரம்பிள்ளை யவர்கள் எழுதியது.)

மனம் வாழ்வை விதிக்கும் இறை; நிலைமைகளைச் சிருஷ்டித்துத் திருத்தும் கர்த்தா; தனது சொந்தப் பலன்களை அநுபவிக்கும் போக்தா; பொய்யைச் சிருஷ்டிக்கும் திறனும் மெய்யைக் காணும் திறனும் மனத்திற்கு உண்டு. ஆன்றோரும் "மனத்தானாமாந்தர்க்குணர்ச்சி" என்று கூறியுள்ளார்.

மனம் தளர்ச்சியின்றி விதியாகிய வஸ்திரத்தை நெய்து கொண்டிருக்கிறது; நினைப்பு நூல்; நல்ல செயல்களும் தீயசெயல்களும் பாவும் ஊடும்; ஒழுக்கம் வாழ்வாகிய தறியில் நெய்யப்படும் துணி. மனம் தான் நெய்த வஸ்திரத்தால் தன்னை உடுத்திக் கொள்கிறது. ஆன்றோரும்,

"புண்ணியமாம் பாவம்போம் போனநாட் செய்தவவை
மண்ணிற் பிறந்தார்க்கு வைத்தபொரு—ளெண்ணுங்கா
லீதொழிய வேறில்லை யெச்சமயத் தோர்சொல்லுந்
தீதொழிய நன்மை செயல்"

என்று கூறியுள்ளார்.

மனிதன் மனத்தையுடைய உயிராகையால் மனத்தின் சகல சக்திகளையும் உடையவனா யிருக்கிறான். தான் விரும்புவனவற்றையெல்லாம் அடைதற்குத் தக்க கருவிகளைக் கொண்டிருக்கிறான். அவன் தனது அநுபவத்தினால் கற்கிறான்; அவன் தனது அநுபவத்தை வேகப்படுத்தவும் தாமதப்படுத்தவும் கூடும். அவன் பிறரால் எந்த இடத்திலும் கட்டுப்பட்டிருக்கவில்லை; ஆனால் அவன் தானே தன்னைப் பல இடங்களில் கட்டியிருக்கிறான்; அவன் தானே தன்னைக் கட்டியிருப்பதால், அவன் நினைத்த மாத்திரத்தில் தானே தன்னை அக்கட்டிலிருந்து நீக்கிக் கொள்ளக் கூடும். அவன் தான் விரும்புகிறபடி தூர்த்தனோ அல்லது தூயனோ, கீழ்மகனோ அல்லது மேல் மகனோ, மடையனோ அல்லது அறிஞனோ ஆகக்கூடும். அவன் திரும்பத் திரும்பச் செய்து சுபாவங்களை உண்டுபண்ணிக் கொள்ளலாம்; அவன் அவற்றிற்கு மறுதலையான செயல்களை மேன்மேலும் செய்து அச்சுபாவங்களை அழித்துவிடலாம். அவன் மெய்ப்பொருள் முழுவதும் தனக்கு மறைபடும் வரை தன்னைச் சுற்றிப் பொய்களை அமைத்துக் கொள்ளக்கூடும்; அவன் மெய்ப்பொருளைப் பூர்த்தியாகக் காணும்வரை தன்னைச் சுற்றியுள்ள பொய்களை ஒன்றன்பின் ஒன்றாக அழித்துவிடக்கூடும். அவன் செய்யக்கூடியன அளவற்றன; அவன் பூரண ஸ்வதந்தரத்தை யுடையவன். ஆன்றோரும்

"நன்னிலைக்கட் டன்னை நிறுப்பானுந் தன்னை
நிலைகலக்கிக் கீழிடு வானு—நிலையினு
மேன்மே லுயர்த்து நிறுப்பானுந் தன்னைத்
தலையாகச் செய்வானுந் தான்."

என்று கூறியுள்ளார்.

தனதுசொந்த நிலைமைகளைச் சிருஷ்டித்துக் கொள்வதற்கும், தான் வாழ்வதற்குத் தக்க நிலைகளைத்தெரிந்து கொள்வதற்கும் ஏற்ற சக்தி மனத்தினிடத்தில் உண்டு. மனம் எந்தநிலைமையையும் மாற்றுதற்கும், எந்தநிலைமையையும் அநுபவிப்பதற்கும்



வல்லமையுடையது. அது பலநிலைமைகளை ஒன்றன்பின் ஒன்றாகத் தெரிந்தும், அநுபவித்தும், அவற்றின்ஞானத்தை அடையும்காலையில் தனது நிலைமைகளை ஒன்றன்பின் ஒன்றாக மாற்றிக்கொண்டும் கைவிட்டுக்கொண்டு மிருக்கிறது. ஆன்றோரும்,

"கெடுக்கவல்லதுங் கெட்டவர் தங்களை
யெடுக்க வல்லது மிம்மனம்."

என்று கூறியுள்ளார்.

உள்நோக்கும் நினைப்புக்கள் ஒழுக்கத்தையும் வாழ்வையும் உண்டுபண்ணுகின்றன; மனிதன் நினைப்புக்களைத் தனது விருப்பத்தாலும் முயற்சியாலும் திருத்திக்கொள்ளவும் மாற்றிக்கொள்ளவும் கூடும். சுபாவமும், சக்தியின்மையும் பாவமுமாகிய தளைகள் தன்னாலேயே யுண்டு பண்ணப்பட்டன; அவை தன்னால்மாத்திரம் அறுக்கப்படக்கூடும்; அவை ஒருவனுடைய மனத்திலன்றி வேறெங்கும் இல்லை; அவை புறப்பொருள்களோடு சம்பந்தப்பட்டிருந்தபோதிலும், அவை உண்மையில் அப் புறப்பொருள்களின்கண் இல்லை. புறம் அகத்தால் ஆக்கவும் திருத்தவும் படுகிறது அகம் ஒருபோதும் புறத்தால் ஆக்கப்படுவதும் திருத்தப்படுவதும் இல்லை. பாவநிமித்தம் புறப்பொருளில் இல்லை, ஆனால் அப்பொருளின்மீது மனம் கொண்டிருக்கிற ஆசையில் இருக்கிறது. துன்பமும் துக்கமும் புறப்பொருள்களில் அல்லது வாழ்வின் சம்பவங்களில் ஒட்டிக்கொண்டிருக்கவில்லை; ஆனால் அப்பொருள்களை அல்லது அச்சம்பவங்களைப்பற்றிய மனத்தின் ஒரு ஒழுங்கற்ற தன்மையில் ஒட்டிக்கொண்டிருக்கின்றன. தூய்மையால் ஒழுங்குசெய்யப்பட்டு, ஞானத்தால் பலப்படுத்தப்பட்ட மனம் பிரிக்கக் கூடாதவண்ணம் துன்பத்தோடு கட்டப்பட்டுள்ள சகல கலக்கங்களையும் அவாக்களையும் ஒழித்து தெளிவையும் அமைதியையும் அடைகிறது.

பிறரைக் கெட்டவர் என்று தீர்மானித்தலும், கெடுதிக்கு மூலம் புறநிலைமைகளென்று எண்ணி அவற்றோடு போராடுதலும் உலகத்தின் துன்பத்தையும் அமைதியின்மையையும் அதிகப்படுத்துவதைத்தவிரக் குறைப்பதில்லை. புறம் அகத்தின் நிழல், அகத்தின் காரியம். அகம் சுத்தமாயிருக்கும்பொழுது புறத்திலுள்ள சகல காரியங்களும் சுத்தமாயிருக்கின்றன. ஆன்றோரும்

"கற்றதங் கல்வியுங் கடவுட் பூசையு
நற்றவ மியற்றலு நவையி ருலகமு
மற்றுள வறங்களு மனத்தின் பாலழூங்
கற்றவர்க் கேபய னளிக்கு மென்பரால்."

என்று கூறியுள்ளார்.

சகலவளர்ச்சியும் அகத்திலிருந்தே நிகழ்கின்றது; சகலதிருத்தங்களும் அகத்திலேசெய்யப்படவேண்டும். எவன்பிறரோடு போராடுதலை விட்டுத்தனதுமனத்தைத் திருத்துவதிலும், பலப்படுத்துவதிலும், வளர்ப்பதிலும், தனது சக்திகளைப் பிரயோகிக்கிறானோ அவன் தனது சக்திகளையெல்லாம் ஒருமுகப்படுத்தித்தன்னைப் பாது காத்துக்கொள்ளுகிறான்; அவன் தனது மனத்தைச்சமநிலையில் நிற்கச்செய்த பொழுது, தனதுநினைப்பாலும் அறத்தாலும் பிறரையும் அந்தநல்ல நிலைமைக்குக் கொண்டுவருகிறான்; ஏனெனின், ஒருவன் பிறருடைய மனங்களை நடத்துவதும் ஆளுவதும் ஞானத்துக்கும் சாந்திக்கும் வழிகள் அல்ல; தனதுசொந்தமனத்தின்மீது தனதுநியாயமான அதிகாரத்தைச் செலுத்துவதும், உயர்தர ஒழுக்கங்களாகியநேர்மார்க்கங்களில் தன்னைநடத்துவதும் ஞானத்துக்கும் சாந்திக்கும் வழிகள்.

ஒருவனுடைய வாழ்வு அவனது அகத்தினின்று, அவனது மனத்தினின்று, வருகிறது. அவன் அந்தமனத்தைத்தனதுசொந்தநினைப்புக்களையும் செயல்களையும் கலந்து உண்டு பண்ணியிருக்கிறான். அவன் வேண்டும் நினைப்பைத்தெரிந்து கொண்டு தனது மனத்தைத்திருத்தும் சக்தியை உடையவன். ஆகையால் அவன் தனது வாழ்வையும் திருத்திக்கொள்ளக் கூடும். ஆன்றோரும்

"ஊழையு முப்பக்கங் காண்ப ருலைவின்றித்
தாழா துஞற்று பவர்."

என்று கூறியுள்ளார்.

## ஓர் உத்தமபுருஷரின் உபசேம்.

(பிரஹ்மஸ்ரீ கே. ரெங்கசாமியய்யங்கா ரவர்கள் எழுதியது).

நீமாத்திரம் தனிமையாயிருந்து லாபமடையவேண்டுமென்று கருதாதே. நிஷ்பலமான தியானத்தில்பிரவர்த்தித்து ஸதா மூலையில் உட்காராதே. உன்னைநீ காப்பாற்றிக்கொண்டால் போதும் என்று நினையாதே. நிஷ்காம்யமாய் ஈஸ்வரார்ப்பணமாய்ப் பிரபஞ்சத்திற்குச் செய்யும்நன்மையைத்தவிர மோக்ஷத்திற்கு வேறுமார்க்கமிருப்பதாக எந்தமதமும் சொல்லவில்லை. உலகத்திற்கு உழைக்காமல் மோக்ஷத்திற்குவேறு ஸுலபமானவழி இருப்பதாக நம்பி மோசம்போகாதே. உலகத்தின் வழியாய்த்தான்மோக்ஷமடையவேண்டும். பிறரைக்காப்பாற்ற முயல்வது ஒன்றே தான்தன்னைக் காப்பாற்றிக் கொள்ளும்வழி. நீ உன்னைக் காப்பாற்றிக் கொள்ள என்னசெய்திருக்கிறாய்? என்று கடவுள் நம்மைக்கேட்கிறதில்லை. "உன்னிடத்தில் ஒப்புவிக்கப்பட்ட ஸஹோதர ஜீவன்களுக்குஎன்னநன்மைசெய்தாய்? என்றுதான் அவர்நம்மைக்கேட்கிறார். ஆகையால் தன்னைமறந்து உலகத்தின் ஸுகத்தைக்கருதி உழை. உன்னுடைய ஆத்மாவை பகவானுக்கும் அவருடைய நியதிக்கும் ஒப்புவித்துவிடு. பிறருடைய நன்மைக்காக இரவும்பகலும் ஓயாமல் உழை. சகலஜபதப விரதங்களும் அதுவே. ஈஸ்வரனுக்கு எண்ணம்,கிரியைஇரண்டும் ஒன்றே. உன்னாலியன்றவரையில் அவரைப்போல் அனுஷ்டிக்கப் பிரயத்தனப்படு. பிரபஞ்சத்தினின்றும் அதன் கர்த்தாவை வேறாகப்பிரித்து அவரைமாத்திரம் தியானம் செய்யமுயலாதே. பிரபஞ்சமும் கடவுளும் வெவ்வேறன்றாதலால் அவரைத்தனியாய்ப் பிரிக்கமுடியாது. கடவுளை அவருடைய லீலையாகிய பிரபஞ்சத்தில் தான் தரிசிக்கலாம். ஆகையால் உடல்பொருள் ஆவியைப் பிரபஞ்ச நன்மைக்கு அர்ப்பணம்செய். பிரபஞ்சம் மகத்தாயிருக்கிறதே! நானோ அணுவளவு கூடஇல்லையே; நான் என்னசெய்வேன்! என்று ஏங்காதே. அவருடைய அம்சம் உன்னிலும் இருக்கிறபடியால் நீ அவனாயடையப் பாத்திரன். அவருடைய காரியங்கள் தான் நமக்குக் குரு. அப்படியில்லாத பக்ஷத்தில் அவருடைய லீலா விபூதியாகியபிரபஞ்சத்தை நம்மைச்சுற்றிலும் எதற்காகவைத்திருக்கிறார்? அவைகளிலிருந்து அவருடைய நோக்கத்தை அறிந்துகொள். ஒருஅணுமாத்திரமாவது நாம் அறிந்து கொண்டால் சிருஷ்டியில் அந்தராத்மாவைத்தரிசித்தவர்களாவோம். மூடகர்வத்தை விட்டுவிட்டும் மகா அடக்கமுள்ளவன் போல் வேஷம்போடாமலும்பிரபஞ்சத்தின் சரித்திரத்தை மனப்பூர்த்தியாய்ப்படித்துப்பார். அதில் நமக்கென்ன விளங்குகிறது? நாளுக்குநாள் உலகம் அபிவிர்த்தியாய்வந்திருக்கிறது என்றுவிளங்கவில்லையா? உன்மனமானது ஈஸ்வரன் வஸிப்பதற்குள்ள ஒருபரி

சுத்தமான ஆலயம் என்பதை ஸதா ஞாபகத்தில்வைத்து, அதில் காமக்ரோதாதிகளாகிய அழுக்குகள் சேராமல் ஜாக்கிரதையோடிருந்து அன்பாகிய எண்ணெய்வார்த்து ஸத்தியமாகிய விளக்கை ஏற்றி அவ்விளக்கு அணையாமல் வைராக்கியமாகிய தூண்டுகோலால் தூண்டிக்கொண்டே இருக்கவேண்டும். இந்தவிளக்கின் வெளிச்சத்தில் உன் வாழ்நாளின் லட்சியம் இன்னதென்று ஐயத்திரிபறவிளங்கும். அந்த லட்சியத்தையடைவதற்கு அநுகுணமானதெல்லாம் நன்மைபயக்கும்; அல்லவைதீமைவிளைவிக்கும். முன்னதைத் தழுவியும் பின்னதைத் தள்ளியும்தினம் ஒழுகக்கடவாய்.

உனக்கேற்பட்டிருக்கும் கடமைகளைச் செய்வதில் கர்வம் கொள்ளாதே. டம்பமும்பாராட்டாதே. "அவனன்றிஓரணுவுமசையாது" "எல்லாம் ஈசன்செயல்" என்னும்வாக்கியங்களின் அர்த்தம் தெரியாது மனிதப்பிரயத்தனம் சற்றும் அவசியமேயில்லையென்றும் வருகிறதுவரட்டும்என்றும்சோம்பேறியாயிராதே. அது துக்கத்தை எதிர்கொண்டழைப்பதாகும். துன்பத்துக்கு இடம் கொடாதே. தீமையை ஜயிக்கமுடியாவிட்டால் உயிர்போனாலும் போகட்டும் என்று கடைசிவரையில் அதனுடன்போராடு. ஜயித்தால் தீரனாகிறாய்; ஜயம்கிடைக்காமல் நீபிராணனை இழக்கவேண்டிநேர்ந்தால் அதில் ஒன்றும் நஷ்டமில்லை. உன்புலால் உடம்புபோய் என்றும் அழியாத புகழுடம்பு பெறுவாய். யுத்தத்தில்பின்வாங்கி முதுகுகாட்டி ஓடினவனைமாத்திரம் உலகம்நிந்திக்கும். ஜயம் அடைந்தவனுக்கும் ஸத்விஷயத்துக்காகத்தன் உயிரைவிடுத்தவனுக்கும் வித்தியாசமில்லை.

நினது சரீரம் ஈஸ்வராலயம். அதை எப்போதும் பரிசுத்தமாய் வைத்துக்கொள். உனக்குக்கொடுக்கப் பட்டிருக்கும் மனைவி, மக்கள், வீடு, நிலம், செல்வம் எல்லாம் ஈஸ்வரனுடையதே. அவைகளை நீநினைத்தபடியெல்லாம் செய்யஉனக்கு அதிகாரமில்லை. ஒரு யஜமானனுடைய பொக்கிஷத்துக்கு அதிகாரியானவன் தன்னிடத்தில் ஒப்புவிக்கப்பட்ட பொக்கிஷத்தை எப்படித் தன் ஸௌகர்யத்தைக்கவனியாமல் யஜமானனுடைய ஸௌகர்யத்துக்கே செலவு செய்வானோ அப்படியே கடவுளால் ஒப்புவிக்கப்பட்ட ஐஸ்வரியத்துக்கு நீ ஒருபொக்கிஷதாரனேயொழிய சொந்தக் காரனன்று என்பதை ஒருபொழுதும் மறக்காதே. பிறருடைய ஸௌகர்யத்துக்கு அவற்றை உபயோகப்படுத்தினால் அவைஉனக்குலாபம்பயக்கும். அன்றேல் அவை உனக்குத் தீமையே விளைவிக்கும். மேற்சொன்னதின் உண்மையை எவன் நம்பவில்லையோ அவன் நாஸ்திகனே.



உலகவாழ்க்கை நரகமேறது என்று நினையாதே. பிறருடைய துக்கத்தையும் துன்பத்தையும் தீர்க்குமானால் உன்னுடையசெல்வம் உன்னைநற்கதிசேர்ப்பிக்கும். உன்னுடையகாமக்ரோதாதிகளுக்கு உபயோகப்பட்டால் அவை உன்னைப்பாழ்நரகத்துக்கே இட்டுச்செல்லும். எல்லாத்துன்பங்களுக்கும்வேர் எதுவென்றால் "நான்" 'எனது'என்னும்அகங்கார மமகாரந்தான். இதைஅடியோடுவேரறுத்து நீஎந்தக் காரியம்செய்தாலும் அதுகடவுளுக்கு அங்கீகாரமாயிருக்கும்.

ஒவ்வொருவனும் உலகத்தின்பொது நன்மைக்காக தன்னயத்தை ஒழித்து உழைப்பானானால் இவ்வுலகமே ஸத்தியலோகமாகிவிடும். காலதேசவர்த்தமானம் ஜாதிமதபேதங்கள் இவைபொருட்டாகமாட்டா. உன்லாபத்தைவிட உன்குடும்பத்தின் லாபம் பெரிது. உன்குடும்பத்தைவிட உன்தேசம்பெரிது. உன்தேசத்தைவிட இந்தமாநில உலகம் மிகப்பெரியது. உலகத்தைவிட பிரபஞ்சம் பெரியது. பிரபஞ்சத்தைத்தாண்டினால் கடவுளை எதிரெதிராய்ப்பார்ப்பாய். நீசெய்கிற ஒவ்வொருகாரியமும் பேசுகிறபேச்சும் எண்ணுகிற எண்ணமும் பிரபஞ்சத்திலிருக்கும் தீமையைக் கடுகளவாவது குறைத்து நன்மையை அணுவளவாவது அதிகரிப்பதாயிருக்கட்டும். மேற்சொன்னபடி நடப்பாயானால் நீ சக்ரவர்த்தியானாலும்சரி அல்லது கையெழுத்துப்போடவும் தெரியாதவிறகுவெட்டியானாலும் சரி, உன்யோக்கியதை ஸமமாயிருக்கும். பிரபஞ்சமானது நீ அதில்பிரவேசித்தபோதிருந்ததைவிட நீ அதைவிட்டுப்போனபிறகு நீ அதில் கொஞ்சநாள் வசித்ததற்காக சற்றேனும் மேன்மையடைந்திருக்கும் என்பதில் அணுவளவும் ஐயமில்லை.

கடவுளிடத்தில் இருக்கும்பக்தியை உலகத்திலுள்ளசர்வஜனங்களிடத்திலும் உனக்குள்ள அன்பால்வெளிப்படுத்து. கடவுளை வணங்குவதற்காக அவரால் சிருஷ்டிக்கப்பட்டிருக்கும் மனிதர்களை கௌரவப்படுத்துவதில் அவரிடத்தில் உனக்குள்ள அன்பைக்

காட்டு. பிரபஞ்சத்தைவிட்டுக் கடவுளை வேறாகக்காணலாம் என்று பிரயத்தனப்படுவது ஈஸ்வரஸம்மதமானதன்று. நாளடைவில் தன்னுடையஸ்வரூபம் மனிதனிடத்தில் மேன்மேலும் பிரகாசிக்க வேண்டுமென்ற கடவுளுடைய நோக்கத்தை மனதில்வைத்து அதற்கநுகுணமாய் நடந்துகொள். மனோவாக்குக் காயங்களால் அந்த லட்சியத்தை அடைய நீவழிதேடுவதுடன் உன் ஸஹோதரர்களையும் அப்படியேசெய்யும்படி தூண்டி உன்கோஷ்டியில்சேர்த்துக்கொள். தீமையென்பது அழியாதவஸ்துவல்ல; ஆனால் அதோடுபோராடுவதற்கு பிரபஞ்சத்திலுள்ள மனிதர் எல்லோரும் ஒருங்குசேர்ந்துபோராடவேண்டும். நமக்குக்கடவுள் பகுத்தறிவு கொடுத்திருப்பது இந்நோக்கத்தை உத்தேசித்தே தான். ஒருவன்படும்வேதனையைத்தீர்ப்பதும், அழும்கண்ணீரைத் துடைப்பதுமே உன்ஜன்மஸாபல்யம் என்றுகருது.

இந்தவிஷயத்தில் இவன்நமதுஸமீபத்துஇவன் அந்நியன்என்றுவித்தியாசம்பாராட்டாதே. எந்தஇடத்தில் மனிதர் ஒருவரை ஒருவர் ஸ்வயலாபத்துக்காக உபத்திரவம்பண்ணுவதும், ஒருவரையொருவர் அடிமைப்படுத்துவதும் தான் ஸரியானமார்க்கம் என்று கருதிநடக்கிறார்களோ அங்கேதான் துன்பத்தின் அதிஷ்டானதேவதைவஸிப்பதாகநினை. அதைஜயித்தாலல்லது நற்கதி இல்லை. உன்னால் அடிமைப்படுத்தப்படுபவர் உன்மனைவியாயினும் சரியே அந்நியனாயினும்சரியே,வேறுஜாதிமதஸ்தனாயினும் சரியே உன்னிடம் சம்பளம்வாங்கிஜீவனம் செய்யும்சேவகனாயினும்சரியே அதிலொன்றும் வித்தியாசமில்லை.

பாபத்தைவெறு. பாபகாரியங்களைச்செய்பவனைவெறுக்காதே அவனிடத்திலுள்ள சற்குணங்கள் ஒரு கூடைசாம்பலின்கீழ் அகப்பட்டுக்கொண்ட ஒருசிறுதீப்பொறிபோல் அகங்காரமமகாரத்தில் அகப்பட்டுக்கொண்டு பிரகாசிக்கச் சக்தியில்லாமல் ஸ்வரூபத்தை இழந்ததுபோலிருக்கின்றன. நற்குணங்கள் உன்னிடத்தில் எப்படி இப்போதுவிளங்குகின்றனவோ அப்படியே அவனிடத்திலுள்ள அற்பப்பொறிபோன்ற நற்குணமும் நாளைக்குப்பெருகி விளங்கத்தக்கதே. ஆதலால் நாளைக்கு உன்னுடையநிலைமைக்கு வருபவனாகக்கருதி உன் அயலானைநேசி. நீ எந்தஸமாஜத்தில் இருக்கிறாயோ அதைரக்ஷிக்கப்பாடுபடு. பிறருக்கு உபதேசம் பண்ணுவதை நிறுத்து. ஜனஸமுகத்தின்லாபத்தைவிட ஒருமனித



னுடைய லாபம்பெரிதென்று நினையாதே. தர்மம் என்பதுபொது ஜனலாபத்துக்கேற்பட்டது. ஆதலால்தர்மத்துக்கே உழை. உனக்கு உரிமைகள் ஒன்றுமில்லை. உனக்கு ஏற்பட்டகடமைகளை மனப்பூர்த்தியாய்ச்செய்துவிட்டு அதன்லாபநஷ்டத்தை ஈஸ்வரார்ப்பணம் செய்துவிடுவதே உன்னுடைய வேலையாயிருக்க வேண்டும். இதைச்செய்துவிட்டேன், அதைமுடித்துவிட்டேன் என்று கர்வம் அடையாதே. பொம்மலாட்டத்தில் ஆடுகிறபொம்மை "நான்நன்றாய் ஆடிவிட்டேன்" என்றுகர்வமடையுமோ? பொதுஜன அபிப்பிராயம் ஈஸ்வரஸம்மதமில்லாததாயிருந்தால் அதை நீ சட்டைசெய்யாதே.

வேதசாஸ்திரஆகமங்களை உனக்கு விளக்குகிறேன் என்று வரும் ஒவ்வொருவனையும் குருவென்று அங்கீகரிக்காதே. கடவுளுடையஜோதிஸ்ஸும் அருளும் உனக்குவிளங்காமற்போகும்படி அவர்கள்மறைத்துவிடுவார்கள். ஸூர்யசந்திரநக்ஷத்ராதிகளும் பஞ்சபூதங்களும் பாபி பரமஹம்ஸன் எல்லோரிடத்திலும் ஒரேசீராயிருக்கிறார்களே. அதிலிருந்து நமக்குவிளங்குவதென்ன? கடவுளுடையகருணைக்கு பாபி, புண்ணியாத்மா இருவரும் பாத்தியப்பட்டவர்கள். எப்படிநமக்கும் ஸூரியனுக்குமத்தியில்மேகங்கள் வந்து ஸூர்யகாந்தியை மறைக்கிறதோ அதேமாதிரி துன்மார்க்கங்களும், அகம்பாவமும் நமக்கும் ஈசுவரனுக்குமத்தியில் ஏற்பட்டு ஈசுவரஸ்வரூபத்தை நாம்அறியவொட்டாமல் தடுக்கிறது. உலகத்தில் இதுவரையில் அவதரித்து அதற்கு ஒருபூஷணமாயிருந்துவிட்டு தங்கள்ஸ்தூலசரீரத்தை விட்டு நமது கண்ணுக்குமறைவாயிருந்து கொண்டு நாளைக்கும் உலகத்தில் நன்மைக்கேஉழைத்துவரும் மகான்களுடைய குணாதிசயங்களையும், அன்பையும் பிறர்பொருட்டுதங்கள் ஜீவன்களையும் கொடுக்கும் உதாரத்தையும் நமக்குகைகாட்டிமரங்களாக நாம்கருதவேண்டும்.

ஸந்தேகம்வந்தவுடனே ஸமீபத்திலிருக்கும் எவனிடத்திலும் ஓடி உன்ஸந்தேகத்தைத் தீர்த்துக்கொள்ளமுயலாதே. உன் பஞ்சேந்திரியங்களின் சேஷ்டையைச்சற்று நிறுத்திமனதை உன் ஆத்மஸ்வரூபத்தினிடத்தில் செலுத்திசற்றுநேரமாயினும்தினம் தியானத்தில் உன்மனதை நிலை நிறுத்து. உனக்கு விளங்காதவிஷயங்கள் நாளடைவில் விளங்குவதை நீயறிவாய். எவனிடத்தில் தீவிரபுத்தியும் நன்னெறியும் பொருந்தியிருக்கிறதோ அவனேபகவத்ஸாக்ஷாத்காரம்பெற்று உலகத்துக்குவழிகாட்ட ஏற்பட்டவன்.

உன்னிடத்திலும் ஈஸ்வராம்சம் நிலைபெற்று ஒருபொழுதும் அகலாதிருக்கிறதென்பதையும்மறக்காதே. உனக்கு ஸத்தியம், நியாயம் என்றுஉள்ளங்கைநெல்லிக்கனிபோல் துலங்குகிற காரியத்தில் அயலானுடைய அபிப்பிராயத்தைச் சட்டைசெய்யாதே. பூரண அன்பு, கௌரவம், பரோபகாரம் இவைகுடிகொண்டிருக்கட்டும். அயலான் சொல்வதையெல்லாம்கேட்டு அவனை திருப்திசெய்யப்பிரயத்தனப்படாதே. கடவுளுடைய பிரதிபிம்பமாகிய உன் ஆத்மா எதை உனக்குக்கற்பிக்கிறதோ அதையேசெய். கடவுளிடத்தில் பூரணவிஸ்வாஸம் இருந்தாலொழிய ஐஹிக ஆமுஷ்மிக லாபங்கள் எதுவும் உனக்குஸித்திக்காது. கர்மம்பெரிது, யோகம்பெரிது, ஞானம்பெரிது, பக்திதான் எல்லாவற்றிலும்பெரிது, பஞ்சேந்திரியங்களின் அனுபவம்பெரிது அல்லது புத்தியே பெரிதுமுதலான வீண்தர்க்கங்களில் தலையிட்டுக்கொள்ளாதே. இவை ஒவ்வொன்றும் அவசியம் தான். ஆனால் அவைகள் எல்லாம் துணைக்கருவிகள். அவைகள் எல்லாம் நற்கதிக்குநம்மை நடத்தும். நமது வாழ்நாளின் லட்சியம் மாத்திரம் ஸதாஸர்வதாகாலமும் நமக்கெதிரில் நிற்கவேண்டும். நேற்றைவிட இன்றைக்கும் இன்றைவிட நாளைக்கும் அந்தலட்சியத்தை நாம் ஸமீபித்து அணுகவேண்டும்.

நிஷ்காம்யகர்மம் ஜனஸமூகத்தின் ஒத்த வாழ்க்கைக்கு அஸ்திவாரமாயிருக்கட்டும். கூலியும் வேலைக்குத்தகுந்தபடி யிருக்கட்டும். வேலைசெய்யாதவனுக்குக் கூலியில்லை.

நாலுபேரை ஒருபொது நன்மையைக்கருதி, ஸ்வப்ரயோஜனத்தைக்கருதாது, ஓரிடத்தில் சேரும்படிசெய்யும் எந்தக்காரியமும் கடவுளுடைய வேலை யென்றே நினை. அதிலிருந்து வேற்றுமைப்படுகிறவர்களை அவர்களுடைய அபிப்பிராயங்களுக்காக நிந்திக்காதே. அவர்களை ஜனங்கள் அவமதித்து உபத்திரவம் செய்யாமல் காப்பாய்.

தெய்வபக்தியோடு கலந்தகல்வியை ஜனங்களுக்குக்கற்பிக்க நீ கடமைப்பட்டவன். அந்தக்கல்வியின் அறிகுறி என்னவென்றால் அது மனிதனை நேற்றிருந்ததைவிட இன்றுநல்லநிலைமைக்குக்கொண்டுவந்திருக்கவேண்டும். அந்தக்கல்வியின் முடிவு எப்படியிருக்கவேண்டும்? மனிதர்களிடத்தில் நீதி நிலைத்திருக்கவேண்டும்.

மேற்சொல்லிவந்த விஷயங்களை நீ ஒப்புக்கொள்ளாமல் வெறுக்கலாம். ஆனால் நீங்கள் வெளிவேஷம்போட்டுக்கொண்டு வெகு



வினயத்தோடு செய்யும் வைதிக கர்மங்களைவிட மேற்சொன்னவைகளே மேம்பட்டவையென்று ஸர்வஜன ஸம்மதம் ஏற்படும் காலம் சமீபத்திலிருப்பதாய் எனக்குத்தோற்றுகிறது.

## சின்னச்சங்கரன் கதை.

சாவித்திரி என்னும் நமது நேயர் எழுதியது.

### மூன்றும் அத்தியாயம்.

### ராமசாமிக்கவுண்டர் திருச்சபை.

(65-வது பக்கத்திலிருந்துதொடர்ச்சி.)

ஸாயங்காலத்துக் கச்சேரி முடிந்தவுடன் கவுண்டரவர்கள் குதிரைவண்டியிலேறி ஊரைச்சுற்றி ஸவாரிசெய்துகொண்டு வருவார். கவுண்டநகரம், சரித்திரப்பெருமையும், "க்ஷேத்திர மஹாத்மியமும்" வாய்ந்த ஊராயினும், அளவில்மிகவும்சிறியது. ஐந்து நிமிஷத்துக்குள் குதிரை வண்டி இதைச்சுற்றி வந்துவிடும். இதற்குப் பன்னிரண்டிடத்தில்"வாங்கா"ஊதுவார்கள். இந்த"வாங்கா" என்பது பித்தளையில் ஒருவித ஊது வாத்தியம். பறையர் இதனை ஊதிக்கொண்டு ஜமீந்தாரவர்களின் வண்டிமுன்னே குடல் தெறிக்க ஓடுவார்கள். சிலதினங்களில் பல்லக்கு ஸவாரி நடக்கும். இன்னும் சில சமயங்களில் ஜமீந்தாரவர்கள் ஆட்டு வண்டியிலேபோவதுண்டு. "ஆட்டுவண்டி" ஸவாரிக்கு உதவுமா என்று படிப்பவர்களிலே சிலர் வியப்படையக்கூடும். இரண்டு ஆடுகளை வழக்கப்படுத்தி, அவற்றுக்கிணங்க ஒரு சிறு வண்டியிலே பூட்டி, வண்டி, ஆடுகள் இவற்றைச்சேர்த்து நிறுத்தால், அவற்றைக் காட்டிலும் குறைந்த பக்ஷம் நாலுமடங்கு அதிகநிறைகொண்டஜமீந்தார் ஏறிக்கொண்டு தாமே பயமில்லாமல் ஓட்டுவார். குதிரைகள் துஷ்ட ஜந்துக்கள். ஒரு சமயமில்லாவிட்டால் ஒரு சமயம் கடிவாளத்தை மீறி ஓடி எங்கேனும் வீழ்த்தித்தள்ளி விடும். ஆடுகளின் விஷயத்தில் அந்த ஸந்தேகமில்லை யல்லவா? இன்னும் சில சமயங்களில் ஜமீந்தார் ஏறு குதிரை ஸவாரி செய்வார். இவருக்கென்று தனியாக ஒரு சின்னக்குதிரை மட்டம்—ஆட்டைக்காட்டிலும் கொஞ்சம் பெரிது—தயார் செய்து கொண்டு வருவார்கள். அதன் மேல் இவர் ஏறி உட்கார்ந்த வுடனே, அதற்கு முக்கால்வாசி மூச்சு

நின்றுபோம். பிரக்கினை கொஞ்சந்தான் மிஞ்சியிருக்கும். எனினும் இவருக்கு பயந்தெளியாது. இவருடைய பயத்தை உத்தேசித்தும், குதிரையை எப்படியாவது நகர்த்திக்கொண்டு போகவேண்டுமென்பதை உத்தேசித்தும் முன்னும், பின்னும், பக்கங்களிலுமாக ஏழெட்டு மறவர் நின்று அதைத்தள்ளிக்கொண்டு போவார்கள். ஜமீந்தார் கடிவாளத்தை ஒரு கையிலும், பிராணனை மற்றொரு கையிலும் பிடித்துக்கொண்டு பவனிவருவார்; வாங்கா சத்துக்குக் குறைவிராது. இந்த வியவஹாரம் ஒரு நாள் நடந்தால், பிறகு மூன்று நான்கு வருஷங்களுக்கு இதை நினைக்கமாட்டார்; அதற்கப்பால் மனுஷன், எப்படியும், க்ஷத்திரியனல்லவா? பயந்தெளிந்து பின்னொருமுறை நடக்கும். இவர் இப்படிக் கோழையாக இருப்பதைக்கருதி யாரும் நகைக்கலாகாது. அர்ஜுனனும், வீமனும், அபிமன்யுவும் தோன்றிய சந்திரவம்சத்தில் நேரேபிறந்ததாக இதிஹாசங்களிலே கோஷிக்கப்படுகின்ற கவுண்டஹூர் ராஜகுலத்தில் இவர் சேர்ந்திருந்தும், இவ்வாறு கொஞ்சம் அதைரியப்படுவதற்குச் சில ஆழ்ந்த காரணங்களுண்டு. இவருக்குப்புத்திரபாக்கியம் இல்லை. அதற்காகப் பலவித ஹோமங்கள், பூஜைகள் கிரகசாந்திகள், தீர்த்தயாத்திரைகள், யந்திரஸ்தாபனங்கள் முதலியன செய்துகொண்டு வருகிறார். இந்த அவஸரத்திலே குதிரையிலிருந்து தவறி விழுந்து உயிர் போய்விடுமானால் பிறகு இவருடைய சந்ராதிபத்யத்துக்கு ஒரு மகன் பிறக்க இடமேயில்லாமல் போய்விடுமல்லவா? எத்தனைபேர் குதிரையிலிருந்து விழுந்து செத்திருக்கிறார்கள். அதையும் கவனிக்க வேண்டாமா? சிலமாதங்களுக்கு முன்பு கூட ருஷியா தேசத்தில் ஒரு குதிரைப்பந்தயத்திலே ஒருவன் வேலிதாண்டி விழுந்து உயிர் போய்விட்டதாக சுதேசமித்திரன் பத்திரிகையில் எழுதியிருந்த விஷயத்தை இவரிடம் யாரோவந்து சொல்லவில்லையா? நாலு காரியத்தையும் யோசனை செய்து தானே நடக்கவேண்டும். ஒருதரம்போனவுயிர் திரும்பி வருமா? ஸாயங்காலத்து ஸவாரி முடிந்தவுடனே கவுண்டரவர்கள் அரமனைக்குள் வருவார். நாலைந்து பேராக இருந்து இவருடைய ஐரோப்பிய உடுப்புகளைக் கழற்றி யெறிந்துவிட்டு வேஷ்டி உடுத்துவார்கள். உத்தரீயத்தைத் தாமாகவே வாங்கி மேலே போட்டுக் கொள்வார். மனுஷன் வேலைக்குமாத்திரம் பின்வாங்க மாட்டார். அது ஒரு குணம் இவரிடத்தில். பிறகு கைகால் சுத்தி செய்து கொண்டு லேஹ்யம் சாப்பிட்டபிறகு சாய்காற்காலிக்கு



வந்து விடுவார். அப்பால், வெற்றிலை, புகையிலை, ஊர்வம்பு, கதை முதலியன.

இரவு சுமார் பத்துமணியாகும்போது, ஜமீந்தாருக்கு ஒருவாறு புகையிலைச்சாறும் லேஹ்ய வெறியுமாகச்சேர்ந்து தலையை மயக்கி சாய்ந்தபடி, கதை கேட்கக் கூடமுடியாதவாறு, செய்துவிடும். வம்பு பேசும் 'கார்யஸ்தர்களுக்கும்', நின்றுநின்று காலோய்ந்து போய்விடும். எனவே கவுண்டர் எழுந்து கைகால் சுத்தி செய்வித்துக்கொண்டு, ஸந்தியாவந்தனம் செய்து முடித்து, லேஹ்யம் தின்றுவிட்டு, அந்தப்புரத்திலே போய் சாஸ்திரப்படி முப்பத்திரண்டு கவளம் சாப்பிட்டு உடனே நித்திரைக்குப் போய்விடுவார். ஜமீந்தாரவர்களுக்கு ஐந்து மனைவிகளுண்டு. ஆனால் ஜமீந்தாரவர்களோ அர்ஜுனனுக்கு நிகரானவர்—விராடநகரத்தில்இருந்த அர்ஜுனனுக்கு—. அதாவது, மஹாராஜ ராஜபூஜித மஹாராஜ ராஜஸ்ரீ மஹாராஜ மார்த்தாண்ட சண்டப்ரசண்ட அண்டபகிரண்ட கவுண்டாதி கவுண்ட கவுண்டநகராதிப ராமசாமிக்கவுண்டரவர்கள் பரிபூரண நபும்ஸகனென்று தாத்பர்யம். இவருடைய தினசரிக்காரியம் ஒருவாறு சொல்லிமுடித்தோம். இன்னும் எவ்வளவோ சொல்லவேண்டியிருக்கிறது. சந்தர்ப்பம் வாய்க்கு மிடத்து அப்போதப்போது சொல்லுகிறோம். இவ்வத்தியாயத்தின் மகுடத்திலே குறிப்பிட்டபடி இவருடைய சபையைப்பற்றி மாத்திரம் கொஞ்சம் விரித்துச் சொல்லப்போகிறோம், நம்முடைய கதாநாயகனாகிய சங்கரன் இந்த சபையைச் சேரவேண்டியவனாக இருக்கிறபடியால். ராமசாமிக் கவுண்டர் தமிழிலும், ஸங்கீதத்திலும், வித்வானென்று முன்னமேயே சொல்லி யிருக்கிறோம். அவருடைய சபையிலுள்ள பண்டிதர்களுடைய பெயர், இயல், சிறப்பு, முதலியவற்றைச் சிறிது விஸ்தரிக்கின்றோம். வித்வான் அண்ணாத்துரை அய்யர், தர்க்காலங்கார ஸர்வசாஸ்த்ரஸாகர உபய வேதாந்த ப்ரவர்த்தன நிவர்த்தன ஸம்வர்த்தனாசார்ய பெருங்குன்றம் கிடாம்பி யாச்சான் ஆம்ரோதனாசார்யர், முத்தமிழ்ச்சிங்கக்குட்டி. முத்துக்கருப்பண பாவலர், தோடி நாராயணய்யங்கார், முடுக்குபல்லவி வேதாசலக்குருக்கள், கம்பராமாயணப்பிரசங்கம் ஆறுமுகக்கவுண்டர், வேலக்கவுண்டர், மூங்கிலறுப்பு ராமசந்திரபாகவதர், அறுபத்துநாலக்ஷரப் பிச்சாண்டிபாகவதர், பரமததூஷணஸ்வமதபூஷண, ஸர்வமத பாஷாண பூர்ண பஸ்ம சிவனவர்கள், தொ

ல்காப்பியம் இருளப்ப பிள்ளை, காமரஸமஞ்சரி சுந்தரய்யர், இவர்களே முக்கிய வித்வான்கள். இனி சில்லரை வித்வான்கள் பலருமுண்டு.

மேலே சொல்லப்பட்ட வித்வான்களெல்லோரும் புடைசூழ்ந்திருக்க, வானத்துப் புலவர்களுக்கு நடுவே இந்திரன்போலவும் (வானத்து) மீன்களுக்கு நடுவே ஆமை (சந்திரன்) போலவும், இன்னும் எதை யெல்லாமோ போலவும், கவுண்டர் கொலுவீற்றிருந்தார்.

அப்போது அடைப்பை தூக்கும் தொழி லுடையவனும் ஆனால் முத்தமிழ்ப் புலவர்க்குள்ளே, மிகச் சிறந்த வகுப்பில் வைத்து எண்ணத் தக்கவனுமாகிய முத்திருளக்கவுண்டன்வந்து, பின்வருமாறு விண்ணப்பஞ் செய்து கொள்ளலானான்.

“புத்தி” என்றான் முத்திருளன்.

(ஜமீந்தாரவர்களிடம் வேலையாட்கள் பேசும்போது “புத்தி” என்று தொடங்குவது கழக்கம். இந்தச் சொல்லை இந்த இடத்தில் இந்த அர்த்தத்தில் வழங்குவதற்குள்ள விசேஷ காரணத்தைக் கண்டுபிடித்துச் சொல்லும்படி தமிழ் நாட்டில் மலிந்து கிடக்கும் பாஷா பரிசோதனைப் பண்டிதர்களிடம் பிரார்த்தனை செய்து கொள்ளுகிறேன். நான் யோசனை செய்து பார்த்ததில் எனக்கு ஒன்றுமே விளங்கவில்லை. சிற்சில காரணங்கள் தோன்றுகின்றன. ஆனால் ஒருவேளை சரியாக இருக்குமோ இராதோ என்ற அச்சத்தால் இங்கு வெளியிட மனம் வரவில்லை.)

“புத்தி” என்றான் முத்திருள்.

என்ன, முத்திருளா, உன் முகத்தைப் பார்த்தால் ஏதோ நல்ல ஸமாச்சாரம் கொண்டு வந்திருக்கிறதுபோல்தோன்றுகிறது. என்ன, நான் நினைத்தது சரியா, தப்பிதமா? என்று ஜமீந்தார் கேட்டார்.

ஐயோ! அவ்விடத்து ஸமூஹத்திலே ஒரு வார்த்தைசொல்றது, அது தப்பியும் போகிறதா? இது எங்கேயாவது நடக்கிற சங்கதியா? மனுஷ்யாளுடைய நெஞ்சுக்குள்ளிருக்கிற மர்மத்துக்குள்ளிருக்கிற ரஹஸ்யத்துக்குள்ளிருக்கிற ரஹஸ்யமெல்லாம், மஹாராஜாவுடைய புத்திக்கு உள்ளங்கை நெல்லிக்கனிபோலவும், கண்ணிலே விழுந்திருக்கும் பூவைப் போலவும், நன்றாகத் தெரிந்து போகுமே! அடியேன் மனஸிலிருக்கிறது தெரியாதா? என்றான் முத்திருளன்.



கொஞ்சம் தெளிவு குறைந்ததும், தர்க்க சாஸ்திர விதிகளுக்கு இசையாததுமான இந்த ஸ்துதியைக்கேட்டுக்கவுண்டரவர்கள்மிகவும் ஸந்தோஷமடைந்து, முப்பத்திரண்டு பற்களில் விழுந்தது போக மற்றுள்ள காவிபூத்த பற்களெல்லாம், பெரியவும் சிறியவுமாகிய மாதுளங்கனி விதைகளைப் போலவும், வேறுபல உவமைப் பொருள்களைப் போலவும், வெளியே தோன்றும்படி பலமான மந்தஹாஸம் புரிந்தார். முத்திருளன் மீது பொதுவாக எப்போதுமே ஜமீந்தாரவர்களுக்கு அன்பதிகம். அவன் நெடுநாளைய வேலைக்காரன்; பல தந்திரங்கள் தெரிந்தவன். தவிரவும் பால்யத்தில் ஜமீந்தாரவர்கள் கொஞ்சம் சில்லரை விளையாட்டுக்கள் விளையாடிய போது உடந்தையாக இருந்து பலவித உதவிகள் செய்தவன். இன்னும், இன்னும் எத்தனையோ காரணங்களுண்டு. ஆனால்பிரபுக்களின் தயவாகிய நதியின் மூலத்தை விசாரிக்கலாகாது.

முத்திருளா, மற்றவர்களுடைய கவியும் சரி, உன்னுடைய வார்த்தையும் சரி, அவர்களுடைய கவி கேட்பதிலுள்ள சுகம் உன் பேச்சிலேயிருக்கிறது, என்று ஜமீந்தார் தனது வேலைக்காரனை மெச்சினார், அவன் தம்மைப் புகழ்ந்து பேசியதற்கு வெகுமதியாக. சபையிலிருந்த புலவர்களுக்கெல்லாம் அடிவயிற்றிலே எரிச்சலுண்டாயிற்று. இது முத்திருளக் கவுண்டனுக்குத் தெரியும். ஜமீந்தாருக்குக் கூட ஒருவேளை தெரிந்திருக்கலாம். அப்படியிருந்தும் அவர்களெல்லோரும் தமது எரிச்சலை உள்ளே அடக்கிக் கொண்டு வெளிப்படையாக ஜமீந்தாருடையகருத்தை ஆமோதித்துப் பேசினார்கள். உபய வேதாந்த ஆ...சாரியர், ஆமாம், மஹாராஜா! ஸம்ஸ்க்ருதத்திலே பாணகவியைப் போல நம்முடைய முத்திருளக் கவுண்டன். அவர் தமது காதம்பரியை வசனநடையிலே தான் எழுதியிருக்கிறார். அப்படியிருந்தும், பாட்டாகச் செய்யப்பட்டிருக்கும் எத்தனையோ காவியங்களைக் காட்டிலும் அதைப் பெரியோர்கள் மேலானதாகச் சொல்லியிருக்கிறார்கள். ஆனால் பாணகவி உட்கார்ந்து புஸ்தகமாக எழுதினார். நமது முத்திருளக் கவுண்டன் சிரமமில்லாமலே பேசுகிற பாவனையில் அத்தனை பெரி

யதிறமை காட்டுகிறான். இவனை வசன நடையில் ஆசுகவி என்று சொல்லலாம் என்று திருவாய் மொழிந்தருளினார்.

உடனே, முத்திருளன் அவரை விரஸத்துடன் நோக்கி, "செய்யுளும் நமக்குப் பாடத்தெரியும், சாமீ! ஏதோ வாயினால் சும்மா உளறிக் கொண்டிருப்பான், பாட்டுப் பாடத்தெரியாதவன் என்று நினைத்து விடவேண்டாம" என்றான், தனக்குக் கவிபாடத் தெரியுமென்பதையும், அவருக்கு அத்தொழில் தெரியாதது பற்றித்தனக்கு அவரிடம் மிகவும் அவமதிப் புளதென்பதையும், அவருக்குக் குறிப்பிட்டுக் காட்டும் பொருட்டாக. ஆ...சாரியர்தமது உள்ளத்திலே எழுந்த கோபத்தை அச்சத்தினால் நன்றாக அடக்கி வைத்துக்கொண்டு, "பாணகவி செய்யுள் பாடுவதில் இளைத்தவனென்று நினைத்தாயோ? அஹா, முத்திருளக்கவுண்டா! நீ ஸம்ஸ்க்ருதம் படித்திருக்கவேண்டும். படித்திருந்தால் நீபாணகவிக்கு நிகரானவன் என்பது உனக்கே நன்றாகத் தெரிந்திருக்கும்" என்று திருவாய் மொழிந்தருளினார்.

[சதாரணமாக, ஆ...சாரியரைப் போன்ற மஹான்கள் பேசுவதை 'திருவாய் மலர்ந்தருளினார்' என்று சொல்வது வழக்கம். அப்படியிருக்க, நாம் 'திருவாய் மொழிந்தருளினார்' என்று புதிதாகச்சொல்வதற்கு இரண்டு காரணங்களுண்டு. அவருக்குத்தமிழ்ப் பாஷையில் அதிகப்பழக்கமில்லாத போதிலும், திருவாய் மொழிப் பிரபந்தம் முழுதையும் பாராமல் குட்டியுருவாகச் சொல்லக் கூடியவரென்பதை, நாம் ஒருவாறு குறிப்பிட விரும்புதல் ஸாமான்யக் காரணம்; சரியான காரணம் இன்னும் சில வரிகளுக்கப்பால் தானே விளங்கும்.] பிறகு முத்திருளக் கவுண்டன் தனக்கு ஸம்ஸ்க்ருதம் தெரியாதென்பதை ஆ...சாரியர் கேலி பண்ணுகிறாரென்று நினைத்துத் தலையை நேரே தூக்கிக்கொண்டு, அவனது மீசை, கிருதாக்கள் துடிக்கப் பின்வருமாறு உபந்யாஸம் செய்யலானான்.

சாமி, அய்யங்காரவாளே, சாமிகளே, அப்படியா வந்து சேர்ந்தீர்கள். (சபையோர் நகைக்கிறார்கள்) இந்தக் கதையா? இதெல்லாம் முத்திருளனிடம் வைத்துக் கொள்ள வேண்டாம். சென்னப்பட்டணத்தில் சி. வை. தாமோதரம் பிள்ளை என்று ஒரு மஹா வித்வான் இருந்தாரே கேள்விப்பட்டதுண்டா? அவர் சூளாமணி என்னும் காவியத்தை அச்சிட்டபோது அதற்கெழுதிய முகவுரையை யாரைக் கொண்டேனும் படிக்கச் சொல்லியாவது கேட்ட



துண்டா? திருவனந்தபுரம் பெரிய கலா சாலையில் தமிழ்ப் பண்டிதராகி, அன்னிய பாஷைகள் ஆயிரங்கற்று, நிகரில் புலவர் சிகரமாக விளங்கிய சுந்தரம் பிள்ளையவர்கள் எழுதிய நூல்களில் ஏதேனுமொன்றை எப்போதாவது தலைக்கணையாக வைத்துப் படுத்திருந்ததுண்டா? அல்லது அவர் புஸ்தகங்கள் வைத்திருந்த அலமாரியை மோந்துபார்த்ததுண்டா ? அப்படி மோந்து பார்த்தவர்களையேனும் மோந்து பார்த்ததுண்டா? (இந்த அற்புதமான வாக்கியத்தைக் கேட்டு சபை கலீரென்று நகைக்கிறது. ஆ...சாரியர் பேசுவதற்காகத் திருவாய் மலர்ந்தருளினார். ஆனால் மலர்ந்த திருவாய் மொழிவதற்குள்ளாகவே முத்திருளன் அவரைப் பேச வொட்டாதபடி பின்வருமாறு கர்ஜனை புரியலானான்) சாமி, சாமிகளே, அய்யங்காரவாளே, பிறர் பேசும்போது நடுவிலே, குறுக்கேபாயக் கூடாதென்று உங்கள் ஸம்ஸ்க்ருத சாஸ்திரங்களிலே சொன்னது கிடையாதோ? அல்லது ஒரு வேளை சொல்லியிருந்தால் அதை நீங்கள் படித்தது கிடையாதோ? சாமிகளே, மேலே நான் சொல்லிய புலவர்களும், இன்னும் ஆயிரக்கணக்கான வித்வச் சிரோமணிகளும், பதினாயிரக்கணக்கான பண்டிதர்களும், நாற்பதினாயிரக்கணக்கான, லக்ஷக்கணக்கான, கோடிக்கணக்கான, பத்திராசிரியர்களும் வடமொழியைக் காட்டிலும் தமிழே உயர்ந்த பாஷையென்பதை உள்ளங்கை நெல்லிக்கனிபோல விளக்கிப் பசுமரத்தாணி போல நாட்டியிருக்கிறார்கள். நீவிர் அதனை யுணராது குன்றுமுட்டிய குரீஇப் (குருவி) போல இடர்ப்படுகின்றீர்.

"தொண்டர் நாதனைத்தூதிடை விடுத்தது முதலை
உண்ட பாலனை யழைத்ததும்...ம்,...ம்,...ம்,
தண்டமிழ்ச் சொலோமறு புலச் சொற்களோ
சாற்றீர்?" என்ற பாட்டைக் கேட்டதுண்டா?

இந்தப் பாட்டிலே சில வார்த்தைகள் முத்திருளனுக்கு ஸமயத்தில் ஞாபகம் வரவில்லையாதலால் அவற்றை விழுங்கி விட்டு பிழையாகப் பாட்டைச் சொல்லி முடித்தான். சபையில் பலருக்கு இந்தப்பாட்டு நன்றாக ஞாபகமுண்டு. ஆயினும் அவனைத்திருத்தப் போனால் தங்கள் மீது பாய்ந்து விடுவானென்று பயந்து புலவோர்கள் வாய்மூடி மவுனமாக இருந்து விட்டார்கள். அவர்கள் திருத்தாமலிருக்கும் படியாகவே முத்திருளன் அவர்களைச் சுற்றி

கோக்ஷ மிகவும் பயங்கரமான தோர் பார்வைபார்த்து விட்டு மேலே கர்ஜனை செய்கிறான்:—

இனி வடமொழியில் தான் வேதம் உளதென்று நீர் ஒரு வேளை சொல்லலாம். அஃது எங்கள் தேவார திருவாசகங்களுக்கு நிகராகுமா? இந்தப்பாடலுக்கு நான் இப்போது பொருள் சொல்லமாட்டேன். உமக்குத் தெரியாவிட்டால், வீட்டிலே போயிருந்து கொண்டு படிப்புத்தெரிந்த வாலிபப் பிள்ளை எவனையேனும் அழைத்து அவனிடம் பொருள் கேட்டுக் கொள்ளும்.

(சபை கலீரென்று நகைக்கிறது ஆ...சார்யர் முடிசாய்த்து விட்டார்) "ஆங்கானும், தமிழ்ப் பாஷைக்கு நேரானதோர் பாஷையில்லை. அதிலும், வடமொழி நமது தமிழ் மொழிக்குச் சிறிதேனும் நிகராகமாட்டாது. தமிழ் கற்றோர் அனைத்துங் கற்றோர். அறியும். அறியும். அறியும். இனி வித்வான்களுடைய சபையிலே வாத்தை வாய் திறக்கவேண்டாம்".

வாயிலே நுரைக்கும்படி முத்திருளன் இவ்வாக்கியம் சொல்லிமுடித்து, மேலே பேசமூச்சில்லாமல் கொஞ்சம் நின்றான். அப்போது ஆ...சார்யர் மிகவும் ஹீனஸ்வரத்திலே, முத்திருளா, என்ன இப்படிக் கோபித்துக் கொள்ளுகிறாயே. நான் பாணகவிக்கு நிகரென்று உன்னை ஸ்தோத்திரமாகத் தானே சொன்னேன். விஷயத்தைக் கவனியாமலே வீண்கோபம் செய்கிறாயே, என்று திருவாய் மொழிந்தருளினார்.

## நமது பூமியே புண்ணிய பூமி. *

(பிரஹ்மஸ்ரீ ஆர். நாராயணசாமி அய்யரவர்கள் மொழி பெயர்த்தது.)

ஆஹா! எவ்வித பூமியிது! இந்தப் புண்ணியபூமியில் பிறக்கும் எவனும், சுதேசியாயினும் சரியே, அந்நிய தேயத்தவனாயினும் சரியே,—தன்னுடைய ஜீவனை மிருகத்தன்மைக்குச் சமமாகத் தாழ்த்தி யிருந்தாலொழிய—தன்னைச்சுற்றிலும் உலகத்திலேயே அதிமேன்மையான பரிசுத்தகுணம் பொருந்திய முனிவர்களின் மனோபாவனைகள் சூழ்ந்திருப்பதை உணராமல் இருக்கமாட்டான்; அநாதிகாலம் முதற்கொண்டு இம்முனிவர்கள் மிருகங்கட்குச் சமமாக இருக்கும் மனிதர்களைத் தெய்வத் தன்மையடையும்படி செய்து கொண்டே வருகின்றனர். இங்கு வீசும் காற்றும் ஆத்மஞானவாசனைகள் நிரம்பப்பெற்றது. தத்துவம், சன்மார்க்கம், ஆத்மஞானம் முதலியனவைகள் நிறைந்துள்ள பரிசுத்த க்ஷேத்திரம் இந்தப் பூமியே; மனிதனானவன் மிருகத்தன்மையைப் பாதுகாப்பதற்காகப் படுகிற கஷ்டங்களினின்றும் அவனை விடுவிக்கவல்ல சக்திகளும். இந்த மிருகத்தன்மையான போர்வையை உதறியெறிந்து விட்டு ஜனனமற்று மரணமற்று நித்தியாநந்த சொரூபமாயுள்ள ஆத்மாவாகவே தான் நிற்கும்படி செய்வதற்கு அநுகூலமான பயிற்சிகளும் நமது பூமியிற்றான் நிறைந்திருக்கின்றன. சுகங்களே பூர்த்தியாக நிறைந்திருந்தாலும் இதைக்காட்டிலும் அதிகமாகவே துக்கங்களும் நிறைந்திருந்தபடியால், மனிதனானவன் சகலமும் மாயை என்று முதன் முதலில் கண்டுபிடித்தது இப்பூமியிற்றான். யௌவன தசையிலேயே, டாம்பீகத்தின் மடியிலேயே, பெருமையின் உன்னதத்திலேயே, பூர்த்தியான அதிகாரத்திலேயே, மனிதனானவன் பொய்க்காட்சியின் விலங்குகளை முதன் முதலில் பொடித்து ஊதியது இந்தப் பூமியிலேதான். மனிதவர்க்கமென்னும் இந்த சாகரத்தில், இவ்விடத்திலேதான், ஒன்றோடொன்று ஊடுருவி யோடிக் கொண்டிருக்கின்ற இன்பம்—துன்பம், பலம்—பலஹீனம், தனம்--தரித்திரம், சுகம்—துக்கம், புன்னகை—கண்ணீர், ஜீவிதம்—மரணம் என்று சொல்லப்பட்ட பலமான நதிப்பிரவாகங்களின் மத்தியில் நித்தியானந்த மென்றும் உபசாந்தமென்றும் உரைக்கப்பட்ட (சகலவற்றையும் சின்மாத்திரமாகக்) கரைக்கின்ற லயத்தினின்றும் சர்வசங்க பரித்தியாகமாகிற ஆசனம் கிளம்பிற்று! ஜீவிதம், மரணம், ஜீவிதஇச்சை இவைகளைப் பற்றியுள்ள பெருங்கேள்விகள் முதன் முதலில் இங்குதான், இப்பூமியிற்றான் வெகுதீவிரமாய்க் கேட்கப்பட்டு, விடை பெற்றன. இவ்விடைகள் இதுவரையில் ஒருபொழுதும் அளிக்கப் பெற்றிராதவிதமாயும் இனிமேலும் ஒருபொழுதும் அளிக்கப்பெறா என்று சொல்லக் கூடிய விதமாயும் இருக்கின்றன; ஏனென்றால் இங்கே, இப்பூமியிற்றான், வாழ்க்கையே துக்கம் என்றும் சத்தியமாயிருக்கும் ஏதோ ஒன்றின் சாயாமாத்திர மென்றும் கண்டு பிடிக்கப்பட்டது. இப்பூமியிற்றான் மதமானது அநுபவ உண்மையாக விளங்கியது; இதரநாடுகளில் அவர்கள் எங்ஙனம் எளிய சகோத

* இஃது ஸ்ரீமத் விவேகாநந்த ஸ்வாமிகளால் ஆங்கில பாஷையில் எழுதப்பட்டது.

ர்களைக் கொள்ளை யடித்தாலும் வாழ்க்கைச் சுகங்களை அநுபவிப்பதற்குப் பித்துப் பிடித்து முற்படுகிறார்களோ, அங்ஙனமே (ஜீவிதகால) லட்சியத்தை அநுபவத்தில் அடைவதற்கு புருஷர்களும் ஸ்திரீகளும் தைரியமாய் முற்பட்டது இப்பூமியிற்றான். இந்தப்பூமியிலே மாத்திரந்தான் மனிதனுடைய ஹிருதயமானது விரிவடைந்தது; இவ்விதம் விரிவடைந்த ஹிருதயத்திற்குள் மனிதவர்க்கம் மட்டுமன்று, பட்சிகள், மிருகங்கள், புல்பூண்டு வர்க்கங்கள் ஆகிய எல்லாம் அடங்கின; உயர்ந்த தேவதைகள் முதல் தாழ்ந்த மணற்பருக்கைகள் வரையில் மகா உயர்ந்தவைகளும் மிகத்தாழ்ந்தவைகளும் ஆகிய எல்லாம் எல்லையற்று விரிவடைந்த மனித ஹிருதயத்திற்குள் இடங்கண்டு கொண்டன. இந்தப் பிரபஞ்சம் முழுவதும் இடைவெளியற்ற ஓரேவஸ்து வென்றும் அதன் ஒவ்வொரு நாடியும் தன்னுடைய நாடியே என்றும் மனிதன் அறிந்தது முதன் முதலில் இந்தப் பூமியிலேயே தான்.

## புத்தகவரவு.

ஆதங்க நிக்கிரஹ ஔஷதாலயத்தின் சகலவிவரங்களும் அடங்கிய ஓர் புத்தகம் வரப்பெற்றோம். ஆதங்கநிக்கிரஹ ஔஷதாலயத்தைப் பற்றி அறியாதார் மிகவும் சிலரே. இதன் ஸ்தாபகராகிய வைத்தியசாஸ்திரி மணிசங்கர் கோவிந்தஜீ அவர்கள் 1881-வது வருஷத்தில் ஒருமிகவும் சிறிய அறையில் ஒரே எளிய சேவகனுடன் இம்முயற்சியை ஆரம்பித்தாரென்றும் இப்பொழுது இம்முயற்சி மேற்படி வைத்திய சாஸ்திரியினது விடாமுயற்சியினாலும் ஊக்கத்தினாலும் பலப்பட்டு நமது தேசத்தின் நாலாபக்கங்களிலும் கிளையாபீசுகளும் ஏற்பட்டிருக்கின்றனவென்றும் நாம் அறிகிறோம். ஆதங்கநிக்கிரஹ ஔஷதாலயத்தின் அற்புதமான விளம்பரங்களை எல்லாப்பத்திரிகைகளிலும் காணலாம். இந்திய தேசத்துச் சக்கரவர்த்தி, சக்கரவர்த்தினி, காத்தியவார் தேசாதிபதியும் க்ரிக்கெட் என்னும் பந்துவிளையாட்டில் உலகமெங்கும் பிரக்கியாதி பெற்றவரும் ஆகிய மகாராஜாதிராஜ் ரஞ்ஜிதசிங்கம், ஔஷதாலயத்தின் ஆதிகர்த்தாவாகிய வைத்தியசாஸ்திரி மணிசங்கர் கோவிந்தஜீ, அவரது புத்திரர்கள், காரியஸ்தர்கள், தலைமையாபீஸ், கிளையாபீஸ்கள், இவ்வாலயத்தைச்



சேர்ந்த தர்மஸ்தாபனங்கள் இவைகளின்படங்கள் மேற்படி புத்தகத்தில் மிக அழகாகவும் பார்ப்பவர் மனதை வசீகரிக்கத் தக்கதாகவும் இருக்கின்றன. இப்பொழுது இவ்வாலயத்தை மேற்பார்த்து சகல காரியங்களையும் நடத்திவருபவர் வைத்திய சாஸ்திரி மணி சங்கர் கோவிந்த்ஜீ அவர்களின் மூத்த குமாரராகிய எஸ். எம். ஜோஷி பி.ஏ. என்பவராகும். "முயற்சியுடையார் இகழ்ச்சி யடையார்" என்பதற்கு இவ்வாலயமே ஓர் அத்தாட்சியாகும்.

## சமாச்சாரக் குறிப்புகள்.

கல்கத்தாவில் சட்ட விஷயங்களில் சாமர்த்திய சாலியாகிய டாக்டர் ராஷ்விகாரி கோஷ் என்பவர் கல்கத்தா சர்வகலாசாலை மேன்மேலும் பிரயோஜனகரமாய்ப் பிரகாசிக்கும் பொருட்டு பத்துலட்சம் ரூபாய் மேற்படி சர்வகலா சாலைக்கு தர்மம் செய்துள்ளார். இப்பெருந் தொகையைச் சர்வகலா சாலைச் சங்கத்தார் இன்ன விதமாய் உபயோகிக்க வேண்டுமென்று சில நிபந்தனைகளும் எழுதிவைத்திருக்கிறார். இவருடைய தர்ம சிந்தனையையும் தானமஹிமையையும் குறித்து நாம் சந்தோஷப் படுவதுடன், இவருக்கு இகத்திலும் பரத்திலும் சுகம் உண்டாகவேண்டுமென்று ஈஸ்வரனை இறைஞ்சுகின்றோம்.

நமது சென்னை மாகாணத்தில் எத்தனையோ கோடீஸ்வரர்கள், லட்சாதிபதிகள் இருந்தும், ஜன்மபூமியின் முன்னேற்றத்திற்குரிய பரோபகார காரியங்களில் சிறிதும் செலவுசெய்யாமல் உண்டு உடுத்து மகிழ்வதே உயிர்வாழ்க்கை யென்று சும்மாயிருப்பதென்னே? வித்தியா விஷயத்தில் தர்மம் செய்தவர்கள், புலால் உடம்பு போயும் புகழுடம்பு பெற்று நிலைத்திருக்கும் பச்சையப்ப முதலியாரைத் தவிர இந்நாட்டில் வேறு எவர்?

* * * *

பெஸண்டு அம்மையாரை நம்மால் மறக்க முடியவில்லை. எவரால் தான்மறக்க முடியும்? புகழும் வசையும் சமமெனக் கருதவேண்டுமென்று பிரசங்க மேடைகளினின்று பேசிடிபோல் கூவுகின்ற இவர்தனக்கு மானநஷ்டம் ஏற்பட்டு விட்டதென்று மாஜிஸ்டிரேட் கோர்ட்டில் 'ஹிந்து'.பத்திராதிபர். மீதும் டாக்டர்

நாயர் மீதும் பிரியாதுகள் கொண்டு வந்ததும், மாஜிஸ்டிரேட்டவர்கள் இவ்விருவர் மீதும் குற்றம் ஏற்படவில்லையென்றும், அவர்கள் எழுதியவை பொதுஜன நன்மையைக் கருதியேயென்றும் தீர்ப்பு அளித்த சமாச்சாரம் எல்லோரும் அறிவார். பெஸண்டு அம்மையாருக்கு அந்தரங்க மந்திரியாகிய அருண்டேல் என்பவர் பிரியாது பிரதிகூலமாய் முடிந்ததைக் கண்டு கோபாவேசத்தால் குதித்தார்; மாஜிஸ்டிரேட்டை வெறுத்தார். பெஸண்டு அம்மையாரோ பிரதிவாதிகளின் வக்கீலைப் பழித்தார்; அப்பீல் செய்து ஹைக்கோர்ட்டில் நியாயம் பெறுவதாக ஆர்ப்பரித்தார். இப்பொழுது ஹைக்கோர்ட்டில், டாக்டர் நாயர் குற்றவாளியல்லவென்று மாஜிஸ்டிரேட் செய்த தீர்மானத்தை மாற்றி, பிரியாதை விசாரணை செய்யவேண்டுமென்று மனுச்செய்து கொண்டார். ஆனால் 'ஹிந்து' பத்திராதிபர் மீது கீழ்க் கோர்ட்டில் சுமத்திய குற்றத்தை விசாரிக்க வேண்டுமென்று கேட்கவில்லை. இதற்குக் காரணம் 'ஹிந்து' பத்திராதிபரும் பெஸண்டு அம்மையாரும் சமாதானமாய் விட்டதாக "அடையாறு புல்லெட்டின்" என்ற பத்திரிகையில் கூறபட்டிருந்ததேபோலும்! டாக்டர் நாயர் சமாதான உடன்படிக்கைக்கு இணங்கவில்லையோ? என்னமோ? யாம் அறியோம். ஹைக்கோர்ட்டில் ஜட்ஜி எய்லிங் அவர்கள் மாஜிஸ்டிரேட்டினுடைய தீர்மானத்தையே அச்சாணி வைத்து அறைந்து உறுதிப்படுத்தினார். அன்னி பெஸண்டு அகன்ற அறிவையுடையவர் என்பதிற் சந்தேகம் இல்லை. ஆனால் அவருடைய ஹிருதயம் எம்மட்டிலும் சுத்தமும் குரோத களங்கமற்றதும் பச்சாத்தாபம் நிறைந்தது மாயுள்ளது என்ற விஷயத்தில் நமக்கு மிகவும் சந்தேகம் உண்டு.

* * * *

விதவா விவாஹ வீரராகிய ராவ்பகதூர் விரசலிங்கம் பந்துலு அவர்கள் பேரில் 'கார்லீலியன்' என்ற ஒருமாத மிருமுறைப் பத்திரிகையின் பத்திராதிபராகிய டி. ஸ்ரீராமலு பி.ஏ. என்பவர் ஒரு மானநஷ்ட வழக்குத் தொடுத்திருக்கிறார். கேஸ் விசாரணையிலிருக்கிறது. ஆதலால் நாம் நமது அபிப்பிராயத்தை நிறுத்தி வைக்கிறோம். ஆனால் 'ஹிந்து' பத்திரிகையில் வெளியாய்க் கொண்டு வந்த வாதியின் நீண்டதோர் வாக்குமூலத்தில் விதவாவிவாக வைதீகராகிய வீரசலிங்கம் பந்துலு அவர்கள் பேரில் விபரீதமாயுள்ள பல வதந்திகள் கூறப்படிருக்கின்றன.

---

ஞானபாநு.

VOL - I. தொகுதி - ௧. | OCTOBER 1913. பிரமாதீச ௵ ஐப்பசி ௴ | NO - 7. பகுதி - ௭.

## பார்த்தசாரதியே பாரதசாரதி.

(முன்தொடர்ச்சி).

ஸ்ரீ கிருஷ்ணன் பார்த்தனுக்குப் பரம புருஷார்த்த ரஹஸ்யங்களை உபதேசித்த காலமோ சில நிமிஷங்களே! மானிடவர்க்கமானது இந்தச் சில நிமிஷங்கட்கு என்றென்றைக்கும் கடமைப்பட்டிருக்கிறது. காலகதியில் இந்தச் சில நிமிஷங்களே சிறந்துள்ளன. இந்தச் சில நிமிஷங்களில் போதிக்கப்பட்ட ரஹஸ்யமானது இற்றைக்குச் சுமார் 5000 வருஷங்கட்கு மேற்பட்டு விட்டபோதிலும் இன்னும் 'ரஹஸ்யத்துக்குள் ரகஸ்யம்' என்று பகவானே கூறியுள்ளவாறு ரஹஸ்யமாகவே யிருக்கின்றது. ஆ! ஆ! பயங்கரமானதோர் யுத்தகளத்தில் ரதத்தினுள்ளே பச்சாத்தாபத்தினால் பதறி வில்லை வீசி யெறிந்துவிட்டு வீழ்ந்து கிடக்கும் வீராதி வீரனாகிய விஜயனையும் அவன் பக்கல் அவனது ரதத்திற் பூட்டிய அல்வங்களின் கடிவாளங்களைக் கையிற்பிடித்துக்கொண்டு புன்னகைசெய்து அவனைப் போர்க்கு எழுப்புகின்ற தேவதேவன், திருமால் வடிவினன், தேவகிபுத்திரனாகிய ஸ்ரீ கிருஷ்ணனையும் நீங்கள் உங்கள் மனதில் கற்பித்துப்பாருங்கள்! சில நிமிஷங்களில் வெளிவந்த, ஜன்மஸாபல்யத்தைத் தவறாது அளிக்கத்தக்க கீதையின் மஹிமையை உணரவேண்டுமாயின் இக்காட்சியில் லயித்து ஏகாக்கிரசித்தத்துடன் நிறுத்திய சில நிமிஷங்களே போதும்.

என்ன ஆச்சரியம்! விஜயனது ஹிருதயத்தில் வீரம் குறைந்து ஈரம் நிறைந்து வீழ்ந்தவுடன், கண்ணன் செய்த புன்முறுவலானது உலகத்தைப் பிரகாசிப்பித்து விட்டது. தோழர்கள் வந்து கண்ணன் மண்ணைத் தின்றானென்று தாயிடம் முறையிட, "நான் மண்ணைத்தின்னவில்லை; ஆனால் என்வாய்க்குள் நீ மண்ணைப்பார்க்கலாம்" என்று தாயிடம் தனது திருவாயைத்திறந்து அவ்வாய்க்குள் ஈரேழுபதினான்கு உலகங்களையும் எழிலுறக்காட்டிய எம்பெருமானது வாய் அசையுமானால், அவ்வாய்க்குள் அடங்கிய உலகங்கள்

உண்மையை அறிந்து உயர்வை அடையாரோ? கைவல்லியநவநீதத்திலும் குரு உபதேசாரம்பத்தில் சிஷ்யனிடத்தில் புன்முறுவல் புரிந்ததாகக் கூறப்பட்டுள்ளது. புன்முறுவலே சிஷ்யனைப் பொலிவுறச்செய்வதுபோலும்! கிருஷ்ணன் எந்த நிமிஷத்தில் புன்னகை செய்தாரோ, அந்த நிமிஷமே பார்த்தன் மேன்மையடைந்தான்; அவன்மட்டுமன்று, உலகமும் உய்ந்து விட்டது. பகவத்கீதா ரஹஸ்யமே ஸ்ரீ கிருஷ்ணனது ஜீவிதகாலம். அவரது ஜீவிதாநுபவமே அவரது உபதேசம். தன்னுடைய உபதேசத்தையே தனக்கு அநுபவமாகக் கொண்டுள்ள ஜனங்கள் இக்காலத்தில் எத்தனை பேர் உளர்? வாய்ப்பேச்சு அநுபவமாகுமோ? ஒரு விதவையுடன் வியபசாரம் செய்துவந்த வேதியர் ஒருவர் தமது புராணப் பிரசங்கத்தில் ஓர் இடத்தில் "விதவை வியபசாரம் செய்வாளாயின், அவளும் அவளது புருஷனும் ரௌரவாதி நரகத்தை யடைந்து என்றென்றைக்கும் மலத்தைத்தின்னும் புழுக்களாகவே யிருப்பார்கள்" என்றுசொல்ல, அதைக்கேட்டிருந்த விதவாநாயகி வீட்டிற்குவந்து கதவைத் தாளிட்டுக்கொண்டு படுத்துக்கொள்ள, வேதியனாகிய சோரபுருஷன் வெகுநேரம் கழித்துவந்து கதவைத்தட்ட, விதவை "தாங்கள் இப்பொழுது தானே விதவை வியபசாரம் செய்யலாகாது என்று புராணம் படித்துப் பலர்க்கும் போதித்தீர்கள்; ஆகையால் இனிமேல் என்னிடத்தில்வரலாகாது" என்று கூற, வேதியன் "ஏட்டுச்சுரைக்காய் கறிக்காகுமோ? புஸ்தகத்திலுள்ளது அநுபவத்திலாமோ?" என்று பதிலுரைத்தானாம். இத்தகைய வேதியரே நிறைந்ததிவ்வுலகம். காலம் கலியுகமன்றோ?

இன்னும் ஸ்ரீ கிருஷ்ண சரித்ராமிருத சாகரத்தில் நீந்தி விளையாடிக்கொண்டே யிருப்போமானால், துன்பம் நீங்கிவிடும்; இன்பம் ஓங்கிவிடும். வேதாந்தவிசாரசாகரமானது விற்பன்னர்கட்கன்றி மற்றோர்க்கு—சாதாரணமாக சமுத்திரமானது திரையும் நுரையும் நிறைந்து உப்புமலிந்து விளங்கினும் ஆழ்ந்து மூழ்குபவர்கட்கு ஆணிமுத்துக்களை அளிக்குமாப்போல—"நாதனிலே வெள்ளை நுழையாது" என்ற ஆன்றோரது வாக்கு உண்மையாக, விரும்பத்தகாததாகவும் பயங்கரமானதாகவும் தோன்றும், ஆனால் பக்குவத்தில் பலனளிக்கும். ஸ்ரீகிருஷ்ண சரித்திராம்ருத சாகரமோ பண்டிதபாமரசாதாரண சர்வஜனங்கட்கும் இன்பமாய்க் கீழும்



மேலும் நடுவும் உள்ளும் புறமும் எங்கெங்கும் அமிருதமயமாய் நிறைந்து எல்லோரையும் ஆநந்த குதூகலத்தில் அமிழ்த்தி விடுகின்றது. ஆகையினாலன்றோ சுகமே சொரூபமாய் வந்த சுகப்பிரஹ்மரிஷி இச்சரித்திரத்தை உரைத்துப் பரீட்சித்து மகாராஜனது ஜீவிதகாலத்தைப் பயன்படச் செய்தார். திரிகால ஞானியாகிய நாரதர் எப்பொழுதும் ஸ்ரீ கிருஷ்ணகானம் செய்வதினாலேயே களங்கமற்ற கைவல்லிய பதவியில் இருக்கிறார். கலிசந்தாரணோபநிஷத் போதிப்பதும் இதுவே. நிற்க, கிருஷ்ண சரித்திரத்தைப் போல் வேறு எத்தேயத்திலாவது எம்மதத்திலாவது ஒரு சரித்திரம் உளதோ? தற்கால நாகரிகப்பித்தர்கள் இதைக் கற்பனாலங்காரங்கள் மலிந்தகட்டுக்கதையென்று சொல்வார்களானால் அவர்களுடைய அல்லது அவர்களது நாகரிக குருக்களுடைய கற்பனாசக்தியால் இதைப்போல் ஒரு கதை இயற்றியதுண்டோ? உண்மையாகிற ஆதாரம் இன்றி, கற்பனையாகிய ஆதேயம் உண்டோ? பாகவதத்தில் ஸ்ரீ கிருஷ்ணனுடைய பால சேஷ்டைகளையும் லீலைகளையும் கேட்கக் கேட்க, நமக்கும் கிருஷ்ணனே குழந்தையாக ஜனிக்கானோ என்று நம்மெல்லாருடைய ஹிருதயத்திலும் ஒரு பேரவா உண்டாகின்றதன்றோ? நமது இந்திய ஜனசமூகத்தில் பாகவதம் நன்றாய்ப் பாராயணம் செய்யப்படவேண்டும். கிரகஸ்தரது ஹிருதயங்களிலெல்லாம் குழந்தை கோபாலன் குடிகொண்டிருக்கவேண்டும். நமது நாட்டில் இனிப்பிறக்கும் குழந்தைகள் கிருஷ்ண ஸ்வரூபமாகவே யிருக்கவேண்டும். பார்த்தசாரதியே எங்ஙனம் பாரதசாரதியாவார் என்பதை விளக்குவதன் முன் 'பார்த்தசாரதி'யை விவரிப்போம். பின்னர் 'பாரதசாரதி' யிடத்தில் செல்வோம்.

(தொடரும்).
சிவம்.

## சுபாவத்தை ஏற்படுத்தல்.

ஸ்ரீ. வ. உ. சிதம்பரம்பிள்ளையவர்கள் எழுதியது.

நிலைத்தமனோ நிலைமை ஒவ்வொன்றும் மனிதனால் ஈட்டப்பட்டசுபாவம்; அது திரும்பத்திரும்பத் தொடர்ந்து நினைக்கப்பட்டதால் சுபாவமாகியிருக்கின்றது. தளர்ச்சியும் உற்சாகமும், வெகுளியும் பொறுமையும், இவறலும் ஈகையும், உண்மையில்

மனத்தின் சகலநிலைகளும், மனிதனால் தெரிந்துகொள்ளப்பட்ட நினைப்புக்கள்; அவை தாமாக நிகழும்வரை திரும்பத் திரும்ப நினைக்கப்பட்டுச் சுபாவங்களாகியிருக்கின்றன. அடிக்கடி நினைக்கப்பட்ட ஒரு நினைப்புக் கடைசியில் மனத்தின் ஒருஸ்திரமான சுபாவமாகின்றது; அத்தகைய சுபாவங்களிலிருந்து வாழ்க்கைவருகின்றது.

தனது அநுபவங்களைத் திரும்பத் திரும்பக் கொள்ளுதலால் அறிவை அடையும் இயற்கையுள்ளது மனம். முதலில் கிரகிப்பதற்கும் சிந்திப்பதற்கும் அதிகப்பிரயாசமாகத் தோன்றும் ஒரு நினைப்பு அடிக்கடி மனத்திற் கொள்ளப்படுதலால் இயற்கையும் சுபாவமும் ஆகின்றது; ஒருசிறுவன் ஒருகைத்தொழிலைக் கற்கத் தொடங்குங் காலத்தில் தனது கருவிகளைச் சரியாகப் பிடிக்கவும் முடியாது, உபயோகிக்கவும் முடியாது. ஆனால் அவன் திரும்பத் திரும்ப நீண்டகாலம் அப்பியாசம் செய்தபின்னர் அவற்றைமிகச் சுலபமாகவும் சாமர்த்தியமாகவும் உபயோகிக்கிறான். அதுபோல முதலில் அடைவதற்குமுடியாததாகத்தோற்றும்ஒருமனோபாவம் விடாமுயற்சியாலும், அப்பியாசத்தாலும் கடைசியில் அடையப்பட்டு, சுபாவமாகவும் தாமாகவும் நிகழ்கின்ற ஒருநிலைமை ஆகின்றது.

தனது சுபாவங்களையும் நிலைமைகளையும் ஆக்கற்கும் திருத்தற்கும் மனத்திற்குவலிமையுண்டு. இவ்வலிமை மனிதனது வீட்டிற்குக்காரணமாக இருப்பதுந்தவிர, தன்னை(மனத்தையும் உடம்பையும்) ஆளுதலால் அடையப்படும் பூரணசுதந்தரத்தை யடையும் வழியையும் காட்டுகிறது; ஏனெனின் ஒருமனிதன், தீயசுபாவங்களை உண்டுபண்ணிக்கொள்ளும் சக்தியை உடையவனாயிருப்பதுபோல நல்ல சுபாவங்களை உண்டுபண்ணிக்கொள்ளும்சக்தியையும் உடையவனாயிருக்கிறான். இப்பொழுது நான்சொல்லும் விஷயத்தைச் சிறிது விளக்கிக்கூறவேண்டுவது அவசியம்: இதனைப் படிப்பவரும் ஆழ்ந்து கவனிக்கவேண்டும்.

சரியான காரியத்தைச் செய்தலினும் பிசகானகாரியத்தைச் செய்தல் எளிதென்றும் புண்ணியத்தைச் செய்தலினும் பாவத்தைச் செய்தல்எளிதென்றும் சாதாரணமாகச் சொல்லப்படுகிறது; அந்நிலைமை அநேகமாக எல்லாராலும் காட்சிப்பிரமாண சித்தாந்தமாகக் கொள்ளத்தக்கதாகிவிட்டது. பெரியஆசிரியரான புத்தரும்



“தீயவினைகளையும் நமக்குத்துன்பத்தைத் தரும்வினைகளையும், செய்தல்எளிது; நல்லவினைகளையும், நமக்கு இன்பத்தைத் தரும் வினைகளையும் செய்தல்அரிது” என்றுகூறியுள்ளார். இதுமனித சமூகம் சம்பந்தப்பட்ட மட்டில் உண்மையானாலும் மனிதர் அபிவிர்த்தியடையும் மார்க்கத்தில் கண்டு கழிக்கும் ஒரு அநுபவமேயன்றிப் பொருள்களின் ஸ்திரமானநிலைமையன்று, நித்தியமெய்ம்மையின் தன்மையுடையதன்று; சரியான காரியத்தைச் செய்தலினும் தப்பானகாரியத்தைசெய்தல்மனிதர்களுக்குச் சுலபமாகத் தோற்றுவதற்குக் காரணம் அவர்களிடத்திலுள்ள மடமையும், அவர்கள் வாழ்வின்நோக்கத்தையும் பயனையும் அறியாதிருத்தலுமே. ஒருகுழந்தை எழுதுதற்குக் கற்றுக்கொள்ளுங்காலையில் எழுதுகோலைப்பிசகாகப் பிடித்தலும், அக்ஷரங்களைத் தப்பிதமாக எழுதுதலும் அதற்கு மிகச்சுலுவாகவும், எழுதுகோலைச்சரியாகப்பிடித்தலும் அக்ஷரங்களைச் சரியாக எழுதுதலும்அதற்குமிகப் பிரயாசமாகவும் தோற்றுகிறது, விடாமுயற்சியாலும்அப்பியாசத்தாலும் ஒழிக்கக்கூடிய எழுதற்றொழிலின் அறியாமை அதனிடத்தில் இருத்தலின். கடைசியாக அவ்வஞ்ஞானம் நீங்கிய பின்னர் எழுதுகோலைச் சரியாகப்பிடித்தலும், அக்ஷரங்களைச் சரியாக எழுதுதலும் அக்குழந்தைக்கு இயற்கையும் சுலுவுமாகிவிடுகின்றன. அக்காலத்தில் பிசகானகாரியத்தைச் செய்தல் பிரயாசமாகவும், முற்றிலும் அனாவசியமாகவும் அதற்குத்தோற்றுகிறது. இவ்வுண்மை மனத்தின்காரியங்கட்கும் வாழ்க்கையின்காரியங்கட்கும் சமமாகப்பொருந்தும். சரியானகாரியத்தை நினைத்தற்கும் செய்தற்கும் அதிகஅப்பியாசமும் விடாமுயற்சியும்வேண்டும்; சரியான காரியத்தை நினைத்தலும் செய்தலும் இறுதியில் சுபாவமும் சுலபமுமாகின்றன; அப்பொழுது தப்பானகாரியத்தைச்செய்தல்பிரயாசமாகவும் முற்றிலும் அனாவசியமாகவும் தோற்றுகிறது.

ஒருசிற்பி அப்பியாசத்தினால் தனது தொழிலில் தேர்ச்சியடைதல்போல ஒருமனிதன் அப்பியாசத்தினால் நல்வினையில் தேர்ச்சியடைதல் கூடும்; அது புதியநினைப்புக்களால் புதிய சுபாவங்களை உண்டுபண்ணுதலேயன்றி வேறன்று; எவனுக்குச் சரியானநினைப்புக்களை நினைத்தலும், சரியான செயல்களைச் செய்தலும் சுபாவமாகவும், சுலபமாகவும், தப்பானநினைப்புக்களை நினைத்தலும் தப்பானசெயல்களைச் செய்தலும், பிரயாசமாகவும்

தோற்றுகின்றனவோ அவன்மிகமிக உயர்ந்த ஒழுக்கத்தையும் மிகமிகத் தூய ஆன்மஞானத்தையும் அடைந்து விட்டான்.

மனிதருக்குப் பாவங்களைச் செய்தல் சுலபமாகவும் சுபாவமாவும் இருக்கிறது. அவர்கள் திரும்பத்திரும்ப நினைத்துத் தீமையும் அறியாமையும் பொருந்திய சுபாவங்களை உண்டுபண்ணியிருத்தலான். சமயம் வாய்த்தபொழுது திருடன் திருடாதிருத்தல்மிகப் பிரயாசம், அவன்நீண்டகாலம் பிறர் பொருளைக்கவரும் நினைப்புக்களிலும் பேராசை நினைப்புக்களிலும் வாழ்ந்தவனாதலின். ஆனால் அத்தகைய பிரயாசம் நீண்டகாலம் நேர்மையும் நியாயமுமுள்ள நினைப்புக்களில் வாழ்ந்துவந்த ஒருயோக்கியனுக்கு உண்டாவதில்லை, திருட்டின்தப்பிதத்தையும் மடமையையும் பயனின்மையையும்அவன் அறிந்திருப்பதனால் திருட்டின் நினைப்பு எள்ளளவும் அவன் மனத்துள் பிரவேசியாதாதலான். திருடுதல் மகா கொடிய பாவம்; சுபாவத்தை ஏற்படுத்துதலையும் சுபாவத்தின் வலிமையையும் தெளிவாக விளக்குதற்காக இவ்வுதாரணத்தைக் கூறினேன்; ஆனால்,சகல பாவங்களும் புண்ணியங்களும் இவ்வாறே செய்யப்படுகின்றன. கோபத்தையும் ஆத்திரத்தையும் கொள்ளுதல் ஆயிரக்கணக்கான ஜனங்களுக்குச் சுலபமாகவும் சுபாவமாகவும்இருக்கிறது, அவர்கள் கோபநினைப்புக்களையும் ஆத்திரநினைப்புக்களையும் அடிக்கடி நினைத்துக்கொண்டிருத்தலின். அவற்றை நினைக்குந்தோறும் அவற்றிற்கேற்றசுபாவம் அதிக உறுதியாக ஏற்படுத்தப்பட்டு, அதிக ஆழமாக வேரூன்றிவிடுகிறது. இவ்வாறே அமைதியும் பொறுமையுமுள்ள ஒரு நினைப்பைப்பிரயாசப்பட்டு ஊகித்து ஆத்திரமும்வெகுளியும் வேரோடு நீங்கும்வரை அதனை இடைவிடாது நினைத்துக்கொண்டுவருதலால் அமைதியும் பொறுமையும் சுபாவங்களாய்விடும். இங்ஙனமே ஒவ்வொருதப்பான நினைப்பையும் மனத்தை விட்டுவெளியேற்றிவிடலாம்; இவ்வாறேஒவ்வொருபொய்ச்செயலையும் அழித்துவிடலாம்; இப்படியே ஒவ்வொருபாவத்தையும் வென்றுவிடலாம்.

## ஸ்ரீமத் ராமதீர்த்தஸ்வாமிகளின் ஒரு பிரசங்கத்தின் மொழிபெயர்ப்பு.

எளியவேலைக்காரனுடைய ஜீவனுக்கு ஆகாரம் கொடுங்கள், அவனிடத்தில் அன்பு செலுத்துங்கள்; அவன் சரீர போஷணத்திற்கு ஆகாரம் கேட்காமற்கூட உங்களுக்கு வேலை செய்வான். வேலைக்காரனை நேசியுங்கள். வேலைக்காரன்உங்களுடையவேலையை நேசிப்பான். அன்பினால் தூண்டப்பட்ட வேலையை வேலை என்று சொல்லலாமா? அது சந்தோஷகரமான விளையாட்டாகும்.

சித்திரம் என்பது என்ன? நாம் தொடுவதில் அழகைக் கொண்டுவருதலே. மண்ணுலகத்திலாவது விண்ணுலகத்திலாவது அழகை வெளிப்படுத்துவது எது? ஏன்? அன்பைத்தவிர வேறு யாதாயிருக்கக்கூடும்?

இவ்விதமாக, அன்பாகிய சக்தி நமதுவேலையிற் பிரகாசித்து தொழிலை விசித்திரமாக்கித் தொழிற் சித்திரங்களை உண்டாக்குகின்றது.

ஆராயும் உணர்வு, கூர்மையானவேலைத்திறமை, தொழிற் சித்திரம்ஆகியஇவை இந்தியாவில் இக்காலங்களில் ஏன் இல்லாமற் போய்விட்டன? ஏன்? ஏனென்றால் வேலைக்காரர்களிடத்தில் சிறிதும் அன்பு செலுத்துவதில்லை. வேலைசெய்யும் எளியவகுப்பினர், ஹிருதயத்தில் வரவேற்றுக்கொள்ளப்படுவதற்குப் பதிலாக, அவர்களுடைய சொந்தக் குடிசைகளினின்றுமே துரத்தப்படுகின்றனர்.

வேலை நிந்திக்கப்படுகின்ற இடத்தில், நின்ற நிலையிலேயே சிற்றலும் அழிவும் மரணமுமே முடிவாய் சித்திரமும் வெகு கஷ்டமாய் விடுகின்றது. வேலை நேசிக்கப்பட்ட விடத்து, உயிரும் உணர்வும் உண்டாகின்றன; வேலையும் விசித்திரமாய் விடுகின்றது. ஆ! அன்பாகிய ஆதிரதா! இந்நிலைமைக்கும் வந்துவிட்டதா?

... ... ... ... ... ... ... ... ... ... ... ...

தெய்விக அன்பு, பக்தி, உபாசனை இவைகளைப்பற்றிஉலகினர் சில சமயங்களில் பெரும் பேச்சுப் பேசுகின்றனர். ஆனால் அநுபவத்தில் தாங்கள் சொல்வது இன்னதென்று அறியாமலும் உணராம

னும் சில சமஸ்கிருத ஸ்லோகங்களையும் சில மந்திரங்களையும் உரக்க உரைப்பதேயாகும். மருந்தின்றிய வெறுந்துப்பாக்கிகள் ! ஸ்ரீ சைதந்யருடைய உண்மையும் உருக்கமுமுள்ள ஹிருதயத்தைப் போல்பாவிக்கின்ற கள்ளவேஷம் !

பூரண சங்கீதஞானத்துடன் தேசபாஷைகளில் பாடப்படுகின்ற பாடல்கள் கோயில்களில் அடிக்கடி கேட்கப்படுகின்றன ! ஆ! அந்தோ! பரிசுத்தமாக்கும் அன்பு நிறைந்த கண்ணீர் ஒரு துளியேனும் இல்லையே!.

புண்ணிய புருஷர்களான இந்துஸ்தான் தேசத்தவர்களே! உங்களைத்தானே நீங்கள் பாவிகளென்றும் அடிமைகளென்றும் கூறிக்கொள்வதினால் ஈஸ்வரனை ஏமாற்றி அவருடைய திருவருளை அடைய முடியாது. நீங்கள் நினைக்கிறபடியே நீங்கள் ஆகவேண்டியிருக்கிறது. கண்டிப்பான கர்மநியதியானது அதி கடோஸ்வபாவத்தை வகித்து நீங்கள் அம்மாதிரி பிரார்த்தனை செய்யும்பொழுது உங்களைப் பாவிகளாகவும் அடிமைகளாகவுமே ஆக்கிவிடுகின்றது. அது பக்தியன்று.

எனக்குச் சொந்தமாயுள்ள எளிய தனவந்தர்களே! உங்களால்கட்டப்பட்டிருக்கும் வெள்ளை நிறமுள்ள கோபுரங்களும் கோவில்களும் கல்லினால் செய்யப்பட்டுள்ள விஷ்ணுக்களும்உங்களுடைய ஹிருதயஜ்வரத்தைத் தணிக்கமாட்டா. நீங்கள் கஷ்டப்படுகிறீர்களென்று எனக்குத் தெரியும். நீக்கள் கஷ்டப்படுகிறதை கர்வத்தினால் ஒப்புக்கொள்ளமாட்டீர்கள். தேசத்திற் பசியினால் வருந்தும் நாராயணர்களையும் வேலைசெய்யும் விஷ்ணுக்களையும் ஆராதியுங்கள். அமெரிக்காவிற்குச் சென்று கைத்தொழில்களையும் பிரயோஜனப்படத்தக்க விசித்திர வேலைகளையும்கற்றுவரும்படி எளிய ஹிந்துஸ்தானி மாணவர்களை அனுப்புங்கள். அவர்கள் (வேண்டிய கல்வி கற்றபின்பு) இந்தியாவிற்குத் திரும்பிவந்து பட்டினிகிடந்து பரதவிக்கும் நூற்றுக்கணக்கான, ஆயிரக்கணக்கான ஜனங்களுக்கு தங்களுக்குத் தாங்களே சகாயம் செய்துகொள்ளும் மார்க்கங்களைக் காண்பித்து ரட்சிக்கட்டும்

இந்தியா தேயத்துப் பக்தர்களே ! ஸ்ரீசைதந்யர், கோபிகாஸ்திரீகள் இவர்களுடைய ஹிருதயபாகந்தனை அடைவதற்குநீங்கள் மிகவும் இச்சைப்படுகின்றீர்கள். ஆனால் கோபிகாஸ்திரீகள் ஸ்ரீ



சைதந்யர் இவர்களுடையதைப் போன்ற பரிசுத்தமான தாபம் நிறைந்த ஹிருதயம் உங்களில் எத்தனைபேருக்கு இருக்கின்றது,? நீங்கள் அந்த ஆநந்தகோலாகலனாகிய பசுபதியை கல்லினால் செய்துள்ள சொரூபங்களில் மாத்திரம் அடைத்துவைக்காமல், அவரை பக்திப் பிரேமையுடன் சண்டாளனிலும், திருடனிலும், பாவியினும் அந்நியனிலும் எல்லாவற்றுள்ளும் பார்க்கும்பொழுது தான் நீங்கள் அவருக்கு அருமை மிகுந்த அந்தரங்கர்களாவீர்கள்.

பக்தி கதறுவதன்று, பிச்சை யெடுப்பதன்று; அது ஆநந்தமும் ஈஸ்வரப்பிரேமையும் நிறைந்து இன்னம் என்று எடுத்துரைக்க இயலாத சமபாவனை. அது நாம் பார்க்கும் எல்லாவற்றினும் எல்லாவற்றையும் பார்ப்பதே. அது உங்களுடைய திருஷ்டிவிழுகிற இடங்களிலெல்லாம் உங்களுடைய சொந்த ஆத்மாவைப் பார்ப்பதே. எல்லாம் ரம்மியமென்றும் அதுநான் தானென்றும் அநுபவத்தில் அறிவதே பக்தியெனப்படும். தத்துவம் அஸி அதாவது நீ அதுவாயிருக்கிறாய்.

மகம்மதியர்களே ! நீங்கள் என்னைக் குத்திக் கொல்லலாம், ஆனால் எனது ஹிருதயம் உங்கள் பேரிலுள்ள அன்பினால்தபிக்கின்றது. கிறிஸ்தவர்களே ! நீங்கள் என்னைப்பற்றித் தப்பெண்ணங்கொள்ளலாம், ஆயினும் நான் உங்களிடத்தில் அன்பு செலுத்துகிறேன். பறையர்களே! பள்ளர்களே ! உங்களுடை அழுக்கடைந்த, வியாதி நிறைந்த குடிசைகளுக்குள் ஒருவரும் நுழையமாட்டார்களாயின், நீங்கள் அக்குடிசைகளுள் உங்களுடன் ராமனைப் பார்க்கலாம்.

அன்பு போல்நடிக்கின்ற ஆஷாடாபூதி வேஷமும், பொய்யுணர்ச்சிகளும் நிச்சயமான அபிப்பிராயத்தைப்போலக்காட்டிக்கொள்ளுதலும் ஈஸ்வர நிந்தையாகும். தாழ்ந்ததரத்து அன்பாகிய புகைவேண்டுமாயினும் உண்மையான நெருப்பு (அன்பு) அவசியம் வேண்டியிருக்கின்றது.

அரசர்களே! சட்டங்களே! ஜனசமூகங்களே ! உங்கள் ஹிருதயங்களை ஆசிர்வதியுங்கள். ஆனால் இராமனைஉங்களுடன் இணங்கிநடக்கும்படிசெய்வதற்கு உங்களுக்குச் சக்தியில்லை. உங்களுடைய பயமுறுத்துகையினாலும், தயவு பாராட்டுதலினாலும், முகம்சுளித்துக் கொள்ளுதலினாலும் பயனில்லை. எனது கடுங்கோன் மன்னனாகிய சத்தியம் ஆயிரக்கணக்கான சக்ரவர்த்திகள், கொடுங்கோன்

மன்னர்கள், ஸ்வபாதிபதிகள் இவர்கள் எல்லாரினும் பலம் மிக்கவன்.

சத்தியம் இல்லாதவிடத்தில் அன்பு இல்லை. கடுங்கோன்மன்னனாகிய சத்தியத்திற்குப் பிரதிநிதி அன்பு ஆகிய பிரபு.

முட்டாள்தனமான சன்மார்க்க போதகர்களே! மதப்பிசாசுகளே! கைகளையெடுத்துவிடுங்கள். வாலிபர்கட்குப்போதிப்பதற்கு உங்களுக்குப் பாத்தியதை இல்லை. எவருக்காவது ஏதேனும் பாத்தியதை உளதாயின், ஊழியம் செய்வதற்கே பாத்தியதை உண்டு. சிருஷ்டியை அதன் ஸ்வதந்தர மார்க்கத்தில் விட்டுவிட்டால், அது ஒருபொழுதும் பிசகுவதில்லை. பரமாணு முதல் பகவத் தன்மை பொருந்திய மானிட உருவம்வரையில் விருத்திசெய்துகொண்டு வந்திருக்கிற ஈஸ்வரனை அல்லது நீதியை நன்றாய் நம்பலாம்.

ராமச்சந்திர சாஸ்திரி.

## அந்தணர் கடமையும், பத்திரிகைத் தொழிலும்.

ஸ்ரீ ஆர். எஸ். கங்கா ஜடேச சர்மா அவர்கள் எழுதியது.

தன்னலந் தனையெண்ணித் தத்தளித் தழிந்திடாமற்
பன்னலம் பலர்க்கும் வாய்க்கப் பத்ரிகை பரவப்பண்ணும்
இன்னலம் மிகவுமேலா மிதற்கெதி ரிலையென்றோதும்
அன்னலம் அறிவினாலே அடைவோர் அந்தணர்களாமே.

அலைகடல்சூழ்ந்த உலகினிற்றோன்றிய எல்லா ஜீவராசிகளுக்குள்ளும், ஸ்ரீ தாயுமானவர் தமது திருவாக்கால்

"எண்ணரிய பிறவிதனின் மானிடப் பிறவிதான்
யாதினும் அரிதரிதுகாண்
இப்பிறவி தப்பினா லெப்பிறவி வாய்க்குமோ
யாதுவருமோ வறிகிலேன்"

என்று கூறியுள்ளபடி மானிட ஜன்மமெடுத்து அங்கபங்கமின்றி ஆண்மகனாகப் பிறந்துள்ள ஒவ்வொருவருக்கும் இன்றியமையாதது கல்வியே. அக்கல்வியை முறையே இளமையிலேயே கற்று கற்றவழி நின்று தெளிந்து அறிவையடைந்து அதனை உலகெங்கும் பரவச்செய்து பிறவிப்பயனை அடைவதையே நோக்கமாகக்கொண்ட நம்முன்னோர்கள்



"வேதியர் முகத்தில் வேந்தர்
விறல்கெழு துணைத்தோள் வெற்பில்
நீதரு வணிகர் செம்பொற்
குறங்கினிற் சதுர்த்தர் செய்ய
பாதபங்கயத்திலின்றான் பதுமன்" (கூர்ம புராணம்).

இறைவனது முகத்திலின்று பிராஹ்மண (அந்தண) னும், தோளிலிருந்து க்ஷத்திரிய (வேந்த) னும், தொடையிலிருந்து வைசிய (வணிக) னும், காலிலிருந்து சூத்ர (குடியானவ) னும் உண்டானார்கள் என்ற பிரமாணப்படி இறைவனாணையை மேற்கொண்டு மனிதவர்க்கத்தை நான்கு பிரிவாகச்செய்து அவை ஒழுங்காக நடைபெறவும், அதனால் அனைவரும் ஒருங்கே அறிவைப்பெற்று உற்சாகம், ஸாஹஸம், தைரியம், புத்தி, சக்தி, பராக்ரமம் முதலியகுணங்களுக் கிருப்பிடமாய்க் கனவிலும் மறந்தும் எவ்வுயிரையும் துன்புறுத்தாது அருளும், தன்னுயிரைக் காட்டிலும் பிறவுயிர்களிடத்துப் பன்மடங்கு அன்பு முடையவர்களாய் உலகத்திற்கு உபகாரமானவைகளையே கருதி, அதனையேபேசி, அவற்றையே புரிந்து உலகின்புறக்கண்டு தானு மின்புற்று அழியாப் புகழ்நாட்டிப் பலரும் வஞ்சனை பொறாமை லோபமாதியனவற்று பேரின்பமடைய்துவதற் கேற்ற வழிகளை ஏற்படுத்தியுள்ளார்கள்.

மேற்கூறிய நான்கு பிரிவாரின் கடமைகளைச் சிறிது விவரிப்போம். இதில் மேலானதும் முதலாவதுமாயுள்ள ப்ரஹ்ம நிஷ்டர்களான ப்ராஹ்மணர், பார்ப்பார், அல்லது அந்தணர்களின் கடமைகள் ஆறு. அவையாவன ஸகலகலைகளையும் ஓதல் ஓதுவித்தல் வேட்டல் வேட்டுவித்தல் ஏற்றல் ஈதல் என்பனவாம். இரண்டாவது க்ஷதத்தை (அபாயத்தை) நீக்குகிறவர்களான க்ஷத்திரியர், அரசர், அல்லது வேந்தர்களின் கடமைகள் நான்கு. ராஜநீதத்திற்கின்றியமையாத நீதிநெறிகளையும், போர்செய்தற்கவசியமான அஸ்திர, சஸ்திரவித்தைகளையும் கற்றல் வேட்டல் ஈதல் போர்செய்து நாடுகளை வென்று செங்கோல் செலுத்தி உயிரைத் துரும்பெனமதித்திருத்தல் என்பனவாம். மூன்றாவது வைசியர், வணிகர், அல்லது வியாபாரம் செய்கிறவர்களின் கடமைகள் 3. "திரைகடலோடியுந் திரவியந்தேடு" வதற்கின்றியமையாத கல்விகளைக் கற்றல் உழுதுபயிரிட்டுப் பண்டமாற்றல் செய்து பொருளீட்டல் ஈதல் என்பனவாம். நான்காவது

சோகத்தை பகற்றும் சூத்திரர், அல்லது குடியானவர்களின் கடமைகள் 2. பலவிதமான கல்விகளைக் கற்றல், வணக்கம், நேர்மை, ஊக்கம் முதலிய வற்றுடன் மேற்கூறியுள்ள மூன்று பிரிவார்கட்கும் ஊழியம்செய்தல் என்பதே. இந்நான்கு பிரிவுகளும் ஜன அபிவிருத்திக்கும் க்ஷேமத்திற்கும் ஐக்யத்திற்கும் இன்றியமையாதன.

சூத்திரதர்மத்தால் அறமும், வைசிய தர்மத்தால் பொருளும், க்ஷத்ரியதர்மத்தால் இன்பமும், பிராஹ்மண தர்மத்தால் வீடும், ஆக முறையே இந்நான்குகுடிகள் அல்லது வகுப்புகளினின்று ஜீவாத்மா அபிவ்ருத்தியடைந்து முறையே தர்மார்த்த காம மோக்ஷமெனும் நான்கு புருஷார்த்தங்களையும் அடைந்துய்யுமாறு ஏற்படுத்தப்பட்டுள்ளன. (அவைகள்செவ்வனே நடைபெற்று வந்து, காலபேதத்தால் மாறி நாலு ஜாதிகள் நாலாயிரஞ் சாதிகளாகப் பற்பல உட்பிரிவுகள் ஏற்பட்டு பழைய பரிசுத்தக் கொள்கைகள் மாசடைந்து சீர்கெட்டு உண்மையாசாரங்கள் பல பல இருந்தவிடந் தெரியாது மறைந்து பல போலி யாசாரங்கள் தோன்றி அவை மேலோங்கி "வெண்ணெயிருந்த தாழியிற் சுண்ணாம்பை நிறைத்துவைத்த தொப்ப நாஸ்திகம் பேசி நாத்தழும்பேறப்பெற்று வளர்ந்திடுகின்றன. உத்தம பத்திரிகைகளின் மூலமாகவேனும் உலகத்திற்குண்மையறிவு விளங்கிப் பழைமையான ஸநாதன தர்மம் செழித்தோங்குமாறு முழுமுதற் கடவுள் அருள்புரிவாராக) இதுவரையிற் கூறிவந்த நான்குபிரிவினுள்ளும் "இகபரம்" ஆகிய "இம்மை, மறுமை" என்னும் இரண்டிலும் நலமேபயப்பதும், பேரின்ப வீட்டுக்கு வழிகாட்டுவதுமான அந்தணர்களின் கடமைகளிற் சிலவற்றை எண்ணெடுத்து விளக்குவோம்.

"இளமையிற்கல்" என்ற ஔவை மொழிக்கிணங்க அந்தணர் தன் இளமையிலேயே கல்விகற்று, எல்லாக் கலைகளையு முணர்ந்து, சகல தத்வங்களையும் அறிந்து, அறிவு தெளிந்து நீதி நல்லொழுக்கம் ஆகியவைகளைக் கைக்கொண்டு எல்லா வுயிர்களிடத்தும்,

"அன்பின்வழியது உயிர்நிலை யஃதிலார்க்கு
என்புதோல் போர்த்தவுடம்பு" (குறள்.)



அன்பு பொருந்திய வுடலேயுயிருடையது அவ்வன் பிலாவுடல உயிரற்றதாகும்.

"எவ்வதுறைவது லகமுலகத்தோ
டவ்வதுறைவதறிவு." (குறள்.)

உலகம் எப்படிநடக்கின்றதோ அவ்வாறே தானும் ஒழுகுவது அறிவு.

"அல்ல லருளாள்வார்க்கில்லை வளிவழங்கு
மல்லன்மாஞாலம் கரி." (குறள்.)

அருளுடையவர்க்கு இம்மை, மறுமையாகிய இருமையினும் யாதொருதுன்பமுமணுகா: இதற்குலகினுள்ளோர் ஸாக்ஷியாவார், என்றுள்ளபொய்யா மொழிக்கிணங்க அறிவும், அன்பும், அருளும், நிறைந்து எல்லாவகுப்பார்களுக்கும் அவரவரது உரிமை நோக்கிக்கல்வி கற்பித்து, அறிவுபுகட்டி, அப்போதைய வுணவுக்குமேற்பட்ட எப்பொருளையும் விரும்பாது உலகந் தழைத்தோங்கப் பல வேள்விகளைச்செய்து பிறராலும் செய்வித்து அநேக கண்டிப்பான விதிகளுக்குட்பட்டு உலகத்திற்கு நன்மைபயக்கும் பல தொழில்களைக் கண்டு பிடித்துக் கற்பித்து நடைபெறச் செய்து மாசில்லாத தவம் பற்றின்மையாதிய வற்றைக் கடைப்பிடித்து ஏதேனுமொரு தொழில் குன்றியகாலத்து அதனைப் பலருக்கும் போதித்து அதனைமுன்னுக்குக் கொண்டுவந்து எதுவும்தளர்வுறா வண்ணம் பாதுகாத்து யாதொருகுறையு மின்றி எல்லார்க்குணங்களும் வாய்க்கப்பெற்றுப் பொய், சூது, கள், காமம், களவு, கொலையாதிகளைக் கனவினும் மறந்தும் கருதாது நாளைக்கென் செய்வோமென்ற ஏக்கமற்று "அவனன்றி யணுவுமசையா"தென்ற பூர்ண நம்பிக்கையுடன், அறம்வழுவாது எப்போதும் மகிழ்ச்சியுடையவர்களாய் உலகமே தமது வீடாகவும் மனிதர்களெல்லோரும் நெருங்கிய உறவினர்களாகவும் உலகிற்குபகரித்தலே சொந்தக்கடமையாகவும் தன்னலங்கருதாது ஹிதோபதேசங்களைச் செய்து சென்றவிடமெல்லாம் சிறப்புற்றோங்க முறையே ஆச்ரமதர்மங்கள் (இதனைப்பற்றி மற்றொரு முறைவிளக்குவோம்.) வழுவாது இயற்றி உடல், பொருள், ஆவி மூன்றினையும் உலகக்ஷேமத்திற்கு தத்தம் செய்து "மரணத்திற்குக் கூடவெறுப்பும் மோக்ஷத்திற்குக் கூடவிருப்பும் இன்றி" ஸகலரும்போற்றிப் புகழ்ந்துகொண்டாடத் தக்க சக்திவாய்ந்திருத்தலே அந்தணர் கடமையாம்.

"பழையனகழிதலும் புதியனபுகுதலும்
வழுவலகாலவகை யினானே." என்றபவணந்திமுனிவர்வாக்கியப்படி கடிதமும், மையும், அச்செழுத்துக் கருவிகளும், கடிதப்போக்குவரவிற்குரிய சாதனங்களுமிருந்துள்ள இக்காலத்தில் அந்தணர்கள் தமதுகடமைகளை இன்னும் சீர்பெறச்செவ்வனே நடத்துதலெளிது. கல்விகற்று அறிவுதெளிந்து உலகத்திற்குபகாரமாகத்தமது ஜீவியகாலத்தைச் செலவிடவிரும்புமொவ்வொருவருக்கும்சிறந்தவழிபொன்றேற்பட்டிருக்கிறது.

வீட்டில் உபதேசம் செய்தல் இரண்டொருவருக்கும், பாடசாலையிற் போதித்தல் பத்திருபது பெயர்கட்கும், சபைகூட்டிப் பிரசங்கித்தல் நூற்றுக்கணக்கானவர்களுக்கும் தான் பயன்படும்; அவைகளும் கேட்டவர்கள் நினைவின்றி மறந்துவிடிற் போனதேயாம்.

ஆனால் உத்தமமான தர்மநீதி மார்க்கபோதனைகளைப்பத்திரிகைமூலமாக வெளியிடில், ஒரேகாலத்திற் பல்லாயிரம் மனிதர்கட்குப் பயன்பட்டு வருமென்பதற் கையமுண்டோ?

"அருட்கண்ணிலாதார்க் கரும்பொருடோன்று
அருட்கண்ணுளோர்க் கெதிர்தோன்றுமரனே
இருட்கண்ணினோர்க் கங்கிரவியுந்தோன்று
தெருட்கண்ணினோர்க் கெங்குஞ்சிரொளியாமே."

(திருமந்திரம்.)

ஆதலின் அறிவுபரவுவதற்கான விஷயங்களை ஒருங்கேதிரட்டிப்பல (நன்மதிபுகட்டும் நூற்கள் மூலமாகவும்) பத்திரிகைகள் மூலமாகப் பரவச் செய்தால் நாட்டிலுள்ளபலபண்டித சிரோமணிகள் கல்விச் செல்வத்தாலும் கனதனவான்கள் பொருளுதவியாலும் இம் முயற்சிகளை யாதரிக்க முன்வந்து பலவுதவிகள் செய்யப்பெற்று இவர்களும் (அதிக) தனலாபங்கருதாது அங்ஙனமீட்டிய பொருளைப் பெரும்பாலும் அதனபிவிருத்திக்கேசெலவிட்டுவரின் சிறிது காலத்திலேயே சில போஷகர்களும் பல சந்தாதாரர்களும் சேர்ந்து பத்திரிகைகளை மிகுந்த உன்னதஸ்திதிக்குக் கொண்டு வருவார்களென்பது திண்ணம்.

## சாக்கிரடீஸ்என்னும் ஒரு பண்டிதரின் சரித்திரம்.

(ஸ்ரீ அ. சுப்பிரமணிய பாரதியவர்கள் எழுதியது.)

ஐரோப்பாக்கண்டத்தில் கிரீஸ் என்றொரு தேசமிருக்கின்றது. இத் தேசவாசிகள், இந்தியாவில்வசிக்கும் நாம்இந்தியர்கள் என்று அழைக்கப்படுவதுபோல, கிரேக்கர்கள் என்று அழைக்கப்படுகிறார்கள். இந்த கிரீஸ் தேசத்தில் அநேக வித்துவான்களும் பராக்ரமசாலிகளும் சாஸ்திரஞானமுள்ளவர்களும் இருந்திருக்கிறார்கள். அவர்களுள் சாக்கிரடீஸ்என்பவர் ஒருவர். இவர் மகா வித்துவான். இவர் காலஞ்சென்று அநேக வருடங்களாயினும் இவரைப் பற்றிப் பேசாதாரும் இவரைப் புகழாதாரும் இல்லவேயில்லை. இந்தப் பூவுலகத்தில் எத்தேசத்தாராலும் புகழப்படுகிறார். இவர் இவ்வாறு புகழப் படுவதற்குக் காரணம் இவரிடம் விளங்கிய நற்குணங்களும் நல்ல நடத்தையும் கல்வியின் விசேஷமுமென்றே கூறவேண்டும். இவர் "கற்கக் கசடற, நிற்கவதற்குத்தக" என்பதற் கிணங்கக் கல்வியில் நல்ல பயிற்சியடைந்து அதன்படி நடந்து வந்த மகான்களுள் ஒருவர்.

இவர் தாமும் நல்லவராயிருந்து வந்ததுமன்றி மற்றவர்களும் நல்வழிப்பட்டுய்யுமாறு, தம்மாலியன்றவரையில் பிரயாசப்பட்டுவந்தனர். உலகத்தில் மகான்களென்பவர்கள் தாங்கள்கற்று அதனால் அடைந்த இன்பத்தை மற்றவரும் அடைய வேண்டுமென்றே கருதுவார்கள். உலகுள்ளவரையில் தமதுபுகழ் நிலநிற்க உடம்பெடுத்த உத்தமசீலராகிய சாக்கிரடீஸூம் இவ்வாறே முயன்றனர். இப்படிப்பட்ட மகானுடைய சரித்திரத்தை நாம்படிப்பது மிகவும் அவசியமல்லவா? மகான்களுடைய சரித்திரங்களைப்படிப்பதாலும் கேட்பதாலும் கேட்டுப்பிறருக்குக் கூறுவதாலும் உண்டாம் நன்மைகள் அளவிடப்படாதனவென்பது யாவரும் ஒப்பமுடிந்த விஷயம். ஆகவே சாக்கிரடீஸ் என்பவரது சரித்திரத்தை ஆராய்வாம்.

சாக்ரடீஸ் சோப்ராஸ்சஸ் என்னுமொரு கல்தச்சனுடைய பிள்ளை. இவருடைய தந்தை மிகுந்த ஏழ்மைஸ்திதியிலிருந்தமையால் சாக்ரடீஸூக்குப் பணங்கொடுத்துக் கல்விபோதிக்கச் சக்தியற்றவராயிருந்தார். தமதுதொழிலாகிய தச்சவேலையிலேயே அவருக்கும் பழக்கமுண்டாகும்படி செய்துவந்தார். என்னசெய்வார்பாவம்! தமதுபிள்ளை கல்விநிலைமைக்கு வரவேண்டுமென்னும்

எண்ணமிவருக்கு மிகுதியுமுண்டு. பணமில்லாமையால் இவருக்கு ஏதுவுஞ்செய்ய முடியவில்லை. இவர் ஐயோ! நம்புத்திரனுக்குக் கல்விபோதிக்கச் சக்தியற்றவனானேனே யென்றெண்ணிச் சில சமயம் வருந்துவார். கல்வியில்லாவிடினும் ஏதேனுமொரு தொழில் தெரிந்திருந்தால் அதைச்செய்து தன்வரையில் கஷ்டமின்றிக்காலத்தைக் கடத்துவான் மகன் என்றெண்ணித்தமது தொழிலிற் பழக்கிவந்தார். இதுவும் ஒருநல்லயோசனையேயன்றோ? கல்வியுமின்றிக்கைத்தொழிலிலும் பழக்கம்பெறாத ஒரு ஏழையுலகத்தில் கௌரவமாய்க் காலத்தைக் கழிப்பது அசாத்தியமாமன்றோ? இரண்டிலொன்றேனும் தெரிந்திருந்தால் தானே காலத்தைக் கௌரவமாய்க் கடத்தக்கூடும். இரண்டும் வாய்க்கப்பெற்றவன்வாழ்வு எல்லோராலுமெச்சத்தக்கதாகுமல்லவா? ஆகவே தமதுமகன் கல்வியும் கைத்தொழிலும் வாய்க்கப்பெறாமல் தெருவில் திரியும் சோம்பேறியாய்ப் போகாதிருக்கத் தமக்குத் தெரிந்ததைச் சொல்லிவைக்க முற்பட்டனர். தந்தைமகனுக்குச் செய்யுமுதவியாதாம்? நல்லபாலும்சோறும் போட்டுவளர்த்து இரவும் பகலுமாகத்தாம் வேலைசெய்து பணத்தைச்சேர்த்துவைத்து விட்டுப் போவதல்ல. இப்படிப்பிள்ளைகளை வளர்த்துச் சோம்பேறிகளாக்கிப் பாழுக்கிரைக்கப் பணத்தையுந் தேடிவைத் திறந்தொழிபவர்பலர் நந்தேசத்திலிருக்கின்றனர். இது பெரிய மூடத்தனம். இப்படிச் செய்வதால் மகன்நன்மை தீமையுணருஞ் சக்தியின்றித் தன்மனம் நாடியதே தக்கவழியென வெண்ணித் தந்தைதேடிவைத்த பொருளைப் பாழுக்காக்கிக் கடையில் பல்லோர்பழிக்கப் பரதேசியாய்த் திரிவதைநாம்பார்த்திருக்கின்றோம்; பார்க்கிறோம். மகன் நல்லகல்விபயின்று அறிவைப் பெற்றிருப்பானாயின் அவன் செல்லும் வழி எல்லோரும் மெச்சத்தக்கதாயிருக்கும். இவனைப் பெற இவன்தந்தை என்ன தவஞ்செய்தானோ தெரியவில்லையே என்று உலகம்புகழும் படியாய் விளங்குவான். மகன் அறிவையடைந்து நல்லவழியில் பணந்தேடித் தன்காலத்தைச் செவ்வனே கழிக்கும் படியானமார்க்கமே தந்தையால் போதிக்கத் தக்கதாம். அம்மார்க்கமே மகன், தந்தையாகிய இருவருக்கும் பொன்றாத புகழைத்தருவதாகும்.

நிற்க, சாக்ரடீஸின் தந்தை சாக்ரடீஸ் யௌவனப் பருவமடையுமுன்னரே இறந்துபோயினர். அவர்மகனுக்காகத் தேடிவைத்த



பொருள் கொஞ்சந்தான். சாக்ரடீஸ் தமது தந்தையிறந்ததும் அவர்தேடிவைத்த சிறிதுபொருளைச்செலவழித்துக் கல்விபயின்று வந்தார். தமதுபரம்பரைத் தொழிலாகிய கல்தச்சவேலையைவிட்டு விட்டார். இவர்படிக்கத் தொடங்கியது முதல் ஒரு நாளேனும் சோம்பலாயிராமல் பாடத்தில் நன்றாய்க்கவனஞ் செலுத்திப்படித்துவந்தார். நாளடைவில்படிப்பில் தனதுவகுப்புப்பிள்ளைகளுக்கெல்லாம் மேலாகவிருந்தார். வாத்தியாரிடம் இவர் பரமவிசுவாசமுடையவராயிருப்பர். வாத்திமார்களுக்கெல்லாம் இவரிடம் நல்ல அன்புண்டு. பள்ளிக்கூடத்தில் வாத்தியார் சொல்வதை மறவாதுள்ளத்திற்கொண்டு அதைத்தனித்தவிடத்திருந்து சிந்தித்துக்கொள்வார். எதையும் ஐயந்திரிபற கேட்டுத் தெரிந்து கொள்வார்.

இப்படி இவர் நல்லபிள்ளையாயும் படிப்பில் கெட்டிக்காரனாயும் விளங்குவதைக்கண்ட கிரிட்டோ என்னுமொரு தனவந்தர் இவருக்குப் படிப்பிற்குவேண்டிய பொருள்கொடுத்துச்சகாயஞ்செய்ய முன்வந்தனர். அந்தப்பிரபுவினிடம் தமக்குவேண்டிய பொருளைப் பெற்றுக் கொண்டு அதைவீண்செலவு செய்யாமல் தமதுபடிப்பின் பொருட்டே யுபயோகித்து வந்தார். பள்ளிக்கூடப் படிப்பு முடிந்ததும் கல்விகேள்விகளில் தேர்ந்தபண்டிதர்களையும்தத்துவசாஸ்திரிகளையும் அடுத்து அவர்களிடம் கல்விபயின்றுசிலவருடகாலங்களில் எல்லோருமெச்சத்தக்க வித்துவானாயினர்.

(வரும்).

## கண்ணன்-என்தாய்.

ஸ்ரீ ஸி. சுப்பிரமணிய பாரதியவர்கள் இயற்றியது.

உண்ணவுண்ணத் தெவிட்டாதே - அம்மை
    உயிரெனு முலையினில் உணர்வெனும் பால்
வண்ணமுற வைத்தெனக்கே - என்றன்
    வாயினிற் கொண்டூட்டுமோர் வண்மையுடையாள்
கண்ணனெனும் பெயருடையாள் - என்னைக்
    கட்டி நிறைவானெனுந்தன் கையிலணைத்து
மண்ணெனுந் தன் மடியில் வைத்தே - பல
    மாய முறுங் கதை சொல்லி மனங் களிப்பாள். (1)

இன்ப மெனச் சில கதைகள் - எனக்
கேற்ற மென்றும் வெற்றி யென்றும் சில கதைகள்
துன்ப மெனச் சில கதைகள் - கெட்ட
தோல்வி யென்றும் வீழ்ச்சி யென்றும் சிலகதைகள்
என்பருவ மென்றன் விருப்பம் - எனும்
இவற்றினுக் கிணங்க வென்னுள மறிந்தே
அன்போடவள் சொல்லி வருவாள் - அதில்
அற்புதமுண்டாய்ப் பரவசமடைவேன். (2)

விந்தை விந்தை யாக வெனக்கே - பல
வித விதத் தோற்றங்கள் காட்டு விப்பாள்
சந்திர னென் றொரு பொம்மை - அதில்
தண்ணமுதம் போல வொளி பரந்தொழுகும்
மந்தை மந்தையா மேகம் - பல
வண்ணமுறும் பொம்மையது மழைபொழியும்
முந்த வொரு சூரியனுண்டு - அதன்
முகத்தொளி கூறுதற் கோர் மொழியிலையே. (3)

வானத்து மீன்களுண்டு - சிறு
மணிகளைப் போல் மின்னி நிறைந்திருக்கும்
நானத்தைக் கணக்கிடவே - மன
நாடிமிக முயல் கினுங் கூடுவதில்லை
கானத்து மலை களுண்டு - எந்தக்
காலமுமோ ரிடம் விட்டு நகர்வதில்லை
மோனத்திலே யிருக்கும் - ஒரு
மொழியுரையாது விளையாடவருங் காண். (4)

நல்ல நல்ல நதிகளுண்டு — அவை
நாடெங்கு மோடி விளையாடி வருங் காண்
மெல்ல மெல்லப் போயவைதாம் - விழும்
விரிகடற் பொம்மையது மிகப்பெரிது
எல்லை யதிற் காணுவதில்லை - அலை
யெற்றி நுரைக்கக்கி யொரு பாட்டிசைக்கும்
ஒல்லெனுமப் பாட்டினிலே - அம்மை
யோமெனும் பெயரொன்று மொலித்திடுங் காண். (5)



சோலைகள் காவினங்கள் - அங்கு
சூழ்தரும் பலநிற மணிமலர்கள்
சாலவு மினியனவாய் — அங்கு
தருக்களில் தூங்கிடுங் கனிவகைகள்
ஞால முற்றிலு நிறைந்தே — மிக
நயந்தரு பொம்மைக ளெனக் கெனவே
கோலமுஞ் சுவையுமுற - அவள்
கோடிபல் கோடிகள் குவித்து வைத்தாள். (6)

தின்றிடப் பண்டங்களும் - செவி
தெவிட்டுறக் கேட்க நற் பாட்டுக்களும்
ஒன்றுறப் பழகுதற்கே - அறி
வுடைய மெய்த் தோழரு மவள் கொடுத்தாள்
கொன்றிடு மென வினிதாய் - இன்பக்
கொடு நெருப்பாய் அனற் சுவை யமுதாய்
நன்றியல் காதலுக்கே - இந்த
நாரியர் தமை யென்னைச் சூழவைத்தாள். (7)

சிறகுடைப் பறவைகளும் - நிலந்
திரிந்திடும் விலங்குக ளூர்வனகள்
அறைகடனிறைந்திடவே — எண்ணில்
அமைத்திடற் கரியபல் வகைப் படவே
சுறவுகள் மீன் வகை கள் - எனத்
தோழர்கள் பலரு மிங் கெனக் களித்தாள்
நிறைவுற வின்பம் வைத்தாள்—அதை
நினைக்கவு முழுதிலுங் கூடுதில்லை. (8)

சாத்திரங் கோடிவைத்தாள் - அவை
தம்மினு முயர்ந்ததோர் ஞானம் வைத்தாள்
மீத்திடும் பொழுதினிலே - நான்
வேடிக்கை யுறக்கண்டு நகைப்பதற்கே
கோத்த பொய் வேதங்களும் — மதக்
கொலைகளு மரசர்தங் கூத்துக்களும்
மூத்தவர் பொய் நடையும் - இள
மூடர்தங் கவலையு மவள் புனைந்தாள். (9)

வேண்டிய கொடுத்திடுவாள் - அவை
    விரும்புமுன் கொடுத்திட விரைந்திடுவாள்
ஆண்டருள் புரிந்திடுவாள் - அண்ணன்
    அருச்சுனன் போலெனை யாக்கிடுவாள்
யாண்டு மெக்காலத்திலும்-அவள்
    இன்னருள் பாடு நற்றொழில் புரிவேன்
நீண்டதோர் புகழ் வாழ்வும்-பிற
    நிகரறு பெருமையு மவள் கொடுப்பாள். (10)

## சஞ்சிகைவரவு.

ஆத்மபுராணம்:—இப்புராணம் சகல வேதாந்த சாஸ்திரங்களின் சாரத்தையும் ஒருங்குதிரட்டி ஸ்ரீவித்தியாரண்ணிய ஸ்வாமிகளுடைய குருமூர்த்தியாகிய ஸ்ரீ சங்கராநந்த ஸ்வாமிகளால் சமஸ்கிருதத்தில் ஸ்லோகவடிவமாய் இயற்றப்பட்டது. இதைக் காசிமாநகர் ஸ்ரீ சித்கநாநந்த ஸ்வாமிகள் ஹிந்தியில் மொழி பெயர்த்தருளினர். இப்பொழுது சமஸ்கிருத மூலத்தையும் ஹிந்திமொழிபெயர்ப்பையும் தழுவி கோயிலூர்மடாலயம் ஸ்ரீசப்பையஸ்வாமிகள் இப்புராணத்தைத் தமிழில் மொழிபெயர்த்திருக்கிறார். இதுவரை தமிழ்ப்பாஷையில் மொழிபெயர்க்கப்படாதது இந்த கிரந்தம். சஞ்சிகை ஒன்றுக்குவிலை அணு 6. மொத்தத்தில் முன்பணம் அனுப்புவோருக்கு புராணம் முடியுமளவும் மாதந்தோறும் தவறாது சஞ்சிகை அனுப்பப்படுமென்று அறிகிறோம். இதை ஒரு முறை நன்றாய்ப் படித்தவர்கள் வேறுவேதாந்த சாஸ்திரங்களைப் படிக்கவேண்டிய அவசியம் ஏற்படும் என்று நாம் நினைக்கவில்லை. துக்கநிவிர்த்தி பெறவிரும்பும் ஒவ்வொருவருக்கும் இது அத்தியாவசியமாம். வேண்டுவோர் ஸ்ரீ மூர்த்திஸ்வாமிகள் செங்கல்வராயநாயகர் தோட்டம். நெ. 6. ஜெனரல்காலின்ஸ் ரோட்டு, வேப்பேரி, சென்னை என்ற விலாசத்துக்கு எழுதிப் பெற்றுக்கொள்ளலாம்.

## சமாச்சாரக் குறிப்புகள்.

அன்னிபெஸண்டு அம்மையார் ஒரு அடுக்குப்பிரசங்கங்கள் செய்யப்போகின்றார், ஆரியஜனசமூகத்தைச்சீர்திருத்தும் பொருட்டு. ஆதியில் இவர் ஜாதிவர்ணாசிரமதர்மங்கள் அவசியமென்றும் ஆதிகாலத்து ஆரியசிரேஷ்டர்களால் ஆராயப் பெற்று நமக்கு அன்பு பூர்வகமாக அளிக்கப் பட்டிருக்கின்ற ஆசார அநுஷ்டானங்கள் இன்றியமையாதன வென்றும் போதித்துள்ளார். இப்பொழுது அவற்றையெல்லாம் சீர்திருத்தம்செய்யவேண்டுமென்று 'குட்ஹூமி' மகாத்மா இவருக்கு ஆக்ஞைசெய்து விட்டனர் போலும்! ஆயினும் இவர் ஆசாரச்சீர்திருத்தக் காரர்களுடைய அபிப்பிராயங்களையே கொண்டிருக்கின்றனரோ அல்லது நூதனமாக ஏதேனும் சீர்திருத்தங்களைப் பிரேரேபிக்கப் போகின்றனரோ, நாம் அறியோம். இவருடையபிரசங்கங்கள் முடிந்தபின்னர்' அவற்றை யெல்லாம் நன்றாய் ஆராய்வோம். சென்னையிலுள்ள சில கோர்ட்டுக்களின் மூலமாயும் சமாச்சாரப் பத்திரிகைகளின் மூலமாயும் இவருடைய, இதுவரையில் அடக்கமாயிருந்தபல ஊழல்களும் வெளியாய்விட, இவரையும் இவருடைய போதனைகளையும் மிக்கோரும் அலட்சியம் செய்ய ஆரம்பித்து விட்டனர். ஆகையால் அடித்தார் ஒரு 'பல்டி' அனைவரும் ஆச்சரியப்படும்படியாக; ஆசாரச் சீர்திருத்தங்களிலும் அரசாங்க விஷயங்களிலும் தலையிட்டுக்கொண்டனர். காலத்திற்குத்தக்க கோலம் இட்டுக்காரியங்களைஜயித்துக் கொள்ள வேண்டுமென்பதே இவருடைய கருத்து. இவர் பெரியோரென்று ஏமாந்திருப்பவர்கள் எத்தனைபேர்? இவர் களங்கமற்ற ஹிருதய முடையாரென்றும் இவரைப்பின் பற்றினால் க்ஷேமமடையலா மென்றும், நமது ஜனங்கள் நம்பி நமது நாட்டில் இவருக்கு இருக்கஇடங் கொடுத்தனர். இப்பொழுது இவருடைய உண்மைவெளியாகிவிடவே, நமது ஜனங்கள்-மூளைபுரண்டு மயங்கியிருக்கும் மிகவும் சிலஜனங்களைத்தவிர - இவர்சமயத்திற்குத்தக்கபடி ஜாலம்செய்பவர் என்று அறிந்து, இவரைப்புறக்கணித்துவிட்டனர். ஆயினும் இவர் அவர்களை விடுவதாயில்லை. ஒரு பெருவெள்ளப் பெருக் கெடுத்தோடும் ஆற்றின் நடுவில் ஒரு கரடியானது அகப்பட்டுப் பிரவாகத்தில் அடித்துக் கொண்டுபோகப்படுகையில் நான்கு கால்களையும் ஒடுக்கிக்கொண்டு கரடிசெல்ல,

கரையில் நின்றுகொண்டிருந்த ஒருவன் கரடியைக் கம்பளிமூட்டையென்று நினைத்துத் திடீரென்று ஆற்றிற்பாய்ந்து அதைக் கட்டிப்பிடிக்க, இதுவரையில் கையிற்பிடித்துக்கரையேறுவதற்கு யாதொரு ஆதாரவுமின்றித்தத்தளித்துக் கொண்டிருந்த கரடியானது தனதுகால்களைவிரித்து இவனைக்கட்டிப்பிடித்துக் கொண்டது. கம்பளிமூட்டையன்று; கரடியல்லவா என்று தான்பிடித்த பிடியை விட்டு விட்டுத் தப்பித்துக்கொள்ள முயன்றபோதிலும், கரடி இவனைவிட்டுவிடுமோ? அதுபோல நமது ஜனங்கள்பெலண்டை கம்பளிமூட்டையென்று நினைத்துப்பிடிக்க, கரடியாகிய இவர் பிடித்துக் கொண்டனர். இப்பொழுது இவரைவிட்டு விடலாமென்றாலோ, இவர்விடுவதாயில்லை.

* * * * * *

தன்நிழல் தன்கூடவேவருமன்றோ? இந்தியர்கள் எங்கு சென்றாலும்கஷ்டப்படவேண்டியவர்களே. என்செய்யலாம்? அட்சய, தாது முதலானவருஷங்களில் மிகக்கொடுமையான பஞ்சம் நேரிட்டு விட்டதென்று பஞ்சநிவர்த்தி மார்க்கங்களெல்லாம் தேடப்பட்டன. அப் பஞ்சகாலங்களில் ரூபா ஒன்றுக்கு மூன்றரைப்படி அரிசிவிற்றதாம்! இதைத்தேச சரித்திரகர்த்தாக்களும்அரசாங்கத்தாரும் பயங்கரமாக வர்ணித்திருக்கின்றனர். இப்பொழுது அரிசியின்விலையென்ன? ஒருரூபாவுக்குமூன்றரைப்படியே. அட்சய, தாது முதலானவருடங்களில்ஆரம்பித்தபஞ்சம் இன்னும் முடிவுறவில்லை. ஆனால்தற்காலத்திய கவர்னர்களும் அவர்களது சபையின் அங்கத்தினர்களும் தேசம்செழித்திருக்கின்றது என்று சொல்வதில் ஒருவருக்கொருவர் போட்டிபோடுகின்றார்கள். "மோட்டார் வண்டிகளுக்குக் குறைவேயில்லையே! ஏற்றுமதிகட்கும் இறக்குமதிகட்கும் குறைவேயில்லையே! தேசம் செழிக்காமலென்ன!" இவ்வண்ணம் சொல்வோர் கூலி வேலைசெய்யும்எளியஜனங்களுடைய குடிசைகளில் பழகியிருந்தால், தேசம் செழித்திருக்கின்றதோ அல்லது, பஞ்சமேகுடிகொண்டிருக்கின்றதோ என்பதை நன்கு அறிவார்கள்.

இத்தகையபரிதாபகரமான நிலைமையில் இருக்கும் நமது ஜன்மபூமியில் பிழைக்கவழியின்றி, நமது எளியசகோதரர்கள் பலர் பரதேசங்கட்குச் சென்றிருக்கின்றனர். உலகில் எந்ததேசங்கள் சிலவருஷங்கட்கு முன் வெறுங்காடுகளாயிருந்தனவோ, அவைகளெல்லாம் இங்கிருந்து சென்றிருக்கும் எளிய இந்தியனுடைய கைகளினாலேயே ரமணீகரமான நாடுகளாக்கப்பட் டிருக்கின்றன. தென்னாப்பிரிக்கா, கானடா, ஆஸ்டிரேலியா முதலானதேயங்களில் இந்தியர்களே வேலைசெய்வதில் மிகுந்திருக்கின்றனர். இந்தத்தேசங்களில் இவர்கள் படும்பாடு சொல்லிமுடியாது. பிறந்ததேசங்களில் தான் துன்பமும்துக்கமும் சூழ்ந்துகொண்டனவென்று வெளியேபுறப்பட்டு விட்டாலும் புகுந்ததேசங்களிலும் இவர்களுடைய நிழல் இவர்களைப்பின் தொடர்கிறது. சென்றவருஷத்தில் ஸ்ரீமான் கோகலே அவர்கள் தென்னாப்பிரிக்காவிற்குச் சென்றிருந்தபொழுது, அந்த கவர்ன்மெண்டாரிடமிருந்து அநேக அநுகூலமானவாக்குதத்தங்களைப் பெற்றுவந்தார். அந்தவாக்குத்தத்தங்களெல்லாம் ஆகாசத்திற்பறந்து விட்டன. கோகலே அவர்கள் கடைசிவரையில் இந்தியர்களுக்காக அழுதுதீர்ப்பார் என்பதை நாம் நன்கு அறிவோம். ஆனால் அவை எம்மட்டிலும்பயன் பெறும் என்று நாம் சொல்லமுடியவில்லை. சின்னாட்களாகத் தென்னாப்பிரிக்காவிலிருந்துவருகிறதந்திகளால் அங்குள்ள நமது சகோதரர்கள் எதிர்க்காமல் எதிர்ப்பதாகிய சாந்தயுத்தத்திற்குக் கச்சைகட்டிக்கொண்டிருக்கின்றனர் என்று தெரியவருகிறது. தேசாபிமானியாகிய காந்தி யவர்களே தலைமைவகிக்கிறார். நம்சகோதரர்கள் அங்குபடும் பாட்டை, பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்திற்குட்பட்ட ஜனங்களுக்கு சமஸ்வதந்திரத்தைக்கொடுக்க வில்லையென்று போயர்களுடன் பயங்கரமானதோர் யுத்தம்செய்த பிரிட்டிஷ் கவர்ன்மெண்டார், நன்றாயறிந்திருந்தும் வாய் மூடிமௌனம் சாதிப்பதென்னே? குடியேற்ற நாடுகளில் தங்கள் அதிகாரம் செல்லாதென்று கருதியோ? அல்லது இந்தியர்கள் மனிதவர்க்கத்தைச் சேர்ந்தவரல்லரென்றோ?

* * * * *

நேஷன் என்றபத்திரிகையில 'உத்தரவினால்மனிதரைத்திருடுதல்' என்ற தலைக்குறிப்புடன் ஒரு சமாச்சாரம் வெளியாயிருக்கிறது. பம்பாய்ராஜதானியைச் சேர்ந்த ஜுனாகாட் என்ற சமஸ்தானத்தின் நவாபாகிய பதின்மூன்று வயதுள்ள பையனை அவனது தாயாருடைய சம்மதியின்றி, அந்த ஸமஸ்தானத்தில் ரெஸிடெண்டாகிய ராபர்ட்ஸென் என்பவரும் பம்பாய்க் கவர்னராயிருந்து சமீபத்தில்தான் பென்ஷன்பெற்றுச் சென்ற ஸர்ஜ்யார்ஜ் கிளார்க் என்பாரும் கலந்து யோஜித்து இங்கிலாந்துக்கு அனுப்பியிருக்கிறார்களென்று தெரிகிறது. அப்பையனுடைய தாயார் ரெஸி

டெண்டிடத்திலும் கவர்னரிடத்திலும் ராஜப்பிரதி நிதியவர்களிடத்திலும் முறையே மனுச்செய்து அழுதுபார்த்தார். பயனில்லாமற்போகவே, சக்கரவர்த்தியாருக்கும் தந்தி யடித்தாராம்; பதிலேயில்லையாம். இப்பொழுது இந்தியா மந்திரியிடத்தில் மனுச்செய்து கொண்டிருக்கின்றார், இவர்செய்திருக்கும்மனுவைப்படித்துப் பார்த்தால், எத்தகையகன்னெஞ்சினாது ஹிருதயங்களும் கரைந்துவிடும். இங்ஙனம் கவர்ன்மெண்டாரே தாயாருடைய அநுமதியும் சம்மதியும் இன்றிப்பெற்ற பிள்ளையை எடுத்துச் செல்வார்களானால், நமது பெஸண்டு நாராயணய்யாவின் பிள்ளைகளைப் பிதாவிடம் ஒப்புவிக்க மாட்டேனென்பது ஆச்சரியமன்று.

* * * * * * * *

வங்காளராஜதானியில் கல்கத்தாவிலும் மைமென்சிங்கிலும் இரண்டுபோலிஸ் உத்தியோகஸ்தர்கள் கொல்லப்பட்டனர். இவ்விருவர்களும் ராஜாங்கப்புரட்சிக்காரர்களைக்கவனிப்பதில் மிகவும் அரிய ஊக்கம் எடுத்து உழைத்தவர்கள். ஆதலால் ராஜாங்கப்புரட்சிக்காரர்களாலேயே இக்கொலைகள் நடைபெற்றிருக்கவேண்டுமென்று ஊகிக்கப்படுகிறது. இப்பரிதாபகரமான செயல்களைப் பற்றி நாம்விசனிக்கிறோம். இத்தகையசெயல்கள் அடிக்கடிவங்காளத்திலே நடைபெறுதற்குக் காரணம் என்ன வென்று ஆய்ந்து அறிதற்கு அந்தராஜதானியில் கவர்ன்மெண்டாரால் ஒருக்மிட்டி நியமிக்கப்பட்டிருக்கிறது. ஆனால் அக்கமிட்டியின் அங்கத்தினர் அனைவரும் ஆங்கிலர்களும் உத்தியோகஸ்தர்களுமாம். அந்தேசத்தில் ஜனத்தலைவர்களாகிய ஸ்ரீமான் சுரேந்திரநாத் பானர்ஜி, ஸ்ரீமான்மோதிலால் கோஸ், முதலியோர்களில் எவரும் அக்கமிட்டியில் இராதது ஆச்சர்யம்.

* * * *

மிஸ்மாட் ஆல்லன் என்னும் ஒருஐரோப்பிய நாட்டிய மாது இந்தியாவிற்கு வரப்போகின்றாள். ஆங்கிலேயர்களில் அநேகர்இவள்வரக்கூடாதென்று ஆர்ப்பாட்டம் செய்கின்றனர். ஆனால் அவள் தீர்மானித்துவிட்டாள் வருவதாக. இவள் இந்தியாவைவிட்டுத் திரும்பிப்போகும்போது இந்தியர்களுடையபணமும் கொஞ்சம் பரவிடும். இதைப்பற்றி அடுத்தமுறைவிரிவாய் எழுதுவோம்.

# ஞானபாநு.

VOL - I. தொகுதி - க. | NOVEMBER 1913. பிரமாதீச ஞு கார்த்திகைமு | NO - 8. பகுதி - அ.

## பார்த்தசாரதியே பாரதசாரதி.

(முன் தொடர்ச்சி.)

மகா பாரதயுத்தத்தில் பார்த்தனுக்கு சாரதியாய் பகவத்கீதோபதேசம் செய்த பரமபுருஷனே மகாபயங்கரமான இப்பிரபஞ்சயுத்தத்தில் ஸர்வாத்ம ஸ்வரூபமாகிய ஈஸ்வரனாகி ஜீவனாகிய பார்த்தனுக்கு எப்பொழுதும் உபதேசம் செய்து கொண்டிருக்கிறார்; ஜீவனாகிய பார்த்தனது ரதமாகிய சரீரத்தில் சதாசர்வதா காலமும் சாரதியாய் வீற்றிருக்கிறார். ஸ்ரீகிருஷ்ணனது உபதேசப் பிரகாரம் நாம் ஒவ்வொருவரும் நடப்போமானால் நமது காலகதிக்கு அவரே கடமைப் பட்டவராவார்.

ஆதலால் பகவத் கீதையின் சாராம்சத்தை ஆராய்ந்து கிரகிப்போம்.

அர்ச்சுனனுடைய வேண்டுகோளின்படி, கொண்டுபோய் நிறுத்தினார் அவரது ரதத்தை ஸ்ரீகிருஷ்ணன் இருசேனைகளுக்கும் மத்தியில். எறிட்டுப்பார்த்தான் அர்ச்சுனன் இருசேனைகளையும். எங்குபார்த்தாலும், தனது நெருங்கிய சுற்றத்தினரும் ஸ்நேகிதர்களும் நிறைந்திருக்கக் கண்டான். சுற்றத்தினரைப் பற்றிய பற்றும்பச்சாத்தாபமும்நிறைந்தன அவனதுஉள்ளத்தில். உடனே பெருமூச்சுவிட்டான். செய்வ தின்னதென்று அறியானாகி, காண்டீபம்கையினின்றும் நழுவிவிட, யுத்தம்வேண்டேன், வேண்டேனென்று கதறிக்கொண்டு வீழ்ந்தான் ரதத்தினுள்ளே. அப்பொழுது அவன் சொன்ன நியாயங்களோ ஸ்மிருதியை ஆதாரமாகக் கொண்டுள்ளவை. ஸ்ரீகிருஷ்ணனிடத்தில் சொல்லாமல் வேறு எவரிடத்தில் அந்த நியாயங்களை அர்ச்சுனன் சொல்லியிருந்தபோதிலும், மகாபாரதயுத்தம் நடந்தேயிராது; பகவத்கீதையும் வெளிவந்திராது. பார்த்தார் ஸ்ரீகிருஷ்ணன்; அவனுக்கு இயற்கையாகவே மிகுந்த அமைதியுள்ள [illegible]

தைத் தூண்டிவிட்டார். "ஆரிய பூமியில், ஆரியகுலத்தில், ஆரிய தர்மங்களினிடையில் உற்பவித்துள்ள உனக்கு இந்த மிலேச்ச ஸ்வபாவம், இந்தமனக்கலக்கம் எங்கிருந்து வந்தது இப்பொழுது?" என்று இழிவாகப்பேசினார். அவனிடத்தில் ராஜஸகுணம் சக்தியுடன் விளங்கினாலன்றோ, அவன்யுத்தத்திற்குக் கிளம்புவான். அஹிம்ஸை, பச்சாத்தாபம் முதலிய உத்தமஸ்வபாவம் மிகுந்து, ராஜஸகுணம் அமிழ்ந்துவிட்டது. "திரிலோகங்களின் பொருட்டும் யான்யுத்தம் செய்யேன்" என்று திரிலோகாதிபத்தியத்தையும் திரணீகரிக்கும் படியான சத்துவகுண விசேஷமாகிய சாந்தவைராக்கியம் பிறந்துவிட்டது. ஆகையால் அவனிடத்தில் கோபத்தையோ, ரோஷத்தையோ இனிமேல் தூண்டிவிடமுடியாதென்று நன்றாய் அறிந்து கொண்டார் ஸ்ரீ கிருஷ்ணன்.

ஆனால் அர்ச்சுனன் ஸ்ரீகிருஷ்ணனுடன் நெருங்கி உறவாடிவந்தவனன்றோ? அதனால் அவருடைய தர்சனவிசேஷத்தாலும் இராஜஸகுணத்தாலுண்டாகும் களங்கம் அழிந்துவிட்டதாலும், அர்ச்சுனனதுஉள்ளத்தில் ஸ்ரீகிருஷ்ணனதுமகிமைவிளங்கியிருக்கவேண்டும். இல்லையேல், அவன் "நான்தங்களுக்குச்சிஷ்யன்; எனக்கு நன்மையை உபதேசித்திடுக" என்று, ஸ்ரீகிருஷ்ணனிடத்தில் கெஞ்சிக்கேட்டுக் கொள்ளவேண்டியதில்லை.

அறிந்தார் ஸ்ரீகிருஷ்ணன் அர்ச்சுனனது ஹிருதயத்தை; அவனது ஹிருதயம் இப்பொழுது நிராசையுடன் விளங்குகின்றது; அவன் உலகப்பற்றுக்களையெல்லாம் உதறியெறிந்துவிட்டுத் தனியனாய் ஈஸ்வர சந்நிதியில் அபயம், அபயம் என்று அலறிநிற்கின்றான். அவன் இத்தகைய (கிஞ்சிக்ஞ) ஸ்திதியை அடைவதற்காகவே இதுகாறும் ஸ்ரீகிருஷ்ணன் காத்திருந்தார். "நான்தாஸன், நான்சிஷ்யன்" என்று எவன்தனது பலயீனத்தை உணர்ந்து பிரபஞ்சசுகங்களை வெறுத்துத் தேவேந்திரபட்டம் கொடுத்தபோதிலும் திரணீகரிக்கும் படியானசக்தி வாய்ந்துள்ளானோ, அவனுக்கே ஆத்மஞானம் உபதேசம்செய்யத்தகும். ஸ்ரீகிருஷ்ணன் இதுகாறும் அர்ச்சுனனுக்கு உதவிபுரிந்து வந்ததெல்லாம் இத்தகைய ஒருசந்தர்ப்பத்தை எதிர்பார்த்தே தான். நரநாராயணர்களெனப் பெயர்கள்வாய்ந்து ஈஸ்வரனே எப்பொழுதும் அவதாரம்செய்து வருகிறார். நாராயணாம்சமாகிய குருவும்



ாம்சமாகிய சிஷ்யனும் எப்பொழுதும் உலகில் இருக்கின்றனர்.
ாம்சமாகிய சிஷ்யன் நாராயணாம்சமாகிய குருவை எப்பொழு
ம் தேடிக்கொண்டிருப்பதும் நாராயணாம்சமாகிய குரு நராம்ச
ாகிய சிஷ்யனைத் தடுத்தாட் கொள்ளும்பொருட்டுத் தேடிக்கொ
ாடிருப்பதும் ஈற்றில் இவர்கள் இருவரும் சந்தித்து ஏகஸ்வ
பமாகி விடுவதும் நித்திய நீதிகளாம்.

ஆதலால் ஸ்ரீகிருஷ்ணனும் அர்ச்சுனனும் இதுகாறும் சந்
த்து நெருங்கிப் பழகிவந்தபோதிலும் இருவரும் ஒன்றேயாகும்
டியான ஸ்திதி இன்னும் அர்ச்சுனனுக்கு வந்திலதாகையால் ஸ்ரீ
ருஷ்ணன் அர்ச்சுனனுக்கு ஆத்மஞானத்தைப் போதித்துத்
ன்னில் ஐக்கியமாகும் படியானதன்மையை உணர்த்துவதற்குத்
க்கதோர் சந்தர்ப்பத்தை எதிர்பார்த்திருந்தார். வாய்த்தது நல்ல
மயம்; அறிந்தான் அர்ச்சுனன் தனது அகங்காரத்தின் வலியின்
மையை; சரணம், சரணமென்று சாற்றினான் ஸ்ரீகிருஷ்ணனிடத்
ல்.

ஸ்ரீகிருஷ்ணனுக்கு விஜயனிடத்தில் பேரன்பு உண்டாய்விட்
து; மந்தகாசம் புரிந்தார். எடுத்தார் எவராலும் எடுக்கவொண்
ாத ஆத்மஞானாஸ்திரத்தை; கொடுத்தார் பார்த்தனிடத்தில்.
ழ்ந்தான் அர்ச்சுனன்; இதுவென்னவென்றான். பகவான்ஞானோ
தேசம் தொடங்கினார். கேவலம் பயங்கரமான ஒருயுத்தசமயத்
ல் ஸ்மிருதிதர்மங்களை ஆதாரமாகக் கொண்டு வாதிக்கப்புகுந்த
ர்ச்சுனனுக்கு ஸ்ருதிரகஸ்யத்தை உணர்த்திச் சாய்ந்துகிடக்கும்
ர்ச்சுனனைச் சண்டைக்குத் தூண்டிவிட்ட ஸ்ரீகிருஷ்ணனது
ஹிமைதானென்னே!

(தொடரும்.)

சிவம்.

## ஸ்ரீ கீதா ரஹஸ்யம்.

[ஸ்ரீமத் விவேகாநந்த ஸ்வாமிகள் எழுதியது.]

பகவத் கீதையைப் பாராயணம் செய்திருக்கிற நீங்கள், பற்
ற்றிருத்தலே பரமார்த்தமென்று அப்புஸ்தக முழுதிலும் கூறி
ருப்பதைக் கவனித்திருக்கலாம். பற்றற்றிரு. ஹிருதயத்தின்
ன்பு ஒருவருக்கே உரியது. எவருக்கு? மாறுதலற்ற அவருக்கு.

அவ்வொருவர்யார்? அவர்தான் ஈஸ்வரன். மாறுந்தன்மையுடைய எதற்கேனும் ஹிருதயத்தைக் கொடுக்கும் தப்பிதத்தைச் செய்யாதே; ஏனென்றால் அது துக்கமாம். நீ அதை (ஹிருதயத்தை) ஒரு மனிதனுக்குக் கொடுக்கலாம், ஆனால் அவன் இறந்துவிட்டால், பயன் துக்கமே. நீ அதை (ஹிருதயத்தை) ஒரு சிநேகிதனுக்குக் கொடுக்கலாம், ஆனால் அவன் நாளையதினம் உன்னுடைய சத்துருவாய் விடலாம். உனது கணவனுக்கு நீ, அதை (ஹிருதயத்தை) க்கொடுத்தால், அவன் ஒருநாள் உன்னுடன் சண்டை யிட்டுக் கொள்ளலாம். நீ அதை (ஹிருதயத்தை) உனது மனைவிக்குக் கொடுக்கலாம், ஆனால் அவள் நாளைக் கழித்து மறுநாள் இறந்துபோய்விடலாம். இது உலகஸ்வபாவம். இங்ஙனம் ஸ்ரீ கிருஷ்ணன் கீதையிற் கூறுகின்றார்: ஈஸ்வரன் ஒருவரே எப்பொழுதும் மாறுதலற்றவர். அவருடைய அன்பு தவறுவதில்லை. நாம் எங்கேயிருந்தபோதிலும் நாம் எதைச் செய்தபோதிலும் அவர் எப்பொழுதும் ஒரே மாதிரியாகத் தயாளகுணமும் அன்பு செலுத்துகிற ஹிருதயமும் உள்ளவர். அவர் எப்பொழுதும் மாறுதலற்றவர்; நாம் யாது செய்யினும் அவர் கோபமற்றவர். ஈஸ்வரன் எங்ஙனம் நம்மிடத்தில் கோபித்துக்கொள்ளக்கூடும்? உன்னுடைய குழந்தை எத்தனையோ துஷ்டச் செய்கைகளைச் செய்கின்றது; அக்குழந்தையினிடம் நீ கோபித்துக் கொள்கிறாயா? நாம் எவ்விதம் ஆகப்போகிறோம் என்பதைக் கடவுள் அறியாரா? சீக்கிரத்திலாவது சிறிது தாமதப்பட்டாவது நாம் அனைவரும் பரிபூரணர்களாகப்போகிறோம் என்பதை அவர் அறிவார். அவர் அளவற்ற பொறுமை வகித்துள்ளார். அவரிடத்தில் நாம் அன்பு செலுத்தவேண்டும். அவரிலும் அவர் மூலமாயும் ஜீவிக்கின்ற ஒவ்வொருவரையும் நாம் நேசிக்கவேண்டும். இது தான் இரகஸ்யம். நீ மனைவியை நேசிக்கவேண்டும்; ஆனால் மனைவியின் பொருட்டன்று. "ஒருபொழுதும், எனது அன்பிற்குரியவனே! கணவன் கணவன் என்ற காரணத்தால் நேசிக்கப்படுகிறதில்லை. ஆனால் ஏனென்றால் ஈஸ்வரன் கணவனில் இருக்கிறார்." வேதாந்த தத்துவ ஞானம் சொல்லுகின்றதாவது:-பர்த்தா பாரியை இவ்விருவருடைய நேசத்திற்கூட, மனைவி, கணவனைத்தான் நேசிப்பதாக நினைத்துக்கொண்டிருந்தபோதிலும், உண்மையான ஆகருஷணசக்தி அங்குள்ள ஈஸ்வரனே யாவர். அவரே ஆகருஷ [illegible], வேறொன்றுமன்று; ஆனால் மனைவியோ அநேகமாய்



இதை அறியாளாயினும் நியாயமான காரியத்தையே, அதாவது, ஈஸ்வரனுக்கு அன்பு செலுத்துதலையே தான் அறியாமலே செய்துகொண்டிருக்கிறாள். அறியாமற் செய்யும்பொழுதே துன்பம் உண்டாகின்றது. அறிந்து செய்தால், அதுவே இன்பம். நமது சாஸ்திரங்கள் கூறுகின்றதும் இதுதான். எங்கேனும் அன்புஇருந்தால், எங்கேனும் ஆநந்தத்தின் அணுவளவேனும் பிரகாசித்தால், அது அவருடைய ஸாந்நித்திய மகிமையென்று அறிந்துகொள்; ஏனென்றால் அவரே சுகம், அவரே ஆநந்தம், அவரே அன்பு. இது ஸ்ரீ கிருஷ்ணோபதேசத்தின் ஓர்பாகம்.

ஸ்ரீ கிருஷ்ணோபதேசத்தின் மறுபாகம் யாது? வேலைசெய், வேலைசெய், இரவும் பகலும் வேலைசெய் என்று கீதை கூறுகின்றது. "ஆனால் உபசாந்தமடைவது எங்ஙனம் - ஜீவிதகாலம் முழுதும் நான் ஒரு ஜட்கா வண்டிக் குதிரையைப் போல வேலை செய்து (வாயிற்) கடிவாளத்துடனேயே இறக்க வேண்டியிருந்தால், இங்கு எனது ஜன்மத்தின் நோக்கம் என்ன?" என்று நீ கேட்கலாம். "ஆம் நீ உபசாந்தம் அடைவாய், வேலையினின்றும் ஓடுதல் உபசாந்த மடைதற்கு ஒருபொழுதும் மார்க்கமேயன்று" என்று கிருஷ்ணன் கூறுகின்றார். உன்னால் முடியுமாயின், உன் கடமைகளை யெல்லாம் தூர எறிந்துவிட்டு, ஒரு மலையின் உச்சிக்குப் போய்விடு; அங்குக்கூட, மனம் போய்க்கொண்டே யிருக்கிறது, சுற்றிக்கொண்டும், சுழன்றுகொண்டும், சுற்றிக்கொண்டும். ஒருவன் ஒரு சந்நியாசியைப்பார்த்து "ஸ்வாமி! ஒரு நேர்த்தியான இடத்தைக்கண்டு பிடித்தீர்களா? எத்தனை வருஷங்களாக ஹிமோத்கிரியில் யாத்திரை செய்துகொண்டிருக்கிறீர்கள்?" என்றுகேட்டான். "சென்ற நாற்பது வருஷங்களாக" என்று சந்நியாசி மறுமொழி பகர்ந்தனர். "எத்தனையோ அழகான இடங்கள் இருக்கின்றனவே: தாங்கள் ஏன் அவைகளில் ஏதாவது ஒன்றில் ஸ்திரமாய் வசிக்கவில்லை?" "ஏனென்றால் இந்த நாற்பதுவருஷங்களாக என் மனம் யான் ஒரு இடத்தில் நிலைத்திருக்கச் சம்மதிக்கவில்லை." நாமெல்லோரும் "நாம் உபசாந்த மடைவோம்" என்று சொல்லுகிறோம்; ஆனால் மனமானது நாம் உபசாந்த மடையச் சம்மதிக்கிறதில்லை.

ஒரு தார்த்தாரனைப் பிடித்த மனிதனுடைய கதையை நீ அறிவாய். ஒருயுத்தவீரன் பட்டணத்தின் வெளியே இருந்தான். அவன் தனது உறைவிடத்தை நெருங்கியவுடன் "நான் ஒருதார்த்தாரனைப் பிடித்திருக்கிறேன்" என்று கூவினான். "அவனை உன்

ளேயிட்டுக்கொண்டுவா" என்று ஒரு சப்தம் கேட்டது. "அவன் உள்ளே வரமாட்டேனென்கிறான், ஐயா!" "அப்படியானால் நீஉள்ளேவா." "அவன் என்னையும் உள்ளேவிடமாட்டேன் என்கிறான் ஐயா!" அப்படியே நமது இந்த மனத்திலும் நாம் "ஒரு தார்த்தாரனைப் பிடித்து" இருக்கிறோம். அமைதியாயிரு, சமாதானமாயிரு என்று நாம் எல்லோரும் சொல்லுகிறோம். ஆனால் குழந்தைகள்கூட இவ்வனம் சொல்லுகிறது மாத்திரம் அன்று, செய்யவும் கூடுமென்று நினைக்கின்றன. என்றாலும், அது மிகவும் கஷ்டம். நான்முயற்சி செய்திருக்கிறேன்; நான் எனது கடமைகளையெல்லாம் தள்ளிவிட்டு, மலைகளின் உச்சிகட்கு ஓடினேன்; நான் அடர்ந்த காடுகளிலும் குகைகளிலும்வசித்தேன்; ஆனாலும்நான் "ஒரு தார்த்தாரனைப் பிடித்தேன்;" ஏனென்றால் இக்காலங்களிலெல்லாம் எனது உலகம் என்னுடனேயே இருந்தது. எனக்கு என்மனத்திலுள்ளது தான் 'தார்த்தாரன்." ஆகையால்வெளியிலுள்ள ஏழை ஜனங்களை நாம் குற்றங் கூறுதல் தகுதியன்று "தார்த்தாரன்" இங்கே, உள்ளே யிருக்கையில், நாம் "இந்த நிலைமைகளெல்லாம் நல்லன, இவைகளெல்லாம் தீயன" என்று சொல்லுகிறோம். அவனை நாம் அடக்கி விடுவோமாயின், நாம் எல்லாம் சரியாக இருப்போம்.

ஆகையால், நாம் நமது கடமைகளை நீக்கிவிடக் கூடாதென்றும் ஆனால் தைரியமாய் அவைகளைப் பயன் கருதாது செய்ய வேண்டுமென்றும் கிருஷ்ணன் போதிக்கிறார். வேலைக்காரனுக்குக் கேள்வி கேட்பதற்குப் பாத்தியதை யில்லை. யுத்தவீரனுக்கு நியாயம் பேசுவதற்குப் பாத்தியதை யில்லை. முன்னேறிக்கியே செல்வாய். எத்தகைய வேலையை நீ செய்கிறாய் என்பதைப்பற்றி நீ அதிக கவனம் செலுத்தாதே. நீஸ்வயநன்மை யற்றிருக்கிறாயா என்று உன் மனத்தைக்கேள். நீ (ஸ்வயநன்மையற்று) இருந்தால், ஒன்றையும் லட்சியம்செய்யாதே; எதுவும்உன்னை எதிர்க்க முடியாது. ஆழ்ந்துவிடு. கையின் மேலுள்ள கடமையைச் செய்.

இப்பொழுது இப்போதனையின் முடிவு என்னவென்றால், உலகத்திலுள்ள கடமைகள் அனைத்தும் பரிசுத்தமாக்கப்பட்டு விட்டன. இவ்வுலகத்தில் நாம் தாழ்ந்தது என்று சொல்வதற்குப் பாத்தியதையுள்ள கடமையேயில்லை; ஒவ்வொருவருடைய வேலையும் சிம்மாசனத்தின்மேல் சிறப்புடன் வீற்றிருக்கும் சக்கரவர்த்தியினுடையதைப்போலவே அவ்வளவு மேன்மையுற்றது.

சிவசுப்பிரமணியம்.

## ஸ்ரீமத் விவேகாநந்த ஸ்வாமிகளின் கடிதம்.

ஸ்ரீ ராமச்சந்திரசாஸ்திரியவர்கள் மொழிபெயர்த்தது.

ரிய:— சிக்காகோ, 28-5-1894.

நான் ந்யூயார்க்கிலிருந்து போஸ்டனுக்கும் போஸ்டனிலிருது ந்யூயார்க்குக்குமாகச் சுற்றிக்கொண்டிருந்தபடியால், சீக்கிரத்தில் உங்களுக்குக் கடிதம் எழுதமுடியவில்லை. எப்பொழுது இந்தியாவுக்குத் திரும்பிவருவேனென்று எனக்குத் தெரியாது எனக்குப் பின்புறம் நின்றுகொண்டு எனக்கு ஆக்ஞை செய்து கொண்டிருக்கிற ஈஸ்வரனிடத்தில் எல்லாவற்றையும் ஒப்புவித்து விடுதல் மிகவும்நலம். யான் ஒருபொழுதும் இருந்ததேயில்லையென்று நினைத்துக்கொண்டு வேலைசெய்ய முயற்சி செய்யுங்கள். எவர் பொருட்டும் அல்லது எதன் பொருட்டும் காத்திருக்கவேண்டாம். உங்களால் முடியுமானவற்றை நீங்கள் செய்யுங்கள். ஒருவர்மேலும் நம்பிக்கைவைக்காதீர்கள். ... ... ... ... ... ...

நான் இங்கு போதுமான அளவுபிரசங்கம் செய்திருக்கிறேன். இங்கே ஏற்படும் செலவுகளோ பயங்கரமாயிருக்கின்றன. மிகவுயர்ந்தவையும் மிகநேர்த்தியானவையுமான குடும்பங்கள் என்னைப்பார்த்தாலும் என்னை அநேகமாகக் கவனித்து வந்தபோதிலும், பணம் பறக்கின்றது.

இந்தக் கோடைகாலத்தில் நான் அங்குவருவேனோ வரமாட்டேனோ எனக்குத்தெரியாது. அநேகமாக வரமாட்டேனென்று நினைக்கிறேன். இதன்மத்தியில் நமது ஆலோசனைகளை ஒழுங்குபடுத்தி விருத்திசெய்யுங்கள். நீங்கள் எல்லாம் செய்யவல்லவர்கள் என்று நம்புங்கள். ஈஸ்வரன் நம்முடன் கூடவேயிருக்கிறானென்று அறிந்துகொள்ளுங்கள். ஆகையால், தீரர்களே! முன் செல்லுங்கள்.

எனது சொந்த தேசத்தில் போதுமான அளவுபுகழ்பெற்றுவிட்டேன். புகழ்ந்தாலும் புகழாவிட்டாலும், உறங்காதீர்கள்; பின்வாங்காதீர்கள். நமது ஆலோசனைகளில் ஒரு அணு அளவு கூட இனனும் அநுபவத்தில் கொண்டுவரப்படவில்லையென்று நீங்கள் ஞாபகப்படுத்திக் கொள்ளவேண்டும்.

கல்வியிற் றேர்ந்தவாலிபர்களிடத்தில் வேலை செய்யுங்கள். அவர்களை ஒன்றுசேர்த்து ஒழுங்குபடுத்துங்கள். பெரியகஷ்டங்களைச்சகித்தே பெரியகாரியங்கள் கைகூடவேண்டும்; தன்னயமே கூடாது, பெயரும் பெருமையும் உதவா. உன்னுடைய கீர்த்தியாயினும் சரியே, என்னுடையகீர்த்தியாயினும் சரியே, என்குருநாதருடைய கீர்த்தியாயினும் சரியே, எதற்கும் ஆசைப்படலாகாது. எண்ணத்தைப் பரவச்செய்யுங்கள், ஏற்பாட்டின்படி வேலைசெய்யுங்கள். சக்கரத்துக்கு உங்களுடைய புஜங்களைக் கொடுங்கள்! பெயரின் பொருட்டாவது, கீர்த்தியின் பொருட்டாவது, இவை போன்ற எந்தமூடத்தனத்தின் பொருட்டாவது பின்திரும்பிப் பார்க்க நிற்காதீர்கள். அகங்காரத்தை அகற்றிவிட்டு வேலைசெய்யுங்கள். "புற்கள் ஒன்றுசேர்க்கப்பட்டுக் கயிறுக்கப்பட்டபொழுது மதயானையையும் கட்டுப்படுத்தும்" என்பதை ஞாபகப்படுத்திக் கொள்ளுங்கள். உங்கள்எல்லார் பேரிலும் ஈஸ்வரானுக்கிரகம் இருக்கக்கடவது! அவருடைய சக்தி உங்களிடத்தில் இருக்கக்கடவது! அந்தசக்தி முன்னமே உங்களிடத்தில் இருக்கிறதாக நான் நம்புகிறேன். "விழித்துக்கொள்ளுங்கள்; லட்சியத்தை அடைகிறவரையில் நிற்காதீர்கள்" என்று வேதங்கள் கோஷிக்கின்றன. எழுந்திருங்கள், எழுந்திருங்கள், நீண்ட இரவு கழிந்துபோகின்றது, பகல் நெருங்குகின்றது, அலைகிளம்பிவிட்டது. அந்த அலையின் பராக்கிரமத்தை எதிர்க்கும் சாமர்த்தியம் ஒன்றுக்கும் இல்லை. சக்தி, எனது புத்திரர்களே! சக்தி; அன்பு, எனது குழந்தைகளே! அன்பு; விஸ்வாசம், நம்பிக்கை; பயப்படாதீர்கள். பாவங்களிற் பெரியபாவம் பயமேயாகும்.

எல்லாரையும்யான் ஆசிர்வதிக்கின்றேன். நமது முயற்சியில் உதவிசெய்திருக்கிற கம்பீர புருஷர்களிடத்திலெல்லாம் அவர்களுக்கு எனது நித்திய அன்பையும் நன்றியறிதலையும்நான் அனுப்புகிறேன்என்று சொல்லுங்கள். ஆனால்அவர்கள் மெல்ல மெல்ல விட்டுவிடாதபடி நான் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன். எண்ணத்தைப் பரவச் செய்யுங்கள். கர்வமடையாதீர்கள். பிடிவாதமாக எந்தக்கொள்கைகளையும் அநுசரிக்காதீர்கள். எதற்கும் விரோதமாகப் போகாதீர்கள்;-ரசாயனங்களைச் சேர்ப்பதே நமது வேலை; எப்படி எப்பொழுது உருவமாகமாறுமென்று ஈஸ்வரனே அறிவார், எல்லாவற்றிற்கும் மேலாக, எனது ஜயத்தினாலாவது உங்களுடைய ஜயத்தினாலாவது கர்வமடையாதீர்கள். மிகப்பெரிய



காரியங்கள் நடக்கவேண்டியிருக்கின்றன. இனிமேல் அடையப்போகிற ஜயத்திற்கு இப்பொழுது கிடைத்திருக்கிற இந்த ஜயம் எம்மட்டு? நம்புங்கள்,நம்புங்கள், உத்தரவு சென்றுவிட்டது; ஈஸ்வராக்ஞையாய்விட்டது. இந்தியாமுன்னுக்குவரவேண்டும். பொதுஜனங்களும் எளியவர்களும் சுகமடையவேண்டும். ஆநந்தியுங்கள். ... ... ... ... ... ... ... ... ஞானவெள்ளம் பெருகியிருக்கிறது. அது எதிர்ப்பாரின்றி, எல்லையின்றி சர்வவியாபகமாய் பூமியெல்லாம் புரண்டு வருகின்றது. ஒவ்வொருவரும் முன்னுக்கு வரட்டும்; அதன் சக்திக்கு ஒவ்வொரு நன்மையும் சேர்க்கப்படும், ஒவ்வொருவரும் அதன்வழியைச் சீர்படுத்தட்டும்; ஈஸ்வரனுக்கு மகிமை உண்டாவதாக! ... ...

எனக்கு எவ்வித சகாயமும் தேவையில்லை, ஒரு நிதிசேர்க்க முயற்சி செய்யுங்கள். சில மாயாதீபங்கள், தேசபடங்கள், பூகோளம், சில ரசாயனங்கள் முதலியவற்றை விலைக்கு வாங்குங்கள், தினந்தோறும் சாயுங்கால வேளையில் எளியவர்களையும் தாழ்ந்தவர்களையும் பறையர்களையும் கூட ஒரு கூட்டம் சேர்த்து, முதலாவது மதத்தைப்பற்றி அவர்களுக்குப் பிரசங்கம் செய்யுங்கள்; பின்னர் மாயாதீபம் முதலிய வஸ்துக்களினால் வானசாஸ்திரம், பூமி சாஸ்திரம் முதலியவற்றைப் பற்றி ஜனங்களுடைய பாஷையில் போதியுங்கள். உற்சாகம் மிகுந்த சிலவாலிபர்களைப் பழக்குங்கள். அவர்களுக்கு உங்களுடையஉற்சாகத்தையூட்டி, ஒழுங்குபடுத்தப்பட்ட சபையை வரவரப் பெரிதாக்குங்கள். உங்களால் முடிந்த நன்மையெல்லாம் செய்யுங்கள், தண்ணீரெல்லாம் வற்றியபிற்பாடு ஆற்றைக் கடந்து செல்வோமென்று காத்திராதீர்கள். சஞ்சிகைகளையும் பத்திரிகைகளையும் பிரசுரித்தல் சந்தேகமில்லாமல் நன்மையே; ஆனால், எனது புத்திரர்களே! உண்மையான வேலை, அணுவளவாயினும் அது தினந்தோறும் எழுதுதலினும்தினந்தோறும்பேசுதலினும் மிகவும் மேலானதாம். ஒரு சபை கூடுங்கள், நான் இப்பொழுது சொன்ன வஸ்துக்களையெல்லாம் வாங்குங்கள். ஒருகுடிசையை வாடகைக்குவாங்குங்கள். வேலை செய்யப்போங்கள். பத்திரிகைகள் இரண்டாந்தரமே: ஆனால்இதுதான் முதற்தரம். உங்கள்கைக்குள் பொதுஜனங்களைக் கொண்டுவரவேண்டும். ஆரம்பம் சிறிதாயிருப்பதைப் பற்றிப் பயப்படாதீர்கள். பெருங்காரியங்கள் பின்னால் வருகின்றன.

தைரியமாயிருங்கள். நீங்கள் உங்கள் சகோதரர்களிடத்தில் தலைமை வகிக்க முயற்சிக்காதீர்கள். ஆனால் அவர்களுக்கு ஊழியம் செய்யுங்கள். தலைமை வகிக்கவேண்டுமென்ற முட்டாள்த்தனமான பைத்தியம் எத்தனையோ கப்பல்களை ஜீவிதசாகரத்தில் முழுக்கிவிட்டது. முக்கியமாக அதைப்பற்றி ஜாக்கிரதையாயிருங்கள். அதாவது, மரணம் நேரிடினும் ஸ்வயநலமற்று வேலைசெய்யுங்கள். நான் சொல்ல விரும்பியவற்றை யெல்லாம் எழுத முடியவில்லை; ஆனால், எனது தீர புத்திரர்களே! ஈஸ்வரன் உங்களுக்கு எல்லா அறிவையும் கொடுப்பார். எனது புத்திரர்களே! எடுத்திருக்கிற காரியத்தில் சுறுசுறுப்பாயிருங்கள். ஈஸ்வரனுக்கு மகிமை உண்டாவதாக!

உங்கள் அன்புள்ள

விவேகாநந்தர்.

## பகவத் கீதை.

ஸாஸ்வதியென்னும் நமது நேயர் எழுதியது.

### மூன்றாம் அத்தியாயம்.

அர்ஜுனன் சொல்லுகிறான்.

(1) ஜனார்த்தனா, கர்மத்தினும் புத்தியே சிறந்ததென்பது உனது கொள்கையானால், இந்த கோரமான கர்மத்திலே, கேசவா! என்னை யேன் கொண்டு மாட்டுகிறாய்?

(2) கலக்கமான வாக்கியத்தினால் எனது புத்தியை மயங்கும்படி செய்கின்றாய். ஆதலால் எனக்கு நலம் கிடைக்கும் வழி யின்னதுதானென்பதாக ஒன்றை உறுதி செய்து எனக்குச் சொல்ல வேண்டும்.

பகவான் சொல்லுகிறார்.

(3) பாப மற்றவனே! யான் முன் சொல்லியபடி இவ்வுலகத்தில் இரண்டுவித நிஷ்டைகள் உண்டு. ஸாங்கியர்கள் சொல்லும் ஞான யோகமொன்று, யோகிகள்சொல்லும் கர்மயோகமொன்று.

(4) செய்கைகளிலிருந்து விலகி நிற்பதால் மட்டுமே ஒருவன் "தன் செயலின்மை" என்ற நிலையை அடைந்து விடமாட்டான். துறப்பதினால் மாத்திரமே ஒருவன் ஈடேற்றம் (ஸம்ஸித்தி) பெற்றவனாகி விடமாட்டான்.



(5) மேலும், பாவனே யாயினும் ஒரு க்ஷணம் கூடச் செய்கை யில்லாமலிருக்க முடியாது. இயற்கையிலேதோன்றிய குணங்களினால் அவசமாகவே ஒவ்வொருவனும் செய்கையில் தூண்டப்படுகிறான்.

(6) கர்மேந்திரியங்களை மாத்திரம் கட்டுப்படுத்திக் கொண்டு, எந்த மூடன் அவ்விந்திரிய நுகர்ச்சிக்குரிய பொருள்களை மனதினால் ஸ்மரித்துக் கொண்டிருக்கிறானோ, அவனைப் பொய் யொழுக்கமுடையவனென்கிறோம்.

(7) எவன் தனது உட்பொறிகளை மனதினால்கட்டுப்படுத்திக் கொண்டு, பற்றில்லாதவனாகிச் செய்கைப் பொறிகளினால் கர்மயோகம் தொடங்குகிறானோ, அவனே சிறந்தவனாவான்.

(8) நீ, ஒழுங்கான செய்கையை (அவசியம்) செய். ஒன்றும் செய்யாமலிருப்பதினும், செய்கை பெருமையுடையது. ஒன்றும் செய்யாமல் சோம்பியிருப்பாயாயின், உனக்கு உடற்பாதுகாப்புக் கூட ஸாத்திய மில்லாமற்போய் விடும்.

(9) ஆனால் யக்ஞத்தின் பொருட்டாகச் செய்யப்பட்ட செய்கையொழிய, மற்றச் செய்கை யெல்லாம் மனிதனைக் கட்டுக்களுக்குட்படுத்தும். அதன் பொருட்டாக, குந்தியின் புதல்வனே, நீ செய்கையைப் பற்று நீக்கிச்செய்.

(10) படைத்த தலைவன் ஆதியில் மனிதர்களை யக்ஞத்தோடு கூடப் படைத்துவிட்டுப், பின்வருமாறு விதித்தான். இதன் மூலமாகவே நீங்கள் பெருகுதலடைவீர்கள். இதுவே நீங்கள் விரும்பியவற்றை யெல்லாம் தரும் காமதேனுவாகும்.

(11) இதைக்கொண்டு நீங்கள் தெய்வங்களை ஆதரிக்கவேண்டும், அவை உங்களை ஆதரிக்கும். இங்ஙனம் பரஸ்பரம் ஆதரிப்பவர்களாகி, உயர்ந்த நலத்தைப் பெறுவீர்களாக.

(12) "யக்ஞத்தால் ஆதரிக்கப்பெற்றுத் தெய்வங்கள் நீங்கள் விரும்பிய போகங்களைத் தரும். அத்தெய்வங்களால் கொடுக்கப்பட்ட இன்பங்களை அவற்றிற்குக் கைம்மாறு கொடாமல் துய்ப்பவன் திருடனே யாவான்.

(13) யக்ஞத்திலே மீந்ததை யுண்ணும் நல்லோர்கள், எல்லா பாவங்களினின்றும் விடுபட்டு நிற்பர். (அங்ஙனமில்லாது) தமது

பயனைமட்டுமே கருதிச்சமையல் செய்யும் பாவிகள் பாவத்தையே உண்பவராகின்றனர்.

(14) உணவிலிருந்து ஜந்துக்கள் ஆகின்றன; மழையினால் உணவு கிடைக்கிறது. மழை யக்ஞத்தாலாகிறது; இந்த யக்ஞம் செய்கையிலே பிறப்பது.

(15) அந்தச் செய்கை அறிவிலிருந்து பிறக்கிறதென்று தெரிந்துகொள். அறிவு அழிவற்ற பரம்பொருளிடத்திலிருந்து தோன்றுகிறது. ஆதலால், எங்கும் நிறைந்ததாகிய அறிவு யக்ஞத்தினிடம் எப்போதும் நிலைபெற்றதாகும்.

(16) இங்ஙனம் சுற்றும் சக்கரத்தைத் தொடர்ந்து செல்லாமல், பாவவாழ்க்கை யுடையவனாய் இந்திரிய இன்பங்களில் களித்திருப்பவன் உயிருடனிருப்பதே வீண்.

(17) "ஆனால் எந்தமனிதன் ஆத்மாவிலேயே இன்புற்றவனாய், ஆத்மாவிலேயே திருப்தி பெற்றவனாய், ஆத்மாவிலேயே மகிழ்ச்சி பெற்றவனா யிருக்கிறானோ அவனுக்கு ஒன்றும் காரியமில்லை.

(18) இவ்வுலகத்தில் செய்யப்பட்டதொரு காரியத்திலேனும் செய்யப்படாததோர் காரியத்திலேனும் அவனுக்கோர் பயனுமில்லை. அவன் எந்த ஜந்துக்களிடத்தும் பயனொன்றை எதிர்பார்ப்பதில்லை.

(19) ஆதலால், பற்று நீங்கியவனாய், எப்போதும், செய்தற்குரியன செய்க. பற்றில்லாது தொழில் செய்யும் மனிதன் பரநிலையை அடைகின்றான்.

(20) ஜனகன் முதலாயினோர் தொழிலைக் கொண்டே ஈடேற்றம் (ஸம்ஸித்தி) பெற்றார்கள். உலகநன்மையைக் கருதியும் நீ தொழில் செய்தல் அவசிய மாகிறது.

(21) மேலோர் ஏதேது செய்தொழுகுகின்றனரோ அதனையே மற்றவர்களும் செய்து ஒழுகுகிறார்கள். மேலோர் எதைப் பிரமாணமாக்கு கிறார்களோ அதையே உலகத்தார் பின்பற்றுகிறார்கள்.

(22) பார்த்தா! செய்துதான் தீரவேண்டு மென்பதாக எனக்கு மூன்று உலகங்களிலும் எவ்விதகாரியமு மில்லை. அடையவேண்டுவது, ஆனால் இதுவரை நான் அடையவில்லை என்பதாகவும் ஒருபொருளில்லை. அப்படி யிருந்தும்நான் தொழிலிலேஇயங்கிக் கொண்டு தானிருக்கிறேன்.



(23) நான்சோர்வற்றவனாய் எப்போதும் தொழிலிலே இயங்கிக்கொண்டிரா விட்டால், பார்த்தா! எங்கும் மனிதர்கள் எனது மார்க்கத்திலேயே நடக்கத் தொடங்கி விடுவார்கள்.

(24) நான் தொழில் செய்யாதிருப்பேனாயின் இவ்வுலகங்களெல்லாம் நாசமடைந்து போய்விடும். குழப்பத்திற்குக் காரணமாகி, நானே இந்தப் பிரஜைகளெல்லாரையும் அழிப்பவனாவேன்.

(25) அறிவில்லாதவர்கள் செய்கையிலே பற்றுடையவர்களாய் எப்படித்தொழில் செய்கிறார்களோ, அறிந்தவன் அப்படியே பற்றில்லாதவனாய், உலகநன்மையை விரும்பித் தொழில் செய்தல்வேண்டும்.

(26) அறிவுடையவன் செய்கைப் பற்றுடைய அறிவிலிகளுக்கு புத்திபேதம் உண்டாக்கலாகாது. தான் கர்மயோகியாகித் தொழில்களை நன்கு செய்து, அவற்றில் பிறருக்குக் கவர்ச்சியுண்டாகும்படி செய்தல் வேண்டும்.

(27) எல்லாச் செய்கைகளும் இயற்கையின் குணங்களாலே செய்யப்படுகின்றன. அஹங்காரமுடைய மூடன், "நானேசெய்பவன்" என்று நினைக்கிறான்.

(28) பெருந்தோளினையுடையாய்! குணம், செய்கை இவற்றின் வகைகளினது இயல்பை அறிந்தவன் குணங்கள் குணங்களிடையே இயங்குகின்றன என்பதை யறிந்து பற்றின்றிச்செய்வான்.

(29) இயற்கையின் குணங்களிலே மயக்க முற்றவர்கள்குணச் செய்கைகளிலே பற்றுக்கொள்ளுகிறார்கள். முற்றிய அறிவுடையவன் சிற்றறிவுடைய அந்த மந்தர்களைச்சலனமடையும்படி செய்யலாகாது.

(30) என்னிடத்திலே எல்லாச் செய்கைகளையும் துறந்துவிட்டு, ஆத்மாவிலே பொருந்திய சித்தமுடையவனாய் ஆசையும் * மமகாரமும் நீங்கியவனாய் மனஜ்வரமில்லாமல் போர்செய்வாயாக.

*மமகாரம்-எனதெனும்சிந்தை: அஹங்காரம்-நானெனுஞ்சிந்தை.

(31) சிரத்தையுடையவர்களாகவும், அஸூயை தீர்ந்தவர்களாகவும் எந்த மனிதர்கள் எனது கொள்கையைப் பற்றி நடக்கிறார்களோ, அவர்களும் தமது செய்கையிலிருந்துண்டாகும் தளைகளினின்றும் விடுபடுகிறார்கள்.

(32) எவர்கள் அஸூயை கொண்டவர்களாய் எனது கொள்கையின் வழிநிற்காமலிருக்கிறார்களோ, எல்லா அறிவிலும் கலக்கமுற்றவர்களான அந்தச்சேதன மற்றவர்களை நாசமடைந்தவர்களென்பதாக அறிந்துகொள்.

(33) ஒருவன் ஞானவானாயினும் தனது இயற்கையின் படியே இயங்குகின்றான். ஜந்துக்களெல்லாம் இயற்கைவழியே தான் செல்கின்றன. நிக்கிரகம் (செறுத்தல்) என்னபயன்படும்?

(34) இந்திரியப் பொருளினிடத்தே இந்திரியத்துக்கு விருப்பும் வெறுப்பும் ஏற்பட்டிருக்கின்றன. இவ்விரண்டின் வசப்படுதல் வேண்டாம். இவையே வழியை மறைப்பனவாகும்.

(35) நன்கு செலுத்தப்படும் பிறனுடைய கடமையைக் காட்டிலும், ஒருவனுக்கு குணமற்றதேயாயினும் தனது கடமையே சிறப்புடையதாகும். தனது கடமையைச் செலுத்தி வருவதனிடையே இறந்து விடினும் அது நன்று; பரதர்மம் (பிறன் கடமை) அச்சத்திற் கிடமானது.

அர்ஜுனன் சொல்லுகிறான்.

(36) இனி, ஐயனே! ஒரு மனிதன் தனக்கு விருப்பமில்லாவிடினும் பலாத்காரமாகப் பாவஞ் செய்யும்படி அவனைத் தூண்டிவிடுவது யாது?

பகவான் சொல்லுகின்றார்.

(37) அது காமம், அது க்ரோதம்; ரஜோகுணத்தால் உண்டாவது, அனைத்தையும் தின்பது, அனைத்தையும் கெடுப்பது, இவ்வுலகத்தில் இதனையே வைரியென்று தெரிந்து கொள்.

(38) நெருப்பு புகையினால் சூழப்பட்டிருப்பது போலவும், கண்ணாடி மாசினால் மறைக்கப்பட்டிருப்பது போலவும், கர்ப்பம் கருப்பையினால் மறைக்கப்பட் டிருப்பது போலவும், இவ்வுலகம் இவ்வைரியால் மறைக்கப் பட்டிருக்கின்றது.

(39) நெருப்பைப்போல எது போட்டாலும் திருப்தியடையாததாகிய விருப்பம் என்னப்படும், இந்த ஞானிகளது, நித்ய வைரியினால் ஞானம் மறைக்கப்படுகின்றது.



(40) இந்திரியங்கள், மனம், புத்தி இவையே இதற்கிடமாகும். இவற்றினால் இது ஞானத்தைக் கவர்ந்துகொண்டு உணர்வை மயக்குகின்றது.

(41) ஆதலால், பாரதர் காளையே! முதலாவது இந்திரியங்களைக் கட்டுப்படுத்திக்கொண்டு ஞானத்தையும் விஞ்ஞானத்தையும் நாசம் செய்யும் இந்தப் பாப வஸ்துவைக் கொன்று விடுவாயாக.

(42) இந்திரியங்கள் மேலானவையென்பர். அவ்விந்திரியங்களினும் மனம் மேலானது. மனதினும் புத்தி மேலானது. புத்தியினும் அவன் (ஆத்மா) மேலானவன்.

(43) பெருந்தோளுடையாய்! இங்ஙனம் புத்தியினும் மேலான பொருளை அறிந்து கொண்டு தன்னைத் தன்னாலே கட்டுப்படுத்திக் கடப்பதற்கரிய விருப்பமென்னும் இந்தப் பகையை நாசம் செய்து விடுக.

மூன்றாம் அத்தியாயம் முற்றிற்று.

## உலகில் உயர்ந்தவை.

ஸ்ரீ. கே. ரெங்கசாமி அய்யங்கா ரவர்கள் எழுதியது.

1. பரிசுத்தமும் பரோபகாரமும் பொருந்திய ஜீவிதமே உயர்ந்த வேதம்.
2. திருப்தியுற்ற மனமே உயர்ந்தஞானம்.
3. தன்னைப்போலப் பிறரையும் நினைப்பதே உயர்ந்த சட்டம்.
4. ஆத்மஞானமே உயர்ந்தகல்வி.
5. உற்சாகமும் தன்னடக்கமுமே உயர்ந்த ஔஷதம்.
6. பால்யபருவத்தின் நெற்றியில் புன்னகை வரைதலே உயர்ந்த சித்திரம்.
7. மேகமார்க்கத்திலிருந்து சூர்யப் பிரகாசத்தைப் பிரித்து எடுத்தலே உயர்ந்த சாஸ்திரம்.
8. தற்சோர்வுடன் யுத்தம் செய்தலே உயர்ந்தயுத்தம்.
9. கபடற்ற குழந்தையின் நகைப்பே உயர்ந்த சங்கீதம்.
10. கவலைமிகுந்த ஹிருதயத்திற்குள் சூர்யப்பிரகாசத்தின் ஒரு கிரணத்தைப் பளீரென்று பாயச் செய்வதே உயர்ந்த தந்தி,

11. *தர்மசிந்தை தாராளமாய் நிறைந்த ஜீவிதமே உயர்ந்த சரித்திரம்.*

## சாக்கிரடீஸ்.

(முன் தொடர்ச்சி.)

*ஸ்ரீ திரு அ. சுப்பிரமணியபாரதியவர்கள் எழுதியது.*

இப்பொழுது இவர் ஒருபெண்ணைத்தேடி விவாகஞ்செய்து கொண்டார். அவள்பெயர் ஸான்ட்டிபியென்பார்கள். அவள்குணம் இவருடைய குணத்திற்கு முற்றுமாறாகவே யிருந்தது. அவள் சிறிதுங் கல்வியறிவில்லாதவள். இப்படிப்பட்ட சம்பந்தம் உலகத்தில் அநேகருக் கேற்படுவதையும் அவர்களுடைய வாழ்வு சங்கடத்திற் குள்ளாவதையும் நாம்பார்த் திருக்கின்றோம். ஆனால் நமது சாக்ரடீஸ் தமது மனையாள் தமக்கு முற்றும் மாறான குணமுடையவளா யிருக்கின்றாளென்பது கருதி விசனப்பட்டாரில்லை. அவள் தமக்கு விரோதமான காரியத்தைச் செய்யினும் கோபியார். நகைப்பார். அவருக்கெதுவும் விளையாட்டாகவேதோன்றும். அவர் பரம சாந்தகுணமுடையவரானதால் எதையும் பொருட்படுத்தினாரில்லை. இவையெல்லாம் உலகவியற்கை யென்றெண்ணித் தம்மனைவியின் மூடத்தனத்தைக் கண்டுகளிப்பார். ஒரு மனிதன் குதிரையை நடத்தும்வகையைக் கற்றுக்கொள்ள வேண்டுமாயின் என்னசெய்ய வேண்டும்? ஒருகாட்டுக்குதிரையைப் பிடித்துக் கொண்டுவந்து அதையல்லவா நடத்திப் பழகுவான்? பழகின குதிரையைக் கொண்டுவருவானோ? ஒருகாலும் கொண்டுவாரான். அவ்வாறே நான் இப்பெண்ணை மணந்துகொண்டது மமையும், அவளுடைய கேட்டகுணம் ஒரு தத்துவசாஸ்திரி அவனுக்குப்புருஷனாயிருக்கவும்அவள் ஒரு தத்துவசாஸ்திரிக்குமனைவியாயிருக்கவும் ஏற்றதேயாம் என்றுகூறுவர். அவர். ஆனால் இவர்மனைவிஸான்ட்டிபி என்பவள் தன்நாயகன்தன்மீது எப்பொழுதும்கோபியாமலிருந்த போதிலும் தான் முணுமுணுப்பதையும் முகத்தைச் சுளிப்பதையும் கடுகடுத்துப் பேசுவதையும் மறப்பதேயில்லை. ஏனென்றால் அவை அவளுக்கியற்கையாகவே யமைந்த கெட்டகுணங்கள். அவளுக்கு அவையெப்படி மாறும்? நாயைக்



கொணர்ந்து குளிப்பாட்டி நட்டுளைவைத்தால் அதுவாலைக்குழைத்துக் கொண்டு மலந்தின்னப்போகுமல்லது, சும்மாவிருக்குமோ?.

ஆகவே ஸாண்ட்டிபி யென்பவள் தன்நாயகனுடைய கல்வியறிவின் விசேஷத்தையும் பரமசாந்த குணத்தையும் தெரிந்துகொண்டாளில்லை. அவள் மனம்போனவாறிருந்துவந்தாள். நல்லன தீயன அறிந்து நடப்பதே கிடையாது. ஒருநாள் இந்தக்குணவதி சாக்ரடீஸின்மீது கடுங்கோபங்கொண்டு அவரைத்திட்டிஒருசெப்பு அசுத்தநீரை அவர்தலையில் ஊற்றினாள். சாந்தகுண சீலராகிய சாக்கிரடீஸ், உடனேகக்கடவென நகைத்துத் தேகத்தை உதறிக்கொண்டு "இடி இடித்த பிறகு மழைபெய்யாது போகுமா" என்று மெதுவாய்ச் சொல்லிச் சென்றனர். இப்படிப்பட்ட பொறுமைவகித்த புருஷோத்தமனைப் புகழாதாருமிருப்பரோ? எவரும் புகழும்படியான பொறுமை யென்னும் அருமையான குணம் இவரிடம் எவ்வாறு குடிபுகுந்தது? இவர் தாம் கற்ற கல்வியின் விசேஷத்தாலல்லவா? ஒருவன் உலகத்தில் தனவானாயிருப்பதினும் கல்விமானாயிருப்பின் அவனுக்குச்சகல நன்மையுந்தானேவந்தமையும். "மன்னனுக்குத் தன் றேசமல்லாற் சிறப்பில்லை, கற்றோருக்குச் சென்றவிடமெலாஞ்சிறப்பு" என்னும் ஆன்றோர் நீதிவாக்கியப்படி மன்னனில் கற்றோனே சிறப்புடையன்என்பது பெறப்படுகின்றதல்லவா? இதனை 'மன்னனும் மாசறக்கற்றோனும் சீர்தூக்கின்மன்னனிற் கற்றோனே சிறப்புடையன்' என்னும் நீதிவாக்கியமே நமக்கு நன்கு விளக்குகின்றது. ஆகையால் மனிதன் எப்பாடு பட்டாயினும் கல்வியைத் தேடிக் கொள்ள வேண்டும். "கல்வியினூங் கில்லைச் சிற்றுயிர்க் குற்றதுணை" என்றபடி கல்விபோல் மாந்தர்க்குத் துணை புரியக் கூடியது எதுவுமே யில்லை யாதலால் கல்விபயிலப் பின் வாங்கலாகாது. அதனை எப்பாடுபட்டேனும் கற்பதே மாந்தர்க் கழகு. தொடங்குங்கால் துன்பமா யின்பம் பயக்கும், மடங்கொன் றறிவகற்றுங் கல்வி" என்பதற்கிணங்கக்கல்விபயிலத்தொடங்கும்போது துன்பம் பயப்பதாகக் காணப்படினும் பின்னர் நமது மடமை யொழித்து இன்பம் பயக்கும். ஆதலால் கஷ்டங்களைப் பாராட்டாது கல்வியைக் கருத்தோடு பயின்று அதில் தேர்ச்சியடைய முயலவேண்டும். சாக்கிரடீஸ் தமது ஏழைமையையும் அதனால் நேரிட்ட கஷ்டத்தையுங் கவனியாமல் தமது வாத்திமார் கருத்துப்படி நடந்து அவர்

கூறுவதை மறவா துளத்திற் கொண்டு சோம்பலென்பதைத் துறந்து சிரமப்பட்டுப் படித்து வந்தமையாலன்றோ அவர் உலகம் புகழுமாறு விளங்குகின்றனர். நாம் அவரைப் புகழ்வதும் அவர் சரித்திரம் படிப்பதும் அதனாலேயே யன்றோ?

சாக்ரடீஸ், ஒரு ஏழையைப்போலிருப்பார். எப்போதும் அழுக்கடைந்த வஸ்திரமுடுத்துக்கொண்டிருப்பார். டம்பமென்பது அவருக்குத் தெரியவே தெரியாது. காலுக்குப்பாதரக்ஷை கூடப் போட்டுக்கொள்ள மாட்டார். எவருடனும் அன்பாய்ப் பேசுவார். முகத்தில் கோபமென்பது காணமுடியாது. எப்போதும் சிரித்தமுகத்துடன் வார்த்தையாடுவார். இவருடைய நெற்றி விசாலமாயிருக்கும். கண்களிரண்டும் முன்னே பிதுங்கிக் கொண்டிருக்கும். மூக்குத்தட்டையாயிருக்கும். அதன் மேற்பககம் குழிவிழுந்திருக்கும். மூக்குத்துவாரங்களிரண்டும் விரிந்திருக்கும். உதடுதடித்து அதற்குத் தக்கபடி அகன்று திரண்டிருக்கும். தோட்களிரண்டும் உயர்ந்து திரண்டு விசாலமாயிருக்கும். அவருடைய சரீரம் கட்டாயிருக்கும்.

இவ்வாறான சொரூபமுடைய அவர், தமது சரீரத்தைப் பற்றி "நான் ஒருநேர்த்தியான சரீரத்தையுடையவன்" என்று சொல்லிக் கொள்வாரே தவிர தாம் அழகுடையவரல்ல வென்பதை நினைத்து வருத்தப்படமாட்டார். எப்போதும் சந்தோஷசித்தராகவேயிருப்பார். அவர் தமது சந்தோஷசித்தமே தமக்கு எல்லா நன்மையையுந் தருவதற்குப் பெரிய துணையாகும் என்று கூறிக்கொள்வார். அவர் எப்போதும் செட்டாகச் செலவிடுவர். எந்தக்காரியத்தையும் முடிக்கவல்ல சமர்த்தர் அவர். ரொட்டியும் சிறிது ஒலிவ இலையுமே அவர் தினப்படி கொள்ளும் உணவு. (வரும்)

## கருணாங்கனை.

ஸ்ரீ ம. இராஜகோபால பிள்ளையவர்கள் எழுதியது.

காப்பு. கலிவிருத்தம்.

தருணா தரவாய்த் தனிமைத் திருவி
டருணா ரணனா ரடிவாழ்த் திடுவாங்
கருணாங் கனையின் களிகூர் சரிதத்
தெருணா [illegible]ருநூல் செகமீ துறவே.



## நூல்.

## முதலத்தியாயம்.

### அவதாரிகை.

நேரிசை வெண்பா.

பொற்புற்க லாபுரத்திற் போந்த சிதாகரற்கே
அற்பினுணர் வாரந்த அண்ணலார்—வற்புறுத்தி
ஏற்றவா றேதும் இனியகரு ணாங்கனையின்
தோற்றுவா யீதெனவே சொல்.

மேன்மை பொருந்திய இப்பாதகண்டத்தில் புற்கலாபுரம் என்னும் பெயர்கொண்ட துறைமுகப் பட்டினம் ஒன்றிருந்தது. அது தனக்கு அலங்காரமாக ஒன்பது வாயில்களையும் மூன்றுகொடிகளையும் கொண்டிருந்தது. அந்த ஒன்பதுவாயில்களும்ஒருநாளும் மூடப்படுவதே யில்லை. அதனால், அப்பட்டினம் "அடையா நெடுங்கதவும் அஞ்சலென்ற சொல்லும் உடைய" சடையப்ப முதலியாரின் வெண்ணெய் நல்லூர்போல, விளங்காநின்றது. அதன் கொடிகள் மூன்றும், மூன்று மூர்த்திகளைப் போன்று தந் தமக்குத் தாமே சரியெனத் தலையசைத்துக்கொண்டு, தமது இயற்கைக் குணங்களை யாவர்க்கும் காட்டும் அறிகுறியாக, மூன்று விதமான ஆடைகளை யுடுத்திக்கொண் டிருந்தன. அவற்றுள் ஒரு கொடிக் குரியது காவியாடை; மற்றொன்றுக்கு வெளுத்துச் சுத்தஞ்செய்த ஆடை; மூன்றாவதற்கோ அசுத்த ஆடையாம். இப்படி அமைந்த அப்பட்டினத்தைக் கெட்டிப்படுத்தும் ஆறு ஒன்றுண்டு. அந்த ஆற்றுக்கு நெய்யாறு என்று பெயர். அந்நெய்யாறு, எப்படிநமது சரீரங்களில் உயிரானது பொருந்தியிருந்து அவற்றைவாழ்விக்கின்றதோ அப்படி புற்கலாபுரத்திலுள்ள சராசரப் பொருள்களனைத்தையும் பற்றி நின்று, அவற்றைப் பச்சைப் பசேலென்று தோன்றும்படி பாதுகாத்து வந்தது. இத்தோற்றம், பிரம்மதேவனால் சிருஷ்டிக்கப் பட்ட பொருள்கள் முழுவதும், எந்தத்தருமத்தால் தந்தம் நிலையில்தழைத்தோங்கிவருகின்றனவோ, அந்தத் தரும சொரூபியான பெரிய பிராட்டியார் சிறந்து வாழும் பரந்த மார்பை யுடைய பரஞ்சுடர்ச் சோதியான ஆதிபகவனது, பார்த்தமாத்திரத்தில் பார்ப்பவர் தம் பழைய தாபங்கள் மூன்றும் பறந்தோடும்படி விளங்கும் பூந்துளவத்தின் காந்தியை ஒத்திருந்தது. அப்புற்கலாபுரியில்குடியேறப்பெற்றபிரஜைகள், கல்வியிலும் செல்வத்திலுங் கைவந்தவர்கள். ஆகையால், அவர்கள், பாதுகாத்தற்குரிய எல்லாவற்றையும் பாதுகாக்க முடியாமல் கைசோர விட்டாலும், நாக்கு ஒன்றை மட்டும் பாதுகாப்பதில் ஆதிபத்தியம் பெற்றவர்கள். ஏனெனில், எவன் அவ்வாறு தன் நாக்கின் காணயத்தைக் காப்பாற்றத் தவறுகிறானோ அவன் சொல்லால் வரும்

குற்றத்திற்காளாய்த் தானே துன்பமடைவன் என்னும் கட்டளைக்கு அவர்கள் பயந்தவர்கள்; ஆதலால் "நா அநாரியஞ்செய்கிலாது நாள்தொறும் விருந்தோம்பி, தேவகாரியமே செய்து, வேதம் பயின்று" வாழும் அந்தணர் முதலிய நான்கு வருணத்தார்களின் திருவீதிச் சாலையென்ன, கலாசாலையென்ன, உத்தியோகசாலையென்ன, கைத்தொழிற்சாலையென்ன, வியாபாரச்சாலையென்ன, இத்தொடக்கத்தனவாகிய சாலைகள் பலவற்றையும், பற்பல தேவாலயங்களையும் பெருமிதமாகக் கொண்டு, அவற்றால் அப்பட்டினம், துறவறத்தார்க்கும் இல்லறத்தார்க்கும், பண்டிதர்கட்கும் வர்த்தகர் கட்கும் ஏற்ற இடமாய்ப் போகலோகத்தையும் புறக்கணித்திருந்தது. அதன் அருமையும் பெருமையும் எடுத்துரைக்க அரவரசப் பெருஞ்சோதியான அநந்தனும் பாத்திரன் ஆகானெனில், நாம் எம்மாத்திரம். (வரும்)

## சமாச்சாரக் குறிப்புகள்.

இன்னும்சில தினங்களில் ராஜப்பிரதிநிதியவர்கள் சென்னைமாநகரத்தில் இருப்பார். இவர் இராஜரீகதந்திர நிபுணர் என்பதில் சந்தேகமேயில்லை எப்படியாவது தேசத்தைச் சமாதானமாய் ஆளவேண்டுமென்பதே இவருடைய நோக்கம் சமீபத்தில் கான்பூரில் நடந்த கலக சம்பந்தமாய் இவர் காண்பித்த ராஜதந்திரமானது அறிவிற்சிறந்த அரசர்களாலும் மெச்சத்தக்கது. பள்ளிவாசலில் இடிந்துபோன பாகத்தைத் திரும்பக்கட்டிக்கொள்ளும்படிக்கும் அந்தக் கலக சம்பந்தமாய்க் கைதுசெய்யப்பட்டவர்களை விடுதலை செய்யும்படிக்கும் ராஜப்பிரதிநிதியவர்கள் செய்த உத்தரவானது மகம்மதிய ஜனசமூகத்தை மட்டற்ற மகிழ்ச்சிக்குட்படுத்திவிட்டது. ஹிந்துக்கள் அரசாங்கத்தாருடைய அதிருப்திக்குட்பட்டுப் பற்பல கஷ்டங்களை அநுபவிக்க நேர்ந்த காலத்தில், மகம்மதியர் சிறிதேனும் கவனியாது பராமுகமாயிருந்தனர். சமீபத்தில் மகம்மதியர்கட்கு ஏற்பட்ட ஆபத்துக்களிலெல்லாம் ஹிந்துக்கள் அநுதாபங்காட்டி, மகம்மதியர்களை ஆதரவு செய்ததுமன்றி, இப்பொழுது கான்பூர் விஷயமாய் ராஜப்பிரதிநிதியவர்களின் உத்தரவைக் குறித்து சந்தோஷிக்கின்றனர்.



அன்னிபெஸண்டு செய்திருந்த அப்பீல் முடிவு பெற்று, ஹைக்கோர்ட்டில் தீர்மானமும் சொல்லப்பட்டு விட்டது. பெற்ற தகப்பனுக்கே பிள்ளைகள் உரியன என்ற சாதாரணமானசிருஷ்டி நீதியை ஹைக்கோர்ட்டார் ஸ்தாபித்து விட்டனர். கீழ்க்கோர்ட்டுக்களிலெல்லாம் நியாயம் தவறிவிட்டபோதிலும் ஹைக்கோர்ட்டில் நியாயமே நிலைபெறும் என்ற நம்பிக்கை ஜனங்களுக்கு நிரம்பவும் உண்டு. அங்ஙனமே அநேகமாய் ஹைக்கோர்ட்டுக்களில் நியாயந்தவறுவதில்லை. இப்பொழுது அப்பீலில் ஜட்ஜி பேக்வெல் துரையவர்களுடைய, பையன்களைப் பிதாவிடம் தான் ஒப்புவிக்க வேண்டும் என்ற தீர்மானம் உறுதிசெய்யப்பட்டதுமன்றிப் பிரதிவாதியாகிய பெஸண்டுக்கு வாதியாகிய நாராயணய்யா செலவு தொகையைக் கொடுக்க வேண்டுமென்று மேற்படிபேக்வெல் துரையவர்கள் செய்த தீர்மானமானது மாற்றப்பட்டு விட்டது. அப்பீலில் ஹைக்கோட்டாரது தீர்மானமாது இந்திய ஜனசமூக நன்மையையே எப்பொழுதும் நாடிக்கொண்டிருக்கிற எல்லோருக்கும் பொதுஜனங்களுக்கும் அடக்கவொண்ணாத மகிழ்ச்சியை அளித்துவிட்டது. ஆயினும், அன்னிபெஸண்டு இருக்கிறமாதிரியைப்பார்த்தால் பையன்களை அவர் கொண்டு வந்து பிதாவிடம் ஒப்புவித்து விடுவாரென்று நம்ப இடம் இல்லை. "சாதாரணமாக நிர்ணயித்தால், அவள் பொது நீதியினின்றும் தவறினாள்" என்று ஹைக்கோர்ட்டு அப்பீல் தீர்மானத்தில் ஒரு இடத்தில் ஜட்ஜி ஓல்ட்பீல்ட் துரையவர்கள் கூறியுள்ளார். இவர் பையன்களைக்கொண்டு வந்து பிதாவிடம் ஒப்புவிக்காத விஷயத்தில் நமது கவர்ன்மெண்டார் பையன்களை எப்படியாவது வரவழைத்துப் பிதாவிடம் ஒப்புவித்துப் பிதாவுக்குத் துக்க நிவிர்த்தி செய்வார்களென்று பரிபூர்ணமாய் நம்புகிறோம்.

தென்னாப்பிரிக்காவில் நமது சகோதரர்கள் படும்பாட்டைக் குறித்து ஸ்ரீமான் கோகலே அவர்கள் எத்தகைய கன்னெஞ்சையும் கரையக்கக்கூடிய மாதிரி எழுதித்தமது அபிப்பிராயத்தை வெளியிட்டிருக்கிறார். தினந்தோறும் அங்கிருந்து வருகிற தந்திகளால் நமது மனம்கலங்குகின்றது. வேறொருவிதத்திலும் உதவி செய்யவழியற்று வகையற்று, கடைசியில் அங்கு சிறைவாசம் செய்யும்படி நேரிடுகிற ஜனங்களுடைய பெண்டு பிள்ளைக

ளுடைய கஷ்ட நிவிர்த்தியின் நிமித்தம் பணம் சேகரித்து அனுப்பவேண்டும் என்று மிக்கோரும் கூறுகின்றனர். இதுவே நாம் தற்காலத்தில் செய்யக்கூடியது என்பது வாஸ்தவமே. நாம் எவ்வளவு தான் பணம் அனுப்பியபோதிலும், நம் சகோதரர்கள் மீது மிகக்கொடுமையாக, மிக இழிவாக ஏற்படுத்தப்பட்டிருக்கும் சட்ட நிபந்தனைகள் அழிக்கப்பெற்று அவர்களுக்குத்தக்க நிவர்த்தி உண்டாகுமா? கொடுங்கோலரசு புரிந்துவரும் தென்னாப்பிரிக்காக் கவர்ன்மெண்டார் நமக்கு இணங்கிவர வேண்டுமானால், நமது இந்தியாக் கவர்ன்மெண்டாருடைய இடைவிடாப் பிரேரபணைகளின் பேரில் பிரிட்டிஷ் கவர்ன்மெண்டார் சாம தான பேததண்டமென்கிற சதுர்விதோ பாயங்களில் ஏதேனும் ஒன்றினால் எத்தகைய முயற்சி செய்தாயினும்—தென்னாப்பிரிக்காக் கவர்ன்மெண்டாரைக் கட்டாயப்படுத்தினாலொழிய, நம் சகோதரர்களுடைய கஷ்டங்கள் நிவர்த்தியாகுமென்று நினைக்கமுடியாது. ஆகலால் நாம் முக்கியமாகச் செய்ய வேண்டியது யாதெனில், ஆங்காங்கு ஊர்கள்தோறும், கிராமங்கள்தோறும் சபைகள் கூட்டி இவ்விஷயத்தைக் குறித்து ஜனசமூகத்தில் கொதித்துக்கொண்டிருக்கின்ற அபிப்பிராயத்தைநமது கவர்ன்மெண்டாருக்கு வெளியிட்டு அவர்கள் நமது அபிப்பிராயத்தை ஆதரித்து நமக்கு அநுகூலமான மார்க்கங்களைச்செப்பனிடும் வரையில், நாம் சும்மாவிருத்தல்தகாது. இச்சமயத்தில் இவ்விஷயத்தில் நாம் ஜயம் பெறுதற்கு நமது கவர்ன்மெண்டாருடைய செல்வாக்கையும் பராக்கிரமத்தையும் தவிர, நமக்கு வேறு உதவியில்லை; வேறு வழியுமில்லை. பிரிட்டிஷார் இப்பொழுது இவ்விஷயத்தில் என் செய்யப்போகிறார்கள் என்று இந்திய ஜனசமூகமானது வெகு ஆவலுடன் அவர்களுடைய மனப்போக்கைக் கவனித்த வண்ணமாயிருக்கின்றது.

## புத்தக வரவு.

பாஞ்சாலி சபதம்:—இது மிக அழகியவர்ணனைகள் நிறைந்த ஒருகாவியம். பிரஹ்ம ஸ்ரீ ஸி. சுப்பிரமணியபாரதியவர்களால் இயற்றப்பெற்றது. ஆரியதர்மங்கள் நிறைந்த, ஐந்தாம் வேதமாகிய மகாபாரதத்தில் பொருளமைப்ப உருவாகவந்த து



யோதனன் தனது தாய்மாமனாகிய குடிகேடன் சகுனியைக் கொண்டு பஞ்சபாண்டவர்களில் மூத்தோனாகிய தர்மபுத்திரருடன், அவருடைய ராஜ்யத்தை யெல்லாம் பிடுங்கிக்கொண்டு அவரையும் அவரது சகோதரர்களையும் அவர்களது தர்மபத்தினியாகிய திரௌபதியையும் ஓட்டாண்டிகளாக்கிக் காட்டுக்குத் துரத்த வேண்டும் என்ற எண்ணத்துடன், சூதாடும்படி செய்விக்கின்ற பாகத்தை பிரஹ்ம ஸ்ரீ பாரதியவர்கள் செய்யுள் நடையில் எழுதியுள்ளார். பாரதியவர்களுடைய தமிழ் நடையைப்பற்றியும் செய்யுள் விசேஷத்தைப் பற்றியும் தமிழ்நாட்டினரில் பெரும்பான்மையோரும் அறிவர் என நம்புகிறோம்; ஆசிரியர் இப்புஸ்தகத்தில் ஒரு பிரதியைச் சென்னைகவர்னரவர்களுக்கு அனுப்பியிருந்ததாகவும் அவர்தாம் அதை வந்தனத்துடன் ஏற்றுக்கொண்டதாக ஆசிரியர்க்குக் கடிதம் எழுதியதாகவும கேள்விப்படுகிறோம். பாஷாபிமானிகளும் தேசபிமானிகளும் அவசியம்படிக்கவேண்டிய புஸ்தகம் இது. இதன்விலை அணா எட்டு. தபாற்செலவு வேறு. வேண்டியவர்கள் நமது ஆபீசுக்கேனும் அல்லது பிரஹ்மஸ்ரீஸி சுப்ரமணிய பாரதியவர்கள், புதுச்சேரியென்ற விலாசத்திற்கேனும் எழுதிப் பெற்றுக்கொள்ளலாம்.

இது ஒரு புதிய நாடகம். இது
கீசகன் அல்லது கற்பின்வெற்றி,—இது ஒரு புதிய நாடகம். இது மகாபாரதத்திலுள்ள ஒரு சரிதையே. பஞ்சபாண்டவர்களும் மகாபாரதத்திலுள்ள ஒரு சரிதையே. பஞ்சபாண்டவர்கள் விராடதேசத்தை யடைந்து அவ்வரசனிடத்தில் பற்பலதொழில்களில் அமர்ந்து அடங்கி ஒடுங்கி அடிமைகளாகவிருக்கும் நாட்களில் அவ்வரசனது மைத்துனனாகிய கீசகனென்னும் பெயரான, தரணியில் எவரும் தனக்கு நிகரில்லையென்ற மதம் மிகுந்தோனொருவன், ஐவர்களது பத்தினியாகிய திரௌபதி அரசபத்தினியிடத்தில் சைரந்திரி யென்னும் பெயருடன் பணிப்பெண்ணாயமர்ந்திருக்க, அவளது மையலில் சொக்கி அவளைத் தனக்கு இணங்கும்படிக்கு பற்பல விதமாகப் படாத பாடெல்லாம் படுத்துவதும் கடைசியில் பீமசேனனது யோசனையின் பேரில் சைரந்திரி தான் கீசகனுக்கு இணங்குவதுபோல் நடித்து நகருக்குப் புறம்பேயுள்ள வசந்த மண்டபத்திற்கு அவனை அன்றிரவு வரும்படி செய்வதும் பீமன் பெண்வேஷம் தரித்து அம்மண்டபத்திற்குச் சென்று கீசகனைக் கொல்வதும்இவைமுதலாய விஷயங்களெல்லாமமைத்து ஆங்காங்கு அவசியமாயுள்ள ரஸபாவனைகளுடன் இந்நாடகம் எழுதப்

பட்டிருக்கிறது. இடைஇடையே சந்தர்ப்பங் கட்கேற்ற பாடல்களும் புகுத்தி யிருக்கின்றனர் ஆசிரியர். பண்டையக் காலத்துப் புராணங்களையும் இதிகாசங்களையும் இலட்சியஞ் செய்யாது, மேல்நாட்டினரது ஒழுக்கங்களைப் பின் பற்றுகின்ற இக்காலத்தில், நமது முன்னோர்களுடைய ஆசார அனுஷ்டானங்களும் நீதி நியாயங்களும் நம்மைவிட்டு நீங்காதிருக்கும் படியாக நமது புராணங்களும் இதிகாசங்களும் இக்காலத்தில் —நவீனகம்மிகுந்த நாகரீக காலமானையால்—நவீனங்களின் நடையை அநுசரித்தாவது அல்லது நாடகப்போக்கிலாவது எழுதப்படவேண்டியிருக்கின்றன. ஷேக்ஸ்பியர் ரேனல்ட்ஸ் முதலியவர்களுடைய நூல்களை மொழிபெயர்த்தும் அநுசரித்தும் நாடகங்கள் எழுதும் நவீன பண்டிதர்களே மிகுந்துள்ள இக்காலத்தில் பிரஹ்மஸ்ரீ வரகவி- திரு-அ- சுப்பிரமணிய பாரதியவர்கள் இக்கதையை நாடகரூபமாக எழுதியதைப்பற்றி மிகவும் சந்தோஷிக்கிறோம். கீசகனென்னும் பாவி அடைந்த கதியை நன்றாய் அறிந்து நல்வழிகளில் ஒழுகுமாறு ஆண்பாலாரும், திரௌபதியின் பதிவிரதா தர்மஜபத்தை நன்றாய் அறிந்து திரௌபதியைப் போலவே ஜீவிதகாலத்தை அமைத்து ஒழுகுமாறு பெண்பாலாரும், ஆகவே ஸ்திரீகள், புருஷர்கள் ஆகிய இருதிறத்தவரும் அவசியம் வாங்கி வாசிக்கவேண்டியபுஸ்தகம் இது. இதன் விலை அணா எட்டு. வேண்டுவோர் நமக்கேனும் ஸ்ரீ பாலசுப்பிரமணியன் கம்பெனி, 2/30, ஹைரோட்டு, திருவல்லிக்கேணி என்ற விலாசத்திற்கேனும் எழுதிப் பெற்றுக் கொள்ளலாம்.

பரிணய மீமாம்சம்:—இஃது திருநெல்வேலி ஜில்லா கடயம் பிரஹ்மஸ்ரீ குருசாமி சாஸ்திரியவர்களுடைய புத்திரன் பிரஹ்மஸ்ரீ கே. ஜி நடேசசாஸ்திரிகள் எழுதிய ஒரு ஸம்ஸ்கிருத கிரந்தம். ருதுவான பின்னரே பெண்களுக்கு விவாகம் செய்விக்க வேண்டுமென்று நவீனநாகரிகர்கள் தோன்றியிருக்கும் இக்காலத்தில், ருதுவாவதற்கு முன்னரே விவாகம் செய்விக்கவேண்டுமென்று சாஸ்திரீக ஆதாரங்களுடனும் நியாயங்களுடனும் பிரஹ்மஸ்ரீ நடேசசாஸ்திரிகள் மிகப்பலமாகவாதிக்கிறார். பெண்கள் ருதுவான பின்னர் மேல் நாட்டினரைப் போலக்கண்டகண்ட புருஷர்களுடன் கைகோர்த்து அலைந்து திரிந்து பின்பு தங்கள் மனதுக்கேற்றநாயகர்களைத் தாங்களேபொறுக்கிக்கொள்ளலாமென்றுபுதிதாகக் கிளம்பியிருக்கும்கட்சியை இப்புஸ்தகம் சிறிதுகலக்கிவிடும் என்று நினைக்கிறோம். விலை அணா பன்னிரண்டு. வேண்டியவர்கள் மைலாப்பூர், சித்திரக்குளம் கீழவீதி 14 நெ. வீடு. சஞ்சீவிராவ் என்ற விலாசத்திற்கு எழுதிப்பெற்றுக்கொள்க.

OFFICE OF THE REGIST... FEB 1914 MADRAS.

# ஞானபாநு.

VOL-I. தொகுதி-க. | DECEMBER 1913. பிரமாதீச௵ மார்கழி௴ | No-9. பகுதி-௯.

## பார்த்தசாரதியே பாரதசாரதி.

(முன் தொடர்ச்சி.)

"ஆத்மா அழிவற்றது; ஆரம்ப மற்றது, என்றும் உள்ளது, ஆயுதங்களினால் வெட்டப் படாதது, நெருப்பினால் எரிக்கப்படாதது; நீரினால் நனைக்கப்படாதது, காற்றினால் உலர்த்தப் படாதது, கட்டுகட்கு உட்படாதது. சரீரமே அழிவுள்ளது, ஜடமாயுள்ளது, பஞ்ச பூதங்களினால் ஆக்கப் பெற்றது. பஞ்ச பூதங்களின் ஆரம்பத்தை யாரும் அறியார், அழிவையும் அறியார், மத்தியமே நமக்குத் தோற்றமா யுள்ளது. உண்மை, இன்மை:—அதாவது ஒன்று, பல; ஒன்று உண்மை; பல இன்மை. பலவாகத் தோற்றப்படுகிற இவ்வெல்லாம் மித்தையே, பொய்யே, இல்லாதனவே. ஒன்றே உள்ளது, சத்தியம், நித்தியம்.

"ஆத்ம வஸ்துவைக் கொல்கிறவனாகவோ, கொல்லப்படுகிறவனாகவோ கருதினால், நீ அறிவீனன்; ஏனென்றால் ஆத்மவஸ்து ஆதியும் அந்தமுமற்ற அகண்ட வஸ்து. நீ சரீரத்தைப் பற்றிக் கவலைப்பட்டால், சரீரமோ உற்பத்தி நாசவிதி கட்குட்பட்டது; எப்படியாவது,எக்காலத்திலாவது அழிவதே. ஆதலால் நீ விசனப்படுவது தகாது. அழிவற்ற வஸ்துவை அழிக்க உன்னால் ஆகாது; அழிவுள்ள வஸ்துவை அழிவில்லாமற் செய்யவும் உன்னால்ஆகாது.

"இவ்விடத்தில் யோகியாய் நின்றுகொண்டு யுத்தம் செய். சமபாவனையே யோகமாம். லாபத்திலும் நஷ்டத்திலும், வெற்றியிலும் தோல்வியிலும் சுகத்திலும் துக்கத்திலும் சம சித்தத்துடன் இருத்தலே யோகமாம். யுத்தத்தின் பலனைப் பற்றி உனக்கு எவ்வித எண்ணமும் வேண்டாம். பலனை நினைக்கவே நினைக்காதே. எக்காலத்தும் எவ்விடத்தும் எத்தகைய சந்தர்ப்பங்களினிடையிலும் நீ செய்யும் கர்மங்களினிடத்தில் உன்னை ஐக்கியம் செய்துகொள். சாமர்த்தியமாகக் கர்மங்களைச் செய்தலே யோகம் எனப்படும்; சாமர்த்தியமாகக் கர்மங்களைச் செய்தலென்றால் சமபாவ

னை யுடன் செய்தலே யாம். இதுவே யோகம். உனக்கு எப்பொழுது சமபாவனையில் சித்தமானது ஸ்திரப்பட்டு விட்டதோ. அப்பொழுது நீ அஞ்ஞானத்தைக் கடந்தவனாகிறாய்.

“பாவங்களிற் சிறந்தது பயமே யாகும். உன்னிலும் பெரிய வஸ்து ஒன்று இருந்தாலன்றோ, உனக்கு பயம் ஏற்படும். நீயோ அகண்ட சச்சிதானந்த சொரூபி. யானும் அங்ஙனமே. இங்கு இருபுறத்திலும் கூடி நிற்கும் அரசர்களும் அடிமைகளும்அங்ஙனமே. அகண்டமாய் அநேக வஸ்துக்கள் இருக்க முடியாதாகையால், யானும் நீயும் இவ்வெல்லோரும் ஒன்றே. பலவாய்த் தோற்றப்படுகிற இத்தோற்றம் உண்மை யன்று; மித்தையே. இந் நாநா விதக் காட்சியானது உண்மையாகிய ஒரு பொருளினிடத்தில் ஒன்று போல் பொருந்தப் பெற்று உண்மையை மறைத்துத் தனது லட்சணமாகிய இன்மையைக் காரண காரிய விஷயங்களில் விளக்கிக் காட்டிய போதிலும், உண்மை யுடன் ஒன்று சேரப் பெற்றிருக்கிறதினால் உண்மையாகவே தோற்றுகின்றது. உள்ளது எப்பொழுதும் இல்லாத தாகாது. இல்லாதது எப்பொழுதும் உள்ளதாகாது. உண்மையாகிய வஸ்து ஒன்றே யாகையால், அவ்வஸ்து இவ்வெல்லாமாய்த் தோற்றுகின்ற நீயே. ஆதலால் பயத்திற்குக் காரணமே யில்லை.

“சமுத்திரமானது நதிகளைத் தன்னிடத்தில் வந்து விழும்படி இழுக்கிற தில்லை. நதிகள் தாமே போய் வீழ்கின்றன. ஆதலாற்றான் சமுத்திரமானது கரைகடக்காது கட்டுக் கடங்கி யிருக்கின்றது. அது போலவே நீயும் விஷயங்களை உன்னிடத்தில் நீயாக இழுத்துக் கொள்ளாதே. அவை தாமே வந்து உனது கர்மேந்திரிய ஞானேந்திரியங்களின் மூலமாய் உனக்குள் நுழைந்து கொள்ளுமாயின், அவற்றை வேண்டா மென்று வெறுக்காதே. தாமே வந்தவற்றைத் தயாராக அநுபவி. இங்ஙனம் நீ செய்வாயாகில் நீயே யோகி.

“உலகினால் பெரியோர் எனக் கருதப்படுவார்கள் எதைச் செய்கின்றார்களோ, அதை உலகினரும் செய்வர் பெரியோரால் கொள்ளப்படுகின்ற பிரமாணமே பிரபஞ்சத்தவராலும் அநுசரிக்கப் படுகின்றது. எனக்குச் செய்ய வேண்டிய கர்மங்கள் ஒன்றுமில்லையாயினும், யான் எப்பொழுதும் கர்மம் செய்து கொண்டிருக்கிறே னன்றோ? பிரபஞ்சமே கர்ம சக்தியின் காட்சிப் பிரமா



ணம். ஆதலால் பிரபஞ்சத்தினர்க்காகவாவது நாம் கர்மம் செய்ய வேண்டும். அறிவினர்கள் பற்றுதல் மிகுந்து எவ்வளவு ஆத்திரத்துடன் கர்மங்கள் செய்கிறார்களோ, அப்படியே அறிவுள்ளோர் பற்றுதல் நீக்கி அவ்வளவு ஆத்திரத்துடன் கர்மங்கள் செய்தல் வேண்டும்.

“காமமே கட்டுகட் கெல்லாம் காரணம்.காமமே கோபமாம். காமமாயும் கோபமாயும் வெளிப்படுகின்ற இந்த ரஜோகுண உற்பவ லட்சணமானது நிஷ்காம கர்மயோகத்திற்குச் சத்துருவாகும். அந்நிய தர்மம் ஆபத்தை விளைவிக்கக் கூடியது. ஸ்வதர்மம் மேன்மையை அளிக்க வல்லது. அந்நியதர்மாநுஷ்டானத்தை அகலவிட்டு ஸ்வதர்மத்தை அநுஷ்டித்து மேன்மை யடைவாயாக”.

இவ்விதம் ஸ்ரீகிருஷ்ண பகவான் அர்ச்சுனனுக்கு ஞானோபதேசம் செய்ய ஆரம்பித்து விட்டார். யுத்தத்திற்குப் புறப்படும்பொழுது அர்ச்சுனன் தனக்கு ஸ்ரீகிருஷ்ணனது உண்மையான திருவருள் அன்று கிடைத்து லோகோத்தாரணத்தின் பொருட்டு கீதோபதேசம் செய்யப் பெறுவான் என்று ஸ்வப்பனத்திலாகிலும் நினைத்திருப்பானா? ஈஸ்வரன் பிரபஞ்சத்தில் அவதரிப்பது துஷ்ட நிக்கிரக சிஷ்டபரிபாலனார்த்தம் என்று நமது ஸ்ருதிஸ்மிருதிகளெல்லாம் கோஷிக்கின்றனவன்றோ? மகா விஷ்ணு எடுத்த மற்றெல்லா அவதாரங்களும் அநேகமாக துஷ்டர்களுடைய ஸ்தூல சரீர நாசத்தின் பொருட்டு என்று புராணங்களெல்லாம் பிரபலமாக விளக்குகின்றன. ஆனால் ஸ்ரீகிருஷ்ணாவதாரமோ, துஷ்டர்களுடைய ஸ்தூல சரீர நாசமும் உண்டாயிருந்த போதிலும் துஷ்டர்களுடைய துஷ்டஸ்வபாவங்களாகிய தாமஸ குணமும் ராஜஸகுணமும் நசித்து சாந்தகுண தீரத்துவம் என்றென்றும் ஜ்வலிக்கும்படி யாகவும், பாமரர்களும் பயன் கருதாது தொழில் செய்து முக்தி யடையும்படியாகவும் பகவத் கீதை வெளியிட்டபடியால், பூரணாவதாரம் எனப் பிரக்கியாதி யுடன்பிரகாசிக்கின்றது. இந்தப் பகவத் கீதா சாஸ்திரம் உலகினராகிய நமக்குக் கிடைத்திருப்பதற்கு, ஸ்ரீ கிருஷ்ண பகவானுக்கும் அர்ச்சுனனுக்கும் கடமைப்பட் டிருப்பதைப் பார்க்கிலும் இந்தச் சம்பாஷணையை அன்புடனும் ஆனந்தத்துடனும் கேட்டுக்கொண் டிருந்த, வேதவியாசருடைய பரம சிஷ்யனாகிய ஸஞ்ஜயனுக்கு அதிகமாகக்

கடமைப்பட்டிருக்கிறோம். ஸகல விஷயப்பற்றுக்களையும் ஜயித்துள்ள ஸஞ்ஜயனே யன்றி வேறு எவர் கேட்டிருப்பினும், பகவத்கீதை பிரபஞ்சோபகாரமாய் வந்திராது.

(தொடரும்)

சிவம்:

# செய்தலும் அறிதலும்!

ஸ்ரீ. வ. உ. சிதம்பரம் பிள்ளையவர்கள் எழுதியது.

ஒருமனிதன் தனது வாழ்வு முழுமையும் தனது மனத்திலிருந்து வருகிறதென்றும், அம்மனம்தனது பொறுமையானமுயற்சியால் வேண்டுமளவு திருத்தப்படக் கூடிய சுபாவங்களின் சேர்க்கையென்றும், தனது மனத்தைத் தனது முயற்சியால் முற்றிலும் அடக்கி ஆளக்கூடுமென்றும் அறிந்தானானால் அக்கணமே தனது பேரின்பவீட்டின் கதவைத்திறக்கும் திறவுகோலை அடைந்தவனாகிறான்.

ஒருவனது வாழ்க்கையின் கேடுகள் அவனது மனத்தின் கேடுகளே. அவற்றின் நிவிர்த்தி அகத்திலிருந்து கிரமமாக வளர்ந்து வரவேண்டுமேயன்றிப் புறத்திலிருந்து திடீரென்று சம்பாதித்துக்கொள்ளத் தக்கதன்று. நாள் தோறும், நாழிகைதோறும், மனம் மாசற்ற நினைப்புக்களை நினைத்தற்கும், அதுகுற்றத்துள்ளும் கலக்கத்துள்ளும் விழக்கூடிய சந்தர்ப்பங்களில் குற்றமும் கலக்கமுமற்ற நிலைமைகளைக் கொள்தற்கும் மனத்தைப்பழக்கவேண்டும். கருங்கல்லில் வேலைசெய்கிற பொறுமையுள்ள சிற்பியைப்போல, சரியான வாழ்க்கையை அடைய ஆசிக்கிறமனிதன் தனது மனமாகிய கருங்கல்லிலிருந்து தனது மிக மிக அருமையான கனவுகளின் மெய்ம்மையை அடையும் வரை அவன் ஒவ்வொரு நாளும் சிறிது சிறிதாக வேலைசெய்து வரவேண்டும்.

அத்தகைய மேலான காரியசித்திக்குவேலைசெய்வதில், மிகத் தாழ்ந்ததும் மிகச் சுலுவாக ஏறக் கூடியதுமான படிகளில் நின்று புறப்பட்டு, அவற்றினும் சிறிது உயர்ந்ததும் சிறிது பிரயாசையுடன் ஏறத்தக்கதுமான படிகளின் மூலமாக, மிக உயர்ந்ததும் மிகப்பிரயாசத்துடன் ஏறத்தக்கதுமான நிலைகளுக்குச்செல்ல வேண்டும். கிரமமாகமேல் நோக்கும் இயல்பில் நிகழாநின்ற வளர்



ச்சி, அபிவிர்த்தி, விரிவு, மலர்வு, இவற்றின்சட்டம் ஒவ்வொருவகை வாழ்விலும் ஒவ்வொருகாரியசித்தியினும் சர்வாதிகாரமுள்ளது. எவ்விடத்தில் இந்தச்சட்டம் கவனிக்கப்படவில்லையோ அவ்விடத்தில் முழுத்தவறுதலாக முடியும். கல்வியைக் கற்பதிலோ, ஒருகைத் தொழிலைப் பயில்வதிலோ அல்லது ஒரு வாணிகத்தை நடத்துவதிலோ, இச்சட்டத்தை எல்லாரும் பூரணமாக அறிந்து அதற்கு முற்றிலும் கீழ்ப்படிகின்றனர். ஆனால் தனத்தை ஈட்டுவதிலோ, மெய்யை அறிவதிலோ, சரியான ஒழுக்கத்தையும் வாழ்க்கை ஞானத்தையும் அடைவதிலோ இந்தச்சட்டம் பெரும்பாலாரால் அறியப்படவுமில்லை, கீழ்ப்படியப் படவுமில்லை. ஆதலால் அறம், மெய்ப்பொருள், பூரணவாழ்வு இவற்றைப் பெரும்பாலார் அப்பியசியாமலும், அடையாமலும், அறியாமலும்இருக்கின்றனர்.

உயர்தர வாழ்வு நூல்களை வாசிப்பதிலும், தெய்வதத்துவங்களையாவது மனோதத்துவங்களையாவது பேசுவதிலும் அடங்கியிருக்கிறதென்றும், இந்த மார்க்கத்தால் தெய்வதத்துவங்களை அறியக்கூடுமென்றும் கருதுதல் சாதாரணமாகக் காணப்படும் ஒரு பிழை. நினைப்பிலும், சொல்லிலும், செயலிலும் மேம்பட்டு வாழ்தலே உயர்தர வாழ்வு; மனிதனது அகத்திலும், பிரபஞ்சத்திலும், அடங்கியிருக்கிற தெய்வதத்துவங்களை நீடித்த ஒழுக்கத்தாலும் அறத்தாலுமே அடையக்கூடும்.

ஒரு பெரிய காரியத்தை அறியும் முன்னர் ஒரு சிறியகாரியத்தைப் பூரணமாகக் கிரகித்து அறிய வேண்டும். எப்பொழுதும் அப்பியாசம் உண்மை ஞானத்திற்கு முன்பட்டது. உபாத்தியாயர் மாணவர்களுக்கு முதலில் கணிதங்களின் நுண்ணிய தத்துவங்களைக் கற்பிப்பதில்லை; அப்படிச்செய்வதால் கற்பித்தல் வீணாகுமென்றும், கற்றல் முடியாதென்றும் அவருக்குத் தெரியும். அவர் முதலில் ஒரு சுலபமான கணக்கை அவர்களுக்குப் போடுகிறார்; அதை அவர்களுக்கு விளக்கிக் காட்டி, அவர்களே அதைச் செய்யும்படிவிட்டு விடுகிறார். அவர்கள் திரும்பத் திரும்பத் தவறி, மேலும் மேலும் முயற்சித்து, அதைச் சரியாகத்தீர்த்த பின்னர், அதனினும் அதிகக் கடினமான ஒரு கணக்கை அவர்களுக்குப் போடுகிறார்; அவர்கள் அதைத் தீர்த்த பின்னர், அதனினும் அதிகக் கடினமான கணக்குகளை ஒவ்வொன்றாகப் போடுகிறார். மாணவர்கள் அநேக வருஷ காலம் சிரத்தையோடு முயன்று கணக்குப்

புத்தகத்திலுள்ள சகல கணக்குகளையும் செய்து முடித்தற்கு முன்னர் கணிதங்களின் நுண்ணிய தத்துவங்களைக் கற்பிக்க அவர் எத்தனிப்பதில்லை.

ஒரு கைத் தொழிலில், உதாரணமாக ஒரு சிற்பியின் வேலையில், சிறுவனுக்கு முதலில் சிற்பத்தின் தத்துவங்களைக் கற்பிப்பதில்லை; ஆனால் அவன் கையில் ஒரு சுளுவான கருவியைக் கொடுத்து, அதைக்கொண்டு வேலைசெய்யும் விதத்தை அவனுக்குச் சொல்லுகின்றனர்; பின்னர் முயற்சியாலும், அப்பியாசத்தாலும் அதைக்கொண்டு வேலை செய்யும்படி அவனை விட்டு விடுகின்றனர். அவன் தனது கருவிகளைச் சரியாக உபயோகித்து வேலை செய்யத் தெரிந்து கொண்ட பின்னர்; அவனுக்கு ஒன்றன் பின் ஒன்றாக அதிகக்கடினமான வேலைகளைக்கொடுக்கின்றனர்; அப்படியே அவன் அநேகவருஷங்கள் கடினமான வேலைகளையெல்லாம் செய்துசிற்ப வேலையின் தத்துவங்களைக் கிரகித்துக் கற்றுக் கொள்ளத் தயாரான பின்னர் அவற்றை அவனுக்குக் கற்பிக்கின்றனர்.

சரியாக ஆளப்படும் ஒரு குடும்பத்தில் குழந்தை முதலில் கீழ்ப்படியவும், சகல சந்தர்ப்பங்களிலும் சரியாக நடந்து வரவும், கற்பிக்கப் படுகிறது. குழந்தை ஏன் கீழ்ப்படியவேண்டும் என்றும், ஏன்சரியாக நடக்கவேண்டும் என்றும் அதற்குச் சொல்வதில்லை; ஆனால் அவற்றைச் செய்யுய்படி அதற்குக் கண்டிப்பான உத்தரவு கொடுக்கின்றனர். அது சரியானகாரியத்தையும், நியாயமானகாரியத்தையும் செய்துகொண்டு வருகிறதென்று கண்டபின்னரே, ஏன் அப்படிச் செய்யவேண்டும் என்று அதற்குச் சொல்கின்றனர். எந்தப் பிதாவும் தனது குழந்தை தன்னிடத்தும் தன் சுற்றத்தாரிடத்தும் நடக்கவேண்டிய ஒழுங்கில் நடக்கும்வரை அதற்கு ஒழுக்க தத்துவங்களைப் போதிக்க எத்தனிப்பதில்லை.

இங்ஙனம், சாதாரண லௌகிக காரியங்களிலும் அப்பியாசம் அநுபவ ஞானத்திற்கு முற்பட்டது. ஆன்ம காரியங்களில், உயர்தரவாழ்வைக்கைக்கொள்ளுவதில், இச்சட்டத்திற்குப் பூர்த்தியாகக் கீழ்ப்படிதல் வேண்டும். அறத்தைச் செய்வதாலேயே அறத்தை அறியக்கூடும். அறத்தைச் செய்வதில் சான்றோனான பின்னரே ஒருவன் மெய்ஞ்ஞானத்தை அடையக்கூடும். அறத்தைச் செய்வதிலும் அறப்பயனை அடைவதிலும் நிறைவடைதல் மெய்ஞ்ஞானத்தில் நிறைவடையச் செய்யும்.



முதலில் மிகமிகச் சுலபமான ஒரு அறத்தைச் செய்து, அதன்பின் அதனினும் அதிகக்கடினமான அறங்களை ஒன்றன் பின் ஒன்றாகச் செய்து, எல்லா அறங்களையும் செய்து முடித்தபின்னரே மெய்ப்பொருளை அடையக் கூடும்; ஒரு மாணவன் பள்ளிக்கூடத்தில் தனது பாடங்களை, சகல தவறுதல்களும் கஷ்டங்களும் நீங்கும்வரை, மேன்மேலும் முயன்று பொறுமையோடும் பணிவோடும் படித்துக் கொண்டு வருதல் போல மெய்ப்பொருளை அடைய முயலும் மாணவனும் தவறுதல்களால் தளராது சங்கடங்களால் ஊக்கம் மிகுந்தவனாகி, சரியான நினைப்புகளை நினைத்துக் கொண்டும், சரியான செயல்களைச் செய்து கொண்டும் வரவேண்டும்; அறத்தைச் செய்து முடித்த பொழுது. அவன் மனம் மெய்ஞ்ஞானத்தை அடையத்தக்கவண்ணம் விரிகின்றது; அம்மெய்ஞ்ஞானமே அவன் க்ஷேமமாக அமரத்தக்கநிலை.

## நமது பூமியே புண்ணிய பூமி.

ஸ்ரீவிவேகாநந்த ஸ்வாமிகள் எழுதியது.

(முன் தொடர்ச்சி.)

இந்தியாவின் இழிந்த நிலைமையைப் பற்றி நாமெல்லோரும் எவ்வளவோ கேள்விப்படுகிறோம். நமது தேசம் தாழ்ந்த நிலைமையில் இருக்கிறது என்று நான்கூட நினைத்திருந்தேன். ஆனால் அநுபவம் என்னும் நிச்சய பூமியில் நின்று கொண்டு நான் இப்போது பார்க்கையில் இதற்கு முன் என்கண்களை மறைத்துக்கொண்டிருந்த மாயைகள் நீங்கியபடியினாலும் இதர தேசங்களைப்பற்றி நான் கொண்டிருந்த மேலான அபிப்பிராயங்களெல்லாம் நேரில் போய் பழக விட்டு உண்மையான நிலைமை விளங்கியபடியால் குறைவடைந்திருப்பதாலும், இதற்கு முன் கொண்டிருந்த எண்ணங்கள் தப்பென்றே முழுவணக்கத்தோடும் ஒப்புக்கொள்கிறேன். ஏ! ஆரியாவர்த்தமென்னும் புண்ணிய பூமியே! நீ ஒருபோதும் தாழ்ந்தவளே அல்லள்; செங்கோல்கள் ஒடிக்கப்பட்டும் எறியப்பட்டும் போயின; அதிகாரம் என்ற பந்துகைக்குக் கை மாறிக்கொண்டிருந்திருக்கிறது. ஆனால் இந்தியாவிலோ அரசர்களின் கௌரவமும் ராஜ சபையின் கௌரவங்களும் வெகுசிலராலேயே ஆசைப்படக் கூடியவை. ஜனங்களின் ஏராளமான பாகம்-மனி

உயர்ந்தவர்களும் மிகத் தாழ்ந்தவர்களு முள்பட எல்லோரும் தங்களுக் கேற்பட்ட தீராத மார்க்கத்திலே போய்க்கொண்டிருக்கிறார்கள். இந்தியஜாதீய வாழ்க்கை யென்னும் ஓட்டமானது சில சமயம் மெதுவாகவும் பாதி பிரக்ஞை யோடும் மற்ற சமயங்களில் பலமாகவும் விழித்துக்கொண்டும் ஓடிக்கொண்டே யிருக்கிறது. அநேக நூற்றாண்டுகளாக இடைவெளி யில்லாமல் பிரகாசித்துக் கொண்டு நிற்கும் இந்த ஜாதீய வாழ்க்கை யென்னும் சங்கிலித் தொடரின் முன் நான் பயபக்தியோடும் நிற்கிறேன். என் தாய் பூமியாகிய பாரத மாதாவானவள் தனக்கே சொந்தமாக உரிய கம்பீர நடையோடும் பெருமையான தொரு காரியத்தை, இவ்வுலகிலோ அல்லது மேலுலகிலோ உள்ள எந்த சக்தியாலும் தடுக்க முடியாத ஒரு காரியத்தை அதாவது, மிருகங்களுக்கு சமமாயிருக்கும் மனிதன் தெய்வத் தன்மை யடையும்படி செய்வதாகிய காரியத்தை நிறைவேற்றிக் கொண்டே காலங்கழித்துக்கொண்டிருக்கிறாள்.

ஆஹா! உண்மையில் எவ்வளவு பெருமையான காரியம் பார்த்தீர்களா! உபநிஷத்துக்கள் ஏற்பட்ட அவ்வளவு ஆதிகால முதற்கொண்டே நாங்கள் இவ்வளவுமேன்மையான உண்மையை வெளியிட்டிருக்கிறோம்:—

"நதநேந, நபிரஜயா, தியாகேனைகேன அமிருத த்வமானஸு:"

"தனத்தால் முடியாது, பிரஜாவிர்த்தியால் முடியாது, பற்றின்மை ஒன்றினால் மாத்திரமே இறவாத் தன்மைஅடையப்படும்". ஒவ்வொரு தேசத்தார்களும் இந்த உண்மையை ஆட்சேபித்துப் பார்த்து விட்டார்கள். ஆசைகளை யெல்லாம் பூர்த்திசெய்து கொண்டே இந்த விந்தையை விளக்கப்பார்த்தார்கள். இதுவரையில் ஒன்றும் பலிக்க வில்லை. பழைய மார்க்கங்க ளெல்லாம் துன்மார்க்கங்களும் துக்கமே நிறையும்படி செய்து விட்டன; ஏனென்றால் தனத்திலும் அதிகாரத்திலும் ஆசை வைத்தால் வேறென்ன தான் கிடைக்கும். புதிதாக ஏற்பட்ட மார்க்கங்களாலும்யாதொரு பிரயோஜனமும் காணோம். சமாதானமே பெரிதா, யுத்தம் பெரிதா என்பது இன்னம் விளங்க வில்லை. சன்மார்க்கத்தால் காரியமா துன்மார்க்கத்தால் காரியமா, தேகபலம் பெரியதா மூளைபலம் பெரியதா, உலகப்பற்று நிலைக்கு நிற்குமா ஆத்மஞானம் நிற்குமா ஆகிய இந்த விஷயங்கள் இன்னம் அவர்களால் தீர்மானிக்கப்பட



161303

வில்லை. நாம் வெகு காலங்களுக்கு முன்னமேயே முடிவிற்கு வந்துவிட்டோம். நன்மை தீமையாகிய எதுநேர்ந்தபோதிலும் அந்த நோக்கத்தின் படியே நின்று விட்டோம். இன்னும் உலகம் உள்ளளவும் அப்படியே நிற்பதென்றும் தீர்மானித்து விட்டோம். நம்முடைய முடிவானது உலகப் பற்று முழுவதையும் நீக்குவது, தியாகம். இதுவே இந்திய ஜாதீய வாழ்க்கையின் கானம்; வேதங்களின் வாதமும் இதுவே. இந்திய வாழ்க்கையைத் தாங்கி நிற்கும் அஸ்திவாரம் இதுவே. இந்தியர்களின் வாழ்க்கை,...மனிதவர்க்கத்தை ஆத்மஞான மடையும் படி செய்வது. இவ்வித வாழ்க்கையினின்றும் பாரதமாதாவானவள் ஒருபோதும் விலகவே யில்லை. அரசாண்டவர்கள் மகம்மதியர்களானாலும் சரியே ஆங்கிலேயர்களானாலும் சரியே நமது தேசம் தனக்கேற்பட்ட வழியினின்றும் ஒருபோதும் பிசகினதே யில்லை.

உலகத்தையே அசைக்கவல்ல ஆத்ம ஞான பலமடைந்தவர்கள் இல்லாத காலம் எப்போதாவது நமது தேச வாழ்க்கையில் உண்டா? எவரேனும் எடுத்துக் காட்டட்டும். (முடியவே முடியாது). ஆனால் பாரத மாதாவின் வேலையோ ஆத்மார்த்த சம்பந்தமுள்ளது. இந்த வேலையை யுத்த பேரிகைகளாலும் சைனியங்களின் உதவியாலும் செய்து முடிக்க முடியாது. மிருதுவான பனித்துளிகள் யாவராலும் பார்க்கப்படாமலும் ஒருவர் காதிலும் விழாமலும் கீழே இறங்கி அழகான புஷ்பங்களை யெல்லாம் மலரச் செய்து விடுவது போலவே நமது பாரத தேவியின் காரியமும் உலகத்தில் பரவி வருகிறது. சுதேசத்திற்குள்எப்போதுமே இந்தக் காரியத்தைச் செய்து கொண்டு வந்தாலும் இந்தக் காரியம் அமைதியோடுங் கூடியதாகையால், வெளி தேசங்களில் பரவுவதற்கு முன் சந்தர்ப்பங்கள் தெய்வீகமாய் ஒன்று கூடும் வரையில் காத்திருக்க வேண்டி யிருக்கிறது. அப்படிப்பட்ட சமயம் கிடைத்த போதெல்லாம் வெளிதேசங்களிலும் பாரததேவியின் வியாபகம் சென்றிருக்கிறதென்பதை சரித்திர ஆராய்ச்சிக்காரர்க ளெல்லோரும் அறிவார்கள். பாரசீகர்கள், கிரேக்கர்கள், அரேபியர்கள் முதலியவர்களெல்லோரும் எப்போதெப்போது நமது தேசத்தை வெளிதேசங்களோடு சம்பந்தப் படுத்தினார்களோ அப்போதப்போதெல்லாம் ஆத்ம ஞானமென்ற வெள்ளம் நமது தேசத்தினின்றும் பெருகி வெளிதேசங்

களுக்கும் பரவியிருக்கிறது. அதே மாதிரியான சந்தர்ப்பங்கள் இப்போது இன்னுமொரு முறை நம் முன்பு உண்டாகியிருக்கின்றன. அதன்பலனாக அதேமாதிரிவேலை ஆரம்பித்திருக்கிறது. நன்றாக கவனியுங்கள்; இது ஒரு ஆரம்பமாத்திரமே. பெரியகாரியங்கள் இன்னும் பூர்த்தியாகவேண்டியிருக்கின்றன. இப்போது ஆரம்பித்திருக்கும் வேலையினால் வெளிதேசங்களில் என்ன பலன்உண்டாகப்போகிறதென்று தெளிவாய் எடுத்துச்சொல்ல முடியாது. ஆனால் ஒரு விஷயம் நான் நிச்சயமாகச் சொல்ல முடியும்; நாகரீகமிகுந்த தேசங்களிலெல்லாம் லட்சக்கணக்கான ஜனங்கள்—இது நிச்சயம், வாஸ்தவமே—லட்சக்கணக்கான ஜனங்கள் தங்களைப் பாதாள லோகம் அனுப்பாமல் தடுக்கக்கூடிய சக்தி எங்கிருந்து வருமோவென்று எதிர்பார்த்துக்கொண்டேயிருக்கிறார்கள். தனத்தையே வணங்கி யதன் பலனாகவந்திருக்கும் ஜடதத்துவமென்னும் துக்கசாகரத்தினின்றும்வெளிக்கிளப்பக்கூடிய சக்திக்காகக் காத்துக்கொண்டிருக்கிறார்கள். ஜனசமூகச்சீர்திருத்தங்களையேதங்களுடைய முக்கியவேலையாகக் கொண்டிருக்கும் தலைவர்களெல்லோரும் வேதாந்தத்தின் உயர்ந்த பாவனையே தங்களுடைய காரியத்தைப் பூர்த்திசெய்யக் கூடிய சக்திபொருந்தியதென்று கண்டுபிடித்து விட்டார்கள்.

ஆர்-நாராயணசாமி அய்யர்.

## ஸ்ரீமத் விவேகாநந்தஸ்வாமிகள் எழுதிய கடிதம்.

பிரஹ்ம ஸ்ரீ ராமச்சந்திரசாஸ்திரியவர்கள் மொழிபெயர்த்தது.

சிக்காகோ
1894.

அரிய:—

தங்களுடைய கடிதம் இப்பொழுதுதான் கிடைத்தது ...... ......... இரண்டு அல்லது மூன்றுவருஷங்கட்குப் பிரசங்கம் செய்தால் இந்தத்தேசத்தில் பணம் சேர்க்கலாம். ஆனால் நானும் (இவ்விதமாக) சிறிது முயற்சிசெய்தேன். எனது வேலையைப்பற்றிப் பொது ஜனங்கள் மிகப்புகழ்ந்த போதிலும், அது என்மனத்திற்குப் பிடிக்காததாயும் என் மனோநிலைமையைத் தாழ்த்துவதாயுமிருக்கிறது. * * * * *



இந்தியப் பத்திரிகைகளைப் பற்றித் தாங்கள் சொல்வதை யான் படித்தேன். அவைகள் என்னைப்பற்றிக்குற்றங் கூறுதல் இயற்கையே. அடிமைப்பட்டிருக்கும் ஒவ்வொரு ஜாதியாருள்ளும் முக்கிய பாவமாயிருப்பது பொறாமையாம். பொறாமையும் ஒற்றுமைக் குறைவுமே அடிமைத்தனத்திற்குக் காரணமாயிருந்து அதை ஸ்திரப்படுத்துகின்றன. மேல்நாட்டினனுடைய ஜயத்தின் ரகஸ்யம் ஒற்றுமையாகிய இந்த சக்தியே. ஒற்றுமையின் அஸ்திவாரம் அந்நியோந்நிய நம்பிக்கையும் மதிப்புமாம். எவ்வளவுக்கெவ்வளவு பயம் நிறைந்தவர்களாயும் பலஹீனர்களாயும் ஒருஜனசமூகத்தினர் இருக்கின்றனரோ, அவ்வளவுக்கவ்வளவு இப்பாவம் வெளியில் தோன்றுகின்றது ... ... ... ஆனால், எனதுபுத்திரனே! நீங்கள் அடிமையாயிருக்கின்ற ஒரு ஜாதியாரிடத்திலிருந்து ஒன்றையும் எதிர்பார்க்கக்கூடாது. விஷயமானது சந்தேகமில்லாமல் அநேகமாய் ஏக்கத்தைக் கொடுக்கக் கூடியதே. ஆனாலும் உங்கள் எல்லாருடைய முன்னிலையில் விஷயத்தைச் சொல்லிவிடுகிறேன்.

இனி எக்காலத்தும் நன்னிலைமைக்கு வரமுடியாதபடி சன்மார்க்க நாட்டங்களையெல்லாம் இழந்திருக்கிற,—நன்மை செய்ய முயலுபவர்கள் பேரில் பாய்வதற்கு எப்பொழுதும் தயாராயிருக்கின்ற இந்த உயிரற்ற கூட்டத்திற்குள் உயிரைச் செலுத்த உங்களால் முடியுமா? சொன்னபடிகேளாமல் உதைக்கும் குழந்தையின் தொண்டையின்வழியாய் மருந்தைச் செலுத்த முயலுகிறவைத்தியனுடைய நிலைமையை உங்களால் எடுத்துக் கொள்ள முடியுமா? ... ... ... ஒரு அமெரிக்கன் அல்லது ஒருஐரோப்பியன் அவனுடைய தேசஜனங்களை அந்நியதேசத்தில் எப்பொழுதும் காப்பாற்றுகிறான். ..........................................

“வேலைசெய்வதற்கே உனக்குப்பாத்தியதையுண்டு; ஆனால் அவ்வேலையின் பலனுக்கல்ல” என்பதை மறுபடியும் உங்களுக்கு ஞாபகப்படுத்துகிறேன். பாறையைப்போல உறுதியாய்நில்லுங்கள். சத்தியமே எப்பொழுதும் ஜயிக்கின்றது. ஸ்ரீ ராமகிருஷ்ணரின் குழந்தைகள் தங்களுக்குத் தாமே உண்மையாயிருந்து கொள்ளட்டும்; எல்லாம் சரியாகிவிடும். பலனைப்பார்க்க ஒருவேளை நாம்

ஜீவிக்கமாட்டோம்; ஆனால் நாம்ஜீவிப்பது எவ்வளவு நிச்சயமோ அதுபோலவே, கூடியசீக்கிரத்தில் பலனுண்டாகும். ஜனசமூக நாடி நரம்புகளில் புதியபலத்தை ஊட்டுவதற்கு ஒருபுதியமின்சார நெருப்பே இந்தியாவுக்கு அவசியமாயுள்ளது. இவ்வேலை எப்பொழுதும் மெதுவாகவே நடந்தது; எப்பொழுதும் மெதுவாகவே தான்நடக்கும். வேலைசெய்வதில் திருப்தியாயிருங்கள், எல்லாவற்றிற்கும்முக்கியமாக உங்களுக்குத்தானே உண்மையாயிருந்து கொள்ளுங்கள். கடைசிவரையில் பரிசுத்தமானவர்களாயும் அன்பு மிகுந்தவர்களாயும் உண்மையானவர்களாயும் இருங்கள்; எல்லாம் சரியாகிவிடும். ஸ்ரீ ராமகிருஷ்ணருடைய சிஷ்யர்களிடத்தில் நீங்கள் எதையாவது கவனித்திருந்தால், அதுஇதுதான்,—அவர்கள் கடைசிவரையில் உண்மையானவர்கள். அத்தகையஒரு நூறுஜனங்களைப் நான்சேர்படுத்தி இந்தியாவில் கொண்டுவந்துவிட்டுவிட்டால், எனது வேலைமுடிந்துவிடும்; யானும் மரிப்பதற்கு, மிகத் திருப்தியுள்ளவனாயிருப்பேன். ஈஸ்வரனாகிய அவரேநன்மையை அறிவார். மூடர்கள் முட்டாள்தனமாகப் பேசட்டும். நாம்சகாயத்தைத் தேடுவதுமில்லை, தள்ளுவதும்இல்லை. நாம்ஜகதீஸ்வரனுடைய சேவகர்கள். சிறியமனிதர்களுடைய அற்பமுயற்சிகளை நாம்கவனித்தல் கூடாது. மேல்நோக்கியே செல்லுங்கள் ... ... ... அதைரியப்படாதீர்கள். சத்தியவார்த்தை ஒருபொழுதும் வீண்போகாது; அநேகயுகங்களாய் அது குப்பையினால் மூடப்பட்டிருக்கலாம்; ஆனால் அதுதானாகவே இப்பொழுதோ பின்னரோ வெளிவந்துவிடும். சத்தியம் அழிவற்றது; நற்குணம் அழிவற்றது; பரிசுத்தம் அழிவற்றது. எனக்கு ஒரு உண்மையான மனிதனைக் கொடுங்கள்; எனக்கு அதிக ஜனங்கள் தேவையில்லை. எனது புத்திரனே, உறுதியாய் நின்று கொள். உனக்கு உதவிசெய்ய ஒருவரையும் கவனியாதே. எல்லாவிதமனுஷ்ய சகாயத்தைப்பார்க்கிலும் ஈஸ்வரன் எவ்வளவோ உயர்ந்தவரல்லவா? பரிசுத்தமாயிரு;—ஈஸ்வரனிடத்தில் விஸ்வாசம்வை; எப்பொழுதும் அவரையே நம்பு; நீசரியானவழியில் இருக்கிறாய்; ஒன்றும் உன்னை எதிர்க்க முடியாது. ... ...

நான் உங்களுக்காக எப்பொழுதும் ஸ்தோத்திரம் செய்கிறேன்; நீங்கள் எனக்காகஸ்தோத்திரம் செய்யவேண்டும். வறுமையினாலும்வைதீகக் கொடுமையினாலும் நிஷ்டூரத்தினாலும் பலமாய்ப் பிடிக்கப்பட்டுக் கீழேவீழ்ந்து கிடக்கும் இந்தியாதேசத்து லட்சக்கணக்கான ஜனங்களுக்காக நாம் எல்லோரும் இரவும்பகலும்பிரார்



த்தனை செய்வோம்;—அவர்களுக்காக இரவும்பகலும் ஈஸ்வரனை இறைஞ்சுவோம்; உயர்ந்தவர்களையும் தனவான்களையும் பார்க்கிலும் அவர்களுக்கே (இந்தியாதேசவாசிகளுக்கே) மதோபதேசம் செய்யப் பிரியப்படுகிறேன். நான் மனோசாஸ்திரியல்ல, தத்துவ ஞானியல்ல, மகாத்துமாவுமன்று. ஆனால் நான் ஏழை; நான்ஏழைகளை நேசிக்கிறேன். இந்தத் தேசத்தில் ஏழைகள் என்று கூறப்படுபவர்களையும் அவர்களுக்காக இரங்குகிறவர்கள் எத்தனைபேர் என்பதையும் நான் பார்க்கிறேன். இந்தியாவில் எவ்வளவு பெரிய வித்தியாசம்! வறுமையிலும் அறிவீனத்திலும் எப்பொழுதும் மூழ்கியிருக்கின்ற இருபது கோடி ஜனங்களுக்காக இரங்குபவர் எவர்? அவர்களுக்குவழி என்ன? அவர்களுக்காக இரங்குபவர் எவர்? அவர்கள் ஞானத்தையோ கல்வியையோ காண்கிறதில்லை. அவர்களுக்கு வெளிச்சத்தைக் கொண்டுவருபவர்எவர்? இந்தஜனங்கள் உன்னுடைய ஈஸ்வரனாயிருக்கட்டும்—அவர்களைப்பற்றி நினை; அவர்களுக்காகவேலைசெய்; அவர்களுக்காக இடைவிடாமல்பிரார்த்தனைசெய்—ஈஸ்வரன் உனக்குவழிகாண்பிப்பார். எவனுடைய ஹிருதயம் ஏழைகட்காக இரத்தம் பெருக்குகிறதோ அவனையே நான்மகாத்மா என்று சொல்கிறேன்; இல்லையேல் அவன்துராத்மாவே. அவர்களுடைய நன்மைக்காக நாம் நமதுசித்தங்களையெல்லாம் இடைவிடா ஸ்தோத்திரத்தில் ஒன்றுசேர்ப்போமாக. அறியப்படாமலும், பரிதபிக்கப்படாமலும், விசனப்படுவோர் இன்றியும், ஒன்றையும் செய்து முடிக்காமலும் நாம் மரிக்கலாம்—ஆனால் ஒருநினைப்பாவது வீண்போகாது. இப்பொழுதோ, பின்னரோ அதுபலனடையும். எனது ஹிருதயம் இரக்க உணர்ச்சிகளால் நிறைந்துள்ளது; நீங்கள் அதை யூகித்துக்கொள்ளக் கூடும்; லட்சக் கணக்கான ஜனங்கள் பசிநோயினாலும் அறிவின்மையாலும் பீடிக்கப்பட்டிருக்கிறவரையில், அவர்களுடைய செலவில் வித்தை பயின்று அவர்களைக் கொஞ்சமேனும் கவனியாமல் இருக்கிற ஒவ்வொருவனையும் துரோகியென்று சொல்கிறேன். ஏழைகளை இம்சித்து நிரம்பப் பணம் சம்பாதித்துக் கொண்டு நேர்த்தியான உடைகள் உடுத்துத்திரிபவர்களை, இப்பொழுது பசித்துத்திரியும் காட்டுமனிதர்களைப் போலுள்ள இருபது கோடி ஜனங்களுக்காக ஒன்றும் செய்யாமல் இருக்கும் வரையில், இழிந்தவர்கள் (சண்டாளர்கள்) என்றே கூறுகிறேன். என்சகோதரர்களே! நாம்ஏழைகள்; நாம்எம்மாத்திரமனிதர்கள்? ஆனால் அத்தகையோரே ஈஸ்

வானது ஆயுதங்களாய் எப்பொழுதும் இருக்கின்றனர். ஈஸ்வரன் உங்கள் எல்லோரையும் அநுக்கிரகிப்பாராக.

அன்புநிறைந்த,
விவேகாநந்தர்.

ஓம்.

# யோகஸித்தி.

ஓர் உத்தமதேசாபிமானியால் இயற்றப்பட்டது.

விண்ணும் மண்ணுந் தனியாளும்—அடி
  வீரசக்தி நினதருளே—என்றன்
கண்ணுங் கருத்துமெனக்கொண்டு—அன்பு
  கசிந்து கசிந்து கசிந்துருகி—நான்
பண்ணும் பூசனைகளெல்லாம்—வெறும்
  பாலை வனத்திலிட்ட நீரோ—உனக்
கெண்ணுஞ் சிந்தை யொன்றில்லையோ? அறி
  வில்லா தகிலமளிப்பாயோ? 1

நீயே சரணமென்றுகூவி—என்றன்
  நெஞ்சிற் பேருறுதிகொண்டு—அடி
தாயேயெனக்கு மிகநிதியும்—அறந்
  தன்னைக்காப்பதற்கோர் திறனும்—தரு
வாயே யென்று பணிந்தேத்தி—பல
  வாறா நினதுபுகழ்பாடி—வாய்
ஓயே னாவதுணராயோ ? நின
  துண்மை தவறுவதோருலகோ. 2

காளிவலியசாமுண்டி—ஓங்
  காரத்தலைவி யென்னிராணி—பல
நாளிங்கெனை யலைக்கலாமோ? உள்ளம்
  நாடும்பொருளடைதற்கன்றோ—மலர்த்
தாளில் விழுந்தபயங்கேட்டேன்—அது
  தாராயெனிலுயிரைத்தீராய்—துன்ப
நீளிலுயிர் தரிக்கமாட்டேன்—கரு
  ணீயென்னியல் பறியாயோ? 3



தேடிச் சோறு நிதந்தின்று—பல
  சின்னஞ் சிறுகதைகள் பேசி—மனம்
வாடித் துன்பமிகவுழன்று—பிறர்
  வாடப் பலசெயல்கள் செய்து—நரை
கூடிக் கிழப்பருவமெய்தி—கொடுங்
  கூற்றுக் கிரையெனப் பின்மாயும்—பல
வேடிக்கைமனிதரைப்போலே—நான்
  வீழ்வேனென்று நினைத்தாயோ? 4

நின்னைச் சிலவரங்கள் கேட்பேன்—அவை
  நேரேயின் றெனக்குத்தருவாய்—என்றன்
முன்னைத்தீய வினைப்பயன்கள்—இன்னும்
  மூளாதழிந்திடுதல் வேண்டும்—இனி
என்னைப் புதியவுயிராக்கி—எனக்
  கேதுங் கவலையறச்செய்து—மதி
தன்னை மிகத்தெளிவுசெய்து—என்றும்
  சந்தோஷங் கொண்டிருக்கச் செய்வாய். 5

தோளை வலியுடையதாக்கி—உடற்
  சோர்வும் பிணிபலவும் போக்கி—அரி
வாளைக்கொண்டு பிளந்தாலும்—கட்டு
  மாறாவுடலுறுதிதந்து—சுடர்
நாளைக்கண்டதோர் மலர்போல்—ஒளி
  நண்ணித்திகழுமுகந் தந்து—மத
வேளை வெல்லுமுறை கூறித்—தவ
  மேன்மை கொடுத்தருளல் வேண்டும். 6

எண்ணுங் காரியங்களெல்லாம்—வெற்றி
  யேறப்புரிந்தருள வேண்டும்—தொழில்
பண்ணப்பெருநிதியம் வேண்டும்—அதிற்
  பல்லோர் துணைபுரியவேண்டும்—அவை
நண்ணும் பாட்டினொடுதாளம்—மிக
  நன்றாயுளத்தழுந்த வேண்டும்—பல
மண்ணிற் கோடிவகையின்பம்—நான்
  பாடத்திறனடைதல் வேண்டும். 7

கல்லைவயிர மணியாக்கல்—செம்பைக்
கட்டித் தங்கமெனச் செய்தல்
புல்லை நெல்லெனப் புரிதல்—பன்றிப்
போத்தைச் சிங்கவேறாக்கல்—மண்ணை
வெல்லத் தினிப்புறச் செய்தல்—என
விந்தை தோன்றிட விந்நாட்டை—நான்
தொல்லை தீர்த்துயர்வு கல்வி—வெற்றி
சூழும் வீரமறிவாண்மை. 8

கூடுந் திரவியத்தின் குவைகள்—திறல்
கொள்ளுங் கோடிவகைத் தொழில்கள்—இவை
நாடும்படிக்குவினை செய்து—இந்த
நாட்டோர் கீர்த்தியெங்கு மோங்க—கலி
சாடுந் திறனெனக் குத்தருவாய்—அடி
தாயே யுனக்கரியதுண்டோ—மதி
மூடும் பொய்மையிருளெல்லாம்—எனை
முற்றும் விட்டகல வேண்டும். 9

ஐயந் தீர்ந்துவிடல் வேண்டும்—புலை
யச்சம் போயொழிதல் வேண்டும்—பல
பையச் சொல்லுவதிங் கென்னே—முன்னைப்
பார்த்தன் கண்ணனிவர் நேரா—எனை
உய்யக் கொண்டருளல் வேண்டும்—அடி
உன்னைக் கோடிமுறை தொழுதேன்—இனி
வையத் தலைமை யெனக்கருள்வாய்—அன்னை
வாழி நின்னதருள் வாழி. 10

குறிப்பு:— "இப்பாடலை ஹநும தோடி மேளத்தில் ஆதிதாளத்தில் "மாமா-காக-ரிரி-ஸாஸா நிநி
ஸகா-காககா-கம கமபா-மம
மாமா-காக-ரிரி-ஸாஸா"
என்ற இசையில் ஸமயோசிதமாக மாற்றிப்பாடுக."

## சின்னச்சங்கரன் கதை.

### 4-அத்தியாயம்.

#### சங்கரன் யமகம் பாடி அரங்கேற்றியது.

மேலே கூறப்பட்ட போராட்டம் முடிந்து, ஒருவாறாகவுண்டர் சபை கலைந்தது. புலவர்களெல்லாம் போனபின், தனியாக இருக்கும் போது, கவுண்டர் முத்திருளனை நோக்கி "ஏதோ, ஒரு நல்ல ஸமாசாரம் கொண்டு வந்தாயே. அது சொல்லி முடியுமுன்பாக, அந்த இழவு பார்ப்பான் சண்டை தொடங்கிவிட்டான். நீ நல்ல போடுபோட்டாய். அந்தப்பார்ப்பானுக்கு வேணும் அது போகுது. சொல்ல வந்த சங்கதியைச் சொல்" என்றார்.

"நம்ம சுப்பிரமணிய அய்யர் மகன் சங்கரன் ஸமூஹத்தின் மேலே ஒருயமகம் பாடியிருக்கிறான். நல்ல பாட்டு; அடியேனாலே கூட அவ்வளவு "ஷோக்" கான பாட்டுப் பாட முடியாது, அதை ஸமுகத்திலே அரங்கேற்ற வேணும். மகாராஜா! பையன் சிறுவனாக இருந்த பொதிலும் புத்தி ரொம்பக் கூர்மை. அரமனைக்கு இத்தனை புலவர்கள் வருகிறார்களே. அவர்களெல்லாரையும்விட்டு அடியேனிடத்திலே வந்தால் தான் இந்தக் காரியம் சாயுமென்று தெரிந்து கொண்டான். அவன்வயதெவ்வளவு? நம்ம மஹாராஜாவினுடைய கிருபை இன்னான் மேலே பரிபூர்ணமாக விழுந்திருக்கிறதென்று, ஊஹித்துக் கொள்ளுவதென்றால் அதென்ன ஸாமான்யமாகச்சிறு பிள்ளைகளுக்கு ஏற்படக் கூடிய விஷயமா? மஹாராஜாவுக்கு இந்த முத்திருளு தான் சரியான நாய்க்குட்டி. இவ்விடத்திலே சொன்னால் தான் நமதுகவி அரங்கேறுமென்று கண்டு பிடித்து விட்டான். புத்தீ, அந்தப் பாட்டை ஒருநாள் சபையிலே அரங்கேற்றும்படி உத்தரவானால், அப்போது இந்த அய்யங்கார்கள்,புலவர்கள் இவர்களுடைய சாமார்த்தியங்களெல்லாம் வெளிப்பட்டுப்போகும். அடியேன்ஒருவனாலேதான்அந்தக்கவிக்குபொருள் சொல்லமுடியும். மற்றவர்களாலே குட்டிக்கரணம்போட்டால்கூட நடக்காது. அடியேனுக்கு கூட அந்த பாட்டைக் கேட்டவுடனே இரண்டு நிமிஷம் திகைப் புண்டாய் விட்டது. பிறகு தான் அடியேனுக்கு மஹாராஜா கடாக்ஷமும்,ஸரஸ்வதிகடாக்ஷமும் கொஞ்சம் இருக்குதே - கொஞ்சம் நிதானித்துப் பார்த்தேன். அர்த்தம் தெளிவாகத் தெரிந்தது" என்று முத்திருளு சொன்னான்.

ஜமீந்தார்:—"அப்படியா! யமகமா பாடுகிறீர்! உனக்குக் கூட அர்த்தம் கண்டு பிடிக்கத் திகைத்த தென்றால்? வெகு நேர்த்தியான பாட்டா யிருக்குமே. பார்ப்போம், பார்ப்போம். நம்ம புலவர்களுடைய சரய மெல்லாம் நாளை வெளுத்துப்போகும். நாளைக்கு ஸாயங்காலமே வைத்துக் கொள்ளுவோம். புலவர்களுக்கெல்லாம் சொல்லியனுப்பி விடு. ஒருவன் கூடத் தவறக் கூடாது, எல்லாரும் வந்து சேரவேணு மென்று."

இந்த ஆக்ஞையைக் கேட்டு முத்திருளு ஸந்தோஷ முடையவனாய் வணங்கிச் சென்றான். மஹா ராஜாவும் தமது நித்திய அநுஷ்டானங்களுக்குப் புறப்பட்டு விட்டார். 'நித்திய கர்மானுஷ்டானங்கள்' என்று எழுத உத்தேசித்தேன். ஆனால் கவுண்டரவர்களுக்குக் "கர்மம்" ஒன்றுமே கிடையாது. அத்வைதிகள் சொல்லும் நிர்க்குணம் பிரமத்தின் ஜாதியைச் சேர்ந்த ஆசாமி.

யமகம் பாடிய காலத்தில் சின்னச் சங்கரனுக்கு வயது மிகவும் கொஞ்சம். இவனுடைய தகப்பனார் சுப்பிரமணிய அய்யருக்கும் ஸமஸ்தான வித்வான் முத்திருளக்கவுண்டனுக்கும் மிகுந்த ஸ்நேஹமுண்டு. அவன் அடிக்கடி வந்து சுப்பிரமணிய அய்யரிடம் பணம் வாங்கிக்கொண்டு போவதுண்டு. கடனென்று சொல்லித்தான் வாங்குவான். ஆனால் முத்திருளன் தயவிருக்கும் வரையிலே தான் ஜமீந்தாருடைய தயவும் இருக்குமென்பதை நன்றாக அறிந்த சுப்பிரமணிய அய்யர் அவனிடம் பணத்தைத் திரும்பிக் கேட்கும் வழக்கமில்லை. அவனும் ராஜாங்க வ்யவஹாரங்களிலே புத்தியை அதிகமாக உழைப்பவனாதலால், மிகுந்த மறதிக் குணம் உடையவன். பணம் வாங்குவது அவனுக்குக் கொஞ்சமேனும் ஞாபக மிருப்பதில்லை.

சின்னச் சங்கரன் விஷயத்தில் முத்திருளனுக்கு விசேஷ அன்பு ஏற்படுவதற்கு வேறொரு காரணமும் உண்டு. முத்திருளன் தகப்பன், எண்பது வயதுள்ள சோலையழகுக் கவுண்டன் என்பவன் கண்ணிழந்து வீட்டிலே உட்கார்ந்துகொண்டிருந்தான். அந்தச் சோலையழகு தமிழ்காவியங்களிலே ஸாக்ஷாத் நச்சினார்க்கினியருக்கு ஸமானமானவனென்பது அந்தவூர்க் கவுண்டர்களுடைய எண்ணம். சோலையழகுக் கவுண்டனிடத்தில் சங்கரன் தினம் பள்ளிக்கூடம் விட்டவுடனே போய்ப் பழய புலவர்களின் சரித்திரங்களும், பழய கடினமான விடுகவிகளுக்குப் பொருளும், கதை



களும், கேட்டுக்கொண் டிருப்பான். ஊரிலுள்ள பெரிய மனுஷ்யர்களிலே ஒருவராகிய சுப்பிரமணிய அய்யரின் பிள்ளை தன்னிடம் வந்து பாடம் கேட்டுக்கொள்வதைப்பற்றி திருதாஷ்ட்ரக்கவுண்டனுக்கு அளவற்ற பூரிப்பு ஏற்பட்டிருந்தது. அந்த குடும்பமுழுதிற்குமே சங்கரன்மேல் 'ஆசை' அதிகம்.

மாலை ஐந்துமணி அடித்தது. பள்ளிக்கூடத்தி லிருந்து நேரே சங்கரன் ஜமீந்தாருடைய சபைக்குவந்துவிட்டான். மேலே சொல்லப்பட்ட வித்துவான்களெல்லோரும் வந்து சபையில் கூடியிருந்தனர். திவான் முருகப்பமுதலியார், தாசில் மாரிமுத்துப் பிள்ளை, இன்னும் சில கவுண்டப் பிரபுக்கள், உத்தியோகஸ்தர் எல்லோரும் வந்திருந்தனர்.

ஜமீந்தார் சங்கரனைநோக்கி "எங்கே? தம்பி உன்பாட்டை வாசி கேட்போம்" என்றார். சங்கரன் சட்டைப்பையிலிருந்து ஒரு காகிதத்தை வெளியே உருவிப் படிக்கத் தொடங்கினான்

பையனுக்கு வாய்குழறுகிறது. உடம்பெல்லாம் வியர்க்கிறது.

ஸரஸ்வதிக்கு லஜ்ஜை யதிகம்; லக்ஷ்மியைப்போல நாண மற்றவளன்று. சங்கரன் போன்றவர்களிடம் விளங்கும் போது ஸரஸ்வதிக்குக்கூட ஆரம்பங்களில் கொஞ்சம் லஜ்ஜை உண்டாகும். நாளாக, நாளாகத்தான் லஜ்ஜைநாணம் எல்லாங்கெட்டுப் போய் தெரு வேசிகளின் இயல்புண்டாகிவிடும்.

சங்கரன் படும் அவஸ்தையைக் கண்டு முத்திருளுக்கவுண்டன் அவனை உற்சாகப்படுத்தும் பொருட்டாக பயப்படாதே, சாமி, தைரியமாய் வாசி. உயர்ந்தகவியாச்சுதே. இதி லென்ன வெட்கம்? மேலும் நம்பமஹாராஜாவின் முன்னிலையில் நம்முடைய படிப்பைக் காட்டாமல் யாரிடம் காட்டுவது? இதில் கூச்சம் படலாமா? என்றான்.

மஹாராஜ ராஜஸ்ரீ, ராஜகுலதீப ராமசாமிக் கவுண்டர் மீது
சங்கரய்யர் பாடிய யமக அறுசீர்க்கழி நெடிலாசிரிய விருத்தம்.

"கவுண்டவிண்ட தெனமாரன் கணைபொழியமிகச்சோர்ந்து
கண்ணீராற்றிற், கவுண்டவுண்ட மார்பினளாய் மகளுநன்னை நினை
ந்துமனங் கரையாநின்றாள், கவுண்டவுண்ட சிதையினை மாலேபிட்
ட பெருமானே கவுண்டனூரிற், கவுண்டவுண்ட ராமசா மித்து
ரையே விரைவிற் கலவிசெய்யே."

இந்த யமக விரு[illegible] முடிந்தவுடனே முத்திருளக் கவுண்டன் சபைபோ[illegible] திரும்பிக் காட்டிலே தனிச் சிங்கம் விழிப்பதுபோல ஆ[illegible] விழித்தான்; புலவர்களுக் கெல்லாம் அடிவயிறு குழம்பலாயிற்று. ஒவ்வொருவனுக்கும் இந் தப்பாட்டுக்குத் தன்னிடம் பொருள்கேட்டு விடுவார்களோ என்ற பயமுண்டாயிற்று. யாரும் வாயைத்திறக்கவில்லை. கடைசியாக உபய வேதாந்த ஆம்ரோதனசாரியார் திருவா[illegible]ய்மலர்ந்து, "முத் திருளக்கவுண்டா, இந்தப் பாட்டுக்கு நீதான் அர்த்தம் சொல்ல வேண்டும்" என்றார். முத்திருளக் கவுண்டன் பின்னும் [illegible] ஒருமுறை [illegible] ஒரு சுற்றுச்சுற்றி விழித்துவிட்டுச் சங்கரனிடமிருந்து [illegible] தைக் கையில் வாங்கிப்பார்த்துக்கொண்டு, ஒருமுறை கனைத்[illegible] பின்பு பின்வருமாறு வ்யாக்யானம் செய்யலானான்:—

இது நற்றாயிரங்கல் என்னும் துறை. (அதாவது, தன்மக காதல் துன்பத்தால் வருந்துவதைக்கண்ட தாயொருத்தி மனம் பொறுக்காமல் சொல்வது).

"கவுண்டவுண்ட தெனமாரன் கணைபொழிய மிகச்சோர்ந்து
கண்ணீராற்றிற், கவுண்டவுண்ட மார்பினளாய் மகளுன்னை நினை
ந்துமனங் கரையாநின்றாள், கவுண்டவுண்ட சீதையினை மாலையிட்
-பெருமானே கவுண்டனூரிற், கவுண்டவுண்ட ராமசாமித்
துரையே நீவிரைவிற் கலவிசெய்யே,"

"கவுண்டவுண்டதென" - கவுண் தாவுண்டதென; கவுண்கற் கள் தாவிவருவதுபோல; இங்கு 'கவுண்டாவுண்ட' என்றிருக்க வேண்டியது, குறுக்கல் விகாரத்தால் 'கவுண்டவுண்ட" என்றா யிற்று.

"மாரன்"—மன்மதன், காமவேள், "கணைபொழிய"-அம்பு களைப்பெய்ய, அதாவது பகழிகளைத்தூவ, அதனால் "மிகச்சோர்ந்து"—மிகவும் சோர்பெய்தி, சாலவும் துளக்கமெய்தியவளாய் "கண்ணீராற்றில்', - கண்ணிலே உதிர்க்கும் நீரினாலாகிய நதி யினால்-

"கவுண்ட வுண்ட 'மார்பினளாய்'-கவ்வுண்ட, உண்ட மார்பி னளாய்; அதாவது கவ்வப்பட்ட உருண்டமார்பினையுடையவளாய். கண்ணீர் வெள்ளத்தாலே விழுங்கப்பட்ட பயோதாத்தினளாய். இங்கு 'உருண்ட' என்பதில் ருகரம் கெட்டது தொல்காப்பியத் தில் கெடுதியதிகார விதிப்படியென்க.



"மகள்'-எனது புதல்வி.

"உன்னை நினைந்து மனங்கரையாநின்றாள்"—இதன் பொருள் வெளிப்படை. "கவுண்டவுண்ட சீதையினை"-இதனை, கா உண்டு அவ் உண்டு அ சீதையினை என்று பிரித்துப் பொருள் கொள் ளுக. இலங்கையிலே ஒரு கா (அசோகவனம்) உண்டு; அவ்-அவ் விடத்தில், உண்டு-இருந்தாள்; அ- அந்த; சீதையினை - சீதாதே வியை, 'காவுண்டு' என்பது 'கவுண்டு' எனக் குறுகியதும், 'அச் சீதை, என்பதில் மெய்கெட்டதும் தொல்காப்பிய விதிப்படியே யென்க. "அவ்" என்பதன் பிறகு இடத்தில் என்னும் சொல்வரு வித்துக் கொள்ளப்பட்டது.

"மாலையிட்ட பெருமானே"-(சீதாதேவியின்) நாயகனாகியஸ்ரீ ராமபிரானுக்கு நிகரானவனே; இராமன் சூரிய குலத்தவனாகவும் நமது மஹாராஜா சந்திரகுலதிலகமாகவும் இருப்பினும் பெய ரொற்றுமை கருதியும், வீரியம் முதலிய குணப்பெருமைகளின் ஒப்பைக் கருதியும் கவி இவ்வனம் எழுதியிருக்கிறார். மேலும், அர சன் மஹாவிஷ்ணுவின் அவதாரமென்றுவேதங்கள் முழங்குத லறிக. இராமனும் மஹாவிஷ்ணுவின் அவதாரமென்றே கருதப் படுதலுணர்க.

"கவுண்டனூரில்"-கவுண்ட மாநகரத்தின் கண்ணே; நீர்வளம் நிலவளம், பவளம்முதலியன பொருந்தியதாய், அஷ்ட லக்ஷமி களுக்குத் தாய்வீடாய், அமராபதி போலவிளங்கும் நமது ராஜ தானியிலே,

'கவுண்ட வுண்ட ராவசாமித்துரையே' - ஏ கவுண்டா! (கவு ண்ட வமிசத்தில் உதித்தமன்னு)உண்ட(அறுவகைச் சுவைகளும் பொருந்திய இனிய உணவை எப்போதும் சாப்பிடுகிற) ராமசா மித்துரையே! எல்லோரும் உண்பவரேயாயினும் நமது மஹாரா ஜாவுக்கு மாத்திரம் விசேடமாக 'உண்ட' என்னும் அடைமொழி கொடுத்ததேனோ என்றால், எல்லோரும் உண்பது போலன்று, இவர் தேவர்களைப் போல அரிய உணவுகளை உண்ணும் பாக்கிய வான் என்பதைக் குறிப்பிடும் பொருட்டேயென்க.

## சமாச்சாரக் குறிப்புகள்.

ஐஸ்லாண்டு என்னும் நாட்டில் போலீஸ்காரரும் சிறைச்சாலைகளும் கிடையாவாம். சென்ற ஆயிர வருஷங்களில் இரண்டே களவுகள் நடந்தனவாம், ஆச்சரியம்! அந்நாட்டிலுள்ள ஜனங்கள் எவ்வளவு யோக்கியர்கள்! அந்நாட்டைப்போல உலகெங்கும் சிறைச்சாலைகளும், போலீஸ்காரரும் இல்லாமற் போகுநாள் என்று வருமோ? மனிதவர்க்கத்தைச் சீர்திருத்தி மேம்பாடடையச் செய்துவருவதாகச் சொல்லப்படும் தற்காலநாகரிகம் அங்கு அதிகமாய்ப் பரவியிருப்பதாகக் காணப்படவில்லை.

* * * *

தென்னாப்பிரிக்காவில் ஸ்ரீமான் காந்தி, போலக், காலன்பாக் முதலிய தீரர்கள் சிறைவாசம் செய்கின்றனர்; இன்னும் எத்தனையோ இந்தியர்களும் இதேகதியை அடைந்திருக்கின்றனர். தென்னாப்பிரிக்காவில் தலைகவிழ்ந்து கூத்தாடும் போயர் கவர்ன்மெண்டார் செய்யும் அக்கிரமங்கட்கோ அளவே யில்லை. ஆங்கில அரசாட்சி உலகத்தில் ஓங்கிய பிற்பாடு, அடிமைத்தனம் உலகினின்று மொழிந்துவிட்டதென்று எல்லோரும் பிரபலமாகச் சொல்ல நாம் கேட்டிருக்கிறோம். அக்காலத்திலாவது அடிமைகள் அவர்களுடைய எஜமானர்களால் ரட்சிக்கப்பட்டு வந்தார்கள், சிற்சில சமயங்களில் எஜமானர்களிடத்திலிருந்தே துன்பத்தை யடைவார்களேயொழிய, எஜமானர்களைத் தவிர வேறெவரும் அவர்களிடத்தில் அதிகாரம் செலுத்த முடியாது. ஒரு அடிமையை எஜமானனைத் தவிர வேறு எவரேனும் இம்சிப்பதாக அவ்வடிமையின் எஜமானன் அறிந்தால், அவ்விம்சை தனக்கே நேர்ந்ததாக நினைத்து இம்சித்தவனுடன் பெருங் கலகம் விளைத்துவிடுவானன்றோ? அடிமைவியாபாரம் இல்லாத இக்காலத்தில், நாகரிகம்மிகுந்து உலகத்தில் அறிவு விர்த்தியாயிருக்கிறதென்று பித்தர் பிதற்றும் இக்காலத்தில், தென்னாப்பிரிக்காவில் வசிக்கும் இந்தியர்கள் அக்காலத்து அடிமைகளைப்பார்க்கிலும் கேடு கெட்ட ஸ்திதியில் இருக்கிறார்கள். ஆடுமாடு முதலிய கன்று காலிகளும் கூட சொந்தக்காரர்களால் ரட்சிக்கப்படுகின்றன. தென்னாப்பிரிக்காவில் இந்தியர்கள் ஆடுமாடுகளினும் கேடுகெட்ட ஸ்திதியில் இருக்கின்றனர். இந்தியா கவர்ன்மெண்டாரோ தென்னாப்பிரிக்காக் கவர்ன்மெ



ண்டாரைச் சீர்திருத்த அதிகாரமற்றவர்களா யிருக்கின்றனர். பிரிட்டிஷ் கவர்ன்மெண்டாரோ வாய்மூடி மௌனம் சாதிக்கின்றனர். தென்னாப்பிரிக்காவில் வசிக்கும் இந்தியர்கள் துப்பாக்கிக் கிரையாவதும், அவர்களுடைய முதுகுத்தோல் உரிந்து ரத்தம்பீறிட்டு ஒழுகுவதும், அவர்களுடைய பெண்டு பிள்ளைகள் திண்டாடுவதும் அங்கு போயர்களுடைய கொடுங்கோன்மை பொறுக்கமுடியாமல் எதிர்க்காமல் எதிர்ப்பது என்னும் சாந்த வைராக்கிய விரதத்தைக் கைக்கொண்டு அதினால் சிறைவாசம் செய்யநேர்ந்திருக்கும் இந்தியர்கள் காப்பிரிக் காட்டுமிராண்டிகளால் ஆக்கிய சோற்றை உண்ண இசையாது பட்டினிகிடந்து பரதவிப்பதும் இவை முதலாய கொடுமைகள் பிரிட்டிஷ் ஏகாதிபத்திய கவர்ன்மெண்டாருக்கு வேடிக்கைகளாயிருக்கின்றனவோ? தென்னாப்பிரிக்காக்கவர்ன்மெண்டாரும் இந்தியர்களை அவ்விடத்தினின்றும் எப்படியாவது துரத்திவிடவேண்டுமென்று தீர்மானித்து விட்டார்கள். இந்தியாதேசத்திலோ ஜனங்கள் இவ்விஷயத்தில் கொதிப்பும் ஆத்திரமுமுள்ளவர்களா யிருக்கின்றனர். முறையோ! முறையோ! என்று கூக்குரல் இட்டாலும் கேட்போரும் கவனிப்போரும் இல்லை: எல்லாம்வல்ல ஈஸ்வரனும் வேடிக்கை பார்த்துக்கொண்டுதான் இருப்பாரோ?.

பிரிட்டிஷ் ஏகாதிபத்திய கவர்ன்மெண்டார் முன்னொரு முறை போயர்களுடன் யுத்தம் செய்தபொழுது, இந்தியர்களைச் சரியாக நடத்தவில்லை என்ற காரணமும் அந்தயுத்தத்திற்கு ஒன்றாகும். அப்பொழுது இந்தியர்கள் இவ்வளவு கொடுமையாக நடத்தப்படவில்லை. கொடுமை அதிகரித்திருக்கும் இந்நாட்களில் பிரிட்டிஷார் சும்மாவிருப்பது இந்தியர்களுடைய விசனத்தை அதிகரிக்கிறது. பிரிட்டிஷாருடைய புஜவலிமையினாலேயே இந்தியர்கள் சுகமடையவேண்டும் என்று நம்புகிறோம்.

* * * *

மிஸஸ் அன்னி பெஸண்டு தான் 'பிரிவி கௌன்சி'லுக்கு அப்பீல் செய்துகொள்ள உத்தரவு தரவேண்டுமென்று ஹைகோர்ட்டில் ஒரு மனுச்செய்து கொண்டனர். அங்ஙனமே உத்தரவு கொடுக்கப்பட்டு விட்டது. ஹைக்கோர்ட்டு அப்பீல்தீர்மானத்தை அநுபவத்தில் கொண்டுவராமல் நிறுத்திவைக்கும் பொருட்டு இன்னுமொரு மனுச்செய்து கொண்டார். ஆனால் இந்தமனுதள்ளி

ப்பட்டது. இவருடைய அப்பீல்களைப் பற்றி நமக்கு வெளியிட வேண்டிய சில அபிப்பிராயங்கள் இருக்கின்றன. இது தக்கசந்தர்ப்பமன்றென்று கருதி அவற்றை வெளியிடாது நிறுத்திவைக்கின்றோம்.

*                *                *                *

ஆரணி ஜாகீர்தாரவர்களை சென்னை மாநகர் ஸெண்ட்ரல் ஸ்டேஷன் "ப்ளாட்பார"த்தில் கிப்ஸன் என்னும் ஒருதுரை அடித்து உதைத்து இம்ஸித்து விட்டார். காரணம்:-ஜாகீர்தாரும் கிப்ஸன் துரையும் ஒரேமார்க்கமாய் மோட்டார்வண்டியில்வர, கிப்ஸன் துரையின் மோட்டார் வண்டியைப்பார்க்கிலும் வேகமாகத்தமது மோட்டார்வண்டியைச் செலுத்தி முன்சென்றார்என்பதே. ஐரோப்பியர்கள் இந்தியர்களை மிகச்சிறிய காரணங்களுக்காகக் கூட அடிப்பதும் உதைப்பதும் வழக்கமாய் விட்டது. லார்ட்கார்மிகேல் சென்னையில் கவர்னராயிருந்த பொழுது ஒருசமயம் கௌரவ ஸ்ரீ கேசவபிள்ளை யவர்களிடம் பேசிக் கொண்டிருக்கையில் "ஒரு இந்தியனைத் துன்பப்படுத்தத் துணியும் ஒரு ஐரோப்பியனைப்பார்க்க விரும்புகிறேன்" என்று சொன்னாராம். லார்ட் பெண்ட்லாண்டும் இம்மாதிரியாக ஐரோப்பியர்கள் இந்தியர்களை அடித்து இம்சிப்பதைச் சகியார் என்றே நம்புகிறோம். ஜாகீர்தார் மாஜிஸ்டிரேட் கோர்ட்டில் மேற்படி கிப்ஸன் துரையின் நடத்தையைப் பற்றிப் பிரியாது செய்ய, கேஸ் நன்றாக ருசுவாகிய போதிலும் மாஜிஸ்டிரேட் கிப்ஸன் துரைக்கு ஐம்பது ரூபாயே அபராதம் விதித்துள்ளார். இது ஆச்சரியமாயிருக்கிறது. இதேமாதிரி ஒரு இந்தியன் அந்தஸ்து வாய்ந்ததோர் ஐரோப்பியனை அடித்திருந்தால், ஐம்பது ரூபாய் கொடுத்துவிட்டு இந்தியன் தப்பித்து விடுவானா? மாஜிஸ்டிரேட்டு அவனைஐம்பது ரூபாய் வாங்கிக் கொண்டு விட்டு விடுவாரா? நமதுசென்னைக் கவர்ன்மெண்டார் இப்பிரியாதைப்பற்றி யுள்ள ரிக்கார்டுகளைவரவழைத்துப் பரிசோதனை செய்து இனிமேல் இத்தகைய அக்கிரமங்கள் ஐரோப்பியர்களால் நடக்காவண்ணம் கிப்ஸன் துரைக்குத்தக்கபாடம் கற்பிப்பார்களென்று நம்புகிறோம்.

[illegible] மொழிபெயர்த்தது.

[illegible] நீங்களே [illegible] வேண்டு மென்று [illegible] குழந்தைகளைப்போல என் கடக் [illegible] யாரேனும் [illegible] மதத்தை எதிர்த்தால், [illegible] அதை சகித்துக் கொள்ளக்கூடாது? என் விஷயத் [illegible] நீங்கள் பயப்பட வேண்டாம்; [illegible] [illegible] இந்துக்களுக்கு மிகுந்த [illegible]; [illegible] நேரத்தில் மூன்றில் ஒருபாகம் [illegible]; [illegible] [illegible] பாதிரிகளைப்பற்றிக் கவனிக்கின்றனர். [illegible] பாதிரிகள் எதற்காவது விரோதமாயிருந்தால், அதுவே படித் [illegible] ப்ரியமாயிருக்கிறது. இப்பொழுது அவர்களுடைய (பாதிரிகளுடைய) செல்வாக்கு இந்து குறைந்திருக்கிறது. நான் [illegible] கொஞ்சம் கொஞ்சமாகக் குறைந்து கொண்டே வரு [illegible] அவர்களுடைய [illegible] [illegible] தெரியப்படுத்த [illegible]? ... ... [illegible]

[illegible] இப்பொழுதே எனக்குச் சிஷ்யர்கள் அதிகரித்துவிட் [illegible] [illegible] [illegible] இருக்கிறார்; [illegible] [illegible] முயற்சியைப்பற்றி [illegible] [illegible] [illegible] உங்களைப்பரிசுகிக்கிறேன்; நீங்கள் [illegible] [illegible] இருக்கிறீர்கள் ... ... [illegible] முடிந்த [illegible] ஸ்வாமி [illegible]!!



மே நிறைந்துள்ளது என்று எனக்குத் தெரியும். ஆதலால் முறு முறுக்காதீர்கள். அந்த வேலை செய்வதற்கு வேண்டிய சாமக்கிரியை களை நான் சம்பாதிக்கவேண்டியிருக்கிறது. மித்ரர்களுடைய கை களுக்குள் நான் அகப்பட்டுக் கொள்வதில்லை. நீங்கள் அதிகமாகக் கஷ்டப் படவேண்டாம்; உங்களாலானது சொற்பமாயினும் அதைச் செய்யுங்கள். உச்சியிலிருந்து கீழ்வரையில் நான் தனியே வேலை செய்யவேண்டியிருக்கிறது.........“இந்த ஆத்மவஸ்து வீரமற்ற வர்களால் அடையப்பட்டதன்று”. என்னைப்பற்றி நீங்கள் பயப்பட வேண்டாம். என்னுடன் ஈஸ்வரன் இருக்கிறார்; நீங்கள் உங்களைத் தற்காத்துக் கொண்டு, அப்படிச் செய்யமுடியும் என்று எனக்குக் காண்பியுங்கள், நான் திருப்தியடைவேன். என்னைப்பற்றி யாவர் என்ன சொன்னபோதிலும், இனிமேல் எனக்குத் தெரியப்படுத்த வேண்டாம். எந்த மூடனுடைய என்னைப்பற்றிய [illegible] அபிப்பிராயத்தை நான் கேட்பதற்குக் காத்துக் கொண்டிருக்க வில்லை. ஏ, குழந்தைகளே! ஒப்பற்ற பொறுமையினாலும் மனோ தைரியத்தினாலும் பெருமுயற்சியினாலுமே பெரும் காரியங்கள் அடையப்படுகின்றன........ [illegible] அடக்கம் [illegible] கொண்டிருக்கிறதென்று நான் நினைக்கிறேன்.

# சத்திய மார்க்கம். *

## ஸ்ரீமான் சிவசுப்பிரமணியம் அவர்கள் மொழிபெயர்த்தது.

மேல் நாட்டாருக்கு இது ஓர் வித அர்த்தத்தைக் கொடுக்லாம். ஆனால் வேதாந்த நிலைமையிலிருந்து கவனித்தால் 'சத்யமார்க்கம்' என்னும் இத்தலைப்பு ஓர் தப்பிதமான தலைப்பாகும். சத்தியத்துக்கு மார்க்கம் என்பது எதிரிடையான பதங்க பொருந்தியது. சத்தியம் தூரத்திலில்லை; அங்ஙனமாக, அற்கு ஓர் மார்க்கம் எங்ஙனம் இருத்தல் கூடும்? சத்தியம் உன்னுடன் இதற்கு முன்பே உளது. அது முன்னரே உனது ஆத்மவாயிருக்கிறது. முன்னரே நீ அதில் இருக்கிறாய், அல்ல, அது வாகவே யிருக்கிறாய். நீ அது தான். நினது தெய்விக தன்மையின் அநுபவம், தெய்வானுபூதி, செய்து முடிக்கும் பயான ஒரு வஸ்துவல்ல, செய்யவேண்டிய ஓர் வஸ்துவல்ல. அது முன்னரே உள்ளது. முன்னரே நீ அது வாயிருக்கிறாய். உன்னை சிறைப்படுத்தியுள்ள ஆசைகளாகிய கூண்டை நீ நசிப்பித்தலே நீ செய்துள்ளனவற்றை அழித்தலே, நீ செய்யவேண்டியது உண்மையாய் பிரமானுபவம் அடைவதற்கு நீ செய்யவேண்டியது ஒன்றும் இல்லை. நினது காராக்கிரகத்தை நீயே கட்டிக் கொள்வதற்கு நீ செய்திருப்பவற்றை அழித்து விடு. அழித்து விட்டால் போதும், மற்றொன்றும் தேவையில்லை. நீ முன்னரே ஈச்வரனாயிருக்கிறாய். நீ சத்தியவஸ்து வாயிருக்கிறாய். இப்பொழுது சத்தியமார்க்கத்தைப் பற்றிக் கூறுங்கால், கர்மநாசதந்திரத்தைப்பற்றி வியவகரிப்போம். நினது வலைகளை அழிப்பதற்குச் சிறிது பிரயாசை அவசியமாயுளது. உன்னை பந்தப் படுத்துகிற இவ்வலைகளும், இவ்விலங்குகளும், இப்பாசங்களும் எவை? இன்று நினது செவிகள் ஆனந்திக்கினும் அல்லாவிடினும், அமெரிக்கர்களும் யூரோப்பியர்களும் இவ்வாக்கியாலங்காரத்தை கவனிக்கினும் அல்லாவிடினும் உண்மை எக்காலத்தும் ஒரே மாதிரியாய் நிலை பெற்றுளது. உண்மை யென்னவெனில், நினது சகலவிதபற்றுதல்கள், அன்பு, பகை, ஆசைகள், இவைகள் அனைத்துமே பாசங்களும் விலங்குகளுமாகி உன்னை ஈஸ்வர தர்சனம் செய்ய விடுகிறதில்லை. இவைகளே நினது சிறைச்சாலையாகும். நினது அவாக்களே நின்னை பந்தப்படுத்துகின்றன. நீ ஒரே காலத்தில்

* ஸ்ரீராம தீர்த்த ஸ்வாமிகள் அமெரிக்காவில் செய்த ஒரு பிரசங்கம்.



தன தேவதை, ஈஸ்வரன் எனப்பட்ட இரண்டு எஜமானர்களுக்கும் வேலை செய்ய முடியாது. நீ மாமிசக் கூற்றுக்கு அடிமையாயிருந்து கொண்டு அதேசமயத்தில் பிரபஞ்சத்திற்கு எஜமானனாகவும் முடியாது. சத்தியானுபவமென்பது பிரபஞ்சத்தின் பிரபுத் தன்மையே யாகும். ஆசையனுபவம் என்பது பந்தத்தையும் தாழ்வையும் அடிமைத்தனத்தையும் இவ்வுலகவஸ்துக் களையும் ஒப்புக் கொள்ளுதலாம். ஒவ்வொருவரும் சத்தியானுபவத்தை யுடைய கிறிஸ்துவாகவும் தீர்க்கதர்சிகளாகவும் விரும்புகிறார்கள்; ஆனால் மிகவும் சிலரே—அங்ஙனம் எவரேனும் உளரேல்—விலையளிக்கத் தக்கத் தயாராயிருக்கின்றனர்.

இந்தியா தேயத்தில் சரீரப் பயிற்சியில் கைதேர்ந்த ஓர் பிரசித்தி பெற்ற மல்லன் இருந்தனன். அவன் தனக்கு பச்சை குத்தித் தனது கைகளில் ஓர் சிங்கத்தின் உருவம் வரையும் படியாக ஓர் நாவிதனிடத்திற்கு வந்து அங்ஙனம் செய்யும் படியாக அந்த நாவிதனை வேண்டிக் கொண்டான். அவன் தான் சிம்மராசியில் பிறந்திருப்பதால் சிங்கத்தைப் போன்ற தைரிய முடையவனென்று எல்லாரும் நினைத்திருப்பதாகவும் கூறினன். நாவிதன் அவனுக்குப் பச்சைகுத்தி சித்திரம் எழுதும்படி ஊசியை யெடுத்து சிறிது குத்தினமாத்திரத்தில் அவனால் சகிக்கக் கூடவில்லை. அவன் பெருமூச்சுவிடத் துவக்கி, மிகவும் மூச்சுத்திணறி, நாவிதனைப்பார்த்து, "நில்லு, நில்லு, நீ என்ன செய்யப் போகிறாய்" என்று கேட்டான். நாவிதன், சிங்கத்தின் வாலைவரையப் போவதாய் கூறினன். அம்மனிதனுக்கு உண்மையாய் ஊசி குத்துவதாலுண்டாகும் உபத்திரவத்தை பொறுக்கமுடியவில்லை. ஆயினும் அவன் ஓர்விதப் பாவனை செய்து கொண்டு கூறினதாவது, "நாகரீக ஜனங்கள் அவர்களின், குதிரைகளின் வால்களை வெட்டி விடுவதை நீ அறியாயோ? ஆகையால் வாலில்லாச் சிங்கமும் மிகவும்பலம் பொருந்தியதாயிருக்கும். நீ சிங்கத்தின் வாலை ஏன் வரைகிறாய்? வால் அவசிய மில்லை." "நல்லது நான் வாலை வரையவில்லை; சிங்கத்தின் மற்ற பாகங்களை வரைகிறேன்" என்று விட்டு நாவிதன் மறுபடியும் ஊசியை எடுத்து அவனது தோலில் குத்தத் துவக்கினான். இதுவும் அவனால் பொறுக்க முடியவில்லை; சிறிது கோபித்துக்கொண்டு நாவிதனைப்பார்த்து அவன் நீ என்ன செய்யப் போகிறாய் என்று கேட்டான். "நான் சிங்கத்

தின் செவியை வரையப்போகிறேன்" என்றனன் நாவிதன். அம்மனிதன் மறுபடியும் சொன்னதாவது, "ஏ, நாவிதா, நீ மிகவும் மூடன். ஜனங்கள் அவர்களது நாய்களின் செவிகளை அறுத்துவிடுவதை நீ அறியாயோ? நாய்களை நீண்ட செவிகளுடன் உலவவிட [illegible] செவியில்லாச் சிங்கம் பெரிய சிங்கமென்பதை நீ அறியாயோ?" நாவிதன் சிறிதும் கோபம் [illegible] மறுபடியும் [illegible] அவனுடைய தோளில் குத்தத் துவங்கினான். அவன் அதைச் சகிக்கமுடியாமல் சிறிது கோபக்குறி காட்டி, 'நாவிதா' இப்பொழுது நீ என்ன செய்யப் போகிறாய்" என்று கேட்டான். நாவிதன் "நான் இப்பொழுது சிங்கத்தின் இடையை வரையப் போகிறேன்" என்றனன். அப்பொழுது அம்மனிதன் "நீ [illegible] பார்த்ததில்லை போலும் [illegible] இடையையுடையன சிங்கங்கள் என்று நமது இதிகாசங்கள் வர்ணித்திருப்பதை நீ படித்ததில்லையோ? ஆகையால் சிங்கத்தின் இடையை வரையவேண்டியதில்லை" என்றனன். நாவிதன் [illegible] உருவம் [illegible] வரையாமல் [illegible]

இவன் தான் சிம்மராசியில் பிறக்காத [illegible]! இவன் சிரேஷ்டமான சரீர பயிற்சியையுடைய ஓர் பேர்பெற்ற மல்லன்! இவன் தனக்கு சிங்கம் என்று பெயர் தரித்துக் கொண்டிருக்கிறான்! இவன் தனது சரீரம் முழுவதிலும் சிங்க உருவங்களை [illegible] விரும்புகிறான், ஆனால் இவ்வளவு சாமர்த்தியமுடைய இவன் ஊசிகுத்தல் சகிக்க மாட்டான். மனிதர் இவனைப்போலவே இருக்கின்றனர். பகவத் தரிசனம் செய்யவும் வேதாந்தத்தை அனுபவத்தில் கொண்டுவரவும் இச்சிக்கின்றனர். இதைப்போலவே பரிபூரண சத்தியத்தை அறியவும் [illegible] விரும்புகின்றனர். ஆனால் [illegible] ஆத்மாக்களில் எழுதத் தொடங்கின [illegible] அவர்கள் [illegible] அப்பொழுது அவர்கள் [illegible]



கிறார்கள்; நான் விலை கொடுக்க மாட்டேன்; ஆனால் அந்த பொருள் எனக்கு வேண்டும். நீ சத்தியத்தை அடையவேண்டின், நீ பிரமாநுபூதியை அடையவேண்டின் உனக்கு மிகவும் அருமையாயுள்ள ஆவசியகங்களும் ஆசைகளும் மேன்மேலும் குத்தப்படும். நினது இன்றியமையாதவைகளும் அருமையாயுள்ள பற்றுதல்களும் நீக்கப்படவேண்டும். நினது பிரியமாயுள்ள [illegible] நினது சரீரத்திலிருந்து பிரிக்கப்பட்டுக் களையப்படவேண்டும். இழிவுபடுத்துகிறதும் தாழ்வுபடுத்துகிறதும் இச்சையைக் கொடுக்கிறதுமான [illegible] நீ வேறுபட்டு [illegible] வேண்டும். நீ உன்னைத்தானே பரிசுத்தப்படுத்திக் கொள்ளவேண்டும். விலைகொடுக்காமல் நீ கடவுளையடைய முடியாது, உனக்கு ஸ்வயமேயுள்ள ஸ்வதந்திரத்தை நீ திரும்பவும் அடையமுடியாது. இருதய சுத்தமுள்ளவர்கள் பாக்கியவான்கள், ஏனென்றால் அவர்கள் ஈஸ்வரனை தரிசிப்பார்கள். இருதய சுத்தமென்றால் என்ன? இருதய சுத்தமென்றால் [illegible] பாவங்களினின்றும் விலகியிருத்தல் என்று மாத்திரம் அன்று; அதுவும் அதற்கு அர்த்தம்தான்; ஆனால் இன்னும் விஸ்தாரமான கருத்துக்கள் அடங்கியிருக்கின்றன. இவ்வார்த்தைகள் இன்று உனக்கு [illegible] இல்லாவிடினும் ஓர் [illegible] இருக்கும். [illegible] நேரத்திற்கு வரவேண்டியதுதான். அந்த நேரம் யாதெனில்: உன் [illegible] ஆகட்டும், உன் [illegible] மனைவியோ, மாதாவோ, குழந்தைபோ எதினிடத்திலேனும் எவர்களிடத்திலேனும் இருக்கப்பட்ட [illegible], சத்தியானுபவத்தில் இச்சையுள்ள ஓர் புருஷன் [illegible] பரிபூரணத்தை அடைய விரும்பு [illegible]

(தொடரும்)

# அகஸ்தீன் எனும் மகாத்மாவின்
## விண்ணப்பம்.

அகஸ்தீன் என்பவன் கத்தோலிக் கிறிஸ்தவ மதக் குரவர்களுள் மிகக்கியாதி பெற்றவன். அவன் சாலிவாகன சகம் ௨௭௬-ல் தகாஸ்தே என்னும் ஊரில்பிறந்து சிறுவயதிலேயே கல்விப்பேறு மிகவும் பெற்று மகா பண்டிதனாய் விளங்கினான். ஆனால் கல்வியிற் சிறந்த எத்தனையோ பண்டிதர்களைப்போலவே தெய்வ பக்தியில்லாமலும் சர்மத்தில் பற்றில்லாமலும் இருந்துவந்தான். அவன் தாயான மோனிகா அவனுக்கு சரியான ஈசுவர பக்தியும் ஞானமும் உண்டாகவேண்டுமென்று அவனுக்கநேகநேர புத்திமதிகள், ஸத்கதைகள் சொல்லியும், தனக்கு பழக்கமான பாகவதர்கள் ஞானியர்களிடம் சொல்லி அவர்கள் மூலமாகச் சொல்லுவித்தும், தனியே கண்ணீர்விட்டு ஈஸ்வரனைப் பிரார்த்தித்தும்வந்தாள். கடைசியில் அவனுடைய ௩௩ வது வயதில் அவன்புத்தி திரும்பி அவர்கள் மதக்கொள்கைப்படி அம்பிரோஸ் என்னும் குருவினிடம் ஞானஸ்நாநம் பெற்றான். மோநிகாவின் எண்ணம் நிறைவேறிவிட்டது. தான் இதற்காகத்தான் உயிர்வைத்திருந்தாள் என்னும்படியாக புத்திரன் ஞானஸ்நாநம் பெற்ற சில நாட்களுக்கெல்லாம் அவள் புண்ணியாத்துமாக்கள் சேரும் உலகத்தைச் சேர்ந்துவிட்டாள். அகஸ்தீனும் அவளுக்குப்பிறகு மூன்று வருஷம் ஏகாந்தமாக நிஷ்டையிலிருந்துவிட்டான். கடைசியில் அவனுடைய ௩௬ வது வயதில் ஹிப்போ என்னும் நகருக்கு பிஷப்பாக நியமனம்பெற்று ௩௫ வருஷம் அந்தஸ்தானத்தை வகித்து தன்னுடைய ௭௬ வயதில் காலம் சென்றான்.

ஈசுவர சந்நிதானத்தில் தன்னுடைய சரித்திரத்தைச் சொல்லுகிற பாவமாக இந்த விண்ணப்பம் எழுதப்பட்டுளது. இது மிகவும் அற்புதமான புத்தகம். பக்தியோகம் ஞானயோகம் இரண்டிலும் கரைகாணாதவன் இதை எழுதி யிருக்க முடியாது. இதன் பொருளும் நடையும் மகா காவியங்களின் உந்நத ஸ்தானத்தைப் போய்த் தொடுகின்றன. எந்த மதத்தினரேனும் சரி, எந்தக் கொள்கையரேனும்சரி உண்மையான ஆத்தும ஞானத்தைப் பெற்றால் அவர்கள் பேசுவது ஒரேபாஷை, பாடுவது ஒரேகானம், நிற்பது ஒரேநிலை, இந்த ஸத்தியத்தை இந்த மகானுடைய விண்ணப்



பம் நன்று எடுத்துக்காட்டுகிறது. லதீன் பாஷையில் எழுதப்பட்ட இந்த ஆரிய கிரந்தத்தை ஆங்கிலத்திலிருந்து நம்மவர்க்காக தமிழில் பெயர்த்தெழுதலானோம்.

### புத்தகம். க.

ஏ, பிரபு, நீயாரினும் பேரியன், பெரும்புகழ்க் குரியன். நின் வல்லமைபெரிது. நீ அறிவின் பெருங்கடல். * நின்னை யன்றோ மனிதன் புகழ விரும்புகிறான். அவன் எத்தனை? நின் சிருஷ்டியில் ஓர் அணுவினும் சிறியவன்—தன் பாபத்துக்கும் நின் துஷ்ட நிக்ரகத்துக்கும் அத்தாக்ஷியாக நசுவரத்தன்மையை உடைபோலதரித்தவன். அப்படியிருந்தும் நின்னைத் துதிக்க விரும்புகிறான். நின் சிருஷ்டியில் லேசத்திலும் லேசமாகிற அவன்! நின் துதியில் மகிழ வென்றே எமக்கு நீ சைதன்னியம் அருள்கிறாய்; ஏனெனில் நினக்காகவே யன்றோ எம்மைப் படைத்தனை! நின்னுள் லயப்படும் வரையில் எம் மனம் குழம்பிக்கொண்டேயன்றோ இருக்கிறது. ஏ, பிரபு! இதை அறிய எனக்கு அருள்செய். எவ்விதம் ஆரம்பித்தால்தகும்? நின்னைத் திருநாமம் சொல்லி அழைத்தா? நின்னைத் துதித்தா? அல்லது நின்னை அறிவினில் அறிந்தா, நின்னை அழைத்தா? ஏனெனில், நின்னை அறியாமல் நின்னை அழைப்பதெவ்வணம்? நின்னை அறியாதவன் நின்னை வேறு நாமத்தால் அழைப்பனன்றோ? அல்லது இவ்விதமோ? நின்னை அறிவதற்கென்றே தான் நின்னை அழைக்கின்றோமோ? ஆனால் நம்பிக்கைஇல்லாதவர் கடவுளை எவ்விதம் அழைப்பார். ஆப்தவாக்கியமின்றி எவ்விதம் நம்புவார்? தனிப்பிரபுவை நாடுவோர் துதிசெய்க. ஏனெனில், தேடுவோர் அவனைக் காண்பர், அவனைக் காண்போர் துதிப்பர். பிரபு! நின் நாமம் சொல்லி அழைத்து நின்னை நாடுவேன். நின்பேரில் விசுவாசம்வைத்து நின்னை அழைப்பேன். ஏனெனில் ஆப்தர்கள் நின்னை எமக்கு அறிவித்திருக்கிறார்கள். எனக்கு நீ அருளியிருக்கிற நின் திருமகன் அவதாரம் வாயிலாக, சற்குருவின் உபதேசம் மார்க்கமாக, எனக்குள் நீ புகட்டியிருக்கிற விசுவாசமானது நின் திருநாமத்தைச் சொல்லி நின்னை அழைக்கும்.

என் பிரபுவும் [illegible] கடவுளை நான் எவ்வணம் அழைப்பேன்? அழைக்கும்போது [illegible] அவனை அழைக்கி

* இம்மாதிரி ஆண்டிக் எழுத்துக்களில் வரும் வாக்கியங்கள் பைபிள் வேதத்திலிருந்து அகஸ்தீனால் மேற்கோள் காட்டப்பட்டவை.

றேன். என் ஈசன் பிரவேசிக்க என் உள்ளே இடம் எங்கே? ஆகாயத்தையும் பூமியையும் ஆக்கிய ஈசன் என்னுள்ளே எங்குவருவன்? இருக்கட்டும். என்பிரபுவே, என் ஈச, நின்னைக் கொள்ளக்கூடியது ஏதும் என்னுள் உண்டோ? நீபடைத்த ஆகாயமும் பூமியுந்தான் உன்னைக் கொள்ளுகின்றனவோ? கொள்ளாதாம்போது. அந்தபுவனத்தின்கண் ஏதோ ஒரு மூலையில் வைக்கப்பட்ட என்னுடைய உள்ளமா கொள்ளப்போகிறது? அல்லது உளதெனச் சொல்லும் எதுவும் நீயன்றி உளதாகாதாகையால் உளது ஒவ்வொன்றும் நின்னைக் கொள்ளா நிற்குமோ? அவ்விதமானால் நானும் உளேனான போது நீயன்றி உளனலா என்னுள் நின்னை வருவிக்க ஏன் முயல்கிறேன்? நான் நரகத்துக் கப்புறம் இருக்கிறேன்; அதுதான் காரணம். ஆனால் அங்குதான் நீ யில்லையோ அங்கும் இருக்கிறாய்? நரகத்திற்கு நான் போனாலும் அங்கும் நீ உளை ஆதலின் என் ஈச, நீ என்னுள் இலையேல் நான் உளேன் ஆகேன். ஆகவே ஆகேன். அல்லது இவ்விதமோ? எவன்சகமனைத்துக்கும் உற்பத்தியோ, எவன் சகமனைத்துக்கும் கர்த்தாவே, எவன் சகமனைத்துக்கும் ஆசிரயமோ அவ்வனைய நின்னுள் நான் இலேனேல் நான் உளேனாவேன்; அதுதான் சத்தியம். பிரபு! அதுதான் சத்தியம். ஆனால் நின்னுளேயே நான் இருக்க நின்னை எங்கு அழைப்பேன்? எங்கு நின்று நீ என்னுள் புகுவாய்? அண்டபகிரண்டமும் அடங்கநிறைகின்றேன் என்று அருளியிருக்கும் நீ அவைநின்று என்னுள் வந்து புகுவதற்கு அவைகட்குப் புறத்தில் நான் எங்கு போகலாகும்.?

நீ அண்டபகிரண்டங்களை நிரப்புகிறாயே. அதனால் அவை நின்னை முற்றிலும் அடக்கி விடுகின்றனவா? அவைநின்னை அடக்கவில்லையானபோது அவைகளை நிறைத்து மேலேயும் பெருகுகின்றனையோ? அண்டபகிரண்டங்கள் நிறைந்தபின் நின் மிகுதியை எங்குவார்க்கிறாய்? அல்லது, நின்னுள் அடக்கியே தான் பொருட்களை நிரப்புகிறாயாதலின், சகலத்துக்கும் ஆசிரயமான நினக்கு ஆசிரயமே அனாவசியமன்றோ? ஏனெனில் நீ நிரப்பும் பாண்டங்கள் நின்னைக் கொள்ளவுமில்லை, அவை உடைந்தாலும் நீசிந்தினை அல்லையாதலால். நீ எம்மீது பெருகும் போது நீ தாழ்கின்றனையல்லை, எம்மை உயர்த்துகின்றனை. நீ சிதறுகின்றனை அல்லை, எம்மை கூட்டுகின்றனை, நின்பக்கல் சேர்க்கின்றனை. தவிர, சகலத்தையும் நிறைக்கும் நீ நின் சமக்கிர சரீரத்தாலுமா அவைகளை நிறைக்கிறாய்? அல்லது பொருள்கள் அனைத்தும் கூடநின் சமக்கிரத்தைக் கொள்ளாவாதலின் நின் கண்டத்தைத்தான் கொள்ளுகின்றனவா? எல்லாப் பொருள்களும் அதே வேளையில் அதே கண்டத்தையா, அல்லது பெரியவை பெரிய கண்டங்களையும் சிறியவை அவைக்கேற்றவையுமாக தனித்தனியே கொள்ளுகின்றனவா? அப்படியானால்நின் ஒரு கண்டம் பெரிதும் மற்றொன்று சிறிதுமாக இருக்கிறதா? அல்லது நின்னை பூரணமாக எதுவும் கொள்ளாதாக, நீ பூரணமாகவேதான் எங்கும் உளையா.?



அப்படியானால் என் ஈச! நீயாவன்? லோகநாதனான ஈசனன்றி வேறல்லன் நீ. ஏனெனில், பிரபுவன்றி பிரபு வேறெவன்? நம் ஈசனன்றிஈசன் வேறெவன்? நீயாரினும் உயர்ந்தவன், யாரினும் நன்மையன், வல்லமையில் மிக்கவன், சருவசக்தன்; கிருபாசாகரன், ஆனால் நீதியைக்கடவாதவன், எங்கும்விசதன், அழகின்மிக்கவன், வலியினும் மிக்கவன். ஸ்தாணு, ஆனால் அறிவிற்கு அகோசரன் அவிகாரியன், ஆனால் சகல விகாரகர்த்தா, என்றும் புராணன், என்றும் நவநவன், சகலத்தையும் புதுப்பிப்பவன் ஆனால்செருக்கர்களுக் குழப்பைச் செய்வான், அவர்கள் அதை அறியார்: சதாகர்த்தா, சதா அகர்த்தா; வேண்டுதலிலான் நீ; ஆனால் சதாசேகரிக்கிறாய் சகலத்தையும் தாங்குவாய், நிறைப்பாய், வியாபிப்பாய், படைப்பாய், வளர்ப்பாய், பரிணமிக்கச்செய்வாய், எல்லா மிருந்தும எல்லாந்தேடு நின்னிடம் பேரன்பு உளது. ஆனால்ராகமில்லை. மனிதன்பாபத்தை சகிக்கமாட்டாய், ஆனால் நின்னிடம் கொதிப்பு இல்லை; கோபாவேசத்துடன் விளங்குகிறாய், ஆனால் மல ரகிதனாயிருக்கிறாய். பச்சாத்தாபப் படுகிறாய் * ஆனால் துக்கிப்பதில்லை: நின்

---

* உலகத்தில் பாபம் விருத்தியானதைக் குறித்து யஹோவா மனிதனை ஏன்படைத்தோம் என்று பச்சாத்தாபப்பட்டதாக கிறிஸ்தவ வேதத்தில் ஒரு கதை உண்டு.

ஆ, நின்மடியில் சேபோல படுத்து இளைப்பாற மாட்டேனா? என்துக்கங்களை மறந்து என்தனி நலமான நின்னை நான் ஆலிங்கனம் செய்யும்பொருட்டு நீ என் இதயத்தில் புகுந்து அதில் ஒரு போதையை ஏற்றமாட்டாயா? எனக்கு நீ என்ன ஆகிறாய்? அதை உரைக்க நின்கருணை எனக்குஅருள் செய்யட்டும். அல்லது நான்தான் நினக்கு என்ன ஆகவேண்டும்? என் பக்தியை விரும்புகிறாய், நான்பக்தி செலுத்தாவிடில் சினந்து கொடியதண்டனைகள் விதிக்கிறாய்! ஆனால் நின்பேரில் ஆர்வமில்லாவிடில் அதுசாதாரணதுக்கமோ? ஓ பிரபு, என் ஈச, நின்பெருங்கருணையால் எனக்கு உரை

சிருஷ்டிகளை மாற்றுவாய், நின்சங்கற்பம் மாறுகிறதில்லை. அக
பட்ட பொருள்களை திரும்பப் பெறுகிறாய், ஆனால் நீ இழந்
தில்லை, நினக்கு வேண்டுதலேயில்லை, ஆனால்லாபத்தை விரும்
கிறாய்; உலோபமில்லை, ஆனால் வட்டி வாங்குவாய் நின்மேரி
ருணமிருக்கவேணும் என்று அதிகமாகப்பெற்றுக்கொள்ளுகிறாய்
நினதல்லாத எப்பொருள் எவனிடமுளது? நீருணாஜிதன், ஆன
ருணங்களை செலுத்துகிறாய்; ருணங்களை மன்னித்து விடுகிறாய்
ஆனால் அதனால் நின்செல்வம் குறைபடவில்லை.

இவ்விதம் துதித்ததில் என்ன பிரமாதமாய்ப் போற்றிவிட
டேன் நின்னை, என் ராச, என் உயிரே!

---

நினக்கு என்ன ஆகிறாய்? "நின்கைவல்லியம் நான்" என்று என்னாத்ம
வினுள் புகுந்து உரை. என்காது கேட்கச் சொல்லு. இதோ இருக்கிறதென
இதயம். அதைதிறந்து 'நின்மோக்ஷம் நான்,' என்று என் ஆத்மாவிட
சொல்லு. அந்தசாதத்தின் திசைநோக்கி ஓடி நின்னை அடைவேன். நி
முகத்தை எனக்கு மறைத்துவிடாதே. நான் மாளினும் மாளுக—ஆனால் ம
ளாமைக்காக - நின்னை மாத்திரம் தரிசித்து விடவேண்டும்.

எனது உள்ளம் சிறிது - அதைப்பெரிது செய்து நீ வாசம் செய்
யோக்யமான தாக்கு. அது சிதிலமாயிருக்கிறது, அதை நீ சீர்க்கவேண
டும். அதில் நினக்கு அருவருப்பைத்தரத்தக்க குணங்கள் அநேகம் உள
எனக்குத் தெரியும்; நானே சொல்லிக் கொள்ளுகிறேன். ஆனால் அதைய
துலக்குவார்? நின்னைவிட்டு யாரிடம் முறையிடுவேன்? பிரபு, என்னுள
ளிருக்கும் பாபங்களினின்றும் என்னைவிடுவி. நின் அடிமையை பகைவ
வசமாகாமல் காத்தல்செய். என்விசுவாசம் என்னைப்பேசச்செய்கிறது
பிரபு, நினக்குத் தெரியும். என் அபராதங்களை நானே நின்னிடம் சொ
லிக்கொள்ளவில்லையா? நீயும் என் சித்தத்தினுள்ளேயுள்ளபாபத்தை
மறைத்து விடவில்லையா? சத்தியமே உருவான நின்சந்நிதானத்தில்நா
சட்டம்பேசவில்லை. அப்படிசெய்தால் என்தலையில் நானே மண்ணைவாரி
போட்டுக் கொள்வோனாவேன். என்பாதகம் அதன்தொழிலைக் காட்
நின்னிடமே பொய் சொல்லிவிடுமன்றோ? ஆகையால் நின்சந்நிதியி
நான் சட்டம் பேசமாட்டேன். ஏனெனில், பிரபு, நீ குற்றங்களை
எண்ணுவதானால் யாரால் தாளும்.?

(இன்னும் வரும்.)

வ. வே. சுப்பிரமணிய அய்யர்.

எனிக்மா என்னும் உலகப்பிரஸித்திபெற்ற 7 கெம்புகள் பதித்த

கெடியாரங்கள்.




இவை நூதனமாய்த் தயார்செய்து மிகக் குறைந்த விலையில் விற்கும்பொருட்டு வருவித்திருக்கிறோம் சாமான்கள் வெகுசுத்தமாகவும் உறுதியாகவுமிருக்கும். இவை பார்வைக்கு மிக்க உயர்ந்த கெடியாரங்களைப் போல் தோற்றுவதோடு வருஷக்கணக்காய் உழைக்கும் இவ்விந்தியாவில் இதுவேவிற்பனைக்குத் தயாராயுள்ளது. இவை இதரகெடியாரங்களைப்போல் அதிகப் பருமனாகவும் பளுவாகவுமிராமல் லேசாயிருக்கும். தலைசாவியுள்ளதும், ஜெர்மன் சில்வரினால் செய்ததுமானவீவர்கெடியாரம் இதற்கு வினாடி முள்ளும் உண்டு. இதைவாங்கும் ஒவ்வொருவரும்தமதுநண்பர்களுக்கு இக்கெடியாரத்தை வாங்கும்பொருட்டு உற்சாகப்படுத்துவார்களென்பது திண்ணம்.

குறிப்பு:—மேற்படி "எனிக்மா" லீவர் கெடியாரம் ஒன்றுக்கு 8 வருஷ உத்திரவாதப் பத்திரத்துடனும் அழகிய நிக்கின் சில்வர் சங்கிலியுடனும் விலை ரூபாய் 3 - 8 - 0.

"கோமளா கூந்தல் பரிமளத் தைலம்."

5-பலம் அடங்கிய டின் 1-க்கு 0-12-0. மேற்படி மல்லிகைப்பூ எண்ணெய் டின் 1-க்கு 0-12-0. மேற்படி தாழம்பூ டின்-1-க்கு 0-12-0.




இத்தைலத்தை கூந்தல் உற்பத்தி ஸ்தானங்களில் தடவி வாரிக்கொண்டு வந்தால் மிக்க செழிப்பாகவும் கறுப்பு நிறமாகவும் ஆலம்விழுதைப்போல் நீண்டு வளர்வதுந்தவிர செம்பட்டை நரை முதலியவைகளைப் போக்கி மூளைக்கு மிக்க குளிர்ச்சியைத்தந்து அதிகஉஷ்ணத்தினால் கண்களில் நீர்வடிதல் கண்ணெரிச்சல் கண்வெறிவு, கண்புகைச்சல், தலையில் கண்டு முதலியவைகளை வேருடன் நீக்கும் பொருட்டு பல மூலிகைகளினாலும் அநேக வாசனைத் திரவியங்களினாலும், தயார் செய்யப்பட்டிருக்கின்றது. இத்தைலத்தின் குணத்தையும் நறுமணத்தையும் பற்றி புகழாதவரில்லை. இரண்டொரு தடவை இத்தைலத்தை உபயோகித்தவர்க்கே நன்கு விளங்குமேயல்லாது யாமேதற்புகழ்ச்சி செய்வதில் பிரயோசனமில்லை.

எஸ். கே. பாகஷா அண்டுகோ,
நெ. 21-சாட்டான் பெஸார்
பார்க்டவுன் போஸ்டு, சென்னை.

## பாரதன்.

இது மதுரமொழிகளால் கலப நடையில் யாவரும் எளிதிலுண[ரு]மாறு எழுதப்பட்டிருக்கிறது. இந்நூலில் உலக நடைக்குரிய தருமங்களு[ம்] ஆன்ம லாபத்துக்கேற்ற சாதனங்களும் நன்கு விளக்கப்பட் டிருக்கின்றன. இது படிப்பவர் மனத்திற்கு உருக்கமும் இன்னொரு முறை படிக்க வேண்டுமென்கிற உற்சாகமும் தரத்தக்கது. சிறுவர் சிறுமியர் இந்நூலை படித்த லவசியம் என்பது ஒரு முறை படிக்கின் விளங்கும். 0 4 [0]

### வள்ளிபரிணயம்.

இது நவரஸங்களு மமையப் பெற்ற நாடகம். உலகப்பிரஸித்திபெற்ற நாடகபாத்திரராகிய கல்யாணராமய்யர் அவர்கள் எழுதியது. ஸ்ரீ சுப்பிரமணியக்கடவுள் வள்ளிநாய்ச்சியாரைச் சிறையெடுத்த விசித்திர லீலா விநோதம். 0 8 [0]

### தமிழ் நாவல்கள்.

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| சத்தியசீலன் | 0 | 8 | பத்மாசனி | 0 | 10 | மானவிகாக்னிமித்ரம் | 0 | [illegible] |
| பணக்குளம் | 0 | 12 | ஜெயசீலன் | 1 | 0 | | | |
| கீசகன் | 0 | 8 | விஜயசுந்தரம் | 2 | 0 | மதனகாந்தி | 1 | 0 |
| தனபாலன் | 1 | 8 | தார்க்கேசகர்த்தினி | 1 | 0 | புருஷோத்தமன் | 0 | 10 |
| பத்மநாபன் | 0 | 10 | குலசேகரன் | 0 | 8 | மாலிகாபூஷணி | 0 | 10 |
| சீதாராம் | 1 | 0 | போஜசரித்திரம் | 2 | 0 | கன்னிமுத்தம் | 1 | 8 |
| மோகமுத்தாரம் | 0 | 8 | ஸாவித்ரிநாடகம் | 0 | 8 | திரிலோகமோகனாங்கி | 1 | 0 |
| மங்களாம்பாள் | 0 | 8 | ஸ்ரீமதி | 0 | 1½ | | | |
| ஜயலெக்ஷ்மி | 0 | 8 | வனஜாக்ஷி | 0 | 8 | திக்கற்றஇரு குழந்தைகள் | 0 | 12 |
| விஜயலெக்ஷ்மி | 0 | 10 | புத்திமானே பலவான் | 0 | 6 | | | |
| ஜடாவல்லவர் | 1 | 8 | | | | | | |

### நீதிநூல்கள்.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| சங்கரவிஜயம் | 1 | 0 | தாயுமானஸ்வாமி பாடல் | 1 | 0 |
| ஸ்ரீராமகிருஷ்ண பரமஹம்ஸ விஜயம் | 1 | 4 | விவேகாநந்தவிஜயம் | 1 | 0 |
| | | | மெய்ஞ்ஞானபோதம் | 0 | 12 |
| விவேகாநந்தர் ஞானத்திரட்டு 2 பாகமும் | 1 | 0 | விநோதரஸமஞ்சரி | 1 | 2 |
| | | | ஆனந்த ராமாயணம் | 5 | 0 |

யோகினி ஜாலக்கதை Fairy Tales No. 1. 0 4 0

சூதசங்கிதா சாராம்ருத வசனம். விலை ரூபாய் 1 0 0

இப்புத்தகம் இதுவரையில் வசனத்தில் வெளிவந்ததே கிடையாது. இதன்மகிமை யளவுகடந்தது. வேதார்த்தத்தை நன்கு புலப்படுத்தக்கூடியது. மகாபுராணங்களுள் ஒன்றாகிய ஸ்காந்தபுராணத்தின் சங்கிதையாறனுள் ஒன்று.

விலாசம்-ஸ்ரீபாலசுப்பிரமணியன் கம்பெனி,
32, ஹைரோட், திருவல்லிக்கேணி, சென்னை.


## கருணாங்கனை.

ஸ்ரீ. ம. இராஜகோபாலபிள்ளையவர்கள் எழுதியது.

(முன்தொடர்ச்சி)

இத்தன்மையான பெருமைவாய்ந்த புஷ்கலாபுரியை பதினேழாம் நூற்றாண்டின் மத்தியில் பாக்கிய வசத்தாலும், மாயாதேவி யென்னும் மனைவியின் மகிமையாலும், சிதாகர முதலியார் என்னும் சீமானொருவர் அடைந்து அதில் சர்வ சம்பத்துடன், தன் அருமைப்புத்திரனாகிய மனமோகன னோடு வசித்துவரலானார். இக்கனவானுக்கு அத்யந்தப் பிரியரான உணர்வானந்த முதலியாரென்னும் பெரியவ ரொருவரும் அவ்வூரின்கண் குடிபுகுந் திருந்தனர். இப்பெரியவர் தமது நண்பராகிய சிதாகரரிடம் அடிக்கடி வந்து, துன்பப் பிணியைத் தொலைக்கும் இன்பப் பேச்சுகள் எண்ணிறந்தன, என்புருகும்படி அன்புடன் பேசிப்போவது வழக்கம். இங்ஙனம் சிதாகரமுதலியார் சுகமாய்த் தமது வாழ்நாளை விழ்நாளாக்காது கழித்துவந்தனர்.

ஒருநாள், உணர் வாநந்தர், சிதாகரரைக் காணவந்தபோது, சிதாகரருடைய முகம் சந்திரனைக் கண்ட தாமரை போன்று வாட்ட முற்றிருப்பதை யுற்று நோக்கிப் பின்வருமாறு பேசத் தொடங்கினார். 'ஓ என் உயிர்த்துணைவா! இன்று நீ ஒருவாறு மனக் கவலை கொண்டிருப்பதாகக் காண்கிறது; அக்கவலையின், அதன் முகாந்தரத்தை நான் அறியுமாறு வெளியிடுவதன்று; ஒருவரை யொருவர் சிநேகஞ்செய்வது யாதுக்கு? பயனில்லாத வார்த்தைகளைப் பாடிப் பாடிப் பல்லை யிளிப்பதற்கா? ஒரு சபையினிடஞ் சென்ற ஒருவனுக்கு அவனது வஸ்திரம் அவிழ்ந்து நெகிழ்ந்த அவசரத்தில் எவ்விதம் அவன் கையானது உடனே போய் உதவிபுரிந்து அவனை அவமதிப்பு அடையவாறு காக்குமோ அவ்விதம், தோழனுக்கு நேர்ந்த விபத்தைநீக்கிப் பாதுகாப்பதே அறிவாம். "கெடுவது செய்யின் விடுவது கருமம்" என்னும் மதுர மான பாலைகாம் மாக்கும் படி வைத்த மேதாவின் கருத்து தோழமை செய்த பிறகு, ஒருவன் தனது நேசனிடம் பிழையான நேர்ந்தால், அப்பிழையினின்றும் அந்நேசனை கஷ்டமாகிலும் கொண்டேனும் விடுவது சிநேகிதனது கடமை யன்றோல்லவா! ஏனென்றால், ஆராய்ந்து பாராமல் தோழமைசெய்வதுபோல அநர்த்தத்தை [illegible] வேறெதுவும் இல்லை

யென்றும், அப்படி சிநேகித்துவிட்டால், பின்பு எக்காரணத்தையிட்டும் அதற்குக் கேடுதேடாமையே மித்திரார்த்தம் என்றும் நூல்கள் ஓலமிடுகின்றன; "கூடிப்பிரியேல்" என்று நீ படித்தது வீணுக்கா? ஆதலால், நீ ஒன்றுக்கும் அஞ்சாமல் உன்கவலையை என்னிடம் வெளியிடுவாயாக என்று உரைத்துச் சொல்லினர்.

அக்காலை, தட்டி எழுப்பத் திட்டித்துப் பார்ப்பவர் போல சிதாகரர், அப்பெரியவரை ஏற இறங்கப் பார்த்து, "சுவாமிகளே! எழுந்தருளவேண்டும்; தேவரது திருவரவை அடியேன் அலக்ஷியஞ்செய்ததாகத் தேவர் அபிப்பிராயப் பட்டால், அதுபற்றி அடியேனை க்ஷமித்தருள வேண்டும்; என்னவோ இன்று என்னையும் அறியாமல், நான்கொண்ட கவலையொன்றினிடமே என் பஞ்ச அறிவுங் கொஞ்சியிருந்து, பார்த்தும்பாராதனவாய்க், கேட்டுங் கேளாதனவாய், "ஐந்தும்பேரறிவுங் கண்களே கொள்ள" என்று ஆநந்தத்தில் மூழ்கிய அடியரொருவர் மொழிந்த அநுபவத்தைத், தாமும் மேற்கொண்டதாகப் பிரமித்திருந்தமையே, தேவருடைய நல்வரவின் அங்கீகாரத்தைச் சிறிது தாழ்த்தியதற்கு அடியாகலாம்; பெரிதும் க்ஷமித்தருளவேண்டும்; தேவரைத்தரிசிக்கப்பெற்ற அடியேன், புயலைக் கண்ட மயிலானேன்; கொண்ட மகிழ்ச்சியை விண்டுரைக்கும் வல்லமை இழந்தேன்; பல சொல்லுவானேன். எவ்வாறு திருவாழியைக் கண்ட சேயிழை பொருந்தி, இழந்த மாணிக்கத்தைக் காணப்பெற்ற சர்ப்பத்தையும், இழந்தபொருளைமீண்டும் அடைந்த மக்களையும் ஒத்தாளோ, அவ்வாறு நானும் சந்தோஷிக்கலானேன்" என்றார். மிகவும் பொறுமையுடன் இவையாவும் கேட்டருளிய பெரியவர், சிதாகரரைப் பார்த்து, "அன்பனே! நீ சொல்லியவை யெல்லாஞ் சரி; உன் க்ஷேமத்தையே எப்போதும் எதிர்பார்த்திருக்கும் எனக்கு உன் விஷயத்தில் ஒருபோதும் அதிருப்தியுண்டாகாது; மனுஷப் பிறப்பால் மருவத்தக்க மகத்தான நன்மையை மனனஞ் செய்யும் மகிமை யுற்றோரெவரும், தமது உயிர்போலவே பிற உயிரையும் கருதுவதைவிட்டுச் சிறிதும் குற்றம்காண முற்பட மாட்டார்கள்; முக்குணத்தின் வசப்பட்ட நமக்குச் சகடத்தின் சக்கரம் போன்று மாறி மாறிவரும் கலக்கமுந் துலக்கமும் இயல்பானவையே; நாம் ஆசைப்படும் பொருள்களும் சிலவேளைகளில் அருவருக்கப்படுவது நமக்கு அநுபவம்; ஆதலால் தற்காலம் உனக்கு எதனால் கவலையுண்டாகியதோ அதனை வெளியிடக் கோருகிறேன்' என்றனர்.

(வரும்)

## சமாச்சாரக் குறிப்புகள்.

பழையவருஷம் கழிந்துவிட்டது புதியவருஷம் புகுந்துவிட்டது. இயேசுகிறிஸ்துவும் பிறந்துவிட்டார்; உத்தராயண புண்ணியகாலமும் பிறந்துவிட்டது. ஜீவகோடிகள் க்ஷேமமடைக; தேசம் செழித்தோங்குக; தர்மம்தழைத் தோங்குக பூவுலகெங்கும் புண்ணியமே நிறைந்து பொலிந்திடுக.

சுகம் நிறைந்ததே யாயினும் துக்கம் நிறைந்ததேயாயினும் நம்தேசத்துச் சென்றவருஷத்திய சரித்திரத்தைத்திருப்பிப்பார்ப்போம். அதிவிருஷ்டியும் அகாலவிருஷ்டியும் ஆகி, தேசம் எங்கும் வெள்ளம் பெருகி, நாட்டிற் பெருஞ்சேதங்கள் உண்டாயின; ஸ்திரமாகக் குடிகொண்டுள்ள பஞ்சமானது நீங்கினபாடில்லை. மலேரியா பிளேக் முதலிய தொத்து வியாதிகளோ மலிந்து விட்டன. நம் சகோதரர்களாகிய மகம்மதியர்கள் மகத்தான துன்பங்களை அடைந்தனர். மேல்நாட்டுத் தீயவழக்கமாகிய வெடிகுண்டெறிதல் வங்காளத்தில் சிலவாலிபர் களிடத்தினின்றும் நீங்கினபாடில்லை. கிப்ஸனைப்போன்ற அநாகரிக ஐரோப்பியர்கள் ஆரணி ஜாகீர்தாரைப் போன்ற இந்தியர்களை அடிப்பதும் சிலவெள்ளிநாணயங்களைப்பரிகாரமாக எறிந்துவிட்டுத் தப்பித்துக்கொள்வதும் ஸகஜமாய்விட்டது. அன்னிபெஸண்டுக்கு அடிமேல் அடிவிழுந்தாலும் அவருடைய ஆர்ப்பாட்டம் அடங்கவில்லை. அந்நியதேசங்கட்குச் சென்றிருக்கும் நம்சகோதரர்கள் படும் கஷ்டங்களோ அளவுகடந்துவிட்டன.

இப்பொழுது உற்பவித்திருக்கும் புதியவருஷத்தில் எல்லாத் துன்பங்களும் நீங்கி, இந்தியர்களெல்லொரும் இன்பம் ஓங்கி சத்தியம், தைரியம், ஜீவகாருண்ணியம், சத்துவகுண விசேஷமாகிய வைராக்கியம் முதலிய உத்தமகுணங்கள் செழித்து நம்பாரதமாதா உன்னதஸ்திதியை அடையுமாறு எல்லாவுலகங்களிலும் ஏகச்சக்ராதிபத்தியம் செலுத்திப் பிபீலிகாதி பிரமபர்யந்தமுள்ள சகலவஸ்துக்களையும் பம்பரம்போலாட்டுவிக்கின்ற மகா சக்தியை வணங்கி நிற்கின்றோம்.

* * * *

இயேசுகிறிஸ்து பிறந்துவிட்டார். இவ்வுலகிலுள்ள கிறிஸ்தவ ராஜாங்கங்களிலெல்லாம் இந்த அவதார புருஷருடைய ஜனதினத்

தைக் கொண்டாடும் பொருட்டு விடுமுறைநாட்கள் விடப்பட்டன. ஐரோப்பியர்கள், அமெரிக்கர்கள் ஸ்வதேசக் கிறிஸ்தவர்கள் ஆகிய எல்லோரும் ஆநந்தகுதூகலத்துடன் கொண்டாடினார்கள். இப்பொழுது ஒரு விஷயம் நம்ஞாபகத்திற்கு வருகின்றது. அதாவது, தென்னாப்பிரிக்கா வெள்ளையர்களாகிய போயர்களும் கிறிஸ்தவ மதத்தைச் சார்ந்தவர்களென்று சொல்லிக் கொள்வதனால் இயேசுகிறிஸ்துவின் ஜனனதினத்தைக் கொண்டாடியிருப்பார்களே, அப்பொழுது இயேசுகிறிஸ்து எந்த கண்டத்தில் உற்பவித்தவர் என்று சிறிதேனும் யோசித்திருப்பார்களா? எந்த கண்டத்திலுள்ள ஜனங்களுக்கு தென்னாப்பிரிக்காவில் இடங்கொடாது போயர்கள் இம்சித்து வருகின்றனரோ, எந்த கண்டத்திலுள்ள ஜனங்களுக்கு தென்னாப்பிரிக்காவில் வருஷத்திற்கு மூன்றுபவுன் வீதம் மனுஷவரி விதிக்கப்பட்டிருக்கிறதோ, எந்த கண்டத்து ஜனங்கள் போயர்களால் கன்றுகாலிகளினும் தாழ்மையாக நடத்தப்பட்டு வருகின்றனரோ, அந்தகண்டத்தில் அவதரித்தவரே இயேசுகிறிஸ்து என்பதை போயர்கள் அறியார்களா? இப்பொழுது அவர்களுடைய ஆசார்ய புருஷராகிய இயேசுநாதர் மறுபடியும் உயிர்த்தெழுந்து தனது சீடர்குழாத்திற் சேர்ந்தபோயர்களுடைய ராஜ்யத்திற்குள் நுழைவாரானால், தனக்குத் தலைசாய்ப்பதற்கோர் இடம் இல்லையென்று சர்வசங்கபரித்தியாகம் செய்த அவர் ஒவ்வொருவருஷக்கடைசியிலும் மூன்று பவுன் தனது முன்றாணியில் முடிந்துவைத்துக் கொள்ள வேண்டுமே; அடிமைத்தனத்திற்கே அர்கதையுள்ள ஆசியாக் கண்டத்தவன் என்று அவரை அவமதித்து விடுவார்களே! ஆ! ஆ! நன்று நன்று.

அக்காலத்தில் அவருடைய ஸ்தூல சரீரத்தைச் சிலுவையில் அறைந்து சித்திரவதை செய்த வைதீகக் கொடுமையாளர் இப்பொழுது அவருடைய மதத்தைச் சார்ந்தவர்களென்று நடித்துக்கொண்டு அவருடைய கொள்கைகட்கு நேர்மாறுபாடாக நடக்கின்ற ஆஷாடபூதிகளினும் மேலோரே; ஏனென்றால் அக்காலத்தோர் அவருடைய அழிவுறும் தன்மையுள்ள ஸ்தூல சரீரத்தையே சித்திரவதை செய்தனர். இந்த ஆஷாடபூதிகளோ அவரை ஏமாற்றி மோசம் செய்வது மன்றியில் அவருடைய அழிவற்ற நீதிகளைச் சின்னாபின்னப்படுத்திச் சித்திரவதை செய்கின்றனர்.



* * * *

தமிழ்ப்பாஷையானது தன்னைத்தாங்குவோர் இன்றித் தத்தளிக்கின்றது. முற்காலங்களில் தென்னாட்டுமன்னர்களில் சிறந்தோராகிய பாண்டியர்கள் முதற்சங்கம், இடைச்சங்கம், கடைச்சங்கம் என முச்சங்கங்களை வளர்த்துத் தமிழ்ப்பாஷையை ஆதரித்து அதனையோர் தனிப்பாஷையாகச் சிறப்பித்து ஸ்தாபித்தனர். அதுபோலவே பாஷாபிமானம் பழுத்தபாண்டித்துரைத்தேவரவர்களும தமிழ்மாதுக் குறைவிடமாகிய மதுரைமாநகரில் தமிழ்ச்சங்கம் என்றபேருடன் புலவர்கள் பலரைச் சேர்த்து ஒருசபை ஸ்தாபித்து தமது வாழ் நாட்களைத் தமிழ்ப்பாஷையின் உத்தாரணத்தின் பொருட்டுத்தத்தம் செய்து அப்பாஷையினதுமேன்மை மேன்மேலும் ஓங்கிவளரும்படி வேண்டிய ஏற்பாடுகள் செய்து சிலவருஷங்கள் கழிந்தபின்னர், அவர் தமதுகாலகதியால் மரணமடைந்தார். அவருக்குப் பின் பிரம்ஹஸ்ரீ சுப்பிரமணியய்யரவர்கள் அக்கிராசனாதிபதியாயிருந்து அவரும் சமீபத்தில் தேகவியோகமாயினர். பாண்டித்துரைத் தேவரவர்கள் காலத்தில்தமிழ்ச்சங்கத்திற்கு இருந்த ஊக்கம் விரைவாகக் குறைந்துவிட்டதென்றே பலரும் சொல்கின்றனர். பிரம்ஹஸ்ரீ சுப்பிரமணியய்யரவர்களின் மரணத்தைக்குறித்து அநுதாபக் கூட்டம் கூடியபொழுது நடவடிக்கைகள் யாவும் ஆங்கிலபாஷையில் நடைபெற்றனவாம்! தமிழ்ச்சங்கம் ஆங்கிலபாஷையில் நடைபெறுகின்றது! ஆ! ஆ! இத்தகையபாஷாபிமானிகளுக்குத் தக்கபரிசுகொடுப்பார் நம் நாட்டில் இல்லையேயென்று நாம் மிகவும் விசனப்படுகின்றோம்.

இது நிற்க. சமீபத்தில் வேலூரில் சைவசித்தாந்த மகா சமாஜம் நடைபெற்றதல்லவா? நமக்கு அழைப்புக்கடிதம், விஷய விவரம், பிரவேசச் சீட்டு முதலியவற்றைக் காரியதரிசியவர்கள் அனுப்பியிருந்தும் சில அசௌகரியங்களால் நாம்போகக்கூடாமல் இருந்ததைப்பற்றி மிகவும் விசனிக்கிறோம். மற்றொருவிஷயத்தைப் பற்றியும் நமக்கு விசனம் உண்டாகின்றது. இந்தசமாஜத்தின் மகாஜனக்கூட்டம் நடைபெற்றகாலத்தில் இரண்டொருவர் ஆங்கிலத்தில் பிரசங்கித்தனராம். அந்தப்பிரசங்கர்த்தர்கள் தமிழ்ப் பாஷையறியாத ஆங்கில தேயத்தவர்களோ? [illegible] அல்லது அவர்களுடைய பிரசங்கங்களைக் கேட்டு மகிழ்வோரானும் [illegible] பலரும் [illegible] அமெரிக்கர்களும் ஐரோப்பியர்களுமே

யாயிருந்தனரோ? என்றும் அல்லது சைவசித்தாந்த நூற்கள் ஆங்கிலபாஷையில் தான் அடங்கிக்கிடக்கின்றனவோ? என்றும் பற்பல சந்தேகங்கள் நமக்கு உண்டாகின்றன. இந்தச்சந்தேகங்களை நமக்கு நிவர்த்தி செய்விக்குமாறு நம்சகோதரப்பத்திரிகைகளை நாம் வேண்டிக் கொள்கிறோம்.

* * * *

ஜீவப்பிரேதம்போ லிருக்கின்ற காங்கிரஸ் மகாசபை இவ்வருஷமும் நடைபெற்று விட்டது. நாம் பொறுமையே பூஷணமாகக் கொண்டு இந்தவருஷம் டிஸம்பர் மாசத்துக் கடைசிவரையில், இந்த காங்கிரஸைப் பற்றி மறுபடியும் கேட்பதற்குக்காத்துக்கொண் டிருப்போம்; வருஷாவருஷம் காங்கிரஸ் மூன்று நாட்களுக்கு உயிர்பெற்று எழுந்து மறுபடியும் மறைந்துவிடுவது வெகு ஆச்சரியமாயிருக்கிறது,

* * * *

சிலமாதங்கட்குமுன் நெல்லூரில் நடந்த ஹிந்துமதமகாசபையில் அக்கிராசனாதிபதியாயிருந்த ஸ்ரீமதி சுசீலகுமாரியினது பிரசங்கம் மிகவும் கவனிக்கத்தக்கது. இவ்வம்மையார் உலகப்பிரசித்தி பெற்ற ஸ்ரீமத் விவேகானந்தஸ்வாமிகளது சிஷ்யராகிய ஸ்ரீ சிதானந்தஸ்வாமிகளின் மாணவியென்று அறிகிறோம். ஆகையாற்றான் ஸ்ரீ மத்விவேகானந்த ஸ்வாமிகளது கொள்கைகள் அச்சிட்டவாறு பதிந்துள்ளன. "மேல்நாடுகள் பணப்பேயர்களுடைய கொடுமையினால் துன் புறுகின்றன; கீழ்நாடுகள் வைதீகர்களுடைய கொடுமையினால் துன்புறுகின்றன" என்ற உண்மையை உள்ளவாறு உரைத்துவிட்டார். இவ் வம்மையார் அக்கிராசனாதிபதியாக வீற்றிருந்த இம்மகாசபையானது ஹம்பி என்ற நகரிலுள்ள ஸ்ரீமத் சங்கராசார்ய ஸ்வாமிகளது ஆதரவில் கூடப்பெற்று நடந்தேறியது. ஆசார்யர்களும் மடாதிபதிகளும் நிறைந்துள்ள நமது புண்ணிய பூமியில், ஜனசமூக நன்மையை நாடி ஆசார்யஸ்தானத்தையோ அதிபதி ஸ்தானத்தையோ வஹிப்பவர் மிகவும் சிலரே. பிரபஞ்சதர்மத்தில் உதாசீனர்களாகவோ அல்லது பிரபஞ்சப் பேய் பிடித்து ஆடுபவர்களாகவோ உள்ளார் நமது மடாதிபதிகளிலும் ஆசார்யர்களிலும் பலர். ஆதலால் ஹம்பி சங்கராசார்யஸ்வாமிகள் பாரதஜன சமூகத்தின் நன்மையைக் கருதிப் பாடுபட ஆரம்பித்திருப்பது நமக்கு அதிக ஆனந்தத்தையும் நமது ஜனசமூகம் இனிமேல் மேம்பாடு அடைந்து விடும் என்ற நம்பிக்கையையும் விளைவிக்



கிறது. சிலமாதங்கட்கு முன்பு ஷை சங்கராசார்ய ஸ்வாமிகளால் வெளியிடப்பெற்ற ஒருசிறு விளம்பரப் புக்தகத்தைக் கண்ணுற்றோம். அதில்கண்டுள்ள விஷயங்களும் நோக்கங்களும் மார்க்கங்களுமே தேசக்ஷேமத்திற் கநுகூலமானவை என்று மனப்பூர்வமாய் நாமும் நம்புகிறதினால், ஆசார்யரவர்களது பிரயத்தனம் சபலமாகும் பொருட்டு என்றும் குமரியாயுள்ள எம் இறைவியை இறைஞ்சுகின்றோம்.

* * * *

இங்கிலாந்து தேசத்தில் வர்ணம் பூசுவோரும், சுரங்கங்களில் வேலைசெய்வோரும், ரெயில்வேவேலைக் காரர்களும் வேலைநிறுத்தம் செய்தனர். சமீபத்தில் நமது ராஜதானியில் சென்னை-தெற்கு - மராட்டா ரெயில்வேக் கம்பனியின் வேலைக்காரர்கள் வேலை நிறுத்தம் செய்தனர். ஏன்? வேலைக்குத்தகுந்த கூலிகிடையாததாலும், படும் கஷ்டம் பொறுக்க முடியாததாலுமே. சாண்வயிற்றிற்கு ஊண்தேடுவதும் சோற்றுத் துருத்தியைச் சுமந்துகொண்டே சுகத்தைத் தேடுவதுமே மனிதனுடைய வேலையாயிருக்கிறது. வேலைக்குத் தகுந்த கூலிகிடைக்கும் பொருட்டும் கஷ்டத்திற்குத் தகுந்த சுகம் அடையும்பொருட்டும் வேலை நிறுத்தம் செய்தலை ஒருபிரதானமான ஆயுதமாகக் கொண்டிருக்கின்றனர் தற்காலத்தினர். இரவும் பகலும் என்றென்றைக்கும் ஓயாது வேலைசெய்து கொண்டிருக்கிறோமே, அதற்குத் தகுந்த கூலியடைகின்றோமா? கஷ்டத்திலும் மகாகஷ்டமாகிய மலச்சுமையைச் சுமந்துதிரிகிறோமே? அதற்குத் தகுந்த சுகமடைகிறோமா? பிரபஞ்சத்திற் பட்டுப் பிழைக்கவழி யின்றித்தவிக்கின்றோமே இம்மலச் சுமையை நலச்சுமையாக்காது விழிக்கின்றோமே. பிர பஞ்ச கர்த்தாவாகிய ஈஸ்வரன் அல்லும்பகலும் ஓயாது நம்மிடத்தில் வேலைவாங்கி, நம்மைப்படாதபாடெல்லாம் படுத்துகின்றானே இவ்விஷயத்தில் நாம் விழித்துக் கொள்ளாததென்னே? நமது து[illegible] க்கத்தை நாம் உணராததென்னே? என்றைக்கு இப்பிரபஞ்சத்தி[illegible] வேலைநிறுத்தம் செய்து அதிதீவிர வைராக்கிய சாலிகளாய் நமக்கு அளவற்ற இன்பம் அளித்தாலொழிய பிரபஞ்ச தர்மத்தில் பி[illegible] வேசிப்பதில்லையென்று கையிற் கங்கணங் கட்டிக் கொள்ளப்போ கிறோம்? என்றைக்கு ஈஸ்வரனே நம்மிடத்தில் வந்து கெஞ்[illegible] லொற்ற நித்தியாநந்தத்தை அளித்துவேலையிற் புகச் செய்யு[illegible] நாள் வருமோ? தேவேந்திராதிபட்டங்களும் அச்சமென்று த[illegible]

னி, சிற்றின்பங்களில் சுகத்தையடைவோமென்று தீர்மானித்து, பேரின்பமே பெறுதற்குரிய பிரயோஜனமென்று மகாதீரத்துவத்துடன் பெருமைபாராட்டும் காலம் என்றோ? ஈஸ்வரனுடைய இப்பிரபஞ்சத்தில் வேலை நிறுத்தம்செய்து சர்வசங்கபரித்தியாகிகளாய் விளங்குவோர் எத்தனைபேர் உளர்? ஐம்புலன் களையும் அடக்கி மனத்தை அந்தர் முகப்படுத்திப் பிரபஞ்சப் பிரக்ஞையேயின்றி, பிரபஞ்சவேலை நிறுத்தம் செய்து விட்டால் பிரபஞ்ச கர்த்தாவாகிய இறைவன் வேண்டியவற்றையெல்லாம் அளித்துக் குறைவேயின்றி நிறைவாய் வைப்பான்.

ஆனால், பிரபஞ்ச துக்கத்தைப் பெரும்பான்மையோரும் உணர்கிறதில்லை. பலிக் களத்திற்குக் கொண்டு போகப்படும் ஆடானது கழுத்தில் புஷ்ப மாலைகள் அணியப் பெற்று மேளவாத்தியங்களுடன் பின் தொடரப் போகின்ற ஆபத்தை உணராமல் சந்தோஷமாகத் தலை குலுக்கிச் செல்வதுபோல, மனிதரும் தம்முடைய பயங்கரமான ஆபத்து நிலைமையை ஓராது, ஆத்மானந்தத்தின் சாயா மாத்திரமாயுள்ள சிற்றின்பங்களில் உழன்று அவையே பரமபுருஷார்த்தமென்று கருதி யிருக்கின்றனர். ஒரு மனிதன் ஓர் இருண்ட காட்டின் வழியாய்ச் சென்று கொண்டிருக்கையில் ஒரு மதயானை அவனைப்பின் தொடர்ந்து துரத்திற்று. அவன் அப்பொழுது மதயானைக்குப்பயந்து அங்குத் தென்பட்ட ஓர் பாழ்ங்கிணற்றி லிறங்கினன். கீழிறங்கவே, வெகு நாட்களாகப் பட்டினி கிடந்து பயங்கர விசனத்துடன் இருக்கின்ற ஒரு கிருஷ்ண சர்ப்பமானது இவனைக் கண்டு கோபாவேசத்தால் குதித்துச் சீறிற்று. அந்தோ! பாபம்! உடனே கிணற்றின் சுவரில் சிறிது தூரம் ஏறி, அங்கு முளைத்திருந்த ஒரு கொடியைப் பற்றிக் கொண்டு நின்றான்; மேல் ஏறினால் யானை; கீழே இறங்கினால் கிருஷ்ண சர்ப்பம்; நிற்பதற்கும் நிலையில்லை; ஒரு சிறு கொடியே ஆதாரம். இந்தப் பரிதாபகரமான ஸ்திதியில் நிற்கும் இவன், அக்கிணற்றண்டையுள்ள ஒரு பெரிய ஆலவிருட்சத்தின் உச்சிக் கொம்பில் கட்டப்பட்டிருந்த தேன் கூட்டினின்றும் யாது காரணத்தாலோ சிறு சிறு துளிகளாகத் தேன் சொட்ட, நாக்கை நீட்டி நக்கி ருசிபார்த்து இன்புற்றான் என்றால் இவனுடைய அறிவு எத்தன்மையது என்று மதித்துக் கொள்ளலாம். மனிதர் இவ்வண்ணமே தம்மை ஜனனமும் மரணமும் கீழுமே



துமாயிருந்து வெருட்ட, இடையில் ஜீவித காலத்தில் தனது அதிர்ஷ்ட வசத்தால் தோன்றும் அபூர்வமான சில விஷயங்களை ஆதாரவாகக் கொண்டு, ஜனன மரண பயத்தை மறந்து மகா மாயா சக்தியின் லீலைகளாகிய தேன் துளிகளை ருசித்துச் சுகிக்கின்றனர்.

## பத்திரிகை வரவு.

விஸ்வகர்மன்:—இப்பெயர் கொண்ட மாதப்பத்திரிகையின் ஒருசஞ்சிகைவரப் பெற்றோம். இஃது விஸ்வகர்ம குலத்தினர்களால் தங்களுடைய கல்வி, கைத்தொழில், ஆசாரம் முதலியவற்றை மேம்படுத்திக்கொள்ளும் பொருட்டுப்பிரசுரிக்கப்படுகின்றது. விஸ்வகர்மகுலத்தினர்கள் பாரதஜனசமூகத்தில் முக்கியமான ஒரு அங்கத்தினர் என்றும் ராஜ்யக்ஷேமத்திற்கு இன்றியமையாதவர்கள் என்றும் நாம் மிகைபடக் கூறவேண்டியதில்லை. இப்பத்திரிகையில் அடங்கியிருக்கும் விஷயங்களும் பொருள் நிறைந்து விளங்குகின்றன. வருஷசந்தா இரண்டே ரூபா. வேண்டியவர்கள் "'விஸ்வகர்மன்' ஆபீஸ், 462, தங்கசாலைவீதி, சென்னை" என்ற விலாசத்திற்கு எழுதிப் பெற்றுக் கொள்ளலாம்.

கோயில் திருத்தம்:—இப்பெயர் கொண்ட ஒருவேண்டுகோட் பத்திரிகை வரப்பெற்றோம். புதுச்சேரி, குயவர் திருமலைமாடபூசி க்ருஷ்ணமாசார்யன் என்பவர் இப்பத்திரிகையின் மூலமாக "கோயில் பிராம்ஹணர்முதல் பறையர் ஈறாயுள்ள சகல ஹிந்துக்களுக்கும் பொதுவாகவுள்ளது, ஏனென்றால் ஈஸ்வர சந்நிதியில் ஜாதிபேதமோ, மதபேதமோ, நிறபேதமோ இல்லை. ஆதலால் எல்லா ஹிந்துக்களும் கோயில்களுக்குள் பிரவேசிக்கலாம் என்ற வழக்கத்தை நாம் அநுஷ்டானத்தில் கொண்டுவரவேண்டும்" என்று மிகப்பலமாக வாதிக்கிறார். எல்லோரும் கடைசியில் அடையும் லட்சியத்தில் ஒருபொழுதும் வித்தியாசம் இல்லை; லட்சியத்தை அடையமுயற்சிக்கும் விதங்களிலும் வழிகளிலுமே பலவிதமான வித்தியாசங்கள் ஏற்படுகின்றன. அதுபோலவே இப்பத்திரிகையின் கர்த்தாவினுடைய அபிப்பிராயமும் அடைய விரும்புவதாயினும், அடைய முயற்சிக்கும் விதங்களிலும் வழிகளிலும்

நாம் வித்தியாசப்படுகிறோம். க்ருஷ்ணமாசார்யரது பத்திரிகையை - அவர் பிரசுரிக்கும்படி கேட்டிருந்தும்-நாம் பிரசுரியாததற்குக் காரணம் என்னவென்றால் திருநெல்வேலி ஜில்லாவில் சுமார் பதினைந்து வருஷங்களுக்கு முன்பு நடந்த சாணார்மறவர் கலகம் மறுபடியும் நேரக் கூடாதென்பதே. மேல்நாட்டினரது வார்த்தைகளைப் பின்பற்றும் மேதாவி! யர்களது சீர்திருத்தங்களினால் தேசம் நாசம் எய்துமேயொழிய நன்மையை அடையவே அடையாது.

வித்தியாவதி:—இப்பெயர் கொண்ட பத்திரிகையின் செப்டம்பர்மீ" த்துச் சஞ்சிகையும் அக்டோபர் மீ" த்துச் சஞ்சிகையும் ஒன்றாகக்கட்டப் பெற்ற ஒரு பிரதி வரப்பெற்றோம். இப்பத்திரிகையில் வேதாந்த சித்திர விஷயங்களெல்லாம் தெள்ளிதாக விளக்கப் பெற்றிருக்கின்றன. நமது "ஞானபாநு" வினின்றும் "வினையும் விதியும்" என்று ஸ்ரீமான் வ. உ. சிதம்பரம் பிள்ளையவர்களால் எழுதப்பட்ட வியாசம் ஒன்று எடுத்துப் பிரசுரிக்கப்பட்டிருக்கின்றது. இதுபோலவே, வேறுசில பத்திரிகைகளும் "ஞானபாநு" வில்வரும் விஷயங்களை எடுத்துக் கையாளுகின்றன. இங்ஙனம் நமது "பாநு"வில் வரும் விஷயங்கள் எங்கும் பரவி எல்லாஜனங்களுக்கும் பிரகாசத்தைக் கொடுப்பதுபற்றி நமக்கு அளவிலா ஆநந்தமே. ஆனால் "பாநு" விலிருந்து விஷயங்களை எடுத்துப் பிரசுரிக்கும் பத்திராதிபர்கள் அவ்விஷயங்கட்குக் கீழ் "ஞானபாநு" என்று பெயரை மாத்திரம் குறிப்பிடாமல் "ஞானபாநு விலிருந்து எடுத்துப் பிரசுரிக்கப்பட்டது" என்று எழுதினால் நமக்கு அது ஓர் விளம்பரம்போல ஆகும். ஆகையால் அங்ஙனம் செய்யுமாறு அவர்களைக் கேட்டுக் கொள்கிறோம். இப்பத்திரிகைவேண்டுவோர் பத்திராதிபர், "வித்தியாவதி" நெ. 59 மணியக்கார சாலை, ராயபுரம், சென்னை என்ற விலாசத்துக்கு எழுதிக் கொள்ளவும். வருடச் சந்தா ரூபா 1-12-0.

# புத்தகவரவு.

சங்கரவிஜய விலாசம்:—இஃது பவானியிலிருக்கும் பிரம்மஸ்ரீ அன்னபூர்ணியம்மாள் அவர்களால் இயற்றப்பட்டதோர் கிரந்தம். சங்கரவிஜயம் என்று சொல்லப்படும் ஸ்ரீசங்கராசார்யாரது சரித்திரம் தமிழ்ப்பாஷையில் வசனநடையில் இருக்கின்றது. இந்நூல் கீர்த்தனங்கள், சரணங்கள், வெண்பாக்கள், கண்ணிகள், விருத்தங்கள் என்னும் பலவிதப் பாடல்களால் நிறைந்ததோர் காவியம். தமிழ் நடையோ சாதாரண ஸ்திரீகளும் அறிந்து ஆநந்திக்கும்படியான அவ்வளவு எளியநடை. தற்காலத்தில்படித்துள்ள ஸ்திரீகள் 'நாவல்கள்' என்னும் கட்டுக்கதைகள் எழுதுவதில் மிகவும் சிரத்தை பாராட்ட, இதன் ஆசிரியராகிய அன்ன பூர்ணியம்மாள் அவர்கள் உலகத்திற்கே தேஜஸை அளித்தருளிய ஸ்ரீசங்கரரது சரித்திரத்தைப் பாடல்களாகப்பாடி வெளியிட்டது மதாபிமானிகளாலும் தேசாபிமானிகளாலும் சிலாகிக்கத்தக்க தொன்றாம். இது டிம்மி 136 பக்கங்கள் அடங்கிய புத்தகம். எல்லோரும் இப்புஸ்தகத்தை ஆதரிப்பார்களென்று நம்புகிறோம். இதில் அடங்கிய பாடல்களை நம்தேசத்துப் பெண்குழந்தைகள் கற்பிக்கப்படுவார்களாயின், நம்தேசத்தினர் மோட்சமடைதற்கு வித்துவிதைத்ததுபோலாம். ஆதலால் நம்நேயர்களுக்கு நாம் இப்புஸ்தகத்தை மிகப்பலமாகச் சிபார்சு செய்கிறோம். விலை அணா பன்னிரண்டு. தபாற் கூலி வேறு. வேண்டுவோர் நமது ஆபீசுக்கு எழுதிப் பெற்றுக்கொள்ளவும்.

சைவசித்தாந்த விளக்கம்:—இஃது மதுரை திருஞானசம்பந்தஸ்வாமிகள் ஆதீனவித்துவான் ஸ்ரீமான் சுப்பிரமணியபிள்ளையவர்களால் எழுதப்பெற்று மதுரைவித்தியாபாநுப் பத்திராதிபர் ஸ்ரீமான். மு. ரா. கந்தசாமிக்கவிராயர் அவர்களால் பிரசுரிக்கப்பெற்றுள்ளது. இப்புத்தகம் சைவசித்தாந்திகட்கு இன்றியமையாததென்று நாம் சொல்லாமலே இதனைப்படிப்போருக்கு விளங்கும். பதிபசுபாச வியல்கள் நன்கு எல்லோரும் எளிதில் உணரும்படி எழுதப்பட்டுள்ளன.

சேக்கிழார்பிள்ளைத் தமிழ்:—இஃது திருவாவடுதுறை யாதீன மகா வித்துவான் ஸ்ரீ மீனாட்சி சுந்தரம்பிள்ளையவர்கள் இயற்றியது. இந்நூலை இயற்றிய ஆசிரியருக்கும் பிரசுரித்து வெளிப்படுத்திய மதுரைவித்தியாபாநுப் பத்திராதிபர் ஸ்ரீமான் மு. ரா. கந்த

சாமிக்கவிராயர் அவர்களுக்கும் தமிழ் உலகம் என்றும் கடமை பட்டிருக்கிறது; இது அத்தனை சிறப்புவாய்ந்த நூல். விலை அ இரண்டு.

இன்னிசை யிருநூறு:—இஃது சோழவந்தானூர் வித்துவா ஸ்ரீமான்-அ-சண்முகம் பிள்ளையவர்கள் இயற்றியது. தம்மனத்து தோன்றிய நீதிகளையெல்லாம் இன்னிசைவெண்பாக்களாக ஆ யர் ஆக்கியுள்ளார். இந்நூலில் காணப்படும் விசேஷம் யாதெனி ஒவ்வொரு வெண்பாவும் பண்டைத்தமிழ் நூல்களைப்போல வேற்றுமொழிக்கலப் பின்றித் தனித்தமிழ் மொழிகளானே ய கப்பெற்றுச் சொற்சுவையும் பொருட் சுவையும் மலிவுறக் கொ ண்டு விளங்குகிறது. விலை அணா மூன்று.

இம்மூன்று புத்தகங்களும் மதுரை வித்தியாநுபாலனயந்தி கையாபீசில் கிடைக்கும்,


# பாகவதப்ரகடனம்.

ஸ்ரீபாகவத மென்னும் புராணமானது எல்லாப் புராணங்களிலும் மே லான தென்பதும் ப்ரஹ்மஸூத்ரங்களையும் மஹா பாரதத்தையும் செய்த ரான ஸ்ரீ வேதவ்யாஸருக்கும் இந்த பாகவதத்தினால் சித்தசுத்தி உண் டாயிற்றென்பதும் ஒன்றிலும் பற்றில்லாத சுகப்பிரஹ்மமும் இந் கிரந்தத்தை ஆதரவுடன் படித்தாரென்பதும் எல்லாருக்கும் தெரிந் விஷயமே.

ஆதலால் புருஷார்த்தங்களை விரும்புகிற பக்திமான்கள் பாராயண செய்து இஷ்டார்த்தங்களை அடையுமாறு மூல ச்லோகத்தையும், அதன் கருத்தைச் சரியாக வெளியிடுவதும் அநேக வித்வான்களால் சரியான வ்யாக்யானமென்று கொண்டாடப்படுவதுமான ஸ்ரீதரீயவ்யாக்யான த்தையும் கிரந்த லிபியில் அச்சிடுவதோடு ஸமஸ்கிருத பாஷையில ல்லாதவர்கள் ச்லோகங்களின் தாத்பர்யத்தை நன்றாகத் தெரிந்துகொள்ளுமாறு மூலத்திற்கும் வ்யாக்யானத்திற்கும்ஒத்தபடி ச்லோகங்களைத்தமிழில்மொழி பெயர்த்தும் இத்துடன் சேர்த்து அச்சிட்டு வருகிறோம் 12-ஸ்கந்த மடங் கிய இந்த பாகவதத்தில் ஸ்ரீ கிருஷ்ண லீலைகள் எல்லாம் அடங்கிய 10- வது ஸ்கந்தமானது மிக முக்கியமானதும் ஜனங்களால்எப்போதும் பாராய ணஞ் செய்யப்படுவது மாகையால், முதலில் அதை அச்சிட்டு முடித்தோம்.

பரம காருண்ய மூர்த்தியாகிய ஸ்ரீ கிருஷ்ண பகவானுடைய லீலை கள் பக்தசிரோமணிகளின் மனதில் பசுமரத்தாணிபோல் பதியுமாறு தசம ஸ்கந்தத்தில் அங்கங்கே படங்க ளமைத்து விளக்கப்பட்டிருக்கின்றன.

விலை ரூபாய் ஆறு. வி-பி. தபால் சார்ஜு பிரத்தியேகம்.

அம்பாவிலாச புத்தகசாலை,
கோமளேசுவரன் பேட்டை, சென்னை.



# ஞானபாநு.

VOL - 1. தொகுதி - க. | FEBRUARY 1914. பிரமாதீச ௵ மாசி ௴ | No - 11. பகுதி - 11.


## இறவாமை.

### தாயுமானவர் வாழ்த்து.

"வானைப் போல வளைந்து கொண்டா னந்தத்
தேனைத் தந்தெனைச் சேர்ந்து கலந்த மெய்ஞ்
ஞானத் தெய்வத்தை நாடுவன்; நானெனும்
ஊனப் பாழ் கெட என்று மிருப்பனே"—

தாயுமானவர்.

என்று மிருக்க வுளங்கொண்டாய்
இன்பத் தமிழுக் கிலக் கியமாய்
இன்று மிருத்தல் செய்கின்றாய்
இறவாய் தமிழோ டிருப்பாய் நீ,
ஒன்று பொருளஃ தின்பமென
உணர்ந்தாய் தாயு மானவனே,
நின்ற பரத்து மாத்திரமோ?
நில்லா இகத்தும் நிற்பாய் நீ.

சி. சுப்பிரமணிய பாரதி.

## ஸ்ரீமத் விவேகானந்த ஸ்வாமிகள் எழுதிய கடிதம்

(பிரம்ஹஸ்ரீ ராமச்சந்திர சாஸ்திரிகள் மொழி பெயர்த்தது).

பாரிஸ்

9-9-1895

அரிய:—

* * * பாதிரிகளுடைய மூடத்தனத்தை நீங்கள் அவ்வளவு ஜாக்கிரதையா யெடுத்துக் கொள்கிறீர்கள் என்பதைப்பற்றி நான் ஆச்சரியப்படுகிறேன்...............நான் கண்டிப்பாக ஹிந்துக்கள்

மாதிரியே சாப்பிட வேண்டுமென்று இந்தியா தேசத்து ஜனங்கள் விரும்பினால், எனக்கு ஒரு சமையற்காரனையும் அவனை வைத்துக் கொள்வதற்குப் போதுமான பணத்தையும் அனுப்பி வைக்கும்படி தயவு செய்து அவர்களிடத்தில் சொல். ஒரு அணுவளவு கூட உண்மையான உதவியின்றிவருகின்ற இந்த அற்ப உபதேசம் எனக்குச் சிரிப்பை உண்டாக்குகின்றது. ஆனால், நான் சந்நியாசியினுடைய இரண்டு பெரிய நியமங்களாகிய இந்திரிய நிக்கிரகம், வறுமையநுபவித்தல் என்னும் இவற்றினின்றும் எப்பொழுதாவது தவறி விட்டேன் என்று பாதிரிகள் கூறுவார்களாயின் அவர்கள் பெரும் பொய்யர்கள் என்று அவர்களிடத்திலேயே சொல். என்ன குற்றத்தை என்னிடத்தில் அவன் கண்டானென்றும் அவனுக்குச் சொன்னவர்கள் எவர் என்றும் (என்மீது குற்றங்களைச் சுமத்தியுள்ள) அந்த பாதிரிக்கு நீ விவரமாய் எழுதிக் கேள்; அப்பொழுது சங்கதிகள் எல்லாம் வெளியாய்விடும்.

என் சங்கதியோ, நன்றாய்க் கவனித்துக் கொள், நான் ஒருவருடைய சொற்படி நடப்பவன் அல்ல. ஜீவித காலத்தில் என் காரியத்தை நான் அறிவேன்; என்னைப் பற்றி ரகஸ்யம் ஒன்றும் இல்லை. நான் இந்தியாவிற்குப் போலவே உலகத்துக்கும் உரியவன்; அதைப்பற்றிப் புரட்டு இல்லை. என்னால் முடிந்தவரையில் நான் உங்களுக்கு உதவி செய்திருக்கிறேன். இப்பொழுது உங்களுக்கு நீங்களே உதவி செய்துகொள்ள வேண்டும். எந்த தேசம் என்னைப் பிரத்தியேகமாகத் தனது என்று கூற முடியும்? நான் எந்த ஜன சமூகத்திற்காவது அடிமையா? ஏ! நம்பிக்கையற்ற நாஸ்திகர்களே! போதும்! போதும். முட்டாள் தனமாக இனிப் பிதற்றவேண்டாம்.

கடினமாக வேலை செய்து கிடைத்த பணத்தையெல்லாம் கல்கத்தாவிற்கும் சென்னைக்கும் அனுப்பியிருக்கின்றேன்; இவ்வளவும் செய்த பின்னர், இவர்களுடைய மூடச் சொற்களையும் கேட்க வேண்டுமாம்! உங்களுக்கு வெட்கமாயில்லையா? நான் அவர்களுக்கு எவ்விதத்தில் கடமைப்பட்டிருக்கிறேன்? அவர்களுடைய ஸ்தோத்திரத்தை ஒரு சிறிதேனும் கவனிக்கிறேனா? அல்லது, அவர்கள் குற்றங் கூறுகிறார்களென்று பயப்படுகிறேனா? எனது புத்திரனே! நான் ஒரு



ஆச்சரியமான மனிதன்; நீ கூட இன்னும் என்னை அறிந்து கொள்ள முடியவில்லை. உங்கள் வேலையைச் செய்யுங்கள்; வேலை செய்ய முடியா விட்டால், நிறுத்திவிடுங்கள்; ஆனால் உங்களுடைய மூடத்தனத்தினால் என்னைத் தொந்திரவு செய்ய முயற்சி செய்யாதீர்கள். மனிதன் அல்லது தேவதை, அல்லது பிசாசு இவற்றை யெல்லாம் பார்க்கிலும் ஒரு பெரிய சக்தியை எனக்குப் பின்னால் நான் பார்க்கிறேன். எனக்கு ஒருவருடைய உதவியும் தேவையில்லை. என் ஜீவிதகாலம் முழுதும் பிறருக்கு நான் உதவி செய்துகொண்டேயிருக்கிறேன்............தங்களுடைய தேசத்தில் இதற்கு முன் எப்பொழுதுமே உற்பவித்திராத புருஷோத்தமன், ராமகிருஷ்ண பரமஹம்சருடைய வேலையை முன் கொண்டு வருதற்குச் சிறிது பணம்சேகரிக்க அவர்களால்முடியாது; ஆனால் அவர்களோ, எவருக்கு அவர்கள் ஒன்றும் செய்யவில்லையோ, எவர் அவர்களுக்குத் தன்னாலானதெல்லாம் செய்தாரோ, அவருக்கு உபதேசம் செய்யவிரும்பி உளறிக் கொட்டுகிறார்கள்! அத்தகைய நன்றி கெட்ட உலகம்!

படிப்பு மிகுந்துள்ள ஹிந்துக்களுக்குள் நீங்கள் பார்க்கிறபடி, நான் ஜாதித் துவேஷத்தினால் கட்டப்பட்டு மூடபக்தி மிகுந்து இரக்கம் மிகுந்து, முகஸ்துதி மலிந்து நாஸ்திகக்கோழையாக ஜீவித்து மரிப்பதற்கே பிறந்திருக்கிறேன் என்று நினைக்கிறீர்களா? நான் கோழைத் தனத்தை வெறுக்கிறேன். பயங்காளிகளிடத்திலும் ராஜரீக மூடத்தனத்திலும் எனக்குக் காரியம் ஒன்றும் இல்லை. எவ்வித ராஜாங்க விஷயத்திலும் எனக்கு நம்பிக்கையில்லை. ஈஸ்வரனும் சத்தியமுமே உலகில் ராஜவிஷயங்கள்; மற்றவையெல்லாம் அற்பமே.

நான் நாளையதினம் லண்டன்மா நகர் செல்கின்றேன். * * *

உங்களையாசீர்வதிக்கின்ற

விவேகாநந்தர்.

# ஸ்ரீமத் ஸ்வாமி விவேகாநந்தருடன் சம்பாஷணை.

1. *இங்கிலாந்து தேசம் இந்தியாவை முன்னேற்றத்திற் கொண்டுவருமா ?*

ஸ்வாமி விவேகாநந்தர்:—ஆங்கிலேயரால் ஒரு பொழுதும் முடியாது. வளர்ச்சி உள்ளிருந்து உண்டாகவேண்டும். இந்தியா தேசமானது தனது மோட்சத்தைத் தானே தேடிக்கொள்வதற்கு உதவி செய்தலே இங்கிலாந்தினால் கூடுமானது. இன்னொருவருடைய சொற்படி உண்டாகும் விருத்தியெல்லாம் எனது அபிப்பிராயத்தில் பிரயோசன மற்றவையே. அடங்கிநின்று செய்கிற வேலையானது எவ்வளவு உயர்ந்ததா யிருந்தபோதிலும் அது தாழ்மையையே அடையும், தாழ்மையையே கொடுக்கும்.

2. *எந்த ஜனசமுகமாவது யுத்தத்தில் கீர்த்திபெற்ற தன்மையில்லாமல், பெருமையடைந்திருக்கிறதா?*

ஸ்வாமி விவேகாநந்தர்:—ஆம். சீனதேசம் பெருமையடைந்திருக்கிறது. மற்ற தேசங்களுக்குள் நான் சீனதேசத்திலும் யாத்திரை செய்திருக்கிறேன். நாம் தற்காலத்தியவை என்று சொல்லுகின்ற அநேக தந்திரங்களும் வழிகளும் நூற்றுக்கணக்கான, ஆயிரக்கணக்கான வருஷங்களாக சீனதேசத்தில் அப்பியசிக்கப்பட்டு வந்தன.

3. *ஜப்பான் திடீரென்று பெருமை யடைந்ததின் ரகஸ்யம் என்ன ?*

ஸ்வாமி விவேகாநந்தர்:— ஜப்பானியர்களுக்குத் தங்களிடத்துள்ள நம்பிக்கையும் அவர்களுக்குத் தங்கள் தேசத்தின் மீதுள்ள ஆசையுமே. உங்களுக்குள் தங்களுடைய தேசத்தின் பொருட்டுத் தங்களுடைய எல்லாவற்றையும் தியாகம் செய்யத்தயாராயிருக்கிற மனிதர்கள் உண்டாகும் பொழுது, கள்ளங்கபடற்ற உண்மையான மனிதர்கள் உண்டாகும் பொழுது, இந்தியா தேசம் எல்லா விதத்திலும் பெருமையடையும். தேசத்தைச் செய்பவர்கள் மனிதர்களே. தேசத்தில் என்ன இருக்கின்றது? ஜப்பானியர்களுடைய ஜனசமுக மார்க்கத்தையும் ராஜரீக மார்க்கத்தையும் நீங்கள் கற்றுக்கொண்டால், அவர்களைப் போலவே



நீங்களும் பெருமை யடைவீர்கள். ஜப்பானியர்கள் தங்களுடைய தேசத்தின் பொருட்டு எதையும் தியாகம் செய்யத் தயாராயிருக்கிறார்கள். ஆதலால் அவர்கள் பெருமை பெற்ற ஜனங்களாய்விட்டனர். ஆனால் நீங்கள் அப்படியில்லை, உங்களால் அப்படியிருக்க முடியாது ; உங்களுடைய சொந்தக் குடும்பங்களுக்காகவும் உடைமைகளுக்காகவும் மாத்திரம் நீங்கள் எதையும் தியாகம் செய்கிறீர்கள்.

4. *இந்தியா ஜப்பானைப் போலாக வேண்டும் என்பது தங்களுடைய விருப்பமா ?*

ஸ்வாமி விவேகாநந்தர்:—நிச்சயமாய் இல்லை, இந்தியா இருக்கிற மாதிரியே இருக்கவேண்டும். இந்தியா ஜப்பானைப் போலவாவது அல்லது எந்த ஜனசமுகத்தைப் போலவாவது எப்படி ஆகமுடியும்? சங்கீதத்தைப் போலவே, ஒவ்வொரு ஜனசமுகத்திலும் ஒரு முக்கியமான பல்லவி, மற்றெல்லாம் சுற்றிவரும்படி ஒரு மத்தியக்கொள்கையுண்டு. ஒவ்வொரு ஜனசமுகத்திற்கும் ஒரு முக்கிய கொள்கையுண்டு; மற்றவை யெல்லாம் இரண்டாந்தரமே. ஆகையால், இந்தியா ஜப்பானைப் போலிருக்க முடியாது. இந்தியாவின் முக்கிய கொள்கையோ மதம். ஜனசமுகச் சீர்திருத்தம் இன்னும் மற்றெல்லாம் இரண்டாந்தரமே. 'ஹிருதயம் உடைகிற' பொழுது, எண்ணங்கள் பிரவாகமாக உண்டாகின்றன என்று சொல்லப்படுகிறது. இந்தியாவினுடைய ஹிருதயம் உடைய வேண்டும்; பின்னர் ஆத்ம ஞானப்பிரவாகம் உண்டாகும். இந்தியா இந்தியாவே. நாம் ஜப்பானியர்களைப் போலிருக்கவில்லை. ஹிந்துக்களாயிருக்கிறோம். இந்தியாவின் காற்றும் கூட சுகத்தைக் கொடுக்கத்தக்கது. நான் இங்கு இடைவிடாமல் வேலை செய்து கொண்டிருக்கிறேன்; இந்த வேலையினிடையில் நான் சுகமடைகிறேன். ஆத்மார்த்தமான வேலையினாலேயே நாம் இந்தியாவில் சுகம் அடையக் கூடும். உங்களுடைய வேலை இங்கு ஜட சம்பந்த முள்ளதாயிருந்தால், நீங்கள்—நீரிழிவு ! வியாதியினால் இறக்கிறீர்கள்.

5. *அமெரிக்காவில் தங்களுடைய முதல் அநுபவங்கள் என்ன ?*

ஸ்வாமி விவேகாநந்தர்:—முதலிலிருந்து கடைசிவரையில் மிகவும் நன்மையாகவே யிருந்தது. பாதிரிகளையும் கோயில் ஸ்தி

களையும் தவிர, அமெரிக்கர்கள் உத்தம குணங்களமைந்தவர்கள், அன்பு நிறைந்த ஹிருதயம் உடையவர்கள், தயாள குணமுள்ளவர்கள், நல்லவர்கள்.

6. *தாங்கள் கூறுகிற இந்த "கோவில் ஸ்திரீகள்" யார்?*

ஸ்வாமி விவேகாநந்தர்:—ஸ்திரீ ஒரு புருஷனை யடைவதற்குத் தன்னாலான மட்டும் முயற்சி செய்யும் பொழுது, அவள் கடற்கரையிலுள்ள விநோத ஸ்தலங்களுக்கெல்லாம் போய், ஒரு மனிதனைப் பிடித்துக்கொள்வதற்கு எல்லா விதத்தந்திரங்களையும் செய்கிறாள். தன்னுடைய முயற்சிகளில் தவறிவிடும் பொழுது, அவள், அமெரிக்காவில் சொல்லுகிறபடி 'கிழட்டுப் பெண்' ஆகிய, கோவிலில் சேர்ந்து கொள்கிறாள். இந்த 'கோயில் ஸ்திரீகள்' பயங்கரமான மதவைராக்கிய முள்ளவர்கள்.

7. *இந்தியாவின் பொது ஜனங்களைப் பற்றித் தங்களுடைய அபிப்பிராய மென்ன?*

ஸ்வாமி விவேகாநந்தர்:—நாம் மிகவும் எளியவர்கள்; நம்முடைய பொது ஜனங்கள் உலக விஷயங்களைப்பற்றி ஒன்றும் அறியாதவர்களா யிருக்கிறார்கள். நமது பொது ஜனங்கள் மிகவும் நல்லவர்கள்; ஏனென்றால் இங்கு வறுமை குற்றம் இல்லை. நமது பொது ஜனங்கள் கொடூர முள்ளவர்களல்ல. எனது உடை காரணமாக மாத்திரம் அமெரிக்காவிலும் இங்கிலாந்திலும் நான் அநேகம் தடவைகளில் கல்லாலடிக்கப்படும் தறுவாயிலிருந்தேன். ஆனால் இந்தியாவில் விநோதமான உடையின் நிமித்தம் ஒருவன் கல்லாலடிக்கப்பட்டானென்று நான் கேட்டதேயில்லை. மற்ற ஒவ்வொரு விஷயத்திலும் நமது பொது ஜனங்கள் ஐரோப்பியப் பொது ஜனங்களைப் பார்க்கிலும் நாகரிகத்தில் எவ்வளவோ உயர்ந்தவர்கள்.

8. *இந்தியா மேன்மை யுறுவதற்குத் தாங்கள் செய்ய உத்தேசித்திருப்ப தென்ன.*

ஸ்வாமி விவேகாநந்தர்:— ஜனசமூகத்தின் முக்கியமான பாவம் பொது ஜனங்களை அலட்சியம் செய்ததாம் என்று நான் நினைக்கிறேன்; நாம் தாழ்மை யடைந்திருப்பதன் காரணங்களுள் இது ஒன்று. இந்தியாவின் பொது ஜனங்கள் மறுபடியும் நன்றாய்க் கல்வியில் விருத்தி யடைகிறவரையில், நன்றாய்ப் போஷிக்கப்படு



கிறவரையில், நன்றாய்க்கவனிக்கப்படுகிறவரையில் ராஜாங்க விஷயங்கள் எவ்வளவாயினும் பிரயோசனம் இல்லை. அவர்கள் நம்முடைய படிப்புக்குப் பணம் கொடுக்கிறார்கள், அவர்கள் நம்முடைய கோயில்களைக் கட்டுகிறார்கள்; ஆனால் இவற்றிற்குப் பதிலாக அவர்கள் மிதியும் உதையும் பெறுகிறார்கள். அவர்கள் நமக்கு அநேகமாய் அடிமைகளாயிருக்கிறார்கள். நாம் இந்தியாவை மேன்மைப் படுத்தவேண்டினால், நாம் அவர்களுக்காக வேலை செய்யவேண்டும். பாலியர்களைப் பிரசங்கிகளாகப் பழக்குவிக்கும் பொருட்டு, ஒன்று சென்னையிலும் ஒன்று கல்கத்தாவிலுமாக இரண்டு வித்தியா சாலைகள் ஸ்தாபிக்க விரும்புகிறேன். கல்கத்தா வித்தியா சாலையை ஸ்தாபிப்பதற்கு என் கைவசம் பொருள் இருக்கின்றது. என் காரியத்திற்கு ஆங்கிலேயர்கள் நிதி கொடுத்து உதவுவார்கள்.

பாலியர்களிடத்தில், தற்காலத்தியவர்களிடத்தில் எனக்கு நம்பிக்கை யிருக்கிறது. அவர்களிடத்திலிருந்தே எனது வேலைக்காரர்கள் உண்டாவார்கள். அவர்கள், சிங்கங்களைப்போல, வேண்டியன முழுமையும் வேலை செய்வார்கள். நான் எண்ணத்தை ஏற்படுத்தி, எனது ஜீவித காலத்தை அதற்குக் கொடுத்திருக்கிறேன். நான் ஜயம் அடையாமற் போவேன் ஆயின், எனக்குப் பின் என்னிலும் பெரியோர் எவரேனும் வேலை செய்தற்கு வருவார்கள்; நான் பாடுபடுவதில் திருப்தியடைவேன். நீங்கள் முக்கியமாய்ச் செய்யவேண்டிய விஷயம் யாதெனில், பொது ஜனங்களுக்கு அவர்களுடைய பாத்தியதைகளைக் கொடுக்கவேண்டியதே. உலகத்தில் உயர்ந்த மதம் உங்களுடையதாயிருந்தும் நீங்கள் சாரமற்ற சக்கைகளாலும் அறிவின்மையாலும் பொது ஜனங்களைப் போஷிக்கிறீர்கள். என்றும் வற்றாத, இன்பகரமான ஊற்று உங்களிடத்தில் ஊறிக்கொண்டிருந்தும், நீங்கள் அவர்களுக்குச் சாக்கடைத் தண்ணீரைக் கொடுக்கிறீர்கள். உங்களுடைய சென்னையில் பி. ஏ. பரீட்சையில் தேறியிருக்கும் ஒருவன் ஒரு தாழ்ந்த ஜாதியானைத் தொடாவிட்டாலும் அவனிடத்திருந்து தனது கல்விக்கு வேண்டிய பணத்தைப் பெற்றுக் கொள்வதற்குத் தயாராயிருக்கிறான். ... ... ... ... ...

..........................................................................

மற்ற தேசங்களின் ஜனங்களுடன் நம் தேசத்துப் பொது ஜனங்களை ஒப்பிட்டுப் பார்த்தால், நமது ஜனங்கள் தேவதைகள். வறுமை ஒரு குற்றமாகப் பாவிக்கப் படாத தேசம் இது ஒன்றுதான். நமது ஜனங்கள் மனத்திலும் சரீரத்திலும் அழகாயமைப் பெற்றவர்கள்; ஆனால் நாம் அவர்களை வெறுத்து வெறுத்து, அவர்கள் கடைசியில் தங்களில் தாமே நம்பிக்கையை இழந்து விட்டார்கள். தாங்கள் பிறவியிலேயே அடிமைகள் என்று அவர்கள் நினைக்கின்றனர். அவர்களுக்கு அவர்களுடைய பாத்தியதைகளைக் கொடுங்கள், அவர்களுடைய பாத்தியதைகளின் மேல் நிற்கட்டும்.

9. தாங்கள் மிஸஸ் பெஸண்டைப் பற்றியும் அவருடைய கொள்கைகளைப்பற்றியும் என்ன நினைக்கிறீர்கள்?.

ஸ்வாமி விவேகாநந்தர்:—மிஸஸ் பெஸண்டு மிகவும் நல்ல ஸ்திரீ. நான் லண்டன்மா நகரில் அவளுடைய சபையில் பிரசங்கித்தேன். அவளைப்பற்றி எனக்கு நேரே அதிகமாகத் தெரியாது. நமது மதத்தைப்பற்றி அவளுக்குள்ள அறிவு மிகவும் சொற்பம்; இங்கும் அங்குமாக அவள் சிறு சிறு துண்டுகளைப் பொறுக்குகிறாள்; நமது மதத்தை நன்றாய்ப் படிப்பதற்கு அவளுக்கு நேரமேயில்லை. அவள் மிகவும் உண்மையுள்ள ஸ்திரீ யென்று, அவளுடைய கொடிய விரோதியும் ஒப்புக் கொள்வான். இங்கிலாந்து தேசத்தில் பேசுவதில் அவளே பிரக்கியாதி பெற்றவள். அவள் சந்நியாசினி. ஆனால் மகாத்துமாக்களிடத்திலும் 'குட்ஹூமி'களிடத்திலும் எனக்கு நம்பிக்கையில்லை.

10. விதவா விவாக விஷயத்தைப் பற்றித் தங்களுடைய அபிப்பிராய மென்ன?

ஸ்வாமி விவேகாநந்தர்:—விதவைகளுக்கு கிடைக்கிற புருஷர்களுடைய தொகையினால் நிச்சயிக்கப்படுகிற நம்பிக்கையையுடைய ஒரு ஜன சமூகத்தை நான் இனிமேல் பார்க்கப் போகிறேன்.

## பகவத்கீதை.

(ஸ்ரீ சரஸ்வதியார் மொழிபெயர்த்தது).

### 4-ம் அத்தியாயம்.

பகவான் சொல்லுகிறார்:—

(1) இந்த அழிவற்ற யோகத்தை நான் விவஸ்வானுக்குச் சொன்னேன். விவஸ்வான் மநுவுக்குத் தெரிவித்தான்; மநு இக்ஷ்வாகுவுக்குக் கூறினான்.

(2) இங்ஙனம் பரம்பரையாக இதை ராஜரிஷிகள் அறிந்திருந்தனர். பரந்தபா, இந்த யோகம் காலப் பெருக்கத்திலே நஷ்டமாயிற்று.

(3) பழமையான இதே யோகத்தைத் தான் இன்று நான் உனக்குக் கூறினேன்; நீ எனது பக்தனும், நண்பனும்என்பதைக் கருதி. இது ரஹஸ்யங்களில் உயர்ந்தது.

அர்ஜுனன் சொல்லுகிறான்:—

(4) நீர் பின்னே பிறந்தவர். விவஸ்வான் முன்பு பிறந்தவன். ஆதியில் நீர் இதைக் கூறினீரென்று நான் எப்படி நம்புவது?

பகவான் சொல்லு கிறார்:—

(5) எனக்குக் கழிந்த பிறப்புக்கள் பல. உனக்கும்அப்படியே; நான் அவற்றை யெல்லாம் அறிவேன். பரந்தபா! நீ அவற்றை அறியமாட்டாய்.

(6) நான் பிறப்பிலாதவன், அழிவற்ற ஆத்மா, வஸ்துக்களுக்கெல்லாம் ஈசன்; ஆயினும் எனது ப்ரக்ருதியிலே பொருந்தி, எனது மாயையால் பிறவியடைகின்றேன்.

(7) எப்போதெல்லாம் தர்மம் அழிவெய்துவதால் அதர்மம் ஓங்குமோ அப்போதெல்லாம் நான் தோன்றுவேன்.

(8) நல்லோரைக் காப்பதற்கும், தீயோரை அழிப்பதற்கும், அறத்தை நிலைநாட்டுவதற்கும் நான் யுகந்தோறும்பிறக்கின்றேன்.

(9) எனது தெய்விக மாகியபிறப்பையும் தொழிலையும்எவன் உட்கருத்தின்படி அறிகின்றானோ, அவன் உடலை விட்டு நீங்கிய பின், அர்ஜுனா, மறுபிறப்படைவதில்லை. என்னை அடைகின்றான்.

(10) விருப்பமும் அச்சமும் சினமும் கழிந்து, என்மயமாகி, என்னைச் சார்ந்தோர் பலர்; ஞானத்தவத்தினால் மாசு நீங்கி நானே யாயினோர்.

(11) யார் என்னை எங்ஙனம் வேண்டுகின்றனரோ, நான் அவர்களை அங்ஙனமே ஆதரிக்கிறேன். எங்கும் மனிதர்கள் செல்லும் வழி, பார்த்தா! எனது வழியே.

(12) செய்கைகளில் வெற்றியை விரும்புவோர் இங்கு தேவதைகளை வேட்கின்றனர். மனிதருலகில், தொழிலினின்றும் வெற்றி மிக விரைவிலே விளைகிறதன்றோ?

(13) குணங்கள், தொழில்கள், இவற்றின் பிரிவுப்படி நான் நால்வருண-நெறியைப் படைத்தேன். செயலின்றி, அழிவின்றி, இருக்கும் யானே அதனைச் செய்தோனென்று தெரிந்து கொள்.

(14) என்னைத் தொழில்கள் தீண்டுவதில்லை. தொழிற் பயனில் எனக்கு விருப்பமில்லை. இங்ஙனம் என்னை அறிவோன் தொழில்களால் கட்டுண்பதில்லை.

(15) இவ்விதமான அறிவுகொண்டே முன்னைய முமுக்ஷுக்கள் தொழில் செய்தனர். ஆதலால், நீயும் முன்னோர் முன்பு செய்தபடி தொழிலையே செய்க.

(16) எது கர்மம், எது அகர்மம் என்பதில் கவிகள் கூட மயங்குகின்றனர். நினக்குக் கர்மத்தைச் சொல்லுகின்றேன். அதையறிந்து தீமையினின்று விடுபடுவாய்.

(17) கர்மம் இன்னது, விகர்மம் இன்னது, அகர்மம் இன்னது என்பவற்றைப் பகுத்தறிய வேண்டும். ஆழமுடையது கர்மத்தின் போக்கு.

(18) கர்மத்தில் அகர்மத்தையும், அகர்மத்தில் கர்மத்தையும் காண்பவனே அறிவுடையோன்; எல்லாத் தொழிலும் செய்து கொண்டிருப்பினும் அவன் யோகியே யாவான்.

(19) எவனுடைய முயற்சிகள் யாவும் விருப்பத்தால் அமைக்கப்படாதன? ஞான நெருப்பிலே எரியுண்ட கர்மங்கள் செய்வோனாகிய அவனையே அறிஞர் பண்டிதனென்பர்.

(20) தொழிலின் பயனிலே பற்றின்றி, எப்போதும் மகிழ்ச்சியுடன், சார்பில்லாதிருப்போன்;—தொழிலிலே அகப்படினும் அவன் ஒன்றும் செய்யாதவனேபோல்வான்.



(21) ஆசையற்றவன், சித்தத்தையும் ஆத்மாவையும் வசப்படுத்தியவன், எவ்வகை இரவுமில்லாதான், உடலால் மட்டுமே தொழில்கள் செய்வோன் தவறடைவதில்லை.

(22) தன்படியே வரும் லாபத்தில் மகிழ்பவனாய் இரட்டைகள் கடந்தவனாய், பொறாமை நீங்கி, வெற்றியிலும் தோல்வியிலும் ஒன்று போலவே யிருப்போன் தொழில்கள் செய்யினும், கட்டுப்படுவதில்லை.

(23) பற்று நீங்கி, முக்தனாய், ஞானத்தில் நிலைத்த சித்தமுடையவனாய், வேள்வியாகத் தனது உலகத் தொழில்களை யெல்லாம் செய்வோனுடைய செய்கையனைத்தும் கரைந்து போய் விடுகிறது. (அவனைக்கட்டுப் படுத்துவதில்லை.)

(24) பிர்மமே அர்ப்பணம்; பிர்மமே ஹவிஸ்; பிரமமே அக்னி; பிரமமே ஹோமம் செய்வது. செய்கைகளனைத்தும் பிரமத்திலேயே நிற்பதைக் காண்போன் பிரமத்தையே அடைவான்.

(25) வேறு சிலயோகிகள் தேவ-யக்ஞத்தை வழிபடுகின்றனர், பிறர் அறிவு-நெருப்பிலே வேள்வியை ஹோமஞ்செய்யும் வேள்வி புரிகின்றனர்.

(26) ஸம்யமம் என்ற நெருப்பிலே செவிமுதலிய புலன்களைச்சொரிவோர் சிலர்; வேறுசிலர் இந்திரிய - நெருப்புக்களிலே ஒலிமுதலிய இந்திரிய - விஷயங்களைச் சொரிகின்றனர்.

(27) அறிவினால் கொளுத்துண்ட ஆத்ம-ஸம்யோகம் என்ற நெருப்பிலே வேறுசிலர் எல்லா இந்திரியத் தொழில்களையும் உயிர்த்தொழில்களையும் சொரிந்து வேள்விபுரிகின்றனர்.

(28) வேறு சிலர் செல்வத்தால் வேள்விசெய்வோர், தவத்தால் வேள்வி செய்வோர், யோகத்தால் வேள்வி செய்வோர், கல்வியால் வேட்போர், ஞானத்தால் வேட்போர், யதிகள், துணிந்த விரதமுடையார்.

(29) இன்னும் சிலர் அபானத்தில் ப்ராணனையும், சிலர் ப்ராணனில் அபானத்தையும் ஆஹுதி புரிந்து ப்ராணாபான வழிகளைக் கட்டி ப்ராணாயாமத்தை வழிபடுகின்றனர்.

(30) மற்றுஞ்சிலர், உணவை அளவு படுத்தி ப்ராணனைப் ப்ராணனிலேயே ஆஹுதி செய்கின்றனர். இவரனைவரும் வேள்வியறிந்தோர். வேள்வியால் அழுக்கற்றோர்.

(31) வேள்வியில் மிஞ்சிய அமுதை உண்போர் என்றுமுள்ள பிர்மநிலையை அடைகின்றனர், குருகுலத்திற்பிறந்தவனே! வேள்வி செய்யாதவனுக்கு இவ்வுலகமேயில்லை; அவ்வுலகமேது?

(32) இங்ஙனம் பலவித வேள்விகள் பிர்மத்தின் வாயில்பரப்பப்பெற்றன-இவையெல்லாம் தொழிலிலே பிறந்தன என்றுணர்ந்து விடுபெறுவாய்.

(33) பரந்தபா! பொருளால் வேள்வி செய்வதினும், அறிவால் வேள்விசெய்தல் சிறந்தது. கர்மங்களெல்லாம், பார்த்தா! முழுவதும் அறிவிலே தான் வந்து முடிகின்றன.

(34) அந்த அறிவை ஆசானிடத்தே வினவாலும்பணிவிடையாலும் தெரிந்து கொள். உண்மைகண்ட ஞானிகள் உனக்கு ஞானங் கூறுவர்.

(35) அந்த அறிவை அடைந்து விட்டால்,பாண்டவா! பிறகு இங்ஙனம் மயக்கமுற மாட்டாய். அதினின்றும் எல்லா உயிர்களையும் தன்னிடத்தே காண்பாய்; எனவே என்னிடத்திற் காண்பாய்.

(36) பாவிகளெல்லோரினும் நீ உயர்ந்த பாவியாயினும், அப்பாவத்தையெல்லாம் ஞானத் தோணியாலேயே கடந்துவிடலாம்.

(37) ஸமித்துக்கட்டைகளை நெருப்பு எங்ஙனம் சாம்பலாக்குகிறதோ, அங்ஙனமே அறிவுத்தீ வினைகளையெல்லாம் சாம்பலாக்கி விடுகின்றது,

(38) சுத்தம் செய்யும் பொருள், ஞானத்தைப் போல் இவ்வுலகில் வேறொன்றில்லை. யோகத்திலே வெற்றியடைந்தவன் காலத்திலே அதனைத் தன்னிடம், தானே, காண்பான்.

(39) சிரத்தையுடையவன் அறிவு பெறுகின்றான். புலன்களைக் கட்டியவனும் அப்படியே. அறிவுபெற்றபின் விரைவாகவே உயர்ந்த சாந்தியடைகிறான்.

(40) அறிவில்லாதவன், சிரத்தையில்லாதவன், ஐயந் தீராதவன்-அழிகின்றான், ஐயந்தீராதவனுக்கு இவ்வுலகமில்லை; பரலோகமில்லை; இன்பமில்லை.



(41) யோகத்தால் செயல்களைத் துறந்தவன், அறிவினால் ஐயத்தைப் பிளந்தவன், தன்னைத்தான் உடையவன் - அவனை தனஞ்சயா! தொழில்கள் கட்டுப்படுத்துவதில்லை.

(42) ஆதலால் அஞ்ஞானத்திலே பிறந்து உனது நெஞ்சில் குடியிருக்கும் இந்த ஐயத்தை, ஆத்மாவின் ஞானவாளினால் வீசியெறிந்துவிட்டு, யோகத்திலே நிலைகொள். பார்த்தா! எழுந்து நில.

## சத்திய மார்க்கம்.

ஸ்ரீமான் சிவசுப்ரமணியம் அவர்கள் மொழி பெயர்த்தது.

(தொடர்ச்சி)

பழய புராணங்களில் அட்லாண்டா என்பவளைப் பற்றி ஓர் மிகவும் அழகிய கதை உண்டு. அட்லாண்டா என்பவள் ஒரு பலசாலியுடன் ஒரு பந்தய ஓட்டம் ஓடும்படி நேர்ந்தது. அவள் யாருக்கு முந்தியும் ஓடிவிடுவாள். ஒருவரும் அவளை ஓட்டத்தில் ஜெயிக்க முடியாது. ஆனால் ஒருவன் தனது இஷ்ட தேவதையாகிய பிரகஸ்பதியிடம் சென்று அட்லாண்டாவுக்கு முன்பு ஓடி அவளை ஜெயிப்பதற்கு ஓர் தந்திரம் போதிக்கும்படி கேட்டுக் கொண்டான். பிரகஸ்பதி, இவர்கள் ஓடும்படியான மார்க்கத்தில் தங்கக் கட்டிகளை அங்கங்கே போட்டு வைக்கும்படி ஓர் தந்திரம் சொல்லிக் கொடுத்தது. தேவதைகளிலெல்லாம் சிறந்த ஓர் தேவதையினிடமிருந்து கிடைத்த ஓர் வரத்தினால் இந்த அட்லாண்டா பிரபஞ்சம் முழுவதிலும் ஒப்புவமையற்ற பலத்தையும் வேகத்தையும் அடைந்திருந்தாள். ஆனால் பிரகஸ்பதி பக்தன் பிரகஸ்பதி கூறியபடியே செய்துவிட்டு அட்லாண்டாவிடம் வந்து தன்னுடன் பந்தயம் இட்டு ஓடும்படி அவளை அழைத்தனன். இருவரும் ஓடத் துவக்கினர். இம்மனிதன் சீக்கிரத்திலேயே அட்லாண்டாவைவிட மிகவும் பின்னடைந்தவன்; ஆதலால் அட்லாண்டா ஓர் நிமிஷ நேரத்தில் அவனுக்கு முந்தி ஓடிவிட்டாள். ஆனால் அவள் அவன் கண்களுக்குப் புலப்படாமலிருக்க, அட்லாண்டா வழியெங்கும் கிடக்கப்பட்ட பொற் கட்டிகளைக் கண்டு பொறுக்கத் தொடங்கினள். அவள் இங்ஙனம் பொறுக்கிக் கொண்டிருக்கை

யில் அவன் அவளை முந்திவிட்டான். மறுபடியும் மார்க்கத்தின் இடது புறத்தில் ஓர் பொற்கட்டியிருப்பதை அவள் கண்ணுற்று அதையெடுக்கச் சென்றாள், இதற்குள்ளாக அம்மனிதன் அவளை முந்திவிட்டான். சிறிது நேரத்திற்கெல்லாம் அவனுக்கு முந்தியோடி, அங்கு சில பொற் கட்டிகளைக் கண்டனள், அவைகளை பொறுக்கும் பொருட்டு அவள் குனிந்து நிற்க, அம்மனிதன் அவளுக்கு முந்திவிட்டான். இம்மாதிரியே இருவரும் ஒருவருக்கொருவர் முன்னும் பின்னும் பின்னும் முன்னுமாக ஓட்டம் முடியும் பரியந்தம் ஓடினர். அட்லாண்டா மிகவும் பாரமான பொற்சுமையைத் தூக்கிக்கொண்டு அவனுக்கு முந்தி ஓடக்கூடாமல்போகவே, அம்மனிதனே அட்லாண்டாவை ஜெயித்தனன. அட்லாண்டா சம்பாதித்த தங்கக் குவியலெல்லாம் அவளை ஓட்டத்தில் ஜெயித்த மனிதனுக்கே சேர்ந்துவிட்டன. அவளும் அம்மனிதனுக்கே சொந்தமாயினள். சத்தியமார்க்கமாகிற நீதி வழியில் நடக்க விரும்புகிற பெரும்பான்மையோரும் அவ்வண்ணமே யிருக்கின்றனர். சத்திய மார்க்கத்தில் நீ நடக்கத் துவங்கும் காலத்தில் நின்னைச் சுற்றிலும் பலவிதமான தாழ்ந்த வஸ்துக்களையும் உலக விஷயத்தூண்டுதல்களையும் நீ பார்க்கலாம். அவைகளைப்பொறுக்கியெடுப்பதற்கு நீ குனிவாய். ஆ! இவ்வுலக சுகங்களை, இவ்வுலகத் தூண்டுதல்களை அனுபவிப்பதற்கு நீ வணங்கின நிமிஷமே நீ பின்னின்றுவிடுகிறாய். நீ பந்தய ஓட்டத்தை இழந்து தாமதப்பட்டுக் கீழே விழுந்து விடுகிறாய். நீ எல்லாவற்றையும் இழந்துவிட்டு நினது மார்க்கத்தை பயங்கரப் படுத்திக்கொள்கிறாய். ஜாக்கிரதை! உலகப் பற்றைப்பற்றி, ஜாக்கிரதை. ஜாக்கிரதை! லோகாயதத்தைப்பற்றி ஜாக்கிரதை. நீ சத்தியத்தை அடையும் அதே காலத்தில் உலக சுகங்களை அனுபவிக்கவும் முடியாது. நீ சத்தியானுபவத்தை அடைந்தால் உலக சுகங்களை அனுபவிக்க முடியாது என்று ஆன்றோர் உரைக்கின்றனர். உலகசுகங்களை அனுபவித்தால் சத்தியவஸ்து நினது பிடியினின்றும் நழுவும், சத்தியம் உனக்கு முன்பு ஓடிப்போய்விடும். அநேகர் இராமனிடத்திற்கு வந்து எங்களுக்கு ஞானானுபவம் வேண்டுமென்று கேட்கின்றனர். நீங்கள் இந்நிமிடத்திலேயே ஞானானுபவிகள் ஆகக் கூடும்: பற்றுதல்களை நீக்கிவிடுங்கள், பகையையும் பொறாமையையுங்களைந்தெறியுங்கள். பொறாமை என்பது யாது? பகை என்பது யாது?



நலை கிழாக மாற்றப்பட்டப் பற்றுக்களே யாகும். சில வஸ்துக்களினிடத்துள்ள பற்றுதல்களினாலேயே சிலரை நாம் பகைக்கிறோம். நமது புத்திரர்கள், நமது சகோதரர்கள், நமது புருஷர்கள் முதலானவர்களை எங்ஙனம் நீக்கிவிடுவது என்று நீ கேட்கலாம். இது தான் நீ செய்யவேண்டிய வேலை. எப்படி எவ்விதம் என்பதே உன்னுடைய வேலை; ஆனால் உண்மை யாதெனில், சத்திய வஸ்து அல்லது ஈஸ்வரனை நினது பிதாவாகவும் நினது மாதாவாகவும், நினது பாட்டனாகவும், நினது குறியாகவும் நினது வீடாகவும் நினது செத்துக்களாகவும் நினக்கு அனைத்துமாகவும் பாவித்துக்கொள்; ஒவ்வோர் வஸ்துவினிடத்திலிருந்தும் நினது பற்றுதல்களையெல்லாம் பிரித்து, நினது தெய்வீகத்துமாகிற, ஒரேசத்தியமாகிற, ஒரே விஷயமாகிற ஒரே வஸ்துவினிடத்தில் ஓர் முகப்படுத்திக்கொள். அப்பொழுதே இவ்விடத்திலேயே நீ ஞானனுபவியாய் விடுவாய்.

இந்திய பாஷையில் ஓரழகிய பாடல் உளது. அதை இங்கு படிக்கவேண்டிய அவசியம் இல்லை. அப்பாடலின் சாராம்சம் யாதெனில், தீரனாகிய பிரகலாதன் தனது சத்தியானுபவத்திற்குத் தடையாய் நின்றதனது பிதாவை வெறுத்து விட்டதைப்போல சத்தியமார்க்கத்தில் இடையூறு செய்வது பிதாவாயிருந்தபோதிலும் அவரைமிதித்து மேலேறி கடந்து செல்வாய், என்பதே. நினது மாதா உனது சத்தியானுபவத்திற்குத் தடையாயிருந்தால் அவளை வெறுத்துவிடு. உன்பெற்றோர்களின் நிமித்தம் உண்மையை நேசி. நினது சத்தியமார்க்க யாத்திரையை எவ்வளவு தூரம் தடைசெய்யாமலிருக்கிறார்களோ அவ்வளவு மட்டும் உன் பெற்றோர்களை நேசித்துகண்ணியதை செய்து கனப்படுத்து. நினது சகோதரன் நினது சத்தியானுபவ மார்க்கத்தில் இடையூறாய் இருப்பானாயின், விபீஷணன் செய்ததைப்போல உதறிவிடு. நினது சத்தியானுபவ மார்க்கத்தில் நினது மனைவி இடையூறாயிருந்தால் பர்த்திருஹரியைப்போல் அவளைத்தள்ளிவிடு. நினது சத்தியானுபவமார்க்கத்தில் உனது புருஷன் இடையூறாயிருந்தால் மீராசெய்ததைப்போல் அவனை அகற்றி விடு. நினது ஆசாரியர், மதபோதகர்சத்தியானுபவமார்க்கத்தில் தடையாயின் பீஷ்மரைப்போல் அவரையும் வெறுத்துவிடு, ஏனென்றால் உனது உண்மையான பந்து, நினது அந்தரங்க ஆப்தன் சத்தியம், சத்தியமேயாகும்.

மற்றபந்துக்களனைவரும், மற்ற மித்திரர்களனைவரும் ஒரேநாள் இருந்து விட்டு ஓடப்பட்டவர்களே: ஆனால் சத்தியவஸ்து உன்னுடன் சதா இருக்கிறது. சத்தியமே உனது வாஸ்தவமான ஆத்மா; சத்தியம் உனது பெற்றோர்களைப் பார்க்கிலும் உனக்கு அதிகம் நெருங்கியிருக்கிறது; உனக்கு சத்தியம், உனது மனைவி, குழந்தைகள், சிநேகிதர்கள் இவர்களனைவரையும் பார்க்கிலும் சமீபத்ததாயிருக்கிறது. அரசர்கள், பெற்றோர்கள், குழந்தைகள், பிதாமாதா முதலிய எல்லோரையும் காட்டிலும் சத்தியவஸ்துவை மிகவும் மேன்மைபாராட்டு.

(தொடரும்).

## ஓர் உத்தமபுருஷரின் உபதேசம்.

உன்னிடத்தில் அன்பு இருக்கிறதா?—நீ சர்வசக்தன். நீ பூர்த்தியாக ஸ்வயநன்மையற்று இருக்கிறாயா? நீ தடைப்படாதன்.

* * * *

எளியவர்களிடத்திலும் தாழ்ந்தவர்களிடத்திலும் மரணபரியந்தம் கூட இரக்கம்வைத்தல்—இதுவே எமது கொள்கை.

* * *

உனது ஜீவிதகாலமோ மிகக்கொஞ்சம்; உலக வினைத்தனங்களோ அழிவுறுவன; ஆனால் எவர்கள் மற்றவர்கட்காக ஜீவிக்கின்றனரோ அவர்களே ஜீவிக்கின்றனர். மற்றவர்கள் உயிரோடிருக்கிலும் இறந்தவர்களே.

* * *

எளியவர்களிடத்திலும், பலஹீனர்களிடத்திலும், வியாதியஸ்தர்களிடத்திலும் யாவன் ஒருவன் சிவத்தைப் பார்க்கிறானோ, அவனே சிவத்தை உண்மையாகப் பூஜிப்பவன்; ஒருவன் விக்கிரகத்தில் மாத்திரம் சிவத்தைப்பார்ப்பானாயின், அவனது பூஜை ஆரம்பமாத்திரமாம். எவனொருவன் ஒரு ஏழையினிடத்தில் சிவத்தைப்பார்த்து அவ்வேழைக்கு ஊழியம் செய்து உதவிசெய்கிறானோ அவனிடத்தில்—கோவில்களில் மாத்திரம் சிவத்தைப் பார்க்கிறமனிதனிலும்—சிவசொரூபமாகிய ஈஸ்வரன் அதிகமாக ஆனந்திக்கின்றார்.

* * *



நாம் நம்மைச் சுற்றிலும் எங்கும் பார்க்கின்ற விராட்டாகிய ஈஸ்வரனைப்பூஜிக்காமல், வேறு எந்த வீண்தேவதைகளைப் பூஜிப்பீர்கள்?

* * *

ஒருபுத்தர் வெளியிற்றோன்றுவதற்கு முன்பு, எத்தனைபுத்தர்கள் இறக்கின்றனர்? எனக்கு ஈஸ்வரனிடத்தில் நம்பிக்கையுண்டு; எனக்கு மனிதனிடத்தில் நம்பிக்கையுண்டு; துன்புறுபவர்கட்குத் துணைபுரிவதில் எனக்கு நம்பிக்கையுண்டு; மற்றவர்கட்குப் பணிவிடை செய்யும்பொருட்டு நரகினுக்கும் செல்வதில் எனக்கு நம்பிக்கையுண்டு.

* * * *

வினா.—நான் எப்பொழுது வீடு அடைவேன்?

விடை:—"நான்" என்றதை விட்டபொழுது.

* * *

"யான்" என்பதும் "எனது" என்பதும் அஞ்ஞானம், "நீ" என்பதும் "உனது" என்பதும் ஞானம்.

* * *

எனதுமதம் நினைத்தற்கரிய நினைப்பை நினைப்பதும் செல்லமுடியாதவழியிற் செல்வதும் வசனாதீதமான உலகத்தைப் பற்றி வசனிப்பதுமேயாம்.

* * *

இந்திய ஜனசமூகத்தைக் கொல்ல முடியாது. அது (இந்திய ஜனசமூகம்) மரணரஹிதமாய் நிற்கின்றது; ஆத்மவஸ்து அஸ்திவாரமாயுள்ள வரையில் அது அங்ஙனமே நிற்கும். அவர்கள் (இந்தியஜனசமூகத்தார்) ஏழ்மையடைந்து வறுமையினால் பீடிக்கப்பட்டுப் பிச்சைக்காரர்களாயிருக்கலாம், ஒருவேளை எக்காலத்திலும் அவர்கள் அழுக்கு நிறைந்தவர்களாயும் (பார்வைக்கு) அருவருக்கத்தக்கவர்களாயும் ஆகலாம்; ஆனால் அவர்கள் அவர்களுடைய ஈஸ்வரனை விடாதிருப்பார்களாக, அவர்கள் தாங்கள் மகரிஷிகளின் சந்ததியார் என்பதை மறவாதிருப்பார்களாக.

* * *

லட்சக்கணக்கான ஜனங்கள் பசியினாலும் அறிவின்மையாலும் பீடிக்கப்பட்டிருக்கிறவரையில், அவர்களுடைய செலவில் படிப்பிக்கப்பெற்றும் அவர்களைப்பற்றிச் சிறிதும் கவனியாதிருக்கிற ஒவ்வொருமனிதனையும் ஒரு விஸ்வாசகாதகனாக நினைக்கின்றேன்.

* * *

எளியவர்கள், தாழ்ந்தவர்கள், அறிவினர்கள்—இவர்கள் உனது ஈஸ்வரனாயிருக்கட்டும்.

* * *

எனது பக்திக்காவது முக்திக்காவது நான் எள்ளளவும் லட்சியம் செய்கிறதில்லை. பிறருக்கு நன்மைசெய்யும் பொருட்டு லட்சக்கணக்கான நரகங்கட்குப் போகவும் விரும்புகிறேன்—அது எனது தர்மம். இப்பெரியகாரியத்தில் உதவிசெய்பவனே,உண்மையிற் பாக்கியவான்.

* * *

யாவனொருவன் எளியவரிடத்தும் அறிவினரிடத்தும்தாழ்ந்தோரிடத்தும் அநுதாபம் காட்டுகிறானோ, (யாவனொருவன்)ஹிருதயம் நின்று போகும்வரையில், மூளை மயக்கமுறும்வரையில், தனக்குப் பித்துப்பிடித்து விடுமென்று அவன் நினைக்கிறவரையில் அநுதபிக்கின்றானோ, அவனே உயிர் வாழ்கின்றான். அப்பொழுது சகாயம், சக்தி, நிகரற்றவல்லமை இவைகள் உண்டாகும்.

* * * *

எவருடைய ஹிருதயம் எளியவர்களின் பொருட்டு ரத்தம் பொழியுமோ அவரையே நான் மஹாத்மா எனக்கூறுகின்றேன். (எளியவர்களின் பொருட்டு ரத்தம் பொழிதல்) இல்லாவிடில், அவன் துராத்மாவே.

* * *

எனது ஜீவிதம் மனுஷவர்க்கத்தினுடைய பலிபீடத்தில் பலியாகும் நந்நாள் எந்நாளோ?.

* * *

நான் எவருடைய வேலைக்காரனுமன்று; ஈஸ்வரனுடைய பணியாளனுமன்று, ஆனால் நான் பிறருக்குத் தொண்டு புரியும் புண்ணியவான்கட்கே வேலையாளன்.

# ஜோடிமோதிரம்.

பிரம்ஹ ஸ்ரீ தி. ராமஸ்வாமி அய்யங்காரவர்கள் எழுதியது.

பூந்தோட்டத்தினிடையே ஒரு லதா மண்டபத்தில் இருவர் நின்று கொண்டிருந்தனர். அபொழுது அகண்டமான நீலக்கடல் மிகவும் புராதனமாகிய தாம்ரலிப்த நகரத்தில் மோதிக் கொண்டிருந்தது. அலைமோதுகிற ஒலிமிகவும் மெதுவானது. தாம்ரலிப்தத்தின் கோடியில் சமுத்திரக்கரையில் ஒருவிசித்திரக்கட்டடம் இருந்தது. அதனருகே ஒருதோட்டத்தில் மிகஅழகான ஒரு"பங்களா" இருந்தது. கட்டடம், தோட்டம், பங்களா, இவைகளெல்லாம் தனதாலர் என்ற ஒரு செட்டியுடையது. செட்டியின் பெண் ஹிரண்மயி தான் லதாமண்டபத்தில் நின்று கொண்டு ஒரு இளவயதுப்பிள்ளையுடன் வார்த்தை சொல்லிக்கொண்டிருக்கிறாள்.

ஹிரண்மயிக்குக் கலியாணம் பண்ணுகிறவயதுக்குக் கொஞ்சம் ஜாஸ்தியாகிவிட்டது. அவள் "தனக்குப் பிடிச்ச புருஷன்வரணும்" என்று பதினோருவது வயதுமுதல் விடாமல் ஐந்து வருஷம் கடல்தெய்வத்துக்குப் பூஜை செய்து கொண்டு வந்தாள். ஆனால் அவள் மனோரதம் வீணாய்ப் போகவில்லை. ருதுவானபெண் ஏன் தனியாக இந்த இளைஞனோடு வார்த்தை சொல்லிக்கொண்டிருக்கிறாள் என்பது எல்லாருக்கும் தெரியும். ஹிரண்மயி நான்கு வயது குழந்தையாக இருந்தாள். அப்பொழுது இவனுக்குவயது எட்டு. இவன் தகப்பனார் சசிகுமார செட்டி, தனதாஸருடைய பக்கத்து வீட்டுக்காரர். அதினால் இரண்டு குழந்தைகளும் சிறுபிராயத்தில் சேர்ந்து விளையாடுவது வழக்கம். சசிகுமாரர் வீட்டிலேயோ அல்லது தனதாஸர் வீட்டிலேயோ ஸதாகாலமும் ஒருவரைவிட்டு ஒருவர் பிரிகிறதில்லை. இப்பொழுது யுவதியின் வயது பதினாறு. இளைஞனுக்கு இருபது இருந்தாலும் இருவருக்குள்ளுமிருந்த குழந்தைப்பழக்கத்தின் தொடர்பு மாறவில்லை. அதற்கு ஒருதடைதான் ஏற்பட்டது. இவ்விருவருக்கும் விவாகம் செய்து வைக்கவேண்டுமென்று அக்கபிராயத்தில் இருவருடைய தகப்பன்மாரும் நிச்சயித்தார்கள். கலியாணத்திற்கு நாள் முதற்கொண்டு வைத்தாய்விட்டது. இடையொன்று ஹிரண்மயி தகப்ப

"நான் கலியாணம் பண்ணிக்கொடுக்கமாட்டேன்" என்றுசொல்லிவிட்டார். அதற்கப்புறம் ஹிரண்மயி புரந்தரனைச் சந்திக்கவேயில்லை. இன்றைக்குப் புரந்தரன் மிகவும்மன்றாடி ஒரு விசேஷ வார்த்தை இருக்கிறதென்று அவளை லதாமண்டபத்திற்கு அழைத்துக்கொண்டுவந்தான். லதாமண்டபத்திற்கு வந்து, "என்னை ஏன் அழைத்துக்கொண்டுவந்தாய்? நான் இனிமேல் குழந்தையில்லை. மேலும் தனியாக இந்த இடத்தில் இப்பொழுது உன்னைச் சந்திப்பது நன்றாயிராது. இனிமேல் என்னைக் கூப்பிட்டால் நான் வரமாட்டேன்" என்று சொன்னாள்.

பதினாறு வயதுப்பெண் சொல்லுகிறாள் "நான் இனிமேல் குழந்தையில்லை" என்று. இது ரொம்ப ருசியானவார்த்தை. ஆனால் அந்த ரஸத்தை அனுபவிக்கக் கூடிய மனிதர் அங்கே யாருமில்லை. புரந்தரனுடைய வயதும், மனோபாவமும் அந்தவழியில் இல்லை.

மண்டபத்தில் தொங்கிக்கொண்டிருந்த கொடியிலிருந்து புரந்தரன் ஒரு புஷ்பத்தைப் பறித்து, அதைக் கிள்ளியெறிந்து கொண்டு "நான் உன்னை இனிமேல் கூப்பிடமாட்டேன். தூரதேசத்திற்குப் போகிறேன். அதை உனக்குச் சொல்லிவிட்டுப் போகத்தான் வந்தேன்" என்றான்.

ஹிரண்மயி—தூரதேசமா? எங்கே?

புரந்தரன்—சிங்களத்திற்கு.

ஹிரண்மயி—சிங்களத்திற்கா? அது என்னது? ஏன் சிங்களத்திற்குப் போகிறாய்?

புரந்தரன்—"ஏன் போகிறேன்? நாங்கள் எல்லோரும் வர்த்தகர்கள். வியாபாரத்திற்காகப்போகிறேன்". சொல்லச்சொல்லப் புரந்தரன் கண்களிலிருந்து நீர்பெருகிற்று.

ஹிரண்மயிமனம் வாடிப்போய்விட்டது. ஒருவார்த்தையாவது சொல்லவில்லை. இமைகொட்டாத பார்வையுடன் எதிரேயிருந்த கடலின் அலைகளோடு சூரியகிரணங்கள் விளையாடுவதைப் பார்த்துக் கொண்டிருந்தாள். அப்பொழுது காலைநேரம். இளங்காற்று வீசிக்கொண்டிருந்தது. காற்றிலே எழும்பும் அலைகளின் மேல் இளம் வெயில் அடிப்பதுபோலிருந்தது. கடல்நீர் ஒளியுடைய



பலகோடிசன் வளைந்தாற்போலிருந்தது. நீல உடம்பில் "வெள்ளையால்" அலங்கரித்ததுபோல நுரைக்கட்டம் சோபித்தது. கரையில் நீர்ப்பறவைகள் வெள்ளைக்கோடு பரவியதுபோல்கிடந்து கொண்டிருந்தன. ஹிரண்மயி இவையெல்லாம் பார்த்தாள். நீல ஸமுத்திரத்தைப்பார்த்தாள். அலைகளின் சிகரத்தில் நுரைமாலையைப் பார்த்தாள். சூரியகிரணங்களின் விளையாட்டைப்பார்த்தாள். தூரப்பாய்விரித்துச்சென்ற ஒரு கப்பலைப்பார்த்தாள். நீல வானத்தில் கரியபுள்ளியைப்போல் ஒரு பக்ஷிபறந்தது. அதையும் பார்த்தாள். கடைசியில் தரையில் விழுந்துகிடந்த ஒரு வாடின புஷ்பத்தைப்பார்த்துப் பார்த்து "நீ ஏன்போகவேணும்? முன்தினதடவைகளிலெல்லாம் உன் தந்தை போவது வழக்கமாயிற்றே" என்றாள். புரந்தரன்சொன்னான் "அப்பாவுக்கு வயதாகிவிட்டது. இப்பொழுது நான் சம்பாதிக்கிற காலம் வந்துவிட்டது. நான்போகிறது சரியென்று அப்பா சம்மதித்து விட்டார்".

ஹிரண்மயி லதா மண்டபத்தில் ஒருகட்டையின்மேல் தலையைச் சாய்த்துக்கொண்டாள். புரந்தரன் பார்த்தான், "அவளுடைய தலை தொங்கிப்போய் விட்டது; உதடுகள் அடித்துக்கொண்டிருந்தன. மூக்கு அகன்று போய்விட்டது." ஹிரண்மயி அழுகையில் விழுந்துவிட்டாள்.

புரந்தரன் முகத்தைத் திருப்பிக்கொண்டான். அவன் ஒருதடவை வானம் பூமி, நகரம், கடல் இவையெல்லாம் பார்த்தான். ஆனால் அவையொன்றிலாவது அவன் பார்வை தரிக்கவில்லை. கண்ணீர் தாரையாகப் பெருகிற்று. புரந்தரன் கண்ணைத்துடைத்துக் கொண்டு பின்வருமாறு சொன்னான். "இந்தவார்த்தை சொல்லுவதற்காகத்தான் வந்தேன். என்றைக்கு உன் தகப்பனார் உன்னை எப்போது எனக்குக்கலியாணம் செய்து கொடுக்கமாட்டேன் என்றாரோ அன்று முதல் நான் சிங்களம் போகிற எண்ணத்தை ஸ்திரப்படுத்திக் கொண்டேன். சிங்களத்திலிருந்து திரும்பிவர வேண்டாம் என்று எனக்கு இச்சை. எப்பொழுதாவது உன்னை மறக்கக் கூடுமானால் அப்பொழுது திரும்பிவருவேன். எனக்கு அதிக வார்த்தை பேசத்தெரியாது. இதுமாத்திரம் எனக்குத் தெரியும்: இந்த உலகமும் அதன் சுகங்களும் ஒருபக்கத்திலும் நீ ஒருபக்கத்திலும் இருக்கும்பக்ஷத்தில், எனக்கு உன்னைக்காட்டிலும் இந்தலோகசுகங்கள் பெரிதல்ல". இதைச்சொல்லி [illegible]

தரன் திரும்பி, முன்னும்பின்னும் நடந்து கொண்டு, வேறொரு மரத்தின் இலையைக்கிள்ளி எறிந்தான். அழுகை கொஞ்சம் குறைந்தது. திரும்பிவந்து "நீ என்னைக்காதலிக்கிறாய் என்பது எனக்குத்தெரியும். ஆனால் அதுபோகட்டும். நீ அன்னியன் ஸ்திரீயாகப் போகிறாய், ஆகையால் என்னை இனிமேல் உன்மனதில்கொஞ்சங் கூட நினைக்காதே. உன்னை நான் இந்த ஜன்மத்தில் இனிமேல் சந்திக்கக் கூடாது என்று தான் நான்வேண்டிக்கொள்ளுகிறேன்". என்று சொல்லிப் புரந்தரன் மிகவும் வேகமாக வெளியே போய் விட்டான்.

ஹிரண்மயி உட்கார்ந்துகொண்டு அழ ஆரம்பித்தாள். அழுகையை அடக்கிக்கொண்டு ஒருவாறு யோசிக்கலானாள் "இன்றைக்கு நான் செத்துவிட்டால் அப்புறம் புரந்தரன் சிங்களத்துக்குப் போக நேருமா, என்ன? நான் ஏன் கழுத்தில் சுருக்குப் போட்டுக் கொண்டு செத்துப்போகப்படாது? அல்லது சமுத்திரத்திலே தான் விழப்படாதா, என்ன?" அப்புறம் நினைத்தாள் "அவன் சிங்களத்துக்குப்போகட்டும், போகாமல் இருக்கட்டும்; அது எனக்கென்ன?" இப்படி நினைத்துக் கொண்டு மறுபடியும் அழ உட்கார்ந்துவிட்டாள்.

## சமாச்சாரக்குறிப்புகள்.

லாகூரில் ஜமீந்தார் என்றபத்திரிகை கவர்ன்மெண்டாரிடம் ஜாமீன் கட்டியிருந்த ரொக்கரூபாய் இரண்டாயிரத்தையும் சுமார் இரண்டு மூன்று மாதங்கட்கு முன்புதான் இழந்து விட்டது. பின்னர் ரூபாய்பதினாயிரம் ரொக்கம் ஜாமீன் அந்தபத்திரிகையினின்றும் கவர்ன்மெண்டார் வாங்கிக் கொண்டனர். இப்பொழுது அந்த பத்திரிகை ஏதோராஜாங்க விரோதமாய் எழுதிற்று என்று பஞ்சாப் கவர்ன்மெண்டார் ரூபாய் பதினாயிரத்தையும் கவர்ன்மெண்டாருக்குச் சேர்த்துக் கொண்டனர். ஜமீந்தார் இப்பொழுது பிச்சைக்காரனாய்த் தெருவில் நிற்கிறார். அச்சுக் கூடங்களைப் பற்றியுள்ள நூதன சட்டம் இருக்கும் வரையில் நாமும் இவ்வளவுதான் எழுதலாம். ஸ்வதந்திரப்பெருமை பாராட்டுகின்ற ஆங்கில அரசாட்சியார், பத்திரிகைகளின் ஸ்வதந்திரத்தினாலேயே முன்



னேற்றத்தில் வந்துள்ள தேசத்தின் ஜனங்களாகிய பிரிட்டிஷார் இந்தியாதேயத்துப் பத்திரிகைகளின் ஸ்வதந்திரத்தை அடக்கி வைத்திருப்பது ஆச்சரியமே!

* * *

திருப்பத்தூரில் மாஜிஸ்டிரேட்டாயிருக்கும் ஸைக்ஸ் என்னும் பெயருடையதுரை பிரம்படி அடிப்பதில் பிரக்கியாதியடைந்திருக்கிறார். இவருடைய பிரம்படித்தண்டனைகளையெல்லாம் இவர் தாமே நிறைவேற்றுவாராம்! முனியன் என்று பெயருடைய ஒருவனை இவர்தாமே விதித்த சவுக்கடி தண்டனையை போலீஸ் கான்ஸ்டேபிளுக்குப் பதிலாக தாமே தமதுகையிற் பிரம்பையெடுத்து அவனைப்படுக்கவைத்து, டாக்டரையும் சமீபத்தில் வைத்துக் கொள்ளாமல், அவனுடைய பின்புறத்தில் தமதுகையினாலேயே பிரம்புகொண்டு அடித்து மனதாறக் களித்தனர் என்று அவ்வூரில் பிரதானிகளாயுள்ள சிலர் சென்னைமாநகரிலிருக்கும் முக்கியபத்திரிகைகளுக்கெல்லாம் தெரிவித்தனர். சென்ற சட்ட நிர்வாகசபையில் சில அங்கத்தினர் இவ்விஷயத்தைப்பற்றிக் கேள்விகள் கேட்க, கவர்ன்மெண்டார் மேற்சொன்ன விஷயம் முழுப் பொய்யென்றும் ஆனால் அந்த மாஜிஸ்டிரேட் சிலசிறுபையன்களுக்குப் பிரம்படிதண்டனை விதித்த காலையில் அப்பையனைத்தாமே பிரம்புகொண்டு அடித்துள்ளது வாஸ்தவமென்றும் அவர் அப்படிச் செய்ததும் அந்தப்பையன்களின் நன்மையைக் கருதியேயென்றும் பதில் உரைத்து விட்டனர். இதனால் சிலசந்தேகங்கள் நமக்கு உண்டாகின்றன. கவர்ன்மெண்டார் பொய் சொல்லி முழுப் பூசினிக்காயைச் சோற்றுக்குள் அமுக்கிவிட்டனர்களா? அல்லது திருப்பத்தூர் ஜனங்கள் பத்திரிகைகட்கு எழுதியது பொய்யா? சென்னையில் நடக்கும் பத்திரிகைகள் பொய்யைப் பிரசுரப்படுத்தி, ராஜாங்க ஐரோப்பிய உத்தியோகஸ்தர் ஒருவரை வீண் அபவாதத்திற்குட் படுத்தியது பெருங்குற்றமன்றோ? இச்சந்தேகங்கள் நியாயஸ்தலங்களிலேயே நிவிர்த்தியாக வேண்டியிருக்கின்றன. ஆனால் எவர் இவ்விஷயத்தை நியாயஸ்தலம் வரையில் கொண்டுசெல்வர்?

ஸைக்ஸ்துரை சிறு பையன்களுக்குத் தாம் விதிக்கும் பிரம்படிதண்டனையைத் தாமேதமது கையினால் அந்தப்பையன்களின் நன்மையை உத்தேசித்து நிறைவேற்றியிருக்கிறார் என்று கவர்ன்

மெண்டார் கூறிய மார்க்கத்திலிருந்து அவர் பிரம்படி அடிப்பதில் மிகச்சமர்த்தர் என்று நாம் கேள்விப்படுகிறோம். பிரம்படிக் கலாசாலை என்று ஒருகலாசாலையை ஏற்படுத்தி சென்னை ராஜதானியிலுள்ள மாஜிஸ்டிரேட்டு கோர்ட்டுகள் தோறும் விதிக்கப்படும் பிரம்படித் தண்டனைகளை நிறைவேற்றும்படியாக, இந்த வயதுக்குட்பட்டவர்களை இப்படி அடிக்கவேண்டும், இந்த மாதிரி சரீரக்கட்டுள்ளவர்களை இவ்விதம் அடிக்கவேண்டும், பிரம்பு இத்தகையதாயிருக்கவேண்டும், இம்மாதிரிகையிற் பிடிக்கவேண்டும், இம்மாதிரி நிற்கவேண்டும் என்பனவற்றைச் சிலருக்கு நன்றாகக்கற்றுக்கொடுப்பதற்கு, திருப்பத்தூர் மாஜிஸ்டிரேட்டாயிருக்கும் லைக்ஸ் துரையை கவர்ன்மெண்டார் அக்கலாசாலையின் தலைமை உபாத்தியாயராக நியமிப்பார்களாயின், லைக்ஸ் துரைக்குச் சந்தோஷமாயிருக்குமென்று நாம் நினைக்கிறோம்.

ஜெயில்களில் நூதனமாய் நியமிக்கப்படும் சூப்பிரெண்டெண்டுகளெல்லாம் டாக்டர்களாயிருக்கவேண்டுமென்று கவர்ன்மெண்டார் ஒரு புதுவிதி ஏற்படுத்தியிருந்தது போல, ஐ-ஸி-எஸ் பரீக்ஷைதேர்ந்து வருகின்ற மாஜிஸ்டிரேட்டுகளும் டாக்டர் பரீட்சையில் தேர்ச்சியடைந்து வரவேண்டுமென்று ஒரு புதிய உத்தரவு பிறப்பிக்கும் படி நாம் கவர்ன்மெண்டாரைக் கெஞ்சிக் கேட்டுக்கொள்கிறோம்; ஏனென்றால் அப்பொழுது டாக்டர் பிரம்படிபெறுவானுடைய சரீரஸ்திதியைப் பரிசோதனை செய்து பார்ப்பதற்குச் சமீபத்தில் இல்லாதிருக்கும்பொழுதே பிரம்படி தண்டனையை மாஜிஸ்டிரேட் நிறைவேற்றி விட்டாரென்று பொதுஜனங்களும்பத்திரிகைகளும் கூக்குரலிடுவதற்கு இடம் இராது.

பாபா பிரேமானந்த பாரதி என்னும் மகான் ஸ்ரீ கிருஷ்ண[illegible]வில் மகாசமாதியடைந்து விட்டாரென்று கேள்வியுற்று நாம் மிகவும் விசனிக்கிறோம். இவர் வங்காளத்தில் ஓர் உயர்ந்த குடும்பத்தில் 1857-ம் வருஷத்தில் பிறந்தவர். இவர் ஐரோப்பிய கலைகளிலும் ஆரியசாஸ்திரங்களிலும் நன்றாய் விற்பத்தியுள்ளவர். சுமார் 25-வருஷங்களுக்குமுன் இவர் பிரபஞ்சப்பற்றுகளையெல்லாம் துறந்துவிட்டு சந்நியாசியாகி விட்டார். ஐரோப்பா தேசத்திற்கும் அமெரிக்கா தேசத்திற்கும் இருமுறை சென்றிருந்தார். ஸ்ரீகிருஷ்ணப்பிரேமம் மிகுந்தவர்; பக்திசிரேஷ்டர்.

OFFICE OF THE REGISTRAR OF BOOKS. 21 MAR 1914 MADRAS.


# ஞானபாநு

VOL - 1. தொகுதி - க. | March 1914. பிரமாதீசஹு பங்குனிமீ | No - 12. பகுதி - 12.


## ப்ரணவ ப்ரதாபம்.

ஆர். எஸ். கங்கா ஜடேச சர்மா அவர்க ளெழுதியது.

அறிவோம் அருள் செறிவோம் தொழில்
புரிவோம் பொருள் விரிவோம். (1)
ஆடுவோம் ஒன்று கூடுவோம் பொருள்
தேடுவோம் உண்மை நாடுவோம். (2)
இருப்போம் துன்பம் பொறுப்போம் சுகம்
வெறுப்போம் மையல் அறுப்போம். (3)
ஈட்டுவோம் மெய்யை நாட்டுவோம் தீதை
ஓட்டுவோம் திறன் காட்டுவோம். (4)
உரைப்போம் உண்மை கரைப்போம் மனம்
அரைப்போம் அன்பை இறைப்போம். (5)
ஊரிலோம் ஒரு பேரிலோம் பெரி
யாரிலோம் பல சீரிலோம். (6)
எதிர்ப்போம் செய்கை அதிர்ப்போம் விதிர்
விதிர்ப்போம் கண்ணீர் உதிர்ப்போம். (7)
ஏற்றுவோம் எங்கும் போற்றுவோம் பறை
சாற்றுவோம் பாவ மாற்றுவோம். (8)
ஐயமற்றோம் பொய்யு மற்றோம் மெய்யைப்
பெற்றோம் நைய லுற்றோம். (9)
ஒறுப்போம் குற்றம் பொறுப்போம் பிறவி
அறுப் போம் கடவுள் உறுப்போம். (10)
ஓங்குவோம் கவலை நீங்குவோம் உலகைத்
தாங்குவோம் கருணை வாங்குவோம். (11)
கண்டோம் கவலை விண்டோம் களி
கொண்டோம் அமு துண்டோம். (12)
கானத்தோம் மிகு ஞானத்தோம் வளர்
வானத்தோம் நல்ல மோனத்தோம். (13)

கெஞ்சோம் ஒன்று மஞ்சோம் நீதி
எஞ்சோம் மிகக் கொஞ்சோம். (14)
கொன்றோம் கொடுமை வென்றோம் மனம்
என்றோம் நிலை நின்றோம். (15)
சகத்துளோம் முத்தர் அகத்துளோம் பத்தர்
இகத்துளோம் சித்தர் முகத்துளோம். (16)
தடுத்துளோம் தீமை படுத்துளோம் தயை
யெடுத்துளோம் சுகங் கொடுத்துளோம். (17)
பொழிவோம் மாரி ஒழிவோம் துன்பம்
ஒழிவோம் பற்றிப் பிழிவோம். (18)
போக்குவோம் இருள் தூக்குவோம் அருள்
ஆக்குவோம் எங்குந் தாக்குவோம். (19)
மண்ணுளோம் உயர் விண்ணுளோம் எங்குங்
கண்ணுளோம் பல வெண்ணுளோம். (20)
வந்துளோம் எங்கும் தந்துளோம் அகம
றிந்துளோம் மனமு வந்துளோம். (21)
வல்லோம் எல்லாம் பொல்லோம் மிக
நல்லோம் பற்றே யில்லோம். (22)
ஆதியோம் பரஞ் சோதியோம் மிகு
நீதியோம் உயர் சாதியோம். (23)
ஆவோம் எங்கும் போவோம் கலை
நாவோம் பிறப் டாவோம். (24)
ஆறுவோம் சினம் கூறுவோம் உண்மை
தேறுவோம் கரை ஏறுவோம். (25)
ஒளியோம் வன்னக் கிளியோம் இன்பக்
களியோம் பல்லை இளியோம். (26)
ஒழிப்போம் பாபம் அழிப்போம் கண்ணை
விழிப்போம் காலனை கழிப்போம். (27)

குறிப்பு:—இதில் நூற்றெட்டு முறை ஓம் என்னும் ப்ரணவம் ஒலிப்பதைக் காண்க.

# நமது பின்னோக்கம்.

பன்னிரண்டாவது பகுதியாகிய இம்மாதத்துச் சஞ்சிகையுடன் நமது முதலாவது தொகுதி முடிவுறுகின்றது. இப்பொழுது நாம் இந்த ஒருவருஷ காலமாக நடந்துவந்த மார்க்கத்தைச் சிறிது திரும்பிப்பார்ப்போம். நமது "பாநு" வின் சென்றவருஷத்துச் சரித்திரத்தைச் சிறிது ஆராய்ந்துபார்ப்போம். பிராரப்த கர்மானுசாரமாகச் சிறைவாசம் செய்ய நேர்ந்த ஸ்ரீ சுப்பிரமணிய சிவம் சிறைவாசத்தைச் சுகவாசமாகக் கழித்து விடுதலையடைந்த பின்னர், அவருடைய "ஜீவஸேவையே சிவஸேவை" என்னும் கொள்கையை எங்கும் பரப்புவதற்கு இப்பத்திரிகை அவருக்கு ஒரு உபகரணமாக ஆரம்பிக்கப்பட்டது. அரசாட்சியாரும் பத்திரிகையை அங்கீகரித்து அநுமதி கொடுப்பதற்கு முதலில் மிகவும் ஆழ்ந்து ஆலோசித்தனரேனும், பின்னர் அநுகூலமாக உத்தரவு கொடுத்தனர். இவ்வருடம் பிறந்த அன்று "பாநு" வாரத்தில் ஞானபாநு தமிழ் உலகில் உதித்தது. அன்றுமுதல் இன்றுவரையில் மெல்லமெல்ல மேன்மேலும் பிரகாசம் மிகுந்து காலம்தவறாது வெளிவந்து பெருகிவருகின்றது. நாம் இப்பத்திரிகையைத் தொடங்கப்போகின்றோமென்று மற்றப் பத்திரிகைகளின் மூலமாய்ப் பொதுஜனங்களுக்குத் தெரிவித்தவுடனேயே- நமது ஞானபாநு உதயமாவதற்கு முன்னமேயே—நம்மீது அன்பு மிகுந்த எத்தனையோ ஸகோதரர்கள் நம்மை ஊக்கி யுதவுவதற்குச் சந்தாதாரர்களாகவும் ஆதரிப்போர்களாகவும் முன்வந்தனர். இங்ஙனம் உதவிசெய்யத் தயாராக முன்வந்த பரோபகாரிகளில் முக்கியமாக மயிலாப்பூர் டாக்டர் எம். வி. நஞ்சுண்டராவ் அவர்களுக்கும் சென்னை சட்டசபை அங்கத்தினர்களில் ஒருவரான கௌரவ ஸ்ரீமான். ராவ்பகதூர் பி. கேசவப்பிள்ளையவர்களுக்கும் நாம் என்றென்றும் நன்றிபாராட்டக் கடமைப் பட்டிருக்கின்றோம் இவ்விருவரும் இன்றும் "ஞானபாநு" வின் க்ஷேமாபிவிருத்தியைக் கருதியவர்களாகவே இருக்கின்றார்கள். இவ்விருவர்களிடத்தும் நாம் எவ்வளவு கடமைப்பட்டிருக்கிறதாகக் கூறினோமோ அவ்வளவும் கடமைப்பட்டிருக்கின்றோம் மற்ற நண்பர்களிடத்தும்.

திடச்சித்தமுடைய தேசாபிமானிகளாலும் சமரஸ ஸ்வபாவத்தை வகித்த சாதுக்களாலும் எழுதப் பெற்ற வியாசங்கள்

கதைகள், உபதேசங்கள், கவிகள் முதலியவற்றைத் தன்னகத்துக் கொண்டு நமது பத்திரிகை மாதந்தோறும் குறித்தகாலத்தில் தவறாது பிரசுரமாய் வருகின்றது. ஸ்ரீ சுப்பிரமணியசிவம் சிறையினின்றும் விடுபட்டுக் கையில் ஓர் காசேனும் மூலதனமென்பதில்லாமல் இந்த ஒருவருஷகாலமாக நமது 'பாநு'வை ஒழுங்காக நடத்திவருவதே "பாநு" பொதுஜனங்களால் அபிமானிக்கப்பட்டு வருகின்றது என்பதற்கு ஓர் சான்றாகும்.

ஆயினும் நாம் எதிர்பார்த்த அளவு உதவியை நம் தமிழ்ப் பாஷா சகோதரர்களிடத்தினின்றும் நாம் அடையவில்லையென்று அதிகவிசனத்துடன் அறிவித்துக் கொள்கிறோம். பங்காள தேசத்தில் பத்திரிகைகட்குப் பதினாயிரக் கணக்கான சந்தாதாரர்கள் இருக்கின்றனராம். இத்தென்னாட்டிலோ ஸ்வபாஷாப் பத்திரிகைகட்கு ஆதரவு என்பதேயில்லை. இது மிகவும் பரிதபிக்கத்தக்கது. ஆகையால் நம்சகோதரர்கள் நம்மைப் போதுமான அளவு ஆதரிக்கவில்லை என்று நாம் குறை கூறுவது ஆச்சர்யமன்று. பொதுஜனங்களுக்குள் கல்வியும் அறிவும் இன்னும் அதிகமாகப் பரவவில்லை. அறிவை விருத்திசெய்து அன்பை வளர்ப்பதற்கு வேண்டிய முயற்சிகளைச் செய்வதே நமது பத்திரிகையின் நோக்கம். நமது ஜன்ம பூமியாகிய பாரதவருஷமும் பிரபஞ்சமும் முன்னேறிச் செல்வதற்கு வேண்டியவழிகளைச் சீராகச் செப்பனிடவேண்டியதே நமதுவேலை. ரஜோகுணவிசேஷமான ராஜாங்க விஷயங்களில் நாம் தலையிட்டுக் கொள்வதில்லை. நம்மைப் போலவே நாற்றச் சரீரத்தைச் சுமந்து கொண்டு ஈற்றில் ஒருபிடி சாம்பலுக்குக் கூடவகையில்லாமல் அழிந்துபோகின்ற முடிமன்னர்களின் வியவகாரங்களில் நாம் கலந்துகொள்வதில்லை. அழிவுறும் வஸ்துக்கள் நமக்கு லட்சியம் அல்ல. அழிவற்ற அநாதிவஸ்துவை அடைதற்கு அழிவுறும் வஸ்துக்கள் சிற்சிலசமயங்களில் ஆரம்பத்தில் அவசிய மாயிருக்கின்றன வாதலால், அவற்றைப்பற்றியுள்ள உண்மைகளை வெளியிடுகின்றோம். சத்தியமும் சாந்தமுமே நமக்கு ராஜாங்கவிஷயங்கள். இவற்றை விருத்திசெய்வதிலும் நிலைநிறுத்துவதிலும் நமக்கு எத்தகைய துன்பங்கள் நேரிட்டபோதிலும் அநுபவிக்கத் தயாராயிருக்கின்றோம். அறிவையும் அன்பையும் அந்நியோந்நியம் உண்டாகும்படி ஜனங்களுக்குள் விசேஷமாகப் பெருக்கி ஒற்றுமை, சத்தியத்தில் மனோதைரியம், திடவைராக்



கியம், சாந்தம். சமபாவனை இவை உண்டாகும்படி நாம்முயற்சித்து வருகிறோம்.

இம் முயற்சியில் நாம் நமது மனச்சாட்சியாகிய ஈஸ்வரனது சந்நிதியில் எது சத்தியமாகத் தோன்றுகிறதோ, அந்த சத்தியத்தை நிலை நிறுத்தும் பொருட்டு நமது உடல், பொருள், ஆவியாகிய மூன்றையும் தியாகம் செய்திருக்கிறோம். நமக்கு ஒருவரிடத்திலும் வெறுப்பு இல்லை. வெறுப்பும் விரோதமும் ஏற்படுவதற்குக்காரணம் அறியாமையே யொழிய வேறொன்றும் இல்லை. அறிவாகிற பாநு அன்பாகிற கிரணங்களை நாலா பக்கங்களிலும் வீசி எல்லாருடைய ஹிருதயங்களிலும் உள்ள இருட்டைத் துரத்தியடித்து நாமரூபங்களைக் களைந்து எல்லாவற்றையும் ஏகவஸ்துவாக்குகின்றதா? என்பதே நமது கவனத்திற்குரிய கேள்வி.

ஸ்ரீமத் விவேகாநந்த ஸ்வாமிகளுடைய அற்புதமான வசனங்களும் ஸ்ரீ பகவத்கீதாநுபவமுமே பாரதபூமியைத் தற்காலத்திய தாழ்ந்தநிலைமையிலிருந்து உத்கிருஷ்ட நிலைமைக்குக் கொண்டுவருதற்கு உபயோகமானவை யென்று உறுதியாக நம்பி, அவற்றை நாம் நமது "பாநு"வில் வற்புறுத்தி வருகின்றோம். வேதாந்த விஷயத்தில் அதிக ருசியில்லாத நமது லௌகிக சகோதரர்களும் சகோதரிகளும் படித்துக் களிக்குமாறு சிறு கதைகளும் சமாச்சாரக் குறிப்புகளும் வெளியிடுகின்றோம்.

நமது "பாநு" வின் சென்றவருஷச் சரித்திரத்தைத் திருப்பிப் பார்க்கும் இச்சமயத்தில் இரண்டொரு விஷயத்தைப்பற்றி நாம் கூறவிரும்புகிறோம். சிலர் பத்திரிகையை மாதந்தோறும் தவறாது வாங்கிப்படித்துவிட்டுச் சந்தாத் தொகைக்குப்பத்திரிகை வி. பி. யில் சென்ற பொழுது, தமக்குத் தேவையில்லை யென்று பத்திரிகையைத் திருப்பி விட்டனர் இவர்கள் இப்படிச் செய்ததினால் நமக்கு நேரிட்ட நஷ்டங்கள் அதிகம். இப்படிச் செய்தவர்களில் கொப்பனப்பட்டி எஸ். ராமநாதன் செட்டியார், பங்களூர் டி. எஸ். கிரியப்பா அண்ட் ஸன்ஸ் என்ற இருவருடைய பெயரை மாத்திரம் குறிப்பிடுகின்றோம், ராமநாதன் செட்டியார் நமது பத்திரிகைக்கு மாத்திரம் அல்ல, நம்மிடத்திலிருந்து அவர் வரவழைத்த சில புத்தகங்களுக்கும் நமக்குப் பணம் கொடுக்க வேண்டியவர். பங்களூர்கிரியப்பா

அண்ட்லண்ஸ் கம்பெனியார் நமக்கு இரண்டு மாசத்து விளம்பர விகிதம் கட்டவேண்டியவர்கள்; இவர் வி பி. யைத் திருப்பிவிட்டு விட்டார். கடிதம் எழுதினால் பதில் எழுதுவதில்லை. இத்தகைய சந்தாதாரர்களும் விளம்பரக் காரர்களும் நம் தேசத்திலுள்ள வரையில், பத்திரிகைகள் பிரபலமாவதற்கு என்னதடை?

இவ்விதமாக, நமது ஞானபாநு சென்ற ஒரு வருஷ காலமாக நடைபெற்றுவருகின்றது. மகத்துக்கு மகத்தாய் மனோதீதமாய் மாயாலீலைகளைப் புரிந்துவருகின்ற மகாசக்தியின் திவ்விய திருவருளால் நமது ஞானபாநுவுக்கு வயது ஒன்று நிரம்பியது. இவ்விதமே, என்றும் சிரஞ்சீவியாய் உலகெங்கும் ஓங்கிப்பிரகாசித்து சமஸ்தகோடி ஜீவராசிகளுக்கும் ஆறுதலை அளித்துத் தேறுதலைக் கொடுத்து மேன்மையடைந்து எப்பொழுதும் நமது ஞானபாநு ஞானகிரணங்களை விரித்து வீசிக்கொண்டிருக்குமாறு நாம்சச்சிதாநந்த சொரூபிணியாகிய சாட்சாத் ஜகதீஸ்வரியின் சரணாரவிந்தங்களில் பணிந்து நிற்கின்றோம்.

## சந்தாதாரர்கட்கு அறிக்கை.

இப்பகுதியுடன் நமது ஞானபாநுவுக்கு ஓராண்டு நிறைந்துவிட்டது. சந்தாதாரர்கட்கெல்லாம் நாம் நன்றிசெலுத்துகிறோம். அடுத்த மாதத்திய சஞ்சிகை தொகுதி 2— பகுதி 1 ஆக வெளிவரும். அதற்குள், ஒருவருடத்திய சந்தா தீர்ந்துவிட்ட சந்தாதாரர்கள் அவர்களுடைய மறுவருடத்திய சந்தாத்தொகையை மணியார்டர் செய்து அனுப்பும்படி அவர்களைக் கேட்டுக்கொள்கிறோம். அப்படி மணியார்டர் செய்யத் தவறிவிடுகிற அல்லது மறந்துவிடுகிற சகோதரர்கட்கு அடுத்த மாதத்துச் சஞ்சிகை வி. பி. மூலமாயனுப்பப்படும். சந்தாதாரர்கள் தயைசெய்து வி. பி. யைப் பெற்றுக்கொண்டு முன்போலவே பத்திரிகையை ஆதரிப்பார்களென்று நம்புகிறோம். ஞானபாநுவின் க்ஷேமத்தை நாடியிருக்கும் சந்தாதாரர்களுக்கும் சந்தாதாரர்களின் க்ஷேமத்தை நாடி உழைக்கும் ஞானபாநுவுக்கும் ஈசன் கிருபை பாலிப்பாராக.

## பார்த்தசாரதியே பாரதசாரதி.

(முன் தொடர்ச்சி)

“ஏ, அர்ஜுனா! நீ என்னிடத்தில் அன்பு நிறைந்தவன், நீ என்னுடைய தோழன்; ஆதலால் உண்மையையே உரைக்கின்றேன். கவனமாகக் கேட்பாயாக. எவன் கர்மங்களின் பயனில் பற்றில்லாதவனாய், அவற்றைப் பற்றிச் சிறிதும் நினைக்காதவனாய்ச் சதாகாலமும் கர்மங்களைச் செய்துவருகின்றானோ, அவனே முக்தன்; அவனுக்குக் கர்ம பந்தங்களில்லை; கட்டுப்பாடுகளில்லை. எவன் செய்கைகளையெல்லாம் செய்துகொண்டு செய்கைபற்றுச் சிந்தையற்று இருக்கிறானோ, எவன் ‘சும்மாவிருக்கச் சுகம்சுகமென்று’ தொழிலற்றுத் துன்பமற்றுச் சுகமாயிருந்துகொண்டு மனோவாக்குக் காயங்களாகிற திரிகரணங்களாலும்எப்பொழுதும் செய்கைகளைச் செய்துவருகின்றானோ அவனே கர்மயோகி. “எத்தொழிலைச் செய்தாலும் ஏதவத்தை பட்டாலும் முத்தர் மனமிருக்கும் மோனத்தே” என்ற உயர் மொழியே உண்மையாகக்கொண்டு அவனவனுக்குக் கர்ம விதியினால் சேர்ந்திருக்கும் தொழிலைத் தனக்குச் சம்பந்தமற்றுச் செய்துவருகின்றவன் எவனோ, அவனே ஞானி.

“எல்லாவற்றையும் ஏகசொரூபமாகிய பிரஹ்மவஸ்துவாகப் பாவித்து, எத்தொழிலையும் செய்க. வேதாதிகளை யுணர்ந்துள்ள விப்பிரர்களிடத்தும் தரணிக்கெல்லாம் தாய்போன்ற பசுவினிடத்தும் சண்டாளத் தன்மையையுடைய நாயினிடத்திலும் அந்த நாயைச் சமைத்துத் தின்போனிடத்திலும் உண்மையாகிய ஓரே வஸ்துவைப் பார்ப்பாயாக. உனக்கு நீயே பந்து; உனக்கு நீயே பகைவன்; ஏனென்றால் உன்னினும் வேறு வஸ்து இல்லவேயில்லை. நன்மையும் தீமையும் நண்பனும் பகைவனும் ஆகிய எல்லாம் ஒன்றே. ஆதலால் நீ விசாரப்படுதல் தகாது.

“அப்படியே, நான் இதுவரை கூறிவந்த நியாயங்களெல்லாம் உனக்குப் புலப்படாமல், இன்னும் நீ கவலைப்படுவாயானால், உன்னால் செய்யத்தக்கது ஒன்றுமில்லை. அகிலாண்டகோடி பிரமாண்டநாயகராய், அணுவுக்கு அணுவாய் மகத்துக்கு மகத்தாய் எங்கெங்கும் எல்லாவற்றிலும் ரூபரகிதனாயும் ரூபசகிதனாயும் ஏகமாய் விளங்குகின்ற என்னுடைய தர்ம சக்கரமானது எனது

இச்சாப் பிரபாவத்தால் எப்பொழுதும் ஓய்வு ஒழிவின்றிச் சுழன்று கொண்டேயிருக்கின்றது. அச்சுழற்சியில் அகப்பட்டுத் தியங்காதவர் எவருமில்லை. மூவர் தேவர் முனிவர்களும் அதில் பட்டு விழிக்கின்றார்கள். நீ இப்பொழுது எதைச் செய்ய விரும்புகிறதில்லையோ, அதை அந்தச் சக்கரச் சுழற்சியின் சக்தியின் பிரபாவத்தால் நீ செய்தே செய்வாய். சந்தேகம் இல்லை. உண்மையையறியாது, பரதந்திரனாய் அதன் வசத்தகப்பட்டு அலங்கண் உறுவதைப்பார்க்கிலும் உண்மையை உள்ளபடி அறிந்து ஸ்வதந்தரனாய்த் தானே சந்தோஷத்துடன் எதிர்ப்படும் செய்கைகளை ஏற்றுக்கொள்ளுதல் மேன்மையே யாகும்.

"தவிர, நீ என்கையிலுள்ள ஆயுதமே. இந்தப் பிரபஞ்ச லீலாவிநோதங்களை யாட்டி நடத்துபவன் நானே, நீ ஒன்றும் செய்வதில்லை. பொறுப்பை யெல்லாம் என்னிற் போட்டுவிடு. என் சந்நிதி மகிமையால், என் சர்வவியாபகத்துவ சாமர்த்தியத்தால், எனது இச்சாமாத்திரத்தால் நீ எக்காரியங்களையும் செய்கிறாய். உனக்கும் அவற்றிற்கும் எவ்வித சம்பந்தமும் இல்லை. ஆகையால் ஒன்றுக்கும் யோசனைபண்ணாதே. எடு வில்லை, தொடு அஸ்திரத்தை; இந்த துஷ்டர்களை லோக சம்ரட்சணார்த்தம், தர்மோத்தாரண நிமித்தம் இந்தப் புல்லியர்களைப் பூர்த்தி செய்து வதைவிடு, எழுந்திரு யுத்தத்திற்கு."

இவ்விதமாகக் கண்ணன் காண்டீபனுக்குக் கர்ச்சனை செய்து இவனுடைய மனத்தைத் தேற்றி உற்சாகம், பயமின்மை, தெளிவு ஆகிய இவற்றை யெல்லாம் மூட்டிவிட்டு "கலங்காத நெஞ்சுடைய ஞானதீர" னாக்கிப்பின் போர்க்களத்தில் தமது பாஞ்சசந்நியத்தை எடுத்து 'பம், பம்' என்று பயங்கரமாக முழக்கிவிட்டார். பாரதயுத்தம் நடந்தது, பாரதபூமி உயர்ந்தது.

சிவம்.

(தொடரும்)

# அகஸ்தீன் என்னும் மகாத்மாவின் விண்ணப்பம்.

ஸ்ரீமத்ஸ்ரீ வ. வே. சுப்பிரமணியய்யரவர்கள் எழுதியது.

கவனிப்பு. [போனமாதசஞ்சிகையில் வந்த இந்தப் புத்தகத்தின் 1-வது பாகத்தில் ஒரு பிழை இருக்கிறது. அதை நேயர்கள் தயவுசெய்து அடியிற்கண்டவிதம் திருத்திக்கொள்ள வேண்டியது. அதாவது, 227-ம் பக்கத்தில் குறிப்பில் 'ஆ, நின்மடியில்' முதல், குறிப்பு முழுவதும், அதாவது "யாரால் தாளும்" வரை, உள்ளதை அடித்துவிடவேண்டியது. தவிர 228-ம் பக்கத்தில் 9-வது 10-வது வரிகளையும் தொடர்ச்சிநோக்கி அடித்து விட வேண்டியது.]

இவ்விதம் துதித்ததில் என்ன பிரமாதமாய்ப் போற்றிவிட்டேன் நின்னை. என் ஈச, என் உயிரே, என்மாசற்ற ஆநந்தமே! நின்னைப்பற்றிப் பேசுபவன் எவன்தான் என்ன சொல்லலாகும்! ஆனால் பேசாதவன் கதி நிர்க்கதியே தானன்றோ? ஏனெனில் மகா கவிகள் கூட நின்னைப்புகழும்போது வெறும் மூங்கையரே யாகிறார்களன்றோ?

ஆ, நின்மடியில் சிசுபோல படுத்து இளைப்பாறமாட்டேனா என் துக்கங்களை மறந்து என் தனிநலமான நின்னை நான் ஆலிங்கனம் செய்யும்பொருட்டு நீ என் இதயத்தில் புகுந்து அதில் ஒரு போதையை ஏற்றமாட்டாயா? எனக்கு நீ என்ன ஆகிறாய்? அதை உரைக்க நின் கருணை எனக்கு அருள் செய்யட்டும். அல்லது நான் தான் நினக்கு என்ன ஆகவேணடும்? என்பக்தியை விரும்புகிறாய். நான்பக்தி செலுத்தாவிடில் சினந்து கொடியதண்டனைகள் விதிக்கிறாய்! ஆனால் நின்மேரில் பக்தியில்லாமலிருப்பது சாதாரணமான துக்கமோ? ஏ பிரபு, என் ஈச, நின்பெருங்கருணையால் எனக்கு உரை, நீ எனக்கு என்ன ஆகிறாய்? "நின் கைவல்யம் நான்" என்று என் ஆத்மாவினுள்புகுந்து கோஷி. என் காது கேட்கச்சொல்லு. இதோ இருக்கிறது என் இதயம்; அதைத்திறந்து "நின்மோக்ஷம் நான்" என்று என் ஆத்மாவினிடம் சொல்லு. அந்த நாதத்தின் திசைநோக்கி ஓடி நின்னை அடைவேன். நின் முகத்தை எனக்கு மறைத்து விடாதே. நான் மாளினும்மாளுக— ஆனால் மாளாமைக்காக—நின் முகத்தை மாத்திரம் நான் தரிசித்து விட வேண்டும்!

எனது உள்ளம் சிறிது—அதைப்பெரிது செய்து நீ வாசம் செய்யயோக்கியமானதாக்கு. அது சீர்குலைந்திருக்கிறது—அதை நீ தான் சீராக்கவேண்டும். அதில் நினக்கு அருவருப்பைத் தரத்தக்க குணங்கள் அநேகம் உள; எனக்குத் தெரியும்; நானே சொல்லிக் கொள்ளுகிறேன். ஆனால் அதையார் துலக்குவார்? நின்னைவிட்டால் வேறுயாரிடம் முறையிடுவேன்? பிரபு, என்னுள்ளிருக்கும் பாவங்களினின்றும் என்னை விடுவி. நின் அடிமையைப் பகைவன் வசமாகாமல் காத்தல் செய். என் விசுவாசம் என்னைப் பேசச்செய்கிறது. பிரபு, நினக்குத் தெரியும்: என் அபராதங்களை நானே நின்னிடம் சொல்லிக்கொள்ளவில்லையா? நீயும் என் சித்தத்தினுள்ளே யுள்ள பாவத்தை க்ஷமித்துவிடவில்லையா? ஸத்தியமே உருவான நின்சந்நிதானத்தில் நான் சட்டம் பேசவில்லை. அப்படி செய்தால் என் தலையில் நானே மண்ணை வாரிப்போட்டுக் கொள்வோனாவேன். என்பாதகம் அதன் தொழிலைக் காட்டி நின்னிடமே பொய்சொல்லி விடுமென்றோ? ஆகையால், நின்சந்நிதியில் நான் சட்டம்பேசமாட்டேன். ஏனெனில், பிரபு, நீ குற்றத்தை எண்ணுவதானால் யாரால் தாளும்?

ஆயினும், கேவலம் மண்ணும் சாம்பலுமான எனக்கு நின் திருவருள் சந்நிதானத்தில் சிலசங்கதிகள் பேச இடம் கொடு. ஈரிஷைக்குணம் நிறைந்த மனிதனிடமல்ல, நின்னிடமேதான் சொல்லிக்கொள்ளுகிறேன். ஆகையால் காதுகொடுத்துக்கேள். ஒருவேளை நீயும் என்னை எள்ளுவாய். ஆனால் மறுபடியும் மனம் மாறி என்பேரில் இரங்குவாயன்றோ?

என்பிறப்பைப்பற்றி நான்வேறு என்ன சொல்லமுடியும்? என் ஈசனே, என் பிரபு! இத்தனைதான் சொல்லமாட்டுவேன்: எங்குபார்த்தாலும் சாவாக இருக்கிற இந்த பூலோகத்திற்கு (அல்லது பிரேதலோகமே தானோ அது?) எங்கிருந்து வந்தேனென்று எனக்குத் தெரியாது. நான் ஜனித்த நிமிஷமே நின் கருணை என்னைப்பரிபாலிக்கத் தொடங்கிவிட்டது. எனக்கு நினைவேது, இந்தச் சதையின் தாய்தந்தையர்—யாருடைய சரீரங்களினின்று என்னை நீ ஆக்கினையோ அவர்கள்—சொல்லத்தான் எனக்குத்தெரியும். தாய்ப்பாலின் இன்பம் என்வரவுக்காக காத்திருந்ததுபோல என்னை உடனே அடைந்துவிட்டது. என் தாயாராவது என்தாதியராவது தங்கள் ஸ்தன்னியங்களை எனக்காக நிரப்பி



வைத்துக் கொள்ளவில்லை. யாருமறியாதபடி சமஸ்த வஸ்துக்களின் வாயிலாகவும் நீ உலகத்துக்கு நின்செல்வங்களை அளித்து வரும் நியமப்படிக்கே, நீயேதான் எனக்கும் அவர்கள் மூலமாக என் உண்டியை அளித்தாய். நீ கொடுத்ததற்குமேலே யாதும் விரும்பாதபடி எனக்கருளினாய்: நீ அளித்ததைக் கரவாமல் எனக்குக் கொடுக்கும்படி என்தாதியருக்கும் நீ தான் அருளினாய். ஏனெனில் நின் அருளால் பெருகியபாலை அவர்கள் எனக்கு ஒரு தெய்விகமான பிரேமையுடன் தந்தார்கள். அவர்கள் எனக்குத் தந்த அந்த நலம் அவர்களுக்கேயும் நலமாக இருந்தது. அதுவும் அவர்களிடமிருந்து வரவில்லை, அவர்கள் வழியாய்த்தான்வந்தது. ஏனெனில், என் ஈச, நின்னிடமிருந்தல்லவோ சகலநலங்களும் வருகின்றன; என் ஆரோக்கியமும் ஈசன்செயலே. எனக்கு உள்ளும் புறத்துமிருந்து நின் பிரசாதங்களால் எனக்கு நீ அறிவிப்பதிலிருந்துதான் எனக்கு இந்த உண்மைகள் பிற்பட்டுத் தெரிந்தன. அப்பொழுதோ ஸ்தன்னியபானம் செய்வது, உடலுக்குச் சுகம் தருவனவற்றில் பிரீதியடைவது, வருத்தம் தருவனவற்றைக்கண்டு அழுவது, இவற்றைதவிர வேறொன்றும் தெரியாது.

கொஞ்ச நாளைக்கெல்லாம் சிரிக்க ஆரம்பித்தேன், முதலில் தூக்கத்திலும் பிறகு விழிப்பிலும் சிரிக்கலானேன்: இப்படித் தான் நான் செய்ததாகச் சொன்னார்கள், நானும் அதை நம்பினேன். எனக்கே ஞாபகமில்லாவிடினும் மற்றக்குழந்தைகளினிடத்தில் பார்க்கிறோமல்லவா? இப்படி கொஞ்சம் கொஞ்சமாக எனக்கு நினைவுவர ஆரம்பித்தது. என் இஷ்டப்படி நடக்கக் கூடியவர்களைப்பார்க்கும்போது அவர்களிடம் என்மனதிலுள்ளதைச் சொல்லவேணும் என்கிற விருப்பம் வரும்; ஆனால் சொல்ல வராது. ஏனெனில் இச்சை எனக்குள்ளிருந்தது, அவர்கள் எனக்குப்புறம்பே இருந்தார்கள். என்மனதுக்குள் புகுந்து பார்க்கக் கூடியபுலன் அவர்களுக்கில்லை. ஆகையால் என்விருப்பங்களுக்கேற்ப (ஆனால் எத்தனை ஏர்வைக்குறைவு) எனக்கு முடிந்தபடி கைகால்களை ஆட்டியோ கூவியோ சிலசமிக்கினைகள் செய்வேன். நான்கேட்குமவை இன்னதென்று தெரியாததினாலேயோ அல்லது கெட்டவை என்றோ அவர்கள் என்மனதுப்படி நடவாவிடில், நான் கேட்கிறது அவர்கள் செய்யாமலிருக்கிறதா என்று எனக்கு அவர்கள் பேரில் கோபம் வந்துவிடும். எனக்கு மூத்த

வர்களானாலென்ன, எனக்கு ஊழியக்காரர்களல்லவானாலென்ன, எனக்கு உடனே அவர்கள்பேரில் ஆவேசம் பிறந்துவிடும். கண்ணீர் தாரைதாரையாய்ப் பெருக்கி அவர்கள்பேரிலுள்ள கோபத்தைக்காண்பிப்பேன். இப்பால் குழந்தைகளைப் பார்த்துப் பார்த்து இதுதான் குழந்தைகளின் சுபாவம் என்று அறிந்துகொண்டிருக்கிறேன். நானும் இப்படித்தான் இருந்திருக்கவேண்டியது என்று அதைக்கண்ணாலே பார்த்த என்தாதியரைக் காட்டிலும் நின்னையறியாத குழந்தைகளே எனக்குத் தெளிவாகக் காண்பித்திருக்கின்றன.

என்னுடைய பிள்ளைப்பிராயம் இறந்துபோய் நெடுநாளாகிவிட்டது. ஆனால் நான் இன்னும் உயிரோடிருக்கிறேன். ஆனால் ஏ, பிரபு, நீயோ என்றும் ஒரேமாதிரிஇருக்கிறாய். நின்னுள் ஒன்றும் இறப்பதில்லை. அண்டபகிரண்டங்களெல்லாம் உண்டாவதற்கு முந்தி, "முன்னே" என்று சொல்லக்கூடிய சகலத்துக்கும் முந்தி, நீ ஸநாதநனாயிருக்கிறாய். ஆக்கப்பட்டசகலத்துக்கும் ஈசனும் பிரபுவும் நீயே. இனித்தான் உண்டாகவேண்டிய சகலவஸ்துக்களினும் மூலகாரணங்களெல்லாம் கூட நின்னுள்ளேயே ஏற்கெனவே நிர்ணயிக்கப்பட்டிருக்கின்றன. மாறிமாறிக் கொண்டுவரும் சகலபதார்த்தங்களையும் ஆட்டுகிற சூத்திரக்கயிறுகளும் நின்னுள்ளேயே மாறாமலிருக்கின்றன. நஸ்வரமான, ஜடத்தன்மையுள்ள சமஸ்த பொருள்களின் ஸநாதநமான, சேதனாகாரமான காரணங்கள் நின்னுள்ளேயே அழியாமல் நிற்கின்றன. ஏ, பிரபு, ஏ, கருணாகர, நின் அடிமையான எனக்கு இதைச்சொல்லு, ஏழையாகிற என்மேல் இரங்கி எனக்கு இதை உரை: வேறொரு அவஸ்தை இருந்து இறந்தபிறகு தான் இந்தபாலியாவஸ்தை எனக்கு உண்டாயதோ? அன்னை வயிற்றில் பிண்டமாக இருந்த அவஸ்தைதானோ அதைமுந்தியது? ஏனெனில் நான் கேட்டுமிருக்கிறேன், கர்ப்பிணிகளைப்பார்த்துமிருக்கிறேன். என் ஈச, என் ஆநந்தமே, இன்னும் உரை, அந்த அவஸ்தைக்குமுன் வேறெங்கேயேனும் அல்லது வேறுயாராகவேனும் இருந்தேனா? இதை எனக்குச் சொல்வார் வேறொருவருமில்லை; அன்னை, தந்தை, மற்றுளோர் அநுபவம், என் ஞாபகம் ஒன்றும் எனக்கு இதைச்சொல்லாது. இதை எல்லாம் கேட்கிறேன் என்று என்னைப்பார்த்து சிரிக்கிறாயோ? தெரிந்த விஷயங்களை மாத்திரம் கொண்டு உன்னை விசுவசித்தால் போதும் என்று ஆஞ்ஞாபிக்கிறாயோ?



நீதான் சுவர்க்கத்துக்கும் பூமிக்கும் கர்த்தா என்று வாயாறச் சொல்லுகிறேன். எனக்கு நினைவில்லாவிடினும் என் குழந்தைப் பருவத்தில் கிடைத்த நின்கருணைகளை நினைந்து நின்னைத் துதிப்பேன். மற்றவர்களிடம் பார்ப்பதினின்றும் அபலைகளின் வார்த்தைகளினின்றும் மனிதன் தன்னைக்குறித்த அநேக விஷயங்களை ஊகித்துப்பார்த்துக் கொள்ளவேண்டியது என்று நீ நியமித்திருக்கிறாய். அந்தவயதில் கூட என்னிடம் ஆட்டமும் பாட்டமும் நிறைய இருந்தது. என்னுடைய உள்ளுணர்ச்சிகளை மற்றவர்களுக்குத்தெரிவிக்கமார்க்கங்கள் தேடுவேன். நின்னினின்றலது வேறெங்கிருந்து இதுவரலாகும்? ஏ, பிரபு! எவனாவது தனக்குத்தானே கர்த்தாவாகமுடியுமா? ஸத்துவமும் பிராணனும் நின்னுள்ளேதான் வேறுவேறாகாமல் ஏகமாயிருப்பதனால் ஸத்துவத்தையும் பிராணனையும் எம்முளே வார்க்கக் கூடிய ரத்தக்குழாய்நின்னினின்றலது வேறெங்கேயிருந்து உற்பத்தியாகும்? ஏனெனில் நீ ஸர்வோந்நதன், நிர்விகாரன். 'இன்று' என்னப்படும் வர்த்தமான காலம் நின்னுள்ளே என்றும் இறந்த காலமாவதில்லை. ஆனால் நிகழ்காலம் மாறுவதும் நின்னுள்ளே தான்; ஏனெனில் இவையொன்றும் நினக்குப் புறம்பிலில்லை. நீ கைகொடுத்தாலொழிய அவைகளுக்குப் போகமார்க்கமேது? நினது ஆயுள்குன்றாதகையால் நினக்கு என்றும் இன்றும்ஒரேவயதுதானன்றோ? நின் 'இன்றை'க்குள் எங்களுடையவும் எங்கள் முன்னோர்களுடையவும் எத்தனை ஜீவகாலங்கள் அதினின்று அவை அவையின் அளவுக்குத் தகுந்த ஸத்துவத்தை முகர்ந்தெடுத்துக் கொண்டு சென்றுவிட்டன? இன்னும் எத்தனை அதேமாதிரி தன்தன் அளவை நிரப்பிக் கொண்டு போகப்போகின்றன? ஆனால் நீ என்றைக்கும் ஒரே மாதிரி இருக்கிறாய். நாளையும் நேற்றும், அதற்கு முன்னும் பின்னும், செய்தனவும் செய்யப்போகிறவையுமான சகலமும் இன்றேதான் நீ செய்கிறாய். இது ஒருவனுக்குப் புலப்படாவிடில் அதனால் எனக்கென்ன ஆகவேணும்? இது என்ன ஆச்சரியம் என்று சொல்லி அவனும் இதைக்கேட்டு ஆநந்திக்கட்டும். நின்னை அறியாதிருப்பது மேல் என்று அறிவானாக.

## சின்னச் சங்கரன் கதை.

### 4-ம் அத்தியாயம்-காதல்.

(முன்தொடர்ச்சி.)

சின்னச்சங்கரன் யமகம்பாடி அரங்கேற்றிய புகழ் கவுண்டராஜ்யம் முழுதிலும் பரவித் தத்தளித்துப் போய்விட்டது. கவுண்டர் சபையில் வந்த வேடிக்கைகளையெல்லாம் மேலத்தியாயத்தில் நான் விஸ்தாரமாக எழுதவில்லை. கவுண்டசபையின் வர்ணனை எனக்கே சலிப்படைந்து போய் விட்டது. படிப்பவர்களுக்கும் அப்படித்தானே இருக்கும்? அதை உத்தேசித்து அரையே மாகாணி வேலைதான் செய்தேன்.

இப்போது சின்னச் சங்கரனுடைய "காதல்" விஷயம் சொல்லப் போகிறேன். சிரத்தையுடன் படிக்கவேண்டும். தேசமாகிய உடலுக்கு வித்வானே உயிர். ஒரு ஜாதியாகிற கடிகாரத்துக்கு "சாஸ்திரம்" தேர்ந்தவனே 'வில்'. நாகரிகமாகிய கங்காநதிக்குக் 'கவி' யின் உள்ளமே மூல ஊற்று. ஆகவே கவியின் 'காதல்' உலகமறியத்தக்கது. சின்னச் சங்கரன் தமிழ் தேசத்திலே ஒரு 'கவி'. இருபது முப்பது வருஷங்களுக்கு முன் இந்த நாட்டில் கவிகளெல்லோரும் சின்னச் சங்கரன் மாதிரியாகத் தான் இருந்தார்கள். இப்போது தான் ஓரிரண்டு பேர் தமிழில் கொஞ்சம் சரியான பாட்டுக்கள் எழுதத் தலைப்பட்டிருப்பதாகக் கேள்வி. அவர்களுடைய பெயர் கூட எனக்குத் தெரியாது. நான் தமிழ் தேசத்துப் பழக்கத்தை விட்டு நெடுநாளாய்விட்டது. (இப்போது வட ஆபிரிகாவிலிருக்கிறேன்.)

ஆனால் முப்பது வருஷங்களுக்கு முன் நான் தமிழ் நாட்டில் இருந்த போது அங்கே சின்னச் சங்கரனுக்கு மேலே உயர்ந்த வகுப்பைச் சேர்ந்த 'கவி' நான் பார்த்தது கிடையாது. தேசமோ உலகத்துக்குள்ளே ஏழைத் தேசமாச்சுதா? பதினாயிரம் ரூபாயிருந்தால் அவன் தமிழ் நாட்டிலே கோடீசுரன். பத்துவேலி நிலமிருந்தால் அவன் 'ராஜாதிராஜ ராஜ மார்த்தாண்டன்.' ஒரு ஜமீனிருந்துவிட்டால், அவன் "சந்திரவம்சம்" "சூரியவம்சம்" "சனீசுரவம்சம்", மஹாவிஷ்ணுவின் அவதாரம், பழைய 'பன்றி' அவதாரத்துக்குப்பக்கத்திலே சேர்க்கவேண்டியது. இந்த தேசத்தில்



முப்பத்துமுக்கோடி தேவர்கள் கணக்குச் சொல்லுகிறார்கள். நான் நாலைந்து பேரைக் கூடப் பார்த்தது கிடையாது. அது எப்படிவேண்டுமென்றாலும் போகட்டும். ஆனால், இந்த முப்பத்து முக்கோடி தேவர்களிலே எனக்குத் தெரிந்தவரை நம்முடைய மஹா விஷ்ணுவுக்குத்தான் சிரமம் அதிகம். பன்றி விஷ்ணுவின் அவதாரம். ஆமை விஷ்ணுவின் அவதாரம். கவுண்டனூர் ஜமீந்தார் விஷ்ணு அவதாரம். ஆனிபெஸாண்ட் வளர்க்கிற (நாராயணய்யர் இடங்கொடாத) கிருஷ்ண மூர்த்திப் பையன் அதே அவதாரம்.

மொத்தத்தில், மஹா விஷ்ணுவுக்குக் கஷ்டம் அதிகம். இப்படித் தெருவிலே கண்டவர்களையெல்லாம் மூன்று காசுக்காகப் புகழ்ந்து பாடுவது, பெண்களுடைய மூக்கைப்பார்த்தால் உருளைக்கிழங்கைப் போலிருக்கிறது, மோவாய்க் கட்டையைப் பார்த்தால் மாதுளம் பழத்தைப் போலிருக்கிறது, கிழவியுடைய மொட்டைத் தலையைப் பார்த்தால் திருப்பாற்கடலைப் போல் இருக்கிறது என்று திரும்பத் திரும்பக் காது புளித்துப் போகிற வரையில் வர்ணிப்பது; யமகம், திரிபு, பசுமூத்ர பந்தம், நாக பந்தம், ரத பந்தம், கடிகார பந்தம், தீப்பந்தம் முதலிய யாருக்கும் அர்த்தமாகாத நிர்ப்பந்தங்கள் கட்டி அவற்றை மூடர்களிடம் காட்டி மஹா ஸமர்த்தனென்று மனோராஜ்யம் செய்து கொள்வது—இவைதான் அந்தக் காலத்திலே கவிராயர்கள் செய்த தொழில்.

கவுண்டனூர் ஜமீந்தாரவர்களின் அடைப்பைக் காரன், மந்திரி, நண்பன், ஸ்தல வித்வான் முதலியனவாகிய முத்திருளக் கவுண்டனுக்கு ஒரு பெண் உண்டு. வயது பதினாறு. (இப்போதல்ல. சங்கரன் கதையிலே அவள் வந்து புகுந்த காலத்தில்.)

நிறம் கருப்பு, நேர்த்தியான 'மைக்' கருப்பு, பெரிய கண்கள், வெட்டுகிற புருவம். அதிக ஸ்தூலமுமில்லாமல், மெலிந்து ஏணி போலவுமில்லாமல், இலேசாக உருண்டு, நடுத்தரமான உயரத்துடன், ஒழுங்காக அமைந்திருந்த சரீரம். படபடப்பான பேச்சு. எடுத்த வார்த்தைக்கெல்லாம் கலீரென்று சிரிக்கும் சிரிப்பு. மதுரைச் சீட்டிச் சேலை. டோரியா ரவிக்கை. நீலக்குங்குமப்பொட்டு. காதிலே வயிரத்தோடு. கழுத்திலே வயிர அட்டிகை. கையிலே வயிரக் காப்பு. நகையெல்லாம் வயிரத்திலே. மாணிக்கம்

ஒன்று கூடக் கிடையாது. மேனி முழுதுமே நீலமணி. தலையைச் "சொருக்கு" ப்போட்டு அதில் ஜாதி மல்லிகைப்பூ வைத்துக்கொள்வதிலே பிரியமுடையவள். கொஞ்சம் குலுங்கிக் குலுங்கி நடப்பாள். காலிலே மெட்டிகள் "டணீர்" "டணீர்" என்றடிக்கும். இவ்வளவு "ஷோக்"கான குட்டிக்குப் பெயர் அத்தனை நயமாக வைக்கவில்லை. "இருளாயி" என்று பெயர் வைத்திருந்தார்கள்.

இவள் மேலே சங்கரனுக்குக் காதல் பிறந்து விட்டது. சங்கரனை இதற்கு முன் சரியாக வர்ணித்திருக்கிறேனோ, இல்லையோ! ஞாபகமில்லை. எனினும் இப்போது, அவனுடைய காதல் கதை சொல்லத் தொடங்கும் போது மற்றொருமுறை வர்ணனை யெழுதியாக வேண்டியிருக்கிறது.

கறுப்பு நிறம். குள்ள வடிவம். மூன்று விரல் அகலம் நெற்றி. கூடு கட்டின நெஞ்சு. குழிந்த கண்கள். இரத்தமற்ற இதழ்கள். நெரிந்த தொண்டை. பின்னுகிறகால்கள். அரையிலே அழுக்கு மல் வேஷ்டி. மேலே ஒரு அழுக்கான பட்டுக் கரைத்துண்டு. இவ்வளவையும் மீறிக்கொஞ்சம் புத்திக் கூர்மையுடையவன் போல் தோற்றுவிக்கும் முகம்.

இவ்விருவருக்குள்ளே 'காதல்' எப்படி ஏற்பட்டதென்பதின் மூலங்கள் எனக்குத் தெரியாது. ரிஷி மூலம், நதிமூலம் விசாரிக்கப்படாது என்பார்கள்; அதாவது, சின்ன ஆரம்பங்களிலிருந்து பெரிய விளைவுகள் ஏற்படும் என்றர்த்தம். காதல் ஸமாச்சாரமும் அப்படித்தான். ஒரு பார்வை, ஒரு தட்டு—ஒரே பார்வை ஒரே தட்டாக முடிந்து விடும். ஒரு பேச்சு, ஒரு சிரிப்பு—மரணபரியந்தம் நீங்காத பந்தமேற்படுத்தி விடும். ஆனால் இருளாயிக்குச் சங்கரன் விஷயத்தில் அப்படி நிலைத்த காதல் இருந்ததென்று நிச்சய மாகச் சொல்வதற்கில்லை. சங்கரனுக்கு மாத்திரம் அவளிடம் பரிபூரணமான மோஹம் ஏற்பட்டிருந்தது. அது மரணத்திலே போய்நிற்க வில்லை. ஏறக்குறைய மரணத்திலே கொண்டு விட்டு விடத் தெரிந்தது. முத்திருளக் கவுண்டனுடைய தகப்பன், ஒரு தொண்டு கிழவன், கண் இல்லாமல் வீட்டிலேயே உட்கார்ந்திருந்தான். அவனை மனித வ்யவஹாரங்களில்லாத ஒரு தனித் தீபாந்தரத்திலே கொண்டு விட்டு இரண்டு காணி நிலம் மாத்திரம் கொடுத்துப் பயிரிட்டுக் கொள்ளும்படி சொன்னால்—



அதாவது, கண்களையும் திருப்பிக் கொடுத்த பிறகு—அந்த இரண்டு காணிகளில் முக்கால் காணியை வெற்றிலைத் தோட்டமாக்குவான். ஒரு முழுக் காணியிலே புகையிலைத் தோட்டம் போட்டு விடுவான். மிஞ்சின கால்காணியிலே தான் நெல் விதைப்பான்—பாக்குமரம் வைத்தது போக, காய் கறிகள் கூட அவசியமில்லை. அந்த இரண்டுகாணிக்கு ஒரு சின்னக் குளம் கொடுக்கமாட்டார்களா? அதில் மீன்கள், நண்டு, அகப்படாதா? ஒருபார்வை பார்த்துக் கொள்வான்.

கிழ 'திருதராஷ்ட்ர'க் கவுண்டனுக்குப் புகையிலையிலே எவ்வளவு பிரியமோ அவ்வளவுபிரியம் கம்பராமாயணத்திலேயுமுண்டு. யாரேனும் வந்து கம்பராமாயணத்திலே ஒரு பாட்டு வாசித்து அர்த்தம் சொல்லும்படி கேட்டால் சரியாகச் சொல்லுவான். அவனும் கவுண்டனூர்த் தமிழ்ப்புலவர்களிலே ஒருவன். ஆனால் சங்கரன் காலத்துப் புலவர்களைக் காட்டிலும் அவன் விசேஷந்தான். அவனுக்கு வேறொன்று மில்லாவிட்டாலும் ஒருபெரிய காவியத்துக்குப் பொருள் சரியாகச் சொல்லத் தெரியும். பின்னிட்ட புலவர்களுக்கு ஒன்றுமே தெரியாது. பாட்டுக் கட்டத் தான் தெரியும். முத்திருளக் கவுண்டனுடைய நட்பு சங்கரனுக்கு ருசி கொடுக்கத் தொடங்கி யதிலிருந்து, கிழக் கவுண்டனிடம் கம்பராமாயணம் கேட்க ஆரம்பித்தான். மாலை தோறும் பள்ளிக்கூடம் விட்டவுடனேயே முத்திருளக் கவுண்டன் வீட்டுக்குப் போய்ப் பாடம் கேட்கத் தவறுவதில்லை. இரவு எட்டு மணிக்குத் தான் திரும்பி வருவான். 'தாத்தனிடம் அர்த்தம் கேக்க வருது, அய்யர் வீட்டுப் பிள்ளை" என்று இருளாயிக்கு சங்கரனிடம்கொஞ்சம் பிரியமேற்பட்டது. அந்தப்பிரியம் நாளுக்கு நாள்பலவிதங்களிலே பக்குவமடையலாயிற்று. ராமாயணம் பாடத்துக்குபோன இடத்திலே சங்கரன் "மன்மதகலை" படிக்கத் தொடங்கினான். கிழவனுடைய குருட்டுவிழிக்குக் கூட விவகாரம் கொஞ்சம் கொஞ்சமாகப் பிரகாசமாய் விட்டது.

ராமாயணக் கதை குறைகிறது, சிரிப்பும் வேடிக்கைக்கதையும் அதிகப்படுகிறது; கிழவனுக்கு அர்த்தமாகா வீட்டில் அந்தப் பெண்ணைத்தவிர வேறு ஸ்திரீயே கிடையாது. முத்திருளக் கவுண்டன் மனைவி, கிழவன் மனைவி இருவரும் செத்து நெடுங்காலமாய் விட்டது. இருளாயியும் சங்கரனும் சிநேகமாக இருப்பதில் கிழவனுக்கு அதிருப்தி கிடையாது. அய்யர் வீட்டுப்

பிள்ளை! ஐயோபாவம்! அதுக்கு என்னகூடதெரியுமா? வாது தெரியுமா? குழந்தைகள் தானே. விளையாடிக்கொண்டிருக்கட்டும். அதிலே தப்பிதம்வாராது' என்று கிழவன் தனக்குத்தானே மனதறிந்தபொய் சொல்லிக்கொண்டு சும்மா இருந்துவிடுவான். 'தப்பிதம்' நடந்தாலும் குடிகெட்டுப் போய் விடாது என்பது 'திருதராஷ்ட்ர''க் கவுண்டனுடைய தாத்பர்யம்.

இருளாயிக்குப் பதினாறு வயது என்று சொன்னோம். அப்போது சங்கரனுக்கு வயது பதினேழு. 'ஜோடி' சரியாகவே இராது. ஆனால், ஐரோப்பியர் சொல்வதுபோல, மன்மதன் குருட்டுத் தெய்வம். (கண்ணில்லாமல், குறிபார்த்து அம்புகள் போடுவது கஷ்டம். ஆனால் தெய்வத்துக்கு எதுவும் பெரிதில்லையல்லவா? மேலும், கவிகளுக்கும் புராணக் காரர்களுக்கும் கூடப் பெரும்பாலும் கண்விஷயம் அந்த மன்மதனைப் போலவே தான்.)

எப்படியோ அவர்களிடையே காதல் செடி பெரிதாகி வளர்ந்து பூப்பூத்துக் காய் காய்த்துப் பழம் பழுக்கத் தொடங்கி விட்டது. பழங்களென்றால் யாரும் தப்பெண்ணங் கொண்டு விடவேண்டாம். இவர்களுடைய காதல் செடியிலே ஏராளமாகப் பழுத்துத் தொங்கிய பழங்கள் சங்கரன் செய்த கவிகளைத் தவிர வேறொன்றுமில்லை. இருளாயி விஷயமாகச் சங்கரன் சுமார் 2000 கவிகள்வரை பாடித்தீர்த்து விட்டான்.

இப்படியிருக்கையில் இவ்விருவரின் சுகத்துக்கு இடையூறான ஒருசெய்தி வந்து விட்டது. இவர்களுடைய காதலாகிய மரத்திலே இடிபோல் விழுந்த செய்தி!

## கைங்கர்யமே கடவுள் பூஜை.

ஸ்ரீமத் விவேகாநந்த ஸ்வாமிகள் எழுதியது.

நீசெய்கிறவேலை யெல்லாம் உனக்காகவே, உனது நன்மையின் பொருட்டே. ஒரு ஆஸ்பத்திரிகட்டியோ அல்லதுவேறுயாதேனும் செய்தோ ஈஸ்வரனைநாம் ரட்சிக்கும்படியாக, அவர் ஒரு ஆழ்ந்தபள்ளத்தில் விழுந்து விடவில்லை. நீவேலை செய்ய அவர் சம்மதித்திருக்கிறார். அவருக்கு உதவிசெய்து கொள்ளும் பொருட்டு



இப்பெரிய சரீராப்பியாசசாலையில் நீ உனது நாடி நரம்புகளையெல்லாம் சீர்படுத்திக் கொள்ளும் பொருட்டு அவர் சம்மதித்திருக்கிறார். நீ உதவிசெய்யாததினால் ஒரு எறும்பாவது இறந்து போகுமென்று நினைக்கிறாயா? மகாமூடத் தனமானதெய்வநிந்தை! உலகமானது உன் வேலையைச் சிறிதும் விரும்பவில்லை. உலகம் போய்க்கொண்டேயிருக்கிறது; இந்த சமுத்திரத்தில் நீ ஒருதுளியளவே. அவனின்றி ஒரு இலையும் ஆடுவதில்லை, காற்றும் அசைவதில்லை. அவருக்கு உதவிசெய்வதற் கன்று, அவருக்காக வேலை செய்யும் பாத்தியதை நமக்குக் கிடைக்கப் பெற்றிருப்பதினால், நாம் பாக்கியவான்கள். உன்னுடைய மனத்திலிருந்து "உதவி" என்ற இந்தவார்த்தையை அகற்றிவிடு. உன்னால் முடியாது; அது தெய்வநிந்தையாகும். இங்கு நீயே அவர் சந்தோஷப்பட்டிருப்பதினால் இருக்கிறாய். நீ அவருக்கு உதவிசெய்கிறதாகச் சொல்கிறாயா? நீ பூஜிக்கிறாய். நீ நாய்க்கு ஒருபிடிசாதம் போடும் பொழுது நீ நாயை ஈஸ்வரனாகப் பூஜிக்கிறாய். ஈஸ்வரன் அந்த நாயில் இருக்கிறார். அந்த நாய் அவரே. அவர் எல்லாமாய் எல்லாவற்றிலும் இருக்கிறார். நாம் அவரைப் பூஜிக்கவிடப் பட்டிருக்கிறோம். முழுப்பிரபஞ்சத்திற்கு முன்னே நீ அந்தவிதமான பயபக்தியோடு நில்; பின்னர் பூரணமாய்ப்பற்றற்ற தன்மை உண்டாகும். இதுதான் உனது கடமையாயிருக்கவேண்டும். இதுவே வேலையின் நியாயமான போக்கு. இதுவே கர்ம யோக ரகஸ்யம்.

ராமச்சந்திர சாஸ்திரி.

## ஓர் உண்மை.

பிரம்ஹஸ்ரீ ராமச்சந்திர சாஸ்திரிகள் எழுதியது.

"எதுக்குடற்சுமை கொண்டேனிருந்தேனையனே யாதிக்க மோன வருட்டாயே-சோதியாமன்ன நிருவிகற்பவாநந்த நிட்டையிலே பின்னமற நில்லாதபின்.

"பின்னுமுடற் சுமையாப்பேசும் வழக்கதனாலென்ன பலனுமுற்றிருந்தோமே-யன்னதனாலாநந்தந்தானே தானாகு மெம்மையம்மே யெனிந்தத் துன்பமினி."

தன்னந்தனிமையாய்ச் சின் மாத்திரமயமாய் நின்று என்றும் தெவிட்டாத இன்பமாரியை ஈனர் பெரியர் என்ற பேதமேயின்றி

எல்லோருக்கும் ஏகமாக வழங்கி உள்ளும் புறமும் உண்மையாய் நின்று தமிழ் உலகின் தாகத்தைத்தணித்தருளிய தாயுமானவர் நரப்பு, எலும்பு இரத்தம், மாம்சம், தோல் இவைகளால் கட்டப்பெற்று அனைவருக்கும் அருவருப்புக்கிடமாயிருக்கின்ற சரீரத்தை மிக்க இடங்களிலும் 'உடற்சுமை' யென்றும், 'சோற்றுத் துருத்தி' யென்றும் 'சுக்கிலமு நீருஞ்சொரிமலமு நாறு முடல்' என்றும் 'செங்கிருமியாதி செனித்த சென்மபூமி' என்றும் 'மும்மலச் சேறான முழுக்கும்பி பாகம்' என்றும் மற்றும் பலவாறாக இகழ்ந்து பாடியுள்ளார். சர்வசங்க பரித்தியாக தீரராய் விளங்கிய பட்டினத்தடிகளோ சரீரத்தைக் கூறு கூறாகப்பிரித்து அவலட்சணத்தை அப்படி அப்படியே உரைத்து விட்டார். இங்ஙனமே பிரபஞ்சத்தில் விரக்தியடைந்து பிரஹ்மாநு பூதியை நாடிச் சென்ற ஒவ்வொருவரும் சரீரத்தை இகழ்ந்தே கூறியிருக்கின்றனர். சரீரத்தினிடத்தில் என்றைக்கு இகழ்ச்சிதோன்றுமோ, சரீரத்தினிடத்தில் என்றைக்கு வெறுப்புத்தோன்றுமோ அன்றைக்கே மனிதன் உண்மையான முமுட்சுவாகிறான். சரீரம் எலும்பு நரம்பு தோல்களால் கட்டப்பட்டது; நவத்துவாரங்களோடு கூடியதென்று கூறப்பட்டிருந்தாலும், எங்கு பார்த்தாலும் துவாரமே; சரீரம் எல்லாம் ஓட்டையே. நவத்துவாரங்களின் மூலமாயெல்லாம் சதா மல ஜலம் கழியப்பெற்றது. கண்களில் பீளையாகவும், காதுகளில் குறும்பியாகவும், வாயில் ஊத்தையாகவும் இப்படியே மற்றத்துவாரங்களின் மூலமாகவும் வருவதென்னே? சரீரத்திலுள்ள எண்ணற்ற மயிர்க் கால்கள்தோறும் வியர்வையாகக் கழிவதென்னே? ஒருமனிதன் தன் சரீரத்தைப்பற்றிச் சிறிது கூர்ந்து ஆழ்ந்து ஆலோசிப்பானானால், உண்மையில் ஒரு அணுவாவது அவனுக்கு விளங்கி விட்டால், அவன் உடனே இவ்வுடற்சுமையை எப்படியாவது எங்கேயாவது கீழே யிறக்கி விடவேண்டுமென்று அதே முயற்சியில் அலைந்து கொண்டிருப்பான். இதில் சந்தேகமேயில்லை.

ஆனால், பிரத்தியட்சத்தில் சரீரத்தின் அநித்தியத் தன்மையும் அவலட்சணகுணங்களும் விளங்கிக்கொண்டிருந்தாலும் இவற்றைப்பற்றிச் சிறிதும் கவனிப்பவர் எவரேனும் ஒருவர் உளரா? வேதாந்த சாஸ்திரங்களை வேண்டிய மட்டும் விழுங்கி விட்டு ஜீரணம் செய்யச்சக்தியில்லாது புளியேப்பம் விட்டுக் கொண்டிருக்கும் சாஸ்திரக்ஞர்களும் ஜடாவல்லவர்களும் கூட நாகரிகமயக்கில்



விழுந்தும் பிரபஞ்சப் பிராந்தியிற் பட்டும் உண்மையை உள்ளபடி பாராது மதிமிழந்து விதி வசத்தர்களாய் சரீரத்தின் ஜடத்தன்மையை உணராது இருக்கின்றனரன்றோ? நான்கு வேதங்களையும் ஸ்வரத்துடன்-கிணற்றுத் தவளைகளைப்போல- தொனியைத்தாழ்த்தியும் தூக்கியும் பற்பல விதங்களாய்த் தொண்டையைச் சீர்படுத்திக்கொண்டு கத்துகின்ற சமஸ்கிருத பாஷாபண்டிதர்கள் அவலட்சணமான இச்சரீரத்தை, அலங்கரித்துக்கொள்வதில் சிரத்தை மிகுந்திருக்கின்றனரன்றோ? இந்த மலச்சுமைக்கு வந்த வாழ்வு தான் என்னே?

பேதா பேதமற்று சலனமற்றுச் சாட்சாத் பிரமவஸ்துவாய் அமராத பொழுது, இவ்வுடற் சுமையினாலென்ன பிரயோசனம்? கிருதா மீசைகளை இருபுறமும் சொகுசாக ஒதுக்கி நெற்றியில் பொட்டிட்டு பொம்மைக்கு அலங்கரிப்பதுபோல அழகிய ஆடையாபரணங்களணிந்து அன்ன நடை, யானை நடை, சிம்ஹ நடை முதலிய அநேகவித நடைகள் நடந்து ஜீவப்பிரேதங்கள் போலத் திரிவது தானோ மானுட ஜன்மத்தின் பிரயோஜனம்? இரவும் பகலும் "யான்" "எனது" என்னும் இருபேய்களினால் பிடிக்கப்பட்டு மனைவி, மக்கள், சுற்றம், தேசம் முதலிய பாழாம் வஸ்துக்களுக்கு என்றென்றும் அடிமையாகி, இறப்புப் பிறப்பென்னும் சுழற்சியிற் பட்டு ஏக்கமுற்று என்றும் ஏழ்மையை யடைந்திருப்பதோ மனுஷ்ய ஜன்மத்தின் பிரயோஜனம்?

மனுஷ்யஜன்மப்பிரயோஜனத்தை யடைவதற்கு மலச்சுமையை எங்காவது இறக்கி எறிந்து விடவேண்டியது அவசியம். ஆனால் திடகாத்திர சரீரிகளே அகன்ற அறிவும் விசாலமான ஹிருதயமும் உடையவர்களாயிருப்பார்கள்; மனிதனுக்குக் கவலை ஏற்படுவது சகஜம். திடகாத்திர சரீரிக்குச் சரீரத்தைப்பற்றிக் கவலையில்லை; ஏனென்றால் சரீரத்தினிடத்தில் குறைவு இல்லை. வியாதியஸ்தருக்கோ சரீரத்தைப்பற்றியுள்ள கவலை மிகுதியும் உண்டு. சரீர சுகக்குறைவைப்பற்றி எப்பொழுதும் கவலைப்பட்டுக் கொண்டிருப்பவன் மோட்சத்திற்கு அர்கனாக மாட்டான். ஆகையால் ஒவ்வொருவரும் சரீரத்தைச் சுகமாய்வைத்துக் கொள்ளவேண்டியது இன்றியமையாத கடமை யாகும். சரீரமானது சம்சாரசாகரத்தைக் கடந்து முக்திக்கரை அடைவதற்கு ஓர் தோணி போன்றதாகும். ஆதலால் இந்த தோணியில் ஓட்டை

கள் விழுந்து விட்டால், சரீரியாகிய ஜீவன் வேறோர் தோணியைத் தேட வேண்டி வரும். ஆகையால் தோணியைத்திடமாகப் பாதுகாத்துக் கொள்ள வேண்டியது மனிதனுடைய கடமை. முன்னர் சரீரம் வெறுக்கப்பட்டது; இப்பொழுது சரீரரட்சை அவசியம் என்று கூறப்பட்டது.

சரீரம் வெறுப்பிற்குக் காரணமானதே; இதில் அற்பமும் சந்தேகம் இல்லை. ஆனால் உண்மையாய்ச் சரீர வெறுப்பு உண்டாகிறவரையில் சரீரம் ரட்சிக்கப்பட வேண்டியதே; சாகக் கவனிக்கப்பட வேண்டியதே. சரீர ரட்சை மனுஷ்ய ஜன்மலட்சியமன்று; ஆனால் சரீரம் மனுஷ்ய ஜன்மலட்சியத்தை அடைவதற்கு இன்றியமையாததோர் துணைக்கருவியாகும்; ஆதலால் ரட்சிக்கப்படவேண்டியது. சரீரரட்சையைப் பயனாகக் கொள்ளாமல், ஒரு வழியாகக் கொள்ளவேண்டியது.

---

சிக்காகோ.

அன்ப, 28. டிஸம்பர். 1893.

நான் சிக்காகோவில் செய்த பிரசங்க சமாசாரங்கள் இந்துப் பத்திரிகைகளில் வெளிவந்துள்ள விஷயம் மிகவும் ஆச்சரியமாயிருக்கிறது. நான் செய்யும் காரியங்கள் விளம்பரஞ் செய்யப்படுவதில் எனக்கு என்றும் விருப்பமில்லை.

இங்கு எனக்கு எத்தனையோ விஷயங்கள் புலப்படுகின்றன. இந்த நாட்டில் வறுமையே யில்லையென்று சொல்லிவிடலாம்; இங்குள்ள படித்த, நாகரிகமுள்ள ஸ்திரீகளைப்போல நான் எங்கும் கண்டதே யில்லை. நன்கு படித்த புருஷர்கள் நமது நாட்டில் இருக்கவே செய்கிறார்கள். ஆனால் ஸ்திரீகளில் இங்குள்ளவர்களைப் போல நீ எங்கும் காணமுடியாது. நற்குணம் வாய்ந்த புருஷர்களின் கிரகங்களில் தெய்வங்களே வாழ்கின்றதென்று சொல்லப்படுவது வாஸ்தவத்தில் உண்மையே. பளிங்கு போல் தூய்மையும் களங்கமின்மையும் பொருந்திய இருதயங்களையுடைய, ஆயிரக் கணக்கான மாதர்களை நான் இங்கு பார்த்திருக்கிறேன். அவர்கள் எவ்வளவு சுயேச்சையாக இருக்கிறார்கள். சகல காரியங்களையும் நடத்துகின்றவர்கள் அவர்களே. சிறு பள்ளிக்கூடங்களிலும் பெருங் கலா சாலைகளிலும் ஸ்திரீகளே நிரம்பியிருக்கின்றனர். நமது நாட்டிலோ வீதிகளிற் கூட ஸ்திரீகள் நடமாடுதல் கூடாது? அவர்களுக்கு என் மீதுள்ள அன்பு அளவிடற்கரியது. நான் இங்கு வந்த நாள் முதல் என்னை அவர்கள் தங்கள் வீடுகளுக்கு அழைத்து உபசரித்துக் கொண்டிருக்கின்றார்கள். எனக்கு ஆகாரம் உதவுதல், பிரசங்கத்துக்கு ஏற்பாடு செய்தல், இன்னும் என்னுடைய சௌக்கியத்திற்கும் சௌகர்யத்திற்கும் வேண்டிய சகல உதவிகளையும் அவர்களே செய்கின்றார்கள். அவர்கள் செய்யும் பெரு நன்றிக்கு சிறிதளவேனும் நான் கைம்மாறு செய்தல் முடியாது.

உண்மையான 'ஸக்தி உபாஸகன்' யாரென்று உனக்குத் தெரியுமா? கடவுளானவர் இவ்வுலகத்தில் எங்கும் நிறைந்த ஸக்தியென்பதை யுணர்ந்து அந்த ஸக்தி ஸ்திரீகளிடம் பொருந்தியிருப்பதைக் காண்பவனே உண்மையான 'ஸக்தி உபாஸகன்'. இங்குள்ள மனிதரிற் பலர் ஸ்திரீகளை இம்மாதிரியாகவே கருதுகின்றனர். ஸ்திரீகள் செவ்வையாக நடத்தப்பட்டு அவர்கள் சந்தோஷமாக வாழ்கின்ற குடும்பங்களைத் தேவர்கள் வாழ்த்துகின்றாரென்று மனுவும் கூறியிருக்கின்றார். இங்கே புருஷர்கள் தங்கள் ஸ்திரீகளை, எவ்வளவு நன்றாக நடத்தக்கூடுமோ அவ்வளவு நன்றாக நடத்துகின்றார்கள். அதனால் அவர்கள் செல்வவான்களாயும் கல்விமான்களாயும் ஸ்வதந்தரமுள்ளவர்களாயுமிருக்கின்றனர். ஆனால் நாம் ஏன் அடிமைத்தனமுள்ளவர்களாயும் கஷ்டம் நிறைந்தவர்களாயும் உயிர்ப்பிணங்கள் போலும் இருக்கின்றோம்? நாம் மேற் கூறியவற்றிற்கு முற்றிலும் மாறாக இருப்பதனாற்றான்.

அநேக ஆசீர்வாதம்.

உனதன்புள்ள

விவேகாநந்தர்.

---

## சமாசாரக்குறிப்புகள்.

ஒரு டன் களிமண்ணில் ஒரு ஷில்லிங்கு பெறுமான பொ[ன்] இருக்கிறது. மூன்று டன் கடல் நீரில் அரை பென்ஸ் பெ[று]மான பொன் இருக்கிறது.

* * * * *

எல்லா சமுத்திரங்களும் ஒன்று சேர்ந்து உள்ள நீரில் 290 கோடி பவுன் பொன் இருக்கிறதாக மதிப்பிடப்பட்டிருக்கிறது.

161303
600 008



ஒரு அந்நியன் லண்டன் மாநகரம் முழுதும் பார்க்க விரும்பினால், 2600 மைல் தூரம் நடக்க வேண்டும். லண்டன்மாநகரில் தினமொன்றிக்கு 400000 மாடுகளும் 500000 கோழிகளும் ஐந்து கோடி நண்டுகளும் செலவாகின்றன.

*　　*　　*　　*　　*

மொகலாய சக்ரவர்த்திகளில் செங்கோலோங்கிச் சிறந்து புகழ்பெற்ற அக்பர் சக்ரவர்த்தியின் தாயார் தான் கர்ப்பமாயிருக்கும்பொழுது தனது கால்களில் ஊசியினால் புஷ்பம் வரைந்து கொண்டாள். அக்பர் பிறந்தபொழுது அக்பருடைய கால்களும் சிருஷ்டியிலேயே புஷ்பம் வரையப்பெற்றிருந்தனவாம்.

*　　*　　*　　*　　*

வங்காளக் கவர்னராகிய லார்ட் கார்மிகேல் சமீபகாலத்தில் நடந்த சமஸ்கிருத பாஷாபிவிருத்தி மகா சபையில் அக்கிராசனம் வகித்த பொழுது வங்காள பாஷையில் பேசினாராம். இவர் சிற்சில சமயங்களில் இந்தியர்கள்மாதிரி உடையுடுத்திக்கொண்டு வெளியில் வருகின்றனராம். இங்ஙனம் இவர் செய்வது இவருடைய விரிந்த புத்தியையும் விசாலமான ஹிருதயத்தையும் விளக்குகின்றது. பொது ஜனங்களுடைய நடை உடை பாவனைகளை அரசாங்க அதிகாரிகள் அநுசரித்து நடப்பதினால் அளவற்ற பயன் உண்டாகும் என்பதில் சந்தேகம் இல்லை இத்தன்மைய கவர்னர்கள் இதுகாறும் இந்தியாவை அரசாண்டு வந்திருந்தால் இப்போது இத்தேயத்தில் இருக்கின்றதாகக் கூறப்படுகின்ற ராஜாங்கக்கலக்கத்திற்கு இடமே உண்டாயிராது. லார்ட் கார்மிகேலைப்போன்ற ஆங்கிலோத்தமர்கள் இந்தியர்களுடைய நடை உடை பாவனைகளை அநுசரிக்க ஆரம்பிக்க, நமது ஜனசமூகத்தில் சில நாகரிகப்பித்தர்கள் ஐரோப்பியர்களுடைய நடை உடை பாவனையை அநுசரிக்கும் ஆச்சர்யம் தான் என்னே?

*　　*　　*　　*　　*

ஸ்நேஹலதை யென்னும் பதினான்கு வயதுள்ள ஒரு பிராம்ஹணப்பெண் தனக்கு விவாகம் நடத்தும் பொருட்டு மணமகனுக்கு வரதட்சிணை கொடுப்பதற்கும் விவாகச் செலவுக்குமாகத் தன் பிதா வேறுகதியின்றித் தன் வீட்டை அடமானம் வைக்கத் தீர்மானித்திருக்கிறாரென்று அறிந்து அக்கினியில் தன் உயிரை மாய்த்துக்கொண்டாள். பிள்ளைகளும் அவர்களின் பெற்றோர்களும் இப்பொழுதாவது சிறிது யோசனை செய்வார்களா? ஸ்நேஹலதையின் பிரேதமானது அவர்களுடைய ஹிருதயங்களைக் கலக்கியிருக்காதா?

RM211, N13GB

classmate

EXPRESSIONS

# Discover India

Scanner No: Zeu_1



"[illegible] cradle of the [illegible] the birthplace of human speech, the mother of history, [illegible] mother of legend and the great grand mother of tradition. Our most valuable and [illegible] of man are treasured up in India only."

Mark Twain

**Notebook**